தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 9, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு, 2024.

1993 ஏப்ரல் 22, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.''

உழவுத் தொழிலினைச் செய்யாமல், பிற தொழில்களில் ஈடுபட்டிருப்போர் அனைவரையும் சேர்த்துத் தாங்க வேண்டியிருப்பதால், உழவர்கள், உலகத்தார் என்று சொல்லப்படும் தேருக்கு அச்சாணி போன்றவர்கள் ஆவார்கள்.

I வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 421, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

421—

மலைவாழ் மக்களுக்காக ஜமுனாமருதூரை தொகுதியாக்குதல்.

*11877—திரு தா. வேடியப்பன் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

மலைவாழ் மக்கள் நலன் கருதி ஜமுனா மருதூரை ஒரு தொகுதியாக ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தற்பொழுதுள்ள தடையின்படி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையும் அவைகளின் பரப்பளவுகளையும் கி.பி. 2001-ல் எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு முன்னர் மாற்ற இயலாது.

தற்பொழுதுள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் செய்யாமல், 1991 வது மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் பரப்பளவில் மாற்றம் செய்யவும், அவ்வாறே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தனித் தொகுதிகளையும் பிற தொகுதிகளுக்கு சுழற்சி முறையில் வழங்கவும் வழிவகை செய்யும் 71-வது அரசியலமைப்பு சட்டமுன்வடிவு நாடாளுமன்றத்தில் நிலுவையிலுள்ளது. இந்த சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேறியபின், தொகுதி வரையறை ஆணையம் (Delimitation Commission) புதிதாக நியமிக்கப்படும். நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற பொதுத் தொகுதிகளின் எல்லைகளை மறு வரையன்ற செய்வது பற்றியும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொகுதிகளை சுழற்சி முறையில் பிற தொகுதிகளுக்கு வழங்குவது பற்றியும், இந்தத் தொகுதி வரையறை ஆணையத்தால்தான் முடிவெடுக்க இயலும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கி.பி. 2001—ல் எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஒன்றிய நிலையில் தொகுதிகளைப் பிரிக்க அரசு பரிந்துரை செய்யும் என்று அமைச்சரவர்கள் பதிலில் சொன்னார்கள். ஜமுனாமருதூர் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 22 ஊராட்சிகளை உள்ளடக்கியதாக இருந்தது. மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில், அந்த 22 பஞ்சாயத்துக்களும் பிரிக்கப்பட்டு, 11 ஊராட்சிகள் தான் அந்த ஒன்றியத்திலே இருக்கின்றன. எனவே தொகுதி வரையறை செய்யும்போது, அந்த 22 பஞ்சாயத்துக்களையும் உள்ளடக்கிய ஒரு தொகுதியை அமைக்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் நிலைமை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. 2001—ல் எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளிடைய எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும். அதுவரையில் இப்போது உள்ள நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளினுடைய எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவுதான் இருக்க வேண்டும். ஆனால் இந்தத் தடவை ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகுதியை பொதுத் தொகுதியாக மாற்றி சுழற்சி முறையில் செய்யக்கூடாது என்ற நிலைமை இருக்கிறது. அதற்கான சட்டமுன்வடிவு நாடாளுமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், அதற்குப் பிறகு தொகுதி வரையறை ஆணையம் நியமிக்கப்படும். அப்படி தொகுதி வரையறை ஆணையம் நியமிக்கப்படும்போதுதான், பொதுத்

1993 ஏப்ரல் 22]

தொகுதிகளை ஆதி திராவிடர் தொகுதிகளாகவோ அல்லது பழங்குடியினர் தொகுதிகளாகவோ மாற்றவும் அல்லது பழங்குடியினர் அல்லது ஆதி திராவிடர் தொகுதிகளைப் பொதுத் தொகுதிகளாக மாற்றவும் முடியும். அது மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படும். இவைகள் எல்லாம் கி.பி. 2001-க்குப் பிறகு மத்திய அரசு தொகுதி வரையறை ஆணையம் அமைத்துச் செய்வதன் அடிப்படையிலேதான் நிறைவேறும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கி.பி. 2001-ல்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று அமைச்சரவர்கள் தெரிவிக்கிறார்கள். இருப்பினும் ஜமுனாமருதூர் ஒன்றியத்தை எடுத்துக் கொள்வோமானால், போளூர், கலசபாக்கம், செங்கம், திருப்பத்தூர், அணைக்கட்டு போன்ற 5, 6 சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்தப் பகுதி மக்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே ஜமுனாமருதூரை தொகுதியாக்க முன்கூட்டியே நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் பழங்குடியினர் எண்ணிக்கை மொத்தமே 7,718தான். ஆனால் இந்தத் தொகுதியினுடைய மக்கள் தொகை 2,36,992. நம்முடைய மாநிலத்தில் பழங்குடி மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஏற்காடு, சேந்தமங்கலம், உப்பிலியாபுரம் ஆகிய 3 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கி.பி. 2001-லே மக்கள் தொகை எண்ணிக்கை கணக்கு எடுத்ததற்குப் பிறகு கூட கலசபாக்கத்தைப் பிரித்து, தனித் தொகுதியாக்க முடியும் என்று சொல்வதற்கில்லை. மொத்தம் 7,718 பேர்தான் அந்த தொகுதி முழுக்க பழங்குடியினர் என்ற அளவுக்கு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகள் பங்கீடு செய்யப்படுகின்றன. நம்மைப் பொறுத்தமட்டில், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்திலே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றி முதலிடத்தை நாம் பெற்றிருக்கிறோம். அப்படிச் சிறப்பாகப்

[1993 ஏப்ரல், 22

முற்பகல் 10–05

பணியாற்றுகின்ற காரணத்தாலே மக்கள் தொகை குறையும். அப்படி மக்கள் தொகை குறைந்தால் தொகுதிகளுடைய எண்ணிக்கையும் குறைகிற சூழ்நிலை உருவாகும். இதை அரசு அறியுமா ? அந்தச் சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்து சரியான கருத்துதான். இதுபற்றி பல தடவை தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் சரி, மத்திய அரசோடு பேசுகிறபோதும் சரி, திரும்பத் திரும்ப நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம். ஆகவேதான் 1951 ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கை அடிப்படையில், அதாவது அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்திலே என்ன மக்கள்தொகை இருந்தார்களோ அப்போது எவ்வளவு தொகுதிகள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்டதோ அதே எண்ணிக்கை தொடர்ந்து இருந்தால்தான் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற மாநிலங்கள் அதன் காரணமாக ஓரளவு நன்மை பெற்றதாக அமையும். இல்லாவிட்டால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் காரணமாக மக்கள் எண்ணிக்கை குறையக் குறைய அந்தத் தொகுதிகளின் எண்ணிக்கையும் குறையுமானால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுகிற மாநிலங்கள் தண்டனைக்குள்ளாகிற மாநிலங்களாக ஆகும் என்பதை நாம் பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு அது பற்றி எந்தவிதமான திட்டவட்டமான முடிவுக்கும் வரவில்லை. 1951 வது ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கைக் கணக்குப்படி நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் நமக்கு 41 தொகுதிகள் இருந்தன. ஆனால் மக்கள் தொகை எண்ணிக்கை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் காரணமாக குறைந்து வந்ததன் காரணமாக இப்போது அது 39 ஆகத்தான் இருக்கிறது. அடுத்து, 2001 ஆம் ஆண்டில் வருகிறபோது இன்னும் குறைக்கப்படுமோ என்ற அச்சம் கூட நமக்கு இருக்கிறது. ஆகவேதான் 1951வது ஆண்டு மக்கள் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து நிர்ணயிக்கப்பட்ட தொகுதி, அதே அளவுக்குத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி,

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், பெரியார் மாவட்டம் என்று பிரிக்கிற நேரத்தில் ஒரு தொகுதியிலே இருந்த ஊராட்சி மன்றங்கள் சில வேறு தொகுதிக்கும், அல்லது வேறு மாவட்டத்துக்கும் என்று பிரிக்கப்பட்டு விட்டன, ஆகவே . . (மணியடிக்கப் பெற்றது.)

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஜமுனா மருதூரைத் தனித் தொகுதியாக ஏற்படுத்துவது பற்றிய கேள்வி. நீங்கள் கோயம்புத்தூர் பெரியார் மாவட்டங்கள் பிரித்தது பற்றிச் சொல்கிறீர்கள், (குறுக்கீடு) இது ஜமுனா மருதூர் என்ற பகுதியை ஒரு தொகுதியாகப் பிரிப்பதற்கான வினா (குறுக்கீடு) வேறு வினா கேட்டால் நான் அனுமதிக்க முடியாது அல்லவா? நாங்கள் என்ன கேள்வி கேட்டாலும் அவரால் பதில் சொல்லமுடியும். அது வேறு, இதுவேறு, ஜமுனா மருதூர் என்றோ, ஜமுனா மருதூருக்குப் பக்கத்தில் உள்ள ஊரைப் பற்றியோ கேட்டால் அவரிடம் இருக்கும் குறிப்புகளின் அடிப்படையில் பதில் சொல்லலாம். உட்காருங்கள். தனிக் கேள்வி போடவும். திரு. வே. கோபால கிருஷ்ணன்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தற்போதுள்ள தனித் தொகுதிகள் பொதுத் தொகுதிகளாகவும், தற்போதுள்ள பொதுத் தொகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளை தனித் தொகுதியாகவும் மாற்றுகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாடாளுமன்றத் தொகுதிகள் 39, சட்டமன்றப்பேரவைத்தொகுதிகள் 234. இந்த எண்ணிக்கையில் எப்படிப்பட்ட மாற்றமும் செய்ய இயலாது. ஆகவே பொதுத் தொகுதியை ஆதிதிராவிடர்களுக்கான தொகுதியாகவும், ஆதி திராவிடர் தொகுதியை பொதுத்தொகுதியாகவும் மாற்றுவதற்கு இப்போது வழியில்லை. அதற்காகத்தான் 71 வது அரசியல் சட்டமுன்வடிவு நாடாளுமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமேயானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று 1996லே இந்த சுழற்சி மாற்றம் ஏற்படுத்துகின்ற அளவுக்கு தொகுதிவரையறை ஆணையம் நியமிக்கப்பட வேண்டும். அப்படி மத்திய அரசால் நியமிக்கப்பட்டு அதில் உரிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதற்குப் பின்னால் வேண்டுமானால் பொதுத்தொகுதியை ஆதிதிராவிடர் தொகுதியாகவோ, ஆதி திராவிடர் தொகுதியை பொதுத் தொகுதியாகவோ மாற்றுவதற்கு முயற்சிகள் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமுனாமருதூர் முன்பு வடஆற்காடு மாவட்டத்தில் இருந்தது. இப்போது சம்புவராயர் மாவட்டத்தில் இருக்கிறது. அந்தப் பகுதி மலைவாழ் பகுதியாக இப்போது இருக்கிறது. ஏற்கனவே இது ஜவ்வாது மலையில் வருகிறது. பக்கத்தில் உள்ள ஏலகிரி பகுதியிலும் மலைவாழ் மக்கள் வாழ்கின்ற 70 கிராமங்கள் இருக்கின்றன. இதை அனைத்தையும் ஒன்று சேர்த்தால் ஒரு மலைவாழ் தொகுதி என்ற அளவுக்கு வரும். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறுவது போன்ற யோசனைகள் எல்லாம் 2001 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் யோசிக்கவேண்டிவரும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு தொகுதியை பிரித்து கொடுக்க முடியவில்லையென்றாலும், அவர்களுக்கு ஒன்றியமாவது ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்குத் தொடர்பில்லாதது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை உள்ளாட்சித் துறை தான் கவனிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 422, திரு.இரா.புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

1993 ஏப்ரல் 22]

422--

சேரன்மகாதேவியில் புதிதாக மகளிர் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

*10428—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவியில் மகளிர் உயர்நிலைப்பள்ளி புதிதாக தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி கல்வி வட்டம் என்பது மிகப்பெரிய கல்வி வட்டமாகும். அதிலே என்னுடைய தொகுதியான சேரன்மகாதேவியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் சுமார் 2,000 மாணவ-மாணவியர்கள் படிக்கிறார்கள். அதிலே இட நெருக்கடி காரணமாகவும், அது சேரன்மகாதேவி ஊரை விட்டு வெளிப்பகுதியில் இருப்பதன் காரணமாகவும், அந்தப் பகுதியில் கிராமப்புற பகுதிகள் அதிகமாக இருப்பதன் காரணமாகவும், அதிகமாக பெண்கள் உயர்கல்வி படிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இவைகளை கருத்திற்கொண்டு, குறிப்பாக அந்தப் பள்ளியினுடைய இடநெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மகளிருக்காக ஒரு தனிப் பள்ளிக்கூடம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊரில் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்றால் அங்கேயிருந்து ஒரு கருத்துரு அனுப்பப்பட வேண்டும். அங்கேயிருக்கிற பொதுமக்கள் தங்களுடைய பங்குத் தொகையைச் செலுத்த வேண்டும். இடத்தைக் காட்ட வேண்டும். இப்படிப்பட்ட எதுவுமே இதுவரையில் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் செய்ய வேண்டும்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல அந்த ஊரின் உட்பகுதியில் இடத்தைக் கொடுக்க அங்கேயுள்ள தனவந்தர்கள் முன்வந்திருக்கிறார்கள். அதைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில் ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததைப்போல, ஒரு தொகுதிக்கு ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி என்ற ஒரு புதிய திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் ஆரம்பிக்கப்பட இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் இதுவும் ஒரு உயர்நிலைப் பள்ளியாக வர வேண்டுமென்றால், அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் அந்த உயர் மட்டக் குழுவினிடம் இவைகளையெல்லாம் வைத்து ஆய்வு செய்யச் சொல்ல முடியும். மற்றபடி எல்லா தொகுதிகளிலும் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்பது ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சொல்லப்படுகிற யோசனை என்கிற அளவில் அரசு அதை கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 423, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

423—

பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடைகள் மாற்றல்.

* 15283—திரு. கே. பி. ராஜு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு சீருடைகளை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு முடிய பயிலும் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இது தவிர இந்தச் சீருடைகள் மாற்றும் செயற்குறிப்பு தும் தற்போது இல்லை.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல அந்த ஊரின் உட்பகுதியில் இடத்தைக் கொடுக்க அங்கேயுள்ள தனவந்தர்கள் முன்வந்திருக்கிறார்கள். அதைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில் ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததைப்போல, ஒரு தொகுதிக்கு ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி என்ற ஒரு புதிய திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் ஆரம்பிக்கப்பட இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் இதுவும் ஒரு உயர்நிலைப் பள்ளியாக வர வேண்டுமென்றால், அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் அந்த உயர் மட்டக் குழுவினிடம் இவைகளையெல்லாம் வைத்து ஆய்வு செய்யச் சொல்ல முடியும். மற்றபடி எல்லா தொகுதிகளிலும் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்பது ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சொல்லப்படுகிற யோசனை என்கிற அளவில் அரசு அதை கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 423, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

423—

பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடைகள் மாற்றல்.

* 15283—திரு. கே. பி. ராஜு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு சீருடைகளை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு முடிய பயிலும் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இது தவிர இந்தச் சீருடைகள் மாற்றும் செயற்குறிப்பு தும் தற்போது இல்லை.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் சுமார் 20, 25 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்திய சீருடைகளைத்தான் யூனிபார்ம் ஆக அணிந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது காலத்திற்கு தகுந்தாற்போல் நாகரீகமான இந்தக் காலத்தில் சீருடைகளை எளிமையாக இருக்கும் படியாக மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் என்னவென்று கேட்டால் இப்போது கல்லூரிகளில் சுடிதார் போடுகிறார்கள், ஸ்கர்ட் போடுகிறார்கள். இது போன்ற யூனிபார்ம்களை கல்லூரி மாணவிகள் போடுகிறார்கள். ஆனால் பள்ளிகளில் படிக்கிற மாணவியர் அந்த பழைய காலத்து யூனிபார்மைத் தான் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, காலத்திற்கு தகுந்த மாதிரி இந்த யூனிபார்மை மாற்றியமைக்க செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்திற்கு தகுந்தபடி மாற்றுவது என்பது வேறு. ஆனால் நாம் சீருடைகளைப் பற்றி பேசுகிற போது எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பொதுவான நடைமுறையாக இருக்க வேண்டும். அந்தமுறையில் இப்போது அமலில் இருக்கிற இந்த சீருடைகளே எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. நாம் வேறு மாற்றங்களைச் செய்வோமானால் அதிலே பல்வேறு அரசியல் பிரச்சினைகள் கூட வரலாம். அது தமிழனுடைய கலாச்சாரத்திற்கு பொருந்தியதுதானா, வடநாட்டு கலாச்சாரத்தைத் திணிக்கிறீர்களா என்றெல்லாம் கூட சில கலாச்சார உணர்வு மிக்கவர்கள் அதை எதிர்க்கக் கூடிய நிலை இருக்கும். ஆகவே, எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு, இப்போது இருக்கிற நடைமுறையே சிறந்ததாகப்படுகிறது.

முற்பகல் 10.15

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் காவலர்களுக்கு ஆப் பேண்ட இருந்தது. அதைக் காலத்திற்கு தகுந்த மாதிரி இப்போது ஃபுல் பேண்ட்டாக ஆக்கி விட்டோம்—அதே மாதிரி, பெண் காவலர்களுக்குக்கூட சீருடை வேறு மாதிரி இருந்தது. புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அழகான சீருடையை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்—அதேபோல்

பழங்காலத்திலிருந்த யூனிபார்ம்களை வைத்துக் கொண்டிருப்பதைவிட, காலத்திற்கு தகுந்த மாதிரி மாற்றுவதில் தவறு இல்லையே. இதைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ மாணவிகளிடமிருந்து இதுபற்றி எந்தவிதமான எதிர்ப்போ அல்லது இப்படி எல்லாம் நாங்கள் போடவில்லை, வேறு விதமாகப் போட வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையோ வரவில்லை. ஆசிரியர்கள் மத்தியிலிருந்தும் வரவில்லை, பெற்றோர்களிடமிருந்தும் வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினருக்கு மட்டும் தனியாக இந்த யோசனை எப்படியோ வந்திருக்கிறது. அதை அவர்கள் கேள்வியாகப் போட்டு கேட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விநோதமான யோசனைகளுக்கு எல்லாம் அரசு நடவடிக்கை எடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பீட்ரிக்ஸ் டி'சோசா.

Dr. BEATRIX D'SOUZA : Hon. Speaker, sir, the uniformity of school uniforms is conducive to discipline and more important is conducive to a levelling of social differences. That is why we find that rich schools have better uniforms and poor schools have poorer uniforms. Will the Government consides giving better school uniforms to the Corporation school children, most of whom are poor, because now it is very depressing. They will have a better self-image. They will not feel that they are poor children.

HON. Dr. C. ARANGANAYAGAM : Hon. Speaker, sir, that will be taken into consideration.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தனியார் பள்ளிகளிலே, கான்வென்டுகளிலே கூட தினசரி சீருடை அணிந்து குழந்தைகள்மிக அழகான முறையிலே பள்ளிகளுக்குச் செல்வதை நாம் காண்கிறோம். ஆனால் அரசுப் பள்ளிகளிலே திங்கட்கிழமை அன்றும் வெள்ளிக்கிழமை அன்றும் மட்டும் சீருடை அணிந்துவருகிறார்கள், அவர்களும் வாரம் முழுவதும் இதுபோன்ற சீருடை அணிந்து வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிச் சொல்லும்போது அவர்களாலே முடிவதில்லை என்ற காரணத்தாலேதான், திங்கள், வெள்ளி என்று வைத்திருக்கிறோம். இதற்கு அந்தக் குடும்பச் சூழ்நிலையையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் ஏழைகளாக இருப்பார்களானால், தினமும் சீருடை அணிந்து குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புவது என்பது அவர்களுக்குச் சிரமமாகப்படுகிறது. ஆகவே, நாம் இதையும் கருத்திலே எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆகவேதான் இரண்டு நாட்கள் என்று வைக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு சீருடை கொடுத்தற்குப் பின்னாலே ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. ஒரே ஊரிலே இருக்கிற பல பள்ளிகளில் ஒரே சீருடை அணிந்து மாணவ மாணவிகள் வருகிறபோது, அவர்கள் எந்தப் பள்ளியைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிவதற்குக் கடினமாக இருக்கிறது. ஒரே ஊரிலே இருக்கிற பல பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் பலதரப்பட்ட சீருடைகளில் வருகிறபோது, வழியிலே ஒரு விபத்து என்று வைத்தாலும் சரி, அந்தக் குழந்தையைப் பார்க்கிறபோது, இந்தக் குழந்தை இந்தப் பள்ளியைச் சேர்ந்தது என்பதை உடனடியாக அடையாளம் கண்டுகொள்வதற்கு சீருடை மிகவும் உதவிகரமாக இருக்கும். அதுபோல், எந்தப் பள்ளியைச் சேர்ந்த குழந்தை என்று தெரிந்துகொள்வதற்கும் அது மிக உதவியாக இருக்கிற காரணத்தால், ஒரே ஊரிலே இருக்கிற பல பள்ளிகளில் வேறு வேறு வண்ணங்களில் சீருடை அணிய வேண்டும் என்று அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வித்தியாசங்களை ஒழிப்பதற்காகத்தான் சீருடையைக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது சீருடையிலே ஒரு வித்தியாசத்தைக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களுக்கு எது ஏற்பட்டாலும் பள்ளியிலே படிக்கின்ற மாணவன் அல்லது மாணவி என்று தெரிந்தாலே மற்றவர்கள் தேவையான உதவிகளைச் செய்வார்கள், அவர்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 424, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1993 ஏப்ரல் 22

424—

ராஜாராம் மோகன்ராய் நூலகக்குழு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கும் நூலகங்கள்.

*15716—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜாராம் மோகன்ராய் நூலகக்குழு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கும் நூலகங்கள் எத்தனை?

(ஆ) அக்குழுவின் உதவிபெற நிபந்தனைகள் என்னென்ன?

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராஜாராம் மோகன்ராய் நூலகக்குழு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த ஒரு நூலகமும் இயங்கவில்லை.

(ஆ) இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை இணை நிதி உதவி திட்டம் மற்றும் இணை உதவி அல்லாத திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் நூலகங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. இணை உதவி திட்டத்திற்கு இணையான தொகை மாநில அரசு பங்குத்தொகையாக செலுத்துதல் வேண்டும். இணையில்லாத நிதி உதவி திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு நூல்கள் வாங்க நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-20

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு நூலகங்கள் இந்த நிதிஉதவி பெற்று வருவதாக அங்கே நூலக ஆணைக் குழுவில் கூறுகிறார்கள். மாவட்ட நூலகங்கள் கூட இந்த ராஜாராம் மோகன்ராய் நூலகக் குழுவினுடைய உதவி பெற்றுத்தான் இயங்குவதாகக் கூறுகிறார்கள். அவ்வாறு இயங்குகின்ற அந்த நூலகங்களுக்கு அரசு மானியம் பாதி தொகைகொடுப்பதாகக் கூறுகிறார்கள். அவ்வாறு இருக்கிற அந்த நூலகங்கள் போல மேலும் பல நூலகங்கள் ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா? அதற்குரிய நிபந்தனைகள் யாவை என அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நூலகங்களுக்கு ராஜா ராம் மோகன் ராய் நூலகக் குழு மூலம் உதவி கிடைப்பது என்பது ஒரு சில சந்தர்ப்பங்களிலே தருகிறார்கள். அது தவிர மற்றபடி நம்முடைய நூலகங்கள் எல்லாம் நம்முடைய நிதி ஆதாரத்தின் பேரிலேதான் நடைபெற்று வருகின்றன. அதற்காக சொத்து வரியிலே நாம் தனியாக ஒரு நூலக வரி என்று போட்டு வசூலித்து, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு தான் மாவட்ட நூலகங்கள் எல்லாம் நடத்தி நூலகக் குழுவையும் அமைக்கின்றன, நூல்கள் வாங்குகின்றன, மற்ற பராமரிப்பு எல்லாம் செய்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் ராமநாதபுரம் மாவட்டடத்திலே இயங்குகின்ற நூலகக் குழுவும் இந்த அரசினுடைய நிதி ஆதாரத்தின் பேரிலே தான் நடைபெற்று வருகின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பகுதி நேர நூலகங்கள் ஆரம்பிக்கும்போது இந்த உதவியுடன் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நூலகம் ஆரம்பிப்பதற்கான திட்டம் அரசிடம் ஏற்கனவே இருக்கிறது. அதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்து குறிப்பிட்ட ஊரிலே ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களேயானால் அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 425, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண். 426, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

426—

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணி.

* 15993—திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொன்னேரி தொகுதியில், சோழவரம் பஞ்சாயத்து யூனியனில் ஆத்தூர் கிராமத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நூலகங்களுக்கு ராஜா ராம் மோகன் ராய் நூலகக் குழு மூலம் உதவி கிடைப்பது என்பது ஒரு சில சந்தர்ப்பங்களிலே தருகிறார்கள். அது தவிர மற்றபடி நம்முடைய நூலகங்கள் எல்லாம் நம்முடைய நிதி ஆதாரத்தின் பேரிலேதான் நடைபெற்று வருகின்றன. அதற்காக சொத்து வரியிலே நாம் தனியாக ஒரு நூலக வரி என்று போட்டு வசூலித்து, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு தான் மாவட்ட நூலகங்கள் எல்லாம் நடத்தி நூலகக் குழுவையும் அமைக்கின்றன, நூல்கள் வாங்குகின்றன, மற்ற பராமரிப்பு எல்லாம் செய்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் ராமநாதபுரம் மாவட்டடத்திலே இயங்குகின்ற நூலக குழுவும் இந்த அரசினுடைய நிதி ஆதாரத்தின் பேரிலே தான் நடைபெற்று வருகின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பகுதி நேர நூலகங்கள் ஆரம்பிக்கும்போது இந்த உதவியுடன் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நூலகம் ஆரம்பிப்பதற்கான திட்டம் அரசிடம் ஏற்கனவே இருக்கிறது. அதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்து குறிப்பிட்ட ஊரிலே ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களேயானால் அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 425, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண். 426, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

426—

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணி.

* 15993—திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொன்னேரி தொகுதியில், சோழவரம் பஞ்சாயத்து யூனியனில் ஆத்தூர் கிராமத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதா ?

TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சோழவரம் பஞ்சாயத்து யூனியனில் ஆத்தூர் கிராமத்தில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்காக இடத்தைத் தேர்வு செய்தார்கள். பல்வேறு அதிகாரிகள் பார்வையிட்டு சர்வே செய்தார்கள். ஆனால் அதற்கானப் பணி இதுவரையில் தொடங்கப்படவில்லை. வேறு ஏதாவது இடத்தைத் தேர்வு செய்தார்களா? அல்லது அந்தப் பணி வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தினுடைய அட்மினிஸ்டிரேடிவ் பிளாக்கைப் பொறுத்தவரை ஸ்பிக் பில்டிங்கிற்கு எதிர்த்தார் போல் இருக்கிற அரசுக்கு சொந்தமான இடத்திலே கட்ட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, அதற்கானப் பணமும் ஒதுக்கப்பட்டு வேலையும் துவக்கப்பட்டு விட்டது. ஆனால் ஆராய்ச்சி நிலையங்களை அமைப்பதற்கான எதிர்காலத் திட்டத்திற்காகக் கொஞ்சம் கூடுதலான நிலம் தேவை என்று முடிவு எடுத்து இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலே எருமை வெட்டியான்பாளையம் என்ற கிராமத்தில் 234.80 ஏக்கர் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது மருத்துவப் பல்கலைக் கழகத்தினுடைய பரிந்துரையின்பேரில் அதற்கான ஆய்வு செய்யப்பட்டு வருவாய்த் துறையிலே அதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே வருவாய்த் துறையிலே இருந்து அது திருப்பிக் கிடைத்த பின்பு, அதிலே என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்ற முடிவை உங்களுக்குத் தெரிவிக்கலாம்.

1993 ஏப்ரல் 22]

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்டப் பணியானது எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்? அதற்கான திட்டத்தின் மதிப்பு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அட்மினிஸ்டிரேடிவ் பிளாக் கட்டுவதற்கான திட்டத்திற்காகத்தான் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆராய்ச்சி மையத்தை அமைப்பதற்காக அந்தத் திட்டம் தயாராகவில்லை. ஆனால் எதிர்காலத் திட்டத்திற்காக இடத்தை மட்டும் எடுத்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. அந்த நில அளவைத்தான் ஏற்கெனவே நான் சொன்னேன். எனவே அதற்கானத் திட்டங்கள் எதிர் காலத்திலே தான் வகுக்கப்படும். அந்த நிலம் தேவை என்று நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். முறைப்படி, அந்த விதிமுறைகளின்படி அவர்கள் அதற்கான கால அவகாசம் எவ்வளவு தேவையோ அதைக் கொடுத்து நோட்டீசெல்லாம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நோட்டீசும் ஒவ்வொரு லேண்ட் ஓனருக்கும் கொடுத்து அதற்குப் பின்னாலே அதை அக்குயர் செய்ய வேண்டும். அந்த வகையிலே அவர்கள் நடவடிக்கை எடுத்து, கொடுத்த பின்புதான் மேலும் அதன் மீது நட வடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 427, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

427—

தரங்கம்பாடி அரசு மருத்துவமனையில் சித்தவைத்தியப் பிரிவு துவங்குதல்.

* 16889—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி அரசு மருத்துவ மனையில் சித்தவைத்தியப் பிரிவு துவங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

1993 ஏப்ரல் 22]

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்டப் பணியானது எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்? அதற்கான திட்டத்தின் மதிப்பு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அட்மினிஸ்டிரேடிவ் பிளாக் கட்டுவதற்கான திட்டத்திற்காகத்தான் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆராய்ச்சி மையத்தை அமைப்பதற்காக அந்தத் திட்டம் தயாராகவில்லை. ஆனால் எதிர்காலத் திட்டத்திற்காக இடத்தை மட்டும் எடுத்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நில அளவைத்தான் ஏற்கெனவே நான் சொன்னேன். எனவே அதற்கானத் திட்டங்கள் எதிர்காலத்திலே தான் வகுக்கப்படும். அந்த நிலம் தேவை என்று நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். முறைப்படி, அந்த விதிமுறைகளின்படி அவர்கள் அதற்கான கால அவகாசம் எவ்வளவு தேவையோ அதைக் கொடுத்து நோட்டீசெல்லாம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நோட்டீசும் ஒவ்வொரு லேண்ட் ஓனருக்கும் கொடுத்து அதற்குப் பின்னாலே அதை அக்குயர் செய்ய வேண்டும். அந்த வகையிலே அவர்கள் நடவடிக்கை எடுத்து, கொடுத்த பின்பு தான் மேலும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 427, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

427—

தரங்கம்பாடி அரசு மருத்துவமனையில் சித்தவைத்தியப் பிரிவு துவங்குதல்.

* 16889—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி அரசு மருத்துவமனையில் சித்தவைத்தியப் பிரிவு துவங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

முற்பகல் 10:25

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பூம்புகார் பகுதியின் மைய இடம் தரங்கம்பாடி. அங்கே அரசு மருத்துவமனையில் சித்த வைத்தியத்தை ஏற்படுத்தினால் பொது மக்கள் லட்சக்கணக்கான பேர்கள் நல்லதொரு பலனை அடைவார்கள், சித்த வைத்தியத்திற்கு அரசு ஊக்கமும், ஆக்கமும், அளிக்கின்றது. ஆகவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயும் சித்த மருத்துவத் துறை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது அரசினுடைய கொள்கையாக வைத்து படிப்படியாக செய்து வருகிறது. எனவே, ஒரே ஆண்டிலே எல்லா இடங்களிலும் செய்துவிட முடியாது என்ற நிலையிலே தான் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட சில இடங்களை மட்டும் நாம் எடுத்து செய்து வருகிறோம். எனவே எதிர் வருகின்ற ஆண்டிலே இதைப் பார்த்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம்,

திரு. எம். பூராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எனது பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. ஏழை எளியவர்கள், ஹரிஜனங்கள், மீனவர்கள் வாழ்கின்ற பகுதி. ஆகவே தயவு செய்து வருகின்ற ஆணடிலாவது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே. வருகிற ஆண்டிலே அதிகமான அளவிலே அதற்கான இடங்கள் ஒதுக்கப்படுகின்றபோது கண்டிப்பாக பூராசாமி அவர்களுடைய தொகுதியும் கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 42 டாக்டர் வெ, சரோஜா. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

1993 ஏப்ரல் 22]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

428—

சங்ககிரி மலையிலுள்ள சமூக நலக்காடுகள்

*9510—டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி மலையில் உள்ள சமூக நலக்காடுகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சரிவர பராமரிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சங்ககிரி மலையில் உள்ள காடுகள் வனத்துறையினரால் வளர்க்கப்பட்டவை அல்ல.

(ஆ) இந்த மலையில் பெரும்பாலான இடங்களில் மரங்கள் இல்லாததால், செடிகளை நடவு செய்து பராமரிக்க வனத்துறை அனுமதி கேட்டு, மத்திய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தினர் அனுமதியளிக்க முன் வராததால், இம்மலையில் வனத்துறை மூலம் செடிகள் நடவு செய்யும் பணி இதுவரையும் மேற்கொள்ளப்படவில்லை. இந் நிறுவனத்தாரின் அனுமதி கிடைத்தால் தான், இந்த மலையில் உகந்த மரவகைகள் நடுவதற்கு வனத்துறை நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அக்காரிடிங் டு நேஷனல் ஃபாரஸ்ட் பாலிஸி மொத்த நிலப்பரப்பில் 33.33 சதவீத காடுகளாக இருக்க வேண்டும் என்பது கொள்கை, அந்தக் கொள்கையின்படி நம்முடைய தமிழகத்தில் 17.45 சதவீதம் மட்டுமே காடுகளாக இருப்பதால், இந்த தேசியவனக் கொள்கையைப் பூர்த்தி செய்யும் வண்ணமும், அங்கே இருக்கும் பெண்கள் பயன்பெறும் வண்ணமும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் கொண்டுவரப்பட்டு இன்று 4,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் கையினால் விதை தெளிக்கும்

திட்டத்தின் கீழ் சங்ககிரி மலையில் மலை அடிவாரத்தில் எலிவேட்டட் ஏரியாவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றில் ஒரு பகுதி வனத்துறையாக இருக்க வேண்டும் என்பது மத்திய அரசு கொள்கை. ஆனால் நம்முடைய தமிழகத்தை பொறுத்த வரையில் 17.45 சதவீதம் இங்கே இருக்கிறது. ஆகவே கூடுதலாக மலைப்பகுதியினை மாற்றியமைக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது. இந்தப் பகுதியிலே விதை தூவி அந்த மரங்களை வளர்க்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் அதனுடைய கட்டுப்பாட்டிலே இருப்ப னால் அவர்களிடத்தில் அனுமதி கேட்டிருக்கிறோம், அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 429. திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர்.

429—

சென்னை நகரில் ஆட்டோக்களில் அதிகக் கட்டணம் வசூலிப் பதைத் தடுத்தல்.

*11416—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரத்தில் ஆட்டோக்களில் சரியான மீட்டர் கள் பொருத்தப்படாமல் பொதுமக்களிடம் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் பெரும் பான்மையான இடங்களில் குறிப்பாக எழும்பூர் இரயில்

திட்டத்தின் கீழ் சங்ககிரி மலையில் மலை அடிவாரத்தில் எலிவேட்டட் ஏரியாவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றில் ஒரு பகுதி வனத்துறையாக இருக்க வேண்டும் என்பது மத்திய அரசு கொள்கை. ஆனால் நம்முடைய தமிழகத்தை பொறுத்த வரையில் 17.45 சதவீதம் இங்கே இருக்கிறது. ஆகவே கூடுதலாக மலைப்பகுதியினை மாற்றியமைக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது. இந்தப் பகுதியிலே விதை தூவி அந்த மரங்களை வளர்க்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் அதனுடைய கட்டுப்பாட்டிலே இருப்பதனால் அவர்களிடத்தில் அனுமதி கேட்டிருக்கிறோம், அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 429. திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர்.

429—

சென்னை நகரில் ஆட்டோக்களில் அதிகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்தல்.

*11416—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரத்தில் ஆட்டோக்களில் சரியான மீட்டர்கள் பொருத்தப்படாமல் பொதுமக்களிடம் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் பெரும்பான்மையான இடங்களில் குறிப்பாக எழும்பூர் இரயில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 22]

நிலையத்திலும், சென்ட்ரல் நிலையத்திலும் வந்து இறங்குகின்ற வெளியூர் பயணிகளிடம் ஆட்டோக் கட்டணம் தாறுமாறாக வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த மீட்டரிலே அதிக தில்லுமுல்லுகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. சில பேர் லைசென்ஸே இல்லாமல் கூட ஆட்டோக்களை ஓட்டிச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் பொதுமக்கள் இதனால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்ற நிலையில் இப்படிப்பட்ட சமூகவிரோதச் செயல்களைச் செய்கின்ற அந்த ஆட்டோ டிரைவர்களின் லைசென்ஸை ரத்து செய்வதற்கோ அல்லது அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற அபராதத் தொகையை அதிகப்படுத்துவதற்கோ அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நாங்கள் பிரி-பெய்டு சிஸ்டம் என்ற முறையைக் கொண்டு வந்து இருக்கிறோம். சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷன், எக்மோர் ரெயில்வே ஸ்டேஷன், அதேபோன்று பேருந்து நிலையங்கள் உள்ள இடங்களிலேயிருந்து ஆட்டோக்களை இயக்கலாம் என்ற ஒரு புதிய திட்டத்தை நாங்கள் இப்போது அறிமுகப்படுத்தி இருக்கிறோம். அதன் அடிப்படையிலே நீங்கள் குறிப்பிடுவதைப்போல மீட்டர்களைப் பொருத்தாமலும்; மீட்டர்களில் தவறுகள் ஏற்படுகின்றன என்பதைக் கருத்தில் கொண்டுதான், இந்த 6 மாதகாலத்தில் மட்டும் 8,609 ஆட்டோக்களைப் பரிசோதனைச் செய்து, அதிலே ஏறத்தாழ 675 ஆட்டோக்களின் பர்மிட்டையும் ரத்து செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்டோ டிரைவர்கள் தவறான முறையிலே பொதுமக்களிடத்திலே பணம் வசூலிப்பதைக் குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிக்க நன்றி. ஏனென்றால் நானே ஒரு முறை சென்டிரல் ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கி ஆட்டோவிலே எம். எல். ஏ. ஆஸ்டலுக்கு வரும் போதுகூட என்னிடத்திலே 25 ரூபாய் 30 ரூபாய் என்று கேட்டார்கள். நான் தொடர்ந்து, 2, 3, ஆட்டோ டிரைவர்களிடம் கேட்டு, நான்காவதாக ஒரு ஆட்டோவிலே வந்து கொண்டிருந்தபோது, அந்த டிரைவர் சொன்னார், டிராபிக் போலீஸ் வரும்போது, மீட்டர் போட்டுத்தான் இந்த ஆட்டோ வந்துகொண்டிருக்கிறது

என்று நீங்கள் சொல்லுங்கள் என்று அந்த ஆட்டோ டிரைவரே என்னிடத்திலே சொன்னார். நான் சட்டமன்ற உறுப்பினர் என்று அவருக்குத் தெரியாமல் என்னிடத்திலே அவ்வாறு சொன்னார். இதுபோன்றுதான் பல இடங்களிலே பொதுமக்களை ஏமாற்றி வருகிறார்கள். அதுமட்டுமல்ல, ஒரு இடத்திற்கு நாம் ஆட்டோவிலே செல்லும்போது, ஒரு வேலையாக அந்த ஆட்டோவை நிறுத்திவிட்டு அந்த வேலை முடிந்தபின்பு திரும்ப அந்த ஆட்டோவிலே வரும் போது, அந்த மீட்டரிலே அதிகக் கட்டணம் காண்பிப்ப தற்காகக் கோளாறு செய்து விடுகிறார்கள். இதனால் அதிக அளவு வெயிட்டிங் சார்ஜ் ஏற்படுகின்றது. பொது மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படுத்தக் கூடிய இது போன்ற நிகழ்ச்சிகளை அரசு உடனடியாகக் கண்டறிந்து, தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ செங்கோட்டையன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீட்டரில் கோளாறு என்பதைக் காட்டிலும், பெருகாலமாக அந்தக் கோளாறு ஏற் படுத்தியக் காரணத்தினால்தான் தமிழகத்திலே இதுபோன்ற தவறுகள் ஏற்பட்டு இருக்கிறது. அந்தத் தவறுகளைக் குறைப்பதற்காக இந்த அரசு விரைந்து பல்வேறு நடவடிக் கைகளை மேற்கொண்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகளின் அடிப்படையிலேதான் குறைந்த தூரத்திற்கு ஆட் டோக்களை இயக்க முடியவில்லை என்கிற ஆட்டோ ஓட்டு நர்களுக்கு அறிவுரை வழங்குதல்; கூடுதலாகக் கட்டணம் கேட்பது; பயணிகளிடத்திலே தவறான முறையிலே பேசுதல், ஓட்டுநருடைய இருக்கையிலே இருவர் அமர்ந்துகொண்டு பயணம் செய்வது; இதுபோன்ற நிலைமைகள் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த அரசு பல்வேறு நட வடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இரண்டு மாதத்திற்கு ஒருமுறை பயணிகளுடைய சார்பாக இருக்கிற கன்ஸ்யூமர் மற்றும் அவர்களுடைய சங்கத்தைச் சார்ந்தவர்களும், ஆட் டோ ஓட்டுநர்களுடைய சங்கத்தைச் சார்ந்தவர்களும் அதேபோல உள்துறைச் செயலாளர், இங்கேயிருக்கின்ற போக்குவரத்து ஆணையாளர் மற்றும் இருக்கின்ற பல்வேறு அதிகாரிகளை வைத்துக் கொண்டு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை, இதுபோன்ற தவறுகளைக் குறிப்பிடுகின்ற போது உடனுக்குடன் அந்தச் சங்கத் தலைவரிடத்திலே எடுத்துச் சொல்லி தவறுகள் ஏற்படாமல் இந்த அரசு அந்தத் தவறுகளைக் குறைப்பதற்காக நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

1993 ஏப்ரல் 22]

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையிலேயிருந்து சென்னைக்கு வருகின்றபோது சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில், சென்டிரல் ரெயில்வே நிலையத்தில், நாங்கள் ஆட்டோவை எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு விடுங்கள் என்று சொன்னால் எந்த ஆட்டோக்காரரும் வருவது கிடையாது. எம்.எல்.ஏ. என்று சொன்னாலும் வருவது கிடையாது. ஒருசமயம், பொது மக்கள் என்று சொன்னால் வருபவர்கள் நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், மீனம்பாக்கம் என்று தூரமாக செல்கின்ற பகுதிகளுக்கு வேண்டுமென்றால் வருவார்களோ என்னவோ, அதுவும் கிடையாது. மீட்டரும் சரியாகப் பொருத்துவது கிடையாது. சென்னை மாநகரத்திலே இருப்பதைப் போலத்தான் கோவை மாநகரத்திலும் இருக்கிறது. ஆகவே, சென்னையை சீர் திருத்துவதுபோல், கோவையிலும் இதே மீட்டர் பிரச்சினை ஆட்டோக்களிலே, இருப்பதால் அங்கேயும் சீர்ப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரி-பெய்டு சிஸ்டம் என்ற முறையைக் கொண்டு வந்ததற்குக் காரணமே, ஆட்டோ உரிமையாளர்கள் என்னைச் சந்தித்துப் பேசுகின்றபோது, நாங்கள் ஆட்டோவில் பயணம் செய்கின்றவர்களைக் கொண்டுபோய் விட்டுவிட்டு திரும்பி வருகின்றபோது அந்த ஆட்டோக்கள் வாடகையில்லாமல் திரும்பி வரவேண்டியிருக்கிறது. மீட்டர் கட்டணத்தை மட்டும் வசூல் செய்தால் திரும்பி வருகின்ற இந்த மீட்டர் செலவு என்ன ஆகிறது என்பதைக் குறிப்பிட்டு, அதற்குப் பிரி-பெய்டு சிஸ்டம் என்ற முறையைக் கொண்டு வந்தீர்களேயானால் நாங்கள் தவறுகள் செய்யாமல் ஆட்டோக்களை இயக்க முடியும் என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில்தான், சென்டிரல் ஸ்டேஷன், எக்மோர் ஸ்டேஷன், அதேபோன்று பேருந்து நிலையங்களிலே நாங்கள் இந்த நிலையை உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம். இதைத் தொடர்ந்து, கோவை, திருச்சி போன்ற நகரங்களிலும், பல்வேறு நகரங்களிலுள்ள இடங்களிலும் இந்த நிலையை உடனடியாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எம். கே. பாலன்.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்டோக்களில் அதிகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க, அரசு எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்துவதாக அறிவித்தது. அதன் விவரம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்த வேண்டும் என்று நாங்கள் அறிவுரை வழங்கினோம். ஆட்டோ உரிமையாளர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் பல்வேறு இயக்கத்தைச் சார்ந்தவர்களோடு சேர்ந்து போராட்டம் நடத்துவதைப் போல ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவேதான் அதற்கு அதிகமான தொகை செலவாகிறது ஏறத்தாழ எலக்ட்ரானிக் மீட்டர் வைக்க வேண்டுமென்று சொன்னால் 3000-லிருந்து 3,500 ரூபாய் செலவாகிறது. என்கிற கருத்தின் அடிப்படையிலே தான் அதை இந்த அரசு மீண்டும் மறுபரிசீலனைச் செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆட்டோவில் முதலில் செக் செய்து சரியான மீட்டரைத்தான் அதிகாரிகள் பொருத்துகின்றார்கள். ஆனால் அதற்குப் பிறகு அந்த மீட்டரைக் கழற்றி புதுப்பேட்டையிலுள்ள கடைகளிலேயெல்லாம் கொடுத்து சூடு என்று சொல்கிறார்கள்; ஒரு ரூபாய்க்கு 20 காசு எக்ஸ்ட்ரா விழுமாம்; 10 ரூபாய் ஆகும் என்றால் 12 ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். ஆகவே இதை நிறுத்துவதற்கு, எந்தெந்தக் கடைகளில் இம்மாதிரி சூடு வைக்கிறார்கள் என்று கண்டுபிடித்து அந்தக் கடைகளின் மீதெல்லாம் நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சூடு வைப்பது என்ற முறை நீண்ட நெடுங்காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு, எந்தெந்தக் கடையின் உரிமையாளர்கள்- ஒர்க் ஷாப் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இதைச் செய்கிறார்களோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காக இப்பொழுது முனைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரிருவருடைய லைசென்சும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு வெ. அழகிரிசாமி.

1993 ஏப்ரல் 22]

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சபையிலுள்ள 234 சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக, நீண்ட நெடுங்காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவான காலத்திலிருந்து தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தினப்படி, ஒரு பெட்டிஷனை வாங்கிக் கொண்டு அமைச்சருடைய இல்லத்திற்குப் போய் வந்தால் சரியாகப் போய் விடும். அதற்காக நிதியமைச்சரிடத்திலே குறையாகச் சொன்னாலும் அதைக் கூட்டித் தரப் போவதில்லை. ஆகவே தாங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வெ. பழனிசாமி: சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து 77-லிருந்து இருந்த தாங்கள் அதனுடைய சிரமங்கள், இடர்பாடுகள், இன்னல்கள் முழுவதுமாக அனுபவபூர்வமாக அறிந்தவர்கள். ஆகவே, தயவுசெய்து கோட்டையிலிருந்து எம்.எல்.ஏ., ஹாஸ்டலுக்கும், அங்கேயிருந்து கிரீன்வேஸ் ரோடு வரை அரசு சார்பாக ஆட்டோவோ அல்லது மினி பஸ்ஸோ தொடர்ந்து அனுப்பி சட்டமன்ற உறுப்பினர்களைக் காப்பாற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆட்டோக்களை நாங்கள் அப்படி இயக்க முடியாது. ஆட்டோ உரிமையாளர்கள் தனிப்பட்டவர்கள். (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகள் எனக்குப் புரிந்து கொண்டிருக்கிறது. நீங்கள் எப்பொழுது வருகிறீர்கள்? எப்பொழுது போகப் போகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அந்த நேரத்தைக் குறிப்பிட்டால், சிலபேர் இரவு, மாலை நேரங்களிலே வந்து பார்க்கிறீர்கள்; சிலபேர் காலை நேரங்களிலே பார்க்கிறீர்கள். சிலபேர் உணவு அருந்தி விட்டு வந்து பார்க்கிறீர்கள். உங்கள் சௌகரியத்திற்கு வந்து பார்க்கிறபொழுது எந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அந்தப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று நீங்கள் குறிப்பிட்டால் (குறுக்கீடு) சரி எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலேயிருந்து காலை 8 மணியிலேயிருந்து 11 மணி வரையிலும் பெருந்துகள் இயக்கப்படும் அதே போல மாலை 5 மணியிலேயிருந்து 8 மணி வரையிலும்

பேருந்துகளை இயக்குவதற்கு, இரு பேருந்துகள் இயக்கு வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (குறுக்கீடு) என்ன? 9 மணி வரையிலுமா; காலை 8 மணியிலேயிருந்து 11 மணி வரையிலும், மாலை 5 மணியிலேயிருந்து 9 மணி வரை யிலும் இரண்டு பேருந்துகளை இயக்குவதற்கு நாளை காலையே நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக அமைச் சர்களுடைய இல்லங்களுக்குப் பேருந்துகள் விடச் சொன்ன மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றி, அதேபோல சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து இரயில்வே ஸ்டே ஷனுக்கு. மாலையிலே இரயிலுக்குச் செல்கின்ற நேரத்திற் கும் நாங்கள் ஆட்டோக்களைக் கேட்டால் ஆட்டோ யாரும் இருப்பதும் இல்லை; டாக்ஸியினுடைய டிரைவரும் எம்.எல்.ஏ., ஹாஸ்டலில் இருப்பது இல்லை, வீட்டிற்குச் சென்று விடுகிறார்கள், ஆகவே, மாலையிலே பத்தே முக்கால், அந்த ஏற்காடு எக்ஸ்பிரஸ் செல்லுகின்ற வரை பேருந்து விடுவ தற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பாரா? அத்துடன், ஆட்டோ பிரச்சினை பற்றி எல்லோரும் சொன் னார்கள்; மொத்தமாக சென்னை நகரத்திற்கு எவ்வளவு ஆட்டோக்களுக்கு பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது? வெளியிலே லைசென்ஸ் கொடுத்த ஆட்டோக்கள் கூட இங்கே வந்து ஓட்டுவதால்தான் இந்தப் பிரச்சினை என்று சொல்கிறார்கள். அதோடு இந்த ஆட்டோ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்

திரு. வி. கே. சின்னசாமி: வண்டிக்குச் செல்கின்ற ஆட் டோக்களைக் கேட்டு வர மாட்டேன் என்று சொன்னால்- முதலிலே கேட்கும்பொழுதே எங்கே போகிறீர்கள் என்றுதான் கேட்கிறார்கள்- எங்கே போகிறீர்கள் என்று கேட்ட துமே ஏதோ எங்களுக்குச் சங்கடம் ஆக இருக்கிறது. ஆகவே, பொது மக்கள் சென்று போலீஸ் ஸ்டேஷனிலே புகார் செய்வர்களேயானால், நான் இத்தனாம் நம்பர் உள்ள ஆட்டோ, இந்த நம்பர் உள்ள ஆட்டோவுக்குச் சென்றேன் அவர் வருவதற்கு மறுக்கின்றார், இவ்வளவு அதிகமாக எங்களிடத்திலே கட்டணம் கேட்கிறார் என்று சொல்வார் களேயானால் அந்தக் காவல் துறை அதிகாரிகள் அவர் மீது நடவடிக்கையெடுத்து, ஆட்டோ லைசென்சை ரத்து செய்வதோடு அந்த டிரைவருடைய ஒட்டுநர் உரிமை

யையும் ரத்து செய்வதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேறு மாவட்டங்களிலேயிருந்து சென்னையிலே ஆட்டோக்கள் இயக்கப்படுவதில்லை. இங்கே இருக்கின்ற ஆட்டோக்களிலே தவறுகள் ஏற்படுமேயானால், அந்தத் தவறுகளைக் குறிப்பிடுகின்றபோது, அந்தத் தவறுகளை ஏற்படுத்துகின்ற அந்த ஆட்டோக்களினுடைய, ஏறத்தாழ 675 ஆட்டோக்களினுடைய லைசென்சை நாங்கள் ரத்து செய்திருக்கிறோம். குறிப்பிட்ட இந்த ஆறு மாத காலத்தில். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, எக்மோர் ஸ்டேஷன், சென்டிரல் ஸ்டேஷன் செல்வதற்கும், அதே போன்று திருவள்ளுவர் பேருந்து நிலைத்திற்குச் செல்வதற்கும் மாலை நேரங்களிலே பேருந்துகள் இயக்கப்படுமா என்று கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் என்றைக்கு தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்றார்களோ, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும் சரி, கோரிக்கைகளை வைக்கிறபோது, அந்த கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறுகின்ற இந்தக் காலக்கட்டத்தில் சரியாக பேருந்துகள் 7.00 மணியிலிருந்து 10.00 மணி வரையிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து சென்டிரல் ரெயில்வே ஸ்டேஷன், எக்மோர் ஸ்டேஷன் மற்றும் பேருந்து நிலையத்திற்கு நாளை காலையிலேயிருந்தே இயக்கப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 430, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

430-

கைத்தறிக்குத் தள்ளுபடி தொகையை அதிகரித்தல்.

*15642 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறிக்கு தள்ளுபடி (Rebate) தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 22]

யையும் ரத்து செய்வதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேறு மாவட்டங்களிலேயிருந்து சென்னையிலே ஆட்டோக்கள் இயக்கப்படுவதில்லை. இங்கே இருக்கின்ற ஆட்டோக்களிலே தவறுகள் ஏற்படுமேயானால், அந்தத் தவறுகளைக் குறிப்பிடுகின்றபோது, அந்தத் தவறுகளை ஏற்படுத்துகின்ற அந்த ஆட்டோக்களினுடைய, ஏறத்தாழ 675 ஆட்டோக்களினுடைய லைசென்சை நாங்கள் ரத்து செய்திருக்கிறோம். குறிப்பிட்ட இந்த ஆறு மாத காலத்தில். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, எக்மோர் ஸ்டேஷன், சென்டிரல் ஸ்டேஷன் செல்வதற்கும், அதே போன்று திருவள்ளுவர் பேருந்து நிலைத்திற்குச் செல்வதற்கும் மாலை நேரங்களிலே பேருந்துகள் இயக்கப்படுமா என்று கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் என்றைக்கு தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்றார்களோ, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும் சரி, கோரிக்கைகளை வைக்கிறபோது, அந்த கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறுகின்ற இந்தக் காலக்கட்டத்தில் சரியாக பேருந்துகள் 7.00 மணியிலிருந்து 10.00 மணி வரையிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து சென்டிரல் ரெயில்வே ஸ்டேஷன், எக்மோர் ஸ்டேஷன் மற்றும் பேருந்து நிலையத்திற்கு நாளை காலையிலேயிருந்தே இயக்கப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 430, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

430-

கைத்தறிக்குத் தள்ளுபடி தொகையை அதிகரித்தல்.

*15642 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறிக்கு தள்ளுபடி (Rebate) தொகையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1993 ஏப்ரல் 22

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது வழங்கப்பட்டுவரும் 20 சதவீதம் தள்ளுபடி மானிய தொகையை அதாவது, விற்பனையில் வழங்கி வரும் விழுக்காட்டினை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

டாக்டர் ஜெ, பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தற்போது இல்லையென்றாலும்கூட வாய்ப்பு வரும்போது அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு. நெசவாளர்களின் வாழ்வில் வளம் சேர்த்த டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு. வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள குடியாத்தம். நெமிலி. பனப்பாக்கம் போன்ற பகுதியில் வசிக்கும் ஏழை நெசவாளர்களின் வாழ்விற்கு உத்திரவாதம் தரும் வகையில் கைத்தறி லுங்கிகள் விற்கவும். லுங்கிகளுக்கு இப்போது தரப்படுகின்ற தள்ளுபடியைக் காட்டிலும். மேலும் உயர்த்தித் தரவும் அரசு கருணையோடு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1989-90 ஆம் ஆண்டிலிருந்த மத்திய அரசு, அதற்கு முன்னதாக இருந்த மத்திய அரசினுடைய 50 சதவீதம் தள்ளுபடி மானியமும், மாநில அரசினுடைய 50 சதவீத தள்ளுபடி மானியமாக இருந்த நிலையை மாற்றி, மொத்த தள்ளுபடி மானியத்தில், 75 சதவீதத்தில், 50 சதவீதம் மத்திய அரசும் மாநில அரசும் வழங்க வேண்டுமென்றும் மீதியுள்ள 25 சதவீதத்தை வளர்ச்சித் திட்டங்களுக்காக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்ததன் வாயிலாக, மத்திய அரசு தள்ளுபடித் தொகையைக் குறைத்திருக்கிறது. ஏறத்தாழ 17 கோடிகள் என்று கருதுகிறேன். ஆனால் தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கிற மாண்புமிகு இதய புரட்சித் தலைவி அவர்கள் கொடுக்கிற தொகை. எவ்வளவு தொகை கொடுக்கிறார்கள் என்பதனை கணக்கில் வைக்காமல், கடந்த நிதிநிலை ஆண்டில் 42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தந்து நெசவாளர்களின் வாட்டத்தைப் போக்குவதற்கு வழிவகை செய்து தந்திருக்கிறார்கள். இதற்குமேல், தற்போது இருக்கிற நிதிநிலையில் செய்ய இயலாது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வருத்தத்துடன் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது கைத்தறித் துணிகளை விட பாலியஸ்டர் ரகங்கள்தான் அதிக அளவில் விற்பனை ஆகின்றன. அதனால் கைத்தறித் துணி அதிக அளவில் விற்க, தள்ளுபடித் தொகையை அரசு அதிகரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகளில் பாலியஸ்டர் நூலைக் கலந்து கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்வதற்கு வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது இருக்கிற கைத்தறித் துணிகள் விற்பனையாவதற்கு என்னென்ன திட்டங்களை நாங்கள் வகுத்திருக்கிறோம் என்பதை 26-ஆம் தேதி நடைபெறுகிற மானியக் கோரிக்கையில் நான் தெளிவாக எடுத்துரைக்க இருக்கிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருந்து தீர, கேட்கவேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. சா. மா. ராமச்சந்திரன்.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கைத்தறித் தள்ளுபடித் தொகையை அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏதுமில்லை என்று கூறியிருக்கிறார்கள். நிதிநிலை நெருக்கடியைக் கருத்திலே கொண்டு அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த நேரத்திலே தங்கள் மூலமாக நான் கேட்க விரும்புவது என்னவென்றால் கைத்தறி தள்ளுபடித் தொகையை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இல்லாவிட்டாலும், அந்த தள்ளுபடி காலத்தையாவது, அதாவது ஒரு குறிப்பிட்ட காலங்களிலே இப்போது தள்ளுபடிசெய்து கைத்தறித் துணிகள் கொடுக்கப்படுகின்றன; அந்தக் காலத்தையாவது தள்ளுபடி செய்கிற அந்தக் காலத்தையாவது இனிமேல் ஆண்டு தோறும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா? அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, ஒதுக்கப்பட்ட தொகை குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் தான் தரப்படுகிறது என்றார். குறிப்பாக, இதுவரையிலும் நம்முடைய தமிழக அரசின் சார்பில் ரூ. 3,447.40 லட்சங்கள், அதாவது 34 கோடியே 47 லட்சத்து 40 ஆயிரம் தமிழக அரசின் சார்பில் தள்ளுபடி தொகை வழங்கப்படுகிறது. அதே நேரத்தில், மத்திய அரசின் சார்பில் ரூ. 1,723.70 லட்சங்கள் மட்டுமே வழங்கப் படுகிறது. ஏற்கெனவே இருந்த மாநில அரசு எவ்வளவு ஒதுக்குகிறதோ, அந்த அளவுக்கு மத்திய அரசும் ஒதுக்க வேண்டுமென்ற நிலைமை மாறி, இப்போது தமிழக அரசின் சார்பில் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வந்த பிறகு, தருகிற தொகை ரூ. 3,447.40 லட்சங்கள், மத்திய அரசு தருவது ரூ. 1,723.70 லட்சங்கள் ஆகும். ஏறத்தாழ மத்திய அரசைவிட இரண்டு மடங்கு அதிகமாக, நம்முடைய தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் வழங்குகிறார். இந்தத்துறை 100 நாட்களுக்குள்ள தாக, எம்மதமும் சம்மதமே என்ற வகையில், அனைத்து மதத்தைச் சார்ந்தவர்களுடைய பண்டிகை நாட்களிலும், மற்ற நாட்களிலும் நெசவாளர்களுக்கு உதவுகிற வண்ணம் செய்யப்படுகிறது. அதே நேரத்தில் கைத்தறிக் கண்காட்சி யிலேயும் இத்தகைய தள்ளுபடி நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்குமேல் செய்ய இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 431, திரு. ஏ. எம். பரமசிவன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

1998 ஏப்ரல் 22]

431—

மதுரை மாநகரைச் சுற்றி சுற்றுச் சாலை அமைக்கும் திட்டம்

*9105— திரு. ஏ. எம். பரமசிவன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாநகரைச் சுற்றி ரிங்ரோடு (சுற்றுச் சாலை) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகரைச் சுற்றி ரிங்ரோடு அமைக்கும் பணிக்குத் தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ள திட்டம் தயாராக உள்ளது, உலக வங்கியின் ஒப்புதலோடு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மதுரை மாநகரத்தைச் சுற்றி, சுற்றுச் சாலை அமைக்கிற திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்க வேண்டிய சாலையின் நீளம் 26 கிலோ மீட்டர், இதற்குத் தேவையான மதிப்பீடுகள் இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இறுதி மதிப்பீடுகள் தயாரிக்கும் போதுதான், அதனுடைய துல்லியமான தொகையை சரியாகச் சொல்ல முடியும். இந்தத் திட்டம் உலக வங்கியினுடைய ஒப்புதலோடு நிறைவேற்ற வேண்டிய திட்டம், அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசினுடைய அனுமதியைப் பெற்று, அதற்குப் பின்னாலேதான் மதிப்பீட்டினை தெளிவாகத் தெரிவிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது எடுத்துக் கொண்டிருக்கிற சாலையின் நீளம் 26,7 கிமோ மீட்டர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தச் சுற்றுச்சாலை ஏற்படுத்துவதற்கான திட்டத்திலுள்ள நிலங்களை வைத்திருக்கிற நிலச் சொந்தக்காரர்களுக்கு பணத் தொகை பட்டுவாடா செய்யப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நிலத்தைக் கையகப்படுத்துகிற போது அரசு ஒரு தொகையை நிர்ணயித்து, அந்தத் தொகையை நிலத்தின் உரிமையாளர்களுக்கு வழங்கி வருகிறது. அந்த அடிப்படையிலேதான் பணிகள் நடந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. த. க. இராதாகிருஷ்ணன்.

திரு. த. க. இராதாகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மதுரை மாநகரிலே நெரிசலைத் தவிர்ப்பதற்காக சுற்றுச்சாலை அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், எப்போது அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது ? எந்த ஆண்டு முடிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியை பொறுத்த மட்டிலே. இங்கே நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல. பெரும்பாலான நிலங்களைக் கையகப்படுத்துகிற பணிகள் முடிந்து விட்டன. திட்ட மதிப்பீடுகள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான காலக்கெடு என்ன என்பதை நாம் இப்போது இறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால், மிக விரைவிலே இதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. மதுரையினுடைய தேவையை, அங்கே இருக்கிற நெருக்கடியை இந்த அரசு நன்றாக அறியும், ஆகவே அதற்கான பணிகள் மிகவிரைவில் மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ.எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மதுரை மாநகரம் ஒரு பழமை வாய்ந்த கோயில் நகரமாக இருக்கிறது, அந்த நகரிலே நாளுக்கு

1993 ஏப்ரல் 22]

நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இன்றைய சூழ்நிலையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச்சாலை அமைக்கும் திட்டத்தைப் பற்றி இங்கே விளக்கமாகச் சொன்னார்கள். அந்த சுற்றுச் சாலை எந்த இடத்தில் ஆரம்பிக்கின்றது? அது நகரில் எந்த இடத்தில் முடிகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்சமயம் கையகப்படுத்தப் பட்டுள்ள இடங்களில் முதல் கட்டமாக 5,5 கிலோ மீட்டர் நீளத்திற்கு திருச்சி-மேலூர் மதுரை சாலை கிலோ மீட்டர் 445/10-ல் பிரிந்து மதுரை-தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை நம்பர் 19 கிலோ மீட்டர் 4,10 என்ற இடத்தில் இணையும் வகையில் இப்போது அந்த வேலை தொடங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 432, திரு. பி. சொக்கலிங்கம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

432.—

மதுராந்தகம்—சூனாம்பேடு சாலையில் இருப்புப்பாதை கடந்து செல்லும் இடத்தில் போக்குவரத்து பாதிப்பு.

*11784—திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம்—சூனாம்பேடு சாலையில் இருப்புப் பாதை கடக்கும் இடத்தில் போக்குவரத்து பாதிக்கப்படுவதை அரசு அறியுமா

(ஆ) ஆம் எனில், அங்கு மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1993 ஏப்ரல் 22]

நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இன்றைய சூழ்நிலையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச்சாலை அமைக்கும் திட்டத்தைப் பற்றி இங்கே விளக்கமாகச் சொன்னார்கள். அந்த சுற்றுச் சாலை எந்த இடத்தில் ஆரம்பிக்கின்றது? அது நகரில் எந்த இடத்தில் முடிகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்சமயம் கையகப்படுத்தப் பட்டுள்ள இடங்களில் முதல் கட்டமாக 5,5 கிலோ மீட்டர் நீளத்திற்கு திருச்சி-மேலூர் மதுரை சாலை கிலோ மீட்டர் 445/10-ல் பிரிந்து மதுரை-தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை நம்பர் 19 கிலோ மீட்டர் 4,10 என்ற இடத்தில் இணையும் வகையில் இப்போது அந்த வேலை தொடங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 432, திரு. பி. சொக்கலிங்கம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

432.—

மதுராந்தகம்—சூனாம்பேடு சாலையில் இருப்புப்பாதை கடந்து செல்லும் இடத்தில் போக்குவரத்து பாதிப்பு.

*11784—திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம்—சூனாம்பேடு சாலையில் இருப்புப் பாதை கடக்கும் இடத்தில் போக்குவரத்து பாதிக்கப்படுவதை அரசு அறியுமா

(ஆ) ஆம் எனில், அங்கு மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) தற்போது அங்கே இருக்கின்ற இருப்புப் பாதைக் கடவு குறியீட்டை அடைகின்ற அளவுக்கு இருந்தால்தான் அந்த மேம்பாலம் அமைக்கின்ற பணியை அரசு தொடங்க முடியும். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் அந்த அளவுக்கு எட்டாத காரணத்தால் இப்போது அந்தப் பணியை எடுத்துக்கொள்வதற்கான திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம்—சூணாம்பேடு சாலை வழியாகத்தான் அச்சரப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்களும், மதுராந்தகம் தொகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்களும், மதுராந்தகம் வரவேண்டியிருக்கிறது. அதிலும் குறிப்பாக கர்ப்பிணி பெண்களும், விபத்துக்குள்ளானவர்களும் அந்த வழியாகத்தான் மதுராந்தகம் மருத்துவமனைக்கு அழைத்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த இரயில் இருப்புப் பாதையின் வழியாக அடிக்கடி இரயில் செல்வதால் போக்குவரத்து தடைபட்டு கர்ப்பிணி பெண்களும், விபத்துக்குள்ளானவர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதை கருத்தில் கொண்டாவது மாண்புமிகு ஆற்றல் மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இருப்புப் பாதைக் கடவு பொறுத்தவரையில் ஏற்கெனவே வாகனங்கள் போக்குவரத்தில் பிரச்சினை இருக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறிந்து இருக்கிறது. அந்த மேம்பாலம் அமைக்கின்றபோது நாம் பாதித் தொகையையும் மத்திய அரசு பாதித் தொகையையும் போட்டு அந்தப் பால வேலை செய்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், எல்லா மேம்பாலங்களையும் நாம் எடுத்து செய்வதற்கு நிதி ஆதாரம் நம்மிடத்தில் போதுமானதாக இல்லை. ஆகவே, சிலவற்றை நாம் முன்னுரிமைக் கொடுத்து செய்கிறோம். இந்த மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 3 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, ஒரு நெடுஞ்சாலையில் இருக்கின்ற இந்த பாலத்திற்கு 3 கோடிரூபாயில் கட்டுவதற்கு இந்த அளவுக்கு நிதி ஆதாரம் தற்போது இல்லாத காரணத்தல் தான் அந்தப் பிரச்சினையை கொஞ்சம் காலத்திற்கு தள்ளி வைத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிப்பு அடிக்கடி ஏற்படுகிற பிரச்சினை இருக்கிறது என்பதை இந்த அரசு நன்கு அறிந்திருக்கிறது. ஆகவே, வரும் காலங்களில் இதை எப்படி எடுக்கலாம் என்பதை அரசு பரிசீலனைச் செய்து மைய அரசோடு கலந்து பேசி முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கலாமா என்பதை இந்த அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 433, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண். 434, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

434—

குட்டி கவுண்டலூரில் குடிநீர்த் தட்டுப்பாடு.

*9644—திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஒன்றியம் சாப்பரம் ஊராட்சி குட்டிகவுண்டலூரின் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஆ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியம் சாப்பரம் ஊராட்சியைச் சேர்ந்த குட்டிக்கவுண்டலூர் குடியிருப்பிற்கு இந்நிதியாண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் அமைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி முடிக்கப்பட்டு இன்னும் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட 3 கிராமங்கள் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, உடனடியாக இந்த கோடைக்காலத்தில், வறட்சியால் வெகுவாக பாதிக்கப்படுவதற்குள் குறைந்தது 15 நாட்களுக்குள் அந்த மின் இணைப்பைக் கொடுத்து தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக மின் இணைப்பு கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் நிலத்தடி நீர் அதிகமாக குறைந்து இருக்கிற காரணத்தால் ஏற்கெனவே பல நூற்றுக் கணக்கான ஆழ் குழாய் கிணறுகள் வறண்டு இருக்கின்றன. அவைகளை மேலும் ஆழப்படுத்த துரிதமாக அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்து இருந்தாலும் போதிய உபகரணங்கள் இல்லாமல் அவர்கள் வேலையை பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, உடனடியாக அரசு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அத்தனை ஆழ்துளைக் கிணறுகளுக்கும் உரிய உபகரணங்களை வழங்க துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 435, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை, அமைச்சர்.

435—

நெகமம் பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றல்

*10150-திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

கிணத்துக்கடவு தொகுதி பெரிய நெகமம் பேரூராட்சிக்குப் போதிய வருமானம இல்லாததால் அதை ஊராட்சியாக மாற்ற அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம் பெரிய நெகமம் முதல்நிலை பேரூராட்சியை ஊராட்சியாக வகைமாற்றம் செய்வதற்கான சாத்தியம் இல்லை.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் நிலத்தடி நீர் அதிகமாக குறைந்து இருக்கிற காரணத்தால் ஏற்கெனவே பல நூற்றுக் கணக்கான ஆழ் குழாய் கிணறுகள் வறண்டு இருக்கின்றன. அவைகளை மேலும் ஆழப்படுத்த துரிதமாக அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்து இருந்தாலும் போதிய உபகரணங்கள் இல்லாமல் அவர்கள் வேலையை பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, உடனடியாக அரசு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அத்தனை ஆழ்துளைக் கிணறுகளுக்கும் உரிய உபகரணங்களை வழங்க துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 435, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை, அமைச்சர்.

435—

நெகமம் பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றல்

*10150—திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

கிணத்துக்கடவு தொகுதி பெரிய நெகமம் பேரூராட்சிக்குப் போதிய வருமானம் இல்லாததால் அதை ஊராட்சியாக மாற்ற அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம் பெரிய நெகமம் முதல்நிலை பேரூராட்சியை ஊராட்சியாக வகைமாற்றம் செய்வதற்கான சாத்தியம் இல்லை.

1993 ஏப்ரல் 22]

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே இருக்கின்ற பெரிய நெகமம் பேரூராட்சியை ஊராட்சியாக மாற்ற வேண்டுமென்ற ஒரு அவசியத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பெரும் பாலும் ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்றவேண்டு மென்ற கோரிக்கைகள்தான் சட்டமன்றத்திலே வைக்கப்படும். ஆனால் ஒரு பேரூராட்சியை ஊராட்சியாக மாற்ற வேண்டிய ஒரு கோரிக்கையை நான் இங்கே வைக்கின்றேன் என்றால் அந்தப் பேரூராட்சியின் வருமானம், இன்று அங்கே இருக் கின்ற பேரூராட்சி அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூடிய அளவுக்குக் கூடப் போதுமானதாக இல்லை. குடி நீர் கூட இரண்டு நாள், 3 நாள் என்று விடப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. ஏனென்றால், மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்கு நிதி வசதி அந்தப் பேரூராட்சிக்கு இல்லாமல் இருக்கிறது. அந்தப் பேரூராட்சியின், வீட்டு வரி, தொழில் வரி போன்ற வரிகள் வசூலிக்கப்படாமல் மிகவும் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கிறது. கிட்டத் தட்ட 73,000 ரூபாய் அளவுக்கு வீட்டுவரியே வசூலிக்கப் படாமல் இருக்கிறது. இப்படியெல்லாமம் இருக்கின்ற நிலையில், ஒரு பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றினால் ஒன்றியப் பொது நிதியிலிருந்தாவது அந்தப் பேரூராட்சிக்குப் பணிகள் நடக் கும், எனவே, அந்த பெரிய நெகமம் பேரூராட்சியை, ஒன்று அது தனியாகச் செயல்படுகின்ற அளவுக்கு நிதி ஆதாரத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அல்லது பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றுவதற்கு நட வடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு வழிவகைகள் காணப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அந்தப் பேரூராட்சியிலே, முன்பு இருந்த பேரூராட்சியின் செயல் அலுவலர் 5 ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள வீடுகளுக்கு எல்லாம் 50 ஆயிரம், 1 இலட்சம், 2 இலட்சம் என்று மதிப்பீடுகளைப் போட்டுக் கொடுத்து, அந்த வீடுகளை எடுகட்டி சாரயக் கடை, கள்ளுக் கடை எடுத்தவர்கள் அந்தக் கடைக்குப் பணமும் கொடுக்க வில்லை. ஆயத் தீர்வையும் கொடுக்கவில்லை. இதனால் அந்த வீட்டு வரி, அந்த வீடுகளின் மதிப்புக்கு உயர்த்தப்

பட்டதனால், சாதாரணமாக வீட்டுவரி 10 ரூபாய்; 20 ரூபாய் என்று இருந்தது இப்போது 100 ரூபாய், 200 ரூபாய் 500 ரூபாய் எனக் கூட்டப்பட்டிருக்கிறது. 5,000 ரூபாய் பெறுமானமுள்ள வீட்டுக்கு 500 என வீட்டுவரி உயர்த்தப் பட்டிருக்கிறது என்பது, அதை முன்பு இருந்த ஆட்சிக் காலத்தில் சில நபர்கள் தவறுதலாகப் பயன்படுத்தியிருக் கிறார்கள். அவர்களிடமிருந்து அந்த வீட்டு வரியை வசூலிப் பதற்கு அரசு நடவடிககை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நிகமம் பேரூராட்சியைப் போன்றுதான், கோவை பேரூர் தொகுதியில் உள்ள திருமலைபாளையம் பேரூராட்சியும் இருக்கிறது. நான் சொல்லிக் கொள்வது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, நெகமத்தைப் பற்றியது.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியில் பணம் இல்லை என்றாலும், வருமானம் உள்ள பெரிய பேரூராட்சியிலிருந்து பணத்தை எடுத்து, வருமானம் இல்லாத பேரூராட்சிகளுக்குச் செலவு செய்தாகிலும், விளக்கு வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகளைச் செய்துதர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொளகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 436, திரு. கோ. காளன், இருக்கையில் இல்லை.

வினா எண். 437, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சா.

1993 ஏப்ரல் 22]

437—

வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கல்.

*11507—டாக்டர் அ. ஸ்ரீ தரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இது குறித்து விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தோட்டத் தொழிலிலுள்ள தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் பல காலமாக கூட்டுபேர முறையில் ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றன. தொழிலாளர்களுக்கு தினக் கூலியாகவும், பணியாளர்களுக்கு மாதச் சம்பளமாகவும் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றது. இத் தொழிலில் உள்ள தொழிலாளர்களுக்கு ஊதியம் கூட்டுப் பேர முறையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதால் மாதச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்த இயலாது. தொழிலாளர்களுக்குத் தினக்கூலி அடிப்படையில் சம்பளம் கணக்கிட்டு மாதா மாதம் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குறைந்த அளவு கூலி நிர்ணயமும், தினசரி அடிப்படையில் தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, 1–9–1992 முதல் ஒரு வயது வந்த ஆண் தொழிலாளியின் தினக் கூலி (அடிப்படை சம்பளம் அகவிலைப்படி சேர்ந்தது) ரூ. 20.07 தலைநார் பகுதி தோட்ட தொழிலாளர்களுக்கு தினக்கூலி ரூ. 19.42 ஆகும். இதுபோல் தோட்ட நிறுவனங்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறு சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி தற்பொழுது தினக்கூலி ரூ. 30.32 ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம், ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட இருதரப்பினரை மட்டுமே கட்டுப்படுத்தும். ஆனால், குறைந்த பட்ச ஊதியம் தோட்ட நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் உட்பட்ட அல்லது உட்படாத அனைத்து தோட்ட நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

மாத அடிப்படையில் சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்தாலும் தற்பொழுது தொழிற் தகராறுகள் சட்டப்பிரிவு 12 (3) ன் கீழ் 21–9–1990 அன்று ஏற்பட்ட ஒப்பந்தம் அமலில் உள்ள காலத்தில் (31–12–1992 வரை) அதை

மாற்றி அமைக்க இயலாது. தற்போது இது சம்பந்தமாக தொழிலதிபர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் நேரடிப் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டுள்ளன.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறைத் தொகுதியினுடைய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற கேள்வி இக்கேள்வியாகும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒவ்வொரு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கோரிக்கையு மாதச் சம்பளம் வேண்டும் என்பதுதான். மழையிலே நனைந்து வெயிலிலே கருகி, குளிரிலே நடுங்கி, முழுக்க முழுக்கத் தங்கள் உழைப்பாலே (மணியடிக்கப் பெற்றது).

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய உழைப்பாலே நடைபெறுகின்ற இந்தத் தேயிலைத் தோட்டத் தொழிற்சாலையில் 80 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலனை செய்து நம்முடைய ஆட்சிக்கும் நல்ல பெயர் கிடைக்கும் வகையில் மாதச் சம்பளம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற எல்லாத் தேயிலைத் தோட்டங்களிலும் தொழிலாளர்களுக்கு தினசரி சம்பளம் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது இருக்கிற ஒப்பந்தம் 31-12-1992 உடன் முடிவடைந்திருக்கிறது. மாத அடிப்படையிலே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை இப்பொழுது தொழிற்சங்கங்களால் எழுப்பப்பட்டுள்ளது. கோரிக்கை மீது தோட்டத் தொழில் அதிபர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் நேரிடையாக பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே, அந்தப் பேச்சு வார்த்தையினுடைய முடிவை எதிர்பார்த்து அதன் பின்னர் இது குறித்து அரசு ஏதேனும் உதவிகள் செய்ய முடிந்தால் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியைப் போல, குன்னூர் சட்டமன்றத் தொகுதி, கூடலூர் சட்டமன்றத் தொகுதி,

1993 ஏப்ரல் 22]

பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி மற்றும் ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இவைகள் அனைத்தும் நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய கோட்டையாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், நடைபெறுகின்ற சம்பளப் பேச்சு வார்த்தையில் சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஏற்பட்ட ஒப்பந்தங்கள் நேரடி ஒப்பந்தங்களாகவே, தொழில் அதிபர்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் இடையே எழுந்துள்ளன. எனவே, இது குறித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்களை இணைத்து ஏதாவது உதவி செய்யலாம் என்றால் இதற்குத் தோட்டத் தொழிலாளர்கள் ஆலோசனைக் குழு இருக்கிறது. எனவே, இதுகுறித்து எந்த உதவிகள் செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முதல் கன்னி உரையின் போதே தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க வேண்டுமென்று நான் கோரிக்கை விடுத்திருந்தேன். அதே போல இந்தக் குன்னூர் தொகுதி என்பது இதுவரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக இருந்தது. ஆனால் இந்த முறை—எப்பொழுது ஜெயித்தாலும் 12 ஆயிரம் ஓட்டுகளுக்கு மேல் யாரும் வாங்கவில்லை—டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் உள்ள நம்பிக்கையால் மக்கள் கிட்டத்தட்ட 24 ஆயிரம் ஓட்டுக்கள் போட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட தேயிலைத் தொழிலாளர்களுக்கு நீங்கள் மாதச் சம்பளம் வழங்க வேண்டுமென்று, நான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உதகமண்டலம் வந்த போது கோரிக்கை விடுத்திருந்தேன். இதையெல்லாம் கவனத்தில் கொண்டு அந்த ஒப்பந்தங்களை நீக்கிவிட்டு, புதியதாக ஒரு ஒப்பந்தம் போடும்போது, மில் தொழிலாளர்களுக்கு எப்படி நீங்கள் அடிப்படைச் சம்பளம், மாதச் சம்பளம் வழங்குகிறீர்களோ, அதே முறையில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய மனதைக் குளிர்விக்கும் பொருட்டு அவர்களுக்கும் மாதச் சம்பளம் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கிறபோது, தினசரி அடிப்படையிலே—தான் நாம் இதுவரை நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்த ஒப்பந்தங்கள் பொருந்தாத, ஏற்படுத்தப்படாத தொழில் அதிபர்கள் அந்தக் குறைந்த பட்ச ஊதியத்தை இன்றைக்கு அமுல் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்திலே இதுபோன்ற ஒப்பந்தங்கள் ஏற்படுகிறபோது, தொழில் அதிபர்கள், தொழிற்சங்கங்களுக்கிடையே இதுகுறித்து ஒரு சுமுகமான உடன்பாடு கொண்டு வருவதற்கு புரட்சித் தலைவி அரசு முடிந்த வரை, இயன்றவரை, முயற்சிக்கும், பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 438, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

438—

திருவெண்காடு உயர்நிலைப்பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்தல்

*10990—திரு. து. மூர்த்தி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

சீர்காழி தொகுதி, திருவெண்காடு உயர்நிலைப்பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதி திருவெண்காடு உயர்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்துக் கொடுப்பது பற்றிய திட்டமேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் திருவெண்காடு உயர்நிலைப்பள்ளியில் சுமார் 1,600-க்கு மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். இதில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக படித்து வருகிறார்கள். மேலும், பெரும்பாலோர் ஆதிதிராவிட மாணவர்கள் கிராமப் பகுதியிலிருந்து தினந்தோறும் நடந்து வந்து படிக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதனால் படிக்க முடியாத சூழ்நிலையில் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே ஆதிதிராவிட மாணவர்களின் கல்வியின் நலனைக் கருதி அந்த மாணவர்கள்

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கிறபோது, தினசரி அடிப்படையிலே—தான் நாம் இதுவரை நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்த ஒப்பந்தங்கள் பொருந்தாத, ஏற்படுத்தப்படாத தொழில் அதிபர்கள் அந்தக் குறைந்த பட்ச ஊதியத்தை இன்றைக்கு அமுல் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்திலே இதுபோன்ற ஒப்பந்தங்கள் ஏற்படுகிறபோது, தொழில் அதிபர்கள், தொழிற்சங்கங்களுக்கிடையே இதுகுறித்து ஒரு சுமுகமான உடன்பாடு கொண்டு வருவதற்கு புரட்சித் தலைவி அரசு முடிந்த வரை, இயன்றவரை, முயற்சிக்கும், பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 438, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

438—

திருவெண்காடு உயர்நிலைப்பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்தல்

*10990—திரு. து. மூர்த்தி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

சீர்காழி தொகுதி, திருவெண்காடு உயர்நிலைப்பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதி திருவெண்காடு உயர்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிட நல விடுதி அமைத்துக் கொடுப்பது பற்றிய திட்டமேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் திருவெண்காடு உயர்நிலைப்பள்ளியில் சுமார் 1,600-க்கு மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். இதில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக படித்து வருகிறார்கள். மேலும், பெரும்பாலோர் ஆதிதிராவிட மாணவர்கள் கிராமப் பகுதியிலிருந்து தினந்தோறும் நடந்து வந்து படிக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதனால் படிக்க முடியாத சூழ்நிலையில் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே ஆதிதிராவிட மாணவர்களின் கல்வியின் நலனைக் கருதி அந்த மாணவர்கள்

1993 எப்ரல் 22]

சிறப்பான முறையில் படிப்பதற்கு திருவெண்காடு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற ஆதிதிராவிட மாணவர்களுக்காக, ஆதி திராவிடர் மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்படும் தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய இதய தெய் வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசால், இந்த ஆதிதிராவிட மாணவர்களுக்கு என்று மாணவர் விடுதி திறப்ப தற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 439, திரு.எம். ஆண்டி அம்பலம் அவைக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. கே. எஸ். துரைமுருகன் கேட்கிறார். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனவளத் துறை அமைச்சர்.

439—

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு பயிற்சியின்போது மிகப் பிற்பட் டோருக்கு அளிக்கப்படும் உதவித் தொகை.

*11219— திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனவளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கான பயிற்சிப் பெறும்போது மிகப்பிற்படுத்தப்பட்ட இனத்தவருக்கு அளிக்கப் படும் அரசு உதவித் தொகை ரூ. 250—ஐ மேலும் உயர்த்தித்தர வேண்டுமென அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனவளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 11–05

திரு. கே. எஸ். துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர் களே, இன்றைய சூழ்நிலையில் ''ஆல் இண்டியா சர்வீஸஸ்'' என்று சொல்லக்கூடிய அகில இந்தியப் பணிகளில் தமிழகத்தி

சிறப்பான முறையில் படிப்பதற்கு திருவெண்காடு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற ஆதிதிராவிட மாணவர்களுக்காக, ஆதி திராவிடர் மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்படும் தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசால், இந்த ஆதிதிராவிட மாணவர்களுக்கு என்று மாணவர் விடுதி திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 439, திரு.எம். ஆண்டி அம்பலம் அவைக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. கே. எஸ். துரைமுருகன் கேட்கிறார். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

439—

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு பயிற்சியின்போது மிகப் பிற்பட்டோருக்கு அளிக்கப்படும் உதவித் தொகை.

*11219— திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கான பயிற்சிப் பெறும்போது மிகப்பிற்படுத்தப்பட்ட இனத்தவருக்கு அளிக்கப்படும் அரசு உதவித் தொகை ரூ. 250—ஐ மேலும் உயர்த்தித்தர வேண்டுமென அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 11–05

திரு. கே. எஸ். துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையில் ''ஆல் இன்டியா சர்வீஸஸ்'' என்று சொல்லக்கூடிய அகில இந்தியப் பணிகளில் தமிழகத்தி

னுடைய மாணவர்களுடைய தேர்வு விகிதம் குறைந்து வந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் புரட்சித் தலைவியின் ஆட்சியில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் அதிக அளவில் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். தேர்வுகளில் வெற்றி பெறுவதற்குரிய வகையில் ஆவன செய்ய வேண்டும். தற்சமயம் சென்னையில் மட்டும் பயிற்சி மையம் இருக்கிறது. அதுபோன்ற பயிற்சி மையம் கோவை, மதுரை போன்ற பெருநகரங்களிலும் ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்பதையும், அதேபோல் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கி அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்தியப் பணிகளில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம் கிட்டத்தட்ட பல ஆண்டுகளாக வருட வருமானம் என்ற வரம்பு 24,000 ரூபாய் என்று இருந்தது. அப்படி இருந்ததை இன்றைக்கு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வருமான வரம்பே இல்லாத வகையில், அதை நீக்கியதன் காரணமாக இன்றைக்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் கடந்த காலத்தோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வரலாற்றிலேயே இல்லாத வகையில் ஒருவர் ஐ.ஏ.எஸ்.-க்கும், செண்ட்ரல் கமிஷன் தேர்வுக்கும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். அதோடு மட்டுமல்லாமல் 5 பேர்கள் இன்றைக்கு நேர்காணலுக்காக டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். இதுவே ஒரு மிகப் பெரிய வெற்றியாகும். இந்த வருமான வரம்பை நீக்கியதன் காரணமாக இன்னும் அதிகமான அளவுக்கு தேர்ச்சி பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு கடுமையான நிதி நெருக்கடி காரணமாக இந்த உணவுத் தொகையைக் கூட்டுவதற்கான சாத்தியக்கூறு இல்லை. அந்த வகையில் ''ஸ்பெஷல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்'' என்பதை மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துகிற எண்ணம் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு அதிகமான உதவித்தொகை வழங்க இயலாது என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கு இந்தியாவிலேயே இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். போன்ற அகில இந்தியத் தேர்வுகளில் தனியார்

1993 ஏப்ரல் 22]

நிறுவனங்கள் நடத்துகிற பயிற்சி பெற்றவர்கள்தான் அதிகமாக வெற்றி பெற்று வருகிறார்கள். ராவ் சென்டர் மற்றும் சென்னையிலே கேத்தலிக் சென்டர் போன்ற உயர்ந்த பயிற்சி அளிக்கிற நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர் அதிகமாக வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு படிப்பதற்கான எல்லா வசதிகளையும் இந்த தனியார் பயிற்சி நிறுவனங்கள் அளித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இந்தமாதிரியான வசதிகள் இல்லாத காரணத்தால், அதாவது அவர்களுக்கு படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால் அவர்கள் இந்த வெற்றி வாய்ப்பை இழக்கிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அந்த உயர்ந்த பயிற்சி நிறுவனங்கள் நடத்துகிற பயிற்சிக்கு இணையாக அவர்களுக்கும் படிக்கின்ற அந்த 'அட்மாஸ்ஃபியர்' ஏற்படுத்திக்கொடுக்கிற அளவுக்கு ஒரு பயிற்சி மையத்தை இங்கே ஏற்படுத்தித் தருவார்களா என்றும், அதிக உதவித் தொகை கொடுக்க முன்வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் தருவதைக் காட்டிலும் அவர்களுக்கு அதிகமான அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு உள்ள நிதி நெருக்கடி காரணமாகத்தான் உயர்த்தலாம் என்ற எண்ணம் இருந்தும் கூட உயர்த்த முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, நிதி நிலைமைக்கு ஏற்ப அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் கருத்திற்கேற்ப அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 440, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

440—

தமிழ்ப்புத்தாண்டுக்கு கதர் துணிகளுக்கு சிறப்பு தள்ளுபடி

*12510—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கதர் துணிகளுக்கு சிறப்புத் தள்ளுபடி கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 ஏப்ரல் 22]

நிறுவனங்கள் நடத்துகிற பயிற்சி பெற்றவர்கள்தான் அதிகமாக வெற்றி பெற்று வருகிறார்கள். ராவ் சென்டர் மற்றும் சென்னையிலே கேத்தலிக் சென்டர் போன்ற உயர்ந்த பயிற்சி அளிக்கிற நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர் அதிகமாக வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு படிப்பதற்கான எல்லா வசதிகளையும் இந்த தனியார் பயிற்சி நிறுவனங்கள் அளித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இந்தமாதிரியான வசதிகள் இல்லாத காரணத்தால், அதாவது அவர்களுக்கு படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால் அவர்கள் இந்த வெற்றி வாய்ப்பை இழக்கிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அந்த உயர்ந்த பயிற்சி நிறுவனங்கள் நடத்துகிற பயிற்சிக்கு இணையாக அவர்களுக்கும் படிக்கின்ற அந்த 'அட்மாஸ்ஃபியர்' ஏற்படுத்திக்கொடுக்கிற அளவுக்கு ஒரு பயிற்சி மையத்தை இங்கே ஏற்படுத்தித் தருவார்களா என்றும், அதிக உதவித் தொகை கொடுக்க முன்வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் தருவதைக் காட்டிலும் அவர்களுக்கு அதிகமான அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு உள்ள நிதி நெருக்கடி காரணமாகத்தான் உயர்த்தலாம் என்ற எண்ணம் இருந்தும் கூட உயர்த்த முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, நிதி நிலைமைக்கு ஏற்ப அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் கருத்திற்கேற்ப அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 440, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

440—

தமிழ்ப்புத்தாண்டுக்கு கதர் துணிகளுக்கு சிறப்பு தள்ளுபடி

*12510—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கதர் துணிகளுக்கு சிறப்புத் தள்ளுபடி கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமையான கதர் தொழில் நலிவடையாமல் இருக்கவும், அந்தத் தொழிலாளர்களின் நிலையை உயர்த்தவும்தான் இதுபோன்ற தள்ளுபடிகள் வழங்கப்படுகின்றன. எனவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு மாநில கதர் ஆணையம் வழியாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பரிசீலனை செய்து மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு அனுப்பும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

குறுகிய கால வினா 3, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

3—

சத்தியமங்கலம் தொகுதியில் புற்றுநோய் மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*21036—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் புற்றுநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமையான கதர் தொழில் நலிவடையாமல் இருக்கவும், அந்தத் தொழிலாளர்களின் நிலையை உயர்த்தவும்தான் இதுபோன்ற தள்ளுபடிகள் வழங்கப்படுகின்றன. எனவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு மாநில கதர் ஆணையம் வழியாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்ளுடைய கோரிக்கையை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பரிசீலனை செய்து மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு அனுப்பும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

குறுகிய கால வினா 3, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

3—

சத்தியமங்கலம் தொகுதியில் புற்றுநோய் மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*21036—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் புற்றுநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

1993 ஏப்ரல் 22]

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, உலகமே போற்றும் ஒப்பற்றத் தலைவியாக, நான் உயிருள்ள வரை வணங்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மறுபரிசீலனைசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கேன்சர் மருத்துவமனையை ஏற்பாடு செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சேன்சர் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் பெரிய மருத்துவ மனைகளிலேதான் அமைக்க முடியும். எனவே தாலுக்கா மருத்துவ மனைகளிலே, வாய்ப்பு இல்லாத காரணத்தால்தான் சத்தியமங்கலம் மருத்துவமனையில் அமைக்கமுடியாது என்று தெரிவித்தேன். ஆனால் ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலேயும் இப்படிப் பட்ட தனிப்பிரிவு அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. எனவே சத்தியமங்கலத்திலே இப்போது அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை. தலைமை மருத்துவ மனைகளிலே ஆங்காங்கே அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

425—

பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் மருத்துவமுறை கருச் சிதைவுப் பிரிவு அமைத்தல்.

*10163—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவ மனையில் மருத்துவமுறை கருச்சிதைவுப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இப்புறநகர் மருத்துவமனையில் மருத்துவமுறை கருச்சிதைவுப் பிரிவு தனியாக அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை, எனினும் மருத்துவ கருச்சிதைவுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன,

1993 ஏப்ரல் 22]

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமே போற்றும் ஒப்பற்றத் தலைவியாக, நான் உயிருள்ள வரை வணங்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மறுபரிசீலனைசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கேன்சர் மருத்துவமனையை ஏற்பாடு செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கேன்சர் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் பெரிய மருத்துவ மனைகளிலேதான் அமைக்க முடியும். எனவே தாலுக்கா மருத்துவ மனைகளிலே, வாய்ப்பு இல்லாத காரணத்தால்தான் சத்தியமங்கலம் மருத்துவமனையில் அமைக்கமுடியாது என்று தெரிவித்தேன். ஆனால் ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலேயும் இப்படிப் பட்ட தனிப்பிரிவு அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. எனவே சத்தியமங்கலத்திலே இப்போது அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை. தலைமை மருத்துவ மனைகளிலே ஆங்காங்கே அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

425—

பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் மருத்துவமுறை கருச் சிதைவுப் பிரிவு அமைத்தல்,

*10163—திரு, ப, ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவ மனையில் மருத்துவமுறை கருச்சிதைவுப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இப்புறநகர் மருத்துவமனையில் மருத்துவமுறை கருச்சிதைவுப் பிரிவு தனியாக அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை, எனினும் மருத்துவ கருச்சிதைவுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன,

433—

கண்ணநல்லூரில் பாலம் கட்டுதல்.

*14469—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, கண்ணநல்லூரில் பாலம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் தளபதி சமுத்திரம்-கண்ணநல்லூர் சாலை (அரசு, இதர மாவட்ட சாலை) எனும் 7.6 கி.மீ. (கி.மீ. 0-0-7/6) நீள முடைய சாலையில் கி.மீ. 7/6-ல் கண்ணநல்லூர் ஊருக்கு முன்பாக நம்பியாற்றின் குறுக்கே கட்டப்படவேண்டும். இப்பணிக்கு சுமார் ரூ. 35.00 லட்சம் தேவைப்படும், இப் பணி அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணித்தொகுப்புப் பட்டியலில் (Shelf of Projects) இடம் பெற்றுள்ளது. எனினும் பகுதி 2 திட்டங்களுக்கு அரசு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்வதால் இப்பணியை அண்மைக் காலத்தில் பகுதி 2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை,

436—

அம்பத்தூரில் மாவட்டக் கூட்டுறவு வங்கியின் கிளை.

*9306—திரு. கோ. காளன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பத்தூரில் மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றைத் திறக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

அம்பத்தூரில் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளை திறக்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

433—

கண்ணநல்லூரில் பாலம் கட்டுதல்.

*14469—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, கண்ணநல்லூரில் பாலம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் தளபதி சமுத்திரம்-கண்ணநல்லூர் சாலை (அரசு, இதர மாவட்ட சாலை) எனும் 7.6 கி.மீ. (கி.மீ. 0-0-7/6) நீளமுடைய சாலையில் கி.மீ. 7/6-ல் கண்ணநல்லூர் ஊருக்கு முன்பாக நம்பியாற்றின் குறுக்கே கட்டப்படவேண்டும். இப்பணிக்கு சுமார் ரூ. 35.00 லட்சம் தேவைப்படும், இப்பணி அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணித்தொகுப்புப் பட்டியலில் (Shelf of Projects) இடம் பெற்றுள்ளது. எனினும் பகுதி 2 திட்டங்களுக்கு அரசு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்வதால் இப்பணியை அண்மைக் காலத்தில் பகுதி 2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை,

436—

அம்பத்தூரில் மாவட்டக் கூட்டுறவு வங்கியின் கிளை.

*9306—திரு. சோ. காளன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பத்தூரில் மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றைத் திறக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

அம்பத்தூரில் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளை திறக்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 2?]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(20 ஆம் பட்டியல்)

1—

அரசு சிறு சேமிப்பில் பணம் செலுத்தும் திட்டம்.

வினா எண் 11901— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தனியார் அரசு நிறுவனங்கள் இலாப அடிப்படையில் அரசு சிறு சேமிப்பில் பணம் செலுத்த வேண்டும் என அரசு திட்டம் கொண்டு வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

சிறு சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசால் உருவாக்கப்பட்டு, மாநில அரசால் செயல்முறைபடுத்தப் படுகின்றன. தற்பொழுதுள்ள சிறு சேமிப்புத் திட்டத்தில் தனி நபர்களோ நிறுவனங்களோ அவர்களாகவே முன்வந்து சேமிக்க வழிவகை உள்ளது.

புதிய திட்டங்கள் கொண்டுவர வேண்டுமாயின் மத்திய அரசுதான் முடிவு எடுக்க வேண்டும்.

2—

இரவுப் பணிக்குச் செல்லும் சிறைக் காவலர்களுக்கு தனி அறை அமைத்தல்.

வினா எண் 4403—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரவு பணிக்குச் செல்லும் சிறைக் காவலர்கள் பணி நேரம் முடிந்தபின் ஓய்வெடுக்கும் பொருட்டு, அவர்களுக்கு தனி அறை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்:

சிறைக் காவலர்கள் பணிநேரம் முடிந்ததும் தங்கள் தொகுதி வராந்தாக்களில் தங்கி ஓய்வெடுப்பது தற்போது நடைமுறையில் உள்ளது. இதுவே சிறை நிர்வாகத்திற்கு உகந்ததாகவும் கருதப்படுகிறது, எனவே, இவர்களுக்கு தனி அறை அமைக்க அவசியம் இல்லை.

3—

வெள்ள நிவாரணப் பணிகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்தல்.

வினா எண் 10888—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில் வெள்ளமும், வறட்சியும் ஆண்டுதோறும் தொடர்ந்து வருவதால், இதன் நிவாரணப் பணிகளுக்கென அவ்வப்போது நிதி ஒதுக்கீடு செய்வதைத் தவிர்த்து முன் கூட்டியே அதற்கான நிதியினை ஒதுக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

மைய அரசினால் ''சீற்றத்துடைப்பு நிவாரண நிதி'' என்ற அமைப்பு கடந்த 1-4-1990 முதல் ஏற்படுத்தப்பட்டு, வெள்ளம், புயல், வறட்சி போன்ற மாறுபட்ட பருவ நிலைகளின் போது, மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைந்து, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாட்டுக்கென ஆண்டுதோறும் 39.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. மாவட்டங்களில் வறட்சி, வெள்ளம் ஏற்படும்போது அவைகளை கணித்து மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைவர்களால் அனுப்பப்படும் கருத்துக்களைத் தொகுத்து, நிவாரண ஆணையரால் பரிந்துரைக்கப்படும் நிவாரணப் பணி களுக்குத் தேவையான நிதி மேற்கண்ட தொகையிலிருந்து அர சினால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்வாறு 1990—91 முதல் 1992—93 (அக்டோபர் 1992 வரை) வழங்கப்பட்ட தொகை ரூபாய் 52.43 கோடியாகும்.

4—

விருத்தாச்சலம் நகரில் பெண்கள் கலைக் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 3325—திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விருத்தாச்சலம் நகரில் ஒரு அரசு பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

5—

செங்கல்பட்டு நகரில் இராஜேஸ்வரி வேதாசலம் கலைக்கல்லூரியில் எம்.ஏ. பட்டப் படிப்பு நடத்துதல்

வினா எண் 4471— திரு. செ. து. வரதராசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் இராஜேஸ்வரி வேதாசலம் கலைக் கல்லூரியில் எம்.ஏ. பட்டப் படிப்பு நடத்த அரசு முன் வருமா?

(ஆ) மாலை நேரக் கல்லூரி அமைத்துத் தர ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) நடப்புக்கல்வியாண்டில் மாலைநேரக் கல்லூரி துவங்குவதற்கென நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படாமையால் இக் கல்லூரியில் மாலை நேரக் கல்லூரி துவங்குவதற்கு வழிவகை ஏதுமில்லை.

6—

உலக சாதனை புரிந்த விளையாட்டு வீரர்களுக்கு பரிசு வழங்குதல்.

வினா எண் 4832— திரு. மு. நடேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உலக சாதனை புரிந்த விளையாட்டு வீரர்களுக்கு தமிழக அரசு ஊக்கப் பரிசு கொடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு கொடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.

(அ) ஆம்.

(ஆ) 1979 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை உலக சாதனை புரிந்த 211 விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. 1990 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த உலக சாதனை புரிந்த 10 விளையாட்டு வீரர்களுக்கும் ரொக்கப் பரிசு வழங்கப்பட்ட உள்ளது.

7—

சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளைத் தேர்ந்தெடுத்து பயிற்சி முகாம் நடத்துதல்.

வினா எண் 7834—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாவட்டம் தோறும் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளை தேர்வு செய்து கோடைக்காலத்தில் சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு நிறுத்தப்பட்டதை மீண்டும் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

கோடைக்கால பயிற்சி முகாம் ஆண்டுதோறும் இரண்டு மையங்களில் 16 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு நடத்தப்பட்டு வருகிறது.

8—

ஆலங்குளம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் 8653—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல் ஆசிரியர்கள் எண்ணிக்கை இல்லாததினால் போதுமான ஆசிரியர்கள் நியமனம் செய்ய அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

நிதி நிலைமைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் குறைவான ஆசிரியர் பணியிடங்களே தோற்றுவிக்கப்படுகின்றன. எனவே, மாணவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி ஒவ்வொரு பள்ளிக்கும் ஒதுக்கீடு செய்திடும் நிலை இல்லை.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளில் மாணவர்களுக்கு அடிப்படை பயிற்சி அளித்தல்.

• வினா எண் 8662—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். தேர்வுகளில் தமிழ் நாட்டிலிருந்து அதிகமான அளவில் தேர்வு பெற உயர்நிலை கல்வி கால கட்டத்திலிருந்தே மாணவர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்க ஏதேனும் சிறப்புத் திட்டம் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ). சென்னை மாநிலக் கல்லூரியில் ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ். தேர்வுக்கான தனிப்பட்ட பயிற்சி வகுப்புகள் 1988-89 கல்வி ஆண்டு முதல் துவக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக, தன்னாட்சி அந்தஸ்து பெற்ற கோவை மற்றும் குடந்தை அரசு கலைக் கல்லூரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பின்னர் படிப்படியாக வரும் கல்வி ஆண்டுகளில் முதனிலை (Grade I) பட்ட மேற்படிப்பு அரசு கல்லூரிகளிலும் இப்பயிற்சி வகுப்புகள் திறக்கப்பட உள்ளன. ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். தேர்வுகள் எழுதும் மாணவர்கட்கு உதவியாக உயர் மட்டக் குழு பரிந்துரை செய்துள்ள பாடப் புத்தகங்கள் கல்லூரி நூலகத்தில் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு முதல்வர்கட்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

10—

மாணவர்களின் விகிதத்திற்கேற்ப ஆசிரியர்களை அதிகரித்தல்.

வினா எண் 8864—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் மாணவர் விகிதத்திற்கேற்ப ஆசிரியர்களை அதிகரிக்க போதிய புதிய ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பள்ளிகளில் மாணவர் விகிதத்திற்கேற்ப ஆசிரியர்களை அதிகரிக்க போதிய புதிய ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தினடிப்படையில் அரசு ஒவ்வோராண்டும் ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்தி வருகிறது. மேற்கண்ட பணியிடங்கள் அரசின் நிதி நிலைக்கேற்ப ஏற்படுத்தப்படுகிறது.

11—

பொத்தனூர் பேரூராட்சியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

வினா எண் 10103—திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் தாலுக்கா பொத்தனூர் பேரூராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1992–93 ஆம் ஆண்டில் இயலாது.

12—

இடையக் குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டுதல்.

வினா எண் 10594—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி இடையக்குறிச்சி அரசு உயர் நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1993 ஏப்ரல் 22]

13—

அரசு மருத்துவர்களுக்கு மருத்துவமனை நிருவாகம் குறித்து பயிற்சி அளித்தல்.

வினா எண் 1234—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரசு மருத்துவர்களுக்கும் மருத்துவ மனை நிருவாகம் குறித்த பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ). மருத்துவமனைகளில் பராமரிக்கப்படும் கணக்குகள் சம்பந்தமாக மருத்துவ அதிகாரிகளுக்கு அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியில் சேர்ந்தவுடன் பயிற்சி அளிக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

14—

உய்யக் கொண்டான் ஆற்றுநீரில் அரசு தலைமை மருத்துவமனை கழிவு நீர் கலப்பதை தடுத்தல்.

வினா எண் 1790—டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி வட்டம், புத்தூர் அருகே உய்யக்கொண்டான் ஆற்று நீரில் அரசு தலைமை மருத்துவமனை கழிவு நீர் கலப்பதால் சுகாதாரக் கேடு விளைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) திருச்சிராப்பள்ளி அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வரும் கழிவுநீர் அனைத்தும் நகராட்சி புதை வடிகால் இணைப்பில் சேருவதால் கழிவுநீர் உய்யக்கொண்டான் கால்வாயில் கலக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

15—

வள்ளியூர் பேரூராட்சி அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு சிகிச்சை வசதி.

வினா எண் 5010—திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, வள்ளியூர் பேரூராட்சி அரசு மருத்துவமனையில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்குரிய வசதிகள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தற்சமயம் வள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையத்திற்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு தேவையான அளவு நிலம் கிடைத்தவுடன் நோயாளிகள் தங்கி சிகிச்சைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

16—

மனச்சநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக உயர்த்துதல்.

வினா எண் 5392—திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி மனச்சநல்லூரில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மக்கள் தொகை பெருக்கத்தை கருத்தில் கொண்டு அரசு பொது மருத்துவமனையாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

1993 ஏப்ரல் 22]

முசிறி தொகுதி மனச்சநல்லூரில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக உயர்த்த உத்தேசம் இல்லை.

17—

இந்தலூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 5861—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, இந்தலூர் கிராமப்பகுதியில், இந்தலூர் பஞ்சாயத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க எல்லா தகுதிகளும் இருப்பதோடு அங்கு வாழும் மக்கள் நிலமும் தர தயாராக உள்ளதால் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, இந்தலூர் என்ற கிராமத்தில் தற்போது புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

18—

அண்ணா மாவட்டத்தில் மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தி பயனடைந்தோர் விபரம்.

வினா எண் 5997—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் சிறப்பு இலவச மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) அவற்றால் பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் (1989, 1990 மற்றும் 1991) கண், பல், குடும்ப நலம் ஆகிய சிறப்பு இலவச பரிசோதனை முகாம்கள் மொத்தம் 525 நடத்தப்பட்டன.

(ஆ) சிறப்பு இலவச மருத்துவ முகாம்களால் பயன்அடைந்தோர் எண்ணிக்கை 8,990 ஆகும். மேற்படி முகாம்கள் மற்றும் பயனடைந்தோர் பற்றிய விவரம் பின்வருமாறு :—

சிறப்பு முகாம்களின் பெயர்.	முகாம்களின் எண்ணிக்கை.	பயனடைந்தோர் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. கண் அறுவை சிகிச்சை ..	10	302 நபர்கள்.
2. பல் பரிசோதனை ..	12	500-க்குமேல்
3 குடும்பநல அறுவை சிகிச்சை ..	503	8,188 நபர்கள்.

19—

மருத்துவ அலுவலருக்கு தொகுப்பு ஊதியம் வழங்கப்படுவதை ஊதிய வீதங்களில் வழங்குதல்.

வினா எண். 6324— டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை கல்வி மாவட்டத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலருக்கு தொகுப்பு ஊதியம் வழங்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஊதிய வீதங்களில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இவர்கள் அரசுப் பணியைச் சார்ந்த மருத்துவர்கள் அல்ல. எனவே, அரசு மருத்துவர்களுக்குரிய ஊதிய விகிதம் வழங்க இயலாது.

20—

அரசு மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுதல்.

வினா எண் 7987—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு மருந்தகங்களும் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டு செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இதுவரை அவ்வாணையின்படி மாற்றப்பட்டு செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) 195 அரசு மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

(ஆ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இதுவரை அய்யம்பாளையம், சித்தையன் கோட்டை, ஆர். வெள்ளோடு கீரனூர், ஒட்டன்சத்திரம் மற்றும் இதயகோட்டை ஆகிய ஆறு அரசு மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

21—

இறந்தவர்களின் இதய வால்வை எடுத்து தேவைப்படுகிறவர்களுக்கு பொருத்துதல்.

வினா எண் 8671—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இறந்தவர்களின் இதய வால்வை எடுத்து தேவைப்படுபவர்களுக்கு பொருத்த அனுமதிக்க சட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

22—

ஆரம்ப சுகாதார நிலையங்களை படுக்கை வசதிகளுடன் கூடிய உயர்நிலை சுகாதார நிலையமாக்குதல்.

வினா எண். 8790— டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கருங்கல், ஆறுதேசம், முன்சிறை ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை படுக்கை வசதியுடன் கூடிய உயர்நிலை ஆரம்ப சுகாதார நிலையம் ஆக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு உயர்த்தப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

23—

குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு ஊக்கத் தொகையை உயர்த்துதல்.

வினா எண் 8795— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை உயர்த்திக் கொடுப்பது குறித்த திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கே இடமில்லை.

24—.

பொது மருத்துவமனைகளில் இறந்தவர்களை எடுத்துச் செல்ல ஊர்திகளை அதிகப்படுத்துதல்.

வினா எண் 9134— திரு. டி. சுதாசனம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மருத்துவ மனைகளில் இறந்தவர்களை எடுத்துச் செல்ல போதுமான ஊர்திகளை அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயலாக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) தற்போது அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏது மில்லை. நிதிநிலையை கருத்தில் கொண்டு அவ்வப்போது பரிசீலிக்கப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

25—

வேதாரண்யத்திலிருந்து கோவை, மதுரைக்கு விரைவுப்பேருந்து இயக்கிடும் திட்டம்.

வினா எண் 5761— திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேதாரண்யத்திலிருந்து கோவை, மதுரைக்கு விரைவுப் பேருந்து இயக்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :— போக்குவரத்துத்துறை அமைச்சர் :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேதாரண்யத்திலிருந்து மதுரைக்கு உள்ள தூரம் 209 கிலோ மீட்டர்களாகும். தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 250 கிலோ மீட்டர்களுக்கு மேல் நீளமுள்ள வழித்தடங்களில் மட்டுமே பேருந்துகளை இயக்க இயலும்.

வேதாரண்யத்திலிருந்து கோயமபுத்தூருக்கு இடையே உள்ள தூரம் 366 கிலோ மீட்டர்களாகும். இத்தடத்தின் தேவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த முடிவின் அடிப்படையில் தேவை இருப்பின் பேருந்துகள் இயக்கம் தொடங்கப்படும்.

26—

பாபனாசம் கிளையிலிருந்து விடப்பட்ட 10ஏ டவுன் பஸ் புதூர் வரை செல்ல நடவடிக்கை.

வினா எண் 11801—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு, வீரவநல்லூர், ஊராட்சி, பாபனாசம் கிளையிலிருந்து விடப்பட்ட 10ஏ டவுன் பஸ் புதூர் வரை சென்றது நிறுத்தப்பட்டது அரசிற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் 10ஏ பேருந்து அதே வழித்தடத்தில் செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) சேரன்மகாதேவி தொகுதி, தெற்கு வீரவநல்லூர் ஊராட்சி, பாபனாசம் கிளையிலிருந்து விடப்பட்ட 10ஏ டவுன் பஸ் புதூர் வரை சென்றது நிர்வாகத்தால் எக்காலத்திலும் ரத்து செய்யப்படவில்லை.

(ஆ) 10ஏ பேருந்து வழக்கம் போல் 6 நடைகள் புதூர் வழியாகச் சுற்றுக்கள் குறைவின்றி தற்போதும் முழுமையாக இயக்கப்பட்டு வருகின்றது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

27—

தஞ்சை-திருச்சி செல்லும் பேருந்துகளை புதுக்குடியில் நிறுத்திச் செல்ல நடவடிக்கை.

வினா எண் 11875—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர்-திருச்சி செல்லும் பேருந்துகளை திருவையாறு தொகுதியைச் சேர்ந்த புதுக்குடியில் நிறுத்திச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

தற்போது தஞ்சாவூர்-திருச்சி செல்லும் பேருந்துகள் புதுக்குடி பேருந்து நிறுத்தத்தில் பொதுவாக நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லுகின்றன. மீண்டும் இது தொடர்பாக ஓட்டுநர்/நடத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

28—

பேராவூரணியிலிருந்து சிங்கவனத்திற்கு பெருமகளூர் காரைக்கோட்டை வழியாகப் பேருந்து விடுதல்.

வினா எண் 11964—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போககுவரத்துத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து சிங்கவனத்திற்கு பெருமகளூர் காரைக்கோட்டை வழியாக நகரப் பேருந்து விட 1992–93-இல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி-சிங்கவனம் வழி, பெருமகளூர், காரைக்கோட்டை தடத்தின் நீளம் 34 கி.மீ. தடத்தின் அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்றவை ஆகும். அரசு ஆணைப்படி பேருந்து வசதி பெற்ற தடத்தில் 30 கி.மீ. தூரம் வரை மட்டுமே நகரப் பேருந்து இயக்க இயலும். எனவே, தடத்தின் நீளம் 30 கி.மீ.க்கு அதிகமாக உள்ளதால் இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

29—

திருவள்ளுவர் நகரின் சி.எம்.பி. வாய்க்காலில் 4-வது மடையை மராமத்து செய்தல்.

வினா எண் 1985—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ)-ஐச் சேர்ந்த திருவள்ளுவர் நகரின் சி.எம்.பி. வாய்க்காலில் 4-வது மடையை மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள வாய்க்கால் காவிரி மேட்டூர் திட்ட அரிவலம் மெயின் வாய்க்கால் மதகு எண் 17-இல் இருந்து செல்லும் மிகச்சிறிய கண்ணி வாய்க்கால் ஆகும். இந்தக் கண்ணி வாய்க்கால் எத்துறையின் பராமரிப்பிலும் இல்லை. அவ்வப்போது பாசன விவசாயிகளே மராமத்து செய்து கொள்ள வேண்டும்.

30—

பாலம் கட்டுதல்

வினா எண் 4394—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் உச்சிநத்தம், கிராமத்திற்கும் சிதம்பரனார் மாவட்டம் சூரக்குடி கிராமத்திற்கும் இடையில் இரண்டு சிறிய பாலங்கள் கட்டப்படாததால் உச்சிநத்தம் கிராமத்திற்கு தார்ச்சாலை அமைத்து பேருந்து போக்குவரத்து இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தப் பாலங்களைக் கட்டி முடிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1993 ஏப்ரல் 22]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது பெருநாழி—சூரங்குடி (வழி) உச்சிநத்தம் சாலை கி.மீ. 0/0-15/0 மேற் பரப்பு தார்ச் சாலையாகும். இச்சாலையில் கனரக வாகன போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இச் சாலையில் கி.மீ. 11/6-இல் ஓர் ஓடையும் மற்றும் கி.மீ. 13/4-இல் காட்டாறும் குறுக்கிடுகின்றன. கி.மீ. 11/6-இல் குழாய்கள் மட்டும் புதைத்து வைத்து வாகன போக்குவரத்து அனுமதிக்கப்படுகிறது. கி.மீ.13/4-இல் தாம்போகி உள்ளது. இச்சாலையில் கி.மீ.11/6-இல் மேம்பாலம் கட்ட ரூ. 30 இலட்சம் செலவாகும். இப்பணி மாநில திட்டக் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், கி.மீ.13/4-இல் சிமெண்டு தளமாக மேம்பாடு செய்யவும் கி.மீ. 4/2-4, 6/10, 7/2 மற்றும் 7/4-இல் குறுக்கே ஓடும் ஓடையில் தடுப்புச் சுவர் கட்டி குறுக்குச் சுவர் கட்டவும், சாலையில் மொத்த நீளத்திற்கு ஓரங்களில் ஏற்பட்டுள்ள உடைப்பைச் சரி செய்யவும், சுமார் ரூ. 6.00 இலட்சம் தேவைப்படுவதாலும், தற்போதுள்ள நிலையில், இப்பணிகளை அண்மையில் மேற் கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

31—

தெற்கு வாண்டான் விடுதியில் சாலைகள் பழுது பார்த்தல்.

வினா எண் 4640—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் தெற்கு வாண்டான் விடுதியில் நீண்ட காலமாக சாலைகள் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலைகள் எப்போது சரி செய்யப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன். பொதுப்பணித்துறை அமைசசர் :

(அ) மற்றும் (ஆ), இந்த ஊராட்சி சாலையை மேம்பாடு செய்யவும் சிறு பாலங்கள் கட்டவும். தோராயமாக ரூ, 8,00 இலட்சம் செலவாகும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் ஊராட்சி/ஊராட்சி ஒன்றிய சாலை

மற்றும் பாலப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் நெடுஞ்சாலைத் துறை பகுதி—2 திட்டத்தில் இச்சாலைப் பணிகளை எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.

32—

பெரு விவசாயிகளிடம் மட்டும் மின் கட்டணத்தை வசூலித்தல்,

வினா எண் 5004—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா விவசாயிகளுக்கும் இலவசமாக மின்சாரம் அளிப்பதை விடுத்து, சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று பிரித்து, பெரு விவசாயிகளிடம் மட்டும் மின் கட்டணத்தை வசூலிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சிறிய மற்றும் குறு விவசாயிகள் தவிர ஏனைய விவசாயிகளிடமிருந்து 2—6—1992 முதல் ஒரு குதிரை சக்திக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 100 வீதம் மின் கட்டணம் விதித்து அரசு ஆணை பிறப்பித்தது. விவசாய சங்கப் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, இம்மின் கட்டணம் ரத்து செய்யப்பட்டு அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கிட அரசு வழிவகை செய்துள்ளது.

33—

பெரம்பட்டு கிராமத்தில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம்,

வினா எண் 5011—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகா வழியாக ஓடுகின்ற, பழைய கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, குமராட்சி ஒன்றியம் பெரம்பட்டு கிராமத்தின் அருகில் கடல்நீர் நிலத்தில் கலந்து, உப்பு நீராக மாற்றி, 30-க்கும் மேற்பட்ட கிராமங்களை பாதிப்பதைத் தடுக்க, ஆற்றின் குறுக்கே நிரந்தர ரெகுலேட்டர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

1993 ஏப்ரல் 22]

(ஆ) ஆம் எனில் எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) 1991-92-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ரூ. 38 இலட்சம் மதிப்பீட்டில், தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், பெரம்பட்டு கிராமத்தின் அருகே பழைய கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு ரெகுலேட்டர் கட்டும் திட்டத்திற்கு அரசு அங்கீகாரம் வழங்கி உள்ளது,

(ஆ) மேற்படி திட்டத்தைச் சிக்கனமாக நிறைவேற்றத் தக்கபடி வடிவமைப்பு திருத்தப்பட்டு வருகிறது, அதன்படி மதிப்பீடு திருத்தியமைக்கப்பட்டு திட்டம் செயலாற்றப்படும்.

34—

கல்லணைக் கால்வாயில் இருந்து புதிய பாசன வசதிகளை ஏற்படுத்துதல்.

வினா எண் 5117—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஒன்றியத்தில், கல்லணைக் கால்வாயில் இருந்து பாசன வசதி இல்லாமல் இருக்கிற பகுதிகளுக்கு புதிய பாசன வசதிகளை ஏற்படுத்தித்தர அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கல்லணைக் கால்வாய் மூலம் பூதலூர் ஒன்றியத்தில் 5,600 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. காவிரி நதி நீர்ப் பங்கீட்டு தாவா தீர்ந்துபோதுமானத் தண்ணீர் கிடைத்தால் கல்லணைக் கால்வாய் மூலம் தற்போது பாசனம் பெறாத புதிய நிலங்களுக்கு பாசன வசதிகள் செய்து கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்யப்படும்.

35—

ஆறுகளில் அணையிலிருந்து தண்ணீர் விடுமுன்பே தூர்வாருதல்.

வினா எண். 5220—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாசனத்திற்குரிய வாய்க்கால்கள் மற்றும் ஆறுகளில் அணையிலிருந்து தண்ணீர் விடுவதற்கு 15 தினங்களுக்கு முன்பே தூர் வாரும் பணியை அரசு மேற்கொள்ள முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். பொதுப்பணித் துறை அமைச்சர் :

ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கப்படும் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டைக் கருத்தில் கொண்டு தேவைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் வாய்க்கால்களில் நீர் செல்வதற்கு இடையூறு இல்லாத வகையில் அடைப்புக்காலத்தில் தூர் எடுக்கப்படுகிறது. வாய்க்கால்களில் நீர் செல்வதற்கு இடையூறு இல்லாத வகையில் தூர் எடுக்கப்படுவதால், நீர் விடுவதற்கு முன்பு தூர் எடுக்க குறிப்பிட்ட நாட்கள் நிர்ணயிப்பது ஏதும் இல்லை.

36—

மருதூர் சாலைக்குத் தனிக் கிளைச் சாலை ஏற்படுத்துதல்.

வினா எண் 6217—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர்-ஜமுனா மருதூர் சாலை, போளூர் நகரினுள் செல்வதால் அதற்குத் தனி கிளைச்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) போளூரிலிருந்து அத்திமூருக்கு, ரெண்டேரிப்பட்டு, பெரியகரம் மற்றும் பூங்கொல்லைமேடு கிராமங்கள்

1993 ஏப்ரல் 22]

வழியாக ஓர் மாற்று வழித்தடம் செல்கின்றது. இந்த வழித் தடத்தில் கடலூர்-சித்தூர் சாலை (கி.மீ. 140/8–142/2) பெரியகரம் சாலை (கி.மீ. 0/0–3/2) பெரியகரம் பிரிவு சாலை (கி.மீ.3/2–5/4) மற்றும் திண்டிவனம்–பூங்கொல்லை மேடு சாலை (கி.மீ. 2/0–0/0) ஆகிய நான்கு சாலைகள் உள்ளன.

மேற்கூறிய சாலைகளில் மொத்தம் 4.60 கி.மீ. நீளமுள்ள முதல் இரண்டு அரசு சாலைகள் சீரான பேருந்து வாகனப்போக்கு வரத்துக்கு எற்ப தார்ச் சாலைகளாக நெடுஞ்சாலைத் துறையால நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சாலைகளில் தற்போது பேருந்து போக்குவாத்து நடைபெற்று வருகிறது. அடுத்துள்ள இரண்டு சாலைகளும் போளூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகளாகும். இந்தச் சாலைகளில் பேருந்து போக்குவரத்து நடைபெறவில்லை. இந்த இரண்டு ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மொத்த நீளம் 4.20 கி.மீ. ஆகும். இதில் 1.00 கி.மீ. நீளம் தார் மேற்பரப்பையும எஞ்சியுள்ள 3.20 கி.மீ. நீளம் கல்மேல்பரப்பையும் கொண்டுள்ளது. இந்த கற்சாலையைத் தார்ச்சாலையாக மேம்பாடு செய்வதுடன், மஞ்சலாறு குறுக்கிடுமிடத்தில் ஓர் கணவாய் தாம்போகியும் கட்டினால், போளூர்–ஜமுனாமருதூர்–ஆலங்காயம் சாலை கி.மீ. 0/0–7/2–க்கு ஓர் புறவழிச்சாலையாக அமையும் இப் பணிக்கு மொத்தம் சுமார் ரூ. 40.00 இலட்சம் தேவைப்படும்.

இப்பணிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகள் எதிலும் இடம்பெறவில்லை. திட்டப் பணிகளுக்கு ஆண்டுதோறும் மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவருவதால், இப்பணிகளை அண்மைக்காலத்தில் நெடுஞ்சாலைத் துறையின் பகுதி–2 திட்டத்தில் மேற்கொவள வாய்ப்பில்லை.

37—

சாத்தான்பேட்டை பெரிய ஏரிக்கரையை பலப்படுத்தி சாலை அமைத்துக் கொடுத்தல்.

வினா எண். 6721—திரு. ஆர், சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சாத்தான்பேட்டை பெரிய ஏரிக்கரையை பலப்படுத்தி அதனை போக்குவரத்திற்கு ஏற்றதாக சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். பொதுப்பணித்துறை அமைச்சர்:

விடை—

இல்லை.

[1993 ஏப்ரல் 22

38—

சின்ன ஆவுடையார் கோவில் பம்பிங் மோட்டாரை பழுது பார்த்தல்.

வினா எண். 6905—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சின்ன ஆவுடையார் கோவில் பம்பிங் ஸ்கீம் மோட்டார் பழுதடைந்துள்ளதை பழுதுபார்த்து சரிவர இயங்கச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சின்ன ஆவுடையார் கோவில் பம்பிங் ஸ்கீம் என்பது கொள்ளுக்காடு கிராமத்திலுள்ள கொள்ளுக்காடு இளநிலை பாசனத் திட்டமாகும். இங்கு ஒவ்வொன்றும் 20 குதிரைத் திறன் கொண்ட நான்கு மோட்டார்கள் உள்ளன. இதில் ஒன்று உபரி (ஸ்டான்பை) ஆகும். இந்த நான்கு மோட்டார்களில் ஒரு மோட்டார் பழுது அடைந்துள்ளது. மீதமுள்ள 3 (மூன்று) மோட்டார்கள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, மேற்காணும் இறைவைப் பாசனப் திட்டத்தின் மூலம் பாசனத்திற்குத் தண்ணீர் அளிப்பதில் தற்போது சிரமம் ஏதும் இல்லை. இருப்பினும் பழுது அடைந்துள்ள ஒரு மோட்டாரைச் சீர்செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் பழுது பார்த்து தயார் நிலையில் வைக்கப்படும்.

39—

புதுத்தெரு அருகில் ஓடுகின்ற காட்டாற்றை ஆழப்படுத்தி அகலப்படுத்துதல்.

வினா எண். 6945—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, புதுத்தெரு அருகில் ஓடுகின்ற காட்டாற்றை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி படகுத்துறை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 22]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

இல்லை.

40—

துறையூரில் பாசனத்திற்குப் பயன்படும் பாசன மடைகளைப் புதுப்பித்தல்.

வினா எண் 6961—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் துறையூரில் பாசனத்திற்குப் பயன்படும் பாசன மடைகளை புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூரில் உள்ள நிலங்களில் பாசனத்திற்கு ஒரு ஏரியும், சேதுபாவாசத்திரம் எண் 7 வாய்க்காலில் நான்கு நேரடி பாசன மதகுகளும் உள்ளன. இந்த நேரடி பாசன மதகுகளில் சில பழுதுகள் உள்ளன. இதனால் தற்போது பாசனத்திற்கு இடையூறு ஏதும் இல்லை. அவற்றைப் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படும். துறையூர் ஏரியில் உள்ள 3 மதகுகளும் நல்ல நிலையில் உள்ளன.

41—

குருவிக்கரம்பை சி.எம்.பி வாய்க்காலிலுள்ள கிணறு பாலத்தினை மாற்றி அமைத்தல்.

வினா எண் 7063—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பையில் சி.எம்.பி. வாய்க்காலிலிருந்து கிணறு பாலத்தினை மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைசசர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள கிணறு பாலம் (சைபன்) சேதுபாவாசத்திரம் எண் 15-ஆவது வாய்க்காலில் தொலைகல் 0/8860-இல் உள்ளது. இதனை தற்சமயம் உள்ள இடத்தில் இருந்து மேல்பகுதி அல்லது கீழ்ப்பகுதிக்கு மாற்றினால் வாத்தலைர்காடு கிராமத்து மழைத் தண்ணீர் முதலியன வெளியேற தனியாக நிலஆர்ஜிதம் செய்து புதிய வடிவாய்க்கால் முதலியன வெட்டித்தர வெண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே தற்போது கிணறு பாலத்வத மாற்றி அமைக்கத் திட்டம் ஏதும் இல்லை.

42—

நவக்கொல்லைக் காட்டிற்கு, ஒட்டங்காடு பெரிய ஏரியிலிருந்து பாசன வசதிகள் செய்து கொடுத்தல்.

வினா எண் 7143—திரு. ஆர்: சிங்காரம்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம்நவக்கொல்லை காட்டிற்கு ஒட்டங்காடு பெரிய ஏரியிலிருந்து பாசனவசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

43—

கொன்னைக்காட்டில் உள்ள புதுக்குளத்தின் சட்டர்ஸை உயர்த்திக் கட்டுதல்

வினா எண். 7182—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைசசர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்; பேராவூரணி ஒன்றியம் கொன்னைக் காட்டில் உள்ள புதுக்குளத்தில் சட்டர்ஸை உயர்த்திக் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு என். கண்ணப்பன் பொதுப் பணித் துறை அமைச்சர்:

இல்லை.

1993 ஏப்ரல் 22]

44

மேட்டூர் மின் நிலையத்தில் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் பெற வந்துள்ள விண்ணப்பங்கள் விவரம்.

வினா எண் 10669—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின் நிலையத்தில் விவசாயத்திற்கு இலவச் மின்சாரம் பெற வந்துள்ள விண்ணப்பங்களுக்கு எதுவரை மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நாட்களுக்கு முன் பதிந்தவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் விவசாயத்திற்கு இலவச மின் இணைப்பு கோரி வந்துள்ள விண்ணப்பங்களில் இந்த நிதியாண்டில் சாதாரண முன்னுரிமையின் கீழ் 31-3-1984 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களும், சிறப்பு முன்னுரிமை திட்டத்தின் (நேரடி இணைப்பு/ஒரு கம்ப நீட்டிப்பு இணைப்பு) கீழ் 31-12-1988 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களும் மின் இணைப்பு வழங்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் விவசாய மின் இணைப்பு பெற சாதாரண முன்னுரிமை திட்டத்தின்கீழ் எட்டு ஆண்டுகட்கு முன்னர் விண்ணப்பித்தவர்களுக்கும் சிறப்பு முன்னுரிமை திட்டத்தின் கீழ் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் விண்ணப்பித்துள்ளவர்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

45—

பெருமகளூர் நகரம் காந்திநகர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் 11920—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம், காந்திநகர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுத்தர 1992–93–ஆம் ஆண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

அரசு விதிகளின்படி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு திட்டத்தின்கீழ் இலவச மின் இணைப்பு தர இயலாது, ஆதலால் பெருமகளூர் நகரம் காந்திநகர் காலனி வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு தர வாய்ப்பு கிடையாது.

46—

தமிழகத்தில் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப் பட்டுள்ள இடங்கள்.

வினா எண் 11941—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் காற்றாலை மூலம் 68 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தியாகிறதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் மேலும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) தமிழகத்தில் இதுவரை அரசுத்துறையில் (மின்வாரியம்) மொத்தம் 16,005 மெகாவாட் திறனுக்கு 105 காற்றாலைகள், முள்ளைக்காடு (சிதம்பரனார் மாவட்டம்), கயத்தாறு (திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம்), முப்பந்தல் (கன்னியாகுமரி மாவட்டம்), சுல்தான்பேட் (கோயம்புத்தூர் மாவட்டம்), கோட்டை கருங்குளம் (திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம்) ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு (31–8–1992 வரை) 83.84 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து மின்வாரிய இடங்களில் வழங்கப்பட்டு இருக்கிறது. இவற்றில் 1992-ஆம் ஆண்டு மே மாதம் வரையில் 68 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது, இக்காற்றாலைகள் யாவும் மின்வாரியத்தின் பொறுப்பிலும் பராமரிப்பிலும் உள்ளது,

1993 ஏப்ரல் 22]

(ஆ) மேலும் இவ்வாண்டிற்கு கோயம்புத்தூர் மாவட்டம், கேத்தனூர் கிராமத்திற்கு அருகில் மொத்தம் 2 மெகாவாட் திறனுகு 8 காற்றாலைகள் நிறுவுவதற்கு திட்டம் மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது, இத்திட்டத்திற்கு தற்போது நிலம் கையப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது, இது தவிர இவ்வாண்டிற்கு கீழ்க்கண்ட இடங்களில் மேலும் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது:—

(1) பூலவாடி (கோயம்புத்தூர் மாவட்டம்) 4 மெகாவாட்,

(2) முப்பந்தல் (கன்னியாகுமரி மாவட்டம்) 3 மெகா வாட்.

(3) இராமேஸ்வரம் (இராமநாதபுரம் மாவட்டம்) 3 மெகாவாட்.

47—

களரிக் கால்வாயிலிருந்து தெய்வேந்திரநல்லூர் கண்மாய்க்கு கால்வாய் வெட்டுதல்.

வினா எண் 1426—டாக்டர் சு, சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா –

பரமக்குடி தொகுதி போகலூர் ஒன்றியம், களரிக் கால வாயில் இருந்து தெய்வேந்திரநல்லூர் கண்மாய்க்கு கால்வாய் வெட்டப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

போகலூர் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில், போதிய நிதி வசதி இல்லாததால், போகலூர் ஊராட்சி ஒன்றிய களரிக் கால் வாயில் இருந்து தெய்வேந்திரநல்லூர் கண்மாய்க்கு கால்வாய் அமைக்கும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை.

48—

மணிகண்டியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டியை பழுது பார்த்தல்.

வினா எண் 1523—திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம், திருவாரூர் ஒன்றியம், கொட்டாரகுடி ஊராட்சி, மணிகண்டியில் குடிநீர் மேல்நிலைத்தொட்டி பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டிணம்-காயிதேமில்லத் மாவட்டம். திருவாரூர் வட்டம், கொட்டாரக்குடி ஊராட்சி, மணிகண்டியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சேர்ந்த ஆழ்க்குழாய் கிணற்றில் போதுமான நீராதாரம் இல்லாமையால் மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு இப்புதிய குழாய்க் கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இணைத்து குடிநீர் தட்டுப்பாடின்றி பொதுமக்கள் உபயோகத்திற்கு நல்லமுறையில் வழங்கப்பட்டு வருகிறது.

49—

நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்.

வினா எண் 2360—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வ. கொல்லைக்காடு, பழுதுபட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 22]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், வட்டாத்திக்கோட்டை கொல்லைக்காடு, மோட்டாரில் பழுது ஏற்பட்டதை உடன் சீர் செய்து 4 எச்.பி. மோட்டார் அதில் பொருத்தி, பழுதுபார்த்து தற்சமயம் நல்லமுறையில் இயங்கி தண்ணீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

50—

விடை—

வானொலி மன்றத்திற்கு மின் இணைப்பு.

வினா எண் 2686—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங் கலம் ஆதி திராவிடர்களின் வானொலி மன்றத்திற்கு மின் இணைப்புத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் செங்க மங்கலம் ஆதிதிராவிடர்களின் வானொலி மன்றத்திற்கு மின் இணைப்பு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கப் பட்டு விட்டது.

51—

நிலமற்ற விவசாயிகளுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கியில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்தல்.

வினா எண் 3401—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

விவசாயக் கடன் தள்ளுபடி செய்தது போல் நிலமற்ற விவசாயிகள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கியில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பெறுவதற்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் அந்த இளைஞர்களுக்கு எந்த தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறதோ அந்தத் தொழிலில் சுயவேலை வாய்ப்பு பெறுவதற்கு அவர்கள் பயிற்சி பெற்றபின் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் மான்யமும் கடனும் அளிக்கப்படுகிறது. இது தவிர, நிலமற்ற விவசாயிகளுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டம் என தனியாக வேறு திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. இந்தத் திட்டம் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட திட்டம். எனவே, வங்கியில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்ய இயலாது.

52—

ஒட்டன்பள்ளம் ஏரியில் தடுப்பு சுவர் கட்டுதல்.

வினா எண் 4240—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் உள்ள ஒட்டன்பள்ளம் ஏரியில் தடுப்பு சுவர் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் கோயில் வாழ்க்கை கிராமத்திலுள்ள ஒட்டன்பள்ளம் ஏரியில் தடுப்பு சுவர் கட்டும் பணியினை 1992–93 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் செய்து முடிக்குமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட திட்ட அலுவலர் பொதுப்பணித்துறையை கேட்டுக் கொண்டுள்ளார்.

53—

கொசுத்தொல்லை அதிகமாக இருப்பதால் கழிவு நீர்க்கால்வாயை மூடுதல்.

வினா எண் 4470—திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 22]

செங்கற்பட்டு நகரில் கொசுத்தொல்லை அதிகமாக இருப்பதால் திறந்த நிலையில் கிடக்கும் கழிவு நீர்க் கால்வாய்களை (பாதாள சாக்கடை) மூடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

செங்கல்பட்டு நகருக்காக தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் நூறு இலட்சம் செலவில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

54—

மதுரைக்கு வைகை அணையிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 4573—திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரைக்கு மனலூர் நீரேற்று நிலையம் மூலமாக குடிநீர் வழங்கும் முறையை மாற்றி வைகை அணையிலிருந்து நேரடியாக குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகராட்சியின் கூடுதல் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ரூ. 3,576.24 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் ஒன்று உலகவங்கி உதவியுடன் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் வைகை அணைக்கு அருகில் உள்ள நீர் சேகரிக்கும் சிறு அணையிலிருந்து நீர் எடுத்து மதுரை மாநகராட்சி மக்களுக்கு குடிநீர் வழங்கப்படும். இத்திட்டம் 31—3—1993 க்குள் முடிக்கப்பெற்று பயனுக்கு கொண்டுவரப்படும்.

55—

காரைக்குடி தொகுதியில் சாலைகள் சீர்படுத்தல்.

வினா எண் 4660—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காரைக்குடி தொகுதியில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அனைத்திலும் சாலைகள் சீர்கெட்டு இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது சீர் செய்யப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : காரைக்குடி நகராட்சி எல்லைக்குள் பேருந்துகள் செல்லும் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினராலும், நகராட்சியாலும் பராமரிக்கப்பட்டு மேற்படி சாலைகள் அனைத்தும் புதுப்பித்து செப்பனிடப்பட்டு தற்போது பேருந்துகள் செல்வதற்கு தகுதியான சாலைகளாக இருந்து வருகின்றன. நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலைகள் பழுது பார்க்கப்பட்டு பேருந்துகள் செல்வதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

56—

வெளியாத்தூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 4668—திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

காரைக்குடி தொகுதியில் கல்லல் ஒன்றியத்தைச் சார்ந்த வெளியாத்தூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் எண்ணம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கல்லல் ஒன்றியத்தைச் சார்ந்த வெளியாத்தூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

1993 ஏப்ரல் 22

57—

கிருஷ்ணாபுரத்தில் ஸ்வேத நதியின் குறுக்கே பாலம் கட்டுதல்

வினா எண் 4879—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் கிருஷ்ணாபுரத்தில் ஸ்வேத நதியின் குறுக்கே பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் கிருஷ்ணாபுரத்தில் ஸ்வேத நதியின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

58—

அத்தாணி என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள கூட்டுக்குடிநீர் திட்டம் எல்லா ஊர்களுக்கும் குடிதண்ணீர் வழங்கல்.

வினா எண் 4951—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதியில் அத்தாணி என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் எல்லா ஊர்களுக்கும் முறையாக குடிதண்ணீர் வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். அத்தாணி கூகலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் டிசம்பர் 1992 இறுதிக்குள் முடிக்கப்பெற்று முழு அளவிலான குடிநீர் திட்டம் டிசம்பர் 1992-ல் வழங்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

59—

சேலம் நகராட்சியை மாநகராட்சியாக்குதல்.

வினா எண், 5301— திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகராட்சி, மாநகராட்சியாக்கப்படும் போது எந்தெந்தப் பகுதிகள் மாநகராட்சி எல்லைக்குள் சேர்க்கப்பட உள்ளது ?

(ஆ) இப்பணி எப்போது முடிவடையும் ?

விடை—

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சேலம் நகராட்சிக்கு அருகில் உள்ள சில ஊர்களை அந்த நகராட்சிப் பகுதியுடன் இணைத்து அதன் பிறகே மாநகராட்சி ஆக்கப்படும், இதற்காக தமிழ்நாடு அரசிதழில் அறிக்கை வெளியிட்டு பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்ற பின்பே எந்தெந்தப் பகுதிகள் நகராட்சி எல்லைக்குள் சேர்க்கப்படும் என்பதை அரசு முடிவு செய்யும்,

60—

மாநகராட்சிகளை மாவட்டத் தலைநகராக உருவாக்கும் திட்டம்.

வினா எண் 5605— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சிகளாக எந்தெந்த மாவட்டத் தலை நகரங்களை உருவாக்க அரசிடம் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ; திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாக்குவதற்கு அரசு கொள்கையளவில் முடிவெடுத்து மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,

1993 ஏப்ரல் 22]

61—

நத்தம் தொகுதி குடியிருப்புகளில் குடிநீர் வசதி.

வினா எண்.— 5606 திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீர்ப் பிரச்சினையுள்ள குடியிருப்புகள் என நத்தம் தொகுதியில் எத்தனை குடியிருப்புகள் உள்ளன?

(ஆ) அங்கெல்லாம் முன்னுரிமை அளித்து குடிநீர்ப் பிரச்சினை தீர இவ்வாண்டில் நடவடிக்கை எடுக்க அரசிடம் கருத்துரு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) (ஆ) மற்றும் (இ) : நத்தம் தொகுதியிலுள்ள 382 குடியிருப்புகளில் 203 குடியிருப்புகளுக்கு முழுமையாக குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 179 குடியிருப்புகள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவையாகும். இவற்றில் 12 கிராமங்களுக்கு சென்ற ஆண்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப் பட்டு திட்டம் முடிவடைந்துள்ளது.

62—

அந்தியூர் ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர் வசதி.

வினா எண். 5665—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட நகலூர், சின்னத்தம்பி பாளையம், மூங்கில்பட்டி, வேம்பத்தி, பிரமதேசம் போன்ற ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும், அத்தாணி கூகலூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிதண்ணீர் வசதி செய்ய வாய்ப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்திற்குட்பட்ட நகலூர், சின்னதம்பிபாளையம், மூங்கில்பட்டி, வேம்பத்தி பிரமதேசம் போன்ற ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும், அத்தாணி கூகலூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின மூலம் குடிதண்ணீர் வசதி செய்ய வாய்ப்பு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

63—

உமாரெட்டியூர் சத்தியா நகரில் குடிநீர் வசதி.

வினா எண் 5677—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பெரியார் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், உமா ரெட்டியூர் சத்தியா நகரில் குடிநீர் பிரச்சினையை தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், உமா ரெட்டியூர், சத்தியாநகர் ஏற்கனவே பணிகள் நடைபெற்றுவரும் பரயன்காடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளை முடித்து 12/92-க்குள் இக் குடியிருப்பிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

64—

வேலாயுதம்பட்டியில் குடிநீர் வசதி.

வினா எண் 5697—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நத்தம் யூனியன், பின்னவப்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட வேலாயுதம்பட்டியில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கும் நிலையில் போதுமான குடிநீர் வசதி இல்லாதிருப்பதை அரசு அறியுமா?

1993 ஏப்ரல் 22]

(ஆ) ஆம் எனில், அருகில் உள்ள கரந்த மலையிலிருக்கும மாவூற்றில் கிடைக்கும் ஊற்று நீரை பைப்லைன் மூலம் வேலாயுதம்பட்டி மற்றும் வழியில் உள்ள கிராமங்களுக்கு கொண்டு வந்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாட்டை போக்க அரசு பரிசிலித்து நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த புன்னப் பட்டி ஊராட்சிக்குட்பட்ட வேலாயுதம்பட்டி கிராமத்தில் மக்கட தொகை 1,206 ஆகும். இககிராமம் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றதாகும்.

(ஆ) வேலாயுதம்பட்டி கிராமத்திற்கு குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க திட்டம் உத்தேசிக்கப்படும்போது, வழியோரக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு, கரந்த மலையிலிருக்கும் மாவூற்றில் கிடைக்கும் ஊற்று நீரை நீராதாரமாகக் கொண்டு திட்டம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

65—

தமிழகத்தில உள்ள அனைத்து நகராட்சிகளிலும் நேரடியாக வரி வசூல் செய்யும் திட்டம்.

வினா எண் 5723—திரு. எம். எம். எஸ். அபுல்ஹாசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுககுவிடை யளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் சொத்து வரி மற்றும் வீட்டு வரி இவைகளை வசூல் செய்ய தற்போது இருக்கும் நிலையை மாற்றி முன்பு இருந்தபடியே பில் கலெக்டர்கள (வரித்தண்டலர்கள்) மூலம் நேரடியாக வரி வசூல் செய்யும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் எவ்வாறு வரி வசூல் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்

(அ) மற்றும் (ஆ) : 1–10–1989 முதல், வரித்தண்டலர்கள் நகராட்சிகளில் வரியை வசூலிக்கும் திட்டத்திற்கு பதிலாக தேசியுடைமையாக்கப்பட்ட வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் வரியை வசூலிக்கும்படி அரசு (நிலை) கடிதம் எண். 338, ந.நி.ம.கு.வ

துறை, நாள் : 8–6–1989-ல் ஆணையிடப்பட்டது. தற்போது வரி செலுத்துவோர் வங்கி மூலம் வரித்தொகை செலுத்த விரும்பினால் கேட்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகையை வங்கியில் செலான் மூலம் செலுத்தலாம் எனவும், வரி செலுத்துபவர் வரித்தொகையை வருவாய் உதவியாளரிடம் அளிக்க விரும்பினால், வருவாய் உதவியாளர் அதனை பெற்றுக் கொண்டு வரிததொகை முழுவதையும் அன்று மாலை 5-00 மணிக்குள் நகராட்சி கருவூலததில் செலுத்திவிட வேண்டும் என்ற அரசு கடிதம் (நிலை) எண் 219, நாள் : 26–8–1992-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

66—

குரும்பப்பட்டியில் சுத்தமான குடிநீர் வசதி.

வினா எண் 6013—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நத்தம் தொகுதிக்குட்பட்ட திண்டுக்கல் ஒன்றியததைச் சார்ந்த குரும்பப்பட்டியில் தோல் ஷாப் கழிவு நீரால் நிலத்தடி நீர் பாழாகிவிட்டதால், அந்த கிராம மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கச் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரால் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் —

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

67—

நகரப் பகுதிகளில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் தனியாரால் நடத்த நடவடிக்கை.

வினா எண். 6133—திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நகரப் பகுதிகளில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடங்கள் மீண்டும் தனியாரால் நடத்தப்பட நகராட்சிகளால் ஏலம் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

விடை—

(அ) நகராட்சிப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கட்டண கழிப்பிடங்கள் பொதுமக்களின் வசதிக்காக அமைக்கப்பட்டவையே தவிர வருமான நோக்கோடு அமைக்கப்பட்டவை அல்ல. எனவே, மீண்டும் தனியாரால் அவை நடத்தப்பட நகராட்சிகளால் ஏலம் விட இயலாது.

68—

எலச்சிபாளையம் குடிநீர் கிணற்றை தூர் எடுத்தல்.

வினா எண். 6397—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, எலச்சிபாளையம் குடிநீர் கிணற்றை தூர் எடுக்கவும், கிணற்றைச் சுற்றி சுவர் கட்டவும், பிளாட்பாரம் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பர்கூர் ஊராட்சி, எலச்சிப்பாளையத்தில் உள்ள குடிநீர் கிணற்றை தூர் எடுக்க ரூ. 15,000, சுற்று சுவர் கட்ட ரூ. 15,000, பிளாட்பாரம் கட்ட ரூ. 5,000 ஆக மொத்தம் ரூ. 35,000 செலவாகும். மேற்படி பணி எடுத்துச் செய்ய அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லை. அவ்வூர் மக்கள் பயன்படுத்த எலச்சிப்பாளையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் போதிய தண்ணீர் வசதியுள்ளது. எனவே, கிணற்றை மராமத்து செய்ய அரசிடம் தற்சமயம் செயற் குறிப்பு இல்லை.

விடை—

69—

சின்ன ஆவுடையார் கோவிலில் துணை சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண். 6630—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், சின்ன ஆவுடையார் கோவிலில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஊராட்சி ஒன்றியம், சின்ன ஆவுடையார் கோவிலில் ஒரு துணை சுகாதார நிலையம் தற்போது இயங்கி வருவதால் புதியதாக துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கு அவசியமில்லை.

70—

மல்லிப்பட்டிணத்தில் துணை சுகாதார நிலையம் கட்டுதல்.

வினா எண் 6983—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டிணத்தில் உள்ள துணை பிரதம சுகாதார நிலைய கட்டிட வேலை தொடங்கப்பட்டு முடிக்கப்படாமல் உள்ளதால், அப்பணியை முடிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மல்லிப்பட்டிணத்தில் உள்ள இக்கட்டிடம் கிராமிய மருத்தக கட்டிடமாகும். முடிக்கப்படாமல் இருந்த இக்கட்டிடம் தற்போது பொதுப்பணித்துறை கட்டிடப் பிரிவினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

71—

தேனாங்காடு மயானத்திற்கு தகர கொட்டகை அமைத்தல்.

வினா எண் 7105—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

1993 ஏப்ரல் 28]

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தேனாங்காடு மயான சாலையை பராமரித்து மயானத்திற்கு தகர கொட்டகை போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சிக்குட்பட்ட தேனாங்காடு மயான சாலை 1 கி.மீ. நீளமுடைய மண் சாலையாகும். நிதிப்பற்றாக் குறையின் காரணமாக தேனாங்காடு மயான சாலையும் மயானக் கொட்டகையும் அமைக்க செயற் குறிப்பேதுமில்லை.

72—

செங்கமங்கலம் மேற்கில் போர்வெல் அமைத்தல்.

வினா எண் 7158— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் மேற்கில் தாழ்த்தப்பட்டவர்கள் தெருவில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் மேற்கில் தாழ்த்தப்பட்டவர்கள் தெருவில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

73—

நவக்கொல்லைக்காடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர்மூழ்கி மோட்டார் அமைத்தல்.

வினா எண் 7272— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், நவக்கொல்லைக்காடு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கொள்ளளவு

1½ லட்சம் லிட்டர் பிடிப்பதாக பெரிதாக்கி கட்டி நீர் மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், நவக்கொல்லைக்காடு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் கொள்ளளவை 1½ லட்சம் லிட்டர் பிடிப்பதாக பெரிதாக்கி கட்டி நீர் மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

74—

நரியங்காட்டிலிருந்து புனவாசல் செல்லும் குறுக்குச் சாலையை கப்பிச் சாலையாக மாற்றல்

வினா எண் 7280—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, நரியங்காட்டிலிருந்து புனவாசல் செல்லும் குறுக்குச் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, நரியங்காட்டிலிருந்து புனவாசல் செல்லும் குறுக்குச் சாலையை கப்பிச் சாலையாக மாற்றிட ரூ. 1.50 இலட்சம் செலவாகும். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் தற்போது இது பற்றி அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

75—

ஒவிராமன் காட்டிலிருந்து பூவானம் வரை இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 7296—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒலிராமன் காட்டில் இருந்து பூவானம் வரை இணைப்புச்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஒலிராமன் காட்டிலிருந்து பூவானம் வரையுள்ள தூரம் 1 கி.மீ. ஆகும். இதனை இணைப்புச் சாலையாக மாற்றிட ரூ. 1,60,000 செலவாகும். நிதிப் பற்றாக்குறையின் காரணமாக ஒலிராமன் காட்டிலிருந்து பூவானம் வரை இணைப்புச் சாலை அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

76—

வீராணம் கிராமத்தில் மருத்துவ நிலையம் அமைத்தல்.

வினா எண். 8656— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆலங்குளம் ஒன்றியம் வீராணம் கிராமத்தில் மருத்துவ நிலையம் (Sub-Centre) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த துணை சுகாதார நிலையம் (Health Sub-Centre) வீராணம் கிராமத்தில் செயல்படுகிறது.

77—

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்.

வினா எண். 9865—திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொப்பம்பட்டி மற்றும் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் ஆய்வில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்கள் எத்தனை?

(ஆ) இப்பகுதிகளில் நிலத்தடி நீர் குறைந்து விட்டதால் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு முன்னுரிமைக் கொடுத்து அதிக நிதி ஒதுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு. திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

78—

தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண். 9866—திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கள்ளிமந்தயத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் திருத்தியமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதால் உள்ளாட்சி நிறுவனங்களில் எவ்விதமான நிர்வாக மாற்றங்களும் செய்தல் கூடாது என அரசின் தடையாணை அமலில் இருந்து வருவதால் திண்டுக்கல்—அண்ணா மாவட்டம் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

79—

கடலாடி ஒன்றியப் பகுதியில் விவசாயக் கிணறு கட்டுவதற்குக் கடன் வழங்கல்.

வினா எண். 5213—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா ?

1993 ஏப்ரல் 22]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் நில வள வங்கி மூலம் கடலாடி ஒன்றியப் பகுதிக்கு விவசாயக் கிணறு கட்டுவதற்குக் கடன் வழங்க அரசு தடை ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தடையை நீக்கி ஜியாலஜிஸ்ட் சான்றிதழ் வழங்கும் இடங்களில் கிணறுகள் கட்ட கடன் வழங்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நபார்டு நிர்ணயித்துள்ள விதிகளின்படி கடற்கரையிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரம் உள்ள பகுதிகளில் கிணறு தோண்டுவது பற்றிய சிறுபாசன வசதிகளுக்கு நிலவள வங்கிகள் கடன் வழங்க இயலாது. இருப்பினும், கடலாடி ஒன்றியப் பகுதியில் கடற்கரையிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளில் புதிய கிணறுகள் தோண்டவும், ஆழப்படுத்தவும் முதுகுளத்தூர் நிலவள வங்கி 1991 இறுதி வரை கடன்கள் வழங்கியுள்ளது.

80—

நியாயவிலைக் கடைகளில் விற்பனையாளர்களுக்கு சம்பளம் ஒரே சீராக வழங்குதல்.

வினா எண் 6065—திரு. கே. முனிவெங்கடப்பன் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகளில் வேலை செய்யும் விற்பனையாளர்கள் (Salesmen) ரூ. 250 முதல் ரூ. 950 வரை மாத சம்பளம் பெறுவதை ஒரே சீராக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

பிரதம வேளாண்மை கூட்டுறவு வங்கிகளால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் வேலை செய்யும் விற்பனையாளர்களைப் பொறுத்த மட்டும்தான் ஊதியம் சம்பந்தமான பிரச்சினை உள்ளது. மற்றப்படி, கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்களுக்கு மேற்படி பண்டகசாலை

யின் இதர ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோல் அடிப்படை சம்பளம் மற்றும் இதர படிகள் வழங்கப்படும். பிரதம வேளாண்மை வங்கிகளால் நடத்தப்படும் நியாயவிலைக் கடை விற்பனையாளர்களையும் அந்தந்தக் கூட்டுறவு வங்கி ஊழியர்களாகவே பாவித்து, வங்கியின் பிற ஊழியர்களுக்கு வழங்கப் படுவது போலவே, சம்பளம் மற்றும் இதர படிகள் வழங்குவது முடியுமா என்பது பற்றி பரிசீலிக்க அரசால் ஒரு குழு அமைக் கபபட்டுள்ளது. இது குறித்து இக்குழு பரிசீலனைச் செய்து அதன் அடிப்படையில் முடிவெடுக்க சிறிது காலம் பிடிக்கும். எனினும், நியாயவிலைக் கடைகளில் பணியாற்றுவோரில் ரூ. 500 க்கும் குறைவாக மாத சம்பளம் பெறும் அனைத்து ஊழியர்களுக்கும் நடப்பாண்டு மார்ச்சு திங்கள் முதல், மாத ஊதியமாக ரூ. 500 அளிக்க வேண்டுமென்று, கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

81—

காயிதே மில்லத் மாவட்டத்தில் விவசாயிகளிடம் கூட்டுறவுக் கடனை வசூல் செய்தல்.

வினா எண் 9237—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காயிதே மில்லத் மாவட்டத்தில் நீண்ட நாட்களாக பெரிய விவசாயிகளிடம் நிலுவையில் இருக்கும் கூட்டுறவுக் கடனை வசூல் செய்ய அரசிடம் செயற்குறிப்பு (திட்டம், உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

நிலுவையில் உள்ள கூட்டுறவுக் கடனை ஆண்டு முழுவதும் அணுகுமுறை மூலமும், பயனுள்ள வகையில் எடுத்துச் சொல்லுவதன் மூலமும் சிறிய மற்றும் பெரிய விவசாயிகளிடம் வசூல் செய்யப்படுகிறது. இத்தகைய முறை காயிதே மில்லத் மாவட்டம் உள்ளிட்ட எல்லா மாவட்டங்களிலும் பின்பற்றப்படுகிறது.

82—

விதவைகளுக்கு குடும்ப அட்டை வழங்குதல்.

வினா எண் 11555—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

(அ) தனி நபர், விதவைகளுக்கு மீண்டும் குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) தனி நபர், விதவைகளுக்கு குடும்ப அட்டை வழங்குவது நிறுத்தப்படவில்லை. குடும்ப அட்டை இல்லாதவர்கள் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் உதவி ஆணையர் அவர்களிடம் முறைப்படி மனு செய்தால், 100 விசாரணைக்குப்பின் குடும்ப அட்டை வழங்கப்படும். தமிழ்நாட்டில் மட்டும் 2,29,677 ஒரு நபர் குடும்ப அட்டைகள் உள்ளன.

(ஆ) வினா எழவில்லை.

83—

தொழிற்சாலை, மில்களில் பணிபுரியும் பெண்களுக்கு ஊதியம் வழங்க நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள்.

வினா எண். 10642—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலை மற்றும் மில்களில் பணிபுரியும் பெண்களுக்கும், ஆண்களைப் போன்ற சம ஊதியம் மற்றும் அலவன்ஸ்கள் வழங்கச் செய்வதற்காக நியமிக்கப்பட்ட அரசு தரப்பு கமிட்டியின் பரிந்துரைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அவற்றின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) நூற்பாலைகளில் பெண்களின் வேலை நிலைமை அவர்களின் ஊதிய விவரங்கள் மற்றும் அவர்களுக்கு இப்பணியில் ஏற்படும் இடர்பாடுகள் ஆகியவை பற்றி ஆராய்ந்து முடிவு செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட உபகுழுவின் அறிக்கையினை 24—1—1990 அன்று நடைபெற்ற 11-வது கூட்டத்தில் சம ஊதிய சட்ட ஆலோசனைக் குழு பரிசீலனைச் செய்தது,

இந்த பொருள் பற்றி, சட்ட அளவில் எந்த நடவடிக்கையும் தேவை ஏற்படவில்லை என்ற முடிவு செய்ததால் உபகுழுவின் பரிந்துரைகள் ஏதும் அரசுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) பதில் எழவில்லை.

84—

வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்தல்.

வினா எண் 11578—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் தேவையான குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எஸ்டேட் வாரியாக உள்ள புள்ளி விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

(அ) ஆம்.

(ஆ) வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டங்கள் வாரியாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு :

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு.

31—12—1991-ந் தேதி முடிய வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட குடியிருப்பு வசதிகளின் விபரம் பின்வருமாறு :

வரிசை எண் மற்றும் தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் பெயரும் மற்றும் முகவரியும்.	மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை,		தேவைப்படும் வீடுகளின் எண்ணிக்கை.	வழங்கப்பட்டவைகளின் எண்ணிக்கை.		வீடு வழங்க வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை.	வீடுகள் வழங்கப்படாததற்கு காரணம். ஆய்வர் எடுத்த நடவடிக்கையின் விபரம்.
	ஆண்கள்,	பெண்கள்.		தரமானது,	தரமற்றது.		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. முக்கோட்டு முடி எஸ்டேட், முடீஸ் (போஸ்ட்) ..	260	411	680	680	..	..	..
2. தாய்முடி எஸ்டேட், முடீஸ் (போஸ்ட்)	414	547	509	509	..	..	..
3. தோனிமூடி எஸ்டேட், முடீஸ் (போஸ்ட்)	375	486	457	457	..	..	..
4. கெஜமுடி எஸ்டேட், முடீஸ் (போஸ்ட்),	191	304	359	344	..	25	நீதிமன்ற நடவடிக்கை,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
5. முடீஸ்குரூப் சென்டர், முடீஸ் (போஸ்ட்) ..	046	010	086	086	..	..	..
6. ஆனைமுடி எஸ்டேட், முடீஸ் (போஸ்ட்).	341	527	556	530	26	..	தரமானதாக மாற்ற நடவடிக்கை.
7. அய்யர்பாடி எஸ்டேட், அய்யர்பாடி (போஸ்ட்)	151	389	475	453	இல்லை.	22	நீதிமன்ற நடவடிக்கை.
8. பாரளை எஸ்டேட், அய்யர்பாடி போஸ்ட்.	289	449	461	461	..	..	..
9. ஷேக்கல் முடி எஸ்டேட், முருகாளி பஜார் (போஸ்ட்)	322	444	567	435	..	132	நீதிமன்ற நடவடிக்கை.
10. லோயர் ஷேக்கல் முடி எஸ்டேட், முருகாளி பஜார் (போஸ்ட்),	242	398	567	435	..	132	௸
11. முருகாளி எஸ்டேட், முருகாளி பஜார் (போஸ்ட்) .	197	377	470	470	..	..	..
12. பள்ளிமேடு எஸ்டேட், பள்ளிமேடு (போஸ்ட்)	167	350	428	428	..	..	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53-104-13

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
13. வில்லோனி எஸ்டேட், பழைய வால்பாறை (போஸ்ட்).	321	502	652	628	..	24	ஆய்வாணை வழங்கப்பட்டுள்ளது.
14. பச்சை மலை எஸ்டேட், வால்பாறை (போஸ்ட்)	347	492	701	701	..	..	..
15. உடுக்கல் எஸ்டேட், வால்பாறை (போஸ்ட்).	334	587	673	648	..	25	நீதிமன்ற நடவடிக்கை.
16. சிறுகுன்றா எஸ்டேட், சிறுகுன்றா (போஸ்ட்).	245	439	517	517	..	..	..
17. மாளிக்கா எஸ்டேட், வால்பாறை (போஸ்ட்)	247	434	535	535	..	..	..
18. இஞ்சிப்பாறை எஸ்டேட், வால்பாறை (போஸ்ட்).	192	447	508	508	..	..	..
19. ஸ்டான்மோர் எஸ்டேட், வால்பாறை (போஸ்ட்).	225	359	459	459	..	..	..
20. நல்லகாத்து எஸ்டேட், வால்பாறை (போஸ்ட்).	228	354	413	413	..	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
21. கருமலை எஸ்டேட், கருமலை பஜார் (போஸ்ட்). ..	255	418	529	529	...	...	...
22. வெள்ளமலை எஸ்டேட், கருமலை பஜார் (போஸ்ட்) ..	496	609	650	650	...	..	...
23. அக்காமலை எஸ்டேட், கருமலை பஜார், (போஸ்ட்) ..	337	485	600	600	—	..	...
24. நடுமலை எஸ்டேட், வால்பாறை (போஸ்ட்) ..	110	398	420	420	..	..	...
25. ஹைபாரஸ்ட் எஸ்டேட், ஹைபாரஸ்ட் (போஸ்ட்). ..	202	363	374	330	44	..	நீதிமன்ற நடவடிக்கை.
26. சோலையார் எஸ்டேட், சோலையார் (போஸ்ட்).	179	694	787	787	...	...	...
27. கல்லையார் எஸ்டேட், சோலையார் (போஸ்ட்) ..	135	576	602	602	..	...	...
28. வாட்டர்பால் எஸ்டேட் (கிழக்கு) வாட்டர்பால்ஸ் (போஸ்ட்) ..	313	370	440	440	...	...	—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

29. வாட்டர்பால் எஸ்டேட். (மேற்கு) வாட்டர்பால்ஸ் (போஸ்ட்) ..	294	353	417	417	..	..	..
30. உபாசி தேயிலை ஆராய்ச்சி நிலையம், சின்கோனா (போஸ்ட்) ..	22	41	34	34	..	..	..
31. வேவர்லி எஸ்டேட், வாட்டர்பால்ஸ் (போஸ்ட்) ..	195	234	250	250	..	..	..
32. ஸ்ரீ முருகன் டீ எஸ்டேட், குரங்குமுடி (போஸ்ட்) ..	59	90	147	59	..	88	ஆய்வாண வழங்கப் பட்டது.
33. மெஸர்ஸ் மவுண்ட் ஸ்டுவர்ட் எஸ்டேட், கவர்க்கல் (போஸ்ட்)	110	177	208	208	..	..	...
டான் டீ :							
34. வாசன் கோட்டம், சின்கோனா (போஸ்ட்) ...	94	100	178	173	...	5	வி.கே. அ. நடவடிக்கை.
லோயர்நீரார் கோட்டம், லோயர்நீரார் (போஸ்ட்) ..	55	70	245	105	140	..	ஷை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
36. சின்னக்கல்வார் கோட்டம், சின்னக்கல்வார் (போஸ்ட்) ..	71	96	172	74	98	ஷை	ஷை
37. பெரியக்கல்வார் கோட்டம், பெரியக்கல்வார் (போஸ்ட்) ..	72	85	468	468	..	..	..
38. ஹாட்சக் கோட்டம், பெரியக்கல்வார் (போஸ்ட்) ...	45	52	115	115	..	...	...
39. ரயான் கோட்டம், பெரியக்கல்வார் (போஸ்ட்) ..	37	50	106	106	..	..	..
40. ஸ்டேன்சன் கோட்டம், பெரியக்கல்வார் (போஸ்ட்) ..	17	44	60	60	...	...	...

1993 ஏப்ரல் 23]

இன்னும் கட்டப்பட வேண்டிய வீடுகள் 443 ஆகும். வால் பாறை மட்டுமல்லாமல் மற்றும் அனைத்துத் தோட்ட நிறுவனங்களில் கட்டப்பட வேண்டிய மீதி குடியிருப்புகளை கட்ட ஆவன செய்வது குறித்து 17-7-1992 அன்று நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதி ஆலோசனை வாரியக் கூட்டத்தில் ஒரு செயல் திட்டம் வழங்க நிர்வாகப் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அரசு பிரதிநிதிகள் கொண்ட ஒரு துணைக் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி 21–9–1992 நாளிட்ட அரசாணை எண் 203 மூலம் துணைக் குழு அமைக்கப்பட்டு இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

85—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மகாத்மா காந்தி தோட்டக் கலைப் பண்ணையின் செயல்பாடுகள்.

வினா எண் 7714—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பட்டுக்கோட்டையில் உள்ள மகாத்மா காந்தி பழத் தோட்ட ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பின் செயல்பாடுகளின் விவரம் என்ன?

(ஆ) இதற்கான நிதி ஆதாரம் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டின்படி பெறப்படுகிறதா?

(இ) மத்திய அரசின் மானிய உதவி இந்த அமைப்பிற்காக வழங்கப்படுகிறதா?

விடை —

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) மகாத்மா காந்தி பழத்தோட்டம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள வல்லத்திராக்கோட்டை என்ற ஊரில் உள்ளது. பட்டுக்கோட்டையில் அல்ல. இது ஆராய்ச்சி மையம் அன்று. இது அரசு தோட்டக்கலைப் பண்ணை ஆகும். மேற் குறிப்பிட்ட வல்லத்திராக்கோட்டையிலுள்ள மகாத்மா காந்தி பழத்தோட்டம் 521. 20 எக்டேர் (1,303 ஏக்கர்) பரப்பளவு கொண்ட பண்ணையாகும். இங்கு மா, முந்திரி, கொய்யா, சப்போட்டா முதலிய பழ மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம்.

(இ) இல்லை.

86—

திருவையாறு பேரூராட்சியில் வீடுகள் கட்டுதல்.

வினா எண் 4981—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப் படும் வீடுகள் திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, திருப்பந் துருத்தி பேரூராட்சியிலும் கட்ட அரசு ஆவன செய்யுமா? விடை

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) குடிசை மாற்று வாரிய திட்டப்பணி களை கீழ்க் குறிப்பிட்ட பேரூராட்சிப் பகுதிகளுக்கு விரிவு படுத்த தற்பொழுது திட்டம் ஏதும் இல்லை.

1. திருவையாறு.

2. திருக்காட்டுப்பள்ளி.

3. திருப்பந்துருத்தி.

87—

அலமேலுமங்காபுரம் மதுரா ஏரியூரில் வீட்டு வசதி வாரியத்திற் காக கையகப்படுத்த நடவடிக்கை.

வினா எண் 11419—திரு. சி. ஞானசேகரன்: மாண் புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தாலுக்கா அலமேலுமங்காபுரம் மதுரா ஏரியூர் சர்வே எண் 146-1 முதல் 167-2 வரையில் உள்ள இடத்தை வீட்டு வசதி வாரியத்திற்காக கையகப்படுத்த வருவாய்த்துறை உத்தர விட்டு உள்ளதை அரசு அறியுமா?

1993 ஏப்ரல் 22]

(ஆ) ஆம் எனில், ஏற்கெனவே பல ஆண்டுகளாக வீடு கட்டி குடியிருப்பவர்களின் நிலப் பகுதிக்கு விதி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நிலத்தில் ஏற்கெனவே வீடுகட்டி குடியிருப்பவர்களின் நிலப் பகுதிக்கு விலக்களிப்பது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட நில உடைமையாளர்களிடம் இருந்து கோரிக்கை வரப்பெற்றால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.

88—

சத்துணவு முட்டையின் தரம் சோதித்தல்.

வினா எண் 11191—திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவுக்கு முட்டை எந்தவகையில் வாங்கப்படுகிறது?

(ஆ) ஒரு முட்டை என்ன விலைக்கு வாங்கப்படுகிறது ?

(இ) வாங்கப்படுகின்ற முட்டையின் தரம் சோதிக்கப்படுகிறதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகளுக்கு, 15 நாட்களுக்கு ஒரு முறை கோழி முட்டை வழங்கப்படுகிறது. இதற்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்த விலைப் புள்ளிகள், சென்னை நகரம் மற்றும் மாவட்ட வாரியாக பெறப்பட்டு (Open tender system) அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரருக்கு அம் மாவட்டத்தில் முட்டை விநியோகிக்கும் உரிமை அளிக்கப்பட்டு, முட்டை வாங்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1992-93 ஆம் ஆண்டிற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் மட்டும் முட்டை ஒன்று 83.65 பைசா என்ற விலையிலும் மற்ற மாவட்டங்களுக்கு முட்டை ஒன்று 90 பைசா என்ற விலையிலும் வாங்கப்பட்டு வருகிறது.

(இ) முட்டைகள் அழுகாததும், நல்ல தரமானதும் 45 கிராம் எடைக்கு குறையாமலும் இருக்க வேண்டும் என்று ஒப்பந்தப் புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டே, தேர்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து முட்டைகள் வாங்கப்பட்டு வருகின்றன. முட்டைகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளின் பரிசீலனைக்கும், ஏற்பிற்கும் உட்படுத்தப்பட்டே விநியோகிக்கப்படுகின்றன.

89—

மன்னார்குடி கல்லூரி மாணவர்களுக்காக ஆதி திராவிடர் நல விடுதிகள் அமைத்தல்.

வினா எண் 5354—திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்காக ஆதி திராவிடர் நல விடுதிகள் அமைக்கப்பட வேண்டுமென அவ்வூர் கல்லூரி மாணவர்கள் வலியுறுத்துவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப் பகுதியில் ஆதி திராவிடர் நல விடுதி அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் மன்னார்குடியில் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கென ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் அரசினர் கல்லூரி மாணவர் விடுதி 9—12—1991 முதல் செயல்பட்டு வருகிறது.

1993 ஏப்ரல் 22]

90—

ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தால் கட்டப் பட்டுள்ள வீடுகள்.

வினா எண் 7734—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் இதுவரை (1990-91 வரை) ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினருக்காக கட்டித்தந்த வீடுகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு?

(ஆ) மேலும் எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு வீடுகள் கட்டப்படவிருக்கின்றன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம் பாட்டுக் கழகம் 1974 முதல் 1989 வரை 78,718 வீடுகள் கட்டி இலவசமாக ஆதி திராவிட மக்களுக்கு வழங்கியுள்ளது. மாவட்ட வாரியாக கட்டிய வீடுகளின் எண்ணிக்கை வருமாறு:—

வரிசை எண்.	மாவட்டங்கள் பெயர்.		கட்டப்பட்ட வீடுகள்
(1)	(2)		(3)
1	செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்.	..	4,954
2	வடாற்காடு-அம்பேத்கார்.	..	8,611
3	தென்னாற்காடு	..	10,478
4	தர்மபுரி	..	3,677
5	சேலம்	..	6,368
6	பெரியார்	..	1,630

வரிசை எண். (1)	மாவட்டங்கள் பெயர். (2)		கட்டப்பட்ட வீடுகள் (3)
7	கோயம்புத்தூர்	..	5,025
8	நீலகிரி	..	1,250
9	மதுரை	..	6,054
10	திண்டுக்கல்-அண்ணா	..	899
11	திருச்சி	..	8,975
12	தஞ்சாவூர்	..	6,728
13	புதுக்கோட்டை	..	2,338
14	காமராஜர்	..	725
15	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்	..	687
16	இராமநாதபுரம்	..	4,182
17	திருநெல்வேலி-கட்டபொம்மன்	..	4,225
18	வ.உ. சிதம்பரனார்	..	585
19	கன்னியாகுமரி	..	1,327
	மொத்தம்		78,718

(ஆ) 1989-90 ஆம் ஆண்டிலிருந்து ஊரக வளர்ச்சித் துறையால் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்துக்கள் மூலம் ஆதி திராவிடர்களுக்கு இலவச கான்கிரீட் வீடு கட்டி வழங்கப்படுகின்றன. எனவே தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள் கட்டி வழங்கும் திட்டத்தை 1989 முதல் செயல்படுத்தவில்லை.

91—

வால்பாறை தொகுதியில் மாட்டுப்பண்ணை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அமைத்தல்.

வினா எண் 7830—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

1993 ஏப்ரல் 22]

(அ) வால்பாறைத் தொகுதியில் மாட்டுப் பண்ணை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

92—

தில்லைநாயகன்புரம் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் சீர் செய்தல்.

வினா எண் 9185—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், தில்லைநாயகன்புரம் ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணைப்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகள் தாங்களாகவே சொந்தச் செலவில் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கும்போதே தெளிவுபட எடுத்துக் கூறப்பட்டு உடன்பாட்டுப் பத்திரத்தில் அவர்களின் இசைவும் பெறப்படுகிறது, இலவசமாக கொடுக்கப்பட்ட வீடுகளைப் பழுது பார்ப்பதையும் அரசே மேற்கொண்டால் புதிய வீடுகள் கட்டி வழங்க நிதி வசதி இல்லாமல் போய்விடும் என்பதால், பழுது பார்க்கும் பணிகளையும் அரசே மேற்கொள்வதற்கான திட்டம் ஏதும் இல்லை.

93—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்ட முன்னேற்றத்திற்கு மாவட்ட அளவில் தனி அதிகாரி அமைத்தல்.

வினா எண் 9602—திரு. செ. பெருமாள்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்ட முன்னேற்றத்திற்கு மாவட்ட அளவில் தனி அதிகாரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறையில் கொண்டு வரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

94—

திருப்பூரணிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13109—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, திருப்பூரணிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்குக் காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார். பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற, பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை

1993 ஏப்ரல் 22]

95—

அஞ்சூரணிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13110—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, அஞ்சூரணிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க . அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்; பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

96—

கொன்றைக்காடு மிகவும் பின்தங்கிய சீர்மரபினருக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13111—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் காலகம் ஊராட்சி, கொன்றைக்காடு மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலப் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

[1993 ஏப்ரல் 22

97—

மதன்மட்டவூர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13135—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு வீடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி, ஒன்றியம், ஒட்டங் காடு ஊராட்சி, மதன்மட்டவூர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு களில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

98—

நல்லமான் புஞ்சை மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கு வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13136—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஒட்டங் காடு ஊராட்சி நல்லமான் புஞ்சை மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டித் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு களில் நரிக் குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

1993 ஏப்ரல் 22]

99—

தமிழகத்தில் சிறு தொழில் தொடங்குவோர்க்காக தொழில் முனைவோர் பயிற்சி நிலையம் தொடங்குதல்.

வினா எண் 3993—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சிறு தொழில் தொடங்குவோர்க்காக தொழில் முனைவோர் பயிற்சி நிலையத்தைத் குஜராத், மகாராஷ்டிரம் போன்ற பிற மாநிலங்களில் உள்ளது போல் தமிழகத்தில் தொடங்க் அரசு முயற்சிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

சிறு தொழில் தொடங்குவோர்க்கான தொழில் முனைவோர் பயிற்சி நிலையம் ஒன்று குஜராத், மகாராஷ்டிரம் போன்ற பிற மாநிலங்களில் உள்ளது போல் தமிழகத்திலும் மத்திய அரசு உதவியுடன் தொடங்குவதற்கான திட்ட அறிக்கை ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

100—

நகரங்களை ஒட்டி தொழிற்சாலைகள் அமைவதால் குடியிருப்பு, போக்குரவத்து வசதி குறைதல்.

வினா எண் 6104—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நகரங்களை ஒட்டி தொழிற்சாலைகள் அமைவதால் குடியிருப்பு, போக்குரவத்து வசதிக் குறைவுகள் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க ஊரகப் பகுதிகளில் தொழில் அமைய அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1981 மக்கட்தொகை கணக்கெடுப்புப்படி சுமார் 3 (மூன்று) இலட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட பகுதிக்குள்ளும், சென்னையைச் சுற்றி 15 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளும் திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் நகரங்களில் 8 (எட்டு) கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளும் நகரக் கட்டுப்பகுதிக்குள்ளும் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு அரசு வழங்கும் வட்டியில்லா விற்பனை வரிச் சலுகைகள், உதவித் தொகைகள் போன்ற சலுகைகள் வழங்கப்படுவதில்லை. இதன் மூலம் அரசு நகர்ப்புறங்களில் தொழில்கள் அமைவதைத் தடுப்பதுடன், ஊரகப் பகுதிகளில் தொழில் துவங்குவதற்கும் வகை செய்துள்ளது. மாநகரங்கள் மற்றும் நகரங்களுக்கு அப்பால் உள்ள ஊரகப் பகுதிகளில் தொழில்களைப் பரவலாக்கும் நோக்கத்தோடும், தொழில் தொடங்க முன்வரும் முனைவோர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டும், அவர்களுக்கு முதலீட்டு மானியம், விற்பனை வரி விலக்கு, தள்ளுபடி ஆகிய ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு ஊரகத்தில் தொழில் தொடங்குபவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு எல்லா உதவிகளும் அரசு வழங்குகிறது.

(21 ஆம் பட்டியல்)

1—

வெளி மாநிலங்களில் விற்பனையாகும் தமிழக அரசு பரிசுச் சீட்டுகள்.

வினா எண் 9294 - திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநிலங்களில் தமிழக அரசு பரிசுச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிகளில் வெளியாகும் செய்தித் தாள்களில் தமிழக அரசு பரிசுச் சீட்டு குலுக்கல் முடிவுகள் பிரசுரமாகுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

(அ) ஆம்,

(ஆ) ஆம்.

1993 ஏப்ரல் 22]

2—

சிறுசேமிப்புத் திட்டத்துடன் விபத்து காப்புறுதித் திட்டத்தை இணைத்தல்.

வினா எண் 9941—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுசேமிப்புத் திட்டத்துடன் விபத்து காப்புறுதித் திட்டத்தையும் இணைக்க அரசு பரிசீலிக்குமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

சிறு சேமிப்பு திட்டத்துடன் விபத்து காப்புறுதித் திட்டத்தை இணைப்பது தொடர்பான கருத்து எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் போது மற்றும் இறக்கும்போது அளிக்கப்படும் தொகை.

வினா எண் 9943—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சம்பளத்தில் மாதம் ரூ.15, ரூ. 20, ரூ. 25 என்று பிடித்தம் செய்து ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அல்லது இறந்து விட்டால் ரூபாய் ஒரு லட்சம், இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று வழங்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

இல்லை.

4—

சிவகிரி தாலுக்காவில் கிளைச் சிறைச்சாலை ஏற்படுத்துதல்.

வினா எண் 9386—திரு ஆர். ஈஸ்வரன் : மாண்புமி சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

சிவகிரி தாலுக்காவில் கிளைச் சிறைச்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

இல்லை.

5—

சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக மாற்றும் திட்டம்.

வினா எண் 9741—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

சிறைச்சாலைகளில், நல்ல உணவு, நீதிநூல் போதனை, தியாகத் தலைவர்கள் வரலாறு ஆகியவற்றை கைதிகள் அறியுமாறு செய்து அறச் சாலைகளாக மாற்றும் சீர்திருத்தத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

சிறைவாசிகளுக்கு தற்போது நல்லமுறையில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சிறைக்கும் ஒவ்வொரு மதத்திலிருந்தும் இரண்டு மத போதகர்கள் நியமனம் செய்யப் படுகின்றனர். இவ்வாறு நியமனம் செய்யப்படும் நீதி/மதபோதகர்கள் அடிக்கடி சிறைகளுக்குச் சென்று அவரவர்கள் மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளுக்கு நீதி/மத போதனைகள் புரிந்து வருகின்றனர். ஒவ்வொரு சிறையிலும், சிறைவாசிகள் படித்து பயன்பெறுவதற்கென நூலகம் ஒன்று உள்ளது. அந்நூலகத்தில் தியாகத் தலைவர்கள் வரலாறுகள் அடங்கிய நூல்களும் வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்கள் கொண்ட பள்ளிக்கூடமும் இயங்கி வருகிறது. எனவே இம்மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகள் அற சாலைகளாகவே செயல்பட்டு வருகின்றன.

1993 ஏப்ரல் 22]

6—

குலசேகரத்தில் சார்பதிவாளர் அலுவலகம் தொடங்குதல்.

வினா எண் 9060—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படதுவங்கும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

7—

பார்த்திபனூரில் சார்பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்துதல்.

வினா எண் 10721—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் சார்பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பார்த்திபனூரில் சார்பதிவகம் அமைக்க தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை.

8—

சோழவந்தான் தொகுதியில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி ஏற்படுத்துதல்.

வினா எண் 9073—திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

கோவையில் ஓர் கோள் அரங்கு அமைத்தல்.

வினா எண் 9505—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவையில் ஒரு கோள் அரங்கு (Pl netorium) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நிதி நிலைக்கு ஏற்ப விரைவில் நிறுவப்படும்.

10—

ஆவடி அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 9523—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

ஆரணி தொகுதி எஸ். வி. நகரத்தில் கல்லூரி துவங்குதல்.

வினா எண் 9584—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆரணி தொகுதி, எஸ். வி. நகரம் என்னும் ஊரில் போதிய நிலமும் கட்டிடமும் உள்ளதால் இங்கு ஏதாவது ஒரு கல்லூரியை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இல்லை.

12—

கிருட்டிணகிரி நகரத்தில் விளையாட்டு அரங்கம் அமைத்தல்

வினா எண் 9694—திரு. கே. முனிவேங்கடப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி நகரத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

13—

இராஜபாளையம் பகுதியில் அரசுக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 9903—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் பகுதியில் அரசுக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

Computers for preservation of Records

Question No. 10203—Thirumathi K. MARJAMUL ASIA: will the Honourable the Minister for Education be pleased to state

(a) whether the records Offce/Archeves Office at Egmore Madras is to use competers for preservation of records: and

(b) the details there of.

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர்,

இந்தியாவில் உள்ள ஆவணக் காப்பகங்களில் தமிழ் நாடு ஆவணக் காப்பகமும் சிறப்புமிக்க இடத்தைப் பெற்றுள்ளது. 1670 ஆம் ஆண்டு முதலான ஆவணங்கள் பல இங்கு பராமரிக்கப்படுகின்றன. சிப்பாய்க் கலகத்திற்கு முந்தைய ஆவணங்கள் சுதந்திரத்திற்கு முந்தைய ஆவணங்கள் மற்றும் சுதந்திரத்திற்கு பிந்திய ஆவணங்கள் இங்குள்ளன. இவர்றிற்கு பல்வேறு கட்டங்களில் பல அறிஞர்கள், வழிகாட்டிகள்

1993 ஏப்ரல் 22]

(Guides) தயாரித்துள்ளனர். ஆனால் 1935-க்கு பிறகு ஆவணங்களுக்கான வழிக்காட்டிகள் (Guides) எதுவும் தயாரிக்கப்படவில்லை. இத்தகைய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களை முன்னேறியுள்ள விஞ்ஞான முறைப்படி பாதுகாத்தல் மிகவும் அவசியம். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள் தமிழ்நாடு ஆவணகாப்பக ஆவணங்களை ஆராய்ச்சி செய்ய வருகின்றனர். ஆராய்ச்சிக்குரிய அனைத்து ஆவணங்களையும் தேடி எடுக்க சரியான வழிகாட்டிகள் மற்றும் அட்டவணைகள் (Guides and Indices) இல்லாததால் ஆராய்ச்சியின் முடிவுகள் அனைத்தும் தொடர்பு ஆவணங்களின் சாராம்சம் கொண்டதாக அமையபபடாத நிலை ஏற்படுகிறது. இது ஆவணகாப்பக பராமரிப்பின் அடிப்படைக் கொள்கைக்கு தோல்வியாக கருதப்படுகிறது. எனவே வேண்டிய விவரங்களை விரைவில் பெறவும் ஆவணங்களை அழிவின்றி பாதுகாக்கவும் கணிப்பொறி மிகவும் அவசியம் ஆகும்.

2. கணிப்பொறி இயந்திரம் அமைப்பதால் இக்காப்பகம் பின்வரும் நன்மைகளை அடையும் :

(1) ஆராய்ச்சிக்குரிய ஆவணங்களை நொடிப்பொழுதில் அடையாளம் காண இயலும்.

(2) மிகப் பழமையான சிறப்பு வாய்ந்த ஆவணங்களை கலைத்தல் அழியதா ஒன்றாக மாற்ற இயலும்.

(3) கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் தொடர்புள்ள செய்திகளை தேவையான தருணத்தில் அளிக்க இயலும்.

(4) பராமரிப்பு செலவினம் பெரிதும் குறைய வாய்ப்புள்ளது.

3. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் கணிப்பொறி அமைத்து அதன் மூலம் ஆவணங்களை பாதுகாப்பது தொடர்பாக பல்லவன் டிரான்ஸ்போர்ட் கன்சல்டன்சி மற்றும் சி.எம்.சி. நிறுவனத்தினரிடம் கலந்தாலோசிக்கப்பட்டது. சி.எம்.சி. நிறுவனத்தினர் தந்துள்ள அறிக்கையில் (Image Capture) முறையின் மூலம் ஆவணங்கள் அப்படியே Disc-களில் பதியப்படுவதால் அவற்றை பாதுகாக்க ஏதுவாகிறது எனவும், அட்டவணைகளையும் (Index) கணிப்பொறியில் பதிவதால் விரைவில் வேண்டிய ஆவணத்தை பெறலாம் எனவும் தெரிவித்துள்ளனர். இதற்காக செலவினம் ரூ. 2.57 கோடி எனவும் குளிர் சாதன வசதியுடன் கூடிய தனிக் கட்டிடத்தில் கணிப்

பொறி இயந்திரம் அமைக்க செலவினம் தனியே கணக்கிடப் படும் எனவும் தெரிவித்துள்ளனர். மேற்காணும் அறிக்கை யின் அடிப்படையில் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் கணிப் பொறி இயந்திரம் நிறுவுதல் தொடர்பாக கருத்துரு 1993-94 ஆண்டிற்கான திட்டப் பணிகளில் பகுதி-2 திட்டமாக சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

15—

அறிவொளி இயக்கத்தில் அரசு ஊழியர்களை பயன்படுத்துதல்.

வினா எண் 10301— திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அறிவொளி இயக்கத்தின் கீழ் ஆங்காங்குள்ள பள்ளி களில் கற்றுத்தர ஆர்வமுள்ள அரசு ஊழியர்களைப் பயன் படுத்திக்கொள்ள அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) அறிவொளி இயக்கத்தினை செயல்படுத்துவதில் ஆங் காங்குள்ள பள்ளிகளில் கற்றுத்தர ஆர்வமுள்ள அரசு ஊழியர் கள் தற்போது பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆ) எங்கெங்கு இத்தகைய அரசு ஊழியர்கள் முன் வருகிறார்களோ அனைவரின் பணியும் இத்திட்டத்துக்காக பயன் படுத்திக் கொள்ளப்படுகிறது.

16—

சிவகாசி தொகுதியில் பழுதடைந்துள்ள அரசு பள்ளிகளை செப்பனிடுதல்.

வினா எண் 10421— திரு.ஜெ. பாலகங்காதரன் :மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் பழுதடைந்துள்ள அரசு பள்ளி களைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அரசு உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்கு பழுது பார்க்கும் பொருட்டு அரசால் பொதுப் பணித்துறை கணக்கின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), சேப்பாக்கம் அவர்களுக்கு, சிவகாசி தொகுதியிலுள்ள பள்ளிக் கட்டிடங்களை முடிந்தவரை செப்பனிட தகுந்த அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

17—

சிவகெங்கையில் பெண்கள் பள்ளியின் ஆய்வாளர் அலுவலகம் நிறுவுதல்.

வினா எண் 11062—திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் மாவட்டத்திற்கு தனியார் பெண்கள் பள்ளியின் ஆய்வாளர் அலுவலகம் (Inspectors of school) சிவகெங்கையில் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும் ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

18—

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ராஜீவ் காந்தி பெயர் சூட்டுதல்.

வினா எண் 11144—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ராஜீவ் காந்தி பல்கலைக் கழகம் எனப் பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அவ்வாறான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

பொது மருத்துவமனையில் மகப்பேறுக்காக மகளிரை அழைத்து வர தனி ஆம்புலன்ஸ் அனுப்புதல்.

வினா எண். 9133—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மருத்துவமனையில் 24 மணி நேரமும் மகப்பேறுக்காக மகளிரை அழைத்து வர மருந்துகளுடன் தனி ஆம்புலன்ஸ் ஊர்திகளை அனுப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மகப்பேறுக்காக மகளிரை அழைத்துவர என்று மட்டும் தனியாக ஆம்புலன்ஸ் ஊர்திகள் வழங்கும் திட்டம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

20—

செய்யூர் மருத்துவமனையை விரிவுபடுத்துதல்.

வினா எண் 9370—திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது மதுராந்தகம் தொகுதியில் செய்யூர் மருத்துவமனையில் அதிக நோயாளிகள் சிகிச்சை பெறுவதால் இந்த மருத்துவமனையை விரிவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இந்த மருத்துவமனைக்கு புதிய பணி நியமனங்களுக்கும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) செய்யூர் அரசு மருத்துவமனையில் குறைந்த பட்சம் 32 படுக்கைகள் இருக்கும் வகையில் தற்பொழுதுள்ள 22 படுக்கைகளுடன் மேலும் 10 படுக்கைகள் கொண்ட உள்ளிருப்புப் பகுதி கட்டப்படும்.

(ஆ) அதிகப்படியான 10 படுக்கைகள் கொண்ட உள் விருப்புப் பகுதி கட்டி முடித்த பின்பு அதற்கேற்ப புதிய பணி நியமனங்கள் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப் படும்.

21—

தென்னை நார் கழிவினை ஆக்கப்பூர்வப் பணிக்குப் பயன் படுத்துதல்.

வினா எண் 9641—திரு. கா. பூ. முனுசாமி : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டத்தில் தென்னை நார் எடுத்தபின் மிஞ்சும் கழிவு (பட்டை தூள்) மாவட்டத்தின் சாலை யோரங்களில் போடப்பெற்று தீ வைக்கப்படுவதால் சுற்றுப் புறச் சூழல் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அக்கழிவுகளை ஆக்கப்பூர்வமாக வேறு எதற்கும் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தென்னை நார் எடுத்த பின்பு மிஞ்சும் கழிவு நீர் பொதுவாக தொழிற்சாலை நிலத்தில் சேகரிக்கப்பட்டு விவசாயத்திற்காக விற்பனை செய்யப்படுகின்றது. தென்னைக் கழிவினை உரமாக பயன்படுத்தும் வழி முறைகளை பின்பற்ற அரசு நார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

22—

கண் பாதுகாப்பிற்கு மத்திய அரசின் மானியம்.

வினா எண் 9657—திருமதி கே. பழனியம்மாள் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கண் பாதுகாப்பிற்காக மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு நிதியுதவி கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம். கண் பாதுகாப்பிற்காக மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு ஒவ்வொரு நிதியாண்டிலும் மானியம் (நிதி உதவி) பெறப்படுகிறது.

(ஆ) கடந்த ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திலும் நடப்பு எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் மத்திய அரசினால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட மானியம் பின்வருமாறு :

7-வது ஐந்தாண்டு திட்டம்.

	(ரூபாய் இலட்சங்களில்.)
1985-86	31.09
1986-87	32.09
1987-88	33.95
1988-89	22.01
1989-90	17.71

8-வது ஐந்தாண்டுத் திட்டம்.

1990-91	45.95
1991-92	79.19

23—

காவிரியில் கழிவு நீர் கலப்பதைத் தடுத்தல்.

வினா எண் 10162—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காவிரியில் கழிவு நீர் கலப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்,

[1993 ஏப்ரல் 22]

(ஆ) காவிரி ஆற்றில் கழிவு நீரை வெளியேற்றும் தொழிற்சாலைகளின் கழிவு நீரை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்ய வலியுறுத்தப்பட்டும், அக்கழிவு நீர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தில் சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளனவா என்று அறிய கழிவு நீர் மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்தும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தொழிற்சாலைகளைத் தீவிரமாக கண்காணித்து வருகிறது.

24—

பேட்டரி செல்கள் கழிவு நச்சுக்காற்று மூலம், நோய் பரவுவதை தடுத்தல்

வினா எண் 10879— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ஈச்சனாரி அருகே உள்ள பேட்டரி செல்கள் கழிவு நச்சு காற்று மூலம் நோய் பரவுவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஈச்சனாரி ரயில்வேகேட் அருகிலுள்ள அயம் உருக்கு தொழிற்சாலைகளை, தகுந்த காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை பொருத்த அறிவுறுத்தியுள்ளது.

25—

சொகுசு பேருந்து இயக்குதல்.

வினா எண் 9381— திரு. என். ஆர். இராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் நகரிலிருந்து சென்னைக்கு சொகுசு பேருந்து ஒன்று திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகத்தால் விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

26—

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாணவர்களுக்கு தனி சிறு பேருந்து இயக்குதல்.

வினா எண் 9438—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க பெரிய நகரங்களில் காலைநேரங்களில் மாணவர்களுக்கென்று தனியாக சிறு பேருந்துகள் விடப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

27—

அரசுத் தேயிலைத் தோட்டக் கழகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமித்தல்.

வினா எண் 9573—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தின் (TANTEA) நிர்வாகத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

1993 ஏப்ரல் 22]

28—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மழைக் கோட்டும் உல்லன் பனியன்களும் வழங்குதல்.

வினா எண் 9575—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தில் (TANTEA) பணிபுரியும் ஏழைத் தொழிலாளிகள் 3 மாதம் கடுங்குளிரிலும் 5 மாதம் கொடும் மழையிலும் அவதிப்படும் நிலை உள்ளதால் அவர்களுக்கு மழைக் கோட்டும், உல்லன் பனியன்களும் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் இலவசமாக கோட்டுக் கம்பளியும் (Fieldcombly) இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சலுகை விலையில் உல்லன் போர்வையும் (wollen Blankets) வழங்கப்படுகின்றன. ஆகவே மழைக் கோட்டு வழங்கப் படுவதில்லை.

29—

வேலை நிறுத்த நாட்களை விடுமுறை நாட்களாக அறிவித்து ஊதியம் வழங்குதல்.

வினா எண் 9576—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 33 நாட்கள் (2-1-1991) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட (TANTEA) ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அளித்தது போல் வேலை நிறுத்த நாட்களை விடுமுறை நாட்களாக அறிவித்து அதற்குரிய ஊதியம் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) "வேலை இல்லையெனில் ஊதியம் இல்லை" எனும் கொள்கையின் அடிப்படையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 33 நாட்களுக்கு தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

30—

தொழிற்சங்கத் தலைவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் (TANTEA) சங்கத் தலைவர்களுக்கும் வழங்குதல்.

வினா எண். 9577—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏனைய அரசுக் கழகங்களில் தொழிற் சங்க தலைவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் (TANTEA) சங்கத் தலைவர்களுக்கும் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

31—

இருப்பத்தூரில் திருவள்ளுவர் போக்குவரத்து கழகப் பணிமனை அமைத்தல்.

வினா எண். 9617—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 22]

விடை—

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்து அதிக அளவில் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

தற்போது அவசியம் எழவில்லை.

32—

தரகப்பட்டிக்கு அரசு பேருந்து விடுதல்.

வினா எண் 9818—திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா ;—

(அ) திருச்சி மாவட்டம் முசிறி—குளித்தலை—லாலாபேட்டை பஞ்சப்பட்டி—சிந்தாமணிப்பட்டி வழியாக தரகப்பட்டிக்கு அரசு பேருந்து விடப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

33—

வனத்துறையில் திட்டமிடுவதற்கும், திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் பணியாளர்கள உயர்த்துதல்

வினா எண் 11013—திரு எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

(அ) வனத்துறையில் திட்டமிடும் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டும் செயல்படுத்தும் ஊழியர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் திட்டங்களை செயல்படுத்துவதில் குறைபாடுகள் ஏற்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இது குறித்து எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) வனத்துறையில் திட்டமிடுவதற்கும் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் போதிய அளவு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர் எனவே குறைபாடுகள் எதுவும் இல்லை.

34—

பரமத்திவேலூர் தாலுகாவில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

வினா எண் 11190—திருமதி பா. சரஸ்வதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பரமத்திவேலூர் தாலுக்காவில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை (Depot) உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் ;

(அ) ஆம்

(ஆ) பணிமனை அமைக்க தேர்வு செய்யப்பட்ட நிலம் இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமானதால் அந்நிலத்தை விலைக்கு வாங்குவது குறித்து அத்துறையினரோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலத்தின் விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

செங்கத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனை மற்றும் சிற்றுண்டிசாலை அமைத்தல்.

வினா எண். 11193— டாக்டர் பெ, வீரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

1993 ஏப்ரல் 22]

(அ) செங்கத்தில் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 'டெப்போ' மற்றும் 'சிற்றுண்டிசாலை' அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் செங்கத்தில் ஒரு பணிமனை (D pot) அமைக்க தக்க நிலத்தினை தேர்வு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, ஆனால் சாலையோர சிற்றுண்டி சாலை அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை,

36—

ஏழாயிரம் பண்ணைக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் 11258—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியிலிருந்து ஏழாயிரம் பண்ணைக்கு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன். போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போதிய பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது.

37—

திருச்சி நகரில் விரைவுப் பேருந்து இயக்குதல்,

வினா எண் 11500—டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(அ) திருச்சி நகரத்தில் விரைவுப் பேருந்து விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ செங்கோட்டையன். போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

38—

வேலூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக பணிமனை துவக்குதல்.

வினா எண் 11516—திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பணிமனை (டிப்போ) ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர், :

ஆம்,

39—

கனியூர் ஊராட்சியில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து பிரிவு அமைத்தல்,

வினா எண் 11802—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் மகாதேவி தொகுதி கனியூர் ஊராட்சியில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக பாபநாசம் கிளை நகரப் பேருந்துகள் பிரிவு அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

1993 ஏப்ரல் 22]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் செயல் படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: போக்கு வரத்துத்துறை அமைச்சர்:

(அ) ஆம்,

(ஆ) நிதி நிலைமை அபிவிருத்தி அடைந்தவுடன் பணிமனை கட்டுமான பணிகள் தக்க சமயத்தில் மேற்கொள்ளப் படும்.

40—

காலகம் ஊராட்சி மிதியக்குடிக்காட்டில் தெருவிளக்கு மின் கம்பங்கள் அமைத்தல்.

வினா எண் 7262—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம். பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி மிதியக்குடிக் காட்டில் தெரு விளக்கு மின் கம்பங்கள் நடப்பட்டதில் மின் இணைப்பு தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம். காலகம் ஊராட்சி மிதியக்குடிக் காட்டில் 7 (ஏழு) தெருவிளக்குகள் பொறுத்தப்பட்டு ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து விளக்குகளும் நல்ல முறையிங் இயங்கி வருகின்றன.—மேற்குறிப்பிட்ட பகுதியில் கூடுதலாக 13 தெரு விளக்குகளைப் பொருத்தும் மின் விஸ்தரிப்புப் பணிகள் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் 1992-93-க்குள் நிறைவேற்றப்படும்,

41—

எழுத்தனிவயல் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்

வினா எண் 7274—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பாலத்துளி ஊராட்சி எடத்தனிவயல் குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், பாலத்துளி ஊராட்சி, எழுத்தனி வயல் குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்குக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் மின்வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

42—

காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை போதிய அளவு செய்தல்.

வினா எண் 8013—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

காடாம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை போதிய அளவில் செய்யப்படுகின்றதா என்பதை அறிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

காடாம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை போதிய அளவில் செய்யப்படுகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

43—

மணிமுத்தாறு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக கையகப்படுத்தப் பட்ட நிலத்தின் பரப்பு இழப்பீடு விவரம்.

வினா எண் 8096—திரு. ஆர். முருகையா பாண்டியன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

அ) மணிமுத்தாறு நீர்த் தேக்கம் கட்டுவதற்கா கையகப் படுத்தப்பட்ட நிலத்தின் மொத்த பரப்பு எவ்வளவு

(ஆ) இந்நிலத்திற்கு இழப்பீடுத் தொகை கொடுக்கப் பட்டதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு நிலத்திற்கு கொடுக்கப் பட்டது ?

(ஈ) இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டிய நிலத்தின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) 2656.56 ஏக்கர்.

(ஆ) ஆம்.

(இ) 2696.99 ஏக்கர் நிலத்திற்கு ரூபாய் 7,36.022.43 இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) கிடைக்கக்கூடிய கோப்புகளிலிருந்து இனியும் கொடுக்க வேண்டுமென்று தகவல்கள் இல்லை.

44—

இளையான்குடி தொகுதியில் தெருவிளக்குகள் இயல்பான இயக்கத்தில் இருக்க புதிய மின் மாற்றிகள் அமைத்தல்.

வினா எண் 8108—திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

இளையான்குடி தொகுதியில் கடற்கரைப் பகுதியிலும் சில கிராமப் பகுதியிலும் தெரு விளக்குகள் பிரகாசமாக எரிய புதிய மின் மாற்றிகள் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இளையான்குடி தொகுதியில் தெருவிளக்குகள் இயல்பான இயக்கத்தில் இருப்பதற்கு தேவையான புதிய மின் மாற்றிகள் அமைப்பது மற்றும் கூடுதல் திறன் கொண்ட மின் கம்பிகள் போன்ற மேம்பாட்டு பணிகளுக்காக ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.—மேலும் இளையான்குடித் தொகுதியின் மின் அழுத்தம் இயல்பாக அமையும் பொருட்டு சாலைக் கிராமத்தில் 66-11 கே. வி. துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப் புதிய துணை மின் நிலையம் இத் தொகுதியில் இயக்கத்தில் வந்தவுடன் மின் சக்தி வழங்குதல் சீராக இருக்கும்.

45—

வாணக்கல் காட்டிலிருந்து சுருக்கா குறிச்சி வரை செல்லும் தார் சாலையை செப்பனிடுதல்.

வினா எண் 8219—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியத்தில் வாணக்கால் காட்டில் இருந்து சுருக்காகுறிச்சி வரை செல்லும் தார் சாலையை பழுதடைநது இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்தத் தார் சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) செப்பனிடும் பணி நடைபெற்று வருகிறது.

46—

பேர்ணாம்பட்டில் பம்பு செட்டுகளுக்கு கூடுதலாக மின் இணைப்புகள் தர நடவடிக்கை.

வினா எண் 8448—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

1993 ஏப்ரல் 22]

பேர்ணாம்பட்டில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகள் கூடுதலாக தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பம்பு செட்டுகளுக்கு பதிவு வரிசையின் அடிப்படையில் தரப்படுவதால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்டு தோறும் தகுந்த இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படுவதால் பேர்ணாம்பட்டில் பம்புசெட்டு களுக்கு மின் இணைப்புகள் கூடுதலாக தர திட்டம் ஏதும் இல்லை.

47—

கங்கை கொண்டான் கிராமத்தின் ஊரிலிருந்து தெற்கே செல்லும் பாதையில் இடிந்த பாலத்தை செப்பனிடுதல்.

வினா எண் 8704—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் கங்கை கொண்டான் கிராமத்தில் ஊரிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் ரோட்டில் உள்ள பாலம் இடிந்து கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) :

திட்டம் ஏதுமில்லை.

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கங்கை கொண்டான் நகர்ப் பகுதி சாலை (பழைய தேசிய நெடுஞ்சாலை எண் 7, கி.மீ. 130/8-132/(8) என்கின்ற மாநில நெடுஞ்சாலை யில் கி. மீ. 132/8-ல் உள்ளது. மேற்காணும் நகர்ப்புற சாலையில் போக்குவரத்து மிகவும் குறைவாக உள்ளதாலும், தற்போது

போக்குவரத்து கங்கை கொண்டான் இராஜாதி சாலை வழியாக தங்கு தடையின்றி சென்று வருவதாலும், சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பாலத்தை தற்போது திரும்பக் கட்டும் அவசர அவசியம் இல்லை மேலும், திட்டப் பணிகளுக்கு மிகக் குறைந்த நிதி ஆண்டு தோறும் ஒதுக்கப்படுவதால் அண்மையாண்டுகளில் இப் பாலத்தை திரும்பக் கட்டும் சாத்தியமும் இல்லை.

48—

வலையப்பட்டி பகுதி பாலமேடு அருகில் பாலம் கட்டும் திட்டம்.

வினா எண். 9098—திரு. எம். பரமசிவன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் பாலமேடு வலையப்பட்டி பகுதி நெடுஞ்சாலை அருகில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

திட்டம் ஏதும் இல்லை.

49—

லாலாப்பேட்டை ரயில்வே கிராசிங்கில் மேம்பாலம் கட்டுதல்.

வினா எண் 9222—திரு. ஏ. பாப்பாசுந்தரம் மற்றும் திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நாகப்பட்டிணம் கடலூர் நெடுஞ்சாலை லாலாப் பேட்டை ரயில்வே கிராசிங்கில் மேம்பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள செயற் றிகுப்பு ஏதும் அரசிடம் இல்லை.

1993 ஏப்ரல் 22]

50—

பழனி நகரிலிருந்து பாலசமுத்திரம் செல்லும் சாலையை செப்பனிடல்.

வினா எண் 9431—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரிலிருந்து பாலசமுத்திரம் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை மராமத்து செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இச்சாலையில் கி. மீ. 0/0-4/0(4/0) வரை மழை காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்களை சீர் செய்து, சாலை நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

51—

ஆயக்குடியிலிருந்து பழனிநகர் வரையுள்ள நெடுஞ்சாலையை பழுது பார்த்தல்.

வினா எண் 9435—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பழைய ஆயக்குடியிலிருந்து பழனி நகர் வரையுள்ள நெடுஞ்சாலை, பழுதடைந்த நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

52—

விருத்தாசலம் முதல் வி.கூட்டுரோடு வரையுள்ள சாலையை பழுது பார்த்தல்.

வினா எண் 9437—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில், கடலூர் விருத்தாசலம்-சேலம் (சி. வி. எஸ். சாலை) சாலையில், விருத்தாசலம் முதல் வி.கூட்டுரோடு வரை, பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர் செய்வதுடன், அகலமான சாலையாக மாற்ற அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சீர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

53—

பம்பு செட்டிற்கு மின் இணைப்பு வாங்க கட்ட வேண்டிய தொகையைக் குறைக்கும் திட்டம்.

வினா எண் 9619—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் மற்றும் திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கிராமப் புறங்களில், பம்ப் செட்டிற்கு மின் இணைப்பு வாங்க ரூ. 25,000 கட்ட வேண்டும் என இருப்பதை, ஏழைகளின் நலன் கருதி, அத்தொகையை குறைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

கிராமப்புறங்களில் சாதாரண முன்னுரிமை அடிப்படையில் விஸ்தரிப்புக் கட்டணம் ஏதும் பெறப்படாமல், தொடர்ந்து பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு முன்னுரிமையில், மின் இணைப்பு பெற வேண்டுமென விரும்பினால் மின் விஸ்தரிப்பிற்காக ஆகும் செலவினையோ அல்லது ரூ. 25,000, இவை இரண்டில் எது அதிகமோ அதை ஏற்க முன் வந்தால், மின் இணைப்பு உடன் தரப்படுகிறது. இத்தொகையினைக் குறைக்க, திட்டம் ஏதுமில்லை.

54—

மூதறிஞர் இராஜாஜி மண்டபத்தை பழுதுபார்த்தல்.

வினா எண் 9958—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் தோட்டத்திலுள்ள, சரித்திரப் புகழ் வாய்ந்த, மூதறிஞர் இராஜாஜி மண்டபத்தை, பழுது பார்த்துப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

ஆம்.

[1993 ஏப்ரல் 22

55—

மேட்டுப்பாளையம்—கோவை சாலையில் அமைந்துள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

வினா எண் 10035—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியநாயக்கன் பாளையம், அரசு அச்சகக் குடியிருப்பின் அருகே, மேட்டுப்பாளையம்-கோவை சாலையில் அமைந்துள்ள பாலத்தை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

56—

காஞ்சிபுரத்தில் பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டுதல்.

வினா எண் 10040—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில், பாலாற்றின் குறுக்கே உள்ள தரைப் பாலம், மழைக்காலங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தப் பாலத்தின் குறுக்கே மேம் பாலம் அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தரைப் பாலத்தை மேம்பாலம் ஆக்க திட்டம் ஏதும் இல்லை.

1993 ஏப்ரல் 22]

57—

கட்டிடம் மற்றும் சாலைகள் ஒப்பந்தம் பெறும் ஒப்பந்தக்காரர்களிடம் உத்திரவாதம் பெற அரசு நடவடிக்கை.

வினா எண் 10231—திரு. எஸ். எஸ். இராமசுப்பு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் மூலமாக கட்டிடம் மற்றும் சாலைகள் ஒப்பந்தம் பெறும் ஒப்பந்தக்காரர்களிடம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உத்திரவாதம் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: —

இதுகுறித்து ஏற்கெனவே நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

58—

பச்சைமலை ஓடைக்காட்டுப்புத்தூர் பகுதியில் III-பேஸ் மின் லைன் அமைக்க நடவடிக்கை.

வினா எண் 10270—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், பச்சைமலை ஓடைக்காட்டுப்புத்தூர் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் அங்கே III-பேஸ் லைன் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(அ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஓடைக்காட்டுப்புத்தூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 63 கே. வி. ஏ/11, கே. வி. பகிர் மாற்றங்கள் மூலம் இப்பகுதியில் ஏற்கெனவே மும்முனை மின்சாரம் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

59—

கிருட்டிணகிரியில் 110 கி. வா. மின் திட்டம் நிறைவேற்றல்.

வினா எண் 10655—திரு. கி. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரியில் அமைய இருக்கும் 110 கி. வா. மின் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்.

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

கிருட்டிணகிரியில் 110 கி. வா. துணை மின் நிலையம் நிறுவப்பட்டு, 28-3-1992-இல் இருந்து இயக்கி வைக்கப் பட்டது.

60—

காவிரி ஆற்றில் மெட்ரிகுலேர் கட்டி மின்சாரம் தயாரிக்க நடவடிக்கை.

வினா எண் 11431— திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஒன்றியத்தில், காவிரி ஆற்றில் மெட்ரிகுலேர் கட்டி, மின்சாரம் சிறிய அளவில் தயாரிக்க இயலும் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : காவிரியாற்றின் குறுக்கே மோகனூருக்கு அருகில், சிறிய தடுப்பு அணை (Bed Regulator) கட்டி, காவிரியில் பாயும் நீரினை பயன்படுத்தி, மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் எதுவும் தற்போதைக்கு தமிழ்நாடு மின் வாரியத்தில் பரிசீலனையில் இல்லை.

1993 ஏப்ரல் 22]

61—

சோழவந்தான் தேர்வுநிலை பேரூராட்சி நிதியிலிருந்து அங்காடி வளாகம் கட்டும் திட்டம்.

வினா எண் 9070—திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சோழவந்தான் தேர்வுநிலை பேரூராட்சி நிதியில் இருந்து, அங்காடி வளாகம் கட்டவும், தினசரி சந்தை ஏற்படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சோழவந்தான் பேரூராட்சியில், ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர வளர்ச்சித் திட்டத்தின் (IDSMT)-ன் கீழ், மேற்கண்ட திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

62—

கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை.

வினா எண் 9102—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் பற்றாக் குறையைப் போக்க, அத்திக்கடவு குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்தி, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு குடிதண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விரிவுபடுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் பற்றாக் குறையைப் போக்க அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்தை ஜூன் 1993-க்குள் முடித்து பயனுக்குக் கொண்டு வர உத்தேசித்து வேலைகள் நடை பெற்று வருகின்றன.

63—

அத்திக்கடவு திட்டத்தில் குருடம்பாளையம், அசோகபுரம் ஊராட்சியை இணைத்தல்.

வினா எண் 9145— திரு. வி.கே. லட்சுமணன் : மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தில் குருடம்பாளையம் ஊராட்சியையும், அசோகபுரம் ஊராட்சியையும் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் பில்லூர் (அத்திக்கடவு) குடிநீர்த் திட்டத்தில் கோவை மாவட்டத்தில் உள்ள 523 கிராம குடியிருப்புகளுக்கு குடி நீர் வழங்கும் திட்டத்தில் குருடம்பாளையம் ஊராட்சியும், அசோகபுரம் ஊராட்சியும் சேர்க்கப்பட்டு குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

64—

மேட்டூர்— மாசிலாபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தி லிருந்து புதிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குதல்.

வினா எண் 9250— திருமதி எஸ். சுந்தராம்பாள் : மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள சித்திரப்பட்டி, கண்ணாமூச்சி, ஆலமரத்துப்பட்டி, பண்ணவாடி ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஊர்களுக்கு மேட்டூர் மாசிலாபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்து த்ண்ணீர் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மேட்டூர்— மாசிலாபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து புதிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

65—

சிந்தாதரிப்பேட்டை மக்களுக்கு ஒரு வாட்டர் டேங்க் அமைத்தல்.

வினா எண் 9257— திருமதி ஜீனத் ஷெர்புதீன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிந்தாரிப்பேட்டை மக்களுக்குக் குடிநீர் வழங்க நேப்பியர் பார்க்கில், ஒரு வாட்டர் டேங்க் (water tank) அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இல்லை.

66—

திருநின்றவூர் பேரூராட்சிக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுதல்.

வினா எண் 9521— திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(அ) பூந்தமல்லி தொகுதி, திருநின்றவூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி துவக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): திருநின்றவூர் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல் படுத்துவதற்காக ரூ. 226.88 லட்சத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ள உத்தேச மதிப்பீடு குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

67—

சிவகாசியில் கழிவுநீர் சுத்திகரிப்புக்கு இடம் கையகப்படுத்துதல்.

வினா எண் 9851— திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் கழிவு நீர் சுத்திகரிப்புக்கு இடம் கையகப்படுத்தப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு செலவு செய்து, எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இடம் இன்னும் கையகப்படுத்தப்படவில்லை.

(ஆ) இத்திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது. இதற்கான மதிப்பீடு இன்னும் தயாரிக்கப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

68—

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனி அறைகட்டி, தனி எழுத்தர் நியமித்தல்.

வினா எண். 9861—திரு. ஏ.டி. செல்லச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென தனி அறை கட்டவும் ஒன்றிய பெருந்தலைவர்களுக்கு உள்ளதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களின் பணிக்கு உதவியாக தனி எழுத்தரை நியமனம் செய்யவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென தனி அறை கட்டவும், ஒன்றிய பெருந்தலைவர்களுக்கு உள்ளது போல் சட்டமன்ற உறுப்பினர்கள் பணிக்கு உதவியாக தனி எழுத்தரை நியமனம் செய்யவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இலலை.

69—

சிவகாசி நகராட்சிக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்குதல்.

வினா எண் 10685—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசிக்குத் தாமிரபரணி ஆற்றில் இருந்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சிவகாசி நகராட்சிக்குத் தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

70—

நியாய விலைக்கடைகளில் எல்லோருக்கும் ஒரே மாதிரி மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை.

வினா எண் 9085—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகர், நகர்ப்புறம், கிராமப்புறம் எனப் பிரித்து மண்ணெண்ணெய் விநியோகிப்பதை மாற்றி நியாய விலைக் கடைகளில் எல்லோருக்கும் ஒரே மாதிரி விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்த முடியும் ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மாநகரில் வசிக்கும் மக்கள், நகர்ப்புற மக்கள் மற்றும் கிராமப்புற மக்கள் ஆகியோர் உபயோகிக்கும் விதத்தைப் பொறுத்து, தேவைப்படும் மண்ணெண்ணெயின் அளவுகளில் வேறுபாடு உள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு, நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவு அவ்வப்பகுதிக்கு தக்கவாறு வித்தியாசமான அளவுகளில் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒரே மாதிரி அளவு வழங்க இயலாது.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

71—

உணவு தானியங்களின் மொத்த வியாபாரத்தை தனியார் செய்து வருவதை தடை செய்தல்.

வினா எண். 9550—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உணவு தானியங்களின் மொத்த வியாபாரத்தை தனியார் செய்து வருவதை தடை செய்து அரசே ஏற்று நடத்த முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கோ. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

இதுபோன்ற செயற்குறிப்பு ஏதுமில்லை.

72—

கோதுமை உபயோகத்தை மக்களிடையே பிரபலப்படுத்துதல்.

வினா எண். 10352—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோதுமை உபயோகத்தை மக்களிடையே பிரபலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கோ. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கோதுமையின் உபயோகத்தை பொதுமக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் கோதுமைக்கு நன்றி என்ற செய்திப்படம் ஏற்கெனவே எடுக்கப்பட்டு திரையரங்குகளில் திரையிடப்பட்டது. கோதுமையின் பயன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பற்றிய மற்றுமொரு விளக்கப்படமும் அதன் பயன்களும் சுற்றிய துண்டுப் பிரசுரம் வெளியிடும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

73—

இராஜபாளையம் தொகுதிக்கு ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்.

வினா எண். 11408—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதிக்கு ஒரு தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ் இராஜபாளையத்தில் பெண்களுக்கு என ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் வேண்டப்பட்டுள்ளது.

74—

வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு வீடுகளை பராமரித்தல்.

வினா எண். 11580—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு வீடுகள் ஆண்டுதோறும் தவறாமல் பராமரிக்கப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தேயிலைத் தோட்ட நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தினரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீடுகள் ஆண்டுதோறும் தவறாமல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வீடுகளில் ஏதேனும் பழுதுகள் இருந்து சரிசெய்யப்படாவிடில், அதன் விவரத்தினை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் நேரிலோ, எழுத்து மூலமாகவோ அல்லது தொழிற் சங்க பிரதிநிதிகள் மூலமாகவோ தெரிவிக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட தோட்ட நிறுவனத்திற்கு தோட்ட நிறுவனங்கள் ஆய்வாளர் நேரிடையாக சென்று ஆய்வு செய்து தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகள் - விதி 48-ன் கீழ் உரிய நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகளில் உள்ள பழுதுகளை சரி செய்து கொடுக்கவும் மற்றும் பராமரிப்பு வசதிகள் யாவும் செய்து கொடுக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

75—

பிளாண்டேஷன் அட்வைசரி போர்டு அமைப்பு பற்றிய விவரங்கள்.

வினா எண் 11583—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பிளாண்டேஷன் அட்வைசரி போர்டு என்ற அமைப்புப் பற்றிய விவரங்கள் என்ன?

(ஆ) இந்த அமைப்பில், தொழிலாளர் நிறைந்த சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை உறுப்பினராக நியமிக்க அரசிடம் செயற்குறிப்ப உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) தோட்டத் தொழிலாளர் சட்டம் பிரிவு 15-ன் கீழ் 6 மாதத்திற்கு தொடர்ச்சியாக பணிபுரிந்து எழுத்து மூலம் தனக்கு வீடு அளிக்கக்கோரி விண்ணப்பித்த ஒவ்வொரு தொழிலாளருக்கும் வேலையளிப்பவர் வீடு அளிக்க வேண்டும்

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 16-ன் கீழ் ஒவ்வொரு மாநில அரசும் தொழிலாளருக்கு அளிக்க வேண்டிய வீட்டின் அமைப்பு மற்றும் வீட்டிற்குரிய வாடகை நிர்ணயித்தல் ஆகியவற்றை குறித்து விதிகள் அமைக்கலாம்.

பிரிவு 16 (சி)ன் கீழ் ஒவ்வொரு மாநில அரசும் நிர்வாகம் தொழிலாளர் மற்றும் அரசு பிரதிநிதிகள் கொண்ட தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி குறித்து ஆலோசனை வழங்க அமைக்கவும் மற்றும் இக்குழுவின் அதிகாரம் செயல்பாடுகள் குறித்து விதிகள் அமைக்கவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1955 ஆம் ஆண்டின் தமிழ்நாட்டின் தோட்டத் தொழிலாளர் விதிகளின் 54-ன் ஷரத்தில் இவ்வாலோசனை குழுவின் அமைப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. இத்துறையைச் சார்ந்த அரசு செயலாளரோ அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கூடுதல் செயலாளரோ அல்லது இணை செயலாளரோ இக்குழுவின் தலைவராவார்.

2. தோட்ட நிறுவனங்களின் தலைமை ஆய்வாளர் இக்குழுவின் செயலாவராவார்.

3. தொழிலாளர் ஆணையர் உட்பட அரசால் நியமிக்கப்படுகிற 4 அரசு அலுவலர்கள்.

4. கலந்தாலோசனை அடிப்படையில் 4 நிர்வாகங்கள் மற்றும் 4 தொழிலாளர்கள் பிரதிநிதிகள்.

விதி 53 முதல் 58 வரை இந்நியமன உறுப்பினர்கள் பற்றி வரையறுக்கப்பட்டுள்ளது. விதி 55 முதல் விதி 65 வரை இவ்வாலோசனைக்குழு கூட்டம் பற்றிய நடைமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

விதி 66 ஆலோசனைக்குழு கூட்டத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்ததாகும். ஆக தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனைக்குழு அவ்வப்போது மாநில அரசுக்குத் தொழிலாளர் வீட்டு வசதிகள் குறித்து தரம் மற்றும் தனிக்குறிப்பு குறித்து ஆலோசனை வழங்கும்.

1993 ஏப்ரல் 22]

(ஆ) தோட்டத் தொழிலாளர் சட்டத்திலோ அல்லது தோட்டத் தொழிலாளர், விதிகளிலோ தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனைக் குழுவில் ஒரு சட்ட மன்ற உறுப்பினரை நியமிக்க, குறிப்பாக ஏதும் கூறப்படவில்லை. மேற்படி ஆலோசனைக் குழுவில் நான்கு தொழிலாளர் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர். சில சமயங்களில் தொழிலாளர்களின் பிரதிநிதி ஒரு சங்க தலைவராகவோ செயலாளராகவோ இருக்கும் பட்சத்தில் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தால், அப்போது சட்ட மன்ற உறுப்பினர் இக்குழுவில் இடம்பெறலாம். எனவே, ஒரு சட்டமன்ற உறுப்பினரை இக்குழுவில் இடம்பெறச் செய்ய சட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை. தற்போதுள்ள தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி வாரியம் அரசாணை எண். 311, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 11—11—1991-ன் படி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

76—

பரமக்குடி தொழிலாளர் பயிற்சி நிலையத்தில் பெண்களுக்கு தையல், தொலைக் காட்சி தொழில் நுட்ப பயிற்சியளித்தல்.

வினா எண் 11675— டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொழிற் பயிற்சி நிலையத்தில் பெண்களுக்கு தையல் பயிற்சி, தொலைக் காட்சி—தொழில் நுட்ப பயிற்சியளிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பெண்களுக்கு தையல் பயிற்சி தொலைக்காட்சி— தொழில் நுட்ப பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

கோயமுத்தூர் நகைத் தொழிலாளர்கள் நவீன பயிற்சி பெற தொழிற் பயிற்சி நிலையம் அமைத்தல்.

வினா எண் 11822— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

கோயமுத்தூரில் நகைத் தொழிலாளர்கள் நவீன பயிற்சி பெற தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

இல்லை.

78—

தொழிற் சங்க பிரதிநிதிகள் தொழிலாளர் நலவாரியம் அமைத்தல்.

வினா எண் 11880— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் சங்க பிரதிநிதிகள் தொழிலாளர் நல வாரியம் அமைத்து சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து தனியார் கம்பெனிகளில் உள்ள குறைபாடுகளை போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வாரியம் அமைக்கப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) தற்போது தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தொழிலாளர் நல வாரியம் அமைத்து சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து தனியார் கம்பெனிகளில் உள்ள குறைபாடுகளை போக்க நடவடிக்கை எடுக்க முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

1993 ஏப்ரல் 22]

79—

மத்திய அரசின் வேளாண்மைத் துறை மூலம் தமிழகத்தில் வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்.

வினா எண் 9296—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் வேளாண்மைத் துறை மூலம் தமிழகத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

80—

டிராக்டர் வாங்க விவசாயிகளுக்கு மானியத்துடன் கடன் வழங்குதல்.

வினா எண் 9452—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் டிராடக்டர் வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கி கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இல்லை,

81—

Biopesticides Unit in Tamil Nadu Agricultural University.

Question No. 9630 THIRUMATHI K. MARIYAMULASIA: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) Whether any Biopesticides Unit has been commissioned at the Tamil Nadu Agricultural University in Coimbatore now; and

(b) the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அகில இந்திய உயிரியல் ஒருங்கிணைப்புக் கழகம், புதுடில்லி (Bio-tech Consortion India Limited) நிறுவனத்தின் நிதியுதவியுடன் இரண்டு உயிரியல் பூச்சிக்கொல்லிகள் தயாரிக்கும் நிலையங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோவையிலும், மதுரை வேளாண் கல்லூரியிலும் 5-3-1992-லிருந்து தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

82—

வெற்றிலை கொடிகளைப் பயிரிடும் விவசாயிகளுக்கு தொழில் நுட்பப் பயிற்சி வழங்குதல்.

வினா எண் 9794— திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியில் வெற்றிலை கொடிக்கால் பயிரிடும் விவசாயிகள் அதிகம் உள்ளதால் பாதிக்கப்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன். வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம்,

(ஆ) வெற்றிலை கொடிகளைப் பயிரிடும் விவசாயிகளுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கி விவசாயிகள் பாதிக்கப்படாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது,

83—

கூட்டுறவு முறையில் தோட்டக்கலைப் பயிரிடும் விவசாயிகள் சங்கத்திற்கு ஆதரவு தரும் திட்டம்,

வினா எண் 9798—திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு முறையில் தோட்டக்கலைப் பயிரிடும் விவசாயிகள் சங்கத்திற்கு ஆதரவு தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா —

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன். வேளாண்மைத் துறை அமைச்சர் :

கூட்டுறவு முறையில் தோட்டக்கலை சாகுபடி தமிழ் நாட்டில் எங்கும் வழக்கத்தில் இல்லை, விவசாயிகள் கூட்டுறவு சங்கம் மட்டுமே உள்ளது. தமிழ் நாட்டிலுள்ள தோட்டக் கலை விவசாயிகளுக்கு மானிய விலையில் பழ மரக்கன்றுகள், காய்கறி விதைகள். தொழில் நுட்ப உத்திகள் ஆகியவை பல்வேறு திட்டங்களின் மூலம் தோட்டக்கலைத் துறையினால் அளிக்கப்படுகின்றது.

84—

மோகனூரில் விதைக் கரணைக் கரும்பு உற்பத்திப் பண்ணை அமைத்தல்.

வினா எண் 10502—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் சர்க்கரை ஆலையின் மூலமாக கூட்டுறவுக் கரணை பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை,

85—

விழுப்புரத்தில் விவசாயக் கல்லூரி துவங்கும் திட்டம்,

வினா எண் 10649—திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் விவசாயக் கல்லூரி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்.

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) விழுப்புரத்தில் விவசாயக் கல்லூரி துவங்க தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

86—

சென்னையில் உள்ள குடிசைப்பகுதி மாற்றுவாரிய பழுது அடைந்துள்ள திட்டப்பகுதிகள்.

வினா எண் 10578 —திரு. எம்.கே. பாலன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள குடிசைப்பகுதி மாற்று வாரிய பழுது அடைந்துள்ள திட்டப்பகுதிகள் எத்தனை?

(ஆ) இவ்வாண்டு பழுது அடைந்த திட்டப்பகுதிகளுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) 129

(ஆ) இவ்வாண்டு (1992–93) ரூ. 455 லட்சம் பழுது அடைந்த திட்டப்பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

87—

சத்துணவுத் திட்டத்தைக் கண்காணிக்க ஒவ்வொரு மையங்களிலும் கண்காணிப்புக் குழு அமைத்தல்.

வினா எண் 9243— திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுத் திட்டத்தை கண்காணிக்க ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் கண்காணிப்புக் குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சத்துணவுத் திட்டத்தை கண்காணிக்க கிராம அளவிலும் மாவட்ட அளவிலும் கண்காணிப்பு குழு அமைப்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

88—

செங்கத்தில் ஆதி திராவிட மாணவர்களுக்கென தனியாக மேல் நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம்.

வினா எண் 9596—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கத்தில் ஆதி திராவிட மாணவிகளுக்கென தனி யாக மேல்நிலைப்பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

89—

வங்காரம் காலனி ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை.

வினா எண் 10600—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வங்காரம் காலனி, ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில் வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு நட வடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம் ஆனந்தன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு துரிதமாக நட வடிக்கை எடுத்து வருகிறது.

1993 ஏப்ரல் 22]

90—

தமிழ்நாட்டில் மாவட்ட நலத்துறை அதிகாரியே மாவட்ட வருவாய் அதிகாரியாக செயல்படும் திட்டம்.

வினா எண். 10855—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—:

(அ) தமிழ்நாட்டில் மாவட்ட நலத்துறை அதிகாரி மாவட்ட வருவாய் அதிகாரியாக செயல்பட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

91—

தீண்டாமையை ஒழிக்கவும் அதை தீவிரபடுத்தவும் அரசின் சிறப்பு செயற்குறிப்பு.

வினா எண். 10866—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாபரா:—

தீண்டாமை ஒழிக்கவும் அதை தீவிரப்படுத்தவும் அரசிடம் ஏதேனும் சிறப்பு செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

ஆம். உள்ளது.

தமிழ்நாட்டில் தீண்டாமையை ஒழிக்க அரசு பல ந வடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆதிதிராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் களைய குடியியல் உரிமைகள்

பாதுகாப்புச் சட்டம், 1955 தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோன்று ஷெட்யூல்ட் வகுப்பினர் மற்றும் ஷெட்யூல்ட் பழங்குடியினர் (கொடுமைகள் தடுக்கும்) சட்டம், 1989-லும் தற்போது தீவிரமாக அமல்படுத்தப்படுகிறது.

92—

மேட்டூர் அணையில் மீன்பிடிப்பதற்கு மீனவர்களுக்கு புதிதாக மீன்பிடி உரிமங்கள் வழங்கும் திட்டம்.

வினா எண் 9062—திருமதி செ. சுந்தரம்பாள் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு புதிதாக உரிமம் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் அணையில் மீன்பிடிப்பதற்கு மீனவர்களுக்கு புதிதாக மீன்பிடி உரிமங்கள் வழங்க இயலாது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

93—

கிராமணியார், நாடார் இனத்தவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண் 9689—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமணியார், நாடார் இனத்தவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

1993 ஏப்ரல் 22]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போது இயலாது.

94—

கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் பகுதி மீனவர் குடும்பங்களுக்கு வசிக்க மாற்று இடம் அமைத்தல்.

வினா எண் 9749—திரு. க. குப்பன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள திருவொற்றியூர் பகுதி மீனவர் குடும்பங்களுக்கு வசிக்க மாற்று இடம் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) எண்ணூரிலுள்ள கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான நிலத்தை கடலரிப்பால் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் நல்ல தண்ணீர் ஓடைகுப்ப மீனவர்களுக்கு வாங்கி குடியிருக்க வழங்குமாறு அம்மீனவர்கள் கோரியிருந்தார்கள். மேற்கூறிய இடத்தில் உயர்தரமான சிலிகா மணல் இருப்பு உள்ளது. இந்தியா, பூட்டான் மற்றும் நேபாளத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சிமெண்ட்டை ஆய்வு செய்வதற்கு அச்சிலிகா மணல் தேவைப்படுவதால் அதிக கிராக்கி உள்ளது. எனவே, இவ்விடத்தை மீனவர்களுக்கு மாற்றுக் குடியிருப்புக்கு வழங்கவோ அருகாமையில் குடியமரத்தக்க துறை நிலமோ மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களோ இல்லை.

[1993 ஏப்ரல் 22

95—

திருச்சினாங்குட்டம் மீனவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டம்.

வினா எண் 9750—திரு. க. குப்பன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவொற்றியூர் தொகுதி திருச்சினாங்குட்டம் பகுதி மீனவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டித்தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) திருச்சினாங்குட்டம் பகுதி மீனவர்களுக்கு அடுக்கு மாடி குடியிருப்பு கட்டித்தர கட்டுமானப்பணி தொடர்பாக மறு டெண்டர் கோரப்பட்டுள்ளது. டெண்டர் முடிவு செய்து, அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர், பணி துவங்கப்படும்.

96—

பொருளாதார அடிப்படையில் முற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என்ற அடிப்படையில் சலுகைகள் வழங்குதல்.

வினா எண் 10128—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொருளாதார அடிப்படையில் முற்படுத்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் என்ற அடிப்படையில் சலுகைகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும மீனளத் துறை அமைச்சர் :

(அ) இல்லை,

(ஆ) இவ்வினா எழவில்லை,

1993 ஏப்ரல் 22]

97—

சேத்தியாதோப்பு பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு பெண்கள் விடுதி அமைத்தல்,

வினா எண் 10572—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேத்தியாதோப்பு பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு பெண்கள் விடுதி அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நடப்பு ஆண்டில் வாய்ப்பு இல்லை.

98—

திருவன்காட்டில் இருக்கும் உயர்நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் நல விடுதி கட்டுதல்.

வினா எண் 10991—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சீர்காழி தொகுதி, திருவன்காட்டில் இருக்கும் உயர் நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் நல விடுதி கட்டி கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் —

(அ) மற்றும் (ஆ) : திருவன்காட்டில் பிற்படுத்தப்பட் டோர் நல மாணவ, மாணவியர் விடுதி இல்லாத நிலையில் விடுதி கட்டிடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

99—

கொங்கு வேளாள கவுண்டர் இனத்தவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண் 11004—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

கொங்கு வேளாள கவுண்டர் இனத்தவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படுவார்களா?

விடை —

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்—

இல்லை.

100—

பெரியகுளம் பகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

வினா எண் 9051—திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழிற்துறை அமைச்சர்—

(அ) மற்றும் (ஆ) : மதுரை மாவட்டம் பெரியகுளம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான தகுதியான நிலத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தேர்ந்தெடுக்கவும் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையத்தின் உதவியுடன்

தகுதியான தொழில் முனைவோர்களையும் தேர்ந்தெடுத்த பின்னர், தொழிற்பேட்டை அமைப்பதற்கான பணியினை தொடங்க தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஆர்வமாக உள்ளது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்,]

உ. அறிவிப்புகள்

(அ) 21–4–1993 அன்று பேரவைக் காவலர்களைத் தாக்கியது தொடர்பாக இரண்டு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட தாகவும், இன்னொரு உறுப்பினரைத் தேடி வருவதாகவும் காவல் துறையிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க் கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையில் 21–4–1993 அன்று சில காவலர்களைத் தாக்கியதாக காவல்துறையில் பெற்ற புகாரின் அடிப்படையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதி மற்றும் சி. ஞான சேகரன் ஆகியோர் நேற்று 21–4–1993 இரவு கைது செய்யப் பட்டு சென்னை கோட்டையில் உள்ள பி. 3 காவல் நிலையத் திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கே காவல் நிலைய பெயிலிலே சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற காரணத்தால் சொந்த பெயிலிலேயே அவர்கள் செல்லலாம் என்று தெரிவிக்கப் பட்டு, அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் காவல் நிலையத் திற்குள்ளேயே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பேரவையிலேயிருந்து பெற்ற புகாரின் அடிப்படையிலேயும் இன்னொரு சட்டமன்ற உறுப்பினரான திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்களைக் காவலர்கள் தேடி வருவதாகவும் அவர் இன்னும் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை என்று தகவல் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது Thiru. P.V. Rajendran, M.L.A. is still at large and all efforts are being taken to locate him என்கின்ற செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகுதியான தொழில் முனைவோர்களையும் தேர்ந்தெடுத்த பின்னர், தொழிற்பேட்டை அமைப்பதற்கான பணியினை தொடங்க தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஆர்வமாக உள்ளது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்,]

உ. அறிவிப்புகள்

(அ) 21–4–1993 அன்று பேரவைக் காவலர்களைத் தாக்கியது தொடர்பாக இரண்டு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாகவும், இன்னொரு உறுப்பினரைத் தேடி வருவதாகவும் காவல் துறையிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையில் 21–4–1993 அன்று சில காவலர்களைத் தாக்கியதாக காவல்துறையில் பெற்ற புகாரின் அடிப்படையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதி மற்றும் சி. ஞான சேகரன் ஆகியோர் நேற்று 21–4–1993 இரவு கைது செய்யப் பட்டு சென்னை கோட்டையில் உள்ள பி. 3 காவல் நிலையத் திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கே காவல் நிலைய பெயிலிலே சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற காரணத்தால் சொந்த பெயிலிலேயே அவர்கள் செல்லலாம் என்று தெரிவிக்கப் பட்டு, அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் காவல் நிலையத் திற்குள்ளேயே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பேரவையிலேயிருந்து பெற்ற புகாரின் அடிப்படையிலேயும் இன்னொரு சட்டமன்ற உறுப்பினரான திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்களைக் காவலர்கள் தேடி வருவதாகவும் அவர் இன்னும் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை என்று தகவல் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது Thiru. P.V. Rajendran, M.L.A. is still at large and all efforts are being taken to locate him என்கின்ற செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சிறப்புக் குறிப்பு

21–4–1993 அன்று வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள், வெளியில் சாலை மறியலில் ஈடுபட்டது குறித்தும் தவறான செய்திகள் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அறிவிக்கப்பட்டது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வர விரும்புகிறேன். நேற்றையதினம் ஜனநாயக நெறி முறைகளுக்கு மாறாக, தங்களுக்கு மத்திய அரசின் அதிகாரப் பலமும், பின்னணியும் இருக்கிறது என்ற அதிகார உணர்வோடு எப்படியாவது இந்தச் சட்டமன்றத்தைச் செயலிழக்கச் செய்துவிட மாட்டோமா என்கின்ற ஒரு நப்பாசையோடு இந்தச் சட்டமன்ற விதிமுறைகளுக்கு மாறாக காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் முறைகேடாக இங்கே நடக்க முயன்றபோது நீங்கள் இந்தச் சட்டமன்றத்தின் மாட்சிமையைக் காப்பாற்ற அவர்களை வெளியேற்றினீர்கள். அவர்கள் வெளியேற்றப்படுகிறபோது அவர்களோடு சேர்ந்து வேறுசில கட்சியினரும் இதே முறைகேடான நிலையிலே இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக நடக்க முயன்றபோது அவர்களையும் வெளியேற்றினீர்கள்.

முற்பகல் 11–15.

அவர்கள் வெளியே போய் ஏற்கனவே திட்டமிட்டபடி, அவர்களுக்கு அவர்களுடைய தலைவர்கள் சொன்ன கட்டளையின்படி சென்னை கோட்டைக்கு எதிரிலே இருக்கிற அந்தச் சாலையிலே பஸ் மறியலிலே, சாலை மறியலிலே ஈடுபட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பஸ்களை அந்த வழியாக வர தடுத்து கட்டளையிட்டபோது எப்படியாவது தங்களுடைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அண்ணா சாலையிலே போய் பஸ் மறியலிலே ஈடுபட்டார்கள். அதற்குப் பிறகு சர்வ வல்லமையும் பெற்ற மக்கள் மன்றத்தின் மையமான இந்த மன்றத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மறியலிலே ஈடுபட்ட அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள் என்ற ஒரு தகவலையும் சொன்னார்கள். ஆனால் சென்னை வானொலி நிலையமும், தொலைக்காட்சி நிலையமும் நேற்றைய செய்தியிலே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று தாங்களாகவே அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது எந்த வகையிலே நியாயம்? ஒருவகையிலே சர்வ அதிகாரமும் பெற்ற இந்தச் சட்டமன்றத்திலே சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிற போது, அந்தத் துறைக்கு

தொடர்பான மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்கள் கைது செய்யப்படவில்லை. அப்புறப்படுத்தப்பட்டார்கள் என்று ஒரு அறிக்கையை தந்திருக்கிறபோது, வானொலி நிலையமும், தொலைக்காட்சி நிலையமும் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று செய்தி வெளியிட்டால் இதிலே ஏதோ ஒரு பின்னணி இருக்கிறது. இது ஒரு திட்டமிட்ட செயல். இதற்குப் பின்னாலே வேறு சில சதியும் இருக்கிறது என்று மக்கள் சந்தேகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த 5 ஆயிரம் பேர் நேற்று கைது செய்யப்பட்டார்கள் என்றும் வானொலியிலும், தொலைக் காட்சி நிலையத்திலும் செய்தி ஒலிபரப்பப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களோ அல்லது காவல் துறை இயக்குநர் அவர்களோ அல்லது உள்துறை செயலாளர் அவர்களோ, அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று எந்த செய்தியும் வெளியிடவில்லை. தாங்களாகவே வானொலி நிலையமும், தொலைக்காட்சி நிலையமும் இத்தகைய செய்திகளைத் தொடர்ந்து சில காலமாக, முறைகேடாக சொல்லி கொண்டு வருகின்றன. இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. இது இந்த மாமன்றத்தின் உரிமைகளைப் பாதிக்கிற விஷயமாக இருக்கிறது. இங்கேகூட நம்முடைய சட்டமன்ற பேரவைத்தலைவர் அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினரையே காவல்துறை தேடிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். காவல் துறையாலேயே சட்டமன்ற உறுப்பினரை கண்டுபிடிக்க முடியாவிட்டால், தொகுதி மக்களாலே எங்கே சட்டமன்ற உறுப்பினரை பார்க்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) இது என்ன வீரம் என்று எனக்கு விளங்கவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டு இருப்பது நம்முடைய ஜனநாயகத்திற்கு ஒரு நல்ல ஆரோக்கியமான அறிகுறியல்ல. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து விளக்க வேண்டுமென்று நான் தங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் ஏற்பட்ட சில சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் பற்றியும், அதன் தொடர்பாக வெளியிலே ஏற்பட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றியும் எனது கருத்துக்களையும், உண்மைத் தகவல்களையும் இம்மாமன்றத்தில் எடுத்துரைப்பது அவசியம் என்று கருதுகிறேன். அரசியல்கட்சிகளிடையே மனமாச்சர்யம் என்பது ஜனநாயகத்தின்

அடிப்படை ஆதாரங்களில் ஒன்று. ஆனால் அதே நேரத்தில் சட்டமன்றத்தின் மாண்பையும், மதிப்பையும் எத்தகைய ஒரு சூழ்நிலையிலும் கட்டிக் காக்க வேண்டிய கடமை எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு. எந்த எந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவையின் மாண்பையும், மாட்சிமையையும் ஏற்க மறுக்கிறார்களோ அவர்கள் மக்கள் மன்றத்தின் முன் அவர்களுடைய செய்கைகளுக்காக நிறுத்தப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20.

இத்தனை ஆண்டுக்காலமாக போற்றி பாதுகாக்கப்பட்டு வந்த இந்தப் பேரவையின் மாண்பை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக குலைக்கும் செயலில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடர் தொடங்கிய நாள்முதல் இன்றுவரை சட்டமன்ற நடவடிக்கைகளில் நியாயமான முறையில் பங்கு கொண்டு சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த மக்களின் குறைகளைக் களைய வேண்டுமென்ற எண்ணத்தைவிட ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த அரசாங்கத்திற்கும் ஊறு விளைவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மாமன்றத்தின் மாண்பையும் கண்ணியத்தையும் குலைக்கின்ற அனைத்து செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். மன வேறுபாடுகள், கருத்து வேறுபாடுகள் எவ்வளவு இருந்தாலும் அவற்றுக்குப் பரிகாரம் தேட வேண்டிய முறை என்ற ஒன்று உண்டு. எல்லா மரபுகளையும் மீறி காங்கிரஸ் உறுப்பினர்கள் இங்கே செயல்பட்டு வருகிறார்கள். 20–4–1993 அன்று காவல்துறை, ஆயத் தீர்வை மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளை நான் அவைமுன் வைத்தபோது அவையின் அலுவல்கள் நடைபெறாவண்ணம் பலமுறை இடையூறுகள் செய்து இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற விடாமல் பிரச்சினைகள் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வந்திருந்தனர். தங்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பளிக்கவில்லை என்ற உண்மைக்கு புறம்பான ஒரு தகவலை வைத்து வெளிநடப்புச் செய்தார்கள். பின்பு மீண்டும் அவைக்குள் வந்தார்கள். ஆனால் இவர்களுக்குப் பேசுவதற்குத் தரப்பட்ட வாய்ப்புகள் அனைத்தையும் சரியான முறையில் உபயோகிக்காமல், இந்த அவையின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் தேவையற்ற விவரங்களைக் கூறி அதன் மூலம் தங்களுக்குக் கொடுத்த நேரத்தை வீணடித்தார்கள். கொடுக்கின்ற நேரத்தைச் சரியாகப் பயன்படுத்திக்

கொள்ளாமல் கொடுத்த நேரம் போதாது. மற்றவர்கள் குறுக்கிடுகிறார்கள் என்று குறை கூறுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் எதிர்பார்த்தபடி எந்தவிதமான அசம்பாவிதமும் 20 ஆம் தேதி அவை முடியும் தருவாய் வரை, அதாவது 2.10 வரை நடைபெறவில்லை என்ற ஆதங்கத்தில் இருந்த காங்கிரஸ் கட்சியினர், உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் வெளியேற்றப்பட்டபோது ஓர் உறுப்பினர் கூறிய வார்த்தைகளைக் காரணம் காட்டி, பேரவைத் தலைவர் கண்டிக்கிறேன் என்று உறுதி கூறிய பின்னரும், இதைவிட்டால் தங்களுக்கு வேறு வாய்ப்பு கிடைக்காது என்று கருதி, தங்கள் திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கினார்கள், 20–4–1993 அன்று பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. நாளைக்கு— அதாவது 21–4–1993 காலை 10–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும் என்று பேரவைத் தலைவர் அறிவித்து, சட்டசபையை ஒத்தி வைத்து, சென்றபின், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும். இதர சில கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் இந்த அவையை விட்டு நீங்காமல் இங்கேயே அமர்ந்திருந்து, ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையையே ஏற்படுத்திவிட்டார்கள். இது பாராளுமன்ற மரபுகளுக்கு முற்றிலும் முரணானது. அன்று இரவு முழுவதும் அவையின் உள்ளேயே தங்கியிருந்து, நேற்று—அதாவது 21–4–1993 காலை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவையில் வழக்கமான முறையில் திருக்குறளை எடுத்துக் கூறுவதற்கு முன் அவரைப் பேச விடாமல் தடுத்து, அனைத்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் எழுந்து நின்று கூச்சலிட்டு. ''சாத்தான் வேதம் ஓதக்கூடாது'', சபாநாயகர் திருக்குறள் படிக்கக்கூடாது'' என்று இந்த அவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையில் கூச்சலிட்டார்கள். 30 நிமிடங்களுக்குமேல் தொடர்ந்த இந்த அமளியில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் கேள்வி நேரத்தின் போது எந்தப் பிரச்சினையையும் எழுப்பக் கூடாது என்றும், ஜீரோ ஹவரில் தான் எழுப்ப வேண்டுமென்றும் பலமுறை அறிவுரை வழங்கியும். எதற்கும் செவி சாய்க்காமல், அவையின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவித்துக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் அவையின் அன்றைய அலுவல்களை நடத்த அவர்கள் அனுமதிக்காமல் தொடர்ந்து இடையூறு செய்ததால் வெளியேற்றப்பட்டார்கள். அப்போதும் கத்திக் கொண்டு சென்றார்கள். விசில் அடித்தார்கள். 'ஒழிக' என்று கோஷங்களை எழுப்பினார்கள். தலைமைச் செயலகத்திற்கு வெளியே வந்து, சாலை மறியலில் ஈடுபட்டார்கள். பொது மக்களின் நலனைக் கருதி போக்குவரத்து மாற்றி விடப்பட்டதால், அவர்கள் அங்கேயிருந்து அண்ணா சாலைக்குச் சென்று மீண்டும் சாலை மறியலில் ஈடுபட்டார்கள். பொது அமைதியின் நன்மையைக் கருதி அவர்கள் கைது செய்யப்பட்டு, அங்கே இருந்து அப்புறப்படுத்தப்பட்டு, ஒரு கல்யாண மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்

டார்கள். எல்லா வசதிகளும் அங்கே செய்து தரப்பட்டன. தாங்கள் பயணம் செய்த பேருந்திலிருந்து அவர்கள் இறங்க மறுத்ததால், தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள்

முற்பகல் 11—25

சென்னையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, தர்மபுரியில் அரசுப் பேருந்துகள் அடித்து நொறுக்கப் பட்டன. சேலத்தில் பேருந்துகள் மீது கல்வீச்சு நடந்திருக் கிறது. கோவையில் பேருந்துகளுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் சில சமூக விரோத சக்திகள் சாலை மறியல் என்ற பெயரில் சில அத்து மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். இதை யெல்லாம் பார்க்கும்போது, காங்கிரஸ் ஏற்கனவே எழுதி வைத்த நாடகத்தைத் திரும்பட நடத்திவிட்டது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள முடியும். இப்படித்தான் நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டு, அதன்படி நடத்திவிட்டு, சென்னையில் மட்டுமின்றி மற்ற இடங்களிலும் சாலை மறியல் போன்றவற்றில் ஈடுபடுவதற்காக தங்களுடைய கட்சி உறுப்பினர்களையும், சமூக விரோதச் சக்திகளையும் தூண்டி விட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுமே என்கிற எண்ணம் ஒரு துளி கூட இல்லாமல், இந்த அரசாங்கத்தைக் கலைத்துவிட வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவப் பெயரைக் கொண்டு வர வேண்டும். ஏதோ தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தி விட வேண்டுமென்கிற எண்ணம்தான் மேலோங்கி நின்றிருக்கிறது.

நேற்று சற்றும் அவசியம் இல்லாத முறையில், தமிழ்நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பஸ் மறியல் என்கின்ற பேரில், பல இடங்களில் அரசுப் பேருந்துகளைத் தடுத்து நிறுத்தியும், கற்களை எறிந்து பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்துச் சேதப்படுத்தியும், பொதுமக்களுக்கு இடையூறு செய் துள்ளார்கள். இது ஏதோ இயற்கையாக நடந்த நிகழ்ச்சி அல்ல. எனக்குக் கிடைத்த தகவலின்படி, சென்னையில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒரு தனி நபர், எல்லா மாவட்டங்களுக்கும் தொலைபேசியில், பஸ் மறியல் செய்ய வேண்டும் என்றும், அரசுச் சொத்துக்களை நாசப்படுத்த வேண்டும் என்றும், வன்முறையில் ஈடுபடவேண்டும் என்றும் தகவல் அனுப்பியிருக்கிறார். அதன் அடிப்படையில்தான், எந்தவிதமான Provocation-ம் இல்லாமலும் இந்தக் கல்வீச்சு சம்பவங்களும், சாலை மறியல்களும் யாரோ ஒருவரின் சுயலாபத்திற்காக, பொதுமக்கள் நலனை சற்றும் மனதில் கொள்ளாமல் நடத்தப்பட்டுள்ளன. ஏற்கெனவே நான் சொன்னது போல, இது திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட நாடகம்.

நேற்று காலை 8 மணி அளவில், தர்மபுரி நகரப் பேருந்து நிலையத்தில் 30 பேர் நுழைந்து, அங்கு நிறுத்தப்பட்டிருந்த 8 பேருந்துகள் மீது கற்களை வீசி, பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்துள்ளார்கள். அதேபோல, தர்மபுரி நெடுஞ் சாலையில் சில இடங்களில் கல்வீச்சுச் சம்பவங்கள் நடைபெற்ற தாக எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சேலம் மாவட்டம், ஓமலூர் சாலையில், அழகமாசமுத்திரம் கிராமம் அருகில், அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து மீது கற்களை வீசிச் சேதப்படுத்தியுள்ளனர். சேலம் புதுப்பேருந்து நிலையத்திற்கு அருகிலிருந்த, போக்குவரத்துக் கழகத்தின் இரண்டு பேருந்துகளையும் சேதப்படுத்தியுள்ளனர். அதே பஸ் நிலையத்தில், ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மீதும், கற்கள் வீசப்பட்டுள்ளன.

கோவை மாநகரத்தில் பஸ் மறியல் என்ற போர்வையில், இரண்டு சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு அராஜகமான முறையில் தீ வைக்கப்பட்டுள்ளது. எனக்கு வந்த தகவலின்படி, டி.டி. 03.0385 என்ற டெல்லி ரிஜிஸ்டிரேஷன் எண்கள் கொண்ட ஒரு ஜீப்பில், 6 பேர் வந்து, பேரூர்-கெம்பட்டி காலனி சாலையில், எதிரில் வந்த சேரன் போக்குவரத்துக் கழக டவுன் பஸ்சை மடக்கி, கட்டையால் தாக்கி, பின்னர் தீவைத்துக் கொளுத்தியுள்ளார்கள். அங்கிருந்து அதே ஜீப்பில் அவர்கள் மருதமலை சாலைக்குச் சென்று, அங்கே கோவை விவசாயக் கல்லூரி அருகில், ஒப்பந்தத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட சேரன் போக்குவரத்துக் கழக பஸ் ஒன்றினை அடித்து நொறுக்கி, தீ வைத்துள்ளார்கள். அவ்வாறு தீ வைக்கும்போது அங்கிருக் கும் பொதுமக்களால் அவர்கள் பிடிக்கப்பட்டு, காவல் துறை யினரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள் எனத் தகவல் வந்துள்ளது. பேரூர்-கெம்பட்டி காலனி சாலையில், முதலில் தாக்கப்பட்ட சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் டிரைவர், திரு. ஆர். மாரியப்பன் என்பவர் கொடுத்த தகவலின் அடிப்படையில், காவல்துறையினர் இந்த ஜீப் எண்களைப் பெற்று, தேடிவரும் போது, இரண்டாவது சம்பவ இடத்தில் அவர்களைப் பிடித்துள்ளார்கள். இந்த ஜீப்பில் டி.என்.சி.சி.—அதாவது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று எழுதப்பட்டிருந்ததாக, எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. தீ வைப்பதற்குப் பயன் படுத்தப்பட்ட இந்த ஜீப்பில் பயணம் செய்த ஆறு காங்கிரஸ் கட்சியினரை, காவல்துறையினர் கைது செய்து, வழக்குப் பதிவு செய்துள்ளார்கள்.

அவர்கள்—திரு. கி. ஆர். ரவிச்சந்திரன், காங்கிரஸ் கட்சி யின் கோவை மாநகர உதவித் தலைவர், திரு. இளமுருகு, காங்கிரஸ் கட்சியின் கோவை மாநகர 41ஆவது பகுதிச் செய

லாளர், திரு. சித்தையன், காங்கிரஸ் கட்சியின் கோவை மாநகர 45ஆவது வட்டச் செயலாளர், திரு. போஸ், காங்கிரஸ் கட்சியின் கோவை மாநகர 36ஆவது வட்டச் செயலாளர், திரு. சேகர், கோவை மாவட்ட காங்கிரஸ் மாணவர் அணிச் செயலாளர் மற்றும் திரு. அன்வர், உடுமலைபேட்டையைச் சேர்ந்தவர். இவர்தான் ஜீப்பினை ஓட்டிச் சென்றவர்.

பஸ் மறியல் என்கின்ற போர்வையில், பொதுச் சொத்துக்களை நாசப்படுத்தியவர்கள் யார் என்பதை இந்த நாட்டு மக்கள் இந்நேரம் உணர்ந்திருப்பார்கள். சென்னையில் தி.நகர், ரங்கநாதன் தெருவுக்கு அருகே, நேற்றுக்காலை 11 மணியளவில், சிலர் ஒரு ஜீப்பில் வந்து, நின்றுகொண்டிருந்த ஒரு பேருந்தின் மீது கற்களை வீசி, அதன் பின்புறம் கண்ணாடியை உடைத்துள்ளார்கள்.

நேற்று நடந்த இந்த பஸ் மறியலில், தமிழகம் முழுவதும் 2,540 பேர் சம்பவ இடங்களில் தடுப்பு நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த விவரம் எனக்குக் கிடைக்கப் பெற்றதும், இவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று, 21—4—1993 அன்று, அதாவது நேற்று மாலையே ஆணையிட்டேன். வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு, பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவித்த 88 பேர்கள் மட்டும் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

முற்பகல் 11—30

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த இவர்கள் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தடுப்பு நடவடிக்கையாக கைது செய்யப்பட்ட 2,540 பேர்களை நான் உடனடியாக விடுதனல செய்யவேண்டுமென்று ஆணையிட்டது, இந்த அரசுக்கு யாரையும் பழி வாங்கும் எண்ணம் இல்லையென்பதை வெளிப்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், அதே நேரத்தில் ஜனநாயக உரிமை என்று கூறிக் கொண்டு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து, பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயல்களை இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி வெளியிட்ட ஒரு அறிக்கையில் 5,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று தவறான செய்தி தரப்பட்டுள்ளது. உண்மையில் கைது செய்யப்பட்டு, பின்ன விடுதலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,540 தான் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

[டாக்டர். ஜெ. ஜெயலலிதா]

நேற்று தொலைக்காட்சியிலும், நேற்று மாலையும், இன்று காலையும் சில பத்திரிகைளிலும் காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்படவில்லை என்று நான் கூறியதாக செய்திகள் வெளிவந்துள்ளன. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. அதைத்தான் நானும் நேற்று இந்த மாமன்றத்தில் தெரிவித்தேன். உண்மைச் செய்திகளை திரித்துக் கூறவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்து, சட்டம் ஒழுங்கைக் காப்பதற்கு நானும் தயங்க மாட்டேன், எங்கள் அரசும் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றத்தில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அல்லது உறுப்பினர்களை பாதிக்கும் விஷயம் ஏதேனும் நடைபெற்று இருந்தால், அந்தப் பிரச்சினைகளை சட்டமன்றத்தில் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, சாலை மறியலில் ஈடுபட்டு, பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயலில் ஈடுபடக் கூடாது. நேற்று காலை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேரவையின் முன்பு எந்தக் கோரிக்கையையும் வைக்கவில்லை. அவர்களுக்கு என்ன குறைகள் என்பதையும் கூறவில்லை. வேறு பிரச்சினைகள் எழுப்பக்கூடாத கேள்வி நேரத்தில் ரகளை செய்து எப்படியும் பிரச்சினையை ஏற்படுத்திவிட்டு, அதன் மூலம் தங்களை வெளியேற்றுவதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களின் எண்ணமாக இருந்து வருகிறது. வானொலியும், தொலைக்காட்சியும் டெல்லியின் ஆளுகைக்கு உட்பட்டு இருப்பதாலும், சில பத்திரிகைகள் ஆளும் கட்சிக்கு எதிராக இருப்பதாலும், தவறான செய்திகளை மக்களுக்குத் தந்தால் கூட, "எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஏமாற்ற முடியாது" என்கிற அடிப்படைத் தத்துவத்தை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், தமிழ் மண்ணில் உயிர் நீத்ததால், காங்கிரஸ் கட்சிக்கு மக்களிடம் ஏற்பட்டிருந்த சிறிதளவு அனுதாபம்கூட, இவர்களின் போக்கால் மக்கள் மனதிலிருந்து இந்நேரம் விலகி இருக்கும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்கிற ஒரு கொள்கையைத் தவிர, பொது மக்கள் சேவையை மறந்து விட்ட காங்கிரஸ் கட்சி இனி எந்தக் காலத்திலும் தேர்தலில் மக்களைச் சந்திக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற மரபுகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு, மரபு மீறிய தவறான செயல்களில் ஈடுபடும் இவர்கள், பொதுமக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நேரம் வெகு தூரத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி

*திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக சட்டமன்ற உறுப்பினர்களுடைய வெற்றிக்கு எப்படி நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காரணமாக இருந்தார்களோ, அதைப்போல காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய வெற்றிக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் செல்வாக்கால் வெற்றி பெற்ற காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள். சட்டமன்றத்திற்கும் வராமல், தொகுதிக்கு போவதற்கும் வெட்கப்பட்டுக் கொண்டு. சென்னையில் அலைந்து கொண்டிருக்கிறார்கள், ஆகவே. அவர்களைப் போலீஸ் பாதுகாப்போடு அவரவர்களின் தொகுதிகட்கு எடுத்துச் சென்று. அங்கே பொதுமக்களிடம் ஒப்படைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் ஜெ, ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நேற்று நான் இந்த அவையில் தெரிவித்த செய்தியைப் பற்றி சில குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது, நேற்று சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்தது, அதனைத் தெரிவித்தேன்,

முற்பகல் 11-35

அவர்கள் கைது செய்யப்பட்டு, அப்புறப்படுத்தப்பட்டார்கள் என்பது பின்னர் எனக்குத் தெரிவிக்கப்பட்டது, ஆனால், நேற்று நான் இங்கே சொன்னபோதுகூட அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். பின்னர் போலீஸ் கமிஷனர் அவர்களைச் சந்தித்து 'you are no longer under arrest: you are free to go, என்று சொன்னார் என்றுதான் நான் தெரிவித்தேன் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, நா, சா, பழனிசாமி,

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு காவல்துறை மானியக்கோரிக்கை விவாதம் இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்த மானியக் கோரிக்கையில் கருத்தைச் சொல்லி, காவல்துறைக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதற்கு பதிலாக, காவல்துறையினரை நேராகவே சென்று, காவல் நிலையத்திலே சந்திக்கின்ற அந்தச் செயலைச் செய்த, காங்கிரஸ் உறுப்பினர்களுடைய அந்தச் செயலுக்கு பத்திரிகைகள் எல்லாம் அதிக முக்கியத்துவம்

[திரு. நா. சா. பழனிச்சாமி]

கொடுத்து போட்டு இருக்கிறார்கள், ஆனால். இங்கே பொறுப்பாக காவல்துறை மானியக் கோரிக்கையிலே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றி இருக்கிறார்கள். இப்படி காவல் துறை மானியக் கோரிக்கையிலே உரையாற்றிய உறுப்பினர்கள் பெயர்கள் ஒன்றுகூட இன்றைய காலை ப்பத்திரிகைகள் உட்பட எதிலும் வெளிவரவில்லை, ஆனால். காவல் துறையோடு மோதியவர்கள் பெயர்தான் பத்திரிகையிலே வந்திருக்கிறது. இப்படிப் பட்ட செயலை பத்திரிகை நண்பர்கள் செய்து இருப்பது, காவல் துறை மானியக் கோரிக்கை மீது பொறுப்பாக உரையாற்றிய உறுப்பினர்களின் உரிமையை மீறிய செயலாகாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தொடர்ந்து பல சந்தர்ப்பங்களில் தெரிவித்து வருகிற செய்திதான் இது, இங்கே ஒவ்வொரு மானியத்தின் மீதும் ஒவ்வொரு மசோதாவின் மீதும் பொறுப்பாக பல்வேறு செய்திகளைச் சொல்லி, அரசாங்கத்திற்கு சில நல்ல ஆலோசனைகளையும் தெரிவித்து அரசு செய்து வரக் கூடிய காரியங்களில் இருக்கிற குற்றம் குறைகள் இன்னின்ன. இவையெல்லாம் இவ்வாறு நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கிற எந்தச் செய்திகளுக்கும் நம்முடைய பத்திரிகைகள் அந்தளவிற்கு முக்கியத்துவம் தராமல், இங்கே நடக்கிற ஏதாவது குழப்பங்கள், விதிமுறைகளுக்கு மாறான செய்திகள் ஆகியவற்றிற்குத் தருகிற முக்கியத்துவம் வளர்ந்து கொண்டே இருக்கிற காரணத்தால் தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் zero hour heroes'' என்று அதை எல்லா இடத்திலேயும் சொன்னார்கள்—அவர்கள் வளருவதற்கு வாய்ப்பாகப் போகிறது, சட்டமன்ற சபாநாயகர்களுடைய மாநாட்டிலே கூட, இதைப் பற்றிப் பேசி. பத்திரிகையாளர்களையே கூட மக்களவை சபாநாயகர் அழைத்துப் பேசி. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றுகூட ஒரு கருத்தை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இந்த நிலை வளருவது ஒரு ஜனநாயக அமைப்புக்கே குந்தகமாகப் போய்விடும் என்றே கூட அஞ்சவேண்டியிருக்கிறது,

விதிமுறைகளுக்கு மாறான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற பத்திரிக்கைகள் விதிகளுக்கு உட்பட்டுத் தெரிவிக்கிற நல்ல கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தராமல் இருப்பதுதான் அனைவரும் வருந்தத்தக்க செய்தியாக இருந்து வருகிறது, இதிலே மிகப் பாரம்பரியம் மிக்க பத்திரிகைகள் கூட இன்றைக்கு பையப் பைய இந்த விதிமுறைகளுக்கு மாறான செயல்களுக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள், எனவே. இது தவிர்க்கப்பட வேண்டும். தவிர்த்து விதிமுறைகளுக்கு உட்பட்டு இங்கே நடைபெறுகிற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலே இந்த விதிமுறைகளுக்கு மாறாக வரம்பு மீறிச் செயல்படுகிற உறுப்பினர்களுடைய நடவடிக்கைகள் குறையும், இது நல்ல ஜனநாயகத்திற்கும் ஆரோக்

[பேரவைத் தலைவர்]

கியமாக அமையும் என்கிற கருத்தை எல்லா சபாநாயகர்களும் கூடிய அந்த மாநாட்டிலே கூட நாங்கள் தீர்மானமாக நிறைவேற்றி இருக்கிறோம். அதைப் பத்திரிகையாளர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய அறிவுரையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றம் என்பது நாட்டுமக்களுக்குச் சென்று சேர வேண்டிய பல்வேறு செய்திகளைப் பேசக்கூடிய இடம். அந்தப் பேச்சுக்கள் எதுவும் மக்களுக்குச் சென்று சேராமல், இந்த அவையை விட்டு வெளியேறுவதும், இந்த அவையிலே செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் மறுத்துவிட்டு, மரபுக்கு மாறுபாடான பல்வேறு காரியங்களை இங்கேயும் செய்துவிட்டு, வெளியேயும் செய்கிறவர்களுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பது ஜனநாயகத்தின் ஆணி வேரில் எங்கோ விஷத்தை ஊற்றுகிறீர்கள் என்றுதான் அமையும். எனவே, இதைப் பத்திரிகையாளர்கள் தவிர்ப்பது நல்லது என்று பேரவையின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

முதலமைச்சர் அவர்கள் வைத்த அந்த அறிக்கையின் மீது இந்த நேரத்திலே விவாதம் வைத்துக் கொள்வதில்லை. (குறுக்கீடு) அந்த அறிக்கையின் மீது விவாதம் கிடையாது. திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திற்குள்ளேயும், வெளியேயும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பி, ஒரு மாயையை உருவாக்கி, அதன் மூலம் பழனி நாடாளுமன்றத் தேர்தலையும், ராணிப் பேட்டைத் தேர்தலையும் ஒத்திவைக்க வேண்டும் என்று, அதைச் சந்திக்க திராணியும் நெஞ்சுறுதியும் அவர்களிடம் இல்லை என்கிற காரணத்தால் (மேசையைத்தட்டும் ஒலி) இந்த மாதிரியான நடவடிக்கைகளிலே இறங்கியிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்துள்ளது. அது உண்மையா என்பதை நான், இதய தெய்வம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் செய்ததை நீங்கள் தான் அவர்களிடத்திலே இருந்து கொஞ்சம் அறிந்து மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் (சிரிப்பு)* எல்லோருடனும் நெருங்கிப் பழகுகிற வாய்ப்பை உடையவர் திரு. துரை ராமசாமி அவர்கள். அதை அவர்கள் மூலமே தெரிந்து நீங்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவல்களை நான் இங்கே தெரிவிக்கின்றேன். தமிழக நல்லாட்சி இயக்கம் என்று சிலர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த இயக்கத்தைச் சேர்ந்த சில நபர்கள் நடக்காத சம்பவங்களையெல்லாம் நடந்ததாகக்கூறி, இங்கே சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டதாக புகார் செய்து '' சீஃப் எலக்ஷன் கமிஷனுக்கு '' கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். சீஃப் எலக்ஷன் கமிஷனிடம் இருந்து விளக்கம் கேட்டு இவர்கள் கொடுத்த புகார்களை என்குளோஸ் செய்து, பத்திரிகைகளில் வேண்டும் என்றே வெளியிடப்பட்ட சிலதவறான செய்திகளின் கிளிப்பிங்குகளையும் இணைத்து, அதைத் தமிழக அரசுக்கு அனுப்பி, இப்படியெல்லாம் புகார்கள் வந்திருக்கிறது. எனவே, உங்கள் பதிலை இன்ன தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்று மிகக் குறுகிய கால கெடு கொடுத்து, இப்படி மீண்டும் மீண்டும் கடிதங்கள் எங்களுக்கு 'சீஃப் எலக்ஷன் கமிஷன் ஆப் இந்தியா''விடம் இருந்து வந்து கொண்டேயிருக்கின்றன. நாங்களும் இங்கே அரசின் தரப்பில் ஒவ்வொன்றிற்கும் விளக்கம் அளித்து, அவர்கள் செய்திருக்கிற புகார்கள் எல்லாம் ஆதாரமே இல்லாதவை, அடிப்படையே இல்லாதவை, இங்கே சட்டம்-ஒழுங்கு மிக நன்றாக காக்கப்படுகிறது. எல்லாம் அமைதியாக இருக்கிறது. எனவே, தேர்தலை ஒத்திப் போட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் திரும்பத் திரும்ப நாங்கள் எழுதிக்கொண்டிருக்கிறோம். ஆனால் மீண்டும் மீண்டும் இத்தகைய கடிதங்கள் எங்களுக்கு வந்துகொண்டே இருக்கின்றன. இந்தப் புகார்களில் நாம் குறிப்பிட்டுப்பார்க்க வேண்டிய அம்சம் என்னவென்றால் ஒவ்வொரு புகாரிலும் இப்படியெல்லாம் நடக்கின்றது. சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது, எனவே பழனி நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலையும், ராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலையும் ஒத்திப்போட வேண்டும், நடத்தக்கூடாது என்று அவர்கள் புகார்களை செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இதையெல்லாம் பார்க்கின்றபோது எப்படியாவது தேர்தல்களை ஒத்திப் போட வேண்டும் என்ற ஒரு சதித்திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடு எழத்தான் செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன தகவல்களுக்கு பிறகுதான் எனக்கே கூட புலப்படுகிறது. ஏன் தினசரி இந்தப் பேரவையிலே சில உறுப்பினர்கள் ரகளையிலே ஈடுபடுகிறார்கள் என்று, நடக்காத சம்பவத்தை — (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இப்போது நான் எடுத்துத் தெரிவித்த தகவல்களை ஒட்டி என்ன தெரிகிறது என்று சொன்னால் நாங்கள் தேர்தல்களைச் சந்திக்க தயாராக இருக்கிறோம். எந்த நேரத்தில் தேர்தல்கள் வந்தாலும் எங்களால் சந்திக்க முடியும், (மேசையைத்தட்டும் ஒலி) வெற்றி கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கையும் நெஞ்சுறுதியும் திடமும் எங்களிடம் இருக்கிறது. ஆனால் வேறு சிலர் குறிப்பாக காங்கிரஸ் கட்சியினர் தேர்தல்களைச் சந்திக்க பயப்படுகிறார்கள். எனவே தான் அவர்கள் இத்தகைய புகார்களை சீஃப் எலக்ஷன் கமிஷனிடம் கொடுக்க வைக்கிறார்கள் என்றுதான் கருத வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நான் அவர்களோடு நெருங்கிப்பழகுகிறவன் என்று சொன்னீர்கள். ஆகையினால் ஒரு சிறு தன்னிலை விளக்கம் கொடுக்க அனுமதிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். 20 ஆண்டுக்காலம் காங்கிரஸ் கட்சிக்காக என்னை முழுமையாக தியாகம் செய்து அந்தக் கட்சியினுடைய உயர்விற்காக உழைத்து பல தொல்லைகளையெல்லாம் அடைந்த பிறகு 1980-லே என்னுடைய முதுகிலே குத்தி என்னை வெளியேற்றியது தான் காங்கிரஸ் இயக்கம் என்பதையும் அந்தத் துரோகச் செயலுக்குப் பிறகு நான் வெளியே வந்த போது என்னை அரவணைத்து இந்தப் பக்கத்திலே அமர்த்தி வைத்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரவணைப்பிலே இந்த இயக்கத்திலே இணைந்து, புரட்சித் தலைவி அவர்களுடைய மனத்திலே இடம் பெற்று இன்று நான் இந்தப் பக்கத்திலே இருந்து செயல்பட்டு வருகிறேன். அன்று 1980-லே எப்படி என்னை முதுகிலே குத்தி துரோகத்தை செய்து வெளியே அனுப்பினார்களோ அதையேதான் இன்று புரட்சித் தலைவி அவர்களுடைய முதுகையும் அவர்கள் குத்தியிருக்கிறார்கள். ஆக அந்தத் துரோகம் செய்தவர்களோடு எனக்கு நெருங்கிய பழக்கம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் நெருங்கிய பழக்கம் உள்ளவர் என்று சொன்னது நீங்கள் எல்லோருடனும் நல்ல முறையில் பழகுகிறவர்என்கிற அர்த்தத்திலே சொன்னேன். ஏதோ உங்களுக்கு அவர்களோடு தொடர்பு இருக்கிறது என்பதைப்போல நான் சொல்லவில்லை. நான் சொன்ன வார்த்தை கூட எல்லோருடனும் பழகுகிற வாய்ப்பை உடையவர் என்பதாக மாற்றிக்கொள்ளப்படுகிறது.

2. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) ஆலயத் திருப்பணி நிதிக்கு சில உறுப்பினர்கள் தங்கள் ஓராண்டுச் சம்பளம் வழங்கியுள்ளது குறித்து.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கோவில் பராமரிப்பு நிதிக்காக தன்னுடைய ஓராண்டு சம்பளத்தைக் கொடுத்ததைத் தொடர்ந்து இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கா. ப. பட்டாபிராமன் தன்னுடைய ஓராண்டு ஊதியமாக ரூ.30,000-த்தையும் திரு. சி. இராமசுவாமி அவர்கள் ரூ. 15,000-த்தையும், டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் ரூ. 6,250-ஐயும், திரு. க. அர்ச்சுனன் அவர்கள் ரூ. 6,250-க்குமான காசோலைகளை முதலமைச்சர் அவர்களுக்குத் தரவேண்டுமென்று என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். அது முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசோலைகளைக் கொடுத்த அனைவருக்கும் என்னுடைய உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பட்டியல் நீண்டுக்கொண்டே போக வேண்டும் என்ற என் விருப்பத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்கள் நீங்கள் கொடுத்த பிறகு அறிவிக்கப்படும். (குறுக்கீடு) அன்றைக்கு கொடுத்தது வேறு. இது இன்றைக்கு கொடுத்தது. அன்று நீங்கள் கொடுத்தவுடனே அறிவித்தாகிவிட்டது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. ம. தனபால் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் நெருங்கிய பழக்கம் உள்ளவர் என்று சொன்னது நீங்கள் எல்லோருடனும் நல்ல முறையில் பழகுகிறவர்என்கிற அர்த்தத்திலே சொன்னேன். ஏதோ உங்களுக்கு அவர்களோடு தொடர்பு இருக்கிறது என்பதைப்போல நான் சொல்லவில்லை. நான் சொன்ன வார்த்தை கூட எல்லோருடனும் பழகுகிற வாய்ப்பை உடையவர் என்பதாக மாற்றிக்கொள்ளப்படுகிறது.

2. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) ஆலயத் திருப்பணி நிதிக்கு சில உறுப்பினர்கள் தங்கள் ஓராண்டுச் சம்பளம் வழங்கியுள்ளது குறித்து.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கோவில் பராமரிப்பு நிதிக்காக தன்னுடைய ஓராண்டு சம்பளத்தைக் கொடுத்ததைத் தொடர்ந்து இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கா. ப. பட்டாபிராமன் தன்னுடைய ஓராண்டு ஊதியமாக ரூ.30,000-த்தையும் திரு. சி. இராமசுவாமி அவர்கள் ரூ. 15,000-த்தையும், டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் ரூ. 6,250-ஐயும், திரு. க. அர்ச்சுனன் அவர்கள் ரூ. 6,250-க்குமான காசோலைகளை முதலமைச்சர் அவர்களுக்குத் தரவேண்டுமென்று என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். அது முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசோலைகளைக் கொடுத்த அனைவருக்கும் என்னுடைய உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பட்டியல் நீண்டுக்கொண்டே போக வேண்டும் என்ற என் விருப்பத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்கள் நீங்கள் கொடுத்த பிறகு அறிவிக்கப்படும். (குறுக்கீடு) அன்றைக்கு கொடுத்தது வேறு. இது இன்றைக்கு கொடுத்தது. அன்று நீங்கள் கொடுத்தவுடனே அறிவித்தாகிவிட்டது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. ம. தனபால் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு

(குறுக்கீடுகள்) வேறு ஒன்றும் அல்ல. அங்கிருந்த ஒரு பெயர்ப் பலகை மேலேயிருந்து மதுவிலக்குத் துறை ஆணையர் அவர்கள் மீது விழுந்தது.

பேரவையைப் பராமரிக்கின்ற பொதுப்பணித்துறை ஊழியர்களை ஆங்காங்கே சுவர்களிலே மாட்டப்பட்டிருக்கின்ற படங்களுக்கு கீழே இருக்கின்ற பலகைகள் முதலியவை சரியாக இருக்கிறதா என்பதைப் பேரவை முடிந்த பின்னர் சரிபார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் ஆகாது. தினசரி சரிபார்க்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், புதுப்பாக்கம் கிராமம் ஒயிட் ஹவுஸ் பிராசஸ் தொழிற்சாலைக் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகுப் பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம் புதுப்பாக்கம் கிராமத்தில் உள்ள ஒயிட் ஹவுஸ் பிரசாஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் செங்கல்பட்டு தாலுக்கா புதுப்பாக்கம் கிராமத்தில் ச. எண். 43/4-ல் திருவாளர்கள் ஒயிட் ஹவுஸ் பிராசஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1991 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் மாதம் ஒன்றுக்கு சுமார் 2.5 டன் நெய்த உள்ளாடை துணிகள் வெளுக்கப்பட்டு சாயம் ஏற்றும் பணிகள் நடைபெற்று

(குறுக்கீடுகள்) வேறு ஒன்றும் அல்ல. அங்கிருந்த ஒரு பெயர்ப் பலகை மேலேயிருந்து மதுவிலக்குத் துறை ஆணையர் அவர்கள் மீது விழுந்தது.

பேரவையைப் பராமரிக்கின்ற பொதுப்பணித்துறை ஊழியர்களை ஆங்காங்கே சுவர்களிலே மாட்டப்பட்டிருக்கின்ற படங்களுக்கு கீழே இருக்கின்ற பலகைகள் முதலியவை சரியாக இருக்கிறதா என்பதைப் பேரவை முடிந்த பின்னர் சரிபார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் ஆகாது. தினசரி சரிபார்க்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், புதுப்பாக்கம் கிராமம் ஒயிட் ஹவுஸ் பிராசஸ் தொழிற்சாலைக் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகுப் பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம் புதுப்பாக்கம் கிராமத்தில் உள்ள ஒயிட் ஹவுஸ் பிரசாஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் செங்கல்பட்டு தாலுக்கா புதுப்பாக்கம் கிராமத்தில் ச. எண். 43/4-ல் திருவாளர்கள் ஒயிட் ஹவுஸ் பிராசஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1991 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் மாதம் ஒன்றுக்கு சுமார் 2.5 டன் நெய்த உள்ளாடை துணிகள் வெளுக்கப்பட்டு சாயம் ஏற்றும் பணிகள் நடைபெற்று

வருகின்றன. இவ்வாலை நாளொன்றிற்கு 150 கிலோ லிட்டர் நீரை செயல்முறைப் பணிக்கும் 3 கிலோ. லிட்டர் நீரை அன்றாடத் தொழிற்சாலை நலப் பணிகளுக்கும் பயன்படுத்துகிறது இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றிற்கு 3 கி. லிட்டர் கழிவு நீரும் 1.50 கி. லிட்டர் தொழிற் கழிவு நீரும் வெளியேற்றப் படுகின்றது.

இத்தொழிற்சாலை அதன் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய கீழ்க்கண்ட அலகுகளைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தைக் கொண்டுள்ளது :—

(1) சேகரிப்புத் தொட்டி.

(2) இரசாயனப் பொருட்களை கலப்பான்.

(3) பிளாகுலேட்டர்.

(4) முதல்நிலை தெளியவைப்பான்.

(5) காற்றேற்றும் தொட்டி.

(6) இரண்டாம் நிலை படிய வைக்கும் தொட்டி

(7) அழுத்த மண் வடிப்பான்.

(8) தெளியவைப்பான்.

(9) சேகரிப்புத் தொட்டி.

(10) துரித கரிக்கட்டி வடிப்பான்.

(11) சேறு உலர்த்தும் பலகை.

சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீர் நிலத்தில் பாசனத் திற்காகவும் நிலத்தில் தேக்கப்பட்டு உறிஞ்சுவதற்காகவும் பிரித்து பகுதியாக விடப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீரை பாசனத்திற்கு பயன்படுத்த இத் தொழிற்சாலை 4.0 ஹெக்டேர் நிலத்தை வைத்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட இத் தொழிற்சாலைக் கழிவு நீரை பகுப்பாய்வு செய்ததில் நீரில் கலந்த திடப்பொருள், குளோரைடு, சி.ஓ.டி. ஆகியவை வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட தர அளவுகளை மிஞ்சியுள்ளது என்பது அறியப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை சுத்திகரிப்பு நிலைய உறுதியான செயல்பாட்டிற்காக வைப்புத் தொகை யாக ரூ. 1.5 இலட்சம் செலுத்தியுள்ளது. தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரிய தர நிர்ணய அளவுகளை அடையும் தொழிற்சாலை கழிவு நீரை சுத்திகரிக்க கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய செயல்பாட்டை மேம்படுத்த இத்தொழிற் சாலை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் 80 கிலோ சேறு தொழிற்சாலையின் சொந்த நிலத்தில் சேமிக்கப்படுகின்றது. 1974-ம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981-ம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய ஒப்புதலைக் கோரி இத்தொழிற்சாலை விண்ணப்பித்தது. வாரியம் தனது இசைவினை 31—3—1993 வரை வழங்கியுள்ளது. மாதமொருமுறை இத்தொழிற்சாலை ஆய்வு செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இத்தொழிற்சாலை வாரியத்தால் முனைப்பாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கையைப் படித்தேன். அறிக்கையில் இத்தொழிற்சாலை கழிவு நீரை சுத்திகரிக்க தேவையான அலகுகளைக் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை இயக்குவதையும், அந்த சுத்திகரிப்பு நிலையத்திலேயிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரில் திடப்பொருள்கள், குளோரைடு, சி. ஓ. டி. ஆகியவைகள் அதிகமாக இருக்கின்றது என்பதையும் அறிந்தேன். சுத்திகரிப்பு நிலையத்தினுடைய செயல்பாட்டை மேம்படுத்துவதின் மூலம் அவை சரிசெய்யப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது, அப்படி சரிசெய்யப்படுகின்ற போது, அங்கே கிராமப் பகுதியிலே பொது கிணற்றிலே ஏற்கனவே குடிநீர் நச்சு நீராக மாறியுள்ள ஒரு தன்மை இருக்கிறது. அந்தத் தன்மை எவ்வகையிலே சரி செய்யப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சுத்திகரிப்பு நிலையம் ஒழுங்காகச் செயல்பட்டால் இந்தப் பிரச்சினை ஏற்படாது என்று கருதுகிறேன், இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டவுடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் அதைப் பற்றித் தெரிவித்திருக்கிறேன். எனவே. அதன் மீது நடவடிக்கை எடுத்தால் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே கிடையாது, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கூடாது, அடுத்த கவன ஈர்ப்பு' திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இருக்கையில் இல்லை

1993 ஏப்ரல் 22]

5, அறிக்கை அளித்தல்

அரசு உறுதி மொழிக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். டாக்டர். ஜெ. பரந்தாமன் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் சார்பாக.

டாக்டர் ஜெ, பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குழுத் தலைவரின் சார்பாக 1992–93 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஒன்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்

6. மானியக் கோரிக்கைகள், 1993–94—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி,

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத்துறை,

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை,

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி,

முற்பகல் 11.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–94 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்திற்கான பதிலுரை—தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயம் நல்லதொரு வளர்ச்சியினை எய்த, அங்கு அமைதி நிலவ வேண்டும். ஆக்க பூர்வமான செயல்கள் நடைபெறுவதற்கு ஏற்ற ஆரோக்கியமான சூழ்நிலை அமைய வேண்டும். சமுதாயத்தில் உள்ள பல்வேறு தீய சக்திகளையும், சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் தனி மனித மற்றும் சமூக இடர்பாடுகளையும், இன்னல்களையும் களைந்து அமைதியை நிலைநாட்டி, பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் தேவையான ஒரு அடிப்படை வசதியை அமைத்துக் கொடுக்கும், அரிய பணியினை ஆற்றி வரும் துறை தான் காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறைகள் ஆகும்.

5, அறிக்கை அளித்தல்

அரசு உறுதி மொழிக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். டாக்டர். ஜெ. பரந்தாமன் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் சார்பாக.

டாக்டர் ஜெ, பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குழுத் தலைவரின் சார்பாக 1992–93 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஒன்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்

6. மானியக் கோரிக்கைகள், 1993–94—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி,

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை,

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை,

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி,

முற்பகல் 11.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–94 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்திற்கான பதிலுரை—தொடர்ச்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயம் நல்லதொரு வளர்ச்சியினை எய்த, அங்கு அமைதி நிலவ வேண்டும். ஆக்க பூர்வமான செயல்கள் நடைபெறுவதற்கு ஏற்ற ஆரோக்கியமான சூழ்நிலை அமைய வேண்டும். சமுதாயத்தில் உள்ள பல்வேறு தீய சக்திகளையும், சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் தனி மனித மற்றும் சமூக இடர்பாடுகளையும், இன்னல்களையும் களைந்து அமைதியை நிலைநாட்டி, பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் தேவையான ஒரு அடிப்படை வசதியை அமைத்துக் கொடுக்கும், அரிய பணியினை ஆற்றி வரும் துறை தான் காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் ஆயத்தீர்வைத் துறைகள் ஆகும்.

முக்கியமான இப்பணிகளைத் தொய்வின்றி ஆற்றிக்கொண்டு இருக்கும் இம்மூன்று துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு, என்னுடைய பதிலுரையை சற்று விளக்கமாகவே எடுத்துரைக்க விரும்புகிறேன், பிரச்சினைகளும் சவால்களும் போட்டிகளும் அனைத்துத் துறைகளிலும் முன்பிருந்ததை விட பன்மடங்கு அதிகமாகிவிட்ட இன்றைய சூழ்நிலையில். சட்டம் ஒழுங்கினைப் பாதுகாப்பதும், குற்றங்களின் நிகழ்வினைக் கண்டுபிடிப்பதும். அவை நிகழாமல் தடுப்பதும். மிகவும் கடினமான பணி என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள், இருப்பினும், பிரச்சினைகளைக் கண்டு பயப்படாமல். நிர்வாகத்திற்கு ஏற்படும் பல்வேறு சவால்களையும் சோதனைகளையும் உறுதியான உள்ளத்துடன் எதிர் நோக்கி, மக்கட்பணி ஆற்றுவதே எங்கள் கடமை என்று ஏற்றுக் கொண்டு செயலாற்றும் இந்த அரசு, மிகச் சிறந்த முறையில் இந்த மூன்று முக்கிய துறைகளின் செயல்பாடுகளும் அமைய வேண்டும் என்பதற்காக எடுத்த நடவடிக்கைகளையும், இடைவிடாமல் தொடர்ந்து பாடுபட்டு வருவதையும் இந்த மாமன்றம் நன்கறியும்.

கடந்த இரண்டு நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடர்களின் போதும், காவல்துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றினை நவீனப்படுத்துதல், அவற்றின் செயல்திறனை உயர்த்துதல், மக்களை மதுவின் பிடியில் இருந்து மீட்க வேண்டும் என்ற கொள்கைக்கு ஊறு நேராவண்ணம் ஆயத் தீர்வை வருவாயினை அதிகரித்தல், ஆகியவற்றை இந்த அரசு முனைந்து செயல்படுத்தும் என்பதை என்னுடைய பதிலுரைகளில் ஏற்கனவே நான் தெளிவு படுத்தியிருந்தேன்,

அதன்படி 21 மாதங்களில் இந்த மூன்று துறைகளிலும் இந்த அரசு நடத்திக் காட்டியிருக்கும் சாதனைகளையும். ஏற்படுத்தியுள்ள வளர்ச்சியையும், உயர்த்தியுள்ள செயல் திறனையும் இந்த மாமன்றமும் அறியும், தமிழக மக்களும் நன்கு அறிவர்,

இந்த மூன்று துறைகளும் மக்களின் நலன் காக்க எப்படிப் பணியாற்றி உள்ளன என்பதனையும் இந்த நிதியாண்டில் இந்த மூன்று துறைகளின் மேம்பாட்டிற்காக அரசு மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள் என்ன என்பதைப் பற்றியும் இத்துறைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், நான் இந்தத் துறைகளுக்கான அமைச்சர் என்ற முறையில், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்குத் தேவையான விளக்கங்களை இந்தப் பதிலுரையில் எடுத்துக் கூற விரும்புகிறேன்,

1993 ஏப்ரல் 22] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

முதலாவதாக ஆயத் தீர்வைத் துறைக்கான பதிலுரையையும், அதன் பின் தீயணைப்புத் துறைக்கான பதிலுரையையும், அதனைத் தொடர்ந்து காவல்துறைக்கான பதிலுரையையும் அளிக்க விரும்புகிறேன்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எங்கள் அரசின் மதுவிலக்கு கொள்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். ஆயத்தீர்வையின் மூலம் எவ்வளவுதான் அதிக வருவாய் கிடைத்தாலும் மக்கள் நலன்பேணு வதே மகத்தானது என்று உணர்ந்து எங்கள் அரசு செயல்படுகிறது. எங்கள் அரசைப் பொறுத்தவரை இந்த மாநிலத்தில் பூரண மது விலக்கு அமுல்படுத்த வேண்டும்; அதற்கான நடவடிக்கை தொடரப் படவேண்டும் ; அதே சமயம் பூரண மதுவிலக்கின் எதிரியாகிய, கள்ளச்சாராயம், கள்ள மதுபானம், போதைப் பொருட்கள் இந்த மாநிலத்தை விட்டு அடியோடு அகற்றப்பட வேண்டும். அதில் ஈடுபட்டவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் ; இதைத் தவிர மதுவிலக்குக் கொள்கையின் நடைமுறையை செயலாக்கம் செய்யும்போது ஏற் பட்டிருக்கும் குறைபாடுகள், தவறுகள் தவிர்க்கப்படவேண்டும் ; மதுவிலக்கு-ஆயத் தீர்வை பற்றிய பொருளே ஒரு பிரச்சினைக் குரிய, உணர்ச்சிகளைத் தொடும் ஒரு (Sensative Subject) ஆகும். இதில் கூட தமிழகம் ஒரு நல்ல முன்னோடியாகத்தான் இருந்து வருகிறது. பூரண மதுவிலக்கு தான் எங்கள் அரசின் கொள்கை. அதைப் படிப்படியாக நிறைவேற்றுவோம் என்ற எங்களின் திட் டத்தில் எந்தவித மாறுதலும் இல்லை. அதன் முதல்படியாகத் தான் மலிவு விலை மதுவை இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற வுடனேயே முழுமையாக ஒழித்தது. அதன் மூலம் நிர்மூலமாகிக் கொண்டிருந்த பெரும்பாலான ஏழையெளிய குடும்பங்களைக், காப்பாற்றியது.

முற்பகல் 11.55

அதையடுத்து இந்தியாவில் தயாரித்த அயல்நாட்டு மதுபானங் களை விற்பனை செய்து கொண்டிருக்கும் சில்லரை விற்பனைக் கடைகளில், சமீப காலமாக இயங்கி வந்த 'பார்'-களால் பலர் பாதிக்கப்படுகிறார்கள், தவறுகளும் அதிகமாக நடக் கின்றன என்று தெரிய வந்த உடனேயே, அரசு வருவாய் இழப்பைக் கூடப் பொருட்படுத்தாமல், வரும் ஜூன் மாதம் முதல் மதுபான சில்லரைக் கடைகளில் உள்ள 'பார்' களை மூடிவிட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த

மாமன்றம் நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முடிவிலும் இனி எவ்வித மாற்றமும் இல்லை. இப்படியாக எடுத்த கொள்கையில் பிடிப்பும், அதை நிறைவேற்ற எடுக்கப் பட்ட முயற்சிகளும் நாட்டு மக்களின் நலனைத் தலையாயதாகக் கொண்டே தொடர்கின்றன. இனியும் தொடரும்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்) தேங்கிக் கிடந்தது. சுமார் $2\frac{1}{2}$ லட்சம் டன் வரை இறுதி இருப்பாக மிஞ்சிக் கிடந்தது. சர்க்கரை ஆலைகளில் சேமித்து வைக்க இடமில்லாது கருப்பஞ்சாற்று கசண்டை வெளியிடக் குழிகளில் சேமித்தார்கள். இதனால், சுற்றுப் புறச் சூழல் பெரிதும் மாசு பட்டது. இந்நிலையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், 1990-91-ல் 1 லட்சம் டன் கருப்பஞ்சாற்று கசண்டை ஏற்றுமதி செய்தோம். அதற்கு அடுத்த ஆண்டு 1991-92ல் மேலும் 1 லட்சம் டன் கருப்பஞ்சாற்று கசண்டை மத்திய அரசின் அனுமதி பெற்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இருக்கிறோம். அதோடு மாட்டுத் தீவனம், நல்லெண்ணெய் ஆகியவற்றின் உற்பத்திக்கென, கூடுதல் ஒதுக்கீடும் செய்துள்ளோம். இப்படி எல்லாம் எடுத்த நடவடிக்கைகளால் மிச்சமாகக் கிடந்த கருப்பஞ்சாற்று கசண்டு இருப்பை, கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல், சுற்றுப்புறத் தூய்மைக்கு மாசு ஏற்படுவதைத் தடுத்துள்ளோம். எங்கள் ஆட்சியில்தான் ஏற்று மதிக்கு அனுமதிக்கப்பட்ட கருப்பஞ்சாற்று கசண்டுக்கு அதிக விலை பெற்று இருக்கின்றோம். ஒரு டன் கருப்பஞ்சாற்று, கசண்டை 120 ரூபாய்க்கு விற்று வந்த சர்க்கரை ஆலைகள், சென்ற ஆண்டில்தான், ஏற்றுமதி செய்வோருடைய போட்டியை ஊக்குவித்து, ஒரு டன்னுக்கு 450 ரூபாய் என்ற விலைக்கு விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் கூடுதலாக பல கோடி ரூபாய், சர்க்கரை ஆலைகளுக்குக் கிடைத்திருக்கிறது என்பதையும் இங்கே தெரி விக்க விரும்புகிறேன்.

அடுத்து, அரசு எடுத்த ஒரு முக்கிய முடிவுதான், பொதுவாக மிஞ்சும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை பயன்படுத்துவதற்கான நிரந்தர ஏற்பாடாக அமைந்துள்ளது. நான்கு புதிய வடிப் பாலைகள், (டிஸ்டிலரிகள்) தொடங்குவதற்கு, இந்த அரசு அளித்த அனுமதியினைத் தொடர்ந்து, கட்டுமானப் பணிகள் எல்லாம் முடிந்து, இன்னும் ஓரிரு மாதங்களில் உற்பத்தியைத் தொடங்க உள்ளன என்பதையும் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன் புதிதாகத் தொடங்க இருக்கும் வடிப்பாலைகள் எல் லாம் உற்பத்தியைத் தொடங்கிவிட்டால், இனி கருப்பஞ்சாற்று கசண்டு மிஞ்சிக் கிடக்கும் நிலையே ஏற்படாது.

அடுத்து கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீது தற்போது நிலவும் கட்டுப்பாட்டினை அகற்ற மைய அரசு முனைவதாகத் தெரிய வருகிறது. அவ்வாறு கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டால், கருப்பஞ்சாற்று கசண்டின் விலை உயரலாம். அதனால் தயாரிக்கப்படும் ரசாயனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றின் விலையும் உயரலாம். மாநில அரசுக்கு வருவாய் குறையலாம். கள்ளச் சாராய உற்பத்திக்கு கருப்பஞ்சாற்று கசண்டு எளிதாகக் கிடைக்கலாம். எனவே, இந்நிலையைச் சுட்டிக்காட்டி கருப்பஞ்சாற்று கசண்டின் மீதான கட்டுப்பாடுகள் குறித்து தற்போது உள்ள நிலையே தொடரவேண்டும் என்றும், ஒருவேளை கட்டுப்பாட்டை நீக்கவேண்டிய அவசியம் ஏற்படின் மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசிக்கப்படவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி பாரதப் பிரதமருக்கு நான் ஒரு கடிதம் எழுதி உள்ளேன். மேற்படி கருத்துக்கள், கருத்தில் கொள்ளப்படும் என்று பாரதப் பிரதமர் அவர்களும் பதில் அனுப்பி உள்ளார். இந்த விஷயத்தில் மைய அரசு நிதானத்தோடு சரியான முடிவு எடுக்கும் என்று கருதுகிறேன்.

தற்போது தமிழகத்தில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை, பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 4216 சில்லரை விற்பனைக் கடைகள் விற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு இந்தக் கடைகளை விற்பதற்காக நடத்திய பொது ஏலத்தில், அரசுக்குக் கிடைத்த உரிமக் கட்டணத் தொகை 98.46 கோடி ரூபாய்....... இதற்கு முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த இனத்தால் கிட்டிய வருவாய் 35.58 கோடி ரூபாய் மட்டும் தான்.

நண்பகல் 12.00

தவறான சரக்குகளோ, கள்ளச் சாராயமோ, Spurious மற்றும் Seconds போன்ற சரக்குகள் தமிழ்நாட்டில் நிலவா வண்ணம் பார்த்துக்கொள்வதில் இந்த அரசு உன்னிப்பாகவும், உஷாராகவும் இருக்கிறது. சாராவி, கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தும் குறுக்கு வழிகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. சாராவியைப் பயன்படுத்தி கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், கள்ள மது வடிப்போர், கடத்துவோர், விற்போர் விபரமெல்லாம் திரட்டி, இவற்றிற்கு மூலகாரணமாக இருப்பவர்கள் மீது முக்கிய கவனம் செலுத்தப்பட்டு, சட்டத்தின் பிடியின்கீழ்க் கொண்டு வரப்படுகின்றனர். குற்றவியல் வழக்குகளில் அப்படிப்பட்டவர்கள் எல்லாம் கைது செய்யப்படுகிறார்கள். குண்டர் சட்டத்தின்கீழ் பிடிக்கப்படுகிறார்கள். சில முக்கிய பிரபல புள்ளிகளைச் சமீபத்தில் பிடித்தது ஒரு பரபரப்பையே ஏற்படுத்தியது. பெரிய அளவில் ஈடுபடும் இதுபோன்ற சமூக விரோதிகளுக்கு இது ஒரு பாடமாகவும், பயமாகவும் அமைய வேண்டும் என்பதே இதுபோன்ற தீவிர முயற்சிகளின் நோக்கம் ஆகும்.

1992–93 ஆம் ஆண்டு காவல் துறையினர் மதுவிலக்குப் பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றியுள்ளனர். 1992—93-இல் மொத்தம் 5,23,722 வழக்குகள் மதுவிலக்கு காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1992–93 ஆம் ஆண்டு கண்டுபிடிககப்பட்ட மதுவிலக்கு வழக்குகளின் எண்ணிக்கை, 1991–92 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் 1,92,037 அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி). இவ்வழக்குகள் நாள்தோறும் நடத்திய மது ஒழிப்பு வேட்டைகளிலும், மாவட்டங்களில் நடத்திய சிறப்பு வேட்டைகளிலும், தீபாவளி, பொங்கல் போன்ற திருவிழாக் காலங்களுக்கு முன்னால் மாநிலம் தழுவி நடத்தப்பெற்ற கள்ள மதுவிலக்கு வேட்டைகளிலும் பெருமளவில் காவல் துறையினரை ஒருங்கே கூட்டி அவ்வப்போது நடத்திய மாநிலம் தழுவிய மது வேட்டைகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த மது ஒழிப்பு வேட்டைகளின்போது காவல் துறையினர் 2,03,28,673 லிட்டர் கள்ளச் சாராய ஊறலையும், 40,13,929 லிட்டர் கள்ளச் சாராயத்தையும், 2,80,855 லிட்டர் கள்ளையும், 35,97,292 ஆந்திரா சாராய பாக்கெட்டுகளையும் கைப்பற்றி அழித்துள்ளனர். இது தவிர, 3,39,700 லிட்டர் எரி சாராயத்தையும் 65,28,322 ரூபாய் மதிப்புள்ள போலி மது பாட்டில்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு இவ்வாண்டில் காவல் துறையினரால் கண்டுபிடித்து அழிக்கப்பட்ட ஊறல், 1991–92 ஆம் ஆண்டில் கண்டுபிடித்து அழிக்கப்பட்ட ஊறலைக் காட்டிலும் 71,67,225 லிட்டர்கள் அதிகமாகும். இதுபோன்று இவர்கள், 1992–93 ஆம் ஆண்டில் கண்டுபிடித்த கள்ளச் சாராயம் 1991–92 ஆம் ஆண்டில் கண்டுபிடித்ததை விட 14,28,135 லிட்டர்கள் அதிகமாகும். இந்த ஆண்டில் கைப்பற்றப்பட்ட எரி சாராயம் இதற்கு முந்திய ஆண்டில் கைப்பற்றப்பட்ட எரி சாராயத்தைக் காட்டிலும் 1,54,254 லிட்டர்கள் அதிகமாகும். இதுபோன்றே இந்த ஆண்டில் கைப்பற்றப்பட்ட கள், கடந்த ஆண்டில் கைப்பற்றப்பட்ட கள்ளைக் காட்டிலும் 78,577 லிட்டர்கள் அதிகமாகும். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டில் 25,79,055 ஆந்திரா சாராய பாக்கெட்டுகள் அதிகமாக கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு 20,00,000 ரூபாய் மதிப்புள்ள போலி மது பாட்டில்கள் அதிகமாக கைப்பற்றப்பட்டுள்ளன. காவல் துறையினர் இவ்வாண்டில் லாரிகள், பஸ்கள், வேன்கள், கார்கள், ஜீப்புகள், ஆட்டோ ரிக்ஷாக்கள், படகுகள்,

1993 ஏப்ரல் 22] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்கள், மாட்டு வண்டிகள், சைக்கிள்கள் போன்ற 3,439 வாகனங்களை மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டதற்காகக் கைப்பற்றியுள்ளனர். ஆனால் 1991-92 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 2,139 ஆகும். கடந்த ஆண்டு கைப்பற்றப்பட்ட வாகனங்களை விட, இந்த ஆண்டு 1,300 வாகனங்களை அதிகமாக காவல் துறையினர் கைப்பற்றி உள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

காவல் துறையினர் 1992-93 ஆம் ஆண்டு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ், 1,209 தீவிர மதுக் குற்றவாளிகளைக் கைது செய்து, சிறையில் அடைத்துள்ளனர். 1991-92 ஆம் ஆண்டு தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படவர்களின் எண்ணிக்கை 255 மட்டுமேயாகும். தடுப்புக் காவல் சட்டம் 1982 ஆம் ஆண்டு அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1982 முதல் 1991 வரை 10 ஆண்டுகளில் இச்சட்டத்தின்கீழ், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,337 ஆகும். ஆனால், 1992—93 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,426 பேர்களை கைது செய்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1982 முதல் 1991 வரை இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், அதிகமாக மதுக் குற்றவாளிகளைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

சாராய ஊறல், கள்ளச் சாராயம், கள் போன்ற மது வகைகளைக் கண்டுபிடித்து ஒழிப்பதிலும், எரிசாராயம், போலி மது, ஆகியவற்றைக் கண்டுபிடித்துக் கைப்பற்றுவதிலும், மதுக் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களைக் கைப்பற்றுவதிலும், கொடிய கள்ளச் சாராய வியாபாரிகளை தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்வதிலும், சென்ற ஆண்டைக் காட்டிலும் சிறப்பாக காவல் துறையினர் பணி புரிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

1992 இன் இறுதிவாக்கில் இரு முக்கியமான ஆணைகளை அரசு ராசி செய்து கொள்ளுவது (Compounding of cffences) பற்றியதாகும். இரண்டாவது ஆணை மதுக் குற்றங்களில் ஈடுபடும் வாகனங்களைப் பறிமுதல் செய்வது பற்றியது ஆகும். மதுக் குற்றங்களை ராசி செய்து கொள்ளும் ஆணையைப் பயன்படுத்தி, நவம்பர் 1992 முதல் மார்ச் 1993 வரை காவல் துறையினர் 3,36,90,000 ரூபாய் வசூலித்து அரசுக்குச் செலுத்தி யுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது ஆணையைப் பயன்படுத்தி, 37 வாகனங்களைப் பறிமுதல் செய்துள்ளனர்.

தமிழக அரசு ஆளுநர் உரையில் மதுவிலக்குப் பிரிவினை பலப்படுத்தும் முகத்தான் 7 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவித்தது. ஆளுநர் உரைக்குப் பின், மதுவிலக்குப் பிரிவினை பலப்படுத்தி, அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. இவ்வாணை கூடுதலாக 52 கள்ள மது ஒழிப்பு காவல் நிலையங்களையும், 173 வாகனங்களையும், 75 தொலைபேசிகளையும், 5 ஒயர்லெஸ் செட்டுகளையும், 1 காவல் துறைத் துணைத் தலைவர், 2 காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஏனைய காவல் துறையினரையும் மதுவிலக்குப் பிரிவிற்கு அளித்ததுடன் புதிய 7 மது உளவுப் பிரிவுகளை உண்டாக்கியுள்ளது. இந்த ஆணையை உடனடியாக நிறைவேற்றி, 52 கள்ள மது ஒழிப்பு காவல் நிலையங்களும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

காவல்துறையினர் கள்ள மது வேட்டைகள் நடத்துவதோடு அல்லாமல், கள்ள மதுவின் பிடியில் இருந்து விடுபட்ட கிராமங்களுக்கு மாற்றுப் பிழைப்பு வசதியும், தக்க பொருளாதார உதவியும் செய்து வந்துள்ளனர். உதாரணமாக, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த, கள்ள மதுவின் பிடியில் இருந்து விடுபட்ட சிறிய கிராமமான ம.கரிசல் குளத்திற்கு 4,66,000 ரூபாய் மதிப்புள்ள மாற்றுப் பிழைப்பு வழி உபகரணங்களை காவல் துறையினர் முயற்சியின்பால் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தந்துள்ளார். 1992 ஜூன் மாதம் இவ்வுதவி அளித்து, ஒரு ஆண்டுக்குப் பிறகு, இக்கிராம மக்கள் இன்றுவரை கள்ள மதுவை நாடாமலும், காய்ச்சாமலும் நன்முறையில் வாழ்கின்றனர் என்ற செய்தி நம்மைப் பெருமைப்பட வைக்கிற ஒன்றாகும்.

இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகை பாட்டில்கள் அசலாக இருந்தாலும், போலியாக இருந்தாலும் அவைகள் நீதிமன்ற விசாரணைக்குப் பின்னாலும், வழக்கு முடிவு செய்யப்பட்ட பின்னாலும், நீதிபதியின் உத்தரவினைப் பெற்று அழிக்கப்படுகின்றன. காலி இரும்பு பேரல்கள் அரசாங்கத்திற்குப் பறிமுதல் செய்யப்பட்டு, ஜுடீஷியல் மேஜிஸ்ட்ரேட் அவர்களால் பொது ஏலத்தில் விடப்படுகின்றன. ஏலத்தில் கிடைக்கும் பணம் அரசாங்கக் கணக்கில் செலுத்தப்படுகிறது. Rectified spirit உடன் கூடிய பேரல்கள் அரசாங்கத்திற்குப் பறிமுதல் செய்யப்பட்டு, வழக்கு முடிவுற்றபின் பேரலில் (Barrel) உள்ள Rectified spirit முறைப்படி உரிமம் பெற்ற வடிசாலைகளுக்கு (Distilleries) விற்கப்படுகிறது. அந்த வடிசாலைகள் வாங்க மறுத்தால், இந்த Rectified spirit அழிக்கப்படுகிறது. சாராய ஊறல் எனப்படும் Fermented wash எந்த இடத்தில் கண்டுபிடிக்கப்படுகிறதோ அதே இடத்தில் முழுமையாக அழிக்கப்படுகிறது. கள்ளச் சாராயம் (Illicitly Distilled Arrack) எந்த இடத்தில் கண்டுபிடிக்கப்படுகிறதோ அதே

இடத்தில் இன்ஸ்பெக்டர் அந்தஸ்திற்கு உயர்வான போலீஸ் அதிகாரிகளின் முன்னிலையில் அழிக்கப்பட்டு விடுகிறது. ரசாயனப் பரிசோதனைக்காக மட்டும் சில முன் மாதிரிகள் (Samples) எடுத்து வைக்கப்படுகின்றன. கள்ளச் சாராய பாக்கெட்டுகள் (Arrack Sachets) எந்த இடத்தில் கண்டு பிடிக்கப்படுகிறதோ அதே இடத்தில், அல்லது அருகாமையில் அவைகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. சில கள்ளச் சாராயப் பாக்கெட்டுகள் காவல் துறையினரால் ரசாயனப் பரிசோதனைக்காகப் பாதுகாப்பில் வைக்கப்படுகின்றன. பல விதமான அமைப்புகளில் உள்ள பிளாஸ்டிக் கேன்கள் அரசுக்குப் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் பொது ஏலத்திற்கு விடப்பட்டு அதன் வருமானம் அரசாங்கக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

பிற்பகல் 12-10

எந்த அமலாக்கமும், சட்டத்தின் துணையோடு, அதற்கென உருவாக்கப்பட்ட அமைப்பின் உதவியால் நிறைவேற்றப்படுகிறது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெறும் சட்ட நிறைவேற்றம், முழுப் பரிகாரமாக இருக்க முடியாது. பயனடையும் மக்களின் தீவிர ஈடுபாடுதான், திட்டத்தின் வெற்றிக்கு மிகவும் முக்கியம். குடியால் விளையும் கேடு, அதனால் ஏற்படும் பாதிப்பு, ஆகியவற்றை குடிப்போர் மனதில் குடியேற்ற வேண்டும். அதற்கான ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்; இதற்கு மக்களில் ஒரு சாரார் ஒரு இயக்கமாக மாறவேண்டும்; இதற்கு அரசியல் மன உறுதி கொண்ட ஆட்சி வேண்டும், அமைப்பும் வேண்டும், பொது மக்களின் ஒத்துழைப்பும் ஈடுபாடும் வேண்டும். இவற்றை எல்லாம் பின்னணியாக வைத்துத்தான் எனது தலைமையில், மாநில மட்ட மதுவிலக்குப் பிரச்சாரக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

அக்குழு நீண்ட நெடிய விவாதத்திற்குப் பின் 17 பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவைகளில் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்குச் சத்துணவுக் கட்டிடங்களைப் பயன்படுத்துதல், மருத்துவ முகாம்களில் மதுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளித்தல், தொலைக்காட்சி, வானொலி போன்ற சாதனங்களைப் பயன்படுத்துதல், நாடகம், சினிமா மூலம் பிரச்சாரம் செய்தல், சிறுகதைகளை, நாடகங்களை மாணவர்களின் மூலம் எழுத வைத்து, பரிசு வழங்குதல், 'மதுவிலக்கு' மற்றும் 'பெண்ணுரிமை' என்ற தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகளை 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் பாடமாகச் சேர்த்தல், செய்தித்தாள்களில் மதுவிலக்கு இருவரி பிரச்சார வாசகங்களை வெளி

யிடுதல், மற்றும் திரைப்படங்களில் மது அருந்தும் காட்சிகளைத் தவிர்த்தல் போன்ற 8 பரிந்துரைகளின் மீது தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டுவிட்டன.

ஏனைய பரிந்துரைகளில், மாவட்ட, வட்டார ரீதியில் குழுக்கள் அமைத்தல், பிரச்சாரத்திற்கு இளைஞர்களைப் பயன்படுத்துதல், சட்டத்தை கடுமையாக்கல், குடிப்பழக்க மீட்பு மையங்கள் ஏற்படுத்தல், மறுவாழ்வு அளித்தல் போன்ற பரிந்துரைகளின் மீது தீவிரப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

பூரண மதுவிலக்கை எவ்வளவு விரைவில் அமல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் அமல்படுத்த வேண்டும் என்ற தணியாத ஆர்வம் கொண்டுள்ள இந்த அரசு அந்த இலக்கை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், நாடகக் காவலர் திரு. ஆர். எஸ். மனோகர் அவர்கள் மூலம் 'வெளிச்சம்'' என்கின்ற ஒரு மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தையும், ஜி. வி. பிலிம்ஸ் பட நிறுவனத்தின் மூலம் திரு. விசு அவர்கள் இயக்கிய ''நீங்க நல்லா இருக்கணும்'' என்ற முழு நீள மதுவிலக்குப் பிரச்சாரப் திரைப்படத்தையும் எங்கள் அரசு தயாரித்து வெளியிட்டது.

பொதுமக்களுக்குக் குடியின் தீமையை எடுத்துக்காட்டும் பொருட்டு வேதம் புதிது கண்ணன் எழுதிய 'வெளிச்சம்' என்னும் மதுவிலக்குப் பிரச்சார நாடகம் 2.35 இலட்சம் ரூபாய் செலவில் திரு. ஆர். எஸ். மனோகர் அவர்களால் தயாரிக்கப்பட்டு, 1–5–1992 அன்று சென்னையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. சென்னையில் 15 இடங்களிலும், மாவட்டங்களில் 10 இடங்களிலும் நடத்தப்பட்டது. ஏனைய மாவட்டங்களிலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

சமுதாயத்தில் வளர்ந்துவிட்ட விஷக் காளான் ஆன மதுப் பழக்கத்தை அறவே ஒழிப்பதற்கு மக்கள் மத்தியில் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையின் செயல்பாடுதான் இந்த நாடக, திரைப்படத் தயாரிப்பு. ''நீங்க நல்லா இருக்கணும்'' என்ற திரைப்படம் பிரபலமான நடிக, நடிகையரைக் கொண்டு ஒரு முன்னனி இயக்குநரை வைத்து, 84.17 இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டது. இந்தப் படம் 26–11–1992 அன்று வெளியிடப்பட்டது. இதுவரை 16.9 இலட்சம் ரூபாய் வசூலாகி உள்ளது. விளம்பரம் முதலான செலவினங்களுக்குச் செலவு செய்த 8.6 இலட்சம் ரூபாய் போக, இந்த முயற்சியின் நிகர வரவு 8.3 இலட்சம் ரூபாய் ஆகும். சமுதாய நோக்கோடு

பிற்பகல் 12-15

சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட திரைப்படங்கள் பொதுவாக வசூலில் வெற்றிப் படங்களாக இல்லாவிட்டாலும், அப்படங்கள் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றன என்பதிலும், அவை எதிர்காலத்தில் நல்ல மாற்றங்களை விளைவிக்கின்றன என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை. அந்த வகையில்தான் இந்தத் திரைப்படமும் ஒரு சமுதாய மறுமலர்ச்சிக்கு, ஒரு புதிய மன மாற்றத்திற்கு வழி வகுத்து உள்ளது. மத்திய அரசு இந்தத் திரைப்படத்திற்கு தேசிய விருது அறிவித்துள்ளதிலிருந்தே அரசு தயாரித்த இந்தத் திரைப்படத்தின் தரத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர முடியும். சினிமா என்ற பவர்புல் மீடியத்தை உபயோகித்தால், முக்கியமான செய்திகளை மக்களுக்கு எளிதில் எடுத்துச் சொல்ல முடியும் என்ற முயற்சியில் ஈடுபட்டோம். அரசாங்கம் எடுத்துள்ள திரைப்படம் என்றாலே பொதுவாக மக்கள் மனதில் இதுஒரு விளம்பரபடம், Propaganda film என்கிற எண்ணமும், ஒரு prejudice-ம் ஏற்பட்டுவிடுகிறது. அதன் காரணமாகத் தான் இந்தத் திரைப்படம் எவ்வளவு நன்றாக இருந்த போதிலும், வசூலில் வெற்றிகாண முடியவில்லை என்று நினைக்கிறேன். நானும் இந்தத் திரைப்படத்தை பார்த்தேன். நன்றாகத்தான் இருந்தது. பல பத்திரிகைகள்கூட இந்தத் திரைப் படத்தின் பல நல்ல அம்சங்களைப் பாராட்டி எழுதியுள்ளன. இருந்தபோதிலும் வசூலில் சாதனை படைக்க முடியவில்லை. எனவே, அரசுக்கு பெரிய நஷ்டம் இதனால் ஏற்பட்டுவிட்டது என்று குறை கூறுவதை விட, அரசின் இந்த நல்ல முயற்சியை பாராட்டுவதே பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். சுருங்கக்கூறின், கள்ளச்சாராயம், போலி மது கட்டுப்படுத்தப் படும்; போதைப் பொருள் தடுக்கப்படும்; அவைகளை முழுக்க முழுக்க ஒழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்தி, விநியோகம் ஆகியவை ஒழுங்குபடுத்தப்பட்டு சீரமைக்கப்படும். இந்த வகையில் முறையாக அரசுக்குக் கிடைக்கும் வருவாயைப் பெருக்க சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மார்ச் 12-ஆம் தேதியன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் 1992–93 ஆம் ஆண்டின் ஆயத்தீர்வையின் திருத்திய மதிப்பீடு 350 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளதென்றும், ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பில் 1992–93ல் ஆயத்தீர்வை வருவாய், பிப்ரவரி மாதம் வரை 522.41 கோடி ரூபாய் என்றும் முரண்பாடாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதாகச் சுட்டிக் காட்டினார். திரு. பீட்டர் அல்போன்ஸ் கூறியது போல 1992–93-ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ஆயத்தீர்வை என்ற தலைப்பின் கீழ் 450 கோடி ரூபாய்

என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, 350 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்படவில்லை. மாநில ஆயத்தீர்வைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 27-ல் பிப்ரவரி 1993 வரை 522.41 கோடி ரூபாய் வருவாயாக கிடைத்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகை ஒரு மதிப்பீடாகும். ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை பிப்ரவரி 1993 வரை அதாவது 11 மாதங்களில் வசூலான சரியான தொகையாகும். எனவே, இவை இரண்டிற்கும் எந்த விதமான முரண்பாடும் இல்லையென்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வசூலிக்கப்பட்ட தொகை (actual collection) மதிப்பீட்டை (Estimate) விட சற்று அதிகமாக இருப்பது இயல்பாகும்.

அதேபோல் 1992–93 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளில் ஆயத்தீர்வை 450 கோடி ரூபாய் என்றும் 1993–94 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் (Budget Estimate) ஆயத்தீர்வை மதிப்பீடு 350 கோடி ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதனால் வருவாய் குறைவு ஏற்பட்டுள்ளதென்றும் சில உறுப்பினர்கள் பேசினார்கள். திருத்திய மதிப்பீடு (Revised Estimate) என்பது வேறு, ஒரு ஆண்டின் துவக்கத்தில் தரப்படுகின்ற வரவு-செலவு மதிப்பீடு (Budget Estimate) என்பது வேறு. வரவு-செலவு மதிப்பீடு அனுமானத்தின் அடிப்படையிலும், திருத்திய மதிப்பீடு கடந்த மாதங்களில் பெற்ற வருவாயை அடிப்படையாக வைத்துக் கொண்டும் தயாரிக்கப்படுகின்றன. இதில் இழப்பு என்ற கேள்விக்கே இடமில்லை.

பிற்பகல் 12.20

இந்த அரசு பூரண மதுவிலக்கை தனது கொள்கையாகக் கொண்டுள்ளதால் ஆயத்தீர்வை வருமானத்தை ஒரு பெரிய வருவாய் ஆதாரமாகக் கொள்ள வேண்டுமென்கிற எண்ணமில்லாமல் செயல்பட்டு வருகின்றது. ஆயத்தீர்வை வருவாயை முனைப்புடன் உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த அரசு இயங்கவில்லை. மேலும், 1992–93 ஆம் ஆண்டில் மது அருந்தும் இடங்களுக்கு, அதாவது 'பார்' களுக்கு உரிமம் வழங்கப்பட்டு வருவதாலும், ஒரு கொள்கை முடிவு எடுத்து மது அருந்தும் இடங்களுக்கு உரிமம் வழங்குவது 1993 ஜூன் 1–ஆம் தேதியிலிருந்து ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதாலும், வருவாய் எதிர்பார்ப்பு குறைந்த அளவில் மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும் 1993–94 ஆம் ஆண்டில் மதுவிலக்கு சம்பந்தமாக தீவிர பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 1.5 இலட்சம் படித்த வேலையில்லாத இளைஞர்களை மதுவிலக்குப்

பிரச்சாரத்தில் ஈடுபடுத்த உள்ளோம். மதுவிலக்கு பிரச்சாரம் முடுக்கிவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில்தான் 1993–94 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1992–93 ஆம் ஆண்டிற்கான வருவாயை விடக் குறைவாகக் கணிக்கப்பட்டுள்ளது.

மதுவிலக்கு பற்றிய அரசின் கொள்கை குறித்தும், மதுவிலக்கால் அரசிற்கு ஏற்படும் வருவாய் இழப்பு குறித்தும், மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். பூரண மதுவிலக்கைத் தமிழ்நாட்டில் அமல்படுத்துவதுதான் இந்த அரசின் தெளிவான கொள்கை ஆகும்.

கஞ்சா, கள், அபின் மற்றும் போதைப் பொருள்கள் ஆகியவற்றை ஒழிப்பது குறித்தும், அத்தகைய புகார்கள் மீது காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க, நாட்கள் நிர்ணயிப்பது குறித்தும் கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது குறித்தும், இப்பிரிவில் இளம் காவலர்களையே பணியில் அமர்த்துவது குறித்தும் விளக்கம் அளிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

கஞ்சா பயிரிடப்படும் முக்கிய இடங்களான தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலை, தர்மபுரி மாவட்டததிலுள்ள வத்தல்மலை, மேற்கு மலைத் தொடர்கள் ஆகிய இடங்களில் கஞ்சாச் செடிகளை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டன. கஞ்சா பயிரிட்டவர்கள் மீது தகுந்த காவல்துறை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், பனை, தென்னை மற்றும் ஈச்ச மரத் தொழிலாளர்கள் பதநீர் இறக்குவதற்குப் பதிலாக, கள்ளத்தனமாக கள் இறக்கி விற்பனை செய்ய முயற்சித்தால், அவர்கள் மீதும் காவல் துறையினரால், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கை அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. போதைப் பொருள்களைப் பொறுத்த வரையில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, 1991 ஆம் ஆண்டு 5,027 வழக்குகளும் 1992 ஆம் ஆண்டு 4,497 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. 1992 ஆம் ஆண்டில் 40 நபர்களும், 1993-ஆம் ஆண்டு கடந்த மார்ச் மாதம் வரை 4 நபர்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கள்ளச்சாரராய ஒழிப்பினைத் தீவிரப்படுத்தி, துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள அதன் தொடர்பான புகார்களை மதுவிலக்கு அமல் பிரிவினர் 5 நாட்களுக்குள்ளும், சட்டம் ஒழுங்கு பிரிவினர் 7 நாட்களுக்குள்ளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காலக்கெடு நிர்ணயம் செய்யலாமா என்று அரசு பரிசீலனை செய்து வருகிறது. தற்போது கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு கிராம நிர்வாக அலுவலர்களை ஈடுபடுத்தி உள்ள

திட்டம் நல்ல பலனை அளித்துள்ளது என்பதனையும், அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது என்பதனையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆயத் தீர்வை மேற்பார்வை அலுவல்களுக்காக அதிகப் பணியாளர்களை நியமிக்கக் கோரியும், கலால் வட்டாட்சியர்களை வட்டந்தோறும் நியமிக்கக் கோரியும் அவர்களுக்கு ஜீப்புகள், வழங்க வேண்டும் என்று கோரியும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். மதுபான பாட்டில்களில் ஆயத் தீர்வை வில்லைகளை ஒட்டும் பணி ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களால் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்பணிக்குக் கூடுதல் பணியாளர்களை நியமிக்க அவசியம் எழவில்லை. தற்போது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கலால் உதவி ஆணையாளரும், ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும் ஒரு கலால் வட்டாட்சியரும், ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு வருவாய் ஆய்வாளரும், ஆயத்தீர்வை பணிகளைக் கவனிக்க பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். எனவே இந்தப் பிரிவில் கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும், ஜீப்புகள் வழங்கவும் வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெவித்துக் கொளகிறேன்.

பிற்பகல் 12,25

அடுத்து, Tamil nadu sprit Corporation க்குச் சொந்தமான சாராயக் கலவை நிலையங்களை (Blending Units) ஏனைய தொழில் வளர்ச்சிக்கு பயன்படுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியுள்ளனர். தமிழ்நாடு சாராயக் கழகத்திற்குச் சொந்தமானதும் தற்போது உபயோகத்தில் இல்லாததுமான 10.53 கோடி ரூபாய் மதிப்புள்ள 12 கலவை நிலையங்கள், அந்தப் பகுதிகளிலுள்ள பால் உற்பத்திச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவை நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்குப் பிரச்சாரத்தைப் பொறுத்தவரையில், மாவட்டம் மற்றும் வட்ட அளவில் மக்கள் குழுக்களை அமைக்க மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியுள்ளனர். ஏற்கனவே, கிராம அளவில் மதுவிலக்கு கண்காணிப்புக் குழுக்கள இயங்கிவருகின்றன. இவற்றை விரிவுபடுத்தி, மாவட்டம், வட்டாரம், மற்றும் நகர அளவில் மதுவிலக்குக் குழுக்களை அமைக்க அரசு பரிசீலனை செய்து வருகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துடன் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைக்கான பதிலுரையை நிறைவு செய்து அடுத்தபடியாக தீயணைப்புத்துறை மானியத்திற்கான எனது பதிலுரையை முன் வைக்க விரும்புகிறேன்.

இயற்கையின் சீற்றத்தால் எத்தனையோ விபரீதங்கள் ஏற்படுகின்றன. அவற்றிற்கு ஈடு கொடுக்க, தடுத்து நிறுத்த, மனிதன் எத்தனையோ உபாயங்களையும், யுக்திகளையும் கண்டுபிடித்திருக்கிறான், கையாளுகிறான். அந்த வகையில் தீயால் விளையும் ஆபத்துக்களையும், அழிவுகளையும், சேதத்தையும் தடுத்து நிறுத்த எழுந்ததுதான் தீயணைப்புத் துறை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தீயணைப்புத் துறை, அகில இந்திய அளவில், சிறந்து செயல்படும் பயனுள்ள ஒரு துறை என பெயர் பெற்று இருக்கிறது. தென்னிந்திய மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் எங்கோ உயர்ந்து ஓங்கி நின்று கொண்டிருக்கின்றோம். தீயணைப்பு நிலையங்களானாலும் சரி, தீயணைப்பு வாகனங்களானாலும் சரி, பணி புரிகின்ற படையினரானாலும் சரி, அனைத்திலும் நாம் உயர்ந்த நிலையில் இருக்கின்றோம். நம்மை விட ஆந்திர, கர்நாடக மாநிலங்களின் நிலப்பரப்பு அதிகம், மக்கள் தொகையும் அதிகம்; இவற்றை கணக்கில் கொண்டால், நம்மைவிட, இவர்களுக்குத்தான் அதிக வசதிகள் அமைந்திருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலைமை வேறாகவே இருக்கின்றது. நாம் அசுர வேகத்தில் வளர்ச்சி அடைந்து இருக்கிறோமா என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் தமிழகத்தில் 216 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. ஆந்திராவில் 216-ம், கர்நாடகாவில் 58-ம் தான் இருக்கின்றன. வாகனங்களை வரிசைப்படுத்திப் பார்த்தோம் என்றால் நம்மிடம் 646 வாகனங்கள் இருக்கின்றன. ஆந்திராவில் 576-ம், கர்நாடகாவில் 560-ம் தான் உள்ளன. பணிபுரிபவர்களின் எண்ணிக்கையும் தமிழகத்தில் 6,057, ஆந்திராவில் 4,385, கர்நாடகாவில் 2,377 என்ற நிலையில்தான் இருக்கின்றது. சிறிது பின்னோக்கிப் பார்த்தால், 10 ஆண்டுகளுக்கு முன், 126 தீயணைப்பு நிலையங்கள்தான் நம் மாநிலத்தில் இருந்தன. கடந்த பத்து ஆண்டுகளில் 90 சதவிகிதம் வளர்ச்சி அடைந்து 216 தீயணைப்பு நிலையங்களாக உயர்ந்து இருக்கின்றன. அதேபோல கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் 478 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு பெற்ற இத்துறை, 1992–93 ஆம் ஆண்டிற்கு 2,423 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு (மேசையைத் தட்டும் ஒலி) செய்யும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. அதனால்தான் இத்துறையின் வளர்ச்சி அசுர வேக வளர்ச்சி என்று சிறிது மிகைப்படுத்திக் கூறினேன்.

இத்தருணத்தில் குறிப்பிடத்தக்க ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பின் இதுவரை 15 புதிய தீயணைப்பு நிலையங்களைத் திறந்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி.) நடப்பு ஆண்டில் மேலும் 8 தீயணைப்பு நிலையங்களைத் திறக்க இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி). நவீன தீயணைப்புக் கருவிகளும்,

தீயணைப்பு ஊர்திகளும் வாங்கப்படுகின்றன. மற்ற மாநிலங்களைக் காட்டிலும், உயர்தரமான நவீன தீயணைப்புக் கருவிகளும், ஊர்திகளும் நமது தீயணைப்புத் துறையிடம் உள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். எடுத்துக்காட்டாக சொல்ல வேண்டும் என்றால், இந்தியாவிலேயே நாக்பூர் தீயணைப்புக் கல்லூரியைத் தவிர்த்து, மாநிலங்களில், தமிழ்நாடு தீயணைப்புத் துறையில்தான், 46 மீட்டர் உயரம், உயரக் கூடிய சுழல்மேசை ஏணி இணைந்த நவீன ஊர்தி உள்ளது. இது ஜப்பான் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது. மிக உயரமான மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீவிபத்துக்களில் சிக்குண்டவர்களை மீட்கவும், அவ்வளவு உயர கட்டிடங்களில் பிடித்த தீயினை அணைக்கவும் இது வெகுவாகப் பயன்படுகிறது.

பிற்பகல் 12–30

இத்துறையில் Simon snorkel என்ற ஊர்தியும் உள்ளது. இந்த Simon snorkel என்னும் நவீன தீ தடுப்புக் கருவியினை எடுத்துச் சென்று 27–3–1992 அன்று சென்னை துறைமுகத்தில் நின்று கொண்டிருந்த ''விசுவபாரதி'' என்னும் சரக்கு கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் மிகவும் சாதுர்யமாக கையாண்டு தீ முற்றிலும் அணைக்கப்பட்டது. இவ்வூர்தி மட்டும் இல்லாவிடில் அக்கப்பலில் ஏற்பட்ட தீ அணைக்க முடியாமல் போய் மாபெரும் சேதத்தை விளைவித்து இருக்கும்.

ஆண்டுக்கு ஆண்டு தீ விபத்துக்கள் கூடுகின்றன. சேதமும் அதிகமாகிறது. 1991 ஆம் ஆண்டில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீ விபத்துக்கள் ஏற்பட்டு, சுமார் $10\frac{1}{2}$ கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சேதம் அடைந்தன. அவற்றில் 98 பேர் இறந்தனர். அதே சமயம் 99 பேர் காப்பாற்றப்பட்டனர். அவற்றில் காப்பாற்றப்பட்ட உடைமைகளின் மதிப்பு சுமார் $53\frac{1}{2}$ கோடி ரூபாய். அதற்கடுத்த 1992 ஆம் ஆண்டில், ஏறத்தாழ 13 ஆயிரம் தீ விபத்துக்கள் ஏற்பட்டு சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்து, 96 பேர் இறந்திருக்கிறார்கள். அந்த தீ விபத்துக்களில் இருந்து 208 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு சுமார் $93\frac{1}{2}$ கோடி ரூபாய். எனவே, இத்துறையின் வேலைப் பளு அதிகமாகும் அதே நேரத்தில் திறமையும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

தீ விபத்தில் சிக்கியவர்களின் உயிரையும், உடைமையையும் காப்பதோடு, தீ விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கான பணியையும் இத்துறையினர் செய்வதுடன், ஏனைய இயற்கை சீற்றங்களாகிய வெள்ளம், விபத்து, நிலச்சரிவு, போன்றவைகளால் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுதலும், அவசர

நிவாரணம் அளித்தலும் இத்துறையின் வேலை ஆகும். மேலும் தேர்தல்கள், மாநாடுகள், கலவரங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நடைபெறும் பொழுதும், முக்கியப் பிரமுகர்களின் வருகையின் பொழுது காவல் துறைக்கும், தொற்று நோய் பரவும் காலங்களில் பொதுச் சுகாதாரத் துறைக்கு இத்துறை உதவுகிறது.

நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடியாக மருத்துவ சிகிச்சைக்குக் கொண்டு செல்ல இத்துறையின் ஆம்புலன்ஸ் ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இதைத் தவிர தீ தடுப்பு ஏற்பாடுகள் குறித்து தக்க ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

இந்தத் துறையையும் உயர்த்த, திறனை இன்னும் பெருக்கவும், புதுப்புது யுக்திகளையும், நவீனக் கருவிகளைக் கையாளவும், பணிபுரிவோருக்கான சாதக சூழ்நிலையை உருவாக்கவும், தக்க வசதிகளை, வாகனங்களை, கருவிகளைப் பெருக்கி பணிபுரிவோரின் நலம் பேணி, உற்சாகப்படுத்தியிருக்கின்றோம். இந்த அரசு ஏற்கனவே இத்துறைக்கு வேண்டிய தீயணைப்பு நிலையங்களை, வாகனங்களை, வாட்டர் டெண்டர்களை, நோயாளர் ஊர்திகளை, எளிதில் தூக்கிச் செல்லும் பம்புகளை, மோட்டார் சைக்கிள்களை, தளவாடங்களை வழங்கியதோடு, பல்வேறு வகையான பழுதடைந்த பழைய வாகனங்களை புதுப்பித்திருக்கிறது.

இவற்றின் விபரங்களை எல்லாம் இத்துறையின் கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறேன். இதோடு நில்லாது, பணிபுரிவோரின் நலத்தில் தனி அக்கறை காட்டி அவர்களின் சேமநல நிதிக்கான அரசு மானியத்தை $2\frac{1}{2}$ மடங்காக உயர்த்தியதும் இந்த அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) டெரிகாட்டன் சீருடையை அதிகம் வழங்கியதும், உபரிப்படி, பணி உணவுப்படி இவற்றை உயர்த்தி வழங்கியதும் நாங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறைக்கு சரியானவர்களை, சரியான காலத்தில், சரியான முறையில் தேர்ந்தெடுக்க சீருடைப் பணியாளர் நியமனக் குழுவை ஏற்படுத்தியதும் இந்த அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 12–35

இந்தத் துறை ஒரு சேவைத் துறையாகும். இது ஒரு சர்வீஸ் ஆர்கனைசேஷன். இதனுடைய சேவை மக்களுக்கு விரைந்து கிடைக்க வேண்டும்; சரியான நேரத்தில் கிடைக்க வேண்டும்; போதுமான அளவு கிடைக்க வேண்டும்; தொடர்ந்து கிடைக் வேண்டுமென்பதில் இந்த அரசு மிகக் கவனமாக இருக்கிறது. தீயணைப்பு ஊர்திகள் எல்லாம் துரிதமாக விரைய வேண்டி

யிருப்பதால், இத்துறையின் வண்டிகள் நன்கு பராமரிக்கப்பட்டு எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும்; தொடர்பு கொள்வதற்கு எல்லா தீயணைப்பு நிலையங்களிலும் தொலைபேசி வசதியோடு, கம்பி இல்லாத் தந்தி கருவிகளும் இருந்தாக வேண்டும் என்பதில் இந்த அரசு கவனமாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு முதல்வரவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, குறுக்கிடுவதற்கு மன்னித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் தீயணைப்புத் துறை என்பது எவ்வளவு முக்கியமான துறை என்பதை மாண்புமிகு முதல்வரவர்கள் எடுத்துரைத்தார்கள். அவர்கள் அடுத்த துறைக்குப் போவதற்கு முன்பாக நான் இதைக் கேட்க விழைகிறேன். தீயணைப்பு நிலையங்கள் இந்த ஆண்டு 8 இடங்களில் புதிதாகத் திறக்கப்படுவதாக மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கூட புஞ்சைப்புளியம்பட்டி ஒன்று வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். இதைப்போன்று மற்ற உறுப்பினர்களும் நிறைய இடங்களில் திறக்கப்பட வேண்டுமென்று, அவரவர்களுடைய தொகுதிகளுக்குக் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு 8 நிலையங்கள் திறந்தாலும், வருகின்ற நிதி ஆண்டிலாவது ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒரு நிலையம் திறப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வரவர்கள் எடுப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி இவ்வளவு அவசரப்பட வேண்டியதில்லை. நான் இன்னும் அடுத்தத் துறைக்குப் போகவில்லை.

தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் குறிப்பிட்ட சில இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைப்பது பற்றி வெட்டு தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். எடுத்துக்காட்டாக திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் திசையன்விளை, புதுகோட்டை மாவட்டத்தில் கரம்பக்குடி, பூந்தமல்லி தொகுதியில் ஆவடி, பெண்ணாடம் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் சொன்னது போலவே இன்னும் பல உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் தீயணைப்பு நிலையங்கள் புத்தாகத் தொடங்கப்பட வேண்டுமென்று எனக்கு நிறைய கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே எதிர்க் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து, தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு இது இது வேண்டுமென்று கேட்கிற வாய்ப்பைப் பெற்றுவிடுகிறார்கள். ஆனால், ஆளுங் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானம் தர முடியாது. ஆகவே, திரு. சின்னசாமி அவர்களுடைய கோரிக்கை நியாயமானதுதான். ஆளும் தரப்பிலே இருக்கிற உறுப்பினர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடம் நேரடியாகத்தான் தர முடியும். அவற்றையும் பரிவுடன் பரிசீலிக்கலாம் என்பதை உறுப்பினர்கள் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் தினசரி நான் வரும்போது போகும்போதெல்லாம் அவர்களுடைய கோரிக்கைகளை, மனுக்களை என்னிடம் தந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவற்றை நானும் முடிந்தவரை பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். எனவே, எதிர்க்கட்சியில் உள்ளவர்கள்தான் இத்தகைய மானியக் கோரிக்கை வரும்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறதே தவிர, ஆளும் கட்சி உறுப்பினர்கள் அப்படிக் காத்திருக்க வேண்டிய அவசியம் எழுவதில்லை. அவர்கள் தொடர்ந்து தினசரி அவர்களுடைய கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

ஓர் ஊரில் தீயணைப்பு நிலையம் அமைக்கக் கோரி கோரிக்கைகள் பெறப்படும்போது அந்த ஊரின் மக்கள் தொகை, அந்த ஊருக்கு அருகில் உள்ள தீயணைப்பு நிலையங்கள், ஏற்படக்கூடிய தீ விபத்து அபாயங்கள் போன்றவற்றைப் பரிசீலித்து தீயணைப்பு நிலையங்கள் அமைக்க வேண்டிய அவசியம் கருத்தில் கொள்ளப்பட்டு, தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய ஊர்களின் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அதன்படி இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் அனைத்தும் 1993 ஜனவரியில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

பூந்தமல்லி தொகுதி, ஆவடியைப் பொறுத்தமட்டில் புதிய தீயணைப்பு நிலையம் திறக்கும் செயற்குறிப்பு 1993—94ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இங்கே தீயணைப்பு நிலையம் விரைவில் தொடங்கப்படும். மேலும், காப்புக்காடு, புதுக்கடை, திருச்சிற்றம்பலம், ஆலங்குளம், சன்னாசிநல்லூர், ஆண்டிமடம், மஞ்சூர், முகையூர், பெரியநாயக்கன்பாளையம், கோதையாறு, மஞ்சாலுமூடு, மற்றும்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பேச்சிப்பாறை ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையம் தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியுள்ளார்கள். இவ்விடங்களை முன்னுரிமைப் பட்டியலில் சேர்ப்பது குறித்து 1994ஆம் ஆண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்வதாக இருந்தேன். ஆனால் திரு. சின்னசாமி அவர்கள் மிகவும் வலியுறுத்தித் தன்னுடைய கோரிக்கையை இங்கே வைத்திருப்பதால் அவரைப் போன்றே இன்னும் பல உறுப்பினர்கள் தத்தம் பகுதிகளில் புதிய தீயணைப்பு நிலையங்களைத் தொடங்க வேண்டுமென்று சொல்லியிருப்பதால் இந்த ஆண்டு முன்னுரிமைப் பட்டியலில் பரிசீலிக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)—திருத்தியமைக்க முடியுமா என்று பரிசீலிக்கப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–40

பேராவூரணி, பாபநாசம், குலசேகரம், நத்தம், வாணியம்பாடி, ஆலங்குடி, கோவை வடக்குப் பகுதி ஆகியவற்றில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித் தருமாறு கோரிக்கைகள் வந்துள்ளன. ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் கட்டிடம் கட்ட உத்தேசமாக 9.20 இலட்சம் ரூபாய் செலவாகும். அரசு நிதிநிலையைக் கருத்தில்கொண்டு இவ்விடங்களில் கட்டிடம் கட்டுவது குறித்து தக்க முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை, வேலூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்களில் உள்ள பழைய தீயணைப்பு வண்டியை மாற்றி புதிய வண்டி வாங்கவும், மேலும், பழைய வண்டிகளை மாற்றவும் கோரிக்கைகள் வந்துள்ளன. தீயணைப்பு நிலையங்களில் உள்ள நீர்த்தாங்கி வண்டிகள் குறைந்தது பத்தாண்டுக் காலம் உழைத்த பின்னரே கழிவு செய்யப்பட்டு புதிய ஊர்திகள் வாங்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பழுதடைந்தவைகளை உடனடியாகப் பழுதுபார்க்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறைப் பணியாளர்கள் அனைவரும் அரசு குடியிருப்புகள் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் குடியிருப்புகள் கட்டுவது பரிசீல்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தீயணைப்பு வண்டிகளில் தீயணைப்புச் சாதனங்கள் முழுமையாக இருப்பது குறித்தும், நவீன சாதனங்களைப் பயன்படுத்துவது குறித்தும் விவாதிக்க வேண்டும் என வெட்டுத் தீர்மானம் எழுப்பப்பட்டுள்ளது. தீயணைப்புப் பணிக்காகப் பயன்படுத்தப்படும் ஊர்திகளில் தேவையான கருவிகளும்,

மீட்புப் பணிக்கு வேண்டிய உயிர்மீட்புக் கருவிகளும் வைக்கப் பட்டுள்ளன. இவைகளுடன் நவீன மூச்சுக்கருவி (Breathing Apparatus) தீச்சட்டை (Fire Suits), கொக்கி ஏணி (Hook Ladder), லைப் பாய் (Life Buoy) லைப் ஜாக்கெட் (Life Jackets) ஆகிய நவீன சாதனங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

• சென்னை மாநகரில் பலமாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களைச் சமாளிக்க, ஹைடிராலிக் பிளாட்பார்ம் 'சைமன் ஸ்நார்க்கல்' என்னும் நவீன தீயணைப்பு ஊர்தி 1980-ல் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஜப்பான் நாட்டு உதவித் திட்டத்தின் கீழ் 46 மீட்டர் உயரமுள்ள 'மோரிட்டா' சுழல் மேசை ஏணி ஊர்தியும், குளிர்பதன வசதியுள்ள இரு ஆம்புலன்ஸ் வண்டிகளும், 9 தூக்கிச் செல்லும் பம்புகளும் வாங்கப்பட்டுள்ளன. இவை தவிர, 7 கிராஷ் டெண்டர்களும், 2 எமர்ஜென்சி ரெஸ்க்யூ டெண்டர்களும், 16 ரோசன்பார் பம்புகளும், 50 பச்சார் பம்புகளும், 66 உயர்திறம் வாய்ந்த பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன 295 மூச்சுக்கருவிகளும், தீ விபத்து இடங்களில் பணிபுரிய நெருப்புப் பற்றாத நவீன அலுமினிய மேலங்கிகள் 100-ம் வாங்கப்பட்டு முக்கியமான தீயணைப்பு நிலையங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியப் பொது ஈட்டு உறுதிக் கழகம், 1993-ல் தமிழக தீயணைப்புத் துறைக்கு வழங்க உத்தேசித்துள்ள 1.50 கோடி ரூபாய் கடன் உதவியைப் பெற்று மேலும் நவீன கருவிகளையும் தளவாடங்களையும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையில் பணிபுரிகின்றவர்கள் பல சமயங்களில் தீயின் வெப்பத்தைத் தாங்காது தவிக்கின்றார்கள். இயற்கையோடு போராடி இன்னலுக்கு ஆளாகிறார்கள். பல சமயங்களில் காயம் அடைகின்றார்கள். சில சமயங்களில் காப்பாற்றச் சென்ற இடத்தில் பலியும் ஆகிவிடுகின்றார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், இவர்களுக்குப் பாதுகாப்பளிக்க, குறிப்பாக இவர்களின் குடும்பங்கள் பயன்பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் ஒரு ஒட்டுமொத்த குழுப் பாதுகாப்புத் திட்டத்தை (Group Insurance Scheme) அறிவிக்க இருக்கிறேன். அந்தத் திட்டம் இவர்களுக்கும் பொருந்தும் என்ற நல்ல செய்தியை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதைத் தவிர 50 சதவீதம் மானிய விலையில் காவல்துறையினருக்கு வழங்கப்படுவதைப் போல அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்கின்ற இவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, இனி முதல்,

காவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே தீயணைப்புத் துறையினருக்கும் 50 சதவீதம் மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 12.45

இத்துறையில் பணிபுரிபவர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து தர தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதி வாரியத்தின் மூலம் இவர்களுக்கும் படிப்படியாக வீடு கட்டும் திட்டத்தை அரசு ஏற்று உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் நிதி நிலைமைக்குத் தக்கபடி, படிப்படியாக இத்திட்டம் செயல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி.)

இத்துடன் தீயணைப்புத் துறைக்கான பதிலுரையை நிறைவு செய்து, அடுத்ததாக அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் காவல்துறை மானியத்திற்கான எனது பதிலுரையை முன்வைக்க விழைகிறேன்.

மக்களைக் காத்து ரட்சிக்கும் மன்னன் மக்களுக்கு இறை எனப்படுவான் என்பதுதான் வள்ளுவம். மக்களின் தேவை களில், தம் உயிருக்கும் மேலான ஒன்று இருக்க முடியாது. மக்களின் உயிரைக் காத்து, அவர்தம் உடைமை காத்து, உரிமை காத்து, அமைதி காத்து நிற்பதே அரசின் தலையாய கடமை. மக்களின் ஏனையத் தேவைகள் ஏராளம். அவை அத்தனையும் கிடைக்கப்பெற்றும்கூட, உயிருக்கும் உடைமைக் கும் பாதுகாப்பு இல்லாமல், அமைதியில்லாமல், மன நிம்மதி யில்லாமல் இருந்தால் என்ன பயன்? ஆகவேதான், எந்த ஆட்சியும், முதலாவதாகவும், முக்கியமானதாகவும் கருதுவது, நாட்டில் அமைதி நிலவுகிறதா, மக்கள் மன நிம்மதியுடன் இருக்கிறார்களா, அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் இருக்கிறதா என்பதாகும். எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவை இருந்தாக வேண்டும். இவை இருந்தால்தானே ஏனையவற்றை எண்ணிப் பார்க்க முடியும். அனுபவித்து ஆனந்தப்பட முடியும். இந்நிலையில்தான், ஆட்சி முறையில், இந்தப் பொறுப்புக்கு காரணமான காவல் துறையின் சேவை சமுதாயத்திற்கு வெகுவாகத் தேவை எனக் கொண்டு அவர்களின் முக்கியத்துவம் உணரப்படுகிறது.

வளரும் சமுதாயத்தில், பல்வேறு பரிணாம வளர்ச்சிகள் ஏற்பட்டே தீரும். மக்களின் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஏராளம். இந்தக் காலம் தத்தம் முக்கியத்துவங்களை அழுத்தி ஆர்ப்பரிக்கும் காலம். இன்றைய ஜனநாயக நாட்டின் கடமை மறந்து, உரிமையை மட்டும்

உரத்தக் குரலில் பேசும் காலம். குற்றம் செய்பவர்கள், சட்டத்தை மீறுபவர்கள். வன்முறையில் ஈடுபடுவோர் பெருகி வரும் காலம். குற்றம் புரிவோர் புதுப்புது யுக்திகளைக் கையாளும் காலம். அக்காலங்களில் குற்றம் செய்வோரை வெறுத்து ஒதுக்கி ஏற இறங்கப் பார்த்த காலம் போய், இன்றையச் சூழ்நிலையில் அப்படிப்பட்டவர்களுக்கு கூட, சில சாரார் ஆதரவு கொடுத்து அனுசரிக்கும் காலம். மனித நேயம் மங்கி, ஒழுக்கம் பண்பாடு சிதைந்து கொண்டிருக்கும் காலம்.

பிற்பகல் 12.50

இந்தச் சூழ்நிலையில்தான், காக்கி உடையணிந்த காவல் துறையினர் கடமை ஆற்ற வேண்டியிருக்கிறது. சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டியிருக்கிறது. மக்களின் உயிருக்கும், அவர்தம் உடைமைகளுக்கும் தக்க பாதுகாப்பளிக்க வேண்டியிருக்கிறது. குற்றங்களைத் தடுத்து, சட்டங்களை நிறைவேற்றி, மக்கள் உரிமை பேண வேண்டியிருக்கிறது. உலகத்திலேயே கதவில்லாக் கட்டிடம் எது என்றால் அது காவல் நிலையமாகத்தான் இருக்க முடியும். மற்றவர்களுக்கு கதவாக, காவலாக இருக்கும். அவர்களுக்கு கதவுகள் இல்லைதான். காவல் துறையின் பணி கடுமையானது. கடும் வெயில், சுடும் மணல், கொட்டும் மழை, குமுறி வீசும் புயல், கொந்தளிக்கும் சூழ்நிலை, பேராபத்து, இயற்கைச் சீற்றம், இவற்றிலிருந்து சின்னஞ்சிறிய சங்கடம் எதுவாயினும் காவல் துறையினர் கூப்பிடப்படுகிறார்கள். காவல் துறையிலே இன்றையச் சூழ்நிலையில் எதுஎது அவர்கள் வேலை என்று சொல்ல முடியாத அளவிற்கு எல்லாவற்றிற்கும் ஈடுபடுத்த வேண்டிய அளவிற்கு அவர்களை இழுக்க வேண்டியதாகிறது. நாமெல்லாம் உறங்குப்போது அவர்கள் உறங்காது இருக்க வேண்டும். நாம் விழித்திருக்கும் போதும் அவர்கள் விழிப்போடுதான் இருக்க வேண்டும். நாமெல்லாம் உழைத்தாலும் ஒய்வு என்ற ஒன்று உண்டு. ஆனால் இவர்களோ 24 மணி நேரமும் ஓடோடிக் கொண்டிருக்கிறார்கள். அரசுப் பணியிலேயே கடினமாக உழைக்கும் சமுதாயம் இந்த காவலர் சமுதாயம் தான் எனக் கணக்கெடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி), வன்முறையாளர்கள், கொலை செய்பவர்கள், கொள்ளை அடிப்பவர்கள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், குற்றவாளிகள் ஆகியோருடன் மோதும்போது, தமது உயிரையே பணயம் வைக்க வேண்டியதாகிறது. ஆண்டு தோறும் இந்தியாவில் இறக்கும் இராணுவத்தினரைவிட, இந்தியாவில் இறக்கும் காவல் துறையினரே அதிகம் எனக் கணக்கெடுத்திருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் பணி, ஆபத்தும், பேராபத்தும் நிறைந்த ஒன்றாக இருக்கிறது.

இத்தனை சிரமம்பட்டும்கூட, இவர்களுக்கு நாட்டில் நல்ல பெயர் இருக்கிறதா, பட்ட கஷ்டத்திற்கு பரிகாரம் கிடைத்திருக்கிறதா என்றால், அது ஒரு பெரும் கேள்விக்குறிதான். காரணம் அவர்கள் செய்யும் தொழில் அப்படி. ஒருவரைக் காக்க மற்றவரைத் தடுக்க வேண்டியிருக்கிறது. அதாவது ஒருவரின் உரிமை பேண, மற்றவரை ஒழுங்குபடுத்த அல்லது அவரது போக்கை மாற்ற வேண்டியிருக்கிறது. தடுப்பது, தட்டிக் கேட்பது, கட்டுப்படுத்துவது என்றாலே அது வரவேற்கப் படுவதில்லை அல்லவா? ஒன்றுக்கொன்று மோதும் சாராரை Conflicting force-களை சந்திக்க வேண்டியிருக்கிறது. நேற்றையதினம் கூட உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள், நிதானமாக நடந்தால் மெத்தனமென்றோ, தீவிரமாக நடவடிக்கை எடுத்தால், அத்துமீறல் என்றோ இருபுறமும் இடிக்கப்படுகிறது. எனவே அவர்கள் பணி, ஒரு thankless job-ஆக ஆகிவிடுகிறது.

இதை அடுத்து அவர்கள் கடமை ஆற்றும்போது ஏற்படும் குறுக்கீடுகள், தலையீடுகளைத் தாண்டி, பொது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடு கொடுத்து, சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய பல்வேறு இடைஞ்சல்களுக்கும், இக்கட்டுகளுக்கும் மத்தியில் உழன்று தேற வேண்டியிருக்கிறது.

இவற்றை எல்லாம் இவ்வளவு தூரம் அவர்களைப் பற்றி அழுத்திச் சொல்லக் காரணம், காவல் துறை பொறுப்பை வகிக்கும் நான் கடந்த 21 மாதங்களில் அவர்களை உன்னிப்பாகப் பார்த்திருக்கிறேன்; அவர்களை உணர்ந்திருக்கிறேன் என்பதை ஒருபுறம் சுட்டி, அவர்களை இங்கே இடித்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், இது போன்ற பின்னணியையும் மனதிலே கொண்டு பேசியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்பதைக் கோடிட்டுக்காட்டத்தான்.

எப்படி ஒரு நாணயத்தில் இருபுறம் உண்டோ அதைப்போல எதிலும் குறையுமுண்டு, நிறையுமுண்டு; இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படி கணிக்க வேண்டுமென்று, எல்லாவற்றிற்கும் நெறிகாட்டும் வள்ளுவர், இங்கேயும் வழி காட்டுகிறாரே—

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

என்று. அந்த நெறிப்படி, நீங்கள் சுட்டிய குறைகள் முழுக்க முழுக்க இல்லை என்று சொல்ல மாட்டேன். அங்கும் இங்கும் தவறுகள் நிகழ்ந்திருக்கலாம். சிறு தவறுகளை பெரிதுபடுத்தி நீங்கள் இங்கே பேசியிருக்கலாம். உங்களுக்குக் கிடைத்த தகவல்களை வைத்துக் பேசி இருக்கலாம். அவை உண்மைக்குப் புறம்பானதாகக்கூட இருக்கலாம்.

உறுப்பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. திருநாவுக்கரசு, திரு. பழனிசாமி பேசியபோது, போதாச் செய்திகளை, பொருந்தாச் செய்திகளைச் சொன்ன போது, நான் அப்போதே

மறுத்து சரியான விவரங்களைச் சொன்னது இப்பேரவைக்கு நினைவு இருக்கும் எனக் கருதுகிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், குறைகள் குறைக்கப்பட வேண்டும், நிறைகளை நிறையச் செய்ய வேண்டும். அதுவும் குறுகிய கால கட்டத்தில் அசுர வேகத்தில் பணிகள் ஆற்றப்பட வேண்டும். அதன் பயன்கள் மக்களுக்கு விரைந்து கிட்ட வேண்டும் என்பது தான் எங்கள் பேராவலாக இருந்து வருகிறது.

இந்தப் பின்னணியை மனதிலே வைத்து, நமது தமிழகக் காவல் துறைக்கு வருவோம். எழுபத்தி ஓராயிரத்துக்கும் மேற்பட்ட—71,756—காவல் துறையினர் தமிழகம் முழுவதும் விரவியும், பரவியும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் 1,090 காவல் நிலையங்கள் செயல்படுகின்றன. தமிழகக் காவல் துறையினர், சட்டம் ஒழுங்கு பிரிவாக, குற்றப் பிரிவாக, புலனாய்வுப் பிரிவாக, வனப் பிரிவாக, மதுவிலக்குப் பிரிவாக, ரயில்வே பிரிவாக, சேமக் காவல் படையாக, சிறப்புக் காவல் படையாக பிரிந்து கடமை ஆற்றுகின்றனர். இவர்களின் கடமைக்கு உதவியாக துப்பறியும் நாய்ப்படை, குதிரைப்படை, பெண் காவலர்கள் பிரிவு, சிறப்புப் பாதுகாப்புப் படை, Special Security Group, குடியுரிமை பாதுகாப்புப் பிரிவு, கோவில் பாதுகாப்புப் படை, ஊர்க்காவல்படை, போன்ற பிரிவினர் பயன்படுத்தப்படுகின்றனர்.

பிற்பகல் 12-55

இன்றைய நிலையில் அறிவியல் வெகுவாக வளர்ந்திருக்கிறது. புதுப்புது கண்டுபிடிப்புகள் தினம் தினம் வந்தவண்ணமிருக்கின்றன. குற்றம் புரிபவர்கள் கூட, மிகப் புத்திசாலித்தனமாக நுணுக்கமான முறையைக் கையாண்டு, குற்றம் புரிகின்றனர். இவர்களைக் கண்டுபிடித்து தம் கடமையை செவ்வனே செய்ய காவல் துறையினர் அறிவியல் சாதனத்தைப் பயன்படுத்துகின்றனர்.

அதற்கென, தமிழகக் காவல் துறையினர், கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துகிறார்கள்; கைவிரல் ரேகை மூலம் கண்டுபிடிக்கிறார்கள்; தடவியல் அறிவியல் நுணுக்கத்தைப் பயன்படுத்துகிறார்கள். வான் தந்தி, வானொலி, தொலைபேசி, வாக்கி-டாக்கி போன்ற அதி நவீனக் கருவிகள் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. மாநிலம் முழுவதும் 29 கட்டுப்பாட்டு அறைகள் இயங்குகின்றன. காவல் துறையினர் மாநிலம் முழுவதும் பம்பரமாகச் சுழல, 3,980 வாகனங்கள் உள்ளன. சுருங்கக் கூறின், தமிழகக் காவல் துறையின் அமைப்பு, இருக்கும் வாய்ப்பு வசதிகள், ஏனைய முன்னோடி மாநிலங்களுக்கு சற்றும் குறைந்ததல்ல என்பதைவிட (மேசையைத் தட்டும் ஒலி) பலவற்றுள் நாம் முன்னோடியாகவே இருக்கிறோம் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் தமிழகக்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காவல் துறை தனக்கென ஒரு பெயரையும் கீர்த்தியையும் தொடர்ந்து நிலைநாட்டி ஒரு பாரம்பரியத்திற்கு பாத்தியதை கொள்ளுகிறது.

இங்கே பேசிய உறுப்பினர்கள் சிலர் தமிழகத்தில் குற்றங்கள் பெருகிவிட்டன, நிறைய திருட்டு, கொலை, கொள்ளை எல்லாம் நடக்கிறது என்று குறிப்பிட்டார்கள். குற்றங்கள் பெருகி வருகின்றன என்ற உண்மையை மறுப்பதற்கில்லை. இது ஒரு மாநிலப் பிரச்சினையல்ல. தேசிய ரீதியில் பார்த்தாலும் சரி, உலக ரீதியில் பார்த்தாலும் சரி, குற்றங்கள் பெருகிக் கொண்டு தான் இருக்கின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் கூட, குற்றங்கள் பெருகியிருப்பதோடு, நம் நாட்டில் இந்தியாவில் குற்றம் பெருகும் விகிதாச்சாரத்தை விட அங்கே அதிகம் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். எனவே குற்றங்கள் பெருகுவது ஓர் அகில உலகப் போக்காக இருக்கிறது. நடந்து விட்ட குற்றத்தை என்ன செய்தோம்? அவை நடக்காமல் தடுக்க என்ன செய்தோம் என்பதே நம்முன் உள்ள பிரச்சினை. நமது மாநிலத்தில் 1991 ஆம் ஆண்டு நடந்த கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, கலவரம், மோசடி போன்ற புகார் செய்யப்பட்ட மொத்த குற்றங்கள் 1,33,284. இவை ஆய்வாண்டாகிய 1992ல் சுமார் 1,28,665 ஆக குறைந்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 1991 ஆம் ஆண்டு 1.33 லட்சம், 1992 ஆம் ஆண்டில் 1.29 லட்சமாக குறைந்திருக்கிறது. நாட்டில் குற்றங்கள் பெருகி வரும் சூழ்நிலையிலும் நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் இறங்கு முகமாக இருப்பது ஒரு நல்ல அறிகுறி என்றே கருதுகிறேன்.

அடுத்து, நடந்துவிட்ட குற்றங்களை நாம் எப்படிக் கையாண்டிருக்கிறோம் எனக் குறிப்பிட விரும்புகிறேன். 1992-ல் நடந்த குற்றங்களில் 64 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆய்வு ஆண்டாகிய 1992-ல் அது மிக உயர்ந்து, கண்டு பிடிக்கப்பட்ட சதவீதம் 72 ஆக உயர்ந்துள்ள ஒரு மாபெரும் சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே கோடிட்டுக் குறிப்பிட விரும்புகிறேன். இதுவே அகில இந்திய சாதனையாகவும் இருக்கும் எனக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தச் சாதனையை எதிர் வரிசையில் பேசியவர்களும் பாராட்டினார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சியையும், நெகிழ்ச்சியையும் தருகிறது. சென்னை மாநகரத்தில் மட்டும், 1991-ல் கண்டுபிடித்த சதவீதம் 69-லிருந்து 1992-ல் 71 சதவீதமாக உயர்த்தி சாதனை புரிந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி). பொருட்களை மீட்ட சதவீதம் 1991-ல் 78.3 ஆக இருந்ததை 1992-ல் 80.4 சதவீதமாக ஏற்றி மீட்டிருக்கிறார்கள்.

இதுசமயம் அண்டை மாநிலங்களுக்கு உங்கள் கவனத்தை ஈர்ப்பது சரியெனப்படுகிறது. குற்றக் கண்டுபிடிப்பு விழுக்காடு கேரளாவில் 25.4 சதவீதமாகவும், கர்நாடகாவில் 52.9 சதவீதமாகவும், ஆந்திராவில் 53.4 சதவீதமாகவும், மேற்கு வங்காளத்தில் 42.68 சதவீதமாகவும் இருப்பதை ஒப்பிடும் போது, நாம் எங்கோ உயர்ந்திருக்கிறோம் என்ற என் மகிழ்ச்சியை வெளிப்படுத்தாமல் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்க முடியவில்லை.

பிற்பகல் 1-00.

இன்னும் சிறிது அணுகிப் பார்த்தால் கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை நம் மாநிலத்தைவிட ஆந்திராவில் அதிகம். கூட்டுக் கொள்ளை, கொள்ளை, வழிப்பறி ஆகிய குற்றங்கள் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் நம்மைவிட அதிகம் நடந்து இருக்கிறது. கன்னக்களவு நம்மைவிட கர்நாடகத்தில் அதிகம்.

நிலைமை இப்படி இருக்க, வெளியிலே என்ன நடக்கிறது? தினம் தினம் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது; ஒரு சிறு குற்றம் நடந்தால் அதற்குக் கொடுக்கும் விளம்பரம், பத்திரிகைச் செய்தி மிகப் பெரிய குற்றத்தைக் கண்டுபிடித்தால், திருடப்பட்ட பொருளை மீட்டால் கொடுக்கப்படுவதில்லை. அதனால் மக்கள் மனதில் ஏதோ பெரிய தப்பு நடந்து கொண்டிருப்பது போல ஒரு பிரமையை வேண்டாதவர்களும், செய்தி விளம்பரச் சாதனங்களும் உண்டாக்கி விட்டிருக்கிறார்கள். இது தான் வருந்தத்தக்கதாக இருக்கிறது.

அடுத்து தமிழ்நாட்டில் சட்ட-ஒழுங்குப் பிரச்சினைக்கு வருவோம். எடுத்த எடுப்பிலேயே நான் ஆணித்தரமாக அடித்துச் சொல்ல விரும்புவதெல்லாம், தமிழகம் நாங்கள் பொறுப்புக்கு வருமுன், ஆயுதக் கலாச்சாரமாக, அமளிக்காடாக இருந்தது உண்மைதான். அக்காலத்தே வன்முறைச் சம்பவங்கள், நாச வேலைகள், குண்டு வெடிப்புகள், அதி நவீன யுக்திகளையும், ஆயுதங்களையும் கொண்டு தாக்கும் முறை எல்லாம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த நிலையை மறுப்பதற்கில்லை தான். நாங்கள் ஆட்சிக்கு வந்த மாத்திரத்திலே தான், அச் சக்திகளை குறி வைத்து, தகர்த்தோம். தவிடு பொடியாக்கினோம். (மேசையைத் தட்டும் ஒலி). உறுப்பினர் தென்னவன் குறிப்பிட்டபடி ஓட ஓட விரட்டி அடித்தோம். (மேசையைத் தட்டும் ஒலி). தாராளமாக, தமிழகத்தில் நடமாடிக் கொண்டிருந்த ஏராளமான ஈழ விடுதலைப் புலிகள் எங்கு ஓடி ஒளிந்தார்கள் எனத் தெரியவில்லை. இதற்காக என்னை அன்று வெகுவாகப் பாராட்டியவர்கள் கூட, இன்றைக்கு விடுதலைப் புலிகள் நடமாட்டம் இங்கே இருக்கிறது,

இலங்கைப் போராளிகள் அட்டகாசம் ஓயவில்லை என அரசியல் காரணங்களுக்காக, காழ்ப்புணர்ச்சியின் பேரில் பேசி வருகிறார்கள். தயவு செய்து மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். அன்றைக்கு என்ன நிலைமை, இன்றைக்கு என்ன நிலைமை என்று. பல லட்சக்கணக்கான இலங்கை அகதிகளை இன்றைய தினம் இங்கு வைத்துக் கொண்டிருக்கிறோம்; இலங்கைப் போராளிகளையும், விடுதலைப் புலிகளையும் இன்னும் ஆதரிக்கும் சாரார் இங்கே சிலர் இருந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கை அகதிகளை எல்லாம் அவர்கள் நாட்டிற்கு அனுப்பி விடுவதே நல்லது, அதன் மூலம் விடுதலைப் புலிகளின் புகலிடம் தடுக்கப்படும் என நாம் மைய அரசை வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். மைய அரசு அதற்கு செவி சாய்த்து, அகதிகள் போய்ச் சேருவதற்கு விரைந்து வழி வகுத்தால், பயண ஏற்பாட்டைச் செய்தால், அகதி முகாம்களுக்குள் ஒளிந்து கொண்டு இருக்கும் ஒரு சிலரை அங்குமிங்குமாக எப்போதாவது தென்படுவோரை அழிக்க முடியுமல்லவா? அடக்க முடியுமல்லவா? இன்றைக்கு உரத்த குரலில் பேசும் இப்பெருமக்கள் இதற்கு உதவினால் வரவேற்பேனல்லவா? அதைச் செய்யாது காலம் கடத்துவதால், அவர்கள் சொல்லும் குரலுக்கு, கூப்பாட்டிற்கு, அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் அந்த அரசே காரணம் என்று நான் சொன்னால் தப்பா? சமீப காலங்களில் கண்ணி வெடிக் கலாச்சாரம், கண்ணிவெடிக் கலாச்சாரம் எனப் பேசப்படுகிறது. இந்தக் கலாச்சாரத்தை தமிழகத்தில் எங்கே கண்டார்கள் என்று நானும் தேடித் தேடிப் பார்க்கிறேன். ஒரு வேளை அவர்கள் கற்பனையில் கண்டிருக்கிறார்களா அல்லது சமீபத்தில் கண்ணி வெடி வைத்து தகர்த்தானே சந்தனக்கடத்தல் வீரப்பன், அதைச் சொல்லுகிறார்களா? இதைச் சரியென ஒப்புக் கொண்டாலும், வீரப்பன் வெடித்தது நமது மாநில எல்லையில் இல்லவே இல்லையே! (மேசையைத் தட்டும் ஒலி). அவன் கண்ணி வெடி வைத்து வெடித்தது கர்நாடக மாநிலத்தில் அல்லவா? கர்நாடகம் காங்கிரஸ் ஆட்சி நடக்கும் மாநிலமாயிற்றே! (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே வீரப்பன் வந்தால், அவன் இடுப்பை ஒடித்து விடுவார்கள் என்பதற்கு பயந்துதானே அவன் இப்பக்கம் தலை காட்டாது தனது அடாத கொடுஞ்செயலை கர்நாடகத்தில் கோலோச்சிக் கொண்டிருக்கிறான். நான் ஏற்கனவே இந்தப் பேரவையில் சில நாட்களுக்கு முன் சொல்லியபடி, அவன் கொட்டத்தை அடக்கி, உயிருடனோ பிணமாகவோ பிடிக்கும் கட்டம் வெகு தொலைவில் இல்லை என்றே கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதற்கென சில பிரத்தியேக ஏற்பாடுகளை கைவசம் வைத்திருக்கிறோம். அதிரடிப்படையை அதிகப்படுத்தி, அவர்களுக்கென ஒரு புலனாய்வுப் பிரிவையும், தந்து, வேண்டியனவெல்லாம் அதிரடிப்படையினருக்கு அளித்து வீரப்பனைப் பிடிக்க அனைத்து

ஏற்பாடுகளும் செய்யப்படும். சமீபத்தில்கூட நமது காவல்துறை உயர் அதிகாரிகள் கர்நாடக மாநிலம் சென்று அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் கலந்து பேசிவிட்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

இதைத்தவிர, வகுப்புவாதக் கலவரம், தீவிரவாதம், விவசாயிகள் கிளர்ச்சி, தொழிலாளர்கள் பரபரப்பு, பயங்கரவாத நடவடிக்கைகள், குண்டுவெடிப்புகள், அதை ஒட்டிய காவல்துறையினரின் துப்பாக்கிச்சூடு, போன்றவை தமிழகத்தில் அறவே இல்லை என்று சொல்ல மாட்டேன். எக்காலத்திலும், எந்த ஆட்சியிலும் இவை இருக்கத்தான் செய்தன. எங்கள் ஆட்சியிலும் சிலபல நிகழ்ச்சிகள் உண்டு. நேற்று கூட காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தும் மகாராஷ்டிரா மாநிலத்தில் கண்ணி வெடி வைத்து வெடித்த ஒரு கோர சம்பவத்தில் 15 பேர் மாண்டு போனார்கள் என்ற செய்தி வந்தது. நான் இங்கே குறிப்பிட விரும்புவதெல்லாம் இருக்கும் சூழ்நிலை என்ன? ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் இது குறைவா அதிகமா என்ற கணக்கை மட்டும் போட்டுப் பார்க்கும்படி உங்களைக் கேட்க ஆசைப் படுகிறேன்.

இதற்கு ஒரு சின்ன புள்ளிவிவரத்தைத் தர விரும்புகிறேன். 1989 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற ஊர்வலங்கள் 2049, நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை 11,778 ; 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊர்வலங்கள் 2,195 ; நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை 10,070 ; 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊர்வலங்கள் 2,478 ; நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை 11,798; 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊர்வலங்கள் 2,558 ; நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை 11,909 ; 1—1—1993 முதல் 15—4—1993 வரை $3\frac{1}{2}$ மாதத்தில் நடைபெற்ற ஊர்வலங்கள் 778, நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை 3,248 ; மாநிலம் முழுதும் நடந்த ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் இவற்றைப் பார்க்கும்போது, 1992-ல் தான் 11,909 பொதுக் கூட்டங்களை அரசியல் கட்சிகள் நடத்தியிருக்கின்றன. இது எந்த ஆண்டையும் விட அதிகமானது. தேர்தல் நடந்த 1989, 1991 ஆண்டுகளை விட 1992-ல் அதாவது எங்கள் ஆட்சியில்தான் அதிகமாக நடந்துள்ளது. அதேபோல் 2,558 ஊர்வலங்கள் எந்த ஆண்டையும் விட அதிகமாக அனுமதிக்கப் பட்டு நடத்தப்பட்டிருக்கிறது. நிலைமை இப்படி இருக்கும் போது, கூட்டங்கள் நடத்தப்படவில்லை, ஊர்வலம் எடுக்க விடுவதில்லை, ஜனநாயகத்தின் குரல் நெரிக்கப்படுகிறது என்ற கூப்பாடு எப்படி நியாயம் எனக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[டாக்டர் ஜெ.ஜெயலலிதா] [1993 ஏப்ரல் 22

நிலைமை கட்டுக்கடங்காமல் போகும்போது, சட்டம் அமைதி கெட்டு வன்முறை தலைவிரித்தாடும்போது, தவிர்க்க முடியா நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது. நேற்றைய முன்தினம் நடந்த விவாதத்தின்போதே இதுபற்றி பேசிய எதிர்வரிசை உறுப்பினர்கள் எல்லோருமே, சுட்டிக்காட்டினார்கள், தட்டிக் கேட்டார்கள். அப்போதே நான் எழுந்து என்ன சூழ்நிலையில் இதுபோன்ற துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது என விலாவாரியாக விளக்கினேன். விளைவுகள் விபரீதமாகிவிடும், சட்டம் ஒழுங்கு காக்க முடியாமல் போய்விடும் என்ற நிலையில், காவல்துறையினர் காயப்பட்ட நிலையில், தற்காப்புக்காகவும் கூட அதுபோன்ற துப்பாக்கிச்சூடு நடந்துவிடுகிறது. அது துர்பாக்கியமானது என்று பொருட்பட கூறினேன். அதையே மீண்டும் வலியுறுத்துகிறேன். துப்பாக்கிச் சூட்டை தவிர்க்கவேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. நடந்துவிட்ட அந்தச் சம்பவங்களை நுணுகி ஆயும் போதுகூட, எனக்குப்படுவதெல்லாம், காயம்பட்ட பொது மக்களைவிட, காயம்பட்ட காவல்துறையினர் அதிகமாகவே இருக்கின்றனர். 1991-ல் 75 பேரும் 1992—ல் 163 பேரும் காவல்துறையில் இருந்து காயப்பட்டுள்ளனர். பொதுமக்களில் முறையே 45 பேரும் ; 95 பேரும் காயம்பட்டுள்ளனர். அதாவது பொது மக்களில் காயம்பட்டோர் 45 பேர், காவல் துறையில் 75 பேர். 1992-இல் பொதுமக்களில் 95 பேர், காவல் துறையில் 163 பேர். காயம்பட்டுள்ளனர். அதில் உயிர் இழந்தோருக்காக நான் வருந்தி அவர்களின் குடும்பத்தின் துயர் துடைக்க நிதி உதவி அளித்ததை இம்மாமன்றம் நன்கு அறியும்.

பிற்பகல் 1-10

அடுத்து, தடா சட்டத்தைப்பற்றி பத்திரிகைகளிலும், வெளியிலும் பேசப்படுவதெல்லாம், வேண்டாதவர்களை எல்லாம் இச்சட்டத்தில் சிறையில் தள்ளுகிறார்கள் என்று. மற்ற மாநிலங்களில் இருநூறு, முந்நூறு என்ற வகையில் இதில் வழக்கு போட்ட நிலையில் இந்த மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளே 29 தான். அதில் 17 வழக்குகளே அச்சட்டத்தின் கீழ் நிலுவையில் இருக்கின்றன எனக் கூறிக்கொள்ளுகிறேன். இச்சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்பதற்காகவே ஆய்வுகளை இம்மாநிலத்தில் உள்துறை செயலாளர் நடத்தி, தடா சட்டத்தில் பதியப்பட்ட வழக்குகளைக்கூட, மற்ற சட்டங்களில் விசாரணை செய்யும்படி பொதுவான வேறு நீதிமன்றங்களுக்கு அனுப்பும் நிலையை இந்த மாநிலத்தில் காண்கிறீர்கள். இதற்காக மைய அரசு அதிகாரிகள் வெகுவாக நம் மாநிலத்தைப் பாராட்டியதாகவும் கேள்விப்படுகிறேன். **(மேசையைத் தட்டும் ஒலி)**

பாராட்டுக்களுக்கிடையே சில உறுப்பினர்கள் காவல் **துறையைக் கடுமையாக விமர்சிக்கவும் செய்தார்கள்.**

1993 ஏப்ரல் 22] [டாக்டர். ஜெ. ஜெயலலிதா]

உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாட்டில் பலர் சட்டத்திற்குப் புறம்பான முறையில் கைது செய்யப் பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக உயர் நீதிமன்றத்தில் நிறைய ஹேபியஸ்கார்பஸ் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும் குறிப்பிட்டார். இவ்வாறு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் காவலில் வைக்கப்படுகின்றவர்கள் ஆவார்கள். சட்டத்திற்குப் புறம்பாகக் காவலில் வைக்கப் படுகின்றவர்கள் அல்ல. தமிழ் நாட்டைப் பொறுத்த வரை மிக அதிகமான தடுப்புக் காவல் கைதுகள் குண்டர்கள் சட்டத்தின் கீழ் செய்யப்படுகின்றன. இந்தச் சட்டத்தின் கீழ் பொது அமைதிக்கு யார் பங்கம் விளைவிக்கின்றார் களோ அவர்கள் மட்டும் தான் தடுப்புக் காவலில் வைக்கப் படுகின்றனர். மது விலக்கைத் தீவிரமாக இந்த அரசு அமுல் படுத்துகின்ற காரணத்தால் மதுக் குற்றவாளிகள் பலர் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யயப்பட்டுள்ளார்கள். உண்மை இவ்வாறு இருக்க சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதோ சிறிய காரணங்களுக்காக இந்தச் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்படுகிறார்கள் என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானது ஆகும். இவ்வாறு பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்போர் பலர் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதால்தான் இன்று சென்னை நகரத்தில் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பதைப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

தடுப்புக் காவல் சட்டங்களில் கீழ் கைது செய்யப்படு கின்றவர்களை நீதி மன்றத்தின் முன் நிறுத்துவதற்காக பல ஹேபியஸ்கார்பஸ் மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த ஹேபியஸ் கார்பஸ் மனுக்களை விசாரிக்கும் போது இந்தத் தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் கைது செய்யப் பட்ட முறை—புரொசீஜர்—சரியாக இருக்கும் பட்சத்தில் நீதி மன்றம் காவலை விலக்குவதில்லை. எனவே இவைகள் இல்லீகல் டிடென்ஷன் அல்ல-சட்டத்திற்குப் புறம்பான கைதிகள் அல்ல என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தடா சட்டத்தின் கீழ் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன? எத்தனை வழக்குகளில் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? எத்தனை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப் பட்டது? இதெல்லாம் எனக்குத் தெரியும். தெரிந்தாக வேண்டும் என்று உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் கேட்டார்.

TADA சட்டத்தின் கீழ் 14—3—1993 வரை 108 பேர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இவர்கள் 17 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள். இந்த

17 வழக்குகளில் 13 வழக்குகள் காவல் துறையின் Q பிரிவின் கீழும், 4 வழக்குகள் உள்ளூர் காவல் துறையினரின் கீழும் நடவடிக்கையில் உள்ளன. இந்த வழக்குகளில் சம்பந்தப் பட்ட 153 குற்றவாளிகளில் 109 பேர் கைது செய்யப் பட்டனர்; 44 பேர் தலைமறைவாக உள்ளனர். 3 பேர் மரணம் அடைந்து விட்டனர். 92 பேர் நீதி மன்றக் காவலிலும், 27 பேர் நீதி மன்ற ஆணைகளின் படி Bail-லிலும் உள்ளனர். 9 வழக்குகளில் 90 குற்றவாளிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதி மன்ற விசாரணையில் உள்ளன. மீதமுள்ள 8 வழக்குகளில் 34 குற்றவாளிகள் மீது புலன் விசாரனை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. எனவே, 'தடா' சட்டத்தின் கீழ் நட வடிக்கைகள் மேற்கொண்டவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில் எந்த வித தாமதமும் இல்லை என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1—15

அண்ணாமலை நகர் பத்மினி கற்பழிப்பு வழக்கில் சம் பந்தப்பட்ட காவல் துறை அலுவலர்களை தாமதமாகக் கைது செய்தது ஏன் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். நான் ஏற்கெனவே இந்த வழக்கு தொடர்பான எல்லா விவரங்களையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துள்ளேன். உயர் நீதிமன்றம் இந்த வழக்கை சி. ஐ. டி. குற்றப் பிரிவிற்கு மாற்றிய பின்பு தான் தொடர்புடைய காவல் துறை அதிகாரிகளை இந்த அரசு கைது செய்ய ஆணையிட்டது என் பது உண்மைக்குப் புறம்பான செய்தி ஆகும். உயர் நீதிமன்ற ஆணை 22—7—1992 அன்று பிறப்பிக்கப் பட்டது. ஆனால், அண்ணாமலை நகர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. ஜெயராமன், குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் இப்ராஹிம் செரீப், காவலர்கள் மெஹ்பூப் பாஷா, செல்லையா மற்றும் ஜெயராமன் ஆகியோர் 18—7—1992 அன்றே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள். மேலும், சம்பவம் நடந்து பல நாட்கள் கடந்த பின்பு தான் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற ஒரு குற்றச் சாட்டையும் முன் வைத்தார்கள். சம்பவம் 3—6—92 அன்று நடந்திருந்தாலும் காவல் துறை அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டு இருப்பதால் Prima facie உண்மை இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்காக சிறிது அவகாசம் தேவைப்பட்டது. இந்தக் குற்றத்தில் இவர்களுக்கு பங்கு உண்டு என்பது தெரிய வந்ததும் உடனடியாக இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார் கள். எனவே, இதில் காலதாமதம் ஏற்பட்டது என்பது சரியல்ல.

1993 ஏப்ரல் 22] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தஞ்சாவூர் மேற்கு காவல் நிலையத்தில் ஏற்பட்ட ஒரு துப்பாக்கி விபத்தில் ஒரு காவலர் இறந்துள்ளார் என்றும் அது விபத்து இல்லை என்றும் எனவே அதை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இங்கே பேசினார்கள்.

தஞ்சாவூர் மேற்கு காவல் நிலையத்தில் 5—10—1992 அன்று முதல் நிலை காவலரான பக்கிரிசாமி மற்றும் காவலர்களான அம்பிகாபதி, ஜார்ஜ் ராஜ், கோவிந்தராஜு, மற்றும் ராஜசேகர் ஆகியோர் ஆயுத பூஜையை முன்னிட்டு கைத்துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கிகளை உதவி ஆய்வாளர் திரு. மாணிக்க வாசகத்தின் மேற்பார்வையில் சுத்தம் செய்து கொண்டிருந்தனர், காவலர் ராஜசேகர் மேஜை மீது இருந்த கைத்துப்பாக்கியைத் தவறாகக் கையாண்டதால், கைத்துப்பாக்கி வெடித்து காவலர் கோவிந்தராஜு மீது குண்டு பட்டு, அதனால் ஏற்பட்ட காயத்தினால் காவலர் கோவிந்தராஜு அந்த இடத்திலேயே இறந்து போனார். விசாரணையில் உதவி ஆய்வாளர் திரு. மாணிக்கவாசகம் தன்னுடைய கைத்துப்பாக்கியில் இரண்டு தோட்டாக்களை அஜாக்கிரதையாக விட்டு வைத்ததாகத் தெரிய வந்தது. அவற்றில் ஒரு தோட்டாதான் காவலர் கோவிந்தராஜு மரணத்திற்குக் காரணமாக இருந்தது. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் திரு. மாணிக்கவாசகம், முதல் நிலை காவலர் பக்கிரிசாமி, காவலர்கள் அம்பிகாபதி, ஜார்ஜ் ராஜ் மற்றும் ராஜசேகர் ஆகியோர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இச்சம்பவம் மீது தஞ்சாவூர் கோட்ட வருவாய் அதிகாரி விசாரணை மேற்கொண்டு, கவனக் குறைவினால் இச்சம்பவம் ஏற்பட்டது என்றும், இதற்குக் காரணமாக இருந்த உதவி ஆய்வாளர் திரு. மாணிக்கவாசம், காவலர்கள் அம்பிகாபதி, ராஜசேகர் ஆகிய மூவர் மீதும் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். அது துறையின் பரிசீலனையில் உள்ளது.

உதவி ஆய்வாளர் திரு. மாணிக்கவாசகம், 13-10-1992 அன்று தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் 6-1-1993 அன்று அரசு ஊழியர் தீர்ப்பாய ஆணையின்படி மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

தென்னாற்காடு மாவட்டம் முகையூர் கிராமத்தைச் சேர்ந்த காசிலிங்கம் என்பவர் காவல் துறையினரால் தாக்கப்பட்டு, மருத்துவமனையில் இருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி இங்கே பேசியுள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள செய்தியின் உண்மை நிலையை இங்கே வெளியிட விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டம், அறங்கண்டநல்லூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட முகையூர் கிராமத்திற்கு அருகிலுள்ள வடகரை தாழனூர் காலனியைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரின் மகன் காசிலிங்கம்

என்பவரும் முனுசாமியின் மகன் பாளையனும் சேர்ந்து 20—3—1993 அன்று மாலையில் அக்காலனியில் சாராயம் விற்றுள்ளனர். இதனை வடகரை தாழனூர் காலனி அகில இந்திய இளைஞர் குழுவின் உறுப்பினரான வேலாயுதம் மகன் குமார் ஆட்சேபித்துள்ளார். இதனைத் தொடர்ந்து காசிலிங்கமும், பாளையனும் குமாரை வெட்டி காயப்படுத்தினர். இந்தச் சம்பவம் மீது அறங்கண்டநல்லூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவர் 22—3—1993 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பாளையன் நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளார். ஏற்கனவே காசிலிங்கம் கள்ளச்சாராயம் வைத்து இருந்ததற்கு 4—1—93 அன்று அறங்கண்டநல்லூர் காவல் நிலையத்தில் மதுவிலக்கு சட்டப் பிரிவு 4(1) (அ) படி கைது செய்யப்பட்டுள்ளார். எனவே, காசிலிங்கம் என்பவர் ஒரு கள்ளச்சாராய வியாபாரி என்பது புலனாகிறது. காசிலிங்கம் காவலர்களால் தாக்கப்பட்டு, காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்பது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும்.

பிற்பகல் 1.20

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், காளையார் கோவிலில் மாணவி மார்த்தாள் மர்மமான முறையில் இறந்தது குறித்து இங்கே பேசியுள்ளார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், காளையார்கோவிலில் உள்ள அன்னை டியூட்டோரியல்கல்லூரியில் பிளஸ் 2 படித்த மாணவி மார்த்தாள் கிணற்றில் இறந்து கிடந்ததைக் கண்ட அவரது உறவினர்கள் மற்றும் இனத்தவர் சுமார் 1,000 பேர் குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்யக் கோரி, காளையார்கோவிலில் சாலை மறியல் செய்து பிரேதப் பரிசோதனைக்குப் பிணத்தை எடுக்க விடாமல், காவல்துறையினர் மற்றும் அரசு வாகனங்கள் மீது கற்களை வீசி வன்முறையில் ஈடுபட்டபோது, சிவகங்கை தாசில்தார் பல எச்சரிக்கை கொடுத்தும் கூட்டம் கலையாததால் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. அதுவும் பலனளிக்காமல் போகவே, காவல் துறையினர் 3 பக்ஷாட் குண்டுகளை வான் நோக்கி சுட்டனர். மேற்படி சம்பவத்தில் பொதுமக்கள் எவருக்கும் காயமில்லை. காவல்துறை துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர் உட்பட 15 காவல் துறையினர் இச்சம்பவத்தில் காயம் அடைந்ததோடு, 7 அரசு வாகனங்கள் மற்றும் 2 காவல் துறை வாகனங்களுக்குச் சேதம் ஏற்பட்டது, 28 பேர் கைது செய்யப்பட்டனர், புலன் விசாரணையில் மார்த்தாள் கற்பழிக்கப்பட்டு. கொலை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு, 7—4—1993-ல் கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டு, 11—4—1993 அன்று சாத்தையா, மாரியப்பன், குண்டுமணி மற்றும் செபஸ்தியன் என்கிற சுல்தான் ஆகிய 4 குற்றவாளிகள் கைது செய்யப்பட் சிறையில் அடைக்கப்பட்டனர், தற்போது நிலைமை அமைதி

யாக உள்ளது, இந்த வழக்கில் மர்மம் ஏதும் இல்லை, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது, என்ன சொன்னார் என்பதனை இந்த அவைக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன். நீதி கேட்ட மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தலாமா ? இது நியாயமா ?, என்று கேட்டார், இப்போதுதான் நான் விளக்கிக் கூறினேன், இந்தச் சம்பவத்தில் பொதுமக்களில் ஒருவர் கூட காயம் அடையவில்லை, ஆனால் காவல் துறையைச் சேர்ந்த 15 பேர்கள், அலுவலர்களும், காவல் துறையினரும் காயமுற்று இருக்கிறார்கள், மேலும் இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று திரு. பழனிசாமி அவர்கள் தெரிவித்தார், அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தி, 4 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை இப்போதுதான் இந்த அவைக்குத் தெரிவித்தேன்.

மேலூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த காவலர் ரஹமதுல்லா என்பவர் காணாமல் போனது பற்றி இன்னும் காவல் துறையினர் அவரைக் கண்டுபிடிக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு இங்கே பேசி உள்ளார்.

மேலூர் காவல் நிலையத்தில் பணிபுரியும் தன் கணவரான ரஹமதுல்லா என்ற காவலரைக் காணவில்லை என்று அவரது மனைவி திருமதி ரஹமதுன்னிஸா கொடுத்த புகாரின் பேரில் ''காவலர் காணவில்லை'' என்று மேலூர் காவல் நிலைய கு. எண், 450/92-ல் உதவி ஆய்வாளரால் வழக்கு ஒன்று 28-6-92 அன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டது, இந்த வழக்கில் மேற்படி விசாரணையை மேலூர் காவல்நிலைய ஆய்வாளர் 14—7—1992 அன்று எடுத்துக் கொண்டார்.

முதல் தகவல் அறிக்கையின்படி மேற்படி காவலர் பணிக்காக மேலூர் காவல் நிலையத்திற்கு வழக்கம்போல் 16-6-92 அன்று மாலை சென்றதாகவும், பின்னர் அவர் பந்தோபஸ்து பணிக்காக அனுப்பப்பட்டதாகவும் தெரிகிறது, அவர் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை,

திருமதி ரஹமதுன்னிஸா தொடுத்த ரிட் மனு மீது சென்னை உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவின்படி இந்த வழக்கு 3—9—1992 அன்று மாநில குற்றப் பிரிவு புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டது. அவர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. மேற்படி காவலர் எங்கிருக்கின்றார் என்பதற்கான துப்பும் கிடைக்கவில்லை. புலன்விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆனால். ஒரு மாநிலத்தில் ஒரு காவலர் காண

வில்லை, அவர் Missing என்ற பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறார் என்பதை வைத்து, இந்த மாநிலத்தில் காவல்துறையே ஏதோ செயலற்றுக் கிடக்கிறது. ஆற்றலோடு இல்லாமல் இருக்கிறது என்பது போல இங்கே உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு ஒரு தோற்றத்தை ஏற்படுத்தப் பார்த்தார். இது முற்றிலும் தவறான ஒரு கருத்தாகும் என்பதை தெளிவாக்க விரும்புகின்றேன். எத்தனையோ மாநிலங்களில் இதே போல காவலர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். They are listed as missing. மாநிலங்களில் காவல் துறையினர் மட்டுமல்ல, இந்திய இராணுவத்தில் கூட எத்தனையோ இராணுவ வீரர்கள் மிஸ்ஸிங், காணாமல் போய் விட்டார்கள் என்று பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள். அதைப் போலவே, வெளிநாடுகளில் கூட, அமெரிக்காவில் கூட, அமெரிக்க இராணுவத்தில் பணி புரிகின்ற வீரர்கள் காணவில்லையென்று அவ்வப்போது பட்டியல்கள் வெளியிடப்படுகின்றன. எனவே, அமெரிக்காவில் சில வீரர்கள் காணாமல் போகின்றார்கள் என்பதற்காகவே அமெரிக்க அரசாங்கத்திற்கே திறமையில்லையென்று, ஆற்றல் இல்லையென்று யாராவது சொல்ல முடியுமா ? (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலத்தான் தமிழகத்தில் ஒரு காவலரைக் காணவில்லை என்பதனால் இந்த அரசாங்கமே திறமையற்ற அரசாங்கம், இந்தக் காவல் துறையே ஆற்றல் இல்லாத காவல் துறை என்று சொல்வது மிகவும் அறிவின்மையான ஒரு செயலாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1.25

மேலும் உறுப்பினர் திருநாவுக்கரசு பேசும்போது, காவலர்களுக்கு 50 சதவீதம் மானிய விலையில் கொடுக்கப்பட்டு வந்த உணவுப் பொருட்கள், கடந்த 4 மாதங்களாக வழங்கப்படவில்லை என்று பேசியுள்ளார். இது முற்றிலும் தவறான செய்தியாகும். காவலர்களுக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் பாமாயில் ஆகிய 4 பொருட்களும் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் காவல்துறை அலுவலர்களுக்கு 50 சதவீதம் மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டும், நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று கூறினார். இது முற்றிலும் தவறான தகவலாகும். காவல் துறை அலுவலர்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம் 1980 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இன்றியமையாப் பொருட்கள் ஆன அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா,

1993 ஏப்ரல் 22] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பாமாயில், துவரம் பருப்பு, மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவை அன்றைய சந்தை விலையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப் பட்டது. சந்தை விலை ஏற்றத்தாலும், கொடுத்து வந்த மானிய அளவு சரிசமமாக ஏற்படாததாலும், 50 சதவீதம் பலனை கிடைக்கவில்லை. சந்தை விலை ஏற ஏற காவலர் களுக்குக் கிடைக்கும் உணவுப் பொருட்களின் அளவு குறைந்து கொண்டே வந்தது. நாங்கள் பொறுப்பேற்றதும், இந்த நிலையை ஆராய்ந்து சென்ற ஆண்டு இந்தத் திட்டத்தை சீர்திருத்தி அமைத்தோம். 1980 ஆம் ஆண்டு எந்த எண்ணத் தின் அடிப்படையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அதை மீண்டும் செயல்படுத்தினோம். இப்பொழுது, பொது விநியோக முறையின் கீழ், Public Distribution Scheme-ன் கீழ், public Distribution Scheme-ல் உள்ள விலையில் 50 சதவீத மானியத்துடன் வழங்கப்பட்டு வருகிறது. அரிசி, சர்க்கரை, கோதுமை, மற்றும் பாமாயில், பொது விநி யோக முறையில் உள்ள விலையில் 50 சதவீதம் விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மானியமாக துவரம் பருப்பு ஒரு கிலோவுக்கு 4 ரூபாயும், உளுத்தம் பருப்பு ஒரு கிலோவுக்கு 3 ரூபாயும், ரவா மற்றும் மைதா, ஒரு கிலோ வுக்கு 1½ ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. 1991–92 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 2.01 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 68,987 காவல் துறை யினர் பயன் பெற்று வருகிறார்கள். உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசுகின்றபோது, இதயதெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் 50 சதவீதம் மானிய விலையில் கொடுக்கப் பட்டு வந்த இந்த உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம் இப்பொழுது கைவிடப்பட்டுவிட்டது, சரியாக செயல்படுத்தப் படவில்லையென்று சொன்னார். இதில் இன்னொரு விஷயத்தைத் தெளிவாக்க விரும்புகிறேன். புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் இந்த 50 சதவீதம் மானியம் என்பது 50 சதவீதம் of the market rates, சந்தை விலை என் னவோ அந்த விலையில் 50 சதவீதம் என்று கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது, புரட்சித் தலைவரின் அடி யொற்றியே நடைபோடும் இந்த அரசு அவர் வழியில் இன்னும் ஒரு படி மேலே போய் இன்று என்ன செயல் படுத்திக் கொண் டிருக்கிறோம் என்றால், வெளிச் சந்தை விலையில் 50 சதவீதம் அல்ல, பொது விநியோக முறையில் என்ன விலையோ அதில் 50 சதவீதம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளி வாக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு இங்கே பேசும் போது ஆட்சிகள் மாறும்போது உயர் அதிகாரிகள் பழி வாங்கப் படுகிறார்கள் என்பதுபோல முன்னாள் டி.ஜி.பி. துரையின் மறைவு குறித்தும், டி.ஐ.ஜி. ஜாபர் அலி சஸ்பென்ட் செய்யப் பட்டுள்ளது குறித்தும் பேசி இந்த அரசு அதிகாரிகளை பழி வாங்கும் நோக்கத்துடன் செயல்படுவது போலவும் குறிப்பிட் டுள்ளார்கள்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 ஏப்ரல் 22
பிற்பகல் 1.30

முன்னாள் டி.ஜி.பி. திரு. துரை அவர்கள், அவர் பதவிக் காலம் முழுவதும் அரசுப் பதவியில் இருந்து விட்டு பிறகு ஜனாதிபதி ஆட்சிக் காலத்திலே அதாவது 31–5–1991 அன்று பணி ஓய்வு பெற்று அதற்குப் பிறகுதான் மாரடைப்பு காரணமாக 17–11–1991 அன்று இயற்கை மரணம் எய்தினார் ; அவர் மீது இந்த அரசு எந்தவிதமான வழக்கோ, அல்லது நடவடிக்கையோ தொடரவில்லை. எனவே மீண்டும் நான் தெளிவுபடுத்த விரும்புவது, முன்னாள் டி.ஜி.பி. திரு. துரை அவர்கள் கடைசி வரை பதவியில் இருந்து விட்டு ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, இங்கே தேர்தல் நடந்து இந்த ஆட்சி வரும் முன்னரே பணி ஓய்வு பெற்று விட்டார். எனவே அவருடைய மறைவு இயற்கையான மறைவு. எனவே அதற்கும் இந்த அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல டி.ஐ.ஜி. ஜாபர் அலி ஒரு சில குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்டுள்ளதனால் அவர் மீது முறையாக குற்றச்சாட்டை ஏற்படுத்தி ஒரு விசாரணை அதிகாரியை நியமித்து விசாரணை செய்யப்பட்டு அந்த விசாரணை அதிகாரியும் அவருடைய அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அது பற்றி அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு எக்காலத்திலும் எந்த அதிகாரியின் மீதும் பகை உணர்ச்சி கொண்டு நடந்து கொண்டதில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் திரு. திருநாவுக்கரசு பேசும்போது மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் பணியிலுள்ள காவலர்களுக்கு பயணப்படி வழங்கப்படுவது ரத்து செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அது முற்றிலும் தவறான செய்தி ஆகும். தமிழ்நாடு பயணப்படி விதிகள் 40 (பி) மற்றும் 42-ன்படி காவலர்கள் பணி நிமித்தம் தலைமையிடத்திலிருந்து 8 கிலோ மீட்டருக்கு மேல் சென்று திரும்பி வருவதற்கு 12 மணி நேரம் அல்லது 6 மணி நேரத்திற்கு மேலாக இருப்பதைப்பொறுத்து பயணப்படி வழங்கப்படுகிறது. ஆகவே தலைமையிட எல்லைக்குள் பயணம் செய்தால் பயணப்படிக்கு உரித்தானவர்கள் அல்ல. ஆனால் பணி நிமித்தம் இவர்கள் மொபிலைசேஷன் செய்யப்பட்டால் அவர்களுக்கு உணவுப் படி வழங்கப்படுகிறது. ஆனால் இவர்கள் தலைமையிடத்திலேயே பயணம் செய்தால் அவர்களது போக்குவரத்துச் செலவு மட்டும் வழங்க விதிமுறைகள் உள்ளன. பயணப்படி ரத்து செய்யப்பட்டதற்கான ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

1993 ஏப்ரல் 22] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

சிறிது நேரத்திற்கு முன் நான் சொன்னபடி, ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் ஏனைய வன்முறைச் சம்பவங்களைச் சமாளித்ததோடு மட்டுமல்லாது, பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாடே அமளிப்பட்டு, கொந்தளித்து வன்முறை கோரத் தாண்டவமாடிய போது, தமிழகம் மட்டும் தான் ஒரு சில சிறு நிகழ்ச்சிகளைத் தவிர அமைதி காத்தது. (மேசையைத் தட்டும் ஒலி). அதே நேரத்தில் வன்முறையை அடக்க முடியாது தவித்த காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலமான கர்நாடக மாநிலத்திற்கு நம் காவல் துறையினரைக் கொடுத்து உதவினோம் என்பது தான் உண்மை.

எனவே, சட்டம் ஒழுங்கைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலத்தை ஒப்பிடும்போது, நாம் அமைதியோடும், நிம்மதியோடும் இருக்கிறோம். வலிமையான அரசியல் தலைமை, சரியான அரசியல் முடிவு அதாவது Rightly direced poliitical will சட்டம், அமைதியை நேசிக்கும் மக்கள், அரசு மீது அவர்களுக்கு உள்ள நம்பிக்கை, ஆகியவை தான் தமிழகத்தின் இன்றைய அமைதி நிலைக்கும் அருமை நிலைக்கும் காரணம் எனக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களைப் பொறுத்த வரையில், என்ன செய்திருக்கிறோம், எதை நோக்கிப் போகவிருக்கிறோம் என்பதே முக்கியம். காவல் துறையைக் கட்டுப்பாடுமிக்க, கண்ணியமிக்க, திறன் சான்ற துறையாக ஆக்க வேண்டும் என்பதில் அதிதீவிரமாய் இருக்கிறோம். வளரும் சூழ்நிலையில் மக்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வண்ணம், எதிர் சூழலையும், இடர்ப்பாடுகளையும் சமாளித்து கடமையாற்ற, திறமை காட்ட என்னவெல்லாம் இவர்களுக்குச் செய்ய வேண்டும் என்பதில் இந்த அரசு குறியாக இருக்கிறது. காவல் துறையினரை நியமிப்பதிலிருந்து அவர்கள் ஓய்வு பெறும் வரை அதாவது ''ரெக்ரூட்மென்ட் டு ரிட்டையர்மென்ட்'' அவர்தம் நலம் பேணி ஊக்குவித்து உற்சாகப்படுத்துவதை, அதற்கான வாய்ப்பு வசதிகளை அதாவது ஆயுதமாக, கருவியாக, வாகனமாக, ஏனைய வசதிகளை அளிப்பது, நவீனமாக்குவது, பயிற்சியளித்து திறமைகளையும், யுக்திகளையும் வளர்ப்பது போன்ற செயலில் நாங்கள் ஆட்சிக்கு வந்த மாத்திரத்தில் இறங்கி விட்டோம்.

பிற்பகல் 1-35.

அதாவது ஒரு ஒட்டுமொத்தப்பார்வை (comprehevsivelook) பார்த்து விட்டோம். எங்கள் ஆட்சிக் காலத்தில் தான் காலங் காலமாகத் தேங்கிக் கிடந்த பல ஆயிரக்கணக்கான கீழ்மட்ட

இடங்களை அதாவது கிரேடு II காவலர்களை நிரப்ப ஒரு அமைப்பையே உருவாக்கி சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் சுமார் 10,000 பேரை நியமனம் செய்யும் நிலைக்கு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). சுமார் 70,000 பேருக்கு மேல் விண்ணப்பித்து தேர்வின் பல்வேறு நிலைகளைத் தாண்டி 11,760 பேர் நேரடித் தேர்வை எட்டியுள்ளனர். இவர்களைப் பற்றிய விவரம் உங்களுக்கு பெரு மகிழ்ச்சியைத் தரும் எனக் கருதுகிறேன். இந்த 11,760 பேரில் 72 சதவிகிதத்தினர் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலானவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் எனக் கருதுகிறேன். இதில் 49 சதவீதம் பிற்பட்ட வகுப்பையும், 26 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாகவும் ஆகக் கூடி 75 விழுக்காடு BC and MBC யினராகவும், 16 விழுக்காடு ஆதி திராவிடராகவும் இருப்பதிலிருந்து கிராமப்புறங்களில் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கே 90 சதவீத வேலை வாய்ப்பு கிட்டும் என்பது என்னைப் பெருவகையில் ஆழ்த்துகிறது. காவலர் நிலைக்கு மேற்பட்ட நிலையில், காவல் துறைத் தலைவர் வரை, பல்வேறு நிலைகளில் சுமார் 2,000-க்கும் மேற்பட்ட பதவிகள் புதிதாக உருவாக்கப்பட்டது இந்த ஆட்சியில்தான். காவல் துறையின் மிகப் பெரிய சாராருக்கு அளித்த விமோச்சனம்தான், பல்லாண்டு காலமாக தேங்கிக் கிடந்த 21,000 (தரம் 2) காவலர்களை தரம் 1-க்கு பதவி உயர்வு கொடுத்த எங்கள் ஆட்சியின் முடிவு. அதனையொட்டி 2,700 தரம் 1 காவலர்களை தலைமைக் காவலர்களாவும் பதவி உயர்வு கொடுக்க ஆணைப் பிறப்பித்துள்ளோம்.

400-க்கும் மேற்பட்ட வாகனங்களை வழங்கியுள்ளோம். 200-க்கு மேற்பட்ட வாகனங்களைப் பழுது பார்த்துள்ளோம். கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு நவீன ஆயுதங்களையும், கருவிகளையும் வாங்கியுள்ளோம். ஆட்களை நியமித்து, பதவி உயர்வு வழங்கி, புதுப்புது கருவிகளை தரும் அதே நேரத்தில் அவர்களுக்கு நன்கு பயிற்சி அளித்து, திறமை சான்றவர்களாக ஆக்குவதும் எங்களின் நோக்கமாகும். நவீன ஆயுதங்களாகிய AK 47, 7.62 m.m. துப்பாக்கி, SLR ரைபில், L.M G. stengun போன்ற ஏனைய நவீன கருவிகளை வாங்கியிருக்கிறோம். காவல் துறையை நவீனப்படுத்தும் முயற்சியில் ஓரளவு முன்னேறி இருக்கிறோம் என்றே கருதுகிறேன்.

இது போன்ற கருவிகளை காவலர்களுக்குக் கொடுத்து, இன்றைய நிலையில் இவற்றை எளிதாக இயக்கிப் பயன்படுத்தும் பக்குவத்தையும் அளித்திருக்கிறோம். பயங்கரவாத நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் குண்டு வெடிப்புகளைக் கண்டுபிடிக்கவும், அவற்றை அகற்றவும் எங்கள் ஆட்சியில் 243 பேருக்கு பயிற்சி தந்து இருக்கிறோம். இதற்கு முன் 15 வருடத்தில் 80 பேருக்குத்தான் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது

மனேசருக்கு அனுப்பி N.S.G. யால் 277 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். நம்மிடமுள்ள காவல் துறையினரில் 2,000 பேருக்கு மேல் சிறப்புப் பாதுகாப்புப் படை (S.S.G.) மூலமாக விசேஷ சுடும் பயிற்சி, பயங்கரவாதிகளை எதிர்க்கும் பயிற்சி, கமாண்டோ பயிற்சி ஆகிய பல்வேறு நுணுக்கப் பயிற்சிகள் அளித்து வருகிறது.

மேலும் 4,000 பேர்களுக்கு சுடும் பயிற்சி இன்னும் சில மாதங்களில் அளிக்கப்படும். ஆக மொத்தம் 6,000 பேர்களுக்கு விசேஷ பயிற்சி அளிக்கும் மிகப் பெரிய திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

அடுத்து, அதிகாரிகளை அதிகப்படுத்திற அலுவலர் சார்ந்த (Officer oriented) அணுகுமுறையை நோக்கிப் போகிறோம்.

இதிலெல்லாம் முழு வெற்றி பெற, பணிபுரியும் காவலர்களுக்கும் அத்துறையினருக்கும் ஊக்கம் தேவை, உற்சாகம் தேவை, வசதி தேவை, வாய்ப்புத் தேவை. இவற்றை மனதில் வைத்து சில அறிவிப்புகளை வழங்க இருக்கிறோம். சில முக்கிய அறிவிப்புகளை செய்வதற்கு முன்னால், கொடுக்கப்பட்ட சில வெட்டுத் தீர்மானங்கககளுக்குப் பதிலளிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், காவல் துறையின் செயல்பாடுகள் மற்றும் கொள்கை பற்றி விவாதிக்க, வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். காவல் துறை தொடர்பான முக்கியப் பணிகள், தேவையான புள்ளி விவரங்கள் மற்றும் கொள்கை விளக்கங்கள் ஆகியவை காவல் துறை மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றையே, காவல் துறை பற்றிய கொள்கை தொடர்பான இந்த அரசின் விளக்கங்களாக எடுத்துக் கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களது தொகுதிகளில் உள்ள இடங்கள் பலவற்றில் புதிய காவல் நிலையங்களை அமைக்கக் கோரியும், ஏற்கனவே அமைந்துள்ள புறக்காவல் நிலையங்களை, நிரந்தரக் காவல் நிலையங்களாக உயர்த்தக் கோரியும் கேட்டுக் கொண்டுள்ளனர். பொதுவாக ஓர் இடத்தில் புதியதாக காவல் நிலையம் துவக்குவது என்றால், அந்த இடத்தினுடைய மக்கள் தொகை, அந்தப் பகுதியில் நிகழ்ந்துள்ள குற்றங்களின் விகிதம், அந்தப் பகுதிக்கும், அது ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள காவல் நிலையத்திற்கும் இடையே உள்ள தூரம் போன்ற சில விவரங்களைக் கருத்தில் கொண்டு அரசு முடிவு

செய்கின்றது. அந்த அடிப்படையில் புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்படுகின்றன. வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள நெமிலி என்ற இடத்திலும், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள வெள்ளவேடு என்ற இடத்திலும் புதியதாக காவல் நிலையங்கள் அமைக்க அரசு ஏற்கனவே அனுமதி வழங்கி உள்ளது.

அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் சென்னையில் மேலும் இரண்டு இடங்களில் விரிவுபடுத்தப்படுவதோடு அல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா காவல் துறை மாவட்டங்களின் தலைநகரங்களிலும், அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைப்பது என்று கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியுள்ள இதர இடங்களில் காவல் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் சொந்தக் கட்டிடங்களை கட்டித் தருதல், காவலர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டுதல், ஊர்திகள் மற்றும் நவீன தகவல் தொடர்பு வசதிகளை செய்து கொடுத்தல் ஆகியவை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். இவற்றை கொள்கை ரீதியாக இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. அரசின் நிதி நிலைக்கேற்ப, அவசியத்தின் அடிப்படையில் முன்னுரிமை கொடுத்து இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகக் காவல் துறையை நவீனப்படுத்த எங்கள் அரசு பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தமிழகத்திலுள்ள எல்லா காவல் நிலையங்களுக்கும் வயர்லெஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 1,090 காவல் நிலையங்களில் 916 காவல் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள்களும், 195 காவல் நிலையங்களுக்கு ஜீப்புகளும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள காவல் நிலையங்களுக்கு ஜீப்புகளும், மோட்டார் சைக்கிள்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், பாதுகாப்பு அதிக அளவில் தேவைப்படும் பகுதியில் உள்ள குறிப்பிட்ட காவல் நிலையங்களுக்கு 200-ஏ.கே. 47 துப்பாக்கிகளும், 1,300—7.62 எம்.எம். எஸ்.எல்.ஆர்—செல்ப் லோடிங் ரைபிள் துப்பாக்கிகளும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன என்பதைத் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு ஊதியத்தை அதிகரிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். காவலர்களுக்கு தற்போது 5-வது ஊதியக் குழுவின் பரிந்

துறைகளின்படி, மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, காவலர்களின் புதிய ஊதிய விகிதத்தை உயர்த்த வேண்டிய அவசியம் எழ வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறை பணியின் தன்மை, கடமை ஆற்றவேண்டிய சூழ்நிலை, அதில் ஏற்படும் இடர்ப்பாடுகள், அவற்றைக் கடந்து, அவர்கள் காட்டிய திறம் இவற்றை மனதில்கொண்டு, அவர்கள் நலம்பேணி, அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்க சில திட்டங்களை, சில சலுகைகளை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் துறையினர் பணி செய்யும் காலத்தே, வீரச்செயல் புரிந்து இறக்கும்போது அவர் குடும்பத்தினருக்கு தற்சமயம் ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்படுவதோடு, இறக்கும் காலத்தே அவர் என்ன ஊதியம் வாங்கிக் கொண்டிருந்தாரோ, அதனையே அவர் சாதாரணமாக பணிபுரிந்து ஓய்வுபெறும் நாள் வரை அவரது குடும்பத்திற்கு ஓய்வு ஊதியமாக வழங்கப்படுகிறது. இதுதவிர குடும்ப நல நிதியாகிய 60,000 ரூபாயும் கொடுக்கப்படுகிறது, இத்தனையும் இந்த அரசால் ஏற்கனவே அளிக்கப்பட்டுவரும் உதவிகள் ஆகும்.

பிற்பகல் 1-45

இனிமுதல், காவல் துறையில் உள்ள அனைவரையும் ஒரு ஒட்டுமொத்த குழுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்— குரூப் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் — கொண்டுவந்து, அவர்களுக்கும் குறிப்பாக அவர்தம் குடும்பங்களுக்கும் ஒரு நிலையான பாதுகாப்பை அளிக்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. அன்டை மாநிலமான கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் குழுப் பாதுகாப்பு திட்டம் உள்ளது. அவற்றை எல்லாம் பரிசீலித்து அவற்றைவிட அதிகப் பயனுள்ள வகையில் ஒரு பாதுகாப்பு— இன்சூரன்ஸ் திட்டத்தைத் தீட்டியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி காவல் துறையில் உள்ள அனைவரும் பணிபுரியும் பொழுது இறந்தால், i.e. if they die while on duty காவலர் முதல் கூடுதல் கண்காணிப்பாளர் நிலைவரை உள்ள அலுவலர்களுக்கு 1 லட்சம் ரூபாயும், கூடுதல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறைத் தலைவர் நிலைவரை உள்ள அலுவலர்களுக்கு 5 இலட்சம் ரூபாயும், கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு 7.5 இலட்சம் ரூபாயும், காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குழுப் பாதுகாப்புத் திட்டம் தீயணைப்புத் துறை, சிறைத் துறை மற்றும் வனத் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் பொருந்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களுக்குக் கொடுக்கப்படும் அதிகபட்சத் தொகை அனைத்து வட்டங்களிலும் 1 லட்சம் ரூபாய் என வரையறுக்கப்படும். இந்தத் திட்டம் காவல் துறை, தீயணைப்புத் துறை, வனத் துறை அமைச்சுப் பணியாளர்களுக்கு பொருந்தாது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொரு புதிய குழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்—Unnamed Group Insurance Scheme — சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்கவிருக்கும் தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினர்— Tamil Nadu Special Task Force மற்றும் மிக முக்கிய பிரமுகர்களை V.V.I.P. களை பாதுகாக்கும் பணியில் இருக்கும் தனிப் பாதுகாப்புக் குழுவினர் — Special Security Group — ஆகியோர் கடமையாற்றும்போது இறந்தாலோ அல்லது நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டாலோ அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) Special Task Force மற்றும் Special Security Group-ல் பணிபுரியும் உயர்நிலை அலுவலர் முதல் கடைசி நிலைக் காவலர் வரை இது பொருந்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதாவது, இதில் குறிப்பிட வேண்டிய அம்சம் என்னவென்று சொன்னால், Special Task Force -ல் உள்ளவர்கள் ஒரு நிகழ்ச்சியில், ஒரு சம்பவத்தில் இறந்து போகிறார்கள் என்று சொன்னால், ஒரு Additional D.G.P., ஒரு Inspector, ஒரு Constable ஆகிய மூவரும் இறந்து போகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த மூவருக்கும் ஒரே விதமாக, 10 இலட்சம் ரூபாய் அவர்கள் குடும்பங்களுக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இந்தத் திட்டத்தின் சிறப்பு.

அதைப்போலவே, Special Security Group-ல் உள்ளவர்களுக்கும் எந்தப் பாகுபாடும் செய்யவில்லை. Special Security Group தற்போது ஒரு டி.ஐ.ஜி.-ன் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. எனவே அந்த S. S. G. -ல் ஒரு டி.ஐ.ஜி. while on Duty இறந்தாலும் சரி, ஒரு Constable இறந்தாலும் சரி எந்த வேறுபாடுமின்றி அவர்கள் குடும்பங்களுக்குத் தலா 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சமீபத்தில், 9–4–1993 அன்று சந்தனக் கடத்தல் காரன் வீரப்பன் கும்பலால் கொல்லப்பட்ட சிறப்பு அதிரடிப் படையினராகிய திரு. பஞ்சலிங்கம், காவலர் எண். 1353 ; திரு. சுகுமாரன், காவலர் எண். 1535 ; திரு. தயாளன் காவலர் எண். 1890 ; திரு. ரமேஷ், காவலர் எண். 1986; திரு. சுவாமிநாதன் காவலர் எண். 1538; திரு. சண்முகம், வனக் காவலாளர்; திரு ஸ்ரீரங்கன், வனக் காவலாளர் ஆகிய 7 பேர்களின் குடும்பங்களுக்கும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள உதவி களுக்கும் மேல் இத்திட்டத்தின் கீழும் தலா 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் (மேசையை தட்டும் ஒலி).

சிறப்பு அதிரடிப் படையினருக்கும் (Special Task Force)-ல் உள்ளவர்களுக்கும், தனிப் பாதுகாப்புக் குழுவினருக்கும் (Special Security Group)ல் உள்ளவர்களுக்கும் சீருடைக்காக வருடத்திற்கு ஒரு முறை 500 ரூபாயும், ஆபத்து ஊதியமாக-risk allowance—ஆக ஒவ்வொரு மாதமும் 1,000 ரூபாயும், இவர்களுக்கு உரிய தினப்படி ஒன்றரை மடங்காகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1–50

திறம் சான்றவர்களை இது போன்ற ஆபத்தான, வீரம் செறிந்த பணிக்கு கவர்ந்திழுக்கவும், அவர்கள் பணியிலிருக்கும் போது விளையும் பேராபத்துக்களைக் கருத்தில் கொண்டு இது போன்ற சலுகைளை வழங்க அரசு முன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையில் பணிபுரியும் அடிப்படைப் பணியா ளர்களில் தற்போது சுமார் 40 சதவீதத்தினருக்குத்தான் குடியிருப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு வீட்டு வசதி ஒரு மிக முக்கியத் தேவை என்பதை இந்த அரசு நன்கறியும். எனவே, எங்கள் ஆட்சியில், தி.மு.க. ஆட்சியால் ஒழிக்கப்பட்ட, தமிழ் நாடு காவல் துறை வீட்டு வசதி வாரியத்திற்குப் புத்துயிர் கொடுத்து, ஆண்டொன்று குக் குறைந்த பட்சம் 1,000 குடியிருப்புகளுக்குக் குறை யாமல் கட்டத் திட்டமிட்டு, அந்தப் பணி தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) . சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட வீடுகள் எல்லாம் வேகமாகக் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் தனிப் பாதுகாப்புக் குழுவுக்கென்று பிரத்தியேகமாக 120 குடியிருப்புகளும், 200 பேர் தங்கக் கூடிய இரு பகுதி

களைக் கொண்ட பாரக்ஸ்களும் 2.85 கோடி ரூபாய் செலவில் விரைவில் கட்டி முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

இதைத் தவிர, காவல் துறையில் பணிபுரியவர்கள் தத்தம் வீடுகளைக் கட்டிக்கொள்ள "own your House" scheme-ன் கீழ் அவர்களுக்குக் கடன் வழங்கி, எளிதான தவணை முறையில் திருப்பிச் செலுத்த வழிவகை செய்யப்படும். இதற்கென அரசு இந்த ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும்.

சென்ற ஆண்டு மானிய கோரிக்கையின் போது, காவல் துறை சார் நிலைப் பணியாளர்கள் சென்னை வரும் போது சென்னையில் தங்குவதற்கு ஒரு ஓய்வு இல்லம் கட்டப்படும் என்று கூறினேன். தற்போது மாநிலத்தில் உள்ள பிற இடங்களிலும் இந்த வசதியை விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டு ஒலி). அதன்படி காவல் துறை சரகங்களின் தலைமையிடமாகிய மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், இராமநாதபுரம், பரங்கிமலை ஆகிய ஏழு இடங்களிலும், ஒவ்வொன்றிலும் ஒரு ஓய்வு இல்லம் (ரெஸ்ட் ஹவுஸ்) ஒவ்வொன்றும் 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். இவை கட்டி முடிக்கப்பட்ட பிறகு, காவல் துறை மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் சிறிய அளவிலான ஓய்வு இல்லம் ஒன்று கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

தற்சமயம் சென்னையில் இயக்கி வரும் காவல்துறை இயக்குநர் அலுவலகத்தை அகற்றி விட்டு, அந்த வளாகத்தில் ஒரு எழில் மிக்க பல மாடிக் கட்டிடத்தை எழுப்பி, சென்னை மாநகரத்தில் சிதறிக்கிடக்கும் பல்வேறு காவல் துறை அலுவலகங்களையும் ஒரே கட்டிடத்தில் கொண்டு வர இந்த அரசு முயற்சி எடுக்கும். அதற்கான திட்டத்தை விரைவில் தயாரிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, A Centre for Excellence என்று சொல்லக் கூடிய கூர்மதி மையம் ஒன்றை சென்னையில் நிறுவி காவல் துறையினரின் குழந்தைகள் கற்றுத் தேற வகை செய்யப்படும், இதில் விடுதி வசதியும் செய்து தரப்படும். இந்தப் பள்ளியில் சின்னஞ் சிறு சிசுக்களுக்கான எல். கே. ஜி முதல் பள்ளி இறுதி வகுப்பு வரை தொடங்கப்படும். இதற்கென ஒரு குழுவை நியமித்து இதைச் செயற்படுத்துதல் பற்றி ஆலோசிக்கப்படும். காவல் துறையினரின் குழந்தைகளை இது போன்ற மையங்களில் பயிற்றுவித்து, பிற்காலத்தே சீருடைப் பணியாளர்கள் தேர்வுக்கு உதவவே இந்தப் புதிய முயற்சி எனக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1993 ஏப்ரல் 22] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இந்த ஆண்டில், எற்கெனவே கொள்கைக் குறிப்பில் சொல்லியது தவிர, இன்னும் புதிதாக சில காவல் நிலையங்களை ஏற்படுத்தவும், புறக்காவல் நிலையங்களை நிரந்தரக் காவல் நிலையங்களாக உயர்த்தவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி தர்மபுரி மாவட்டம் பர்கூருக்கு அருகில் உள்ள கத்திக் குப்பம் என்ற ஒரு காவல் நிலையமும், பரமக்குடிக்கு அருகில் உள்ள எமனேஸ்வரத்தில் ஒரு காவல் நிலையமும், கும்மிடிப் பூண்டி சிப் காட் பகுதியில் ஒரு காவல் நிலையமும் ஏற்படுத்தவும், தஞ்சாவூரில் மருத்துவக் கல்லூரிக்கு அருகில் உள்ள புறக் காவல் நிலையத்தை நிரந்தர முழுக் காவல் நிலையமாக உயர்த்தவும் இந்த அரசு முடிவு செய்யுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முழுக்க முழுக்கப் பெண்களால் நிர்வகிக்கப்படும் (All Women Police stations) காவல் நிலையம், சென்னையில் மேலும் இரண்டும், மதுரை மாநகரில் ஒன்றும், கோயம்புத்தூர் மாநகரில் ஒன்றும், ஒவ்வொரு காவல்துறை மாவட்டத் தலைநகரங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று என்று மொத்தம் பெண்களால் நிர்வகிக்கப்படும் 27 காவல் நிலையங்கள் இந்த ஆண்டில் தொடங்கப்படும் எனக் கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-55

இதோடு தர்மபுரி மாவட்டம் பர்கூரில் பெண்களால் நிர்வகிக்கப்படும் ஒரு காவல் நிலையம் கூடுதலாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றால் 28 பெண் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளராகப் பதவி உயர்வு பெறுவார்கள். இதன் விளைவாக சார்நிலைப் பணியாளர் மட்டத்திலும் பதவி உயர்வு கிடைக்கும். இந்த காவல் நிலையங்களில் பணிபுரிய போதிய பெண் காவலர்கள் வேண்டுமல்லவா ? எனவே, இந்த ஆண்டில், மட்டும் சுமார் 300 இரண்டாம் நிலை பெண் காவலர்கள் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல்துறையினரைத் தேர்ந்தெடுக்கும்போது, வாட்டசாட்டமான, திறம்சான்ற விளையாட்டு வீரர்களைக் கவரும் வண்ணம், இனிவரும் காவல்துறைத் தேர்வுகளில், ஒவ்வொரு முறையும் பத்து சதவீத இடம் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்டு நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல்துறையில் பணிபுரிவோரின் குறைகளை, கோரிக்கைகளைக் கேட்டு நிவர்த்திக்கும் வகையில், மாநில அளவிலும், காவல் துறை மாவட்ட அளவிலும் உயர் அலுவலர் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும். அவ்வாறு அமைக்கப்படும் குழுக்கள் பணியாளர்களின் கோரிக்கைகளை விரைந்து ஆய்ந்து, தீர்வு காண வழிவகை செய்யும்.

தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர் (Tamil Nadu Special Police) பல சமயங்களில், மாதக்கணக்கில் தலைமையிடத்தை விட்டு வெளியில் தங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவ்வாறு அவர்கள் மாநிலத்திற்குள், தலைமையிடத்தை விட்டு, வெளியிடங்களில் 4 மாதத்திற்கு மேலாகத் தங்க நேரிட்டால் அவர்களுக்கு 7 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பும் (Special casual leave) ஒருமுறை தலைமையிடத்துக்குப் போய்வரும் பயணச் செலவு, தினப்படி ஆகியவை வழங்கப்படும். அதேபோல், இவர்கள், நமது மாநிலத்தை விட்டு வெளி மாநிலங்களுக்குச் சென்று 6 மாதத்திற்கு மேல் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு சிறப்பு தற்செயல் விடுப்பாக 10 நாட்களும், ஒருமுறை தலைமையிடத்துக்குச் சென்று திரும்பும் பயணச் செலவும், தினப்படி ஆகியவை வழங்கப்படும் என்று அரசு எடுத்துள்ள முடிவை இங்கே அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நெடுநாட்களாக பதவி உயர்வின்றி தேங்கிக் கிடக்கும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, ஆயுதக் காவல் படை ஆகியவற்றில் பணிபுரியும் துணை ஆய்வாளர்கள், 5 ஆண்டுகள் பணிபுரிந்த பின்பு, அவர்களின் திறமை, பணிமூப்பு (Merit-cum-Seniority) ஆகியவற்றின் அடிப்படையில், காவல் துறைக்கு (Local Police Category)-க்கு மாறுதல் பெறும் வாய்ப்பைப் பெறுவர்.

காவல் துறையினர் தாம் பணிபுரிகின்றபோது, பாராட்டுக்குரிய வீரதீரச் செயல் புரிந்தால் (for acts of out standing gallantry and heroism) அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, அண்மையில் 9—4—1993 அன்று சந்தனக் கடத்தல் காரன் வீரப்பனின் கும்பல், சிறப்பு அதிரடிப்படையினரை வெடிகுண்டு வைத்துத் தாக்கிக் கொன்று காயப்படுத்தியபோது, தங்கள் உயிரினையும் துச்சமாக மதித்து துணிச்சலாக நின்று, அந்தக் கும்பலை விரட்டியடித்ததுடன், காயமடைந்தவர்களுக்கு பாதுகாப்பு அளித்து, சம்பவ இடத்தையும், ஆயுதங்களையும் பாதுகாத்து வீரச்செயல் புரிந்த ஆய்வாளர் அசோக் குமார், ஹவில்தார் என். கிருஷ்ணசாமி, ஹவில்தார் பழனிச் சாமி, காவலர் சரவணன், காவலர் கோவிந்தசாமி, காவலர்

முருகன், வனக்காவலர் அழகேசன் ஆகிய 7 கடமை வீரர்களுக்கும் விதிகளைத் தளர்த்தி உடனடியாக பதவி உயர்வு கொடுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனையும், அவனது கும்பலையும் பிடிக்கும் முயற்சியில் ஒரு அங்கமாக, புதியதாக வனபுலனாய்வுப் பிரிவு ஒன்று (Forest Intelligence Unit) ஒன்று உடனடியாகத் தொடங்கப்பட்டு, சிறப்பு அதிரடிப்படையின் கீழ் செயல்படும். இப்பிரிவு, வீரப்பன், அவனது கும்பல் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவர்களது நடமாட்டம் பற்றிய நுட்பமான செய்திகளையும், அவர்களின் திட்டங்களையும் திரட்டித் தரும்.

பணியில் இருக்கும் காலத்தே வீர தீரச் செயல் புரிந்து, இறந்த காவல் துறையினரின் குழந்தைகளுக்கு பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற படிப்புகள் படிக்க கல்லூரிகளில் முன்னுரிமை வழங்க ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை இடங்களை ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலித்து வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியுடன், பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : காவல் துறையினரின் குழந்தைகள் கல்வி கற்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், காவல்துறை மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு அரசுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் காவல் துறையினரின் குழந்தைகளுக்கு முறையே 6,000 ரூபாய் 4,000 ரூபாய், 2,000 ரூபாய் பரிசாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தந்த மாவட்டங்களில் உள்ள காவல் துறையின் தனிப்பிரிவு (Special Unit) மற்றும் ரயில்வே காவல் துறையினரின் குழந்தைகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர்.

சென்னை மாநகரில், குற்றங்கள் நிகழா வண்ணம் கண்காணித்துத் தடுக்கவும், அமைதி காத்திடவும் 24 மணி நேரமும் ரோந்துப் பணி புரிந்திட ஏதுவாக 37 புதிய ஜீப்புகள் வாங்கி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு பணிபுரியும் நம் காவல் துறையினருக்கு வேண்டிய, அத்தியாவசிய தேவைகள் சிலவற்றை செய்து கொடுக்கும்படி, விமான போக்குவரத்துத் துறையிடம் வலியுறுத்தப்படும்.

இப்போது காவல் துறையினருக்கு பொது விநியோக விலையில் 50 சதவிகித மானியத்தில் உணவுப் பொருட்கள் வழங்கப் படுகின்றன. இதே பயன், தீயணைப்புத் துறை மற்றும் சிறைத் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும். காவல்துறைப் பணியாளர்களைப் போன்று 50 சதவிகித மானிய விலையில் தீயணைப்புத் துறையினர் மற்றும் சிறைத் துறையினருக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறை ரேடியோ பிரிவில் தற்சமயம் பணிபுரியும் தொழில் நுட்ப அலுவலர்கள் (Technical Officers) இனிமேல் துணைக் கண்காணிப்பாளர்கள் (D.S.P.) என்று அழைக்கப் படுவார்கள்,

காவல் துறையின் பணி வெகுவாக காவல் நிலைய மட்டங்களிலே நடைபெற வேண்டியிருக்கிறது, இப்பணிகளில். காவல் துறையின் மேல் அதிகாரிகளின் கண்காணிப்பும் கவனமும். அறிவுரையும் அதிகம் இருக்கவேண்டும்; இப்படிச் செய்வதின் மூலம் பணியின் தரமும் வேகமும். நிர்வாகத் திறனும் கூடும்., அதனால் விளையும் பயனும் மக்களுக்கு விரைந்து கிடைக்கும், இதனை கருத்தில் கொண்டு தமிழகத்தில் தற்போது உள்ள 95 காவல்துறை உட்கோட்டங்களை sub-division களை 169 உட் கோட்டங்களாக மூன்று ஆண்டுகளில் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை அறிவிப்பதில் அக மகிழ்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி), இதனால் 25 ஆய்வாளர்கள் துணைக் கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெறுவார்கள் அதற்குக் கீழ் படிப்படியாக அடிமட்டம் வரை உள்ள 25 பேர்களுக்கு வெவ்வேறு மட்டங்களில் பதவி உயர்வு கிடைக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இதேநேரத்தில் வேறொரு கோணத்தில். வேலைச்சுமை. சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, கடலோரப் பாதுகாப்பு, ஏனைய சிக்கலான சூழ்நிலை இவற்றைக் கருத்தில் கொண்டு. சென்னை, கோவை, மதுரை ஆகிய நகரங்களில் எப்படி ஆய்வாளர்கள், காவல் நிலையப் பொறுப்பில் இருக்கிறார்களோ, அப்படியே பிற முக்கிய காவல் நிலையங்களையும் ஆய்வாளர் காவல் நிலையங்களாக மாற்றும் திட்டமும் இந்த அரசிடம் உள்ளது. அதன்படி நடப்பு ஆண்டில் சுமார் 150 காவல் நிலையங்களையும் அடுத்த ஆண்டு மேலும் 150 காவல் நிலையங்களையும். ஆக மொத்தம் 300 காவல் நிலையங்களை ஆய்வாளர் காவல் நிலையங்களாக மாற்ற அதாவது (upgradation) செய்ய இந்த அரசு முன் வந்திருக்கிறது என்ற செய்தியையும் இந்த மாமன்றத்திற்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால் 1979 ஆம் ஆண்டில் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பன்னெடுங்காலமாக பதவி உயர்வே இல்லாது இருக்கும் 261 உதவி ஆய்வாளர்கள் பயன் பெறுவார்கள் இதனைத் தொடர்ந்து முதுநிலையில் உள்ள 24 தலைமைக் காவலர்களும் பதவி உயர்வு பெறுவர்.

தமிழக காவல்துறை எப்படி நவீனமயத்தை நோக்கி நடைபோடவேண்டும்; தற்போதைய சூழ்நிலையில் அது எவ்வளவு வேகமாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டேன். எடுத்த நடவடிக்கை எல்லாம் எடுத்தியம்பினேன். இங்கே பேசிய பேரவை உறுப்பினர்களில் எல்லோருமே இதில் ஒருமித்த கருத்தை உறுதிப்படுத்தினார்கள். உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். மைய அரசிடம் இதற்கென 80.45 கோடி ரூபாய் கேட்டோம். அதில் 10 கோடி ரூபாய்தான் இதுவரை கிடைத்துள்ளது.

பிற்பகல் 2-05

இன்னும் 30 கோடி ரூபாய் கிடைக்கக் கூடும் என்ற செய்தி சொல்லப்பட்டதே தவிர இதுவரை கிடைக்கவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து வலியுறுத்தித்தான் பார்க்கிறோம். இந்த விஷயத்தை நானே பாரதப் பிரதமரிடமும் மத்திய உள்துறை அமைச்சரிடமும் பல்வேறு காலக் கட்டங்களில் வலியுறுத்தி வந்திருக்கிறேன். மைய அரசின் மானியத் தொகை வரும் வரும் என்று காலவரையறை இன்றி காத்துக் கொண்டிருந்தால், நம் திட்டமும் முடங்கி விடும். நமது நோக்கம் ஈடேறாமல் போய்விடும். எனவே, மைய அரசின் உதவி கிடைக்கும் வரை காத்திராது, நம் மாநில நிதியைக் கொண்டே, முடிந்தவரை காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக நடப்பு ஆண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்ற மிகப் பெரிய செய்தியை இறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத்துறை ஆகிய மூன்று துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, தங்களது அரிய ஆலோசனைகளையும் சிறந்த கருத்துக்களையும் அரசுக்கு வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களால் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும், இந்த அரசு கவனத்துடன் பரிசீலித்து, தேவையான நிகழ்வுகளில், அவற்றை தக்க முறையில் பயன் படுத்திக் கொள்ள தயாராக உள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், சமுதாயத்தில் அமைதி காக்கப்படவும். தீமைகள் அகற்றப்படவும், தம்மை ஈடு படுத்திக் கொண்டுள்ள, இந்த மூன்று துறைகளின் செயல்பாடும் மேம்பாடடைய சமூகத்தில் எல்லா தரப்பினருடைய கருத்துக் களையும் இயன்ற அளவு ஏற்று செயல்படுத்த இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதனை இநதத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசிய கருத்துக் களுக்கும் மற்றும் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங் களுக்கும் பெரும்பாலும் என்னுடைய உரையில் பதில் கிடைத்து இருக்கும் என்று நம்புகிறேன், மாண்புமிகு உறுப் பினர்கள் கூறிய சில கருத்துக்களுக்கு, நேரமின்மை காரணமாக நான் பதில் அளிக்காவிட்டாலும் அவைக்குறிப்பில் பதிவான அக் கருத்துக்கள் அனைத்தையும், இந்த அரசு கவனமாகப் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கைகளை விரைந்து எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, காவல் துறை, தீயணைப்புத்துறை மற்றும் மாநில ஆய்த் தீர்வைத்துறை ஆகியவற்றிற்கான மானியக் கோரிக்கை களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

<u>திரு. காஞ்சி பன்னீர்செல்வம்</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணைக் கடலாக விளங்கிக் கொண்டிருக் கிற எங்கள் இதய தெய்வம் இன்றையதினத்திலே, காவல் துறைக்கு வாரி வாரி வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப் படையிலே நான் பேசுகிற நேரத்திலே என்னுடைய தொகுதிக்கு ஒரு தீயணைப்பு நிலையமும் ஒரு புறக்காவல் நிலையமும் கேட்டிருக்கிறேன். அதையும் இதய தெய்வம் அவர்கள் இந்த ஆண்டு செய்து தருவதற்கு ஆவன செய் வார்களா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தீ அணைப்பு நிலையங் கள் தொடங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியல் திருத்தி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று ஏற்கனவே

தெரிவித்திருந்தேன். இப்போது நான் செய்த ஒரு அறிவிப்பில், தெரிவித்த ஒரு அறிவிப்பில் 300 புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும் ஏற்கனவே உள்ள காவல் நிலையங்கள் அப்கிரேடேஷன் செய்யப்படும்., அது இரண்டு கட்டமாக இந்த ஆண்டு 150 காவல் நிலையஙகளும் அடுத்த ஆண்டு 150 காவல் நிலையங்களும் எடுத்துக் கொள்ளப்படும் என்று ஏற்கனவே தெரிவித்தேன். எனவே 300 புதிய காவல் நிலையங்கள் வரப்போகின்றன. அநேகமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் கோரிக்கைகளும் இதில் நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் உள்ள காவல் நிலையங்களில் பெண் குற்றவாளிகளை காவல் நிலையத்திற்குள் அழைத்து விசாரிக்கின்றபோது அங்கே பல தவறுகள் ஏற்படுகின்றன. அந்த கிராமப்புற காவல் நிலையங்களில் பெண் காவலர்களை முதல்வர் அவர்கள் நியமிக்கின்றார்களா அல்லது அந்த காவல் துறையைச் சார்ந்தவர்கள் பெண் குற்றவாளிகளை அவர்களுடைய வீட்டுக்கே சென்று விசாரிக்கின்ற முறையை மேற்கொள்ள உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து பரிசீலிக்கப் பட்டு நல்ல முடிவு அறிவிக்கப்படும்.

பிற்கபல் 2.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திர சேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி நகரப் பேருந்து விஸ்தரிப்புக்காக காவல்துறைக்குச் சொந்தமான 1.80 ஏக்கர் நிலத்தை காவல்துறையிடமிருந்து நகராட்சிக்குக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரிடம் கேட்டிருந்தேன். அதைக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட இன்ஸிடெண்ட்டை இந்த நேரத்தில் கேட்கக்கூடாது. திரு. எஸ். வி. சண்முகம்.

*திரு. எஸ். வி. சண்முகம். :பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில நல்ல அறிவிப்புகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். இந்த அரசு

வீரத்தை மதிக்கின்ற அரசு, தியாகத்தை மதிக்கின்ற அரசு என்பதை சந்தனக்கட்டை வீரப்பனை சமர் புரிவதற்குச் சென்ற காவலர்களை மதிப்பதன் வாயிலாக நிரூபித்திருகிறார்கள். தங்களுடைய தந்தைமார்களை, கணவன்மார்களை இழந்து தவித்துக் கொண்டிருந்த குடும்பங்களுக்கெல்லாம் தலா 10 இலட்சம் என்று அறிவித்திருப்பது எண்ணி, எண்ணி எண்ண மாளாத அறிவிப்பாகும். அதைப் போல தங்களுடைய உயிரை துச்சமென மதித்து வெஞ்சமர் புரிந்த வீரர்களுக்கு விதி முறைகளைத் தளர்த்தி பதவி உயர்வு அளித்திருப்பது என்பது உண்மையிலேயே வியத்தகு சாதனையாகும். இந்த நல்ல சாதனைகளையெல்லாம் வெளியே இருப்பவர்கள் அறியும் போது அவர்கள் வயிற்றிலே கண்டிப்பாக புளியைக் கரைக்கும். இந்த நல்ல அறிவிப்புகளை எல்லாம் செய்திருக்கிற நேரத்திலே நேற்றைக்கு நான் ஒரு சின்ன கோரிக்கையை வைத்தேன். என்னுடைய மதுரை மேற்கு தொகுதியில் உள்ள சிறப்பு காவல் படையினருக்கு பல்லாண்டுகளுக்கு முன்பு வீடுகள் கட்டப்பட்டன. அங்கு கட்டப்பட்ட வீடுகளில் உள்ள கழிப்பிடங்கள் டிரை லெட்ரின்களாக இருக்கின்றன. இந்த 20ஆம் நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ள முடியாத அந்தக் கழிப்பிடங்களை மாற்றிவிட்டு ஃபிளஷ்-அவுட்டுகளை அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டேன். முதலமைச்சர் நினைத்தால் இப்போதே அறிவிக்கலாம். பல பெரிய நல்ல அறிவிப்புகளைச் செய்த முதலமைச்சர் அவர்களை, இதையும் அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள இத்தகைய கழிப்பறைகளை டிரை லெட்ரின்களாக உள்ளவற்றை ஃபிளஷ் அவுட் லெட்ரின்களாக மாற்றும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு அது படிப்படியாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் செய்த—சற்று முன் நான் செய்த ஒரு அறிவிப்பில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏதோ குழப்பம் ஏற்பட்டிருப்பது போல எனக்குத் தெரிகிறது. நான் அறிவித்தது 300 காவல் நிலையங்கள் ஆய்வாளர் காவல் நிலையங்களாக அப்-கிரடேஷன் செய்யப்படும் என்றுதான் அறிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இருப்பது போன்று மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களிலே பெண் காவலர் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். கிராமப்

1993 ஏப்ரல் 22] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

புறங்களிலே இருக்கின்ற காவல் நிலையங்களுக்கு பெண்களை அழைத்துச் சென்றாலும், இரவு நேரத்திலே வைதுதுக் கொள்ளக் கூடாது என்று இருந்தும், அந்த நிலை இன்னும் மாறாமல் இருக்கிறது. கிராமப்புற காவல் நிலையங்களுக்கு அழைத்துச் சென்ற பெண்களை இரவு நேரத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று கடுமையான உத்திரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் பெண்களை காவல் நிலையங்களில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. அதைச் சரியாக இம்ப்ளிமெண்ட் செய்ய நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பிட்ரிக்ஸ் டி'சோசா.

Dr. BEATRIX D' SOUZA : Honourable Speaker, Sir, ther is a feeling among Women's organisations that in the Women's Police Station, the Inspec or sometimes drops cases on adviee/orders from higher male offici ls.

HON. Dr. J. JAYALALITHA : Hono rable Speaker, Sir, as far as I know, no such instances of interference have come to my notice. It is not our intention to allow such interference at any level If specific ins ances are brought to my notice, suitable action will be taken.
(Thumping of Desks).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

(குறுக்கீடுகள்) இப்போது வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கை எண். 2. மாநில ஆயத் தீர்வைத் துறை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம். உறுப்பினர் தன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

''மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 7,06,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'' என்னும் முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2.15

(ஆ) கோரிக்கை எண். 15—காவல்துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கை எண். 15—காவல்துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். திரு. கோ. ஜானகிராமன். உறுப்பினர் தன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

''காவல்துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 320,40,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''. என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).—

கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கை எண். 16—தீயணைப்புப்பணிகள் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். திருமதி ரமணி நல்லதம்பி. இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

1993 ஏப்ரல் 22] [பேரவைத் தலைவர்]

''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 24,79,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும். என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

(உ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

(ஊ) கோரிக்கை எண். 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த மானியக் கோரிக்கைகளை இன்று மாலை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் எனக் கருதுகிறேன். பேரவையின் ஒப்புதலோடு இன்று மாலை அவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிவிக்கிறேன். இப்போது அந்த மானியக் கோரிக்கைகளை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அவையின் முன் வைக்கக் கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''வேளாண்மை பற்றிய 20—ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 637,07,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்பெறவில்லை.

மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22—ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 81,72,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்பெறவில்லை.

மானியக் கோரிக்கை எண். 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 10,45,49,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப் பெறவில்லை. மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. தன்னுடைய முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

பிற்பகல் 2-20

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புத் துறையில் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு அவையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் தமிழில் உள்ள குறிப்புகளை @ இவ்வவையில் நான் ஆற்றிய உரையாகக் கருதி அவைக்குறிப்பில் பதிவு செய்யக் கோருகிறேன்.

இத்துறைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைக்கும் கருத்துகளுக்கும், நல்ல ஆலோசனைகளுக்கும் இறுதியாக எனது பதிலுரையில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும், புதிதாக எடுக்கப்படவுள்ள முடிவுகளைப் பற்றியும் அவையில் விளக்கம் அளிக்கிறேன்.

@ 324 ம் பக்கம் முதல்............... பக்கம் வரை இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

1993 ஏப்ரல் 22] [திரு.கு. ப. கிருஷ்ணன்]

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் புரட்சித் தலைவியின் பெயர் கொண்ட ஜெ. ஜே. 92 வாசனை அரிசியில் தயாரித்த புலவும், குளுமை தயிர் சாதமும், பச்சைக் காய் கறித் துண்டுகளும், பருகுவதற்கு ஆவின் பாலும் பாங்குடனே வழங்கப்படவுள்ளன. அந்தச் சிறிய அமுதை அகமகிழ்வோடு ஏற்றுக் கொள்ளத் தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி அளிக்கப் பட்டது. (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு உறுப் பினர்களின் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள் கிறேன். (குறுக்கீடு) இப்போதும் உண்டு; பிறகும் உண்டு (சிரிப்பு).

2. அறிவிப்பு—தொடர்ச்சி.

(இ) கைது செய்யப்பட்ட இரு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டது குறித்து.

மாணபுமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலையில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்தில் வைக்கப் பட்டிருந்ததாகவும், காவல் நிலையத்திலிருந்தே அவர்கள் சொந்த ஜாமீனிலேயே செல்லலாம் என்று காவல் துறையினர் போகலாம் என்று சொன்னதற்குப் பிறகும் அவர்கள் போக மறுத்து காவல் நிலையத்திலேயே இருக்கிறார்கள் என்றும் பேரவைக்கு அறிவித்திருந்தேன்.

சற்றுமுன் கிடைத்த தகவலின்படி, அவர்கள் காவல் நிலையத்திலேயிருந்து போக மாட்டோம் என்று சொன்ன காரணத்தால், நீதிமன்றத்திற்குக் கொண்டுசென்று, நீதிமன் றத்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள், அங்கிருந்து சென்றிருக்கிறார்கள் என்கிற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பி.வி. இராஜேந்திரன் என்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினரைக் காணவில்லை, போலீஸ் அவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறது என்று சொன்னீர்கள். ஆகவே அவர் கிடைத் தாரா என்ற தகவலையும் அறிவிக்க வேண்டுகிறேன்.

1993 ஏப்ரல் 22] [திரு.கு. ப. கிருஷ்ணன்]

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் புரட்சித் தலைவியின் பெயர் கொண்ட ஜெ. ஜே. 92 வாசனை அரிசியில் தயாரித்த புலவும், குளுமை தயிர் சாதமும், பச்சைக் காய் கறித் துண்டுகளும், பருகுவதற்கு ஆவின் பாலும் பாங்குடனே வழங்கப்படவுள்ளன. அந்தச் சிறிய அமுதை அகமகிழ்வோடு ஏற்றுக் கொள்ளத் தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி அளிக்கப் பட்டது. (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு உறுப் பினர்களின் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள் கிறேன். (குறுக்கீடு) இப்போதும் உண்டு; பிறகும் உண்டு (சிரிப்பு).

2. அறிவிப்பு—தொடர்ச்சி.

(இ) கைது செய்யப்பட்ட இரு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டது குறித்து.

மாணபுமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலையில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்தில் வைக்கப் பட்டிருந்ததாகவும், காவல் நிலையத்திலிருந்தே அவர்கள் சொந்த ஜாமீனிலேயே செல்லலாம் என்று காவல் துறையினர் போகலாம் என்று சொன்னதற்குப் பிறகும் அவர்கள் போக மறுத்து காவல் நிலையத்திலேயே இருக்கிறார்கள் என்றும் பேரவைக்கு அறிவித்திருந்தேன்.

சற்றுமுன் கிடைத்த தகவலின்படி, அவர்கள் காவல் நிலையத்திலேயிருந்து போக மாட்டோம் என்று சொன்ன காரணத்தால், நீதிமன்றத்திற்குக் கொண்டுசென்று, நீதிமன் றத்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள், அங்கிருந்து சென்றிருக்கிறார்கள் என்கிற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பி.வி. இராஜேந்திரன் என்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினரைக் காணவில்லை, போலீஸ் அவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறது என்று சொன்னீர்கள். ஆகவே அவர் கிடைத் தாரா என்ற தகவலையும் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய தகவல் வந்தவுடன் அதைப்பற்றியும் தெரிவிக்கிறேன். இப்போது அது பற்றி எந்தத் தகவலும் இல்லை.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.30

மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்——தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

(உ) கோரிக்கை எண்.22—கால்நடை வளர்ப்பு.

(ஊ) கோரிக்கை எண். 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்கிறது. திரு. எஸ். ஆசைமணி.

*திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1992-93 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் நெல் உற்பத்தியிலே தமிழகத்திலே முதலிடம் வகிக்கின்ற நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய விவசாயிகளின் சார்பாக, அந்த மாவட்டத்திலே ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன் என்ற முறையில், இங்கே வேளாண்மைத் துறை பற்றிப் பேசுவதற்கு நான் மெத்த பெருமைப் படுகின்றேன். அந்த அளவுக்கு எனக்கு இங்கே பேச வாய்ப்புக்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய தகவல் வந்த வுடன் அதைப்பற்றியும் தெரிவிக்கிறேன். இப்போது அது பற்றி எந்தத் தகவலும் இல்லை.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடி வுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.30

மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்——தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

(உ) கோரிக்கை எண்.22—கால்நடை வளர்ப்பு.

(ஊ) கோரிக்கை எண். 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்கிறது. திரு. எஸ். ஆசைமணி.

*திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1992-93 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் நெல் உற்பத்தியிலே தமிழகத்திலே முதலிடம் வகிக்கின்ற நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய விவசாயிகளின் சார்பாக, அந்த மாவட்டத்திலே ஒரு விவசாயக் குடும் பத்திலே பிறந்தவன் என்ற முறையில், இங்கே வேளாண்மைத் துறை பற்றிப் பேசுவதற்கு நான் மெத்த பெருமைப் படுகின்றேன். அந்த அளவுக்கு எனக்கு இங்கே பேச வாய்ப்புக்

கொடுத்த எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நல்ல சமயத்திலே நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்தில் எங்களுடைய மாவட்டம் இன்றைய தினம் நெல் உற்பத்தியிலே முதலிடம் வகிப்பதற்கு மூல காரணமாக இருந்து வந்திருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எங்களுடைய மாவட்ட விவசாயிகள் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், அவர் தங்க மனத் தலைவியாக இருப்பதன் காரணமாக, நல்லாட்சி நடத்தும் தலைவியாக இருப்பதன் காரணமாக, எப்போதும் இல்லாத அளவுக்கு சுமார் 8 ஆண்டுகளுக்குப் பின்னாலே மேட்டூர் அணை நிரம்பி வழிந்து, அதன் காரணமாக, ஜுன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு, எங்களுடைய விவசாயிகளுடைய வயிற்றிலே பால் வார்த்திருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் இந்த நல்ல நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தண்ணீரைக் காலத்தோடு திறந்தது மட்டுமல்லாமல், தட்டுப்பாடு இல்லாமல் தொடர்ந்து தண்ணீர் கொடுத்து வந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மேலும் எங்களுடைய நன்றியை நான் இந்த நல்ல சமயத்திலே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக, தக்க தருணத்திலே தண்ணீர் திறந்ததன் காரணமாக, தட்டுப்பாடு இல்லாமல் கொடுத்ததன் காரணமாக, தக்க நேரத்திலே இடுபொருட்களை வழங்கியிருப்பதன் காரணமாக, தக்க சமயத்திலே பயிர்க் கடன்கள் வழங்க உத்தரவிட்டதன் காரணமாக, மின்சாரத் தட்டுப்பாடே இல்லை என்ற நிலை ஏற்படக் காரணமாக இருந்ததன் விளைவாக, கடந்த ஆண்டு குறுவை 0.60 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது என்ற நிலைமை மாறி, இவ்வாண்டு 1.67 இலட்சம் எக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு, உற்பத்தியும், கடந்த ஆண்டு 2.2 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது மாறி, 6.68 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளதை இந்த சமயத்திலே நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அளவுக்கு உயர்த்திக் காட்டியுள்ள விவசாயப் பெருமக்களை இந்த நல்ல சமயத்திலே பாராட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன். ஆக, தக்க தருணத்திலே தண்ணீர் திறப்பதற்குக் காரணமாக இருந்த நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நல்ல சமயத்திலே நன்றி சொல்கிற அதே நேரத்தில் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் கிடைக்கக் காரணமாக

இருந்த நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்ட விவசாய மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பகல் 4.35

அதே போல தக்க நேரத்திலே வேளாண் இடுபொருள்கள் வழங்குவதற்குக் காரணமாக இருந்திருக்கின்ற நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்ட விவசாயிகளின் சார்பாக நன்றியைச் சொல்லி, தக்க சமயத்திலே பயிர் கடன்கள் வழங்கிட உத்தரவிட்டு உறுதுணை நின்ற நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்ட விவசாயிகளின் சார்பாக நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே போல, கடந்த ஆண்டு மின்சாரத் தடையே இல்லையென்ற நிலைமையை உருவாக்கி உறுதுணையாக இருந்திருக்கின்ற பொதுப்பணித் துறை அமைச்சருக்கும் எங்களுடைய மாவட்டத்தினுடைய விவசாய மக்களின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே போல விவசாயிகளுடைய முக்கியத் தேவையான உரம், பூச்சி மருந்து, இடுபொருள்கள் போன்றவைகள் எந்த நேரத்திலும் தட்டுப்பாடே இல்லையென்ற அளவிற்கு வாரி அவைகளை வழங்கியிருக்கின்ற, அதற்குக் காரணமாக இருந்திருக்கின்ற, அதற்கு உறுதுணையாக இருந்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்டத்தினுடைய விவசாய பெருங்குடி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை இந்த நல்ல சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயத்திலே அதிக உற்பத்தியை நாங்கள் செய்தாலும், நாங்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லை, தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே வாங்கிக்கொண்டு, அதற்காக எங்கள் மாவட்டத்திலே கொடுக்கின்ற அந்த நெல்லுக்கு, குவின்டாலுக்கு 35 ரூபாய் போனஸ் தொகையாகக் கொடுத்து, எங்களுடைய மாவட்ட மக்கள் துயர்களை எல்லாம் துடைத்திருக்கின்ற இந்த அரசுக்கு எங்களுடைய மாவட்ட மக்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இருந்தபோதிலும், தஞ்சை, நாகை—காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு இரண்டு பெரிய கவலைகள் இருக்கின்றன என்பதை நான் இந்த நல்ல சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதில் ஒன்று அபரிமிதமாக வளர்ந்து கேடு விளைவிக்கின்ற நெய்வேலி காட்டாமணி, அடுத்து விவசாயிகளுடைய கூலிப் போராட்டம், அந்த இரண்டையும் நான் இந்தச் சமயத்திலே இங்கே சொல்ல

வேண்டியது என்னுடைய கடமையென்று கருதுகிறேன், இதிலே நெய்வேலி காட்டாமணி செடியைப் பொறுத்தவரையில், ஆறுகள், வடிகால்கள், பாசன குளங்கள் இவற்றில் எல்லாம் பரவி பாசனத்தை பாதிப்பதோடு. வெள்ளக் காலங்களில் தண்ணீர் வடியவிடாமல் பாதிக்கின்றன. இதனால் தான், சென்ற ஆண்டு கூட நம்முடைய அரசு இதுவரை இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையிலே புல்டோசர்களை வைத்து வடிகால்கள் ஆறுகளில் எல்லாம் தூர் எடுத்து விவசாயிகளுடைய துயர்களை துடைத்ததற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன், அதே சமயம், புல்டோசர்களால் நீக்கப்பட்ட கரை சேர்க்கப்படுகின்ற நெய்வேலி காட்டாமணி செடிகளை அந்தந்த விவசாயிகள் முறையாக அகற்றாத காரணத்தால், அவைகளை எடுத்து கொளுத்தாத காரணத்தால், மீண்டும் அவைகள் கரைகளிலேயே முளைத்து வடிகால்களை அடைத்துக்கொள்கின்ற நிலைமை அந்த மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது,

எனவே, இங்கு அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன், தங்கள் துறையிலே தூர்வார எஸ்டிமேட் போடுகின்ற நேரத்தில், நெய்வேலி காட்டாமணி செடிகளை, ஆட்கள் வைத்து வேறோடு அகற்றி தீயிட்டு கொளுத்துகிற செலவிற்கும் அந்த எஸ்டிமேட்டிலே தாங்கள் புரோவிஷன் கொடுக்க வேண்டுமென்றும், அதற்காக தாங்கள் உத்தரவிட வேண்டும் என்றும் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன், அதே போல சென்ற ஆண்டு போல, இவ்வாண்டும், மீதமுள்ள ஆறுகள், வடிகால்கள் ஆகியவற்றை புல்டோசர் வைத்து தூர் எடுக்கவும் வேண்டுகிறேன். அந்த வகையில் என் தொகுதியிலே உள்ள வட்கோரை ஆறு, தென்கோரை ஆறு, முட்டையாறு ஆகிய வடிகால்களில் சென்ற ஆண்டு செய்தது போல மீதமுள்ள பகுதிகளில் இவ்வாண்டு புல்டோசர் மூலம் தூர்வார ஏற்பாடு செய்யவேண்டுகிறேன், அதோடு வேளாண்மைத் துறை அமைச்சரிடம் நான் வேண்டிக் கொள்வது எல்லாம் விஞ்ஞான அடிப்படையிலே இந்த நெய்வேலி காட்டாமணி செடிகளை அழிப்பதற்கு விவசாயிகளின் துயர் துடைப்பதற்கு ஏதாவது ஒரு நல்ல மருந்தினை கண்டுபிடித்து ஆவன செய்யவேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே வேளாண்மைத் துறை அமைச்சருக்கு எனது வேண்டுகோளை வைக்கிறேன்.

அடுத்து என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகளுடைய இன்னொரு பெரிய கவலை விவசாயிகள் கூலிப்போராட்டம். விவசாயத் தொழிலாளர்களுக்கிடையே எந்தவித பிரச்சினையுமே எப்பொழுதுமே இருப்பதில்லை. தஞ்சை மாவட்டமாக இருந்தாலும், நாகை மாவட்டமாக இருந்தாலும் விவசாயிகளைப் பொறுத்தவரையில் அரசு நிர்ணயம்

செய்கின்ற கூலியை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றார்கள். ஆனால் ஒரு சில அரசியல் இயக்கங்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கும். விவசாயிகளுக்கும் இடையே பிரச்சினை உண்டுபண்ணி அதன் மூலம் தங்கள் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அதை நான் இந்த அவையின் மூலம் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன், அதுவும் தொழிலாளர்களை எப்பொழுது தூண்டுவார்கள் என்று பார்த்தால், நல்ல நடவு சமயம், அறுவடை நேரம், நாற்று பறிக்கும் நேரம். இப்படிப்பட்ட நேரத்திலே அவர்களையெல்லாம் தூண்டிவிட்டு, வேலை நிறுத்தம் செய்யச் சொல்லி, அதன்மூலம் ஆதாயம் தேடிக்கொண்டிருக்கிறார்கள், ஒரு 15, 20 ஆண்டுகள் பின்நோக்கி என்னுடைய நினைவுகளை நான் திருப்பிப் பார்க்கிறேன்; நான் குறிப்பிடுகின்ற அந்த இயக்கங்கள். விவசாயிகளுக்கு உதவி செய்வதாக சொல்லிக்கொண்டு விவசாயத் தொழிலாளர்களை எல்லாம் சுரண்டி அவர்களிடம் நிதி என்ற பெயரிலே நெல்லாக வாங்கி, பணமாக வாங்கி, வண்டி வண்டியாக ஏற்றிச் சென்ற காட்சியை எல்லாம் நான் பள்ளி மாணவனாக இருந்த நேரத்திலே பார்த்திருக்கிறேன்,

பிற்பகல் 4–40

ஒவ்வொரு தாலுகா தலைநகரிலும் பெரிய, பெரிய ஊர்திகளிலும் நிதியளிப்புக் கூட்டம் என்று ஒரு கூட்டத்தைப் போடுவார்கள், பார்த்தால் ஒரு 20, 25 வண்டியில் நெல் மூட்டைகள் ஏற்றப்பட்டு அங்கே தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும், அவையெல்லாம் கூலித் தொழிலாளர்களிடம் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்ட தொழிலாளர்களிடம், கட்டாயமாக வசூலிக்கப்பட்டவை, ஆனால் இன்றைக்கு நமது ஆட்சியில் அந்த நிலை இல்லை, விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் விழித்துக் கொண்டிருக்கிறார்கள், விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் புரட்சிகரமான கொள்கைகளை ஏற்று நம் இயக்கத்திலே சாரை, சாரையாக வந்து சேர்வதன் காரணத்தால் 20, 25 வண்டி நெல் ஏற்றப்பட்ட நிலைமை எல்லாம் மாறி இன்றைக்கு நிதியளிப்புக் கூட்டங்களிலே இரண்டு வண்டி, மூன்று வண்டி நெல்லை அளிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கிறேன், அதாவது பழைய காட்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன், எனவேதான் இந்த இரண்டு இயக்கங்களும் இன்றைக்கு புரட்சித் தலைவியைக் கண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு, பயப்படுகிறது. கோபப்படுகிறது, அதன் காரணமாக கொள்கையைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு இன்று நேற்றெல்லாம் பஸ் மறியல் செய்கிற, சாலை மறியல் செய்கிற நிலைமையை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே விவசாயத் தொழிலாளர்களைத்

தூண்டிவிட்டு போராட்டம் நடத்துகிற அந்த இரண்டு குறிப்பிட்ட அரசியல் இயக்கங்களின் நோக்கங்கள் முறியடிக்கப்படுகிற வகையில் நமது அரசு விவசாயப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்பே விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், அதிகாரிகள் ஆகியவர்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்பு மாநாட்டை காலதமாமதம் செய்யாமல் வருடந்தோறும் கூட்டி விவசாயக் கூலியை, நடவுக் கூலியை, அறுவடைக்கூலியை முடிவு செய்ய வேண்டும் என்று இந்த நல்ல சமயத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து 1993 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு பொங்கல் பரிசாக சன்னரக மற்றும் வாசனை ரக நெல்லான ஜே,ஜே, 92 என்ற நெல்லை அறிமுகப்படுத்தியமைக்காக வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்கு நல்ல நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன், அதைப் பரீட்சார்த்த முறையில் சாகுபடி செய்த வகையில் நல்ல ஊக்கம் தரக்கூடிய வகையில் நல்ல முடிவுகள் ஏற்பட்டன என்று சொல்கிறார்கள், அந்த மகிழ்ச்சியான செய்திக்காக நான் இந்த நேரத்திலே நன்றிச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் புரட்சித் தலைவி அவர்களின் தென்னங்கன்று வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 96,800 கன்றுகளை பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கியமைக்காகவும் அதே போல் வருகிற 1993—94 ஆம் ஆண்டில் 2½ இலட்சம் கன்றுகளை வழங்க திட்டமிட்டு இருப்பதற்காகவும் இந்த அரசை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அதேபோல் கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயலின் போது பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ரூபாய் 8 கோடியே 61 இலட்சம் செலவில் விதைகளையும், பூச்சி மருந்துகளையும், உரங்களையும் வழங்கியமைக்காக விவசாயிகளின் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த வாரம் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொழில் மானியத்தை அறிமுகப்படுத்துகிற நேரத்தில் நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலையும், தஞ்சை மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலையும் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக இந்த இரண்டு மாவட்ட விவசாயிகள் சார்பாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அந்த இரண்டு ஆலைகளும் கூட்டுறவு அல்லது தனியார் துறை மூலம் ஆரம்பிக்கப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான்

இந்த நல்ல நேரத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வேண்டுவதெல்லாம் ஆரம்பிக்கப்பட இருக்கிற அந்த இரண்டு ஆலைகளையும் கூட்டுறவுத்துறையின் மூலம் ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான். அதைத்தான் அங்கே இருக்கிற மக்களும், கரும்பு விவசாயிகளும் விரும்புகிறார்கள். ஏனென்று சொன்னால் கூட்டுறவுத்துறையிலே கரும்பு விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு அதிக இலாபமும், இலாபத்தில் பங்கும், தீபாவளி நேரத்தில் போனசும் கிடைப்பதால் கூட்டுறவு ஆலைக்கு அதிக ஆதரவு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் தனியாருக்கு கரும்பு ஆலை ஆரம்பிக்க லைசென்ஸ் கொடுத்தால் அவர்கள் உடனே ஆரம்பிப்பார்களா என்ற சந்தேகம் எங்கள் மாவட்டத்தில் இருக்கிற விவசாய பெருங்குடிமக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் எங்கள் மாவட்டத்தில் தனியார் ஒருவருக்கு கரும்பு ஆலைக்கான உரிமம் வழங்கப்பட்டு 7, 8 ஆண்டுகள் ஆகியும் அதற்கான அடிப்படை வேலை கூட ஆரம்பிக்கப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு அந்த லைசென்ஸை திரும்பத் திரும்ப ரெனுவல் செய்து கொடுக்கிற ஒரு நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. ஏழெட்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் கரும்பாலை ஆரம்பிக்கப்படாததால் எங்கள் மாவட்ட விவசாயிகள் தனியார் ஆலையைக் கண்டு பயப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. எனவே எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே அதிகம் கரும்பு விளைகிற திருப்பனந்தாள் ஒன்றியத்தில் ஒரு கூட்டுறவு கரும்பாலையும் அதேபோல் நாகை-காயிதேமில்லத் மாவட்டத்தில் அதிக கரும்பு உற்பத்தி செய்யப்படுகிற குத்தாலம் ஒன்றியத்தில் மங்கநல்லூரில் ஒரு ஆலையையும் ஆரம்பிக்கவேண்டும் என்றும் அந்த இரண்டு ஆலைகளுக்கும் டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய திருப்பெயர் சூட்டப்படவேண்டும் என்றும் இந்த நல்ல நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4.45

அதே போல கரும்பு விவசாயிகளை பொறுத்தவரையில் இந்த ஆண்டில் 8½ பர்செண்ட் சர்க்கரை சத்துள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு 370 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்ததற்காக எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற கரும்பு விவசாயிகள் சார்பாக நன்றியைச் சொல்லி, 30 கிலோ மீட்டர் வரை கரும்பு விவசாயிகளுக்கு வண்டி வாடகை செலுத்தினால் போதும் என்று ஆணையிட்டமைக்காக கரும்பு விவசாயிகள் சார்பாக நன்றியைச் சொல்லி, வருகின்ற ஆண்டிலே இன்னும்

கொஞ்சம் கரும்பு விலையைக் கூட்டித் தரவேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த நல்ல சம்யத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்ற நெல்லுக்கு குவிண்டாலுக்கு 35 ரூபாய் ஊக்கத் தொகை கொடுத்திருக்கின்ற நல்ல தன்மையை பாராட்டி அந்தக் கொள்முதல் செய்யப்படுகின்ற நேரத்தில் ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய் என்ற அளவிலே விவசாயிகளிடமிருந்து பணத்தைப் பிடித்து அந்த பணத்தைக் கொண்டு எங்கள் மாவட்டத்திலே சீர்கெட்டிருக்கின்ற அந்த சாலைகளை எல்லாம் புதுப்பித்துக் விவசாயிகள் குறையைப் போக்க வேண்டும் என்று இந்த நல்ல சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு சாலை மேம்பாட்டு திட்டத்தில் 1993-94-ல் புதிய சாலைப் பணிகளுக்காக சுமார் 300 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளமைக்கும் பழைய சாலைகளை பராமரிக்க ரூ. 160 லட்சம் ஒதுக்கியுள்ளமைக்கும் நன்றி கூறி இந்தத் திட்டத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சாலைகள் வழுவூர் பூவாலை சாலையை மேம்பாடு செய்யவும், வடமட்டம் கூந்தலூர் சாலையை மேம்பாடு செய்யவும், மங்கநல்லூர் ஆடுதுறை சாலையை அகலப்படுத்தவும் ஆவன செய்ய இந்த நல்ல சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல குத்தாலம் ஒன்றியத்தைப் பொறுத்தவரை மாவட்டத்தினுடைய கடைகோடியிலே இது இருக்கிறது. குத்தாலம் ஒன்றியத்தை அடுத்து தஞ்சை மாவட்டத்தினுடைய எல்லை ஆரம்பிக்கின்ற இடத்தில் ஆடுதுறை என்ற ஊரில் பெரிய நெல் ஆராய்ச்சி பண்ணை நிலையம் இருக்கிறது. எனவே ஆடுதுறையை மையமாக கொண்டு குத்தால ஒன்றியத்திலே வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த நல்ல சமயத்திலே நான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மைக்கல்லூரி ஆரம்பித்தால் அந்த பகுதியிலே இருக்கின்ற மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். எனவே அந்த ஒன்றியத்திலே ஆடுதுறையை மையமாகக் கொண்டு ஒரு வேளாண்மைக் கல்லூரியை நீங்கள் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல தஞ்சை மாவட்டத்திலே ஒரத்த நாட்டிலே, ஈச்சங்கோட்டையிலே பெரிய கால்நடைப் பண்ணை இருக்கின்றது. எனவே அந்தப் பகுதியை மையமாகக் கொண்டு ஒரத்தநாட்டிலே நீங்கள் ஒரு கால்நடைக் கல்லூரியை ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த நல்ல சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இந்த ஆண்டு எந்த ஆட்சியும் செய்யாத அளவுக்கு 2,000 பவர் டிரில்லர்களை 12,000 ரூபாய் மானிய விலையிலே விவசாயிகளுக்காக வழங்கிய நல்ல திட்டத்திற்காக இந்த அரசை மனதார விவசாயிகள் எல்லாம் இன்றைய தினம் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அதே போல டயர் வண்டிகள் மானிய விலையிலே வழங்கப்படும் என்று சொல்லி சுமார் 4 ஆயிரம் வண்டிகளை ஒரு வண்டிக்கு 7,500 ரூபாய் மானியம் என்ற அளவில் இன்றையதினம் வழங்க உத்தரவிட்டிருக்கின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நல்ல சமயத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற டயர் வண்டிகள் அவர்கள் விரும்புவது போல் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஏதோ ஒரு குறிப்பிட்ட டைப் டிசைன்-லே செய்து இதைத்தான் நாங்கள் தருவோம் என்று அதிகாரிகள் சொல்வதாக அங்கேயிருக்கின்ற மக்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே மக்கள் எப்படி விரும்புகிறார்களோ அதே போல அதிகமாக ரூபாய் ஆனாலும் கூட அதை தருவதற்கு தயாராக இருக்கிறார்கள். எனவே அவர்கள் விரும்புகின்ற அளவுக்கு அந்த வண்டி செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நல்ல சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் வேளாண்மைத் துறையின் மூலமாக கதிரடிக்கும் இயந்திரங்கள் வாங்கி குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல நெல் உற்பத்தியை அதிகம் செய்கின்ற தமிழகத்திலே முதலிடத்தை வகிக்கின்ற காயிதே-மில்லத் மாவட்டத்திற்கும், இரண்டாவது இடத்தை வகிக்கின்ற தஞ்சை மாவட்டத்திற்கும் அங்கேயுள்ள விவசாயிகளுக்கு மோட்டார் கனெக்ஷன் கொடுக்கின்ற நேரத்திலே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடை பராமரிப்புத் துறையில் 200-க்கு மேற்பட்ட கிளை நிலையங்கள் காலியாக உள்ளன என்று சொல்கிறார்கள். கால்நடை மருத்துவப் படிப்பு படித்து இருக்கின்ற 400-க்கு மேற்பட்ட கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் கிராம மக்கள் பயன் அடைகின்ற வகையிலே அந்த 200 கால்நடை துணை நிலையங்களிலே பணி அமர்த்தப் படவேண்டும் என்று இந்த நல்ல சமயத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி குடவாசல் ஒன்றியம் விக்கிரபாண்டியம் என்ற ஊரில் கால்நடை கிளை மருத்துவ நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட ஆவன செய்ய வேண்டும் என்று

1993 ஏப்ரல் 22] [திரு. எஸ். ஆசைமணி]

கேட்டு இந்த மானியத்தை முழு மனதாக வரவேற்று புறநானூற்று பாடல் ஒன்றை சொல்லி நான் விடைபெற விரும்புகிறேன்.

புறநானூற்றில்

''நெல்லு முயிரன்றே, நீரு முயிரன்றே,
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்;
அதனால் 'யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே''

என்று சொல்லியிருக்கிறார்கள்.

நெல்லும் நீரும் மக்கள் வாழ்க்கைக்கு முதன்மையானவை. ஆகவே நெல்லும் நீருமே உயிர் என்று பொதுவாக எல்லோரும் கருதுகின்றார்கள். ஆனால், நாட்டில் அங்கங்கே நீர் நிலைகள் எடுப்பித்து வளம் பெருக வழி செய்து, பகை, கொள்ளை முதலியவற்றால் மக்கள் அச்சங் கொள்ளாமல் வாழ்க்கை நடத்தவும், பிணி, தீச்செயல் முதலியவற்றால் அவர்கள் தம் காரியங்கள் கெடாமல் முயற்சியாயிருக்கவும், இவற்றிற்கெல்லாம் அடிப்படைத் தேவையான பொது அறிவு, கலை அறிவு இவைகளை அவர்கள் பெருக்கிக் கொள்ளவும், பலப்பல திறமான ஏற்பாடுகளும் சட்டங்களும் செய்து வைத்து அரசன் தக்கவாறு ஆட்சி செயதாலன்றோ, முன்னே சொன்ன நெல்லும் நீரும் மக்களுக்கு தகுதியாகக் கிடைக்கும் என்று புறநானூற்றிலே சொல்லியிருக்கிறார்கள்.

அந்த வகையில் ஆட்சி என்றுமே இல்லாத அளவுக்கு, எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு, நடந்த ஆண்டிலே நெல்லும், நீரும் நிறைவாக கிடைத்திருக்கிறது எனவே. இப்படி சிறப்பாக ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு கோடானுக் கோடி விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லி, அவர்களை, மனதாரப் பாராட்டி விடை பெறுகிகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 4.50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சி. மாணிக்கம்.

<u>திரு. சி. மாணிக்கம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான விவசாயம் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீது

கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்காக உங்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட இயக்கத்தின் தென்திசை தீபம், தமிழகம் போற்றும் தங்கத் தலைவி, ஆயிரம் ஆயிரம் சோதனைகள் அடுக்கடுக்காக வந்தாலும் ஏற்றுக் கொண்ட இலட்சியத்தை இன்னுயிரைத் தந்தேனும் நிறைவேற்றியே தீருவேன் என சூளுரை ஏற்று சுற்றி வரும் புகைதனை ஒடுக்கி, தர்மயுத்தத்தின் தலைநாயகி மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதம் தொட்டு வணங்கி என்னுடைய கருத்துக்களைக் கூறுகின்றேன்.

ஏற்கெனவே கோடிக்கணக்கான ரூபாய் பற்றாக்குறை இருந்தாலும், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிப்பதால் கோடிக் கணக்கான ரூபாய் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும், பொருளாதாரத்தை சுட்டிக் காட்டி மத்திய அரசு பயமுறுத்தினாலும் வானத்தையே கூரையாய், கைகளையே தலையணையாய், தரையையே பஞ்சணையாய் கொண்டு உழைக்கும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியே தீருவேன் என இந்திய அரசியல் வரலாற்றில் யாருமே சாதிக்க முடியாத சாதனை படைக்கும் நம்முடைய புரட்சித் தலைவியின் அரசை தமிழக விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த அனைவருமே பாராட்டுகின்றார்கள்.

தமிழகத்திலே நூற்றுக்கு 70 சதவிகிதம் மக்கள் கிராமங்களிலே விவசாயத்தை நம்பி வாழ்கின்றார்கள். இன்றைக்கு இந்தியத் திருநாட்டை ஆண்டு கொண்டிருக்கும் மத்திய அரசு தமிழக அரசை கலந்து கொள்ளாமல் 4 மடங்கு உர விலையை ஏற்றி விட்டார்கள். குறிப்பாக தமிழகத்தில் விளையும் முக்கியப் பயிர்களான வாழை, நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு பொட்டாஷ் உரம் தேவையாக உள்ளது. 40 கிலோ பொட்டாஷ் மூட்டை 80 ரூபாய்க்கு என்று இருந்த விலையை மத்திய அரசு ரூ. 325-க்கு கூட்டி விட்டார்கள். ஆனால் வட இந்திய விவசாயிகள் பயன் படுத்தும் யூரியா 5 கிலோ மூட்டை 115 ரூபாய் என்று இருந்த விலையை 145 ரூபாய் என்றுதான் கூட்டியிருக்கிறார்கள். ஏன் இந்த பாரபட்சம், ஓரவஞ்சனை என்று தமிழக மக்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு எவ்வளவோ பொருளாதார நெருக்கடியிலும், தமிழகத்திலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். ஆனால் மத்திய அரசோ ஒரு யூனிட்டுக்கு 50 பைசா விதிக்க வேண்டுமென்று நிர்பந்தம் செய்கின்றது. முதலிலே மத்திய அரசு ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அரசு ஊழியர்களாக இருந்தாலும், வியாபாரிகளாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும்வேறு எந்த தொழில் செய்பவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் உணவு ஒரு முழு முதல் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு மூன்று மடங்கு, 4 மடங்கு உரவிலை உயர்வு, கூலி உயர்வு மற்றும் கட்டுப்படி ஆகாத விலை காரணமாக விவசாயிகள் விவசாயத் தொழிலில் வெறுப்பு அடைந்து வேறு தொழில் செய்வதற்கு நகரத்தை நாடிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இப்படியே இருந்தால், நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படும். அந்த நிலை ஏற்பட்டால் இந்திய நாட்டின் பொருளாதாரம் என்ன ஆகும் என்பதை மத்திய அரசு எண்ணிப்பார்த்து உர விலையைக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாய விளைச்சல் செய்வதற்கு அத்தியாவசியம் தண்ணீர். அணைகள் மூலமாகவும், ஏரிகள் மூலமாகவும், மழைக் காலத்தில் தண்ணீரை தேக்கி பாசனத் திட்டத்தின் மூலம் விவசாயப் பணிக்கு தண்ணீரைப் பெற்று வருகின்றோம். தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் இந்தப் பணியைச் சிறப்பாக செய்ய முடியும். பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்பது 1974 ஆம் ஆண்டு மத்திய அரசு, மாநில அரசு, உலக வங்கி ஆகியவற்றினுடைய நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றது. இதனுடைய பணி அனைவருக்கும் சமநீர்ப்

பிற்பகல் 4–55

பங்கீடு கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கம்தான் இந்தத் திட்டத்தால் பயன்படும் விவசாயிகளையும் இதில் ஈடுபடச் செய்ய வேண்டும். இந்தத் திட்டத்தில் தற்போது சமூகப் பாசன அமைப்பாளர்கள் என்று அழைக்கப்படும் தொழில் நுட்ப உதவியாளர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அவர்களை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அரசு அலுவலர்களாக உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குக் கால்நடை என்பது ஒரு தொழிலாக அமைந்திருக்கிறது. குறிப்பாக பெரியார் மாவட்டத்

தில் நீர்ப் பாசனம் இல்லாத பகுதிகளில் கறவை எருமைகளையும், பசுக்களையும் வைத்து, பால் உற்பத்தி செய்து, அதன் மூலம் குடும்பங்களை நடத்தி வருகிறார்கள். கால்நடைகளுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டறிய ஈரோட்டில் இந்த ஆண்டு 12.5 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுக்கூடம் அமைக்கும் திட்டத்தை தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கும், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-55

கிராமப்புறங்களில் உள்ள கால்நடை கிளை நிலையங்களில் பணி புரியும் கால்நடை ஆய்வாளர்கள் எந்தவித உதவி ஆட்கள் இல்லாமல் கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்தல், செயற்கை கருவூட்டல் செய்தல், காயடித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டு வருகின்றனர். அவர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வழங்க வேண்டும்.

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் மண்டல இணை இயக்குநர் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து சினை ஊசி போடுவதற்கு 7.50 ரூபாய் வசூல் செய்கிறார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஏழை விதவைப் பெண்கள் வளர்க்கும் கால்நடைகளுக்கு இலவசமாக கருவூட்டல் ஊசி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் உள்ள கால்நடை கிளை நிலையங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் ஆண்டு முழுவதும் போதுமானதாக இல்லை. எனவே ஆண்டுக்கு ரூபாய் 10,000 ஒதுக்கி, வருஷம் முழுவதும் மருந்துகள் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை ஆய்வாளர்களுக்குப் பயிற்சி கொடுத்து, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் ஒரு கால்நடை கிளை நிலையம் இருந்தால் விவசாயிகள் சிறந்த முறையிலே பயனடைவார்கள். தமிழகத்தில் உள்ள அரிஜன மக்கள் சொந்தமாகத் தொழில் செய்வதற்கு, பின்னல் ஆடை தொழில் முனைவர்களுக்கு 40 கோடி ரூபாயை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அள்ளித் தந்திருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்தில் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடைகளுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டறிய ஈரோட்டுக்கு அருகே உத்தமபாளையத்தில் வீட்டு வசதி வாரியம் நிலம் கையகப்படுத்த இருக்கிறது

விரைவிலே அந்தப் பணியை முடித்துத் தருமாறு நம்முடைய வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோட்டிலே குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம் தேவையாக இருக்கிறது. அந்தக் குற்றவியல் நீதிமன்றங்கள் 4 இடங்களில் இருக்கின்றன. வழக்கறிஞர்கள் செல்வதற்கு வசதி குறைவாக இருக்கிறது. வருகின்ற மக்களுக்கும் தொந்தரவாக இருக்கிறது. அங்கே புதிய கட்டிடம் கட்ட நிலம் இருக்கிறது. எனவே புதிய கட்டிடம் கட்டித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்புக் காவல் படையினர் அங்கே பணி புரிகின்றனர். மாவட்டத்திலே ஏதாவது பிரச்சினை என்று சொன்னால், அவர்கள் விரைவிலே செல்வதற்கு வசதியாக ஒரே இடத்தில் வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தீயணைப்புப் படையினர் அங்கே வீடுகள் இல்லாமல் வெளியிலே இருக்கிறார்கள். அலுவலகத்திற்கு அருகிலேயே சேர்ந்தவாறு 1 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே அவர்களுக்கு அந்த வசதியைச் செய்து கொடுக்குமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 400 நடமாடும் கால்நடை மருத்துவர்களை உருவாக்கி, விவசாயிகளுக்குப் பெரியதொரு நன்மையை ஏற்படுத்திய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்சமயம் பணியிடம் காலியாக உள்ள கால்நடை கிளை நிலையங்களில் வேலையற்று இருக்கும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை பணி அமர்த்துமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோட்டிலிருந்து காங்கேயம் சாலையில் ரெயில்வே பாலம் இருக்கிறது. அதை அகலப்படுத்தும் பணிக்கு 2.14 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-00

அதேபோல, ஈரோட்டில் 30 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி இன்றைக்கு வேலையைத் துவங்குகிற அளவுக்கு நிதியைக் கொடுத்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சி. மாணிக்கம்] [1993 ஏப்ரல் 22

இன்றைக்கு புயல் சூழ்ந்த இந்திய தேசத்தில் பஞ்சாப் மாநிலத்திலேயும், காஷ்மீரத்திலேயும் தீவிர வாதிகளால் அனுதினமும் அப்பாவி மக்கள் செத்துக்கொண்டு இருக்கிறார்கள். அசாமில் உல்பா தீவிரவாதிகளால் அப்பாவி மக்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவிலே நக்சலைட்டுகளால் சட்டமன்ற உறுப்பினர்களே கடத்தப்படுகிறார்கள். ஆனால் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்று உலகத்திற்கு எடுத்துக்காட்டிய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியைப் பற்றி குறை கூறுபவர்கள் காண்கிற கனவு எப்போதும் நிறைவேறாது என்று கூறி, எனக்கு பேரவையில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த அத்தனை பேருக்கும், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தது அத்தனை பேரும் அல்ல. (சிரிப்பு) திரு. என்.ஆர். ராஜேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். சண்முகநாதன், இருக்கையில் இல்லை. திரு. தி. சாத்தையா.

*திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்காக தமிழ் நாட்டு மக்களின் உண்மையான மேம்பாட்டிற்காக பயனுள்ள திட்டங்களைப் புரட்சிகரமான முறையில் தீட்டி செயல்படுத்தியவரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் இதயம் கனிந்த நன்றியைக் கூறி எனது இராஜபாளையம் தொகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக ஒரு சில கோரிக்கைகளை எனது உரையின் ஆரம்பத்திலே அரசின் கனிவான பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

எனது இராஜபாளையம் தொகுதி நிறைய ஏழை நெசவாளர் மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் கொண்ட நகரம். ஆனால் அங்குள்ள பெரும்பாலான தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் நெசவாளர்களும் குடிசை வீடுகளிலே வசிக்கிறார்கள், ஆகையால் புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் ஆரம்பிக்க இருக்கும் ஜே. ஜே. நகர் ஒன்றை அங்கே உருவாக்கிக் கொடுக்க அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன், அதேபோல, மதுரை-தென்காசி நெடுஞ்சாலையில் இராஜபாளையம் நகரின் நடுவிலே அதிகமான வாகனங்கள் குறுகலான சாலைகளில் செல்வதால் மற்றும் மக்கள் நெருக்கடியால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு, ஆபத்தும் உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. இராஜபாளையம் நகருக்கு ஒரு பை-பாஸ் சாலை வேண்டுமென்று பல ஆண்டுகளாக முன்பிருந்த அரசுகளிடம் கோரிக்கைகள் விட்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் நடக்கவில்லை. ஆகையால் புரட்சித்

தலைவி ஆட்சிக் காலத்திலே இராஜபாளையம் நகருக்கு ஒரு பை-பாஸ் ரோடு அமைத்துத் தரும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன்,

இராஜபாளையம் நகருக்குக் கிழக்கேயுள்ள சஞ்சீவி மலையடிவாரத்தில் மலையடிப்பட்டி என்ற பகுதியில் கிட்டத்தட்ட ஆயிரம் வீடுகளுக்கு மேல் குடியிருப்புகள் கடந்த ஐந்தாண்டுகளில் வந்துள்ளன. அங்கே சரியான குடிநீர் வசதியும் ரோடு வசதிகளும், லைட் வசதிகளும் இல்லாமல் அங்கே வாழும் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த அடிப்படைத் தேவைகளைச் செய்துதர அரசு முன்னுரிமை கொடுத்து இந்த நடவடிக்கையைச் செய்து அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இராஜபாளையம் நகருக்கு, அதைச் சுற்றியுள்ள பேரூராட்சிகளான சொக்கநாதன்புதூர், சேத்தூர், சத்திரப்பட்டி, தளவாய்புரம் மற்றும் அருகிலுள்ள தொகுதியான ஸ்ரீவில்லிப்புத்தூர் நகருக்கு ஒரு ரவுண்ட் ரூட் சிட்டி பஸ் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன், இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் கடந்த வாரம் ஒரு பெட்டிஷன் கொடுத்திருக்கிறேன், அதேபோல, இராஜபாளையம் நகருக்கு வடமேற்கே செல்லும் செண்பகத் தோப்பு சாலையில் அணைத்தலை ஆற்றில் ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்ற திட்டத்தின் கீழ் எனது இராஜபாளையம் தொகுதியில் செண்பகத்தோப்பில் அணைத்தலை ஆற்றில் ரூபாய் 5 இலட்சம் செலவில் ஒரு பாலத்தை அமைத்துத் தர அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பாலம் அமைத்தால் கிட்டத்தட்ட இராஜபாளையத்திற்கும் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கும் இடையே ஏற்படும் பஸ் நெருக்கடி போன்றவை குறைந்து சிறிதளவுக்கு சரி பண்ணும் என்று நினைக்கிறேன்.

அதேபோல, பல காலமாக தாமதமாகிக் கொண்டிருக்கும் இராஜபாளையம் முடங்கியார் பகுதியில் ஒரு சப்-ஸ்டேஷன் அமைப்பதற்கு பல வருடங்களாகத் திட்டம் தீட்டி இன்னமும் முடியும் தருவாயில் அது இல்லை. அதையும் புரட்சித் தலைவி அவர்களின் அரசு விரைவில் அந்த சப்-ஸ்டேஷனை அமைத்துத் தரும்படி இந்த அரசை அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-0

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு சாத்தையா, இது விவசாய மானியக் கோரிக்கை, அது பற்றி பேசுங்கள்.

திரு. தி. சாத்தையா: துணைத் தலைவர் அவர்களே. வாய்ப்பு கிடைக்கவில்லை, எனக்கு தொகுதி தான் முக்கியம், ஆகவே, சான்ஸ் கிடைக்கிறபோது தொகுதி பற்றி பேசிவிடுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் ஒரு நிமிடத்தில் முடியுங்கள்,

திரு. தி. சாத்தையா: சரி, பல நாட்களாக இந்த சப் ஸ்டேஷன் வராமல் இருப்பதால் அங்கே நிறைய மோட்டார் வயரிங் எல்லாம் பழுதாகி குடிநீர்ப் பிரச்சினை கூட ஏற்பட்டிருக்கிறது, எனவே, இது சம்பந்தமாக நடவடிக்கை யெடுத்து சீக்கிரமாக இந்த சப்-ஸ்டேஷனைக் கொண்டு வர அரசை வேண்டிக் கொள்கிறேன்,

அதேபோல, மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இராஜபாளையத்திற்கு மேற்கே உள்ள நகரி ஆற்றில் ஒரு பண்ட்-வால் அதாவது மினி டாம் 7 மீட்டர் உயரத்திலும், 100 மீட்டர் அகலத்திலும் கட்டி, இராஜ பாளையம் நகரத்தில் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து, மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இராஜபாளையம் ஒன்றியத்தின் மேற்கு பகுதியிலுள்ள கல்லாற்றில் ஒரு பண்ட்-வால் அமைத்து 7 மீட்டர் உயரத்திலும், 200 மீட்டர் நீளத்திலும் ஒரு மினி டாம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி, அந்த ஒன்றியத்தில் உள்ள மக்களுக்கு குடிநீருக்கும், கிராமங்களில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விவசாயத்திற்கும், தண்ணீர் சப்ளை செய்ய அன்புடன் அரசை வேண்டிக் கொள்கிறேன்,

மேலும், இந்த மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைத் தண்ணீர் குறிப்பாக மேற்கு நோக்கி போகும் தண்ணீர் எல்லாம், அங்கே கடலுக்கும், மலைக்கும் இடையே தரைப்பகுதி கம்மியாக இருப்பதால் மழை பெய்தவுடன் அது மேற்கு சென்று கடலில் கலக்கிறது, அந்த நீரை கிழக்குப் பககமாகத் திருப்பிவிட்டால் காமராஜர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஏரியாக்களுக்கும், விவசாயத்திற்கும், குடி நீருக்கும் போதுமான தண்ணீர் வசதி கிடைக்கும். அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில ஏரியாக்களில் இன்டஸ்ட்ரீஸ் எல்லாம் வருகின்றன. பெரும்பாலும் பல நாடுகளில் கெமிக்கல் பொலுஷன், வாட்டர் பொலுஷன் ஏற்படுத்தி இன்டஸ்ட்ரீஸ் எல்லாம் கடற்கரை ஓரமாக அமைத்து இருக்கிறார்கள். வாட்டர் பொலுஷன் ஏற்படாத இண்டஸ்ட்ரிகளை லேண்ட் ஏரியாவில் அதாவது தரைப் பகுதியில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதைப்போல நம் தமிழ்நாட்டில் சில இடங்களில், நான் குறிப்பாக குறிப்பிட விரும்புவது, சாயம் காய்ச்சும் தொழிற்சாலைகளை லேண்ட் ஏரியாவில் வைத்திருக்கிறார்கள் ஷுகர் இன்டஸ்ட்ரிகளை லேண்ட் ஏரியாவில் வைத்திருக்கிறார்கள். இதனால் அவற்றிலிருந்து வெளிப்படும் மொலாசஸ் மற்றும் கலருக்கு கொடுக்க வேண்டிய சாயம் போன்ற கழிவுகள் எல்லாம் நிலத்தடி நீரில் கலந்து அங்கே குடிக்கிற நீரையும் பாதித்து விடுகிறது. ஆகவே, இந்த பொலுஷன் ஏற்படுத்தக்கூடிய இண்டஸ்ட்ரிகள் எல்லாவற்றையும் கடற்கரை ஓரமாக அமைக்க வேண்டும். தமிழ் நாட்டில் ஒவ்வொரு சதுர அடி நிலத்தையும் உபயோகமுள்ள நிலப்பகுதியாக மாற்ற திட்டங்களை வைத்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பு தந்த சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ப. கலியபெருமாள்.

* திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமான என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, அறிவார்ந்த அறிஞர் பெருமக்கள் நாட்டு நலம் கருதி பணியாற்றிய இந்த மாமன்றத்தில் வேளாண்மை மானியக் கோரிக்கை விவாதத்தில் பேச வைத்த, மனித நேயத்தின் மாதர் குல மாணிக்கம், ஒப்பற்ற தலைவி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு நன்றி கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் காட்டிய கடமையுணர்வோடும், பேரறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த கண்ணியத்தோடும், பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காட்டிய கட்டுப்பாட்டோடும், நாட்டு மக்களுக்கு பணியாற்றும் எங்கள் காவல் தெய்வத்தின் ஆட்சியின் மாட்சிமை கண்டு நல்லவர்கள் பாராட்டுகிறார்கள். பொறாமை கொண்டோர் புழுதி வாரித் தூற்றுகிறார்கள். ஆட்சி செய்யும் அமைச்சருக்கு இலக்கணம் வகுத்தார் வள்ளுவர். 'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு'. இந்தக் குளுக்கு இலக்கணமாகச் செயல்படும் ஒப்பற்ற தலைவிதான் புரட்சித் தலைவி.

பிற்பகல் 5-10

தமிழகத்தில் வன்முறையும், பயங்கரவாதமும், தலைவிரித்து ஆடிய நிலையைத் தவிடுபொடியாக்கி, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை புறநானூற்று வீரத்தாயான எங்கள் புரட்சித் தலைவிக்குத்தான் உண்டு. கிராமத்தில் வாழும் ஏழை எளியோர் ஏற்றம் பெற வும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், சிறுபான்மையோரைப் பாதுகாக்கவும், சமூக நீதியைப் பாதுகாத்தும், அனைத்துத் தரப்பினரும் நல்லிணக்கத்தோடு வாழவும், அச்சமின்றி அயராது உழைத்து வரும் எங்கள் மாசற்ற மாணிக்கமாம் புரட்சித் தலை வியை வசைபாடுகிறார்கள், ஏசுகிறார்கள், எள்ளி நகையாடு கிறார்கள் மக்கள் மன்றத்தில் தூக்கி எறியப்பட்டவர்கள். என்றைக்கும் எங்களுக்கு புரட்சித் தலைவி தான் அன்புத் தெய் வம், மேலும் பசிக்கும் குழந்தைக்கு, பசியைப்போக்கும் அன்புத் தாயாகவும், வேண்டி நிற்கும் பக்தனுக்கு வேண்டியதைத் தரும் கடவுளாகவும், வீற்றிருக்கும் எங்கள் அன்னையே, உங்களை வேண்டி நிற்கும் எங்கள் தொகுதி மக்களின் கோரிக்கையை நிறை வேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியிலே 5 ஆறுகள் ஓடினாலும், மகராசி ஆட்சி யிலே காலத்தே மழை பெய்து, நஞ்சையும், புஞ்சையும் நல்ல மகசூலைத் தந்தாலும், தெற்குப் பகுதியில், செங்கிப்பட்டியும் அதனைச் சார்ந்த 50 கிராமங்களும் நீர் வளமின்றி பின் தங்கிய நிலையிலே மக்களின் ஏக்க நிலையிலே இருக்கிறது. அந்த நிலையை மாற்றிட வேண்டுகிறேன்.

இயற்கையின் சீற்றத்தால் அழிந்துவிடும் வாழை, நெல், தென்னை, கொடிக்கால் ஆகியவைகளுக்கு பயிர் பாதுகாப்புத் திட்டம் கொண்டுவர கேட்டுக் கொள்கிறேன். 1991-92ஆம் ஆண்டும், 1992—93 ஆம் ஆண்டும் தமிழகத்தில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் வரலாறு காணாத அளவிற்கு மகசூல் பெருகி இருப்பது மகிழ்ச்சியான செய்தி. இதற்குக் காரணம் இயற்கையின் ஒத்துழைப்பும், உழவர் பெருமக்களின் உண்மை யோடு கூடிய உழைப்பும், உழவர்களுக்கு புதுப்புது கருத்துக்களை அவ்வப்போது அவர் தம் கழனிகளுக்குச் சென்று செய்து காட்டும் வேளாண்மை அலுவலர்களுக்கு அரசு அளித்திட்ட ஆக்கமும் ஊக்கமும் ஆகும்.

குறிப்பாக, இந்த நாட்டில் சினிமா நட்சத்தரங்களுக்கும் கிரிக் கெட் ஆடுகின்றவர்களுக்கும் மட்டும்தான் அரசின் விருது, பாராட்டு என்று இருந்த நிலையை மாற்றி, சென்ற நிதி நிலைக் கூட்டத் தொடரின் போது, எங்களது அன்புத் தாய், தமிழக முதல்வர் அவர்கள், அதிக மகசூல் பெறும் வேளாண் பெருங்குடி மக்களுக்கு மாநில அளவில் நெல்லுக்கு ரூபாய் 1 லட்சம், 50 ஆயிரம்

25 ஆயிரம் என்றும் இதரப் பயிர்களில் அதிக மகசூல் பெறுபவர்களுக்கு பல்வேறு பரிசுத் திட்டங்களையும் அறிவித்துள்ளார்கள். அதோடு அரசின் பரிசு பெற்ற விவசாயிகளின் பிள்ளைகளுக்கு வேளாண்மைக் கல்லூரியில் இடம் வழங்கப்படும் என்ற பெரும் அறிவிப்பையும் வெளியிட்டார்கள். இதனால், வேளாண்மைப் பெருமக்களிடம் ஒரு போட்டி மனப்பான்மை ஏற்பட்டு, விவசாயக் கருத்துக்களை அவ்வப்போது அறிந்து, அதனை அப்படியே கடைப்பிடித்து அதிக மகசூல் பெற்றதோடு அனைவரும் முயன்றதால், இன்று மொத்த மகசூல் கூடியிருப்பதைப் பார்க்கிறோம். இந்த உன்னத திட்டத்தை அறிவித்த தமிழகத்தின் தலைமகளாம், டாக்டர் புரட்சித் தலைவியைப் போற்றுகிறார்கள், புகழ்கிறார்கள், வாழ்த்துகிறார்கள்.

உற்பத்தியைப் பெருக்கிடவும், வேளாண்மை சிறக்க பல்வேறு திட்டங்களை அறிவித்த முதல்வர் அவர்கள், பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேளாண்மைப் பயிற்சித் திட்டத்தில் கொஞ்சம் அதிக அளவில் பங்கேற்றிட வேண்டும் என்ற உயரியதோர் திட்டத்தை அறிவித்தார்கள். என் தொகுதியிலே வேளாண் துறையில் நடத்தப்பட்ட முன் பருவப் பயிற்சிகளிலும் சமீபத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் நிறைந்த அளவில் பெண்கள் கலந்து கொண்டு ஆர்வத்துடன் பங்கேற்றனர். இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, விவசாயப் புரட்சிக்கு வித்திட்ட மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுக்கு, வேளாண் பெருங்குடி மக்கள் மனதாரப் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

வலுத்தவனுக்கு வாழ்வு, இளைத்தவனுக்கு எள் என்ற நிலையை மாற்றி என் தொகுதியிலே, எள்ளில் ஏக்கருக்கு ஆயிரம் கிலோ மகசூல் எடுக்கும் பயிற்சியும் கருத்தரங்கும் நடத்தி, அதனால் அதிக மகசூல் எடுக்கிற நிலைமை இருக்கிறது. இது மாநிலத்திலே பெரிய சாதனையாக அமைகின்றது.

ஆனால், அந்தப் பகுதியிலே விளையும் அத்தனை எள்ளும் தனியார் மூலம் வாங்கப்பட்டு, இடைத்தரகர்கள்தான் லாபம் அடைகிறார்களே தவிர, இதனை விளைவிக்கும் விவசாயிகளுக்கு லாபமே கிடைப்பதில்லை. எனவே, எள் அதிகம் விலையும் அந்தப் பகுதியை மையமாகக் கொண்டு, வேளாண்மை விற்பனைத் துறையால் நடத்தப்படும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் வாயிலாக நல்லமுறையில் கொள்முதல் செய்து, எள் மற்றும் கடலையிலிருந்து எண்ணெய் எடுக்கும் சிறிய ஆலை ஒன்றை, பூதலூர் அல்லது செங்கிப்பட்டிப் பகுதியிலே தொடங்கி வைக்குமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ப. கலியபெருமாள்] [1993 ஏப்ரல் 22

பிற்பகல் 5-15.

அதனால் விவசாய பெருமக்கள் பயன் அடைவதோடு, மிகவும் பின்தங்கிய பகுதியான பூதலூர், செங்கிப்பட்டி பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு பெருகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். வெளிநாட்டிலிருந்து பாமாயில் இறக்குமதி செய்வதை குறைத்து நம் தேவைக்கு நாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு எண்ணெய் பனை பயிர் வளர்ப்புத் திட்டத்தை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். எண்ணெய் பனையை வளர்ப்பதற்கு அதிக சூரிய வெப்பமும் அதிக தண்ணீரும் தேவை என்பதை உணர்ந்து, இந்த நிலை இந்தப் பனையை வளர்ப்பதற்கு சாதகமான சூழ்நிலை என் தொகுதியில் குறிப்பாக காவேரி கொள்ளிடம் பகுதியில் அதிகம் உள்ளது. அதற்காக தனியார் மற்றும் அரசு நிலங்களும் உள்ளன.

எண்ணெய் பனையை வளர்க்கும் திட்டத்தை என் தொகுதியில் நிறைந்த அளவு அமல் செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டு கடந்த பல ஆண்டுகளாக இல்லாத நிலையை மாற்றி ஜூன் திங்கள் 12ஆம் நாள் மேட்டூரிலே இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என்று அறிவித்து, அதன்படியே தண்ணீரை திறந்து வேளாண்மை தொழில் சிறக்க ஏற்பாடு செய்த எங்கள் இதய தெய்வமான, குல தெய்வமான முதல்வர் அவர்களுக்கு தஞ்சை விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் தமிழகம் நல்ல மகசூலை பெற்றுள்ளது. வரவிருக்கும் ஆண்டில் குறுவை சாகுபடியை மேற்கொள்ளவிருக்கும் விவசாயப் பெருமக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் காலத்தே செய்து தர வேண்டும் என்றும், அதிகாரி பெருமக்களையும் முடுக்கி விடப்படவேண்டும் என்பதையும் தெரிவித்து குறுவை விழா ஒவ்வொரு கிராமத்திலும் நடத்தப்பட்டது. அதேபோல இந்த ஆண்டும் நடத்தி எல்லோருக்கும் காலத்தே விவசாய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இந்த ஆண்டிலும் நிறைந்த மகசூலை எடுத்து, இந்த மாநிலத்திலேயிருந்து வேறு மாநிலத்திற்கு அரிசி ஏற்றுமதி செய்த நவீன மணிமேகலையாம் எங்கள் அன்புத் தெய்வம் நம் முதல்வர் அவர்கள் திகழ வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். அது மட்டும் அல்ல. என் தொகுதியில் பல ஆண்டுகளாக கோரிக்கையாக வைக்கப் பட்டிருக்கிற இரு பகுதிகளை இணைக்கின்ற குடமுருட்டி ஆற்றில் வேளாண் பெருங்குடி மக்கள் விவசாய பொருட்களை எடுத்துச் செல்வதற்கு வழி இல்லாத நிலை இருக்கிறது. ஒரு பக்கம் அந்தச் சாலை சர்க்கரை ஆலையை சேர்ந்த சாலையாக இருக்கிறது. இன்னொரு பக்கம் நெடுஞ்சாலைத் துறையை சேர்ந்ததாக இருக்கிறது. அந்த நிலையை மாற்றி அம்மக்கள்

1993 ஏப்ரல் 22] [திரு. ப. கலியபெருமாள்]

விரும்புகிற வண்ணம் அந்தச் சாலையை போட்டுத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் கேட்டுக் கொண்டது போல இங்கே தஞ்சை மாவட்டத்திலே அமைய விருந்த வேளாண் கல்லூரி தி.மு.க. ஆட்சியிலே திருச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டது. ஆகையினால் தஞ்சை மாவட்டத்திலே எனது தொகுதியில் ஒரு வேளாண் கல்லூரியை அமைத்துத்தர வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. கிருஷ்ணன்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலத்திலே உணவுத் துறையை மட்டிலே—கடந்த கால ஆட்சிகளிலே என்னென்ன நிலைமை என்பதனை முதலிலே நான் தெரிவித்துக் கொண்டு நம்முடைய இந்த இரண்டாண்டு காலத்திலே புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எவ்வளவு சாதனைகளை படைத்து இருக்கிறோம் என்பதனையும் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய ஆட்சியிலே கடுமையான உணவு பற்றாக்குறை காரணமாக சென்னை மாநகரத்திலே கூட 2 நாட்கள் உணவகங்கள் எல்லாம் மூடுகிற நிலைமை ஏற்பட்டது. அந்த நேரத்திலே உணவு பற்றாக்குறை இருக்கிறதே, சாப்பிடுவதற்கு அரிசி வாங்க முடியவில்லையே என்று கேட்கிறபோது அன்றைய ஆட்சியாளர்கள் எலிக்கறியை சாப்பிட்டால் நல்ல சத்துணவு கிடைக்கும் என்ற பதிலை அன்றைக்குச் சொன்னார்கள். அதேபோல அவர்களுக்கு பின்னாலே நம்முடைய தமிழகத்திலே ஆட்சியிலே அமர்ந்திருந்தவர்கள் பசுமை புரட்சி என்ற அடிப்படையிலே பல திட்டங்களை அறிவிப்பதாகச் சொல்லி பல புதிய பயிறு வகைகளையும் அரிசிக்காக நெல்போன்ற உற்பத்தி பொருளுக்கும் தானிய வகைகளையும் உற்பத்தி செய்வதற்கு பல திட்டங்களை அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே எனக்கு கூட அஞ்சுகம் பாசிப் பயிறு என்று ஒரு பயிர் வகையை, புதிதாக கண்டு பிடித்திருக்கிறோம். நீங்களும் இதைச் செய்ய வேண்டும். பயிர் செய்து பாருங்கள் என்ற அடிப்படையிலே எனக்கு ஒரு பாசிப்பயிறு பொட்டலத்தைக் கொடுத்து அதனை பயிர் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்.

பிற்பகல் 5.20

நானும் அந்த பாசிப் பயிரை பெற்றுக்கொண்டு கிராமத்திலே சென்று நல்ல மகசூல் கிடைக்கும், அதனை பயிர் செய்ய வேண்டும் என்று என்னுடைய தோட்டத்திலே கொடுத்து, அங்கே சென்று பிரித்து பார்த்தபோதுதான் அந்த அஞ்சுகம் பாசி பயிரிலிருந்து அஞ்சுகம் மறு பிறவி எடுத்ததைப் போல அந்தப் பையிலேயிருந்து பூச்சிகள் மேய ஆரம்பித்துவிட்டது. நான் அதைப் பார்த்து பயந்து விட்டேன். அந்த அளவுக்கு அன்றைக்கு பசுமைப் புரட்சி என்ற பெயரிலே அவர்கள் மோசடி செய்தார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்பு கிறேன். காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட மீண்டும் அப்படிப்பட்ட ஆட்சிதான் தமிழகத்திலே நிலவ வேண்டும் என்று இன்றைக்குச் சொல்லி அறிவாலயத்திற்குச் சென்று படையெடுத்துக்கொண்டு அங்கே பேசிக்கொண்டிருக் கிறார்கள். காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய நிலைமை இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு உணவு உற்பத்தியிலே நாட்டி னுடைய நிலைமையைத் தெரிந்துகொண்டுதான் விவசாயி என்ற படத்தை எடுத்து, 'என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ? ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் ?' என்ற நல்ல அற்புதமான பாடலைச் சொல்லி அதன் மூலம் விவசாயிகள் எப்படியெல்லாம் நல்லமுறையிலே பாடுபட வேண் டும் என்ற நல்ல திட்டத்தை அன்றைக்கு சினிமாவிலே எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே தான் இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு புரட்சித் தலைவர் வழியிலே நின்று, தன்னிறைவு அடைகின்ற வகையிலே உணவு உற்பத்தியிலே மிகச் சிறப்பான திட்டத்தை தீட்டி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அதே போல புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இன்றைக்கு எல்லா நலன்களும் பெற்று எல்லாத் துறையிலுமே நல்ல வளங்களைப் பெற்று நம்முடைய தமிழகம் ஆட்சியிலே சிறந்து விளங்குகின்றது. ஆனால் வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டிலும் இன்றைக்கு ஆட்கள் வேலைக்கு வருவது என்பது குறைவாக இருக்கிறது. ஏன் இந்த நிலைமை என்று சொன்னால், இன்றைக்கு நம்முடைய அரசு பல வகையிலும் ஏழை எளிய மக்களுக்கு நல்ல திட்டங்களை எல்லாம் அறிவித்து வருகின்றது. வயது வந்த பெண்களுக்கு திருமணத் திற்கு உதவித் திட்டம், திருமணம் செய்துவிட்டால் அவர்கள் கருவுற்றாலே அத்தகைய தாய்மார்களுக்கு உதவித் திட்டம், குழந்தை பிறந்து விட்டால், அதுவும் பெண் குழந்தை பிறந்தால் அதற்கு அரசு தொட்டில் திட்டம், குழந்தை வளர்ப்பதற்கு ஊட்டச் சத்துணவுத் திட்டம், குழந்தை பள்ளியிலே படித்தால்

1993 ஏப்ரல் 22] [திரு. சி. கிருஷ்ணன்]

சத்துணவுத் திட்டம் இப்படி பல திட்டங்களை அறிவித்ததால், இன்றைக்கு கிராமப்புறத்திலே வேலைக்கு ஆட்கள் கூட கிடைக்காத நிலைமை இருக்கிறது. விவசாயத்திலே இன்றைக்கு ஈடுபட வேண்டும் என்று சொன்னால் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் இன்றைக்கு விவசாயிகள் பெரிதும் நலிவுற்று இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்த விலையிலே இயந்திரங்களை வழங்க வேண்டும். அப்படி இயந்திரங்களை வழங்கினால் தான் விவசாயம் செய்ய முடியும் என்ற நிலைமை இன்றைக்கு தமிழகத்திலே இருந்து வருகிறது. எனவே ஒரு ஏழை விவசாயி குறைந்த விலையிலே இயந்திரம் வாங்க வேண்டுமென்று சொன்னால் அவனால் உழைத்து இயந்திரத்தை வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. ஒரு டிராக்டர் வாங்க வேண்டுமென்றால் அவன் வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் கூட இரண்டு லட்சம் ரூபாயை அவனால் கண்ணிலே பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. கடன் வாங்க வேண்டுமென்று சொன்னாலும்கூட 10 ஏக்கர் நிலம் வேண்டும் என்று வங்கியிலே சொல்கிறார்கள். 10 ஏக்கர் நிலம் உள்ள விவசாயி ஏன் கடனாக டிராக்டரை வாங்குகின்றான்? எனவே விவசாயிகளுக்கு 5 ஏக்கர் அல்லது 3 ஏக்கர் நிலங்களை அடமானமாகக் கொடுத்தால் டிராக்டர் வாங்குவதற்கு கடன் கொடுக்க அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல நம்முடைய அரசு மானிய விலையிலே மினி டிராக்டர்கள் மற்றும் டயர் வண்டிகள், மருந்து தெளிப்பான்கள் போன்ற பல கருவிகளை எல்லாம் வழங்கி வருகிறது. ஆனால் இதற்கு முன்னாலே இருந்த அரசு என்ன கொடுத்தது என்று சொன்னால் ஒரு கைப்பம்பை கொடுத்தார்கள். அதற்கு 3 பேர்கள் வேண்டும். ஒருவன் பம்ப் செய்தால் இடையிலே அந்த பைப்பை பிடிக்க ஒரு ஆள் வேண்டும். இடையிலே தண்ணீர் ஒழுகிக் கொண்டிருந்தால் அதை அடைப்பதற்கு ஒரு ஆள் வேண்டும். இப்படி கை பம்பை தெளிப்பான் முறையிலே தெளிக்க வேண்டுமென்று சொன்னால் 3 ஆட்கள் தேவைப்படும். அந்த நிலைமையை எல்லாம் போக்கி நம்முடைய அரசு மிகச்சிறப்பான முறையிலே, தெளிவான முறையிலே ஏழை விவசாயிகளுக்கு நல்ல பல சலுகைத் திட்டங்களை எல்லாம் வழங்கியதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5.25

அதேபோல் கடுமையான மழையின் காரணமாக தென் மாவட்டங்களிலே வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மிகப் பெரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 15 மாவட்டங்களுக்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் ஓடோடிச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் மாண்புமிகு

புரட்சித் தலைவி அவர்கள் தாய் உள்ளத்தோடு நிவாரண உதவி செய்து வந்தார்கள். ஆனால் அன்றைக்கு காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள், பிரதமர் எல்லாம் விமானத்தில் சென்று பார்த்ததோடு சரி, இதுவரை அவர்கள் திரும்பிப் பார்க்கக்கூட இல்லை. இனி வருகின்ற தேர்தல் காலத்தில் சென்று பார்ப்போம் என்ற உறுதியில் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு கூட மக்கள் சரியான முறையில் தீர்ப்பு வழங்கு வார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நவப்ரா என்ற ஒரு திட்டத்தை கிராமங்களிலே புதிதாக நம்முடைய அரசு நல்ல முறையில் செயல்படுத்தி வரு கிறது. இது ஒரு மிகச் சிறப்பான திட்டமாகும். இதனுடைய நிதி ஒதுக்கீடு சுமார் 1,129.553 லட்சம். ஆனால் நம்முடைய அரசு செலவிட்டு இருக்கின்ற தொகை 263.75 லட்சம்தான். இந்த நவப்ரா என்ற திட்டம் நம்முடைய வாயில் நுழைய கொஞ்சம் கஷ்டமாக இருப்பதுபோல் அங்கே கிராமங்களிலே செயற்படுத்துவதிலும் கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. நம் முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சேலத்தில் நான் சொன்னேன். நீங்கள் நல்ல முறையில் தமிழ் இலக்கியத்திலே பேசுகிறீர்கள். அதேபோல் இந்த நவப்ரா திட்டத்திற்கு நீங்கள் ஒரு நல்ல தமிழ் பெயரை வழங்கவேண்டும் என்று சொன்னேன். அதேபோல் இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவப்ரா திட்டத்திற்கு தேசிய நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத்திட்டம் என்ற நல்ல பெயரை தமிழ் பெயரில் வைத்து இருக்கிறோம்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் சிறு பாசனத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் நம்முடைய ஏழை விவசாயிகளுக்கு குழாய் கிணறுகள் அமைக்கப்படுகிறது. இந்த சிறிய உதவியினால் நம்முடைய விவசாயிகளுக்குப் பயன் கிடைக்கவில்லை. எனவே, அரசு த்ன்னுடைய சொந்தப் பொறுப்பிலே இந்த குழாய் கிணறுகளை அமைத்து ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தவேண்டுமென்ற நிலைமையை உருவாக்கினால் அது மிகச் சிறப்பாக இருக்கும்.

அதேபோல் நம்முடைய அரசு பல கசிவு நீர்க்குட்டைகளை எல்லாம் அமைத்து இருக்கிறது. இந்த குட்டைகள் மிக சிறிய அளவில் இருக்கின்றன. கட்டுமான தொகை மிகவும் குறைவாக

இருக்கிறது. 1 லட்சம், 1 1/2 லட்சம், என்று சொல்லுகிற போது அடுத்த மழை வருகின்றபோது அது காணாமல் போய் விடுகிற நிலைமை எல்லாம் வருகிறது. எனவே, சுமார் 5 லட்சம் அளவில் இந்த கசிவு நீர்க் குட்டைகளை அமைக்க வேண்டும். அப்படி அமைக்கின்றபோதுதான் அது சிறப்பாக இருக்கும். எனவே அந்த கட்டுமானப் பணியை அங்கே இருக்கின்ற, அந்தப் பகுதியிலே இருக்கின்ற அந்த ஏழை விவசாயிகளுக்கு அந்த கட்டுமானப் பணியை ஒப்படைத்தால் அவர்கள் கட்டுவது சிறப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

தென்னை மேம்பாட்டுத் திட்டம் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பள்ளிக்கூடங்களில் 6-வது படிக்கின்ற குழந்தைகளுக்கு இலவசமாக தென்னை கன்றுகளை கொடுத்து இருக்கிறார்கள். இந்த தென்னை கன்றுகள் வளர்ப்புத் திட்டம் மிக சிறப்பான ஒரு திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கும் மற்றும் பல பகுதிகளில் இருப்பவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்குக் கூட தென்னை கன்றுகளைக் கொடுத்து அந்த தென்னை உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உதகமண்டலம் வண்ணப் பூங்காவை அழகுபடுத்துகின்ற பணியை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த சிறப்பான பணியினை, பெங்களூரில் அமைந்து இருக்கின்ற அந்த பூங்காவைப்போல கண்ணாடி மாளிகையை சிறப்பாக அமைத்து அழகுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு நல்ல வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.

*<u>திரு. பி. ஈஸ்வரமூர்த்தி</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளில் பங்கு கொண்டு எனது கருத்துக்களை எடுத்துக் கூறவும், எனது தொகுதியின் தேவைகளை எடுத்துக் கூறவும் வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் தெய்வத்தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் திசை தீபமாக; திராவிட திருநாட்டின் திருவிளக்காக; திராவிட பாரம்பரியத்தை உருவாக்கிய தந்தைப் பெரியார். அதற்கு உணர்வு என்னும் உணவு ஊட்டிய பேரறிஞர் அண்ணா, அதை வளர்த்து வாலிபமாக்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இந்த மூவேந்தர்களின் கொள்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் வடிவம் கொடுத்து, இன்று ஒப்பற்ற முறையிலே தமிழகத்தை வழி நடத்துகிறார்கள் மாண்புமிகு இதய தெய்வம் தெய்வத் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

பிற்பகல் 5-30

மகாபாரதத்திலே கண்ண பரமாத்மா அநீதியை அகற்றவும், நீதியை நிலைநாட்டவும், தர்மத்தைக் காக்கவும், பாண்டவர்களின் வெற்றிக்காகவும் பாண்டவர்களின் சாரதியாக அவர்கள் வழிநடத்தி, அநீதியை அகற்றியும், நீதியை நிலைநாட்டியும், தர்மத்தைக் காப்பாற்றிய கண்ணனைப் போல தமிழ் மக்களின், வெற்றிக்காகவும், தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழ் மக்களின் நல் வாழ்விற்காகவும், தமிழ் மக்களை வழி நடத்தி, தமிழ் மக்களின் சாரதியாக மாண்புமிகு இதய தெய்வம் தெய்வத்தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று விளங்குகிறார்கள்.

''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமாம் மழை'' என்பார்கள். இங்கு விண்ணுலக தெய்வங்களுக்குத் திருப்பணி செய்ய வந்த எங்கள் மண்ணுலகத் தெய்வமாகிய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருப்பதால் அவர்கள் நல்லாட்சியில் நன்றாக மழை பெய்து, கடந்த ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நீர் நிலைகளிலும் நீர் போதிய அளவு இருந்த காரணத்தினால் வேளாண்மைத் துறையிலே குறிப்பிட்ட இலக்கிற்கு மேலாக உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளும், பொது மக்களும் மட்டற்ற மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

மேலும், விவசாயிகளின் பெருங்குறையாக இருப்பது, மத்திய அரசின் உரவிலையேற்றம் என்பதை இங்கு அனைவரும் அறிவோம். விவசாயிகளின் நலனிலே மத்திய ஆளும் காங்கிரஸ் கட்சியினர் சிறிதும் அக்கறை காட்டவில்லை என்றாலும், மத்திய அரசு உர விலையை உயர்த்திய போதும், மிகவும் பாதிக்கப்படும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இயற்கை உரம் இடுதலை ஊக்குவித்து அவர்களுக்கு உயிரின உரங்களைக் கொடுப்பது, நமது அரசின் திட்டங்களில் மிக நல்ல திட்டமாகக் கருதப்படுகிறது.

வேளாண்மையில் பயிர்ப் பாதுகாப்பு என்பது மிக முக்கியமானது. நாற்று விடுவதிலிருந்து அறுவடை செய்யும் நாள் வரை பயிர்களுக்கு நாள்தோறும் பணிவிடைகள் செய்து, பல செலவுகள் செய்து விவசாயிகள் உற்பத்தி செய்கிறார்கள். இடைப்

பட்ட காலத்திலும் பல நோய்களுக்கு ஆட்பட்டு பயிர்கள் அழிந்து விடுகிறது. இதைக் கண்டு நிவாரணம் செய்ய அனைத்து விவசாயிகளுக்கும் அந்த நோயின் தன்மை, நிலைமை, பூச்சிகளைக் கண்காணிக்கும் பணிகள் போன்றவைகளை வலியுறுத்தி பயிர்களைப் பாதுகாத்து அந்த விவசாயிகளை காப்பாற்ற வேண்டுமென்று வலியுறுத்தி இந்தப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை நான் மிகவும் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, எண்ணெய் சாகுபடித் திட்டத்தின் மூலம் எங்கள் பகுதியிலேயிருக்கும் பரம்பிக்குளம் ஆளியாறு, அமராவதி நீர்த்தேக்கம், திருமூர்த்தி அணை போன்ற நீர்த் தேக்கப் பகுதிகளில் நாற்றங்கால்களை அமைத்து நாற்றுகளை உற்பத்தி செய்து, பெரியார் மாவட்டத்தின் தென் பகுதியாக இருக்கும் தாராபுரம், காங்கேயம் பகுதிகளில் வைத்தால் அந்தப் பகுதிகளில் மிகவும் சிறப்பாக வளரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, தரிசு நில சாகுபடித் திட்டத்தின்கீழ் சாகுபடிக்கேற்ற பயன்படுத்தாத நிலங்கள் தாராபுரம், காங்கேயம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான நிலங்கள் உள்ளன. இவைகளில் புளி, மா, கருவேலம், தைல மரங்கள் போன்றவைகளை வைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காவேரி பாசன விவசாயிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை என்ற திட்டத்தின் மூலம் தஞ்சை, திருச்சி மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் இருக்கும் விவசாயிகளுக்கு, கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலும் குறிப்பிட்டதை போல, மிக நல்ல முறையிலே விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்கும் அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை அறிவிக்கப்பட்டிருக்கிறது. மிகக் குறைவான நீரின் அளவு கொண்டு மிகக் குறைவான வசதி கொண்டு நெல் உற்பத்தி செய்யும் எங்களது தாராபுரம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, காங்கேயம் போன்ற பகுதிகளில் பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்ட விவசாயிகளுக்கும், அமராவதி பாசனத் திட்ட விவசாயிகளுக்கும், திருமூர்த்தி அணை பாசனத் திட்ட விவசாயிகளுக்கும் கொடுத்து உதவினால் மேலும் அந்த விவசாயிகள் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டம் என்பது கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக, எனக்கு முன்பு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் ஆசைமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புதிய சாலைகள் போட 300 இலட்சம் ரூபாய்க்கு மேலாகவும், பழைய சாலை

களைப் பழுது பார்க்க 160 இலட்சத்திற்கு மேலாகவும் ஒதுக்கப்பட்டிருப்பதாக நானும் அறிந்தேன். கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எனது தாராபுரம் தொகுதிக்கு உட்பட்ட உடுமலை தாலுக்காவைச் சேர்ந்த மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் பகுதிகளிலிருந்து அமராவதி சர்க்கரை ஆலைக்கு மிக அதிக அளவிலே கரும்புகள் கொண்டு செல்லப்படுகிறது. எனவே, இந்தப் பகுதியிலே இருக்கும் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இந்த ஆண்டு, இந்தத் திட்டத்தின் மூலம் இந்தச் சாலைகளை எடுத்துக் கொண்டு, செப்பனிட்டு, சாலைகள் இல்லாத பகுதிகளில் புதிய சாலைகள் இட்டு, இந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகளை உற்சாகப்படுத்துமாறு மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-35

மேலும், எனது தாராபுரம் தொகுதி விவசாயிகளுக்கும், காங்கேயம் பகுதி விவசாயிகளுக்கும் நீண்டகால கோரிக்கையாக இருக்கும் பரம்பிக்குளம்-ஆழியாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நான்காவது மண்டலப் பாசனப் பகுதிக்குட்பட்ட விவசாய நிலங்களுக்கு தண்ணீர் விடவேண்டும் என்ற கோரிக்கை மிக முக்கியமான கோரிக்கையாக நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. புரட்சித் தலைவர், நமது முன்னாள் முதல்வர் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே, 1984 என்று நினைக்கிறேன். அந்த புதிய நான்காவது மண்டலம் அமைக்கப்பட்டு, ஒரே ஒரு முறை தண்ணீர் விட்டதாக அறிகிறேன். அதற்குப் பிறகு, நீர் தேக்கத்தில் தண்ணீரின் அளவைப் பார்த்து 3 மண்டலங்களுக்கு மட்டுமே தண்ணீர் விடப்பட்டு வருகிறது. நான்காவது மண்டலமாக இருக்கும் அந்தப் பாசன விவசாயிகள் மிகவும் கஷ்டத்திலும், வறுமையிலும் இருந்து வருகிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு இதய தெய்வம் தெய்வத்தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டே பரிசீலித்து எங்கள் பகுதியிலே இருக்கும் ஏழை விவசாயிகளின் நலனைக் காப்பாற்றுமாறு மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு டயர் மாட்டு வண்டி, பவர் டிரில்லர்கள், கதிர் அடிக்கும் இயந்திர வசதிகள், மேலும் கை தெளிப்பான்கள் போன்ற அடிப்படைத் தேவைகளை, விவசாயிகளுக்குச் செய்தும், கிணறுகள் மின் இணைப்பு போன்றவைகளுக்கு முன்னுரிமை கொடுத்தும் விவசாயிகளுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் செய்து கொடுத்தால், விவசாயிகள் மிகவும் உற்சாகத்துடன் உற்பத்தியைப் பெருக்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்று நான் கூறிக் கொள்ளக் கட்டமைப்பட்டிருக்கிறேன்.

1993 ஏப்ரல் 22] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி]

மேலும், கால்நடைகளைப் பற்றி ஒன்றிரண்டு குறிப்புகளைச் சொல்லி எனது உரையை முடித்துக் கொள்கிறேன். தற்போது நமது மாநிலத்தில் 8 கால்நடைப் பண்ணைகள் உள்ளதை, கொள்கை விளக்கக் குறிப்பில் நான் பார்த்தேன். கால்நடைப் பண்ணைகள் திட்டத்தின் மூலம், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமும் கால்நடை வளர்ச்சிக்காக மேலும் கூடுதலாக இரண்டோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பண்ணைகளோ இந்த ஆண்டே அமைந்தால், (மணியடிக்கப் பெற்றது) மிகச் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். உம்பளாச்சேரி பசுக்கள், பிரிசியன் வகை பசுக்கள், ஜெர்சி இனப் பசுக்கள், சிந்தியின வம்ச வகைகள், முர்ரா எருமைகள் போன்ற கால்நடைகளுக்கு பெரிய அளவில் ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டு, இந்த வகை கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும். மேலும், இதன் அபிவிருத்திக்கும் நல்ல திட்டமிட வேண்டும். இல்லையென்றால், எதிர்காலத்தில் இதுபோன்ற கால்நடைகளைப் பார்ப்பது மிக அரிதாக இருக்கும். முக்கியமாக விவசாயத்திற்கு தகுதியான, நல்ல தரமான கால்நடைகளை, எருதுகள் போன்றவற்றை அதிக அளவிலே இறைச்சிக்காக கேரளா போன்ற அண்டை மாநிலங்களுக்கு கடத்துகிறார்கள். இதுபோன்ற சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் வகையிலே, மாநிலங்களின் எல்லை ஓரங்களில், சோதனைச் சாவடிகள் மூலம் தடுக்க வேண்டும். நாங்கள் எல்லாம் தினந்தோறும் கண்கூடாகப் பார்க்கிறோம். தாராபுரம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை மற்றும் பேரூர் சட்டமன்ற உறுப்பினரான திரு. கே. பி. ராஜு போன்றவர்கள் எல்லாம் தினந்தோறும் இதைப் பார்க்கிறோம், ஆயிரக்கணக்கான மாடுகள் மேய்ச்சலுக்காக ஓட்டிச் செல்கிறோம் என்று சொல்லி, கேரளாவுக்குக் கடத்திச் செல்வதைத் தடுத்து நிறுத்தும்படி கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆ. கு. சீனிவாசன்.

*திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் பேச எனக்கு ஆசி வழங்கிய மாண்புமிகு காவல் தெய்வமும், இதய தெய்வமும், டாக்டர் புரட்சித் தலைவியுமாகிய அம்மா அவர்களுக்கு பெரணமல்லூர் தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் எனது நன்றியினைக் காணிக்கையாக வைத்து வணங்குகிறேன்.

> ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
> இகழ்வாரைப் பொறுத்தல் தலை''.

என்பது, திருவள்ளுவரின் திருக்குறளின் 16-ஆவது அதிகாரத்தின் வாக்காகும். தன்னை வெட்டுகிறவர்களைக் கீழே தள்ளாது தாங்கும் சக்தியுடையது நிலம்; அந்த நிலத்திற்கு ஈடாக,

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தன்னை ஏசுகிறவர்களை மிகவும் பொறுமையோடு தாங்கிக் கொண்டு உலகம் போற்றுமளவுக்குத் திகழ்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு, மேலும், பூமாதேவியின் ஆசியைப் பெற்ற புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவசாய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு மேலும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மா அவர்கள், கடவுளின் அருள் பெற்றிருக் கிறீர்கள். தளர்ந்த குடிகளைக் காக்கும் கருணை உள்ளத்தைப் பெற்றுள்ளீர்கள். நீதி நெறிமுறையோடு இந்த ஆட்சி செய்யும் அளவுக்கு ஆண்டவனின் அருள் பெற்றிருக்கிறீர்கள்.

பிற்பகல் 5-40

தானம், தர்மம் செய்யும் தர்ம தேவதையின் அருள் பெற் றிருக்கின்றீர்கள். காலதாமதம் இல்லாமல் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் மிகத் துணிச்சலான தன்மையையும், கல்வி, அறிவுடைமையையும் பெற்று இருக்கின்றீர்கள். மேற் சொன்ன ஏழு தனித் தன்மைகளையும், குணங்களையும் வள்ளு வரின் வாக்கிற்கிணங்கப் பெற்றிருக்கின்ற காரணத்தினால்தான் தமிழகத்தின் ஜோதி விளக்காகவும், இந்தியாவின் முதல்வருக்கு எல்லாம் முதல்வராக, ஆண் சிங்கமாக, நிரந்தர முதல்வராகப் பணியாற்றத் தாங்கள் சக்தியைப் பெற்று இருக்கின்றீர்கள். இனி உலகம் போற்றும் அளவுக்கு வேறு எவரும் இத்தன்மைகளைப் பெற்றிருக்க முடியாது என்பதால் உலகமே போற்றுகிறது.

இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தின் முன் னேற்றப் பாதைக்கு வேண்டிய வளர்ச்சிப் பணித் திட்டங்களை, சாதனைச் சேவைகளை மேற் கொண்டுள்ளீர்கள். அதைத் தமிழக மக்கள் உளமார வரவேற்கின்றனர். எல்லா மதத் தினரும், வணங்கும் அளவுக்கு, இந்துவாக இருந்தாலும் சரி, முஸ்லீமாக இருந்தாலும் சரி, கிறிஸ்தவராக இருந்தாலும் சரி, உலகின் பல பகுதிகளில் இருந்தும் தமிழகத்திற்கு வரும் எம் மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் நினைவு ஆலயத்தை, இறைவனின் குடியிருப்பு ஆலயமாகக் கட்டப்பட்டிருப்பதை விஜயம் செய்து, கற்பூரம் ஏற்றி, தேங்காய் உடைத்து, வணங்கிச் செல்லுகின் றனர். இரட்டை இலையின் வாரிசாக உள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திருக் கோயிலைக் கட்டிச் சாதனை புரிந்திருக்கின்றீர்கள். இச்சாதனையை உலகம் போற்றுகின்றது.

அதே போல, ஆசியாக் கண்டத்தில் சிறப்பாக நேரு விளை யாட்டு அரங்கினை அமைத்துச் சாதனை புரிந்து இருக்கின்றீர் கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1993 ஏப்ரல் 22] [திரு. ஆ. கு. சீனிவாசன்]

காவல் துறைப் பணியை உலகம் போற்றும் அளவுக்குச் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இதனால், தமிழகத்தைக் கட்டிக் காக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காவல் தெய்வமாக விளங்குகின்றீர்கள்.

'' கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதெனாடு நேர் ''

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, களையை நீக்கி, பயிரைக் காப்பது போன்று தமிழகத்தில் தீயவர்களை நீக்கி, தமிழ் மக்களைக் காக்கும் காவல் தெய்வமாக விளங்குகின்றீர்கள்.

இன்றைய மானியக் கோரிக்கையில் விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், இந்தியாவிலே பெரும்பகுதியான மக்கள், விவசாயத்தை நம்பித்தான் வாழ்கின்றார்கள். விவசாயிகள், ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு எப்படியோ அதைப் போன்று விளங்குகின்றார்கள். விவசாயிகள் தண்ணீரை நம்பி, பூமியை நம்பித்தான் வாழ்கின்றனர். வேளாண்மைத் துறையில் தண்ணீர் இல்லை என்றால் உயிர் இல்லை. உயிர் இல்லை என்றால் பயிர் இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் நேரத்தோடு, காலத்தோடு மழை பெய்து, எல்லா ஜீவராசிகளும் உண்ண வேண்டிய உணவுப் பொருள்கள் பருவத்தோடு விளைகின்றன. அதற்கு வள்ளுவர் ஒன்று குறிப்பிடுகிறார்.

'' இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.''

என்கின்றார். தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இவ்வாறு காலத்தோடு மழை பெய்து, எல்லோரும் சந்தோஷமாக இருக்கும் அளவுக்குத் தமிழகம் வெற்றி நடைபோடுகிறது.

சாதாரணமாக கிராமப் பகுதிகளுக்குச் செல்லும் போதெல்லாம் பாதையிலே நெல்கட்டு அடித்து அவைகளைக் காயவைத்து மூட்டை மூட்டையாக அடுக்கி வைத்திருப்பார்கள். ஆனால் அந்த நெல்லை மற்ற இடத்திற்கு, ஒழுங்குமுறை மார்க்கெட் கமிட்டிக்கு எடுத்துச் செல்ல வேண்டுமானால் பாதை வசதி இல்லாமல் இருக்கிறது. காரணம் என்ன என்று சொன்னால், சென்ற புயல் வெள்ளத்தில் பாதைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் தாடிநுழைம்பை, மகாதேவி மங்கலம், மேலத்தாங்கல் பெரியபாலம் ஆகிய பகுதிகளில் பாதைகள் பழுது அடைந்து இருக்கின்றன. அதே சமயத்தில், எங்களுடைய பகுதி கரும்பு விளையும் பகுதியாக இருக்கிறது. கரும்பை ஏற்றிக் கொண்டு செய்யாறு கரும்பு ஆலைக்குச் செல்வதற்கு வாய்ப்பு இல்லை. ஆகையால், பாதைகளைச் சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

அதே சமயத்தில் 5, 6 கிலோ மீட்டர்கள் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் நடந்து வந்துதான் பஸ் ஏறுகிறார்கள். ஆகையினால், இந்த விவசாயத்தை நம்பிக்கொண்டிருக்கும் விவசாயிகள் நடப்பதற்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும், என்னுடைய தொகுதியில் பெரணமல்லூரில் மார்க்கெட் கமிட்டி இருக்கிறது. அங்கே இடவசதி இல்லாத காரணத்தால் நெல் மார்க்கெட்டுக்கு வருவதில்லை. பெரிய குழப்பலூரில் மார்க்கெட் கமிட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரணமல்லூரிலும் மார்க்கெட் கமிட்டி புதிய கட்டிடம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், என்னுடைய பகுதியில் கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன. 5 ஆயிரம், 6 ஆயிரம் கால்நடைகள் வாழும் பகுதிக்கு மையமாக கால்நடை மருத்துவமனை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக ஆயலபாடியிலும், மேலத்தாங்களிலும், கோழிபுளியூர் ஜங்ஷன் ரோட்டிலும் இது போன்ற கால்நடைப் பண்ணைகள் தேவைப்படுகிறது. அதே சமயத்தில் கால்நடைகள் குடிப்பதற்கு தண்ணீர் வசதியில்லை. கசிவுநீர்க் குட்டைகள் ஆங்காங்கே தோண்டி வருகிறார்கள். அதனால் கிணறுகளில் தண்ணீர் ஊற்று வருவதற்கு வசதியாக உள்ளது. அதே சமயத்தில் எங்கெங்கே குளங்களும், குட்டைகளும் பழுதடைந்து, தூர்ந்து இருக்கிறதோ அவைகளை பழுது பார்த்தால், கால்நடைகளுக்கு தண்ணீர் குடிப்பதற்கு வசதியாக, வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதே சமயத்தில் பெரணமல்லூரில் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். நெல் பயிர் செய்கிறார்கள். கரும்பு பயிர் செய்கிறார்கள். ஆனால், விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமலும் இருக்கிறார்கள். ஆகையினால், பெரணமல்லூர் தொகுதியில் பெரணமல்லூரை மையமாகக் கொண்டு தொழிற்பேட்டைகள், காகித தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், செய்யார் பக்கத்தில் சர்க்கரை ஆலை உள்ளது. அங்கு வேண்டிய மூலப் பொருள்கள் இருக்கின்றன. இட வசதியும் இருக்கிறது. ஆட்களும் இருக்கிறார்கள். அதே சமயத்தில் பெரணமல்லூரில் மருத்துவமனை தேவைப்படுகிறது. கல்வியின் மூலமாகத்தான் அந்தப் பகுதி வளர்ச்சி அடைய முடியும். ஆகையினால் பழம் பேட்டை, குனக்கம்பூண்டி ஆகிய இரண்டு பகுதியிலும் உயர் நிலைப் பள்ளியாக உள்ளதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெற்குணம், உலகம் பட்டு கிராம பகுதிகளில் நடுநிலைப் பள்ளியாக உள்ள அதை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், விவசாய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் படித்தால்தான் உயர்ந்த நிலைக்கு வர

முடியும். ஆகையால் அதைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கடுத்து (மணியடிக்கப்பட்டது) என்னுடைய தொகுதிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தானைத் தளபதிகளாக இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் வருகை தந்தார்கள். அவர்களுடைய வளர்ச்சிப் பணிகள் மிகவும் திருப்திகரமாக, அடிப்படை வளர்ச்சிப் பணிகள், மக்கள் சந்தோஷப்படும் அளவுக்கு பணிகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டு, இந்த அரிய வாய்ப்பு தந்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கடுத்து......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி தெரிவித்து அப்படியே முடித்துவிடுங்கள். முடித்ததாகக் கருதப்படுகிறது. திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் கால்நடை துறையின் மானியக் கோரிக்கைகள் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை வைக்க வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றுக்காக மொத்தம் 729,25,16,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, தமிழகத்தில் வேளாண்மை, தொழில் துறைக்கு நிகராக வளர்ச்சி பெறவேண்டும் என்ற அடிப்படையில் இன்றைக்கு வேளாண்மைக்கு ஒரு தொழில் துறை அந்தஸ்தைக் கொடுத்து இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இன்றைக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கொள்கைக் குறிப்புப் புத்தகத்தை ஆராய்ச்சி நூலுக்கு இணையாக அளித்திருக்கிறார்கள். வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒரு ''தீஸிஸ்'' அதாவது ஒரு ஆராய்ச்சி வெளியீடு செய்தால் எந்த அளவுக்குக் கருத்தாழம் கொண்டதாக அது இருக்குமோ அந்த அளவுக்குக் கருத்தாழம் கொண்டதாக 84 தலைப்புகளில் இந்தப் புத்தகத்தை இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 5.50

அதில் சொல்லப்பட்டிருக்கிற வேளாண்மை முன்னேற்றத்திற்கான கருத்துக்களில் இந்தத் துறையில் இருக்கும் விவசாயிகளை பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையச் செய்வதற்கான பல்வேறு அம்சங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. அதிலே முக்கியமாக இன்றைக்கு கிராமப்புறத்திலே படித்து கல்வியைத் தொடர முடியாமல் இருப்பவர்கள் அந்த வேளாண்மைத் தொழிலில் இருந்தே எப்படி ஒரு சுய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்ற வகையில் காய்கறி விதை உற்பத்தி, பருத்தி விதை உற்பத்தி, உயர்ரக சிறுதானிய விதை

உற்பத்தி, பழச் செடிகளைப் பெருமளவில் வளர்த்தல், திசு கல்சர் அதாவது திசு வளர்ப்பு, எரு உரம் உற்பத்தி, பூச்சி கொல்லி உற்பத்தி, பண்ணைத் திடல் நீர் நிர்வாகம், பண்ணைக் கருவிகள் சாதனங்கள் உற்பத்தி, பழுதுபார்த்தலும், செப்ப னிடுதலும், காளான் உற்பத்தி, பழம் பதப்படுத்தல், வேளாண் நீர்க் காகித உற்பத்தி மற்றும் தென்னை நார்க்கலவையைப் பயன்படுத்துதல், மண், தாவர கவனிப்பு, கொய்த அலங்கார மலர்கள் உற்பத்தி இவ்வாறாக கிராமத்தில் இருக்கிற விவசாயி கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இடம் பெற்று இருக்கிறது.

இன்றைக்கு வெறும் பட்டப்படிப்பை மட்டும் வைத்துக் கொண்டு பயனற்று வாழ்வதை விட இப்படிப்பட்ட கிராமப் புறங்களில் தங்களது பண்ணையிலேயே இந்தத் தொழில்களைச் செய்து இன்றைக்கு பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு வாய்ப் புக்களை ஏற்படுத்துகிற இந்தத் திட்டங்களை எல்லாம் 84 தலைப்புகளில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கு உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி 65.80 சதவீதம் பேர் கிராமங்களில் வாழ்வதாகக் கணக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு குறு விவசாயிகளுடைய எண்ணிக்கை 10 சதம் அதிகரித்து இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையில் 20 இலட்சம் பேர் இன் றைக்கு அதிகரித்து இருக்கிறார்கள். ஒரு நாட்டினுடைய பொரு ளாதார வளர்ச்சியில் வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர் களின் எண்ணிக்கை அதிகரிக்கிறபோதுதான் பொருளாதார வளர்ச்சி உலக நாடுகளில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், நம் முடைய இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் இன்றைக்கும் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுடைய எண்ணிக்கை குறை யாமலே இருந்துகொண்டிருக்கிறது. பெரும்பாலானவர்கள் இன்றும், மண்ணையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப் படிப் பெரும்பாலும் சிறு வ்வசாயிகளாகத்தான் இருந்துகொண் டிருக்கிறார்கள். ஆனால், அரசு அறிவிக்கிற பல்வேறு மானியத் திட்டங்கள் எல்லாம் உண்மையிலேயே பயன் அளிக்கிற திட்டங் கள் எல்லாம், சிறு, குறு என்று விவசாயிகளை பிரித்து அந்தத் திட்டங்களை அறிவிப்பதன் மூலம் அந்தத் திட்டங்கள் உண்மையிலேயே யாருக்குச் சென்று சேரவேண்டுமோ அவர் களுக்குச் சென்று சேருவதில் தடங்கல் ஏற்படுகிறது.

பிற்பகல் 5.55

உண்மையில் சிறு, குறு விவசாயிகளுக்கு அந்தத் திட்டங்கள் பயன்அடையக்கூடாது என்று நான் கருதவில்லை. ஒரு திட்டம் பயனடைய வேண்டுமானால் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்து

கின்றவர்களுக்கு என்று சில அடிப்படை தகுதிகள் இருக்க வேண்டும். அவர்களுக்கு குறைந்தபட்சம், செல்வமும் நீர்ப்பாசன வசதிகளும், அந்த நீர்ப்பாசன வசதியையும் நிலத்தையும் பயன் படுத்தி முதலீடு செய்து அந்த பயிரை சாகுபடி செய்கின்ற தகுதியும் வசதியும் வாய்ப்புகளும் இருக்கின்றவர்கள்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். அரசு கொடுக்கின்ற பல்வேறு மானியங்களைப் பயன்படுத்தி அவர்களும் வாழ்க்கைத் தரத்திலே முன்னேற முடியும். ஆனால், நம் நாட்டைப் பொறுத்தவரையிலே, 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டப்படி ஆக இருந்தும் கூட இன்னும் விவசாயிகளை சிறு குறு பெரு என்று பிரிப்பதன் மூலமாக அரசு அளிக்கின்ற அந்த மானியங்கள் எல்லாம் தவறான முறையில் சிறு விவசாயிகள் பலராலும் அதை பயன்படுத்த முடியாத நிலையில் அது யாருக்குச் சென்று சேரவேண்டுமோ அவர்களுக்குச் சென்று சேராமல் பல இடங்களிலே பல தவறுகளுக்கு வாய்ப்பளிப்பதாக இருக்கிறது. எனவே, அரசு அளிக்கின்ற மானியங்கள் எல்லா விவசாயிகளுக்குமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் விவசாயிகளை சிறு குறு பெரு விவசாயிகள் என்று பாகுபடுத்தி சொல்லாமல் எல்லா விவசாயிகளுக்கும் அந்த மானியங்கள் சென்று சேரக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்குத் தொழில் துறையை உலக தொடர்புகள் கொண்டதாகவும், தாராள மயமாக்குகின்ற கொள்கைகளை அரசு கடைப்பிடித்துக்கொண்டு இருக்கும் நேரத்தில் வேளாண்மைத் தொழிலுக்கு பலவகையான தடங்கல்கள் இருக்கின்றன.

இன்றைக்கு ஒரு மிக முக்கியமான பிரச்சினையாக, உலக அளவிலே பேசப்படுகின்ற பிரச்சினையாக இருப்பது டன்கெல் பார்முலா என்று ஒரு திட்டம். வியாபாரம் வரி விதிப்பதற்கான பொது ஒப்பந்தத்தின் தலைவரான ஜி.ஏ.டி.டி. கமிஷன் தலைவரான ஆர்தர் டன்கெல் என்பவர் வெளியிட்டு இருக்கின்ற ஒரு திட்டத்தை இன்றைக்கு விவசாய அமைப்புகள் எல்லாம் எதிர்த்து வருகின்றன. அந்த டன்கெல் திட்டத்தின்படி மூளை சொத்திற்கான பாதுகாப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற முறையிலே அமெரிக்காவிலே இருக்கின்ற சர்வ தேசக் கம்பெனிகள் உலக அதிய கம்பெனிகள் எல்லாம் விதை உற்பத்தி மற்றும் விதை, விவசாயத்திற்கான ஆராய்ச்சிகளில் அவர்கள் கண்டுபிடிப்பிற்கான பேட்டன்ட் உரிமையை அவர்களுக்குப் பாதுகாக்கின்ற முறையிலே நாளைக்கு விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட விதையை பயிரிட உபயோகிக்கின்றபோது அந்த விதைக்கான ராயல்ட்டி அந்த ஸ்தாபனங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நிலமைகள் ஏற்பட்டு விடுமோ என்று அச்சத்தின் காரணமாக விவசாய அமைப்புகள் எல்லாம் அதை எல்லாம் எதிர்த்துப் போராடி

வருகின்றன. இப்படி இன்றைக்கு உலக நாடுகளிலே எல்லாம் விவசாயத் தொழில் துறையினுடைய அசுர வளர்ச்சியின் வ்வசாயம் தாக்குப் பிடிக்க முடியாமல் வேளாண்மைக்கு பிரத்தியேகமாக பாதுகாப்பைக் கொடுத்து, மானியத்தைக் கொடுத்து தான் உலக நாடுகள் வ்வசாய வளர்ச்சியை இன்று பாதுகாத்து வருகின்றது.

ஆனால், இந்தியாவைப் பொறுத்த வரையிலே, தமிழகத்தைப் பொறுத்த வரையிலே இன்றைக்கு இந்த ஆண்டினுடைய உற்பத்தியானது உணவு தானியங்கள் உற்பத்தியானது 100 இலட்சம் டன்னை நாம் அடைந்திருக்கின்றோம். அந்த 100 இலட்சம் டன்னை அடைவதற்கு விவசாயிகள் எவ்வளவு பாடுபட்டு இருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். விவசாயம் என்பது இன்றைக்கு பருவ மழையைப் பொட்டி நடத்தப்படுகின்ற ஒரு சூதாட்டமாகவே இருந்து வருகின்ற நிலையில், இந்த ஆண்டினுடைய கோடை மழையானது 41.5 சதவிகிதம் குறைவாக பெய்திருக்கிறது. அதற்குப் பிறகு, தென் மேற்குப் பருவ மழை 3.4 சதம் கூடுதலாகப் பெய்திருக்கிறது. அதற்குப் பிறகு வடகிழக்கு பருவ மழை இயல்பைக் காட்டிலும் 11 சதவிகிதம் அதிகமாகப் பெற்றிருக்கிறது. மீண்டும் குளிர்காலத்தில் இயல்பைக் காட்டிலும் 35.8 சதவிகிதம் குறைவாக பெய்துள்ளது. இப்படி மழையானது நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையிலே ஒரு சீராகவும் பெய்வது இல்லை. அப்படி சீராக மழை பெய்வது இல்லாத நிலையில்கூட விவசாயிகள் அந்த இயற்கை மாறுபாடுகளையெல்லாம் அவர்கள் பொருட்படுத்தாமல் இன்றைக்கு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். இன்றைக்குத் தொழில் துறையினுடைய வளர்ச்சிக்கு அரசாங்கமும் வணிக வங்கிகளும் மற்றும் பல்வேறு வங்கிகளும் தாராளமாகவும் ஏராளமாகவும் கடன் கொடுத்தாலும் தொழில் துறையினுடைய வளர்ச்சி என்பது திருப்திகரமானதாக இல்லை என்ற நிலைமையின்ன அரசாங்கத்தினுடைய பல்வேறு கொள்கைக் குறிப்புகளும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 6–00

அந்த வேளாண்மையினுடைய வளர்ச்சி இன்றைக்கு கி.பி.2 ஆயிரம் ஆண்டிலே எவ்வளவு உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறதோ, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறதோ, பருத்தி உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறதோ, பல்வேறு பயிர்களுடைய உற்பத்திகள் எதிர்பார்க்கப்படுகின்றனவோ அந்த எதிர்பார்ப்பை எட்டுகின்ற அளவிற்கு இன்றைக்கு விவசாய வளர்ச்சி நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் பணவீக்கம் 12 சதவிகிதமாக இருந்தது இன்றைக்கு 6.5 சதவிகிதத்திற்கு குறைந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது வேளாண்மை விளைபொருள்

களுடைய அதிகமான உற்பத்தியும், வேளாண்மை விளைபொருள்களுடைய விலை வீழ்ச்சியும்தான் என்பதை இந்த நேரத்தில் சொல்ல வேண்டும். இன்றைக்கு பணவீக்கத்தைத் தொடர்பு கொண்டிருப்பது எல்லாம் அத்தியாவசியப் பொருள்கள் ஆக கருதப்படுகின்ற விவசாய விளைபொருள்கள்தான்.

விவசாய விளை பொருள்களுடைய விலையை அடிப்படையாகக் கொண்டுதான் வாழ்க்கைச் செலவு புள்ளியானது கணக்கிடப்படுகிறது. அந்த வாழ்க்கைச் செலவு புள்ளியை அடிப்படையாகக் கொண்டுதான் பஞ்சப்படி உயர்த்தப்படுகிறது. இன்றைக்கு பஞ்சப் படியை கூட தடுத்து நிறுத்த வேண்டும், உயர்த்தக் கூடாது என்ற கொள்கையை சிக்கன நடவடிக்கையின் காரணமாக மத்திய அரசும், மாநில அரசுகளும் பரிசீலிப்பதைப் பார்க்கிறோம். பஞ்சப் படி உயர்வை எந்த அடிப்படையை வைத்து கூட்டுகிறார்கள் என்றால் வேளாண்மைப் பொருள்களின் அதிகமான விலை உயர்வு ஏறுவதை வைத்துத்தான் அத்தியாவசியப் பொருள்கள் என்று வைத்து அவர்கள் வாழ்க்கைச் செலவு புள்ளியை கணக்கிட்டு பஞ்சப்படி உயர்த்தி கொடுக்கப்படுகிறது. அந்தப் பஞ்சப் படி கூட உற்பத்தியினுடைய அடிப்படையில் இருக்க வேண்டுமேயல்லாமல் விவசாய விளைபொருள்களுடைய விலை அடிப்படையில் இருக்கின்ற காரணத்தால் அரசாங்கங்கள் அந்தப் பஞ்சப்படியை அரசு ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதற்காகவே பொது மக்கள் மத்தியிலே அந்த அத்தியாவசியப் பொருள்கள் விலை குறைந்து இருக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்ற காரணத்தாலே விவசாயப் பொருள்களின் விலை ஏறாமல் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதன் காரணமாக இன்றைக்கு 3 மடங்கு உரவிலை உயர்வு அதிகரிப்பு, பல்வேறு இடுபொருள்களினுடைய விலை உயர்வு காரணமாக விவசாய உற்பத்தி இந்த ஆண்டு அபரிமிதமாக பெருகியிருந்தும்கூட விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும்படியான விலையில்லாத காரணத்தால் இன்றைக்கு விவசாயம் லாபகரமான தொழிலாக இல்லாமல் நஷ்டம் அடைகிற தொழிலாக இருக்கிறது. இன்றைக்கு நாட்டில் உற்பத்தி பெருகி நன்மை செய்த விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனைகூட கட்டுவதற்கு இயலாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல லாபகரமான விலை கிடைக்க எந்தவிதமான விலையை கொடுப்பது என்று அரசாங்கம் முடிவு செய்தாக வேண்டும்.

இன்றைக்கு விவசாய தொழிலில் இருக்கிற மிக முக்கியமான பிரச்சினையே விலை கொள்கைதான். விளைந்தும் விலை இல்லை என்கிற நிலைதான் இன்றைக்கு விவசாயிகளினுடைய மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. அதுவும், விளைந்தாலும்கூட விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களுக்கு விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் பெற்றிருப்

வர்கள் விவசாயிகள் அல்ல. வாங்குவோர்தான் விலையை நிர்ணயிக்கிறார்கள். வாங்குவோர்கள் சொன்னால்தான் விவசாய விளைபொருள்களுக்கு விலை. ஆக, வாங்கி உண்பவர்களுக்கும் அதிகமான விலை. ஆனால் அதே நேரத்தில் உற்பத்தி செய்த விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை பெறாதவாறு இடைத் தரகர்கள் இந்த விவசாய தொழிலில் ஈடுபட்டு பெரும் லாபத்தை ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடைத்தரகர்களை எந்தவகையிலாவது தடுத்து நிறுத்தியாகவேண்டும். இன்றைக்கும் காய்கறிகளை எடுத்துக் கொண்டால் தானியம் மட்டும் விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்கள் அல்ல, இன்றைக்கு தானியத்தை விட, காய்கறி, வெஜிட்டபிள் உற்பத்தியும், பழவகைகள் உற்பத்தியும் ஒரு வணிக ரீதியாக, வேளாண்மை ரீதியாக ஒரு பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அந்த காய்கறிகளையும், பழங்களையும் நகர்ப்புறங்களிலே கொண்டுவந்து விற்கின்றபோது நகரங்களிலே இருக்கின்ற இடைத்தரகர்கள் அவர்களுடைய மண்டியிலே போட்டுதான் விற்க வேண்டியிருக்கிறது. அவர்கள் லாபம் ஈட்ட சாதாரணமாக நூற்றுக்கு 10 ரூபாய் கமிஷன் எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் சொல்வதுதான் விலை. 100-க்கு ஒரு பொருளை விற்றால் 10 ரூபாய் கமிஷன். அதே பழங்களை 30 ரூபாய்க்கு விற்றாலும் அவர்களுக்கு 10 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நிலை இருப்பதால் எந்த விவசாயியும் தன்னுடைய விளை பொருளை எந்த நகரத்திலும் சுதந்திரமாக கொண்டுவந்து தானே விலை கூறி விற்கின்ற நிலை இல்லை. எனவே, தமிழக அரசாங்கம் பல்வேறு நகர்ப்புறங்களிலும் விவசாயிகள் தங்களுடைய விளைபொருளை நேரடியாக கொண்டு வந்து அவர்களே எந்தவிதமான தரகும் இல்லாமல் விற்பனை செய்வதற்கான வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பல்வேறு கிராமப் பகுதிகளிலே இருக்கின்றன. அவைகள் எல்லாம் தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றை விற்பதற்குத்தான் இன்றைக்கு இருக்கின்றன. ஆனால், பழங்களையோ, காய்கறிகளையோ விற்பதற்கு இன்றைக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. சென்னை போன்ற பெருநகரங்களில், பக்கத்திலேயிருக்கின்ற கிராமங்களில் இருந்து உற்பத்தி செய்கின்ற காய்கறிகளை, பழங்களை இடைத் தரகர்கள் இல்லாமல் விற்பதற்கு ஆன ஒரு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் நிச்சயமாக வருங்காலம் வேளாண்மைத் தொழிலில் விலை வீழ்ச்சி என்ற நிலைமை தடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் வைக்க விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 22] [திரு. நா. சா. பழனிசாமி]

இன்றைக்கு அரிசி உற்பத்தி 70 இலட்சம் டன்னையும், சிறு தானிய உற்பத்தி 20 இலட்சம் டன்னையும், பயிறு வகைகள் 5 இலட்சம் டன்னையும் 1992–93 ஆம் ஆண்டிலே அடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் 1993-94 ஆம் ஆண்டுக்குச் சொல்லப்பட்டிருப்பது, அரிசி உற்பத்தி 64.25 இலட்சம் டன் என்றும், சிறு தானியம் 17.75 இலட்சம் டன் என்றும், பயிறு வகைகள் 5.5 இலட்சம் டன் என்றும், மொத்த உற்பத்தி 87.5 இலட்சம் டன் என்றும் குறைத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஏன் 1993-94 ஆம் ஆண்டிலே இந்த உற்பத்தி குறைத்துக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[பிற்பகல் 6-05]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். 1993–94 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரம் குறைக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்த எதிர்பார்க்கக்கூடிய புள்ளிவிவரக் குறியீடு மத்திய திட்டக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டது, தமிழக அரசு செய்யவில்லை.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உற்பத்தி அளவு, தமிழக அளவைத்தான் காட்டுகிறது. எனவேதான் சென்ற ஆண்டு விளைச்சலைவிட, வருகிற ஆண்டில் ஏன் குறைவாக மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று கேட்டேன். சென்ற ஆண்டு விளைச்சல் அதிகரிப்புக்குக் காரணம், அன்று உரத்தின் விலை ஏற்றப்படவில்லை. ஓரளவுக்கு ஏற்றப்பட்டிருந்தாலும்கூட, விவசாயிகள் முன்கூட்டியே உரத்தை வாங்கி, அதைப் பயன்படுத்தி இருப்பார்கள். உங்களது கொள்கைக் குறிப்பிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்த ஆண்டு ரசாயன உரங்களில் சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் போன்ற உரங்களின் உபயோகம் குறைந்திருக்கிறது, தழைச்சத்து உரத்தினுடைய உபயோகம் அதிகரித்து இருக்கிறது என்பது இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து போன்ற 3 உரங்களை சரி விதமாகப் பயன்படுத்துகிறபோதுதான் வேளாண் உற்பத்தியானது சரியான அளவில் இருக்கும். இந்த உரங்களில் எந்த உரத்தினுடைய உபயோகம் குறைந்தாலும், மண் வளமும் பாதிக்கப்படும், விளைச்சலும் பாதிக்கப்படும். இது வேளாண் துறையினுடைய சார்பாகச் சொல்லப்படும் கருத்து.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதமே மத்திய அரசு தழைச் சத்து உர விலையைக் கூட்டியது. சென்ற ஆண்டு, ஆகஸ்டு மாதம் மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களினுடைய விலையைக் கூட்டியது. அதுமட்டுமல்ல. இந்தியத் துணைக் கண்டத்திலேயே 2 : 1 : 1 என்ற வீதத்திலே சத்துக்களைப் பராமரிக்கக்கூடிய மாநிலம் தமிழகம் மட்டும்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. நா. சா. பழனிசாமி : அதனால்தான் நான் குறிப்பிடு கிறேன். வட மாநிலங்களில் அவர்கள் பெரும்பாலும் தழைச் சத்து உரங்களையே மிகுதியாகப் பயன்படுத்துகிறார்கள். தழைச்சத்து உரத்தை மத்திய அரசு உயர்த்தவில்லை. இப்போது உயர்த்தப்பட்டிருப்பதும் மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்கள்தான். மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களைப் பயன் படுத்தும் விவசாயிகள் தமிழக விவசாயிகள். இன்றைக்கு மத்திய அரசு உயர்த்தி இருக்கின்ற உர விலை தமிழக விவசாயி களைத்தான் பெரிதும் பாதிப்பதாக இருக்கிறது. வட மாநில விவசாயிகளைப் பாதிக்காத அளவுக்கும், தென் மாநில விவசாய உற்பத்தியைப் பாதிக்கும் அளவுக்கும் இன்றைக்கு மத்திய அரசினுடைய உரக் கொள்கை அமைந்த காரணத்தால், இன் றைக்குத் தமிழக விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் இன்றைக்கு நம்மு டைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரசாயன உரத்தைக் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டிய சூழல் தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதற்காக இயற்கை உரங்களைப் பயன் படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார் கள். முன்பெல்லாம் பசுந்தாள் உர விதைகள் தாராளமாக விநியோகிக்கப்பட்டது. நம்முடைய விவசாய டெப்போக் களில் பசுந்தாள் உர விதைகள் விநியோகிக்கப்பட்டு, அதைப் பற்றி பிரச்சாரமும் செய்யப்பட்டது. கிளிபிசீரியா, செஸ்பேனியா போன்ற தழைச்சத்து உரங்களைக் கொடுக்கக் கூடிய மரங்களை வளர்க்க வேண்டுமென்று ஒரு காலத்தில் சொல் லப்பட்டது. பின்பு இரசாயன உரம் தாராளமாக கிடைத்ததன் பேரிலும், மலிவாகக் கிடைத்ததன் பேரிலும், அந்தப் பிரச்சாரம் கைவிடப்பட்டது. இன்றைக்கு மீண்டும் இயற்கை உரத்திற்குச் செல்ல வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

பிற்பகல் 6-10

இன்றைக்கு விவசாயத்தில் இரசாயன உரத்தைத் தவிர்த்து பசுந்தாள் உரங்களையும் உயிர் உரங்களையும் நுண்ணூட்டச் சத்துக்கலவைகளையும் பயன்படுத்த வேண்டிய காலகட்டத் திற்கு நாம் வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, மேற்கு நாடு களில் எல்லாம் இயற்கை விவசாயம்— ஆர்கானிக் பார்மிங் என்று

1993 ஏப்ரல் 22] [திரு. நா. சா. பழனிசாமி]

சொல்லி, பூச்சி மருந்து அடிக்காமல் (மணியடிக்கப் பெற்றது) இரசாயன உரம் பயன்படுத்தாமல் விளைவிக்கின்ற விவசாய விளை பொருட்களுக்கு அதிகமான விலை கொடுக்கிற நிலையெல்லாம் இருக்கிறது. ஆனால், இன்றைக்கு நாம்தான் அந்த இரசாயன உரங்களையும், பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பயன்படுத்துகிறோம். மேலை நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு அவர்களால் புறக்கணிக்கப்பட்டு, அவர்களால் தடை செய்யப்பட்ட மருந்துகளையெல்லாம் நாம் இங்கே உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். எனவே தமிழக அரசு இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டங்களையெல்லாம் வரவேற்கிறோம்.

இன்றைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற பல்வேறு மானியங்கள் பற்றி விவசாயிகளுக்கு தெரியவில்லை. அரசு கொண்டு வந்திருக்கிற திட்டங்கள் என்ன என்று சரியான முறையில் விளம்பரப்படுத்தப்படாத காரணத்தால், அந்தத் திட்டங்கள் எல்லாம் விவசாயிகளுக்குச் செல்லாமல் அந்த மானியமெல்லாம் தவறாகச் செல்கின்றது. எனவே, எந்தெந்தத் திட்டங்கள் விவசாயிகளின் நன்மைக்காக அரசால் கொண்டு வரப்படுகிறது என்பதை நல்ல முறையில் விளம்பரப்படுத்தியாக வேண்டும்.

நம்முடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும் வேளாண்மைத் துறைக்கும் இணைந்த செயல்பாடு இருக்க வேண்டும். வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும் வேளாண் துறைக்கும் இன்றைக்குச் சரியான தொடர்பு இல்லை. அந்தப் பல்கலைக் கழகத்தில் புதிய புதிய பயிர் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. அன்றைக்கு ஒரு சிறிய அளவில் விதையைப் போடுகிறார்கள். அதற்குப் பிறகு அந்தப் பயிர் ரகம் என்ன ஆனது என்று கூட தெரிவதில்லை. அந்தப் பயிர் ரகங்களை வேளாண் துறை அபிவிருத்தி செய்து, விதை உற்பத்தியைப் பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுவதில்லை. எனவே, வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்த [illegible] அந்த [illegible] வேளாண்மைத் துறை மட்டுமல்லாமல், வேளாண்மைப் பல்கலைக் கழகமும் அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

உதாரணமாக ஜே. ஜே. ரக நெல்லானது இன்றைக்கு அன்னிய நாடுகளுக்கு அனுப்பக்கூடிய அளவுக்கு தரமானதாக இருக்கிறது. அந்த மாதிரி பல்வேறு பயிர் ரகங்களை வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதிகமாகக் கண்டுபிடித்து ஏற்றுமதிக்கான விதைகளையும் உற்பத்தி செய்து அவர்களே விதையையும் உற்பத்தி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே உள்ள பொறியியல் துறை இன்றைக்கு குமுளூருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நூற்றாண்டுக் காலமாக பல்வேறு சாதனங்கள், Infrastructural facilities

வேளாண்மைப் பொறியியலுக்கு வேண்டிய அத்தனை உபகரணங்களையும் கொண்டிருக்கிற காரணத்தால் கோவையில் பொறியியல் படிக்க வேண்டிய படிப்பை சொல்லிக் கொடுப்பதுதான் பொறியியல் மாணவர்களுக்குச் சிறந்ததாக இருக்கும். இன்றைக்குப் புதிய வேளாண்மைப் பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்றால் இதுபோன்ற 5 கோடி ரூபாய் இருந்தால்தான் அந்த சாதனங்களையெல்லாம் பெறமுடியும். அப்படி ஐந்து கோடி ரூபாய் அளவுக்கு சாதனங்கள் வசதி இருக்கிற இடத்தை விட்டுவிட்டு இன்னொரு இடத்திலே ஏன் அமைக்க வேண்டுமென்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே வேளாண்மைப் பட்டதாரி மாணவர்கள் படிக்கிறார்கள். முதுகலைபட்டம் பெறுவதற்கு மாணவர்கள் படிக்கிறார்கள். முனைவர் பட்டம் பெறுவதற்கு அங்கே மாணவர்வர்கள் படிக்கிறார்கள். நம்முடைய ஆட்சி வருவதற்கு முன்பிருந்து பல ஆண்டுக்காலம் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் வேளாண்மைப் பொறியியல் மாணவர்களுக்கும் ஆண்டுக்காண்டு தகராறு ஏற்பட்டு கைகலப்பு எல்லாம் ஏற்பட்டு வந்தது. நம்முடைய அரசு பொறுப்பேற்றவுடன் அந்த இரண்டு பிரிவு மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக காவல்துறையினரே வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்குள்ளே சென்று மாணவர்களைத் தடியடிப் பிரயோகம் செய்து மேற்கொண்டு நடக்க இருந்த அசம்பாவிதங்களைத் தவிர்த்து இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த அளவுக்கு அந்த இரண்டு பிரிவினரும் தகராறு செய்திருக்கிறார்கள். இது தொடர்ந்து பல ஆண்டுகளாக நடந்து வந்தது, அதனை நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலே கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே அந்தப் புகாரை முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அது மட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் எல்லாம் அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து அதை தனியாகப் பிரித்து அமைக்கவேண்டுமென்று அரசுக்குப் பல்வேறு காலக்கட்டங்களில் கோரிக்கை வைத்தார்கள். எனவே அந்த மாநாட்டிலே எடுக்கப்பட்ட முடிவின்படி அந்த பொறியியல் கல்லூரியைத் தனியாக எடுத்து இன்றைக்கு குமுளூரிலே வைத்து இருக்கிறோம். அது மட்டுமல்ல, இன்றைக்கு கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே தோட்டக் கலைக்கு என்று தனியாக பெரியகுளத்தில் கல்லூரி இருக்கிறது. அதுபோன்று வன இயலுக்கு என்று மேட்டுப்பாளையத்தில் தனியாகக் கல்லூரி இருக்கிறது. எனவே வேளாண்மையில்

1993 ஏப்ரல் 22] [திரு. கு.ப. கிருஷ்ணன்]

இளங்கலைப் பட்டம் படிக்கின்ற மாணவர்களுக்குத் தனிக் கல்லூரி அமையவேண்டும் என்பதற்காகவும் பொறியியல் கல்லூரி தனியாக அமைய வேண்டும் என்பதற்காகவும், அவர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகவும் அரசு இதனை மாற்றியிருக்கிறது, இந்த இடத்தை மாற்றுகின்ற காரணத்தால் அரசுக்குக் கூடுதலாக ஒரு பைசா கூட செலவினம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

பிற்பகல் 6-15

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தனியாக கூட ஒரு பொறியியல் கல்லூரியை அங்கே அமைத்துக் கொள்ளலாம். ஆனால் கோவையில் இருக்கிற அந்த பொறியியல் கல்லூரிக்கான வசதியை இன்னும் சில மாணவர்கள் பெறுவதற்காக அங்கும் பொறியியல் கல்லூரியை வைத்திருந்தால் நல்லது என்று கருதுகிறேன். மாணவர்களுக்குள்ளே நடக்கிற தகராறு என்பது இன்றைக்கு வேளாண்மை மட்டும் படிக்கிற மாணவர்களுக்குள்ளும் தகராறு நடக்கிறது. அது நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. எனவே, கோவையை பொறுத்தவரையில் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பல்கலைக்கழகம் அங்கே நிறுவப்பட்டது என்றால் கோவை அதற்கு உகந்த இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. காரணம் அங்கே இருக்கிற சீதோஷ்ண நிலை அப்படி இருக்கிறது. அங்கே எல்லா வகையான மண் அமைப்புகளும் இருக்கின்றன. கோவை வேளாண்மை ஆராய்ச்சிக்கு ஒரு உகந்த இடமாக அந்தக் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டதன் நோக்கம், சுற்று வட்டாரத்தில் எல்லாம் மிகவும் விழிப்புள்ள விவசாயிகள் ஆராய்ச்சியைப் பயன்படுத்தி, உற்பத்தியை செய்து காட்டுகிற விவசாயிகள் கோவை மாவட்ட பகுதிகளில் 100 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இருந்திருக்கிறார்கள். எனவே தான் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அந்த வேளாண்மை கல்லூரி அங்கே தொடங்கப்பட்டது. அங்கே வேளாண்மை கல்லூரியில் இப்போது இளங்கலை படிப்பு கூட இல்லாமல், வெறும் ஆராய்ச்சிக்கு மட்டும் அந்த வேளாண்மை பல்கலைக்கழகத்தை வைத்திருந்தால் அதில் இருக்கிற பல்வேறு சாதனங்களும் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய் விடும். எனவே, வேறு புதிய கல்லூரி—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன்.....

திரு. கே. எஸ். துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். கோவையிலே இருக்கக்கூடிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

இந்தியாவிலேயே மிகவும் சிறப்பு வாய்ந்த, பழமை வாய்ந்த, பெருமை வாய்ந்த பல்கலைக்கழகம். இன்றைக்கு அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா யூனிவர்சிட்டிகளைக் காட்டிலும் அதிகமான மாணவர்கள் அங்கேயிருந்து தான் சென்று கொண்டுள்ள அளவுக்கு கல்வித்தரம் சிறப்பாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகத்திற்குள் தான் கோவை வேளாண் பொறியியல் கல்லூரி இருக்கிறது. அந்த வேளாண் பொறியியல் கல்லூரியில் படித்து தான் நானும் என்ஜினியரிங் பட்டம் பெற்றேன். அந்தக் கல்லூரி இந்தியாவிலே பஞ்சாபிற்கு அடுத்தபடியாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி. அந்தக் கல்லூரி கட்டடம் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துரைமுருகன், நீங்கள் கோவையில் இருக்கவேண்டும் என்பதற்கு சொல்ல வருகிறீர்கள். அதைத்தான் திரு. நா. சா. பழனிசாமி சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்கள் மட்டுமல்ல, கோவை மாவட்டத்தைச் சார்ந்த பல உறுப்பினர்களும் கூட இந்தப் பிரச்சினையைக் கொண்டுவர வேண்டுமென்றுச் சொல்லி இருக்கிறார்கள். கோவை மாவட்டத்தைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும் உங்கள் ஊரில் இருக்கவேண்டுமென்று கேட்கிறீர்கள். அதை திரு. நா. சா. பழனிசாமி வற்புறுத்துகிறார். அமைச்சர் அவர்கள் அங்கேயிருந்து மாற்ற வேண்டிய சூழ்நிலையை விளக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மேற்கொண்டு வேண்டாம். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. கே. எஸ். துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் வேளாண்மை பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கும் வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கும் சிலசில சின்ன பிரச்சினைகள் இருந்தன. கடந்த இரண்டாண்டுகளாக எந்தப் பிரச்சினையும் அங்கே இல்லை. எந்தத் தகராறும் இப்போது நடைபெறுவது இல்லை. அப்படியே இருந்தாலும் கூட அந்தக் கட்டடம், ஒர்க்ஷாப், அதைப்போல வெளி நாட்டு— ஸ்வீடிஷ் நாட்டு உதவியோடு கட்டப்பட்டிருக்கிற வாட்டர் டெக்னாலஜி செண்டரிலும் ஏறத்தாழ 15 கோடி செலவில் கட்டடங்கள், ஒர்க்ஷாப் நிர்மாணித்து இருக்கிறார்கள். அந்த மாணவர்களிடையே இப்போது எந்தப் பிரச்சினையும் கிடையாது. அமைதியாக இருக்கிறார்கள். கடந்த ஓராண்டு காலமாக எந்த ரகளையும் நடக்கவில்லை. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்னதைத் தான் திரு. நா. சா. பழனிசாமி சொல்லியிருக்கிறார். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்படியே வற்புறுத்தினால் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த எல்லா

உறுப்பினர்களும் வாய்ப்புக் கேட்பீர்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன். கோவை மாவட்டத்தைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும் என்னிடத்தில் இதைப்பற்றி ஒரு விளக்கம் கேட்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். இது இயற்கை தான். எல்லா மாவட்டத்தைச் சேர்ந்தவர் களும் அந்தந்த மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத் திற்குப் போகிறது என்றால், எங்கள் மாவட்டத்திலேயே இருக்கவேண்டும் என்பதற்குக் காரண காரிய விளக்கங்கள் எல்லாம் சொல்லலாம். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்வதற் கெல்லாம் அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார் இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் வற்புறுத்திய வரைக்கும் சரி. அதைத்தான் திரு. நா. சா. பழனிசாமி கேட்டார். அமைச்சர் அவர்களும் அரசின் சார்பில் உள்ள விளக்கத்தைச் சொல்லி விட்டார். போதும். திரு. நா. சா. பழனிசாமி, முடியுங்கள்.

<u>திரு. நா. சா. பழனிசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த சொட்டு நீர்ப் பாசனத்திற்கு 200 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, அதிலே மத்திய அரசின் சார்பிலும் மாநில அரசின் சார்பிலும் திட் டங்கள் இருக்கின்றன, ஆனால் மத்திய அரசு சார்பில் இருக்கிற திட்டங்களுக்கு 4 ஹெக்டேர் வரை 50 சதவீத மானியம் வழங்கப் படுகிறது, ஆனால் மாநில அரசினுடைய திட்டங்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு 50 சதவீதமும் இரண்டாவது ஹெக்டேருக்கு 40 சதவீதமும் மூன்றாவது ஹெக்டேருக்கு 30 சதவீதமும் என அந்த மானியம் குறைவாக இருப்பதால் மத்திய அரசின் திட்டங்களில் சேர்கிற விவசாயிகளுக்கு அதிகமாக மானியமும் மாநில அரசின் திட்டங்களில் சேர்கிற விவசாயிகளுக்கு குறைவான மானியமும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே இரண்டையும் ஒரே மாதிரியாக இருக்கும்படி பார்த்துக் கொள்வது நலம் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு பாலிதீன் பசுமை குடில் 'கிரீன் ஹவுஸ்' 50 சதவீத மானியத்தில் காய்கறி உற்பத்தியை குறைந்த நிலப் பரப்பில் அதிகமான அளவில் விளைய வைக்கக்கூடிய அந்தத் திட்டத்திற்கு 50,000 வரை மானியம் கொடுக்கிற அந்தத் திட்டத்தை நகர்ப்புறத்திற்கு மட்டும் தந்து இருக்கிறார்கள்.

விவசாயம் நகர்ப்புறத்திலே நடப்பதில்லை, கிராமப் புறங்களில்தான் நடக்கிறது. எனவே கிராமப்புற விவசாயி களுக்கு அதைக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளைச் சொல்கிறேன், (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 6-20

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> ஏறத்தாழ அரை மணி ஆகப் போகிறது. சீக்கிரம் முடியுங்கள்

[1993 ஏப்ரல் 22

திரு. நா. சா. பழனிசாமி: கால்நடைகளைப் பொறுத்த வரையில். இன்றைக்கு கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகளை நாம் கால்நடை மருந்தகங்களுக்குக் கொண்டு சென்றுதான் வைத்திய வசதியைச் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம், மனிதர்கள் பஸ்ஸிலே சென்றுவிடலாம், காரிலே செல்லலாம், பல்வேறு வாகனங்களிலே செல்லலாம், ஆனால் ஆடுகள். மாடுகள் ஆகியவற்றை தொலை தூரத்தில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்குப் பிடித்துச் செல்லுகின்றபோது அதிகமான செலவுகளும் சிரமங்களும் ஏற்படுகின்றன. எனவே. கால்நடை மருத்துவர்கள், கால்நடைகள் எங்கே இருக்கிறதோ, அங்கேயே வந்து வைத்தியம் செய்வதற்கான ஒரு திட்டத்தை அரசு செயல்படுத்தவேண்டும்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற கால்நடை மருத்துவர்கள் பெரும்பாலும் மருத்துவப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமல். ஐ.ஆர்.டி.பி, போன்ற கடன்களைக் கொடுப்பதற்கும், ஆடு மாடுகளுக்கு விலை நிர்ணயம் செய்வது போன்ற. மருத்துவத் துறை அல்லாத பணிகளைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள், எனவே. அவர்களுக்கு என்று ஒரு வாகனத்தைக் கொடுத்து. கிராமங்களுக்கு அவர்களை அனுப்பி. வேளாண்மைத் துறை அதிகாரிகள் மூலமாக, கிராமங்களுக்கு அனுப்பி. கால்நடைகளுக்கு கிராமங்களிலேயே வைத்தியம் செய்யக்கூடிய வாய்ப்புகளை கால்நடைத்துறையிலே ஏற்படுத்தவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைத் துறை இரண்டுமே, இணைந்து செயல்பட்டால்தான் விவசாயிகளுக்கு பயன் உள்ளதாக இருக்கும், அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற வேளாண்மை டெப்போக்களிலே இருக்கிற பூச்சி மருந்து போன்ற வினியோகத்தைக் கூட கூட்டுறவுத்துறைக்கு மாற்றிக் கொடுப்பதற்கான ஒரு திட்டம் இருப்பதாகப் பேசப்படுகிறது, விவசாயிகளின் மத்தியிலே இன்றைக்கு விதை உற்பத்தி போன்றவைகள் எல்லாம் தொழில் நுட்பப் பணியாக இருக்கிறது. இது வேளாண்மை அலுவலர்கள் மூலமாகச் செய்யப்பட வேண்டும். வேளாண்மை அதிகாரிகளுக்குக் கூட தொழில் நுட்ப அந்தஸ்து கொடுக்கவேண்டும். இப்போது அவர்களுக்கு தொழில்நுட்ப அந்தஸ்து வழங்கப்படவில்லை, எனவே. அவர்களுக்கு தொழில்நுட்ப அந்தஸ்தை வழங்கி, விதை உற்பத்தியைப் பெருக்கி. விதை, பூச்சி மருந்துகள் போன்றவைகள்—இவர்களுக்குத்தான் எதை எதை எதற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற அளவு தெரியும்—இவர்கள் மூலமாகவே

வழங்கப்படுவதுதான் சரியாக இருக்கும் என்ற வேண்டுகோளைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் உரை.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாட்சிமை பொருந்திய மாமன்றத்தின் தலைவர் அவர்களே. எழும்போதும், தொழும்போதும், தொழுதே உருகி அழும்போதும், என் உடல் வீழும்போதும் உச்சரிக்கும் ஒரே மந்திரம் என் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியே. (மேசையைத் தட்டும் ஒலி) இயக்கத்தின் ஜீவநதியே, வெந்தணல் எதிர்ப்புக்கும், வேற்றலர் சூழ்ச்சிக்கும், அஞ்சாத வேங்கையே, என் சிந்தைக்கும் செயலுக்கும் தெம்பூட்டும் செம்மாந்த சிங்கமே வணங்குகிறேன், நாளும் என் நன்றிகள் வாய்க்கால் வழியே ஓடி வந்தடையும் உன் திருப்பாதம். தங்களின் திருமுன் நின்று உங்களுடைய கட்டளையை ஏற்று என் துறையின் மானிய கோரிக்கையில் பதில் அளிக்க விழைகிறேன். தங்களின் வருகைக்கு முன்னால் பெருகி வருகின்ற மக்களுக்கு மட்டுமே உணவு படைப்பதற்கு உற்பத்தி என்ற எல்லைக்குள் செயல்பட்ட இவ்வேளாண் துறை, இன்று உணவு உற்பத்தி என்பதோடு நில்லாமல் அந்த உணவினை உற்பத்தி செயயும் உழவரின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்ற இரண்டு நோக்கோடு செயல்படுவது தங்களின் ஆட்சியிலேதான்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் இந்திய விவசாயி கடனிலே பிறக்கிறான், கடனிலே வாழ்கிறான், கடனிலே சாகிறான் என்ற நிலைக்கு தமிழ் நாட்டில் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இதனைக் கருத்தில் கொண்டுதான் இத்துறை விவசாயிகளின் விளைப்பொருட்களுக்கு உற்பத்திச் செலவுக்கு ஏற்றவாறு விலை கிடைக்கவேண்டும். நிழலை வெறுத்தே பயிரினை வளர்க்கும் உழவனுக்கு இது கிடைக்காத காலத்தில் அவர்களுடைய உற்பத்திச் செலவினத்தை குறைக்கின்ற வகையிலே மானிய விலையில் இடுபொருட்களை, இணையற்ற நம் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்கள் பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. செந்நெல் விளைந்து செழித்த நஞ்சைகள் புஞ்சையாகி, புஞ்சைகள் பாலையாகி, பாழ்பட்டுப் போன காவிரி பூம் பரப்பிற்கு எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு காதோலை கருகுமணி, கருவளையல் சிற்றிடையில்

சிற்றாடை சுமந்து, கயல் மீன்கள் துள்ளி எழ குவளைகள் விழித்து நோக்க காவிரி பொங்கி வந்தது சென்ற ஆண்டுதானே. ஏன் இந்த விந்தை? எவர் ஆட்சியிலும் இல்லாத நிகழ்வு? ஓ, நீள் புவிக்குள் நீங்களொரு அதிசயமே மண் ஆள பொன் மகளே நீங்கள் வந்ததால்தானே மழை மகளே மணம் உவந்து வந்திருக்கிறாள். (மேசையைத் தட்டும் ஒலி.) சொல்வது வெறும் புகழ்ச்சி அல்ல. விளைந்த கதிர் தலை சாய்வது நெல்லுக்குப் பெருமை, நிலைத்த அரசின் நிலையான முதல்வரே, புகழ் குவிக்கும் சாதனைகளைப் புன் சிரிப்பால் அடக்குவது உங்களுக்குப் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி.) எங்களுக்கோ தங்களின் அளப்பரிய சாதனைகளை சங்கநாதம் இட்டுப் பறை சாற்றுவது பெருமை.

பிற்பகல் 6-25

தென் மாவட்டங்களில் எப்பொழுதும் நடந்திராத அளவிற்கு கொடிய புயல், மழை சீற்றங்கள் சூழ்ந்து கவ்வின. விளைந்த கதிர்கள் நீரில் மூழ்கின. குலை தள்ளிய வாழைகள் குப்புறக் கவிழ்ந்தன. பாக்கும் வெற்றிலையும் பாழாயின. அண்ணாந்து பார்த்த தென்னைகள் விண் அதிர மண்முட்ட வீழ்ந்தன. மலைத் தோட்டப் பயிர்கள் மண் அரிப்பால் அழிந்தன. ஒண்டியிருந்த வீடும் உதவாமல் போனது. கன்று பசுக்கள் கதறக் கதற வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. எங்குமே இருள் எங்களைக் காப்பாற்றுவார் எவரும் இல்லையா என எத்திக்கும் ஏங்க வைத்து எக்காளமிட்டது இயற்கை. துயரச் செய்திகள் எட்டியவுடன் அனுதாப அறிக்கைகளை விட்டுவிட்டு கோட்டையிலே குடியிருக்கும் அரசியல் தலைவர்களை மட்டுமே பார்த்து வந்த தமிழகம் இன்று மனம் பதைபதைத்து மத்திய அரசின் உதவிக்காக காத்திராமல் உடன் ஓடோடிச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) கண்ணீரும் கம்பலையுமாய் காத்து கிடக்கின்ற மக்களின் விழி நீரை பொன் விரலால் துடைத்தெறிந்து உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் அளித்ததோடு, தாமே தன் இயக்க நிதியிலிருந்து வாரி வாரி வழங்கியதை வையகமே இன்று பார்த்துப் பாராட்டிமகிழ்ந்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

வாட்டமுற்ற மக்களுக்குத் தங்களின் குங்கும இதழ்களில் கொப்பளித்த ஆறுதல் மொழிகள் குவிந்த ஓர் கோடிச் செல்வங்களாக மகிழ்வைத் தந்தது. 15 மாவட்டங்களில் 2.03 லட்சம் எக்டேர் பரப்பளவில் 62.13 கோடி மதிப்புள்ள பயிர்கள் சேதமுற்றன. மீண்டும் பயிர் வளர்க்கவும், மேடிட்ட நிலங்களைச் சமப்படுத்தவும் பாழ்பட்ட கிணறுகளைத் தூரெடுக்கவும், பழுதுபட்ட நீரேற்று இயந்திரங்களைச் சீர்ப்படுத்தவும் 16 கோடியை பாராளும் நம் முதல்வர் வாரி வழங்கினார்கள்

1993 ஏப்ரல் 22] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

வெள்ளச் சேதங்கள் ஒரு புறம், இரசாயன உரங்களின் விலையேற்றம் ஒரு புறம். இத்துணை சுமைகளையும் ஏற்று அளப்பரிய உணவு உற்பத்தியினை, இந்நாட்டிற்குத் தந்த உழவர் பெருமக்களை நன்றிப் பெருக்கோடு பாராட்டுகிறேன். தமிழகத்தின அரிசி உற்பத்தி 1987—88-ல் 58.14 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், 1988—89-ல் 59.04 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், 1989—90-ல் 60.83 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், 1990—91-ல் 57.62 லட்சம் மெட்ரிக் டன்னாகவும் இருந்தது. வறண்ட தமிழகத்திற்கு வாழ்வளிக்க தாங்கள் வந்தவுடன், 1991—92-ல் 71.07 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், 1992—93 ஆம் ஆண்டில் 76.00 லட்சம் மெட்ரிக் டன்னாகவும் உற்பத்தி உயர்ந்துள்ளது.

பிற்பகல் 6—30

15 இலட்சத்திலிருந்து 17 இலட்சம் மெட்ரிக் டன் வரை இருந்த தானிய உற்பத்தி இன்று 20 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. $3\frac{1}{2}$ இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த பருப்பு வகை உற்பத்தி இரண்டு ஆண்டுகளில் 5 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. முந்தைய ஆட்சிக் காலத்தில் 12 இலட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் வித்து உற்பத்தி 1991-92-ல் 14.87 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 1992—93-ல் 16 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் உயர்வடைந்துள்ளது. சென்ற ஆண்டு 4.5 இலட்சம் பொதிகளாக இருந்த பருத்தி உற்பத்தி 1992—93-ல் 6.2 இலட்சம் பொதிகளாக உயர்ந்துள்ளது. இன்றுவரை தமிழகம் பெற்றிராத சாதனையாக தங்களின் ஆட்சியின் தலைமையில் 1992-93 ஆம் ஆண்டில் மொத்த உணவு உற்பத்தி 1 கோடியே 1 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சாதனையை நிகழ்த்துகின்ற வல்லமை உங்களைத் தவிர இந்த அகிலத்தில் யாருக்கும் இருக்க முடியாது. டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய அரிய சாதனைகளை எத்தனை சோதனைகளுக்கு இடையே சாதித்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்ப்பதும், பாராட்டுவதும், சாலப் பொருத்தம் எனக் கருதுகிறேன். 1993—94 ஆம் ஆண்டுக்கான மத்திய திட்டக் குழு அரிசி உற்பத்திக் குறியீடு— பழனிசாமி அவர்களுக்காக— 21 இலட்சம் ஹெக்டேரில் 64.25 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், தானியக் குறியீடு உற்பத்தி 17.75 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், ஆக 1993-94 ஆம் ஆண்டுக்கு மொத்த உணவு தானிய உற்பத்திக் குறியீடு 46.50 இலட்சம் ஹெக்டேரில் 87.50 இலட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயித்து மத்திய திட்டக் குழு வரையறை செய்திருக்கிறது. இதுவரை படைத்த சாதனைகளை எல்லாம் மிஞ்சும் வண்ணம் வேளாண்மைத்துறை முழு வேகத்தில் செயல்பட இருக்கிறது. இச்சாதனைகளைப் படைத்து சரித்திரமாக்க இவ்வாண்டு புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன

[திரு. கு.ப. கிருஷ்ணன்] [1993 ஏப்ரல் 22

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்றொரு படிவம் கொள்ளும்" என்று கூறுகிறார் இளங் கோவடிகள். ஆனால் நம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் பாலை நிலமெனக் கிடக்கும் தரிசு நிலங்களெல்லாம் வயலும் வயல் சார்ந்த இடம் எனக் கூறப்படும் மருத நிலமாக மாற்றப் பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியுடன் கடந்த ஆண்டுகளில் 15,000 எக்டேர் தரிசு நிலங்கள் 2.25 கோடி செலவில் சாகு படிக்கு கொண்டு வரப்பட்டது.

இவ்வாண்டும் ரூபாய் 2.25 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் மேலும் 15,000 எக்டேர் தரிசு நிலத்தில் சாகுபடி மேற்கொள்ளப்படும். வேளாண்மைத் துறையைப் பிரதான துறையாகக் கொண்டுமாநில அளவில் இவ்வாண்டு தரிசு நில மேம்பாட்டுக் குழுமம் அமைக்கப் படும். சார்புத் துறைகளும், அரசு சாரா நிறுவனங்களும் இப் பணியில் இணைந்து ஈடுபடும். இவ்வாண்டு தருமபுரி, செங்கை-எம்.ஜி.ஆர்., வட ஆற்காடு அம்பேத்கார், தென்னாற்காடு, திருச்சி, மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். எரிபொருள் தரும் மரங்கள் வளர்க்கப்படும். தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் ஒப்புதலோடு திட்டங்களைச் செயல்படுத்த முன்வரும் தனியார் நிறுவனங்களுக்கு 25 சதம் ஆதாய உதவித் தொகை வழங்கப் படும். இத்திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல் படுத்தப்படும். ஜே.ஜே. 92 வாசனை நெல் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி திட்டம். வேளாண் விஞ்ஞானிகளின் அயரா உழைப் பால் கண்டுபிடிக்கப்பட்ட நெல், அடுக்களையில் சோறு சமைக் கும்போதே ஆளை இழுக்கும் அதிசய நறுமணம் கொண்டது. மதியம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பேரவைத் தலைவருடைய அனுமதியோடு வழங்கியிருக்கிறேன். நெல் உலகில் நீண்டதொரு வரலாற்றுக்கல் என நிலைத்த பெருமைக் கொண்டது ஜே.ஜே. 92 நெல் ரகம். தஞ்சாவூர் மற்றும் காயிதே மில்லத் மாவட்டத்தில் 400 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு ஏற்றுமதிக்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க செந்தமிழ் நாட்டு செம்புட் பறவை அலைகடலுக்கு அப்பாலும் வாழும் ஆருயிர் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு அனைத்து நடவடிக்கை களும் மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 6-35

தென்னந்தோப்புகள் புனரமைப்புத் திட்டம். "பெற்ற பிள்ளை மறந்தாலும், வைத்த பிள்ளை வாழ்வளிக்கும்" என்பது முதுமொழி. காய்த்த மரம் வயது முதிர்ந்தாலோ, நோயுற்று வாடினாலோ, வறட்சியில் காய்ந்தாலோ, புயலினால் வீழ்ந்தா லோ, அவைகளை அப்புறப்படுத்தி, வீரிய ஒட்டுத் தென்னங்

1993 ஏப்ரல் 22] [திரு. கு.ப. கிருஷ்ணன்]

கன்றுகள் ஒரு இட்சம் நடும்பணி இவ்வாண்டு மேற்கொள்ளப் படும். பாசன வசதி மேற்கொள்ள பாசன கிணறு அமைக்க ஆயிரமும், நீரேற்றும் இயந்திர கருவிக்கு ஆயிரமும், ஊடுபயிர் சாகுபடிக்கு எக்டேருக்கு 50 ரூபாயும், என தென்னைக்கு ஒரு கோடி ரூபாயை தெவிட்டாத விருந்தாக தித்திக்க தருகிறார் தீந்தமிழ் நாட்டின் நம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

விரிவாக்க அலுவலர்களுக்கு ''தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி விருது''. விதியை எண்ணி வீழ்ந்து கிடந்த உழவனை தட்டி எழுப்பி, தரமான விதை தந்து தனுக்காக பேசி, உற்சாகத்தை ஏற்படுத்தி, உயர் விளைச்சல் பெறுவதற்கு ஊன்று கோலாய் இருக்கும், வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்தம் பணியினை மெச்சி, தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், பாராட்டுச் சான்றுகள் தமிழர் திருநாளாம் தைப் பொங்கலன்று சூழும் பகையை வெல்லும் வேழம் நம் முதல்வர் திருப்பெயரால் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

எண்ணெய்ப்பனை சாகுபடி ஊக்குவிப்பு திட்டம். ''ஒரே எண்ணம், ஒரே குறிக்கோள், ஒரே செயல்பாடு'' என்னும் தத்து வத்தின் பெட்டகமாய்த் திகழும் நம் முதல்வர் அவர்கள், எண் ணெய்ப்பனையை இந்நாட்டில் வளர்க்க முடியும் என்று எண்ணி னார். அதனையே குறிக்கோளாகக் கொண்டு, எண்ணெய்ப் பனை முளையிட்ட விதைகளை இறக்குமதி செய்தார். இன்று 3.75 இலட்சம் நாற்றுகள் வளர்ந்து, வரும் செப்டம்பர், அக்டோ பர் மாதங்களில் காவிரிப் படுகையில் நடவு செய்யப்பட இருக் கிறது. இத்திட்டத்தில் பங்குபெறும் விவசாயிக்கு சாகுபடி செய் வதற்காக எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 16,250 மானியமாக வழங் கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 2,500 விவசாயி கள் பயனடையும் வகையில் ரூபாய் 325 இலட்சம் செலவிடப் படும். இந்த விவசாயிகள் அண்டை மாநிலங்களில் பயிற்சி பெற வும், எண்ணெய்ப் பனை சுத்திகரிப்பு ஆலைகளைப் பார்வையிட வும், அரசு செலவில் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மரம் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல். ''கங்குல் பகல் காடு திருத்திய கைகளை உயர்த்திடுவோம்'' என்று பாடினான் பட்டுக்கோட்டை. காடு திருத்திய கைகள் உயர்த் திட கருணை ஊற்றாம்—நம் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையின் பேரில் கிராம மகளிர் மற்றும் இளைஞர்களை மரம் வளர்க்கும் பணியில் ஈடுபடுத்தவும் மகளிர் மற்றும் அனைத்து விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் கிராம அளவில் அடிப்படை வசதிகளை அதிகரிக்கவும் கிராமத்திற்குத் தேவை யான கால்நடை தீவனம் மரத்தேவைகள் மற்றும் சாண எரி

வாயு உற்பத்தியை ஊக்குவிக்கவும் மரம் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்பட்டு மாநில அளவில் உயர்மட்டக் குழு அமைத்து கண்காணிக்கப்படும். இத்திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

இதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூபாய் 5.3 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். 4,000 எக்டேர் தனியார் தரிசு நிலங்களும், 4,000 எக்டேர் பொது தரிசு நிலங்களும் ஆக 8,000 எக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதில் 20,000 விவசாயிகள் பயன்பெறுவார்கள். முதற் கட்டமாக, தர்மபுரி மற்றும் பசும்பொன் மாவட்டங்களில் துவக்கப்பட்டு பிறகு மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

வேளாண் இடுபொருள் முதலீட்டுத் திட்டங்கள். இரசாயன உரங்களில் சில சமூக விரோதிகள் செய்யும் கலப்படங்கள் உடனுக்குடன் கண்டுபிடித்து உடன் நடவடிக்கை எடுப்பதற்கு ''உரப் பரிசோதனை மையங்கள்'' தர்மபுரி, சேலம், கும்பகோணம், கா. குப்பம், திண்டுக்கல், ஊட்டி ஆகிய ஆறு இடங்களில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மண்ணில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து மற்றும் சிங்க் சல்பேட் போன்ற நுண்ணூட்டச் சத்துக்களின் அளவை அறிந்து பரிந்துரைகளைச் செய்ய ரூபாய் 45 இலட்சம் செலவில் ''அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர்'' எனும் கருவியை நாகர்கோவில், மதுரை, சேலம், ஈரோடு மற்றும் மேலாலத்தூர் மண் ஆய்வு மையங்களில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6-40

தோட்டக்கலைப் பயிர்களின் சத்துக்குறைவை இலை ஆய்வுச் சோதனை மூலம் கண்டு பிடித்து பரிந்துரை செய்ய ரூபாய் ஐந்து இலட்சம் செலவில் நீலகிரி, சேலம், தர்மபுரி, திருச்சி, திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் தலா 100 ஆய்வு உபகரணப் பெட்டிகள் வழங்கப்படும்.

பயிர் பாதுகாப்பிற்காக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஐம்பது சதம் மானிய விலையில் ரூபாய் 3.40 கோடி ஒதுக்கீட்டில் 20,000 விசைத்தெளிப்பான் இவ்வாண்டு வழங்கப்படும்.

சாகுபடி முறைகளை உரிய தருணத்தில் முறைப்படி மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூபாய் இரண்டு கோடி ஒதுக்கீட்டில் வேளாண் கருவிகள் வழங்கப்படும். இதில் சமீப வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தானிய விதைகளைப் பாதுகாக்க ரூபாய் இரண்டு கோடி ஒதுக்கீட்டில் இரண்டாயிரம் தானிய சேமிப்பு கொள்கலன்கள், தார்ப்பாய்கள் ஐம்பது சத மானியத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

புதுமாடு வண்டி பூட்டி போகிறார் எனை வாட்டி ஏறுகால் மேலேதான் சக்கரைக்கட்டி என்று பாரதிதாசன் பாடினார். கட்டை மாட்டு வண்டி ஓட்டியவனின் துயரினைப் போக்கவும், காளை மாடுகளின் பளுவைக் குறைக்கவும், டயர் வண்டிகள் வழங்கும் திட்டத்தை, பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சியாம் நம் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) 45வது பிறந்த நாள் அன்று அறிவித்தேன். எங்குமே காணாத இவ்வரிய திட்டத்திற்கு மக்களின் மகத்தான வரவேற்பு நமக்கு மனநிறைவை அளிக்கிறது. எனவே, அதனை 9,000 வண்டிகள் என உயர்த்தித் தருவதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள் நம் தங்க மனத் தலைவியாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இத்தோடு ரூபாய் 51 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் 18 குதிரை விசைக்கும் குறைவான 170 சிறிய டிராக்டர்கள் ரூபாய் 30,000 மானியத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு இவ்வாண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ் பவர் டில்லர் பெற்ற விவசாயிகளுக்கு, சென்ற ஆண்டு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவித்தேன். 2,000 பவர் டில்லர் வழங்கப்படும் என்று சொன்னேன். இன்று வரை 1,850 பவர் டில்லர் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த பவர் டில்லர் பெற்றவர்களுக்கு 10,000 ரூபாய் மானிய விலையில் ரூபாய் 40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 400 டிரெயிலர்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல். வேளாண்மைத் துறை மூலம் நடத்தப்படும் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் வேளாண்மைத் துறையால் உற்பத்தி செய்யப்படும் விதைகளைச் சுத்திகரிப்பதற்கே போதுமானதாக உள்ளது. எனவே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகளைச் சுத்திகரித்து தரமான விதைகள் வழங்கவும், விதை உற்பத்தியை விவசாயிகளிடையே ஊக்குவிக்கவும், வேலையில்லா வேளாண் பட்டதாரிகளுக்கு அரசுடைமை வங்கிக் கடன் மான்யம் வழங்கி தனியார் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படும். இவ்வாண்டு ரூபாய் 10.50 இலட்சம் செலவில் 35 விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கும் ரூபாய் 30,000 உதவித் தொகையாக வள்ளல் குணம் கொண்ட நம்முடைய வாஞ்சை மிகு முதல்வர் அவர்கள் வழங்குகிறார்கள் மேசையைத தட்டும் ஒலி).

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1993 ஏப்ரல் 22

இலவச உர மினிகிட்டுகள் வழங்குதல் சிறு, குறு விவசாயிகளுக்கு முறையான சாகுபடிக்கு ரூபாய் 3.186 கோடி செலவில் நெல், மணிலா, சிறு தானியங்கள், பயிறு வகைகள், பருத்தி காய்கறி ஆகியவற்றிற்கு இலவச மினிகிட்டுகள் வழங்கப்படும். நெல்லுக்கு மினிகிட்டுகள் பிற மாவட்டங்களில் வழங்கப்படும். காவிரி டெல்டா பகுதியில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் சான்று பெற்ற விதை வாங்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச மினிகிட்டுகள் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும்.

வேளாண் உற்பத்திக்கு உயிரியல் தொழில் நுட்பங்கள், இவ்வாண்டு திருச்சி, ஆடுதுறை ஆகிய இரண்டு இடங்களில் இரண்டு உயிரியல் உர உற்பத்தி மையங்கள் அமைக்கப்படும். வேலையில்லா வேளாண் பட்டதாரிகள் மற்றும் முன்னோடி உழவர்கள் உயிரியல் உர உற்பத்தி மையம் அமைக்க முன் வந்தால் ரூபாய் 5 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படும். தொழில் முனைவோர் மூலம் 20 உயிரியல் உர உற்பத்தி மையம் அமைக்க உதவித் தொகை வழங்க ரூபாய் ஒரு கோடியை மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மண்ணில் உள்ள மணிசத்தை அதிக அளவு பயன்படுத்த தமிழகத்தில் தற்போது உள்ள உயிரியல் உர உற்பத்தி மையங்களில் பாஸ்டோ–பாக்டீரியா உற்பத்தி மையங்கள் அமைக்கப்படும்.
இதனால் 5 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள். தென்னை உரிமட்டைகள், கரும்புத் தோகை போன்ற பண்ணைக் கழிவுகளை இயற்கை உரமாக மாற்றிட பூஞ்சாணம் மற்றும் தொழில் நுட்பங்கள் சிறு, குறு விவசாயிகளுக்கு வழங்கி, உதவித் தொகையாக ரூ. 100 வழங்கப்படும்.

பிற்பகல் 6–45

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கள். சேமிப்பிலுள்ள தானியங்கள் பூச்சி தாக்கி, தரம் குறையாமல் இருக்க "மோகன் பொறிகள்" விவசாயிகளுக்கு மானிய விலையில் ஒரு ரூபாய்க்கு வழங்கப்படும். இதனைக் கண்டுபிடித்த விஞ்ஞானி டாக்டர் எம். மோகனுக்கு ரூ. 5,000 ரொக்கப் பரிசு, மாண்புமிகு இதய தெய்வம் வழங்குகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தஞ்சை மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்கள் இரண்டு அமைக்கப்படும்.

வண்ண மலர்கள் வண்டுகளை வாவென்று அழைப்பது போல், காந்தம் தன் சக்தியால் இரும்பை இழுப்பதுபோல், தாவர அழிவையே தன் தொழிலாய்க் கொண்டிருக்கும் தாய் அந்துப் பூச்சி

1993 ஏப்ரல் 22] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

களை, தன்பால் கவர்ந்திழுத்து அழிக்க, வேளாண் பெருமக்களுக்கு ரூ. 500 மானியத்தில் 10,000 பெட்ரோமாக்ஸ் விளக்குகள் இந்த ஆண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

விவசாயிகளின் பரிமாற்றத் திட்டம். முன்னோடி விவசாயிகளை இதர மாநிலங்களுக்கு அனுப்பி அந்தந்த மாநிலங்களில் செய்யப்படும் பயிர் சாகுபடி முறைகளைக் கண்டு, தமிழகத்திலும் இப்பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு 4,000 முன்னோடி விவசாயிகள் இவ்வாண்டு பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படுவர்.

விதை ஆய்வு மையங்கள் மற்றும் விதை பரிசோதனை மையங்கள். விதைச் சட்டத்தினை தமிழகத்தில் கடுமையாக அமல்படுத்தியதனால் ரூபாய் 15 கோடி மதிப்புள்ள தரங்குறைந்த விதைகள், விவசாயிகளுக்கு விற்பனை செய்வது தடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தரமான விதைகள் விநியோகம் செய்யப்பட வேண்டுமென்ற நோக்கத்தில் ரூ. 32.98 இலட்சம் செலவில் சேலம் மற்றும் விருதுநகரில் இரண்டு விதை ஆய்வு மையங்களும், ரூ. 27.20 இலட்சம் செலவில் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் ஒரு விதைப் பரிசோதனை நிலையமும் நிறுவப்படும்.

பாசனத்திற்கு சமுதாயக் கிணறுகள் அமைத்தல். தனிக் கிணறு வெட்டி, செலவு செய்ய தகவில்லா விவசாயிகளுக்கு சமுதாயக் கிணறு வெட்டி பாசன வசதி செய்யும் இத்திட்டத்தின் கீழ், இவ்வாண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் 257 இலட்சம் ரூபாய் செலவில் 58 புதிய சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படும். இவை, ஆவுடையார் கோவில், அரிமலம், கரம்பக்குடி, கந்தர்வக் கோட்டை, திருவரங்குளம், புதுக்கோட்டை ஆகிய வட்டங்களில் அமையும். 580 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற வாடிய பயிருக்கு வான்மழை வேண்டும்; வானம் பார்த்த பூமியும், வளம்கொள்ள வேண்டுமென வாரி வழங்கியுள்ளார் நம் வண்டமிழ் நாட்டின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

காமராஜர், பசும்பொன் தேவர் திருமகனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஏராளமான விளை நிலங்கள் பாழ்பட்டு தரிசு நிலங்களாக உள்ளன. டென்மார்க் அரசின் உதவியுடன் தாவர அரண்கள் உருவாக்கப்பட்டு, ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து, பாசன வசதி செய்யப்படும். 11,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் 12.82 கோடி செலவில் $5\frac{1}{2}$ ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டிய திட்டம், இவ்வாண்டு தொடங்கப்பட உள்ளது.

தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டம். இத்திட்டத்தின் கீழ் சிறுபாசனம், நில மேம்பாடு, சிறுதளை பைகள் வழங்குதல் ஆகிய பணிகள் 1993–94 ஆம் ஆண்டு ரூபாய் 598.182 இலட்சம் செலவில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும். இதனால் சிறு, குறு விவசாயிகள் பயனடைவார்கள்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

நுண்ணூட்டச்சத்துக் குறைவாக உள்ள நிலங்களை சீர் செய்யும் திட்டம்—ஏழைக் குழந்தைக்கு ஊட்டம் கொடுக்க சத்துணவுத் திட்டம் தந்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நம் புரட்சித் தலைவி அவர்கள், உழவர்கள் ஊட்டம் பெற்று இருக்க வேண்டுமென்றால் நிலம் ஊட்டம் பெற்றதாக இருக்க வேண்டுமென்று சத்துக்கள் குறைந்த மண் ஊட்டம் பெற நுண்ணூட்டச் சத்து வழங்கும் திட்டத்தை வழங்குகிறார்கள். இதன் கீழ் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, வட ஆற்காடு அம்பேத்கார், மதுரை, பெரியார், காமராஜர், பசும்பொன், நீலகிரி, தஞ்சை மாவட்டங்கள் பயன்பெறும்.

உவர்நில மேம்பாட்டுத் திட்டம்—உப்பு நிலமாய், ஊரார் வெறுக்கும் பூமியாய் இருக்கும் களர் மற்றும் உவர் நிலங்கள், பசுமை குலுங்கும் பசுஞ் சோலையாய் மாற்றுதற்கோர் முன்னோடித் திட்டம். இத்திட்டம் இவ்வாண்டு முதலில் மணிகண்டம் ஒன்றியத்தில் ரூபாய் ஒரு கோடி செலவில் மூன்று ஆண்டு கால அளவில் செய்து முடிக்கப்படும்.

இயற்கையோடு இரண்டறக் கலந்த மலர்கள், மலராடை கட்டிய மரங்கள், பச்சைக் காய்கறிகள்—கதலி வாழை—கனிகள், மஞ்சள்-இஞ்சி மற்றும் பக்குவமாய் வெட்டிவிடப்பட்ட பசும்புல் வெளிகள், கண்ணைக் கவர எத்தனிக்கும் கவின்மிகு நிலைகள், இவைதான் நம்முன் தோட்டக்கலை என்றவுடன் துரிதமாய் வந்து நிற்கும். இவற்றுக்கும் மேலாக வற்றாத பெரும் பொருளை வளமாகக் கொணர்ந்து சேர்க்கும் வாய்க்காலே தோட்டக்கலை.

பிற்பகல் 6.50

இதை உணர்ந்து, ஏற்றம் பெற்றார் உழவர் வாழ்வில் எனும் நிலைமை இனிக் கொணர தோட்டக்கலை வளர்க்க துரிதமாய் இறங்கி, நல் ஆக்கம் விளைவிக்கின்ற அரிய திட்டங்களை அள்ளிக் கொடுத்துள்ளார்கள் நம் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையை தட்டும் ஒலி).

தோட்டக்கலை பயிர் விளைச்சல் போட்டி. போட்டி என்றாலே நாட்டில் பொறாமை எழும். பூசல் வரும். பொல்லாங்கு நேரிடும். ஆனால் பயிர் விளைச்சல் போட்டியிலே விளைச்சல் பெருகும், வேகம் அதிகரிக்கும் ; நல் விளைவுகள் பல நிகழும். தோற்றவர் கூடத் தொடர்ந்து முன்னேறி தம் ஆற்றலைக் காட்ட அனுதினமும் பாடுபடுவர். எனவே, முதன் முதலாக தோட்டக்கலைப் பயிர்களான மா, திராட்சை, தக்காளி, மிளகாய், வெங்காயம், மஞ்சள், மரவள்ளி, தேயிலை, காப்பி பயிர்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலும், முட்டைக்

1993 ஏப்ரல் 22] [திரு. கு.ப. கிருஷ்ணன்]

கோஸ், காலிபிளவருக்கு மாவட்ட அளவிலும் உயர் விளைச்சல் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கத் துறைதோறும் சிறக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டு உள்ளார்கள்.

தமிழ் நாட்டில் வெங்காய உற்பத்தி பெருக்குத் திட்டம். தன் காயம் தான் வருத்தி தரணி காக்கும் நம் உழவன் வெங்காயம் பயிர் செய்து வெறுங்கையாய் நிற்கலாமா? ஏற்றுமதி வாய்ப்புக் கொண்ட வெங்காய ரகங்களை, வேளாண்மை வளர்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்போடு, விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி, திண்டுக்கல் அண்ணா, திருச்சி, கோவை மற்றும் சேலம் மாவட்டங்களில் செயலாக்கப்படும். இதன் மூலம் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதிக்கு வழி வகுத்து அதிக வரவு பெற வழி செய்யப்படும். விலைகள் சீராக இருக்க தேசிய வேளாண் கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு தோட்டக்கலை விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம். பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தியாளருக்கு நியாயமான விற்பனை விலை கிடைக்கச் செய்யவும் அதிக உற்பத்திக் காலங்களில் சேதம் மற்றும் விலை வீழ்ச்சியை தவிர்க்கவும், குளிர்சாதன சேமிப்பு வசதிகள் செய்யவும் முக்கிய நகரங்களில் சில்லறை அங்காடிகள் அமைக்கவும் தமிழ்நாடு தோட்டக்கலை விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் என்ற அமைப்பு நிறுவப்படும். இதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நா.சா. பழனிசாமி அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீவிர காய்கறி அபிவிருத்தித் திட்டம். இத்திட்டத்தின் கீழ் தீவிர காய்கறி சாகுபடிக்கு விவசாயிகளுக்கு மான்ய விலையில் சான்று பெற்ற காய்கறி விதைகள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்படும். இது செங்கை-எம்.ஜி.ஆர் திண்டுக்கல் அண்ணா, கோவை, ஆகிய மாவட்டங்களில் 500 ஹெக்டேர் புதிய பரப்பளவில் செயலாக்கப்படும்.

ரூபாய் பத்து இலட்சம் செலவில் புதிய வீரிய ஒட்டு ரகச் சான்று விதைகள் பயிர் பாதுகாப்பு மருந்துகள் கொண்ட 13,000 மினி கிட்டுகள் வழங்கப்படும். காய்கறி மகசூலை அதிகரிக்க நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் சிறு குறு விவசாயிகளுக்கு ரூபாய் 30 இலட்சம் செலவில் உரம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் அடங்கிய 15,000 மினி கிட்டுகள் வழங்கப்படும். கட்டுப்படுத்தப்பட்ட வெப்பம், ஈரப்பதம் மூலம் காய்கறி மகசூலை அதிகரிக்க இவ்வாண்டு ரூபாய் 20 இலட்சம் செலவில் ஐம்பது சதம் மானியத்துடன் இருபது பாலித்தீன் பசுமைக் குடில்கள் அமைக்கப்படும்.

காளான் அபிவிருத்தித் திட்டம். உலர் காளான் உற்பத்தியை அதிகரிக்கவும், மக்களிடையே உணவுக் காளானை பிரபலப் படுத்தவும் இவ்வாண்டு ரூபாய் 29.50 இலட்சம் செலவில் இத் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்காக, காளான் விதை உற்பத்தி நிலையம் ஒன்றும், நுண்கிருமி நீக்கும் தளம் உற்பத்தி நிலையம் ஒன்றும் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் நிறுவப் படும். இது எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுவதும் ரூபாய் 69 இலட்சத்தில் செயலாக்கப்படும்.

புதிய ஆராய்ச்சி மையங்கள்-சட்ட முன் வடிவுகள். எண்ணெய் பனை ஆராய்ச்சி. ''குட்டைப் பனைமரம் ஒன்றும் குழல் சரிந்ததோர் ஈந்தும் மட்டைக் கரங்கள் பிணை இன்ப வார்த்தைகள் பேசிடும் போது கட்டுக் கடங்காச் சிரிப்பை தென்னை கல கல என நல்கிடும்'' என காதல் நாடகமாக்கினார் பாவேந்தர் பாரதிதாசன். இக்குலவும் கோலம் தமிழகத்தில் மலிந்திட வேண்டுமென புரட்சித் தலைவி அவர்கள் தென்னை நிறைந்தாடும் ஆடுதுறையில் எண்ணெய்ப் பனை ஆராய்ச்சி மையம் நிறுவவும் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6-55

பனை ஆராய்ச்சி நிலையம். இந்திய நாட்டில் உள்ள பனை மரங்களில் 60 சதவீதம் தமிழகத்தில் உள்ளது. பனை மரங் களின் வளர்ச்சி அம்மரத்தின் பயன்கள், பயனால் வாழ்வுறும் மக்கள் ஆகியோரின் நலம் பெருகும் வகையில், ''யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே'' என்பது போல், வாரியம் வரும் பின்னே, ஆராய்ச்சி வருகிறது முன்னே; பனை மரத்துக்கென்று தனி ஆராய்ச்சி நிலையம் ஒன்று இந்தியாவிலேயே முதன் முறையாக, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நிறுவுவதற்கு சூடிக் கொடுத்த சுடர் கொடியாம் எங்கள் சுந்திரத் தலைவி அவர்கள் இன்று ஆணை வழங்கியுள்ளார்.

சட்ட முன் வடிவுகள். திட்டங்கள் தீட்டுவதும், சிறப்பாக செயல்படுவதும் சட்டங்களால்தான். சட்டங்கள் இல்லை யென்றால் திட்டங்கள் யாவும் நட்டங்களே. வேளாண் துறை யில் பல புதிய திட்டங்களைக் கூறி அவற்றை நடைமுறைப் படுத்த பல சட்டங்களை செய்துள்ளோம். முதலாவதாக எண்ணெய்ப் பனை சட்டம். தமிழகத்தில் எண்ணெய்ப் பனை உற்பத்தியை முறைப்படுத்தி மேம்படுத்த இந்தச் சட்டம்கொண்டு வரப்படுகிறது. எண்ணெய்ப் பனை பிழியும் மற்றும் சுத்திகரிப்பு ஆலையுடன் விவசாயிகளை இணைத்து விவசாயிகளுக்கு நியாய மான விலை கிடைக்கவும் எண்ணெய்ப் பனை உற்பத்தியை ஊக்கத்துடன் மேற் கொள்ளவும் வழி வகை செய்ய இச்சட்ட முன்வடிவு கொண்டுவரப்படும்.

1993 ஏப்ரல் 22] [திரு. கு.ப. கிருஷ்ணன்]

தனியார் மற்றும் பொதுத் துறை நாற்றுப் பண்ணைகள் பதிவு செய்யும் திட்டம். அதிகரித்து வரும் பழம் மற்றும் இதர செடிகளின் தேவைகளை பூர்த்தி செய்யவும், செடிகளின் தரத்தை மேம்படுத்தவும் 1993–94 ஆம் ஆண்டில் நாற்றுப் பண்ணைகள் பதிவு செய்யும் சட்டமுன் வடிவு கொண்டுவரப் படும்.

•

தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1987-ல் திருத்தங்கள் செய்தல். விவசாயிகளும் வியாபாரிகளும் பயனடையும் வகையில், தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் (ஒழுங்கு படுத்துதல்) சட்டம் 1987-ன் கீழ்க் கண்ட திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

1. வியாபாரிகளுக்கு முன் அனுமதிச் சீட்டு வழங்குதல்,

2. வியாபாரிகளுக்கு மாநில மற்றும் பிராந்திய அளவில் உரிமங்கள் வழங்குதல்.

3. அனுமதிச் சீட்டின்றி எடுத்துச் செல்லக் கூடிய விளை பொருள் அளவை நிர்ணயித்தல்.

4. வெளி இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட விளை பொருட்கள் பதனிடும் கால அளவை 30 நாட்களிலிருந்து 60 நாட்களாக நீட்டித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

நிலக்கடலை, எள் ஆகிய விளைபொருளை தமிழ்நாடு முழுவதற்கும் அறிக்கையிடுதல். தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987-படி ஒரு விற் பனைக் குழுப் பகுதியில் அறிக்கையிடப்பட்டுள்ள விளைபொருளை அறிக்கை இடப்படாத மற்ற விற்பனைக் குழுப் பகுதிகளுக்கு விற்பனைக் கட்டணம் செலுத்தாமல் எடுத்துச் செல்ல வாய்ப்பு உள்ளது. இதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் விளைவிக்கப் படும் விளைபொருளான நிலக்கடலை, எள் ஆகிய இரண்டு விளைபொருள்களும் தமிழ்நாடு முழுமைக்கும் அறிக்கையிடப் படும். இதற்கான சட்டமுன்வடிவு கொண்டு வரப்படும். நிலக் கடலை, எள் ஆகியவை விற்பனைக் கட்டணம் செலுத்தாமல் அண்டை மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதைத் தடுக்க தமிழக எல்லைச் சோதனைச் சாவடிகள் தீவிரமாகக் கண்காணிக்கப்படும். அவ்வாறு நிலக்கடலை, எள் ஆகியவற்றை எடுத்துச் சென்றால் விற்பனைக் கட்டணத்துடன் 100 சதவீதம் அபராதத் தொகை யும் சேர்த்து வசூலிக்கப்படும். மேற்கூறிய 4 சட்டமுன்வடிவுகள் இவ்வாண்டு கொண்டு வரப்படவுள்ளன. ஒழுங்கு முறை விற்பனைக் கூடம். வானம் பொழியுது, பூமி விளையுது, தம்பிப் பயலே, ஆனா தானியமெல்லாம் வலுத்தவனுடைய கையிலே

இது மாறுவதெப்போ, தீருவதெப்போ நம்ம கவலை—என்று பாடினார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இந்த நிலை மாற வேண்டும். உழவர் தம் கவலை தீர வேண்டும். வேளாண் உற்பத்திப் பொருள்களின் விலையை விவசாயியே நிர்ணயிக்கும் நிலை வரவேண்டும் என்ற உயரிய நோக்கோடு ஆரம்பிக்கப் பட்டது ஒழுங்குமுறை விற்பனைக் கூடம். இதன் செயல்பாடு களை மேம்படுத்தி விவசாயிகளும், வியாபாரிகளும் விரும்பி வரும் வண்ணம், அதற்குக் கூடுதல் உள்ளமைப்பு வசதிகளை ஏற் படுத்த நாட்டுக்குத் தொண்டு நமக்கு மகிழ்ச்சி எனச் செயல்பட்டு வரும் நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி, லாபகரமாக இயங்கும் சில ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் முன்னோடித் திட்டமாக, விவசாயிகளின் விளைபொருட்களை துல்லியமாகவும், விரை வாகவும் எடைபோட மின் அணு எடைத் தராசுகள் அமைத்தல், உள்நாட்டு, வெளிநாட்டு தொடர்பு வசதியுடன் கூடிய கட்டணத் தொலைபேசிகள் அமைத்தல், விவசாயிகள் விளை பொருள்களை சுலபமாக விற்பனைக்கு எடுத்துச் செல்ல கிராமியச் சாலைகளை மேம்படுத்துதல், விவசாயிகள், வியாபாரிகள் பயன்பெறும் வகையில் அன்றாட அங்காடி விலை விபரங்களை முக்கிய வியாபார இடங்களுடன் கம்ப்யூட்டர் மூலம் இணைத்து, அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் தெரிவித்தல் மற்றும் அறிவித்தல், குளிர்ந்த குடிநீர் வசதி செய்தல், வணிகமுறை தரம் பிரிப்பு வசதிகளான நிலக்கடலை எண்ணெய் அளவு கண்டுபிடிக்கும் கருவி (ஸ்பெக்ட்ரோ மீட்டர்) ஈரப்பதம் கண்டுபிடிக்கும் கருவி போன்ற துல்லியமான கருவிகள் அமைத் தல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

முறையான குடிநீர் வசதி இல்லாத மதுராந்தகம், ஆரணி, சேத்துப்பட்டு, விக்ரவாண்டி, அவலூர்பேட்டை, தஞ்சாவூர், குத்தாலம், கும்பகோணம், அரியலூர், தேனி, பரமக்குடி ஆகிய 11 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 7-00

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: நேரம் போவதே தெரி யாமல் உங்கள் கவியில் அவை ஆழ்ந்திருக்கிறது. எனவே தாங்கள் தான் நேரத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே வாழ்கிற மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர் நம்பி இருக்கக்கூடிய தொழில் வேளாண்மை. எனவே இதற்கு முன்னுரிமை தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள் கிறேன்.

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நான் நினைவுபடுத்தினேன். அவை நேரம் போவது தெரியாமல் லயித்து இருக்கிறது. நீங்கள் ஒருவராவது நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : ஒய்வுக் கூடங்கள் அமைத்துத் தருதல். ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் விளைபொருளை விற்பனை செய்யவரும் விவசாயிகளும், வாங்க வரும் வியாபாரிகளும், ஓய்வெடுக்கவும், தேவைப்பட்டால் இரவு தங்கவும், மதுராந்தகம், போளூர், செய்யார், கலவை, விக்ரவாண்டி, அரியலூர், இராமநாதபுரம், போச்சம்பள்ளி, வடசேரி, அவல்பூந்துறை, கொடுமுடி, புஞ்சைப்புளியம்பட்டி ஆகிய இடங்களிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஓய்வுக் கூடங்கள் மொத்தம் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமி, நாளைக்கும் நீங்கள் தட்டுவதற்கு வேண்டும்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : இந்த ஓய்வுக் கூடங்களில் தேவையான கட்டில், தலையணைகளுடன் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வைத்து வேளாண் விற்பனை விரிவாக்கம், கால்நடை பற்றிய திரைப்படங்கள் காட்டப்படும்.

பொங்கலூர், மடத்துக்குளம், பெத்தம்பட்டி, விருதுநகர், அருப்புக்கோட்டை, கமுதி, பரமக்குடி, ஆர். எஸ். மங்கலம், மானாமதுரை, வடசேரி, திங்கள் சந்தை ஆகிய 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ. 5.5 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

வரத்துக் குறைவாக உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் முன்னோடித் திட்டங்கள். வரத்துக் குறைவாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கு, விற்கும் நாட்களில் ஒரு நாளைக்கு ரூ. 5 வீதம் சிற்றுண்டி உதவித் தொகையாகவும், வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படும் மார்க்கெட் கட்டணத்தில் 10 சதவீதம் விவசாயிக்கு வழங்கப்படும். விவசாயிக்கு ரூ. 100-க்கு மிகாமல் இருக்கும். இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 10 கூடங்களில் வியாபாரிகளின் வருகையை அதிகரிக்க விவசாயிகளுக்கு நல்ல போட்டி விலை கிடைக்க வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படும் ரூ. 100-க்கு 1 ரூபாய் என்ற விற்பனைக் கட்டணத்தில் 20 சதவிகிதம் சலுகையாக வியாபாரிக்குத் திருப்பித் தரப்படும்.

[திரு. கு.ப. கிருஷ்ணன்] [1993 ஏப்ரல் 22

பொருள் ஈட்டுக் கடன் வசதிகளை விரிவுபடுத்துதல். தமிழகத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஊரகக் கிட்டங்கி வசதியுள்ள 97 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களோடு மற்ற கிட்டங்கி வசதியுள்ள மேலும் 39 கூடங்களுக்கு ஈட்டுக்கடன் வசதித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு விவசாயிகள் விளைபொருட்களை இருப்பு வைத்து அவசரத் தேவைக்கு அதிகபட்சமாக ரூ. 10,000 வரை குறைந்த வட்டியில் ஈட்டுக்கடன் பெற வசதி செய்யப்படும்.

கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண் புரட்சிப் பூபாளம், வெற்றிக்கனி நிரந்தரமாய்த் தங்கும் எங்கள் புதுமைத்தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) உணவு உற்பத்தியோடு, உழவர்தம் வாழ்க்கைத் தரம் உயர, உன்னதத் திட்டங்களை வழங்கி வருகிறார். உழவர் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் வேளாண் தொழிலோடு, கால்நடை பராமரிப்பும், இணைந்தால்தான் அவர்களுக்கு நிரந்தர பொருளாதார மேம்பாடு கிடைக்கும் என்று அறிந்தவர் நம் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். மனித குலம் ஒன்றுபட்டு வாழ, மார்க்கம் பல சொன்ன மதத் தலைவரெல்லாம் மக்களினத்தைப் பற்றிய சிந்தனையை மட்டுமே முன்னிறுத்திப் பதிய வைத்தார்கள். ஆழி சூழ் அவனிக்கு அறம் கூறிய வள்ளுவனும், வள்ளலாரும், மக்கள் கூட்டத்தை நெறிப்படுத்தியதோடு, பிற உயிர்களைப் பற்றியும் பெரிதாகச் சிந்தித்தார்கள். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார் பேரறிவாளர் வள்ளுவப் பெருந்தகை. 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணல் வேண்டும்' என்றார் வள்ளலார். அவர்கள் போல் தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்ற தூய உள்ளம், தொண்டு உள்ளம் கொண்டிருக்கக்கூடிய தாயுள்ளத் தலைவி, காவியத் தலைவியாய் காலமும் விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஆவலாய் பொது வாழ்வில் தன் அடி வைத்த புரட்சித்தலைவி அவர்கள் சேவலே என்றார். சிறப்பினை என்றும் பெற்றார். பொங்கிவரும் கருணைப் புலனாய் பிற உயிரும் தம்முயிர் போல் பேணும் நிலை இனி கொணர, சிந்தித்தார். செயல் படுத்த பெரும் திட்டம் தருகின்றார்.

பிற்பகல் 7–05

செயற்கைமுறைக் கருத்தரிப்பு விரிவுபடுத்தும் திட்டம், பழமையோடு புதுமை சேர்க்க பார்ரது சிறக்கும் என்பார். கால்நடைப் பெருக்கத்திற்காக பசுக்கள் மற்றும் எருமைகளில் செயற்கை முறை கருத்தரிப்பு செய்ய உறை விந்து தொழில் நுணுக்கம் மாநிலத்தில் அனைத்து செயற்கைமுறை கருத்தரிப்பு

1993 ஏப்ரல் 22] [திரு. கு.ப. கிருஷ்ணன்]

நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். உலக வங்கி நிதியுதவியுடன் கால்நடை பெருக்கத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தில் அனைத்து பசுக்களுக்கும், எருமைகளுக்கும் உறைவிந்து மூலம் இனப் பெருக்கம் செய்யப்படும்.

கிடேரிக் கன்றுகள் தத்தெடுப்புத் திட்டம், உயிருள்ள ஜீவனானாலும் உயிரற்ற பொருளானாலும் ''பாராமரிப்பு இல்லை'' என்ற சொல் தமிழகத்தில் இருக்கக் கூடாது என்று பல்வேறு புதிய திட்டங்களை வழங்கி வரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் 45—வது பிறந்த நாளை குறிக்கும் வகையில் கால்நடைத்துறையின் மூலம் 45,000 கலப்பினக் கிடேரிக் கன்றுகள் தத்தெடுக்கப்படும். தத்தெடுக்கப்படும் ஒவ்வொரு கன்றின் முழுமையான வளர்ச்சி, துரிதமாகப் பருவமடைதல், அதிகமான பால் உற்பத்தி பெறுதல் ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்தி தேவையான அனைத்து நலம் பேணும் வசதிகளும் அளிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கன்றுக்கும் அதனுடைய முன்னேற்றத்தினை பதிவு செய்ய ஒவ்வொரு அடையாள அட்டை வழங்கப்படும்.

கோகுலத்தில் பசுக்களைக் காக்க பாலகனாம் கிருஷ்ணனை வளர்த்தார் யசோதை. கோலமிகு தமிழகத்தில் கோலோச்சும் நம் தலைவி தத்தெடுக்கப்பட்ட கன்றுகளை கால்நடை மருத்துவர்களிடையே இவ்வளவு என்று பிரித்து வழங்கி, அதனைப் பராமரிக்கும் பொறுப்பைக் கொடுத்து, சிறந்த முறையில் இக் கன்றுகளை பராமரித்து நல்ல பலனுக்குக் கொண்டு வரும் மருத்துவர்களை, தாங்கள் விரும்பிய இடங்களில் பணியமர்த்தி, அவர்களில் சாதனை படைத்தோருக்கு டாக்டர் புரட்சித் தலைவி முதல் பரிசாக 2 பவுன் தங்கப்பதக்கமும் (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது பரிசாக 1 பவுன் தங்கப் பதக்கமும் மூன்றாவது பரிசாக வெள்ளிப்பதக்கமும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

கறவை மாடுகள் பெறும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை பெற்ற செல்வம் பேணிக் காக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கோடும் கால்நடை பெருக்கத் திட்டத்தை தீவிரப் படுத்தவும் அரசின் நலத் திட்டங்களில் கறவை மாடுகள் பெற்றுப் பயன்பெறும் விவசாயிகள் அனைவருக்கும் தனித்தனி அடையாள அட்டைகள் வழங்கி பராமரிப்பு கண்காணிக்கப்படும். இதன் மூலம் கால்நடைகளுக்கு தொடர்ந்து நடைபெறும் காதணி விழா முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

இலவச செயற்கைமுறை கருவூட்டல் திட்டம், பாமர மக்கள் படிப்பறிவில்லாதோர் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளோர்க்கு அயராது உழைக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இவ்வாண்டு 3,000 பழங்குடி மக்கள் குடும்பங்களின் பசு மற்றும் எருமைகளுக்கு உறைவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டலை இலவசமாகச் செய்து தர ஆணையிட்டுள்ளார்கள்.

கோழி நோய்ப் புலனாய்வு ஆய்வகம். இயற்கையின் திடீர் சிலிர்ப்புகளால் கோழிச் செல்வம் அழியக்கூடாது என்று கோழியும் குஞ்சும் வாழிய என்று கோழி நோய்ப் புலனாய்வு ஆய்வகம் ஒன்றை சேலம் மாவட்டம் ஆண்டலூர் கேட்டில் திறக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இரவு–பகல் சிறப்பு மருத்துவமனை அமைத்தல், நோய் மற்றும் விபத்துக்களால் பாதிக்கப்படும் கால்நடைகள் அகால நேரத்திலும் அனைத்து சிகிச்சைகளும் பெறவேண்டும் என அன்பின் வடிவம் நம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்னை சைதாப்பேட்டையிலுள்ள கால்நடை பெருமருத்துவமனையை இரவு–பகல் சிகிச்சையளிக்கும் சிறப்பு மருத்துவமனையாக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதற்கு ரூபாய் 7.80 லட்சம் செலவு செய்யப்படும்.

கால்நடை மருத்துவமனைகளை பெரு மருத்துவ மனைகளாக்கும் திட்டம். சிறந்த கால்நடை பராமரிப்புக்காக 1993–94 ஆம் ஆண்டில் மூன்று கால்நடை மருத்துவ மனைகள் ரூ. 11.19 லட்சம் செலவில் கால்நடை பெரு மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.

கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அமைத்தல், கன்றைக் கொன்றான் இளவரசன் வீதிவிடங்கன், கன்றை இழந்த தாய்ப் பசு கதறி அடித்தது ஆராய்ச்சி மணி. அத்தாணி மண்டபம் கூட்டப்பட்டது. அரசன் அரியணையில் அமர்ந்து நீதி கூறினான். ''கன்றை இழந்து தவிக்கும் தாய்ப்பசு போன்று மகனை இழந்து நான் தவிக்க வேண்டும்'' இதுதான் தீர்ப்பு. தீர்ப்பு நல்கிய மனுநீதிச் சோழன் ஆண்ட ''இந்தச் சோழ மண்டலம் எனக்குச் சொந்தம்'' என்று நாகை–காயிதே மில்லத் மாவட்ட துவக்க விழாவில் அறைகூவல் விட்டார்கள் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். அத்தகைய நீதிவழுவா இன்றைய ஆட்சியில் தெருக்குப் பதில் நோய் தாக்கி கன்றுகள் சாகின்றன. தாய்ப்பசுக்கள் துன்புறுகின்றன. அதனைப் போக்க, ''நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்'' என்பதற்கிணங்க கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை புலனாய்வு செய்து கண்டுபிடித்து விவசாயிகள் பயனடையும் வகையில் 1993–94 ம் ஆண்டில் பெரியார் மாவட்டம் ஈரோட்டில் ''கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு'' ரூ. 12.47 லட்சம் செலவில் நிறுவப்பட உள்ளது.

1993 ஏப்ரல் 22] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

பிற்பகல் 7.10

வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம். கோடை வந்தால் கொடைக்கானல் குற்றாலம் என குளு குளு இடங்களை தேடி குடும்பமாய் மனிதர் செல்வர். கால்நடைகள் எங்கு செல்லும்? வெம்மையின் கொடுமை தாளாமல் வெக்கை நோயால் அவதிப்படும் கால்நடைகளுக்கு ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் நிதி உதவியுடன் 1993–1994 ஆம் ஆண்டில் ரூ. 200 இலட்சம் செலவில் தேசிய அளவிலான வெக்கை நோய் ஒழிப்புத்திட்டம் செயல்படுத்தப்படும்.

குளிர்சாதன ஊர்திகளில் தடுப்பு ஊசி மருந்துகள் அனுப்பும் திட்டம். கால விரயத்தைத் தவிர்க்கவும், வெக்கை நோய்த் தடுப்பு ஊசி மருந்துகள் பாதுகாப்பாக, வீரியம் குறையாமல் காலத்தே மாநிலம் முழுவதும் கிடைக்கச் செய்யவும், இராணிப் பேட்டை தடுப்பு ஊசி மருத்துவ நிலையத்திலிருந்து வெக்கை நோய்த் தடுப்பு ஊசி மருந்துகள் குளிர்சாதனக் குடுவைகளில் அடைக்கப்பட்டு காப்பிடப்பட்ட குளிர்சாதன ஊர்திகள் மூலம் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். இத் தகைய முறை இந்தியத் திருநாட்டிலே முதன் முறையாக நம் தமிழகத்தில்தான் கொள்கை மாறா டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அறிமுகப்படுத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

கால்நடை கருமாற்ற ஆய்வகம் அமைக்கும் திட்டம். கால் நடை இனப் பெருக்க மேம்பாட்டிற்கும் வீரிய கலப்பின கால் நடைகள் அதிக அளவில் உருவாகவும் ஓசூர் மாவட்டம் கால் நடைப் பண்ணையில் கால் நடைகளின் கருமாற்றம் செய்ய ஆய்வகம் ஒன்று நிறுவப்பட்டு மிகச் சிறந்த பசுக்களின் கரு மாற்றம் மேற்கொள்ளப்படும்.

கால்நடைத் தீவனங்களில் கலப்பட தடுப்புச் சட்டம். வாடும் பயிர் வாடுவதைத் தடுக்க உரம் செய்து நீருட்டுவான் உழவன், அந்த உரத்திலும் கலப்படம் செய்கின்ற உன்மத்தர்கள் போல் அம்மா என்று அழகு தமிழை அள்ளிக்கொட்டும் ஆடுமாடுகள் உண்ணும் உணவிலும் கலப்படம் செய்கிறார்கள். ஒல்லுமா அவர்கள் வாழ்வு? ''கெஞ்சினால் தரமாட்டாய் வெண்ணிலாவே, நீர் கேட்காமல் பறித்துவிடு வெண்ணிலாவே, அஞ்சிடத் தேவையில்லை வெண்ணிலாவே, இது அவர் தந்த பாடமடி வெண்ணிலாவே'' என்று பாட்டுக்கோட்டையாம் பட்டுக்கோட்டை பாடினார். அஞ்சிடத் தேவையில்லை, இது நம் அம்மா தந்த பாடம். கால்நடைத் தீவனங்களில் கலப்படம் செய்வோரை கொட்டமடக்க தீவனங்களின் தரம் உயர 1993-94 ஆம் ஆண்டில் சட்டம் இயற்றி அமல் நடத்தப்படும்.

நாட்டுக் கோழி இனப் பெருக்கத் திட்டம். அருகிவரும் கோழியினம் காத்தல் வேண்டும். அளப்பரிய கோழிச் செல்வம் பெருக வேண்டும். எளிதில் மக்கள் பெறும் வகையில் ஆக்கல் வேண்டும். ஏழை மக்கள் வாழ்க்கை பெறச் செய்தல் வேண்டும் என்ற உயரிய நோக்கோடு நாட்டுக் கோழி இனத்தைப் பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு உயரின நாட்டுக்கோழிகள் காட்டுப்பாக்கம் பண்ணையிலிருந்து வழங்கப்படும்.

அகில இந்திய கால் நடைக்கண்காட்சி. பகைப் புலத்தோர் கண்டு பதறிப் போகின்ற செயலாண்மை கொண்ட திராவிடத்தின் திருவிளக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல் ஆசியுடன் அவர்களின் ஆலோசனையின்பேரில் எதிர்வரும் ஜூலைத் திங்களில் சென்னையில் கால்நடை ஆர்வலர் களிக்குமாறு இந்தியத் திருநாடே வியக்குமாறு அனைத்து மாநில கால் நடைகளும் கலந்து கொள்ளும் கால்நடை நூற்றாண்டு விழாவும், ''அகில இந்திய கால்நடைகள் கண்காட்சியும்'' சிறப்பாக இவ்வாண்டு நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

பேரவைத் தலைவர் அவர்களே, குயில் கூவிக் கொண்டிருக்கும், கோலம் மிகுந்த மயில் ஆடிக் கொண்டிருக்கும், வாசம் உடைய நற்காற்று குளிர்ந்தடிக்கும், கண்ணாடி போன்ற நீர் ஊற்றுக்கள் உண்டு. கனிமங்கள் மிக உண்டு, பூக்கள் மணம் கமழும் பூக்கள் தோறும் சென்று தேனீக்கள் பாட்டிசைக்கும் எனப் பாடிய பாவேந்தன் பாரதிதாசன் வரிகளின் வண்ணப் படப்பிடிப்பு தான் வேளாண் துறையும், கால்நடைத் துறையும். கைப்பு நிலத்தையும் செப்பனிட்டுப் பயிர்காத்துக் கதிர் வளர்த்தோர், அவன் கண்ட பலனைப் பறிக்கொடுத்து நின்று கண்ணீர் வடிப்பதைக் கண்டு மனம் கொதித்து அதனைச் சீராக்கத் திட்டங்கள் பல தந்துள்ளோம். ஏரோட்டும் ஏழை உழவன் இதயம் குமுறினால் போராட்டமே எழுமே, என் பதை கண்டு தெளிந்ததால் சீராட்டும் செயல் திட்டங்கள் புரட்சித் தலைவி அரசின் சிந்தனை வெளிப்பாடுகளாயின.

வாழை நிலைக்குது, சோலை தழைக்குது, ஏழைகளுக்கு அதில் என்ன கிடைக்குது ? என்கிற நிலைமையை மாற்றி உழுதவன் உண்மை நிலை உணர்ந்து, உற்பத்தியைப் பெருக்க உயர் விளைச்சல் போட்டியும், மானிய உரங்களும், மேம்படுத்தபட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களையும் உவப்புடன் அளிக்கிறது, காவியத் தாயின் அரசு.

பொறுப்புடன் உழைத்து உழைத்து வெறுப்படைந்திருப்பவன் ஏழை உழவன். வரப்பெடுத்து வயல் அமைத்து வானம் பார்த்து நிற்பவன் அவன் என்ற இழிநிலையைக் கிள்ளி எறிந்து, வயலுக்கு நுண்ணூட்டச் சத்தும், ஆழ் குழாய்க் கிணறுகளும் என அள்ளித் தருகிறது ஆழி சூழ் பாரதத்தில் எவராலும் அசைத்துக் கூடப் பார்க்க முடியாத எங்கள் ஆருயிர் அன்னை அரசு. (மேசையைத் தட்டும் ஒலி).

1993 ஏப்ரல் 22] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

பிற்பகல் 7.15

செந்நெல் வயல்கள்
செங்கரும்புத தோட்டங்கள்
தின்னக் கனிகள்
தெவிட்டாப்பயன்மரங்கள்

என்று தமிழகம்
தரணிக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ வேண்டும்
என்ற தள்ளா வேட்கையுடன்
எல்லாப் பலன்களும் ஏற்றமுடன் பெறவேண்டும்
அவர்கள் வாழ்வு போற்றும்படி அமைய வேண்டும்
என்பதற்காக
எத்தனையோ சத்தான திட்டங்கள்
பல தந்து, வீணர்களின் கொட்டமடக்க
ஆன மட்டும் அருமையான சட்டங்கள்
பல செய்து, சாதனை பல புரியும் வண்ணம்
சாதனைத் தலைவி அவர்கள் அரசு தந்துள்ளது.

'சித்திரைச் சோலைகளே — உமை நன்கு
திருத்த இப்பாரினிலே — முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே,
என வெந்து பாடிய
சிந்துக்குத் தந்தை
பாவேந்தனின் — ஏக்கப் பெருமூச்சை
இதயத்தில் தாங்கி, அதனைப் போக்கும் வகையில்
தோட்டக் கலைத் துறையில் வாட்டத்துடன் பணிபுரியும்
அலுவலர்கள் அயராது உழைக்க
நாட்டமுடன் நல்ல பல திட்டங்களைத் தந்து

காக்கை குருவி எங்கள் ஜாதி
காடும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்க நோக்கக் களியாட்டம்

என்ற பாட்டுக்கொரு புலவன்
பாரதியின் கவிதை வரிகளுக்கு
உயிர் கொடுத்து
உணர்வு தந்து
'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா',
என வாய்த் திறந்து கண்டவர் வியக்க—
காணாதார் ஏங்க — இயற்கை எழிலை எல்லாம்
'இந்தா என' சித்தரித்துக் காட்ட எத்தனையோ
திட்டங்கள் பத்தரை மாற்றுத் தங்கமாம் எங்கள் பாசமிகு
புரட்சித்தலைவி அவர்கள்

படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
நேரம் கருதி
இந்த மாமன்றத்தின் நிலைமை கருதி,
சட்டமன்ற உறுப்பினர்களின் தன்மை கருதி,
வேளாண்துறை மற்றும் கால்நடைத் துறை
மானியக் கோரிக்கையின் பதிலுரையை
முடிக்குமுன்

''எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் —

வேதனை நிரம்பிய தமிழகத்தை
தன் சாதனைகளால் நிமிரச் செய்த
காவியத் தலைவி அவர்களின்
புகழ் தினையளவு என்னால்
உயரும் என்றால் செத்தொழியும் நாள் எனக்கு
இன்பத் திருநாள் எனச் சூளுரைத்து
நன்றி கெட்ட மனிதர்களுக்கு
அஞ்சி நிற்க மாட்டோம்
நாவினிக்கப் பொய்யுரைக்கும் பேரை
நம்பி இனி மோசம் போக மாட்டோம்
நெஞ்சினைப் பிளந்தபோதும்
நீதி கேட்க அஞ்ச மாட்டோம்
நேர்மையற்ற பேர்களின்
நிலைமைகளை எடுத்துவைப்போம்.

சூழ்ச்சியால் நமைக் கெடுக்கும்
சூது மதியாளர்களின்
செருக்கொழித்து
வெற்றி எய்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி).

கஞ்சி இல்லை என்ற சொல்லை
கப்பல் ஏற்றுவோம்,
பஞ்சை என்று நம்மை எண்ணும்
பான்மை வெல்லுவோம்.

புரட்சித் தலைவி
பாதம் தொட்டு தொடர்ந்து செல்லுவோம்
துணிந்து செல்லுவோம்
என வெஞ்சினம் உரைத்து,
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
காய்க்கின்ற மரத்தில்தானே
கல்லடிகள் அதிகம்,
கல்லடிதானே கனிமரத்திற்கு சிறப்பு
வலிமை பெறும் இத்துறைகள்

சிறக்க வேண்டும்
என்பதற்காக
வெட்டுத் தீர்மானங்களும்
கொள்கை பற்றி விவாதிக்கவும்
முன்மொழிந்துள்ள
மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்களுக்கு
கொள்கை விளக்கக் குறிப்பிலும்
எனது பதிலுரையிலும்
நிறைவு கிடைத்திருக்கும் என நம்புகிறேன்.

தங்களின் எண்ணக் குறிப்புகள்
மன்றப் பதிவேடுகளில் பதிவாகி இருக்கும்
ஆதலால்
அதனை இவ்வரசு
உரிய முறையில் பரிசீலிக்கும்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். யாரும் முன்மொழியவில்லை. கொடுத்திருக்கிற செய்திகளுக்குப் பதில் சொல்லலாம். யாரும் முன்மொழியவில்லை.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் மற்றும் கால்நடைத் துறைக்கு நான் கோரிய தொகையினை வழங்க வேண்டுமாய் கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஜே.ஜே. நெல் உற்பத்தியால் தன்னிறைவு அடையும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்த பின்பும், அந்த நெல்லை அரைப்பதற்கு உகந்த ஸ்பெஷலைஸ்டு மெஷின் பம்பாயில் மட்டுமே இருப்பதாக அறிகிறோம். அந்த மெஷினை தமிழகத்தில், குறிப்பாக காயிதே மில்லத் மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டும். ஜே.ஜே. நெல்லின் அரிசி மேலை நாடுகளுக்கு நுனி முறியாமல் அனுப்புவதற்கான தொழில் நுட்பத்தை அறிந்து, தமிழக மக்கள் அவ்வாறு உற்பத்தி செய்து, மேலை நாடுகளிலும் ஜே.ஜே. நெல்லின் பெருமையை உயர்த்த அரசு முன்வருமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜே.ஜே. 92 ரக நெல்லை அரிசியாக்கும் இயந்திரம் பம்பாயில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது தவறு. இங்கே தமிழகத்திலே

இந்த நெல்லைக் கண்டுபிடித்த நம்முடைய விஞ்ஞானிகள், இங்கேயே அதை அரிசியாக்கி உங்களுக்கு அமுதுபடைத்திருக்கிறார்கள். எனவே, அதற்கு வேண்டிய நிலையை தமிழகத்திலே உருவாக்குவதற்குத் தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 7-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி, வேட்டைக்காரன்புதூர், சேத்துமடி, போன்ற பகுதியில் இந்த ஆண்டு நிலக்கடலை அபரிமிதமாக விளைந்து ஒரு கிலோ 6 ரூபாய் 7 ரூபாய்க்குக் கூட வாங்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதை 'என்கோபெட்' மூலமாக கொள் முதல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது நிலக்கடலை, எள் போன்ற பயிர்களை அறிக்கையிடப்பட்ட பொருளில் சேர்த்து இருப்பதால் ஏற்கெனவே வெளி மாநிலங்களுக்குச் செல்லமுடியாமல் தேங்கி விலையில்லாமல் இருப்பதற்கு மேலும் வீழ்ச்சிக்கு அது காரணமாக அமையாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கடலையை 'டான்காப்' மூலமாகக் கொள்முதல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்கிற நிலக்கடலைக்கு, கட்டுப்படியான விலை கிடைக்கவேண்டுமென்று தான் தமிழ்நாடு முழுவதும் நிலக்கடலையையும் எள்ளையும் அறிக்கையிட வேண்டுமென்று அரசு முனைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி வி. ஜி. மணிமேகலை.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மருத்துவ நலத்திட்டம் என்று கிராமங்களில் எல்லோருக்கும் மருத்துவ வசதியளித்து அவர்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாம் கிராமப்புறங்களில் பஸ்களில் போகும் போது பார்த்தால் சாலைகளிலேயே விவசாயப் பெருமக்கள் அறுவடைக் காலங்களில் கதிர் அடித்துக்கொண்டிருப்பதைக் காணலாம். அதனால் தூசு கிளம்பி மாசு ஏற்பட்டு பலருக்கு அதன் காரணமாக அலர்ஜி வந்து ஆஸ்த்மா போன்ற நோய்கள்

வர வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதிர் அடிப்பதற்கு தனியாக களங்கள் அமைப்பதற்குத் திட்டம் வைத்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் களங்கள் அமைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கையை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலில் விதைகள் இலவசமாக வழங்குவதற்கு காவிரி டெல்டா பகுதிக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். கல்லணைக் கால்வாய் வெள்ளாறு, வெட்டாறு போன்ற பாசனப் பகுதிகளுக்கும் முன்னுரிமைக் கொடுக்கப்பட்டு விதைகள் அவ்வாறு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகைப் பகுதியிலே காவிரி நீரைக் கொண்டு சாகுபடி செய்யக்கூடிய அனைத்துப் பகுதியிலும் சான்றிதழ் பெற்ற விதைகளை வேளாண்மைக் கிடங்குகளில் வாங்குகிற விவசாயிகளுக்கு நிச்சயமாக முன்னுரிமைக் கொடுத்து வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ச்சி மையங்கள் பற்றி அறிவிப்புகள் வெளியிட்டார்கள். தமிழகத்திலே அதிக வாழை சாகுபடி செய்யக்கூடிய தொட்டியம் தொகுதியில் வாழை ஆராய்ச்சி மையம் நிறுவப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஒருமுறை சொல்லியும், ஏனோ அந்த வாழை ஆராய்ச்சி மையத்தை அங்கே அமைக்காமல், ஸ்ரீரங்கம் தொகுதியில் அதை ஏற்படுத்தப் போவதாக அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது தொகுதியான தொட்டியம் என்ற முறையில் கொடுக்காவிட்டாலும், வாழை அதிகமாக சாகுபடி செய்யப்படக்கூடிய பகுதி அதுதான் என்பதை அவர்களும் உணர்வார்கள். ஆகவே அவர்களது கருத்தை மறுபரிசீலனைச் செய்து, இந்த வாழை ஆராய்ச்சி மையத்தை - ஏற்கெனவே அவர் தொகுதியில் கரும்பு ஆராய்ச்சி மையம் ஒன்று இருப்பதால், தொட்டியம் தொகுதியில் வாழை ஆராய்ச்சி மையத்தை அமைக்க ஏற்பாடு செய்து தருவாரா என அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தொகுதி என்பதற்காகக் கொண்டு சென்றார் என்பதுபோல இருக்கக் கூடாது. உங்கள் தொகுதிக்கு வேண்டும் என்று கேளுங்கள். அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே மத்திய அரசின் முழு உதவியுடன், அமையப்பட இருக்கிற ஒரே வாழை ஆராய்ச்சி மையம், இந்த நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே புரட்சித் தலைவி ஆட்சியிலே இதுதான் தமிழகத்திற்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாழை ஆராய்ச்சி மையம் அமைவதற்கு, நாம் மத்திய அரசுக்கு இலவசமாக 100 ஏக்கர் நஞ்சை நிலங்களைத் தரவேண்டும். அது மட்டுமல்ல, அந்த ஆராய்ச்சி மையம் அமையக்கூடிய பகுதியில் பல ரக வாழைகள் பயிரிடப்படவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் பூவன் வாழை மட்டுமே அதிகமாக விளையக்கூடிய பகுதி. மற்ற வாழைகளை அதிகமாக பயிர் செய்யமாட்டார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் 100 ஏக்கர் தமிழக அரசினுடைய கண்காணிப்பின் கீழே இருக்கக்கூடிய விவசாயப் பண்ணையை வாழை ஆராய்ச்சி மையத்திற்குத் தந்து இருக்கிறார்கள். அந்தப் பண்ணை அமையக்கூடிய சுற்றுப்புற பகுதியில் அனைத்து ரக வாழைகளும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 7–25

அது மட்டுமல்ல, தொட்டியத்திற்கும், இந்த வாழை ஆராய்ச்சி மையத்திற்கும் சென்று வருவதற்கு இன்றைக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பஸ் கூட விட்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் பார்ப்பதற்கு ஏதுவான இடத்தில்தான் அரசு அதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. பெருமாள்.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியில் கருமந்துறையில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் சுமார் 4 ஆண்டுகளாக கட்டி முடித்தும் இதுவரை செயல்படாமல் இருக்கிறது. அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை அங்கேயுள்ள விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் செயல்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்காகத்தான் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ஒரு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு அறிவித்தேன். செயல்பட முடியாத, வியாபாரிகள் அதிகமாக அந்தப் பகுதிக்கு வரவில்லை என்பதற்காக தான், விவசாயிகள் தங்களுடைய விளைபொருளை அங்கே கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான், அப்படி கொண்டு வரக் கூடிய விவசாயிக்கு காலையில் சிற்றுண்டி அருந்துவதற்காக 5 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேற்கொண்டு அந்த விவசாயி தன்னுடைய விளைபொருளை வண்டியிலோ, லாரியிலோ, ட்ராக்டரிலோ வைத்து அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வந்தால், அப்படி அந்த விவசாயி கொண்டு வருகிற வாடகைத் தொகைக்கு நிகராக அந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 100 ரூபாய் பணத்தை ஒரு விவசாயிக்கு தருவதற்கு திட்டத்தை அறிவித்தேன். அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வியாபாரிகள் வருவதற்கு அவர்கள் கட்டக் கூடிய கட்டண விகிதத்திலே 20 சதவீதத்தை கழித்து, மீதி தொகையை அவர்களிடத்தில் வசூலிக்கப்படும் என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு இப்போது அறிவித்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த மாதம் பவானிசாகருக்கு வருகை தந்த நேரத்தில் அங்கே ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்க வேண்டுமென்று நானும், அங்கே கலந்து கொண்ட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சார்பாகவும், பெரியார் மாவட்ட மக்கள் சார்பாகவும் வேண்டிக் கொண்டோம். மாண்புமிகு இதயதெய்வம் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளும் பவானிசாகரில் இருக்கின்றன. நிலம் இருக்கிறது. நீர் ஆதாரம் இருக்கிறது. தேவையான கட்டடங்கள் இருக்கின்றன. ஆகவே, முதலில் ஐந்தாண்டுகள் படிக்கிற பி.எஸ்ஸி., வரை படிக்கிற அந்த நிலைமையை மட்டும், 5 ஆண்டுகள் கல்வியை மட்டும் அங்கே ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதைத் தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதயதெய்வம் அவர்களிடம் எடுத்துச் சொல்லி உங்களுடைய கோரிக்கையை வலியுறுத்துவேன் என்று சொல்லி வந்தார்கள். நான் கவிதையில் வருமென்று எண்ணிக்

கொண்டு கையைத் தட்டிக்கொண்டே இருந்தேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகிற நிதியாண்டிலாவது அதை மறுபரிசீலனைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து ஒரு பழச்செடி நாற்றங்கால் வேண்டும். இப்போது எங்களுக்கு பவானிசாகரில் விதைப்பண்ணை இருக்கிறது. மற்ற நெல் போன்ற விதைப் பண்ணை இருக்கிறது. ஆனால் பழச்செடிகள் வாங்க வேண்டுமென்றால் அந்தப் பகுதி விவசாயிகள் நாங்கள் எல்லாம் கல்லாறு போன்ற பகுதிக்கு செல்ல வேண்டியிருக்கிறது. தென்னை நாற்றங்காலைப் பொறுத்த வரையில் தமிழகத்திலேயே அங்கேதான் நல்லமுறையில் வளர்த்து விவசாயிகளுக்குத் தருகிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பள்ளி மாணவர் மாணவியர் திட்டம் கூட இருக்கிறது. அங்கே தான் ஆயிரக்கணக்கான தென்னங்கன்றுகள் அன்றைக்கு வழங்கப்பட்டன (மணியடிக்கப்பெற்றது). எனவே, பழச்செடி நாற்றங்கால் ஒன்றை தொடங்குவதற்கான வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்பதை கவிதையில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் கவிதை பாடியிருந்தால் பெறலாம். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பாக ஒரு ஆராய்ச்சி மையம் இருக்கிறது. அதைப் போல அரசின் சார்பாக ஒரு விதைப் பண்ணை இருக்கிறது. நல்ல நீர்வளம், நல்ல மண் ஆகியவைகளை கொண்ட அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் பல சோதனைகள் அங்கே நடைபெற்று வருகின்றன. ஒரு புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்றால் அரசுக்கு 6 கோடி ரூபாய் பணம் தேவை. அது மட்டுமல்ல, ஏற்கெனவே படித்து பட்டம் பெற்ற பல்வேறு வேளாண் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனவே, புதியதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. ப. பட்டாபிராமன்.

[1993 ஏப்ரல் 22]

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' ஆத்திரம் காட்டுவோர் முன் அடக்கத்தைக் காட்டி,
சாதி சாத்திரம் காட்டுவோர் முன்
தமிழ்மறை நூலைக் காட்டி,
நாத்திறம் காட்டி, நாடு நலம் பெற வழிகள் காட்டி,

மூத்தவர்கள் பலரை வென்ற முதல்வராக அமர்ந்திருக்கிற புரட்சித் தலைவி அவர்கள்......... (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா பிறந்த காஞ்சியிலே விதை பரிசோதனை நிலையம் ஒன்றினை அமைக்க ஆணையிட்ட புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலை என் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்,

பிற்பகல் 7-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு,

(ஈ) கோரிக்கை எண், 20—வேளாண்மை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண், 20—வேளாண்மை, வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன் மொழியப் படவில்லை,

''வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 637, 07 ,09, 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது,

(உ) கோரிக்கை எண், 22—கால்நடை வளர்ப்பு,

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மானியக் கோரிக்கை எண், 22—கால்நடை வளர்ப்பு, வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன் மொழியப் படவில்லை.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ, 81,72,58,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஊ) கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப்படவில்லை.

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிகையின் கீழ் ரூ, 10,45,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற் றன. பேரவை மீண்டும் நாளை (23-4-1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 7.32 மணிக்கு ஒத்திவைக் கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

179. சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகம் வளாகத்தில் இந்தியாவில் சீனா விழா என்ற பொருட்காட்சியில் விற்கப்பட்ட கைவினைப் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7-12-1992 ஆம் நாளிட்ட 425 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

180. வேலூர், திருவாளர்கள் பாரதி மெட்டல் ரீபைனரீஸ் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய 1983-84 முதல் 1985-86 ஆம் ஆண்டு வரைக்கான விற்பனை வரி மற்றும் கூடுதல் வரியை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 17-12-1992 ஆம் நாளிட்ட 441 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

181. 1952-ஆம் ஆண்டு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர் மற்றும் சட்ட மன்ற மேலவைத் தலைவர்களின் அரசு சீருந்துகளை பழுது பார்ப்பது மற்றும் பராமரிப்பது விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 2-4-1992-ஆம் நாளிட்ட 405-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

182. 1987-88-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

183. 1988-89-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974 ஆம்

ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

184. 1989–90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

185. 1990-91-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

189. கோரிக்கை எண் 20— வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

190. வேளாண்மைத் துறை குறித்த செயல்வினை முறைத் திட்டம், 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

191. அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1992-93.

192. உடுக்குறியிடாத வினாக்கள் — விடைகள் (இருபதாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 100 வரை).

193. உடுக்குறியிடாத வினாக்கள்— விடைகள் (இருபத்தொன்றாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை.)

TRUTH ALONE TRIUMPHS

ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

184. 1989–90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

185. 1990–91-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை [1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

189. கோரிக்கை எண் 20— வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

190. வேளாண்மைத் துறை குறித்த செயல்வினை முறைத் திட்டம், 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

191. அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1992-93.

192. உடுக்குறியிடாத வினாக்கள் — விடைகள் (இருபதாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 100 வரை).

193. உடுக்குறியிடாத வினாக்கள்— விடைகள் (இருபத்தொன்றாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை.)

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - I

[244-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண் 20- வேளாண்மை

கொள்கை விளக்கக் குறிப்பு 1993-94

அட்டவணை

		பக்கம்
1.	முன்னுரை	1
2.	வேளாண்மை	12
3.	தோட்டக்கலை	78
4.	வேளாண்மைப் பொறியியல்	96
5.	விதைச் சான்றளிப்பு	116
6.	வேளாண்மை விளைபொருள் விற்பனை	123
7.	வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்	136
8.	தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம்	139
9.	தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம்	148
10.	தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம்	154
11.	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்	162
12.	வரைவு, விளக்கப் படங்கள், நிலப்படங்கள்	173

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53-104-42

II அட்டவணைப் பட்டியல்

அட்டவணை எண்	பொருள்	பக்கம்
1.1	வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 1993-94	5
2.1	மழையளவு	15
2.2	வெள்ள துயர் துடைப்பு	17
2.3	முதன்மைப் பயிர்கள் சாகுபடிச் செய்யப்பட்ட பரப்பளவும் உற்பத்தியும்	20
2.4	1993-94-ம் ஆண்டுக்கான பயிரிடப்படுவதற்கான பரப்பளவு மற்றும் உற்பத்தியின் இலக்கும்	21
2.5	விதைப் பகிர்ந்தளிப்பு	23
2.6	1992-93-ம் ஆண்டுக்கான விதைப் பகிர்ந்தளிப்பின் முன்னேற்றமும் 1993-94-ம் ஆண்டுக்கான இலக்கும்	24
2.7	உர விநியோகம்	25
2.8	ஒருங்கிணைந்த அரிசி மேம்பாட்டு திட்டம்	29
2.9	நெல் சிறுதளைப் பைகள் திட்டம்	31
2.10	சிறப்பு உணவு உற்பத்தி திட்டம் - சோளம்	32
2.11	சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் - கேழ்வரகு	34
2.12	சிறுதானிய சிறுதளைப் பைகள் திட்டம்	35
2.13	சிறுதளைப் பைகள் திட்டத்தின் செயல் மற்றும் நிதி முன்னேற்றம்	35
2.14	தேசிய பயறு வகை மேம்பாட்டுத் திட்டம்	36
2.15	சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் குடையின் கீழ் பயிர் பாதுகாப்பு	38
2.16	சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் பயறு வகை உற்பத்தி திட்டம்	39
2.17	தீவிர பருத்தி மேம்பாட்டு திட்டம்	40

2.18	ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம்	42
2.19	எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி	43
2.20	தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்ட முன்னேற்றம்	47
2.21	தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட விளக்கங்கள்	49
2.22	தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி முன்னேற்றம்	53
2.23	வேளாண்மைப் பணியில் தமிழ்நாட்டு மகளிரின் முன்னேற்றம்	56
2.24	தரிசு / கைவிடப்பட்ட நிலங்களில் சாகுபடி முன்னேற்றம்	58
2.25	ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானிய வகைகள்	60
2.26	தென்னை மேம்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம்	62
2.27	வசூலிக்கப்பட்ட கரும்புத் தீர்வையின் விவரங்கள்	66
2.28	புதிய சாலைப் பணிகளில் செலவழிக்கப்பட்ட நிதி விவரங்கள்	67
2.29	உழவர் பயிற்சி நிலையங்களின் சாதனையும் செயல் இலக்கும்	69
2.30	குடுமியான்மலை மாநில வேளாண் மேலாண்மை பயிற்சி நிலையத்தின் 1992-93-ஆம் ஆண்டில் முன்னேற்றம் 1993-94-ம் ஆண்டுக்கான திட்டமும்	71
2.31	மண் ஆய்வு கூடங்களில் 1992-93-ம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகள் மற்றும் 1993-94-ம் ஆண்டுக்கான திட்டங்களின் விபரங்கள்	72
2.32	பூச்சிக் கொல்லி மருந்து ஆய்வு	73

2.33	உர ஆய்வு கூடங்களின் திட்டம்	74
2.34	பயிர் விளைச்சல் போட்டி (பரிசுத் தொகை)	75
2.35	பயிர் விளைச்சல் போட்டி (நுழைவுக் கட்டணம்)	76
2.36	நகர்ப்புற கலவை எரு உற்பத்தி	76
3.1	தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்கள்	78
3.2	ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் செயல் சாதனை	86
3.3	மைய அரசு திட்டம் / மைய அரசு நிதி உதவி அளிக்கும் திட்டம் (நிதி சாதனை)	87
3.4	செயல்முறை (பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தின் செயல்பாடு)	89
3.5	மாநிலத் திட்டம் (நிதி சாதனை)	91
4.1	குந்தா கீழ்ப்பவானி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் இலக்கும் சாதனையும் (நு.ப.தி.)	98
4.2	மேற்குமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தில் மண்வள மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் இலக்கும், சாதனையும்	99
4.3	மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் வசூல்	100
4.4	பழங்குடியினர் பகுதி மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் செயல் மற்றும் நிதி முன்னேற்றம்	101
4.5	மலைகள் மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல் மற்றும் நிதி சாதனை	102
4.6	காற்றரிப்பு கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல் மற்றும் நிதி சாதனைகள்	103
4.7	நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆண்டு இலக்கும் சாதனையும்	104

1993 ஏப்ரல் ௨௨]

4.8	சிறுபாசனத் திட்டத்தின்கீழ் இலக்கும் சாதனையும்	106
4.9	நுண்ணிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் மானியம்	108
4.10	நுண்பாசனத் திட்டத்தின்கீழ் பயன் விவரங்கள்	109
4.11	நுண்ணிய நீர்ப்பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல் மற்றும் நிதி இலக்கும் சாதனையும்	110
4.12	பாசனப்பகுதிகளில் நிறுவப்பட்ட உழவர் சங்கங்கள்	112
4.13	விரிவான நீர்வாத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆண்டு இலக்கும் சாதனையும்	114
5.1	விதைச் சான்றளிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட பகுதிகள்	117
5.2	சான்றளிக்கப்பட்ட விதையின் அளவு (மெ.டன்)	118
5.3	நடத்தப்பட்ட விதை ஆய்வு	121
5.4	விதை மாதிரி ஆய்வுகள்	122
6.1	ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரப்பெற்ற வேளாண் விளை பொருட்கள்	124
6.2	ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின் வருவாய்	125
6.3	உழவர்களுக்கான அடமானக் கடன்கள்	126
6.4	அக்மார்க் முறையில் தரம் பிரிக்கப்பட்ட பொருள்களின் அளவு	127
6.5	வணிகமுறையில் தரம் பிரிக்கப்பட்ட பொருட்கள்	128
6.6	பருத்தி விதை சான்றளிப்பு உரிமம்	129
6.7	மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் கொள்கை பரப்பும் விளம்பரமும்	131
6.8	பயிற்சித் திட்டம்	132

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6.9	மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் கிராமப்புற கிடங்குகள்	133
6.10	உருவாக்கப்பட்ட அடிப்படை வசதிகள்	134
7.1	வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் செயல்முறை வினை (செயல்)	136
7.2	வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (நிதி)	137
7.3	வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் 1993-94-ம் ஆண்டுக்கான திட்டம்	138
8.1	பூச்சிக் கொல்லி மருந்து ஆலையின் செயல் திறன்	141
8.2	மீன்பிடி வலை தொழிற்சாலையின் செயல்பாடு	142
8.3	சூரியகாந்தி எண்ணெய் ஆலையின் செயல்திறன்	143
8.4	இயந்திர கலப்பை - உழுவை விற்பனையின் சாதனை விவரங்கள்	145
8.5	உர விற்பனை	146
8.6	'தாய்' நிறுவனத்தின் மொத்த விற்பனை	146
9.1	தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்தின் வணிக ரீதியான நடவடிக்கைகளின் செயல்திறன்	149
9.2	தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்தைச் சார்ந்த தொழில் ரீதியான நடவடிக்கைகளின் செயற்பாடு	150
10.1	தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையத்தின் பகுதிகளில் அதன் சேவைக்கு முன்பும் பின்பும் ஏற்பட்ட விளைச்சல்	155
10.2	தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையத்தின் பகுதியில் எண்ணெய் வித்து உற்பத்தியாளர்களுக்கு கிடைத்த சராசரி ஆதாயம்	156
10.3	1993-94-ம் ஆண்டு திட்டப் பணிகள்	161
11.1	1991-92- மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	162

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

III. வரைவுகள், விளக்கப் படங்கள் மற்றும் நிலப்படங்கள்

1. தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி
2. தமிழ்நாட்டில் சிறு தானியங்கள் உற்பத்தி
3. தமிழ்நாட்டில் பயறு வகைகள் உற்பத்தி
4. தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி
5. தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி
6. தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தி
7. தமிழ்நாட்டில் நிலப் பயன்பாடு
8. மாநில விதைப் பண்ணைகளில் விதைகள் உற்பத்தி
9. மண், உர பூச்சிக் கொல்லி மருந்து ஆய்வுக் கூடங்கள்
10. டானிடா உதவிப் பெற்ற தமிழ்நாடு வேளாண் பணியில் மகளிர் மற்றும் ஒருங்கிணைந்த நீர் வடிப்ப குதி மேம்பாட்டுத் திட்டங்கள்
11. தமிழ்நாட்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்
12. தமிழ்நாட்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டம்
13. தமிழ்நாட்டில் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் பகுதிகள்
14. வேளாண்மை கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் மையங்கள்
15. தமிழ்நாட்டில் வேளாண் விற்பனைக் குழுக்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

786

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 1

முன்னுரை

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

மனித இனம் வளர்ச்சிப் பணிகளில் பொறுப்பானதோர் அங்கமாக விளங்குகிறது. அது மட்டுமின்றி அந்த வளர்ச்சிப் பணியினால் கிட்டும் முடிவான பயன்களைத் துய்ப்பதும் மனித இனமே. மக்கள் தொகை தொடர்பான 1991 ஆம் ஆண்டு தற்காலிக கணக்குப் புள்ளிவிவரங்களின்படி, தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் 36,611,285 பேர் உள்ளனர்; இது மொத்த மக்கள் தொகையாகிய 55,638,318-ல் 65.80 சதவிதமாகும். 1981 முதல் 91 வரையிலான பத்தாண்டுக்கால அளவில் கிராம மக்களின் வளர்ச்சி விதம் 12.80 சதவிதம் ஆகும். இந்தியா கிராமங்களையே நம்பியுள்ளது. இதன் பொருளாதாரம் வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. 70 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள், வேளாண்மையையே நம்பி உள்ளனர். வேளாண்மைத் தொழிலான உழவுத் தொழில் கிராம மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த இவர்களில் ஆண்களும் பெண்களும் அடங்குவர். வேளாண்மைத் தொழிலும் அது தொடர்பான தொழில்களும், பெரும்பாலானோரின் வாழ்க்கைக்கு ஆதாரமாக திகழ்கின்றன.

1991-92-ஆம் ஆண்டில், மாநில மொத்த வருமானத்தில் வேளாண்மையின் பங்கு 22 சதவீதம் ஆகும். வேளாண்மைத் துறையின் முக்கிய பணிகளாவன:

1. பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குதல்;

2. கிராமங்களில் பெருமளவிலுள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல்,

3. தொழில் துறைக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை வழங்குதல்.

4. இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் துறைகளுக்கு தேவைப்படும் சரக்கு மற்றும் பணித் தேவைகளை நிறைவு செய்தல்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டும் வகையில், வேளாண்மைப் பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குதல் ஆகியவையாகும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிப்பதற்கான பல அளவுகோல்களில் வருமானத்தைப் பெருக்குவதற்குள்ள வாய்ப்புகளும் வேலை வர்ய்ப்புகளும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். உணவுப் பொருள் பாதுகாப்பு, சத்துணவு - சுகாதாரம் தொழில் நுட்ப உத்தித் திறன் முதலியன மனித வாழ்க்கை மேம்பாட்டின் ஏனைய அம்சங்களாகும்.

வேலை வாய்ப்பு

வேளாண்மைத் தொழிலாளர்களில் குடியானவர்கள் மற்றும் கூறியத்துடன் கூடிய தொழில்களில் ஈடுபட்டவர்கள் ஆகியோரிடையே சுய வேலை வாய்ப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. குடியானவர்கள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது, ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகின்றது; இதன் காரணமாக வேளாண்மைப் பணிகளைப் பலதிரப்படுத்துதலும், வேளாண் செயல் முறைப் பணிகளையும் தொழில் பணிகளையும் மேம்படுத்த வேண்டியதும் அவசியமாகிறது. மேலும் அதே சமயத்தில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் வேண்டியுள்ளது. ஊரகத் துறையில் வேளாண்மைத் தொழில்தான் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு முக்கிய ஆதாரமாகத் தொடர்ந்து திகழும். குறிப்பாக உயர்ரக இடுபொருள் தொழில் நுட்ப சக்தி, பண்ணை பணியை திவிரப்படுத்துதல், விரிவாக்குதல், கலப்புப் பண்ணை தரிசு நிலங்களை மேம்படுத்துதல், வேளாண் காடு வளர்த்தல், வேளர்ண் பணிகள், வேளாண் கழிவுப் பொருள்களைப் பயனுக்கேற்ற வகையில் மாற்றுதல், வேளாண்மை உற்பத்திப் பொருள் விற்பனை ஆகியவை, பண்ணை நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை; இந்நடவடிக்கைகளின் மூலம் வேலை வாய்ப்பு உருவாகும்; மேலும், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பொருளாதார நிலையும் சமூக நிலையும் மேன்மையுறும்.

உணவு, சத்துணவு, சுகாதாரம்:

மக்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு சத்துணவு ஒரு முக்கியமான அடிப்படைத் தேவையாகும். நல்ல ஊட்டம் கிடைக்க போதியளவு உணவை உட்கொள்ள வேண்டும். பெருகிவரக்கூடிய மக்கள் தொகைக்கேற்ப போதுமான உணவு கிடைப்பதை உறுதி செய்ய உணவு

உற்பத்தி மிக முக்கியமாகும். உணவு உற்பத்தி அளவானது ஆண்டுக் காண்டு அதிகரித்து வந்துள்ளது.

இந்த அதிகரிப்பினால், தமிழ்நாட்டிலுள்ள மக்களுக்குக் கிடைக் கும் நபர் வாரி அளவு அதிகரிக்கிறது. (அதாவது ஆண்டொன்றுக்கு ஒருவருக்கு 182 கி.கிராம் உணவுப் பொருள் கிடைக்க வகை செய்கி றது).

தமிழ்நாட்டில் உள்ள பயிரிடத்தக்க மொத்த நிலப்பரப்பில் ஐந் தில் மூன்று பாகம் மானாவாரி நிலப்பகுதியாகும். மொத்த உணவுப் பொருட்கள் உற்பத்தியில் 30 சதவீதமும், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் மொத்த உற்பத்தியில் 60 சதவீதமும் இத்தகைய மானாவாரி நிலங்களிலிருந்து தற்போது கிடைக்கின்றன. மாநிலப் பொருளாதாரத்தில் மானாவாரி வேளாண்மை முக்கிய இடம் வகிப்பதால் நீர்ப்பிரிமுகடு அணுகுமுறையுடன் கூடிய (Watershed approach) மானாவாரி நிலப்பகுதி மேம்பாட்டிற்கு நியாயமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய மானாவாரி நிலங்களில் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு வகையில், முழுமையாகப் பயன்படுத்தப்ப டாத நிலங்கள் அதிகமாக உள்ளன. இந்த வளங்களைப் பயன்படுத்தி கொள்வது நாம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியா கும். இதற்கு நீர் நிர்வாகம் மிக அவசியம். நீர் நிர்வாகத்தால் மழைநீரைச் சேகரித்தல், பாதுகாத்தல், அதைச் சிக்கனமாகப் பயன்ப டுத்துதல் ஆகியவை அடங்கும். நீர்ப்பிரி முகடு முறை பின்பற்றப்ப டும்போது இவ்வாறு செய்வதுதான் நல்லதாகும். நீர்ப்பிரி முகடு முறையில் இயற்கையும், மனித வளமும் ஒன்றை ஒன்று சார்ந்தவையா கவும் ஒன்றுக்கொன்று எதிர்விளைவுகளை ஏற்படுத்துவனவாகவும் உள்ளன. உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும், அதிகரிப்பதற்கான புன்செய் நில மேம்பாட்டு தொடர்பான ஆராய்ச்சி - விரிவாக்கத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. பொருத்த மான நடைமுறை திட்டமும், வளவாயில்கள் மற்றும் நிலம், விதை, நீர், உரம், இரசாயனம் பண்ணை ஆற்றல் போன்ற இடுபொருள்களின் நிர்வாக முறையும் உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பைக் கவனத் தில் கொண்டு வகுக்கப்படுகின்றன. உணவுப் பொருள் வழங்கல் அதிகரிக்கும்போது, சத்தான உணவும் சுகாதாரக் காப்பும் மேம்படுவது உறுதியாகிறது.

வேளாண்மையும் மகளிரும்: [1993 ஏப்ரல் 22

மக்கள் தொகையில் மகளிர் சுமார் 50 சதவீதம் இருக்கின்றனர். அவர்கள் மூன்றில் இரண்டு பங்கு பணிச்சுமையைப் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் உணவுப் பொருள் உற்பத்தியாளர்களாகவும், வேளாண் துறையில் மிகப் பெரிய உழைக்கும் சக்தியாகவும் விளங்குகின்றனர். அறுவடைக்கு நிலத்தைத் தயார் படுத்துவதிலிருந்து அறுவடைக்குப் பிந்திய நடவடிக்கைகள் வரை, பெரும்பாலான வேளாண்மைப் பணிகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர். மேலும் அவர்கள் தமது வழக்கமான குடும்ப பொறுப்புகளோடு வீட்டுத் தோட்டம் அமைத்தல், கோழி வளர்ப்பு, பால் பண்ணை, கால்நடை வளர்ப்பு போன்ற துணைத் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். அதுமட்டுமின்றி, வேளாண்மையிலும் அதற்குத் தொடர்புடைய துறைகளிலும் முடிவு எடுப்பதில் மகளிர் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். உண்மையைச் சொல்லப்போனால், கிராமப்புற மகளிர் அளவுக்கு அதிகமாக பணியாற்றுகின்றனர். இத்தகைய மகளிரின் மேம்பாடு நமது தேசிய அளவிலான பிரச்சினைகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

மகளிரின் நிலைமையை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் பொருளாதார அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பனவாக இருக்க வேண்டியது அவசியமாகும். வளவாயில்களுக்கும், செயல் திறத்தை மேம்படுத்துவதிலும் மகளிருக்கு வாய்ப்பளிப்பதே நமது நோக்கமாகும். அப்போதுதான் அவர்கள் நல்ல வருமானம் ஈட்டுவோராக விளங்குவர். இது குடும்பத்தில் மகளிரின் அந்தஸ்தை உயர்த்துவதோடு, அவர்கள் மற்றவர்களைச் சார்ந்திருப்பதும் குறையும். இது தொழிலாளர் உற்பத்தித் திறனையும், வீட்டு வருமானத்தையும் அதிகரிப்பதற்கு உதவும்.

பயிற்சியும் செயல்திறன் மேம்பாடும்

வேளாண்மைத் துறையிலும் அதற்குத் தொடர்புடைய துறைகளிலும் அறிவியலும் தொழில் நுட்ப உத்திகளும் வெகு விரைவாக முன்னேறி வருகின்றன. கிராமப்புற மக்கள் தங்க்ளின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்திக் கொள்ள தொடர் கல்வியின் மூலமும், அஞ்சல் வழிக் கல்வியின் மூலமும் (Distance learning) வேளாண் தொழில்நுட்ப உத்திகள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதே உடனடித் தேவை ஆகும். நமது மனித வள ஆற்றலில் மகளிர், கிராமப்புற இளைஞர், வேலை வாய்ப்பற்றோர் ஆகியோர் அதிக அளவில் உள்ள

னர்.

வீட்டில், பண்ணையில், தொழிற் சாலையில், பணியிடத்தில், சமுதாயப் பணிகளில் பயிற்சி அளிக்க அவர்களை ஈடுபடுத்துவது அவசியம் ஆகும். மக்களின் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பதற்காக, இந்நிலையில் வாழ்க்கைத் தொழில் பயிற்சி கைத்திறன் மேம்பாடு, ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. ஓரளவு படித்தவர்கள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விட்டவர்கள் புதிதாகக் கற்க ஆர்வமுள்ளவர்கள் ஆகியோர் வாழ்க்கைத் தொழில் கல்வி மூலம் ஒன்று திரட்டப்படுவர். இம்மாநில அரசு சில சுயவேலை வாய்ப்புத் திட்டங்களை ஊக்கப்படுத்தும். இதனால் பயிற்சி பெறாத, ஓரளவு பயிற்சி பெற்ற, பயிற்சி பெற்றவர்களின் தேவையை நிறைவு செய்ய முடியும். அவர்கள் பின்வரும் சுய தொழில்களில் ஈடுபடுத்தப்படுவர். 1. காய்கறி விதை உற்பத்தி, 2. பருத்தி விதை உற்பத்தி, 3. உயர் ரக சிறு தானியங்கள் விதை உற்பத்தி, 4. பழச்செடிகளைப் பெருமளவில் வளர்த்தல், 5. திசு வளர்ப்பு, 6. எரு உரம் உற்பத்தி, 7. பூச்சிக் கொல்லி உற்பத்தி, 8. பண்ணைத் திடல் நீர் நிருவாகம், 9. பண்ணைக் கருவிகள் சாதனங்கள் உற்பத்தி பழுது பார்த்தலும், செப்பனிடுதலும், 10. காளாண் உற்பத்தி, 11. பழம் பதப்படுத்தல், 12. வேளாண் நீர் காகிதம் உற்பத்தி மற்றும் தென்னை நார்க்கலவையைப் பயன்படுத்துதல், 13. மண், தாவர நலக் கவனிப்பு, 14. கொய்த அலங்கார மலர் உற்பத்தி (Cutflower). இவ்வாறாக மனித வழ்க்கையின் தரம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை உறுதி செய்வதில், வேளாண்மை மற்றும் அது தொடர்பான பகுதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அட்டவணை 1.1

1993-94-ம் ஆண்டுக்கு வேளாண்மைத் துறை பிரிவுகளுக்கு கீழ்க்கண்டவாறு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

பிரிவுகள்	1992-93 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	1992 - 93 திருத்த மதிப்பீடு	1993 - 94 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

TRUTH ALONE TRIUMPHS

2059 பொதுப் பணிகள்	26	40	31
2401 பயிர் வளர்ப்பு	5,11,04	5,28,25	5,22,48
2402 மண் வள நீர் வளப் பாது காப்பு	15,54	21,31	21,19
2415 வேளாண்மை ஆராய்ச்சி கல்வி	24,20	22,93	25,66
2435 ஏனைய வேளாண்மைத் திட் டங்கள்	11,81	12,21	14,08
2501 ஊரக வளர்ச்சித் திட்டங்கள்	6,57	6,57	6,57
2551 மலைப்பகுதிகள்	7,02	6,31	6,93
2702 சிறுபாசனம்	10,24	6,80	7,13
2705 பாசனப் பகுதி மேம்பாடு	9,99	11,53	11,63
3054 சாலைகளும் பாலங்களும்	11,75	11,02	5,20
கோரிக்கை எண் 52			
4401 பயிர் வளர்ப்பு குறித்த மூலத னச் செலவு	4,79	3,14	5,08
4402 மண்வள நீர் வளப் பது காப்பு குறித்த மூலதனச் செலவு	30	-	12
4415 வேளாண்மை ஆராய்ச்சிக் கல் விக் குறித்த மூலதனச் செலவு	-	-	25
4551 மலைப்பகுதி குறித்த மூலத னச் செலவு	-	3	-

இரண்டாம் பகுதி திட்டங்கள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

1993-94 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டங்கள்

1993-94 ஆம் ஆண்டுக்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்)

I. வேளாண்மை

1. ஏழு வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குக் கட்டி டங்கள் கட்டுதல் 40.60

வேளாண்மை விரிவாக்கத் துணை மையங்கள் சில வாட கைக் கட்டிடங்களில் இயங்குகின்றன. விதைகளை முறை யாகப் பாதுகாத்து வைப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை.

வேளாண்மை விரிவாக்கத் துணை மையங்கள் விதை கிடங்குகள் ஒவ்வொன்றும் ரூ.5.8 இலட்சம் என்ற விதத்தில் மொத்தம் ரூ.40.60 இலட்சம் செலவில் 7 மையங்கள் கட்டப்படும்.

2. குடுமியான்மலை அண்ணா பண்ணையில் ஆழ் துளைக் கிணறுகள் அமைத்தல், பாசன வசதிகளை மேம்படுத்துதல் ஏனைய மாநில விதைப் பண்ணைகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல். 38.16

குடுமியான்மலை, அண்ணா பண்ணையில் ரூ.14.00 இலட்சம் செலவில், 2 ஆழ் துளைக் கிணறுகள், 6 துளைக் கிணறுகள் அமைக்கவும், 5 பம்பு செட்டுகள் நிறுவவும் கருதப்பட்டுள்ளது.
13 மாநில விதைப் பண்ணைகளில் ரூ.24.16 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் ஆழ்துளைக் கிணறுகள் ஆகியவற்றை மேம்படுத்தவும் பாசன கால்வாய்களுக்குக் கரை அமைக்கவும் பம்பு செட்டுகள் மற்றும் பிவிசி குழாய்கள் அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

3. கடலூரில் நுண்ணுயிர் வளர்ப்பு உற்பத்தி மையத்திற்கு ஆய்வுக் கூடம் கட்டுதல் 25.00

போதிய இட வசதி மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாததால், உரிய காலத்தில் நுண்ணிய உரங்கள் தயாரிப்பதில் பெரும் அளவில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே, கடலூரில் ரூ.25.00 இலட்சம் செலவில் நுண்ணிய உரங்கள் குறித்த ஆய்வுக்கூடம், உற்பத்தி மையத்திற்கு நிலையானக் கட்டிடம் ஒன்று கட்டுவது என்று கருதப்பட்டுள்ளது.

4. 200 வேளாண்மை விரிவாக்க மையக் கட்டிடங்களைப் பழுது பார்த்தல் 20.00
200 வேளாண்மை விரிவாக்க மையங்களை ஒவ்வொன்றும் ரூ.10,000/- செலவில் பழுதுபார்க்கக் கருதப்பட்டுள்ளது.

5. விதைகளைச் செய்முறைப்படுத்தும் பிரிவுகளுக்கும், வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும் மூட்டை இடைச் செருகுக் கட்டைகள் 3,400 வழங்குதல் 17.00

விதைகள் உழவர்களுக்கு வழங்கப்படும் வரையில் அவற்றை இருப்பில் வைக்கவும், அவற்றின் தரத்தை காக்கவும்,

மொத்தம் ரூ.17 இலட்சம் செலவில், வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும், விதைகளைச் செய்முறைப்படுத்தும் பிரிவுகளுக்கும் ஒவ்வொன்றும் ரூ.500/- என்கிற வீதத்தில் 3,400 இடைச் செருகுக் கட்டைகள் வழங்கப்படும்.

6. இராமநாதபுரத்தில் நுண்ணுயிர் வளர்ப்புப் பிரிவை வலுப்படுத்தல் 13.50

இராமநாதபுரத்தில் தற்போதுள்ள உயிரின உரப்பிரிவிற்கு, ரூ.13.50 இலட்சம் செலவில் கூடுதல் சாதனங்கள் அமைப்பதன் மூலம் அப்பிரிவை வலுப்படுத்தக் கருதுகிறது.

II. தோட்டப் பயிர்களும் மலைத் தோட்டப் பயிர்களும்.

7. மாநிலத் தோட்டக் கலைப் பண்ணைகள் நான்கிற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கான திட்டம் 15.34

காய்கறி மேம்பாட்டுப் பணிகளை அதிகரிக்கும் நோக்கத்துடன், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களில், ரூ.15.34 இலட்சம் செலவில், காய்கறித் தோட்ட வளர்ப்பைத் தீவிரப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

8. தமிழ்நாட்டில் மும்முரா காய்கறித் தோட்ட வளர்ப்புத் திட்டம் 9.40

பழச் செடிகளின் தேவை அதிகரித்து வருவதற்கேற்ப, அச்செடிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மாநிலத் தோட்டக் கலைப் பண்ணைகள் 4-ல் அதாவது நாட்டு மங்கலம், வல்லத்திராக் கோட்டை, குடுமியான்மலை, ஆடுதுறை ஆகிய 4 இடங்களில் ரூ.9.40 இலட்சம் செலவில் பாசன வசதிகள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

9. கொடைக்கானலில் தகவல் - பயிற்சி நிலையக் கட்டிடத்தைக் கட்டுவதற்கான திட்டம் 1.00

அண்மையில் வெளிவந்த வேளாண் உற்பத்தித் தொழில்நுட்ப உத்திகளை உழவர்கள் அறிந்துகொள்ளச் செய்வதற்காக, கொடைக்கானல், ப்ரேயன்ட் பூங்கா வளாகத்தில் தகவல் பயிற்சி நிலையக் கட்டிடத்தை ரூ.8 இலட்சம் செலவில் கட்ட கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கத்துடன் 1993-94-ல் தொடங்கப்படும்.

III. வேளாண் பொறியியல்

10. சுழல்வகைத் துளையிடும் எந்திரங்கள் மூன்றையும் பிற சாதனங்களையும் வாங்குதல். 12.00

ரூ.120 இல்டசம் செலவில், ஹெவி ட்யூட்டி ஏர் கம்ப்ரெஸ்ஸர்கள் இரண்டு, லாரி ஒன்று ஆகியவற்றுடன் 3 சுழல்வகைத் துளையிடும் எந்திரங்கள் வாங்கக் கருதப்பட்டுள்ளது. மொத்தச் செலவுத் தொகை ரூ.120 இலட்சத்தில் 12 இலட்சத்தை அரசு தொடக்க உதவித் தொகையாக வழங்கும்; எஞ்சிய ரூ.108 இலட்சத்தை நிதி நிறுவனங்கள் கடனாக வழங்கும். இக்கடன் தொகை, சிறு பாசனத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்த் தொகைகளிலிருந்து 9 சம ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படும்.

11. உழவர் சங்கங்களின் வாயிலாக ஆதாரப் பணிகளுக்கு வகை செய்வதன் மூலம் வேளாண்மைக் கருவிகளின் பயன்பாட்டைப் பிரபலப்படுத்தும் திட்டம். 3.00

உழவர் சங்கங்கள் வாயிலாக, நவீன வேளாண் கருவிகளின் பயன்பாட்டை உழவர்கள் அறிந்து கொள்வர். பின் கலப்பைகளும், ஏனைய வேளாண் கருவிகளும், தேவைப்படும் உழவர்களுக்கு, உழவர்கள் சங்கங்கள் மூலமாக வாடகைக்கு வழங்கப்படும். மொத்தம் 30 சங்கங்களுக்கு ரூ.10,000 மானியமாக, ஆதாரத் தொகை என்கிற பெயரில் வழங்கப்படும். சங்கம் ஒன்றுக்கு 2 பேர் என்கிற வீதத்தில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

உழவுத் தொழில் செய்யும் 60 இளைஞர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மின் கலப்பைகள், வேளாண் கருவிகளை இயக்குவதில் பயிற்சி அளிக்கப்படும்.

IV. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம்

12. அம்பத்தூரில் தற்போதுள்ள பயிர்ப் பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப்புப் பிரிவை நவீனப்படுத்துதல், உற்பத்தித் திறனளவை அதிகரித்தல், ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றுக்கான திட்டம் 15.00

நவீனமாக்கும் செயல்முறையில் ஒரு பகுதியாக, அம்பத்தூரில் தற்போதுள்ள பயிர்ப் பூச்சி கொல்லி மருந்து, தயாரிப்புப் பிரிவிற்கு 4000 லிட்டர் கொள் திறனுள்ள ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் தொட்டி ஒன்றும், 1000 லிட்டர் கொள் திறனுள்ள ஸ்டெய்னலெஸ் ஸ்டீல் தொட்டி இரண்டும், தானாகவே நிரப்பிக் கொள்ளும் பிரிவு ஒன்றும், கூடுதலாக பணிக் கொட்டகை ஒன்றும் அமைக்க கருதப்பட்டுள்ளது. இவ்வாறு நவீனமாக்குவதால், உற்பத்தி மற்றும் சிப்பம் செய்யும் திறனளவு ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் லிட்டராக இருப்பது 6 இலட்சம் லிட்டராக அதிகரிக்கும். இதன் பயனாக, விற்று முதல் ரூ.500 இலட்சத்திலிருந்து ரூ.1000 இலட்சமாக அதிகரிக்கும்.

V. தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்.

13. பணிகளுக்கான கருவிகள் 10 செட்டு வாங்குதல்	5.00
வேளாண் பணிகளை நவீனமயமாக்குவதற்கு நவீன கருவிகள் பெரிதும் பயன்படுகின்றன. நவீன கருவிகளை உயர்ந்தளவு பயன்படுத்தும் நோக்கத்துடன் ஆர்க் வெல்டிங் டிரான்ஸ்பார்மர், பில்லர் வகை டிரில்லிங் எந்திரம், அதற்கான துணைக் கருவிகள், நெகிழ்வான ஷாஃப்ட் கிரைண்டர், சிங்கிள் ஃபேஸ் வொர்க் கிரைண்டர் ஆகிய எந்திர செட்டுகளை ரூ.5 இலட்சம் செலவில் 210 வட்டார அளவிலான வேளாண் பணி மையங்களின் ஒவ்வொன்றுக்கும் வழங்கக் கருதப்பட்டுள்ளது.	

VI. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்.

14. இம்மாநிலத்தின் ஒட்டுமொத்த வேளாண் மேம்பாட்டை முன்னிட்டு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் வேளாண் ஆராய்ச்சி கல்வி மற்றும் விரிவாக்கப் பணிகளில் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது. மேலும் புதிய ரகங்களை உருவாக்கவும், பயிர் நிருவாகம் மற்றும் பயிர் உற்பத்தித் தொழில் நுட்பங்களை மேலும் செம்மைப்படுத்தவும், பல்கலைக் கழகம் 1993-94 ஆம் ஆண்டிற்கென 16 புதிய திட்டங்களை உருவாக்கியுள்ளது. இத்திட்டங்களைச் செயலாக்கக் கருதப்பட்டுள்ளது.	33.76
மொத்தம்	248.76 இலட்சம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 2

வேளாண்மை

வறுமையை நீக்கி போதிய உணவு வழங்குவதிலும், கிராமங்களில் வேலை வாய்ப்பை பெருமளவில் ஏற்படுத்தவும் அச்சாணியாக மற்றும் முதன்மை துறையாக வேளாண்மை விளங்குகிறது. புதிய விஞ்ஞான சாகுபடி முறைகளை இயற்கையோடு ஒன்றி மேற்கொள்வதிலும், பலனளிக்கும் வகையில் சாகுபடி செலவை மேற்கொள்வதிலும், அதிக உற்பத்தியை அடைவதிலும் முன்னோடியாக உள்ள தமிழ்நாட்டு விவசாயிகள் நம் அனைவரின் பாராட்டுகளுக்கும் உரியவர்கள். வேளாண்மையில், தொடர்ந்து முன்னேற்றம் பெற, பயிர் சாகுபடி, மண் மற்றும் நீர் பராமரிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து முற்போக்கான பண்ணை முறைகளை விவசாயிகளிடையே ஈடுபடுத்துவது இன்றியமையாததாகிறது. இந்த அணுகுமுறையில் தாவர முறை மண் பராமரிப்பு, தோட்டக்கலை மேம்பாடு, தீவன மேம்பாடு மற்றும் வேளாண்மைக் காடுகள் முதலியன பல்முனை விரிவாக்கப் பணிகள் மூலம் சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது. தற்போதுள்ள நிலம், நீர் மற்றும் இதர வளங்களின் உபயோகத்திற்கு வலுவூட்ட சுற்றுப்புற சூழ்நிலையை பராமரித்து உற்பத்தி திறனில் குறியீட்டை அடைந்து, அதன் மூலம் பொருளாதார நிலையில் தொடர்ந்து முன்னேற்றம் அடையப்படும். நமது வேளாண்மை உற்பத்தி உத்திகள் கீழ்க்கண்ட திட்ட இனங்களை உள்ளடக்கியதாகும். 1. வளமற்ற / சாகுபடி செய்யப்படாத நிலங்களை உபயோகத்திற்கு கொண்டு வந்து உற்பத்தியை பெருக்குதல், 2. உயர் விளைச்சல் இரக விதைகளை உபயோகித்தல், 3. தேவைக்கு ஏற்ப பாசன நீர் உபயோகத்திற்கு நுண்பாசன முறைகள் மேற்கொள்ளுதல், 4. இயற்கை உரம், ரசாயன உரம், உயிரியல் உரம் மற்றும் பசுந்தாள் உர உபயோகத்தை இணைத்த ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மேற்கொள்ளுதல், 5. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தல் மற்றும் 6. இதர சமூக சாகுபடி முறைகளை கடைப்பிடித்தல்.

தரிசு நிலங்களை சாகுபடியின்கீழ் கொண்டு வர அரசு தரிசு நில சாகுபடி தீவிர திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் 1991-92-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 15,000 எக்டேர் தரிசு நிலங்கள் ஒரு எக்டேருக்கு ரூ.1,500/- வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

மண்ணின் தன்மைக்கு ஏற்ப உணவு, தீவனம் மற்றும் எரிவகை பயிர்கள் (ஓராண்டு பயிர் மற்றும் மரங்கள்) சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. 1993-94-ம் ஆண்டு, 15,000 எக்டேர் தரிசு நிலங்கள் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்படும். பாசன வசதி இல்லாத பகுதிகளில் குறைவாகவும், நிலையில்லாமலும் பெறப்படும் மழையைக் கருத்தில் கொண்டு, நமது விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி முயற்சிகளில் மானாவாரி சாகுபடிக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். விவசாயிகளின் நிலங்களில் நீர் சேகரிக்கும் அமைப்புகள் ஏற்படுத்துதல், வண்டல் மண்ணை வீணாவதை தடுக்க தடுப்பு அணைகள் அமைப்பது, நீர் சேகரிக்கும் குளங்கள் ஏற்படுத்துதல், தாவர அரண் அமைத்தல் ஆகிய ஒருங்கிணைந்த நீர் மேம்பாட்டு பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். சிக்கனமான மற்றும் திறமையான பாசன நீர் உபயோக முறைகளான தெளிப்பு நீர்ப்பாசனம் மற்றும் சொட்டு நீர்ப்பாசன முறைகள் அதிக பரப்பில் கடைபிடிக்கப்படும்.

நெல்லில் புதிய இரகங்கள்

சன்னரக மற்றும் வாசனை ரகமான ஜே.ஜே.92 நெல்லை 1993-ம் ஆண்டு பொங்கல் பரிசாக விவசாயிகள் சாகுபடி செய்யும் பொருட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஜே.ஜே.92 ரக நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு அதிக பரப்பில் சாகுபடி மேற்கொள்ள வழங்கப்படும். ஜே.ஜே.92 சாகுபடி செய்த தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களில் இந்த இரகத்திற்கான விளைச்சல் முடிவுகள் ஊக்கம் தரக்கூடிய அளவில் அமைந்துள்ளது. காவிரி டெல்டா பகுதிகளில் 75 நாள் வயதுடைய குறுகியகால இரகத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் கலிங்கா - 111, பானாபிரபா, கல்யாண் மற்றும் ஹீரா ஆகிய நான்கு இரகங்களைக் கொண்ட அனுசரணை ஆராய்ச்சித் தளைகள் அமைக்கப்பட்டுள்ளது. நமது முயற்சிகள் கூடிய விரைவில் நல்ல பலன் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த உர பராமரிப்பு

சமீபத்தில் ஏற்பட்ட இரசாயன உர விலையேற்றத்தை ஈடுகட்டவும், மற்றும் விவசாயிகளுக்கு குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவும் நோக்கத்துடனும், இயற்கை உரமிடுதலை தீவிரமாக பரவலாக்கும் பொருட்டும் பசுந்தாள் உரமிடும் முறையினை புனர்வளிக்கும் வகையிலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவசமாக

பசுந்தாள் உர விதைகள் வ்ழங்க திட்டமிடப் பட்டுள்ளது. மேலும் ஊட்டமேற்றிய தொழு உரம் உற்பத்தி செய்யப்பட்டு மானாவாரி பயிர்களுக்கு பரந்த அளவில் இடப்படும். மேலும் விரிவான அளவில் உயிரின உரங்களான நீலப்பச்சைப் பாசி, அசோலா, ரைசோபியம், அசட்டோபேக்டர், அசோஸ்பைரில்லம், மற்றும் பாஸ்போ பேக்டீரியம் உற்பத்தி மற்றும் விநியோகம் பெருமளவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக தொழில் நுட்பத்தின்கீழ் பூச்சிகளைக் கட்டுப்படுத்த மருந்து தெளிக்கும் முறை, கைவினை முறை மற்றும் உயிரியல் முறைகள் கடைபிடிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் இத்தொழில் நுட்பத்தை பரப்புதல், பூச்சி நோய்களை தடுத்தல் மற்றும் பாதிப்புக்குள்ளானவற்றை குணப்படுத்துதல் ஆகிய மூன்று உத்திகள் விரிவான முறையில் கடைபிடிக்கப்படுகிறது. நமது தற்போதைய முயற்சியாக டிரைகோகிரம்மா, என்.பி.வி. கிரீன் மற்கர்டைன் பூஞ்சானம், டிரைகோடிரம்மா பூஞ்சானம் மற்றும் ஈலோபிட்ஸ் முதலிய ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்து விநியோகிப்பது ஆகிய உயிரியல் தடுப்பின்மூலம் கரும்பு இடைக்கணு புழு, பருத்திக்காப்புழு, தென்னையில் காண்டாமிருக வண்டு, மண் மூலம் பரவும் நோய்கள் மற்றும் கருந்தலைப் புழு ஆகியவை சுற்றுப்புற சூழல் பாதிக்காத வகையில் கட்டுப்படுத்தப்படுகிறது.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதுடன், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க, அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். பலமுனை பயிர் மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் பயறு வகைகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது. பெருகிவரும் சமையல் எண்ணெயின் தேவையைப் பூர்த்தி செய்ய எண்ணெய்ப்பனை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு முதன்மை நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளது. சூரியகாந்தி மற்றும் சோயா மொச்சை சாகுபடி செய்யப்படும் பரப்பு கணிசமான அளவிற்கு அதிகரிக்கப்படும். புரட்சித் தலைவி தென்னங்கன்று விநியோகத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 96,800 தென்னங்கன்றுகள் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. !993-94-ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 2.5 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படும்.

1992-93-ம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தி நிலைமை

பருவநிலை

1992-93-ம் ஆண்டு பருவம் வாரியாக பெறப்பட்ட மழை விபரம் வருமாறு:

அட்டவணை 2.1

(மில்லி மீட்டரில்)

வ. எண்.	பருவம்	இயல்பான மழையளவு	பெய்த மழை யளவு	வேறுபாடு (சத விகிதத்தில்)
1.	கோடை (மார்ச்சு - மே)	136.5	79.9	(-) 41.5
2.	தென்மேற்கு பருவம் (ஜூன் - செப்டம்பர்)	307.6	318.2	(+) 3.4
3.	வடகிழக்கு பருவம் (அக்டோபர் - டிசம்பர்)	438.7	504.9	(+) 15.1
4.	குளிர் பருவம் (ஜனவரி - பிப்ரவரி)	42.2	6.4	(-) 35.8
	மொத்தம்	925.0	909.4	(-) 15.6

கோடை பருவத்தில் பெய்த மழை இயல்பைக் காட்டிலும் 41.5 சதம் குறைவானதாக இருந்தாலும் அதற்கு பிற்பட்ட பருவங்களில் மழையளவு அதிகரித்துள்ளது. தென்மேற்கு பருவத்தில் இயல்பைக் காட்டிலும் 3.4 சதம் மழை கூடுதலாகப் பெறப்பட்டது. இதுபோ

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

லவே, வடகிழக்கு பருவ காலத்தில் இயல்பைக் காட்டிலும் 15.1 சதம் அதிக மழை பெய்துள்ளது. குளிர் பருவத்தில் இயல்பைக் காட்டிலும் 35.8 சதம் குறைவாக மழை பெய்துள்ளது. நவம்பர் திங்களில் ஏற்பட்ட புயலால் பெருமழை பெய்து, நெல்லை கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், காமராஜர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதேமில்லத், திருச்சி, திண்டுக்கல் அண்ணா, திருவண்ணாமலை சம்புவராயர், பெரியார், புதுக்கோட்டை, பசும்பொன் மற்றும் தென்னாற்காடு ஆகிய 15 மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் ரூ.8.61 கோடி ஒதுக்கீட்டுடன் நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, விதைகள், பூச்சி மருந்துகள், உரங்கள் மற்றும் நுண்ணூட்டக் கலவைகள் இலவசமாக வழங்கப்பட்டது.

வெள்ள நிவாரணப் பணிகள்

தென்னாற்காடு முதல் கன்னியாகுமரி வரை உள்ள அனைத்து கடலோர மாவட்டங்களில் நவம்பர் இரண்டாம் வாரத்தில் முன்பில்லாத வகையில் பெரும் மழை பெய்தது. மாநிலத்தில் இந்த சமயத்தில் இயல்பான மழை அளவு 42.2 மி.மீ. பதிலாக 178.6 மி.மீ. மழை பெய்தது. பெரும் மழை மற்றும் புயலால், கன்னியாகுமரி, திருநெல்வேலி, சிதம்பரனார், மதுரை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதேமில்லத், தென்னாற்காடு, காமராஜர், திண்டுக்கல் அண்ணா, ராமநாதபுரம், திருச்சி, திருவண்ணாமலை சம்புவராயர், பெரியார், புதுக்கோட்டை மற்றும் பசும்பொன் ஆகிய 15 மாவட்டங்களில் பயிர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானது. 2.03 லட்சம் எக்டேரில் பயிர் சேதமும் மொத்த இழப்பு ரூ.62.13 கோடி எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு ரூ.861.55 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. புயல் நிவாரண திட்டத்தின் மூலம் 1,43,128 சிறு மற்றும் குறு விவசாயிகளும் 45,902 இதர விவசாயிகளும் பலன் பெறும் வகையில் இடுபொருள்கள் வழங்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட பரப்பு மற்றும் நிவாரண விவரம் வருமாறு:

அட்டவணை 2.2

வ. எண்	விவரம்	பாதிக்கப் பட்ட பரப்பு (எக்டேரில்)	இலவசமாக வழங்கப்படும் இடு பொருள்களின் மதிப்பு (ரூபாயில்) (ஒரு எக்டேருக்கு)	மொத்த ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)
1.	நெல்			
	முழுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகள்			
அ.	சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொந்தமானவை	30653	900	275.895
ஆ.	இதர விவசாயிகளுக்கு சொந்தமானவை	24963	550	137.296
	மொத்தம்	55618		413.191
	ஓரளவு பாதிக்கப்பட்ட பகுதிகள்			
அ.	சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொந்தமானவை	116500	300	349.500
ஆ.	இதர விவசாயிகளுக்கு சொந்தமானவை	27500	250	68.750
	மொத்தம்	144000		418.250

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53-104-45

2.	கரும்பு முழுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகள்			
அ.	சிறு மற்றும் குறு விவசாயிக ளுக்கு சொந்தமானவை	106	2000	2.120
ஆ.	இதர விவசாயிகளுக்கு சொந்தமானவை	106	1000	1.060
	மொத்தம்	212		3.180
3.	பருத்தி முழுமையாக பதிக்கப்பட்ட பகுதிகள்			
அ.	சிறு மற்றும் குறு விவசாயிக ளுக்கு சொந்தமானவை	665	1200	7.980
ஆ.	இதர விவசாயிகளுக்கு சொந்தமானவை	650	600	3.900
	மொத்தம்	1315		11.880
4.	எண்ணெய் வித்துக்கள் முழுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகள்			
அ.	சிறு மற்றும் குறு விவசாயிக ளுக்கு சொந்தமானவை	103	2200	2.266
ஆ.	இதர விவசாயிகளுக்கு சொந்தமானவை	81	1100	0.891
	மொத்தம்	184		3.157
5.	பயறு வகைகள் முழுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகள்			
அ.	சிறு மற்றும் குறு விவசாயிக ளுக்கு சொந்தமானவை	225	350	0.787

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6.	சிறு தானியங்கள்			
	முழுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகள்			
அ.	சிறு மற்றும் குறு விவசாயிக ளுக்கு சொந்தமானவை	800	350	2.800
ஆ.	இதர விவசாயிகளுக்கு சொந்தமானவை	520	200	1.040
	மொத்தம்	1320		3.840
7.	தென்னை			
	பாதிக்கப்பட்ட மரங்களுக்கு பதில் தென்னங் கன்றுகள்	48551 எண்கள் அல்லது 242 எக்டேர்	ரூ.15/- ஒவ்வொன்றுக்கும்	7.280
	மொத்தம்	203116		861.5

1992-93-ம் ஆண்டில் பயிர் நிலைமை விபரம்

1993-ம் ஆண்டு பிப்ரவரி முக்கிய பயிர்கள், சாகுபடி செய்யப் பட்ட பரப்பு மற்றும் உற்பத்தி விபரம் வருமாறு:

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை - 2.3

வ. எண்.	பயிர்	சாகுபடி பரப்பு (ல.எக்.) குறியீடு	பிப்ரவரி 1993 வரையிலான சாதனை	எதிர் பார்க்கப் படும் சாதனை	உற்பத்தி (லட்சம் மெ.டன்) குறியீடு	பிப்ரவரி 93 வரையுள்ள சாதனை	எதிர் பார்க்கப் படும் சாதனை
1.	அரிசி	21.00	21.87	23.00	63.00	71.24	76.00
2.	சிறு தானியங்கள்	16.00	12.18	16.00	17.00	15.51	20.00
3.	பயறு வகைகள்	10.00	9.32	10.00	5.00	3.98	5.00
	மொத்த உணவு தானியங்கள்	47.00	43.37	49.00	85.00	90.73	101.00
4.	எண்ணெய் வித்துக்கள்	12.93	13.29	14.00	14.00	14.59	15.00
5.	பருத்தி	2.35	2.44	2.50	6.25	4.69	6.25
					(லட்சம் பொதிகள்)		
6.	கரும்பு	2.00	1.96	2.00	246.50	227.18	246.50

உரிய காலத்தில் கிடைத்த மேட்டூர் பாசன நீரைக் கொண்டு குறுவை சாகுபடி மேற்கொண்ட தருணத்தில் தக்க சமயத்தில் தரமான இடுபொருள்கள் மற்றும் தொழில் நுட்ப விபரங்கள் விவசாயிகளுக்கு வேளாண் துறையின் மூலம் வழங்கப்பட்டது. இதன் காரணமாக, இவ்வாண்டு) சென்ற ஆண்டைக் காட்டிலும் ஒரு இலட்சம் எக்டேரில் கூடுதலாக குறுவை சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு 0.60 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட குறுவை நெல் பயிர் இவ்வாண்டு 1.67 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது. மேலும், சென்ற ஆண்டு பெறப்பட்ட குறுவை உற்பத்தியான 2.2 இலட்சம் மெட்ரிக் டன்களை ஒப்பிடும்போது இவ்வாண்டு 6.68 இலட்சம் மெ.டன்கள் என்ற ஒரு சாதனை உற்பத்தியாக அடையப் பட்டுள்ளது. 1992-93-ம் ஆண்டு அரிசி உற்பத்தி இலக்கான 63 இலட்சம் மெ.டன்களை கடந்து, 76 இலட்சம் மெ.டன்கள் என்ற அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எண்ணெய் வித்துக்க

ளின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன், சூரியகாந்தி சாகுபடி பரப்பு இரு மடங்காக அதிகரிக்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளது. சூரியகாந்தி பயிர், 0.26 இல்டசம் எக்டேரில் இயல் பாக சாகுபடி செய்யப்படுகிறது. 1992-93-ம் ஆண்டு 0.50 லட்சம் எக்டேரில் சூரியகாந்தி பயிர் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது. மேலும் சூரியகாந்தி சாகுபடியை ஊக்குவிக்க 17 டன்கள் வீரிய சூரியகாந்தி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகி றது. மேலும் ஆமணக்கு உற்பத்தியை அதிகரிக்க 8 டன்கள் ஜி.சி. எச்.4 வீரிய ஆமணக்கு விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 1992-93-ம் ஆண்டு சோயா மொச்சை சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி சுமார் 0.50 இலட்சம் எக்டேரில், சோயா மொச்சை சாகுபடி மேற் கொள்ள தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. பயறு வகைகள், பருத்தி மற்றும் கரும்பு உற்பத்தியில் 1992-93-ம் ஆண்டிற் கான உற்பத்தி குறியீட்டை அடைந்துள்ளோம். 1993-94-ம் ஆண்டு இயல்பான மழை கிடைக்கும் மற்றும் நீர்த் தேக்கங்களிலிருந்து உரிய காலத்தில் பாசனத்திற்கு நீர் திறந்து விடப்படும் என எதிர்பார்ப் போடு, 1993-94-ம் ஆண்டு பயிர் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகிறது.

அட்டவணை - 2.4

வ. எண்.	பயிர்	1993-94-ம் ஆண்டு குறியீடு	
		பரப்பு (லட்சம் எக்டேரில்)	உற்பத்தி (லட்சம் மெ.டன்னில்)
1.	அரிசி	21.00	64.25
2.	சிறுதானியங்கள்	15.50	17.75
3.	பயறுவகைகள்	10.00	5.55
	மொத்த உணவு தானியங்கள்	46.50	87.50
4.	எண்ணெய் வித்துகள்	12.95	14.25
5.	கரும்பு	2.00	251.10
6.	பருத்தி	2.50	6.40 (லட்சம் பொதிகள்)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இடுபொருள் விநியோகத் திட்டம்

அ. விதைகள்

தமிழ்நாட்டில் முறையான விதை உற்பத்தி மற்றும் விநியோக திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விதை உற்பத்தியில் மூன்றடுக்கு முறை கடைபிடிக்கப் படுகிறது. வேளாண்மை பல்கலை கழகத்திலிருந்தும், மத்திய அரசு ஒதுக்கீட்டின்படி இதர நிறுவனங்களிலிருந்தும் பெறப்படுகின்ற கரு விதைகளைக் கொண்டு 42 அரசு விதைப் பண்ணைகளில் ஆதார விதைகள் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற ஆதார விதைகளைக் கொண்டு விவசாயிகளின் நிலங்களில் விதைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு, சான்றிதழ் விதைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. விவசாயிகளின் நிலங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற சான்றிதழ் விதைகளின் தரம் விதை சான்றிதழ் துறையின் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

தற்போது தமிழ்நாட்டில் விதை மாற்று விகிதம் நெல்லிற்கு 21 சதமாக உள்ளது. இது மத்திய அரசு நிர்ணயித்த குறியீட்டைவிட இரு மடங்காகும். உற்பத்தி திறனை அதிகப்படுத்த தரமான விதைகள் முக்கிய பங்கு வகிப்பதால், தற்போது விதை வழங்கப்படும் 4.41 லட்சம் எக்டேருக்கு மேல் மேலும் 4 சத பரப்பிற்கு நெல் விதைகளின் உற்பத்தி பண்ணைகள் ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலர்களின் பகுதியில் 1993-94-ம் ஆண்டு அமைக்கப்படும். இத்திட்டத்தில் உதவி வேளாண்மை அலுவலர்களால் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு தரமான விதைகள் உற்பத்தி செய்யும் பொருட்டு தரமான விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாடு திட்டத்தின்கீழ் விதை மேம்பாட்டு திட்ட இனத்தில் தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்படும். மேலும் ஆதார மற்றும் சான்றிதழ் விதை உற்பத்தி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏற்படும் கூடுதல் செலவை ஈடுகட்ட விதை மானியமும் வழங்கப்படும். இதன்மூலம் 1993-94-ம் ஆண்டு மொத்த நெல் சாகுபடி பரப்பில் 25 சத பரப்பிற்கு தேவையான தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

1993-94-ம் ஆண்டு பயிர் வாரியாக மொத்த சாகுபடி பரப்பில் பின்வரும் பரப்பிற்கு தேவையான விதைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை - 2.5

வ. எண்.	பயிர்கள்	மத்திய அரசால் பரிந்துரைக்கப் பட்ட விதை மாற்று விகிதம்	அரசு திட்டமிட்டுள்ள விதை மாற்று சதவிகிதம்
1.	நெல்	14	25%
2.	சிறுதானியங்கள்		
	கேழ்வரகு	-	20%
	சோளம் (ரகங்கள்)	25	10%
	சோளம் (வீரிய ஒட்டு ரகம்)	25	50%
	மக்காச் சோளம்	25	26%
	கம்பு	50	25%
3.	பயறு வகைகள்	11	12.5%
4.	பருத்தி (மானாவாரி)		10%
	பருத்தி (இறவை)	15	15%
5.	எண்ணெய் வித்துக்கள்		
	நிலக்கடலை	3	5%
	எள்	10	15%
	சூரியகாந்தி	50	50%
	ஆமணக்கு	20	30%

மேற்குறிப்பிட்டுள்ளபடி நமது விதை மாற்று விகிதம் மத்திய அரசு நிர்ணயித்த விதை மாற்று விகிதத்தைவிட அதிகம் என்பதால், அகில இந்திய அளவைவிட நாம் அதிக அளவில் உற்பத்தி திறனை அடைய இது உதவி செய்யும்.

விதை விநியோக நடைமுறையில் *15.3.1993* முதல் மாறுதல் செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை துறை மூலம் நேரடியாக விதை விநியோகம் செய்வது மாற்றியமைக்கப்பட்டு தரமான விதைகளை கூட்டுறவுத் துறை, கூட்டாண்மை அமைப்புகள் (தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகம், தமிழ்நாடு வேளாண்மை கூட்டுறவு விற்பனை மையம், முதன்மை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு இணையம், மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து இணையம்) மூலம் விநியோகம் செய்யப்படும். வேளாண்மைத் துறையிலிருந்து விற்பனை

பணி கூட்டுறவு மற்றும் கூட்டாண்மை அமைப்புகளுக்கு மாற்றம் செய்யும் பணி சீராக நடைபெற வழிமுறைகள் இறுதியாக்கப்படுகிறது.

1992-93-ம் ஆண்டு விதை விநியோகத்தில் இதுவரை புரிந்த சாதனையும் 1993-94-ம் ஆண்டு விநியோகம் செய்ய திட்டமிடப்பட்ட விதை அளவும் வருமாறு:

அட்டவணை - 2.6

(மெ.டன்னில்)

வ.எண்.	பயிர்கள்	1992-93 இலக்கு	1992-93 பிப்ரவரி 93 வரையிலான சாதனை	1993-94 திட்டம்
1.	நெல்	22050	24349	24050
2.	சிறுதானியங்கள்	1194	863	1200
3.	பயறுவகைகள்	2500	1568	2500
4.	பருத்தி	375	308	400
5.	எண்ணெய் வித்துக்கள்	11166	9995	11200
	மொத்தம்	37285	37083	39350

மண் வளத்தை பெருக்கவும் மண்ணில் இயற்கை உரங்கள் அதிக அளவில் கிடைக்கச் செய்யவும், பசுந்தாள் உர விதை விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. 1992-93-ம் ஆண்டு 200 மெ.டன்கள் பசுந் தாள் உர விதைகள் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

ஆ. இரசாயன உரங்கள்

1992-93-ம் ஆண்டு 9.71 இலட்சம் மெ.டன்கள் இரசாயன உரங்கள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டு பிப்ரவரி 1993 வரை 8.65 லட்சம் மெ.டன்கள் விநியோகம் செய்யப்பட்டது. 1991-92 மற்றும் 1992-93-ம் ஆண்டுகளில் இதுவரை விநியோகம் செய்யப் பட்ட இரசாயன உரங்களின் அளவு, மற்றும் 1993-94-ம் ஆண்டு விநியோகம் செய்ய திட்டமிடப்பட்ட உர அளவு விவரம் வருமாறு:

அட்டவணை - 2.7

(இலட்சம் மெ.டன்னில்)

வ. எண்	விவரம்	1991-92 குறியீடு	1991-92 சாதனை	1992-93 குறியீடு	1992-93 பிப்ரவரி 93 வரை சாதனை	1993-94 திட்டம்
1.	தழைச்சத்து	5.28	4.23	5.51	4.79	5.60
2.	மணிச்சத்து	1.98	1.64	2.20	1.93	2.30
3.	சாம்பல் சத்து	1.90	2.52	2.00	1.93	2.20
	மொத்தம்	9.16	8.39	9.71	8.65	10.10

இரசாயன உரவிலை ஏற்றத்தினால், நடப்பு ஆண்டில் இரசாயன உரங்கள் அதிகமாக உபயோகப்படுத்தப்படும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அதன் உபயோகம் கணிசமான அளவு குறைந்துள்ளது. விவசாயிகள் உரவிலை ஏற்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட முழு அளவு, உரங்களையிட தயக்கம் காட்டுகிறார்கள். மேலும் மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களை குறைத்து தழைச்சத்து உரங்களை அதிக அளவில் இடுகிறார்கள். ஆகவே உர விலை சலுகை திட்டத்தினை தொடர்ந்து 1993-94-ம் ஆண்டிலும் செயல்படுத்துமாறு மத்திய அரசை கேட்கப்பட்டுள்ளது.

2. இரசாயன உர மானியம்

மத்திய அரசு 24.8.1992 முதல் மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்களின் மீதான கட்டுப்பாட்டை நீக்கியதன் காரணமாக டை அம்மோனியம் பாஸ்பேட், முயூரேட் ஆப் பொட்டாஷ் மற்றும் இதர கூட்டு உரங்களின் விலை இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இந்த உர விலை ஏற்றத்தை ஈடுகட்ட எம்.ஓ.பி. மற்றும் டி.ஏ.பி. உரங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000/-ம் இதர கூட்டு உரங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.435 முதல் ரூ.999-ம் மானியமாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இம்மானியம் வழங்க மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ரூ.34.32 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அனைத்து விற்பனை மையங்களும் (கூட்டுறவுத் துறை, பொதுத் துறை, தனியார்) சலுகை விலையில் உரங்கள் வழங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

3. உயிரியல் உரங்கள்

சுற்றுப்புற சூழலை பாதிக்காததாகவும், விலை குறைவானதாகவும் இருப்பதை கருத்தில் கொண்டு உயிரியல் உரமிடுதல் தற்போது பரவலாக்கப்படுகிறது.

கடலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் குடுமியான்மலையிலுள்ள நான்கு உயிரியல் உற்பத்தி மையங்களில் உயிரியல் உர உற்பத்தி மேற்கொள்ளப் பட்டுள்ளது. 1992-93-ம் ஆண்டு 35 லட்சம் பாக்கெட்டுகள் உயிரியல் உரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 24.83 லட்சம் பாக்கெட்டுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. உயிரியல் உரங்களின் தேவை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு தற்போதுள்ள 35 லட்சம் பாக்கெட்டுகள் (700 மெ. டன்கள் உயிரியல் உரம்) உற்பத்தி திறனை 50 லட்சம் பாக்கெட்டுகள் (1000 மெ.டன்கள் உயிரியல் உரம்) அளவிற்கு அதிகரிக்கப்படும். இதன் அடிப்படையில் உயிரியல் உர மையங்கள் மேம்படுத்தப்படும்.

நீலப்பச்சைப்பாசி வித்து உற்பத்தி 20 மையங்களில் மேற்கொள்ளப்பட்டு ஆண்டுக்கு 260 மெ.டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

1992-93-ம் ஆண்டு, பிப்ரவரி 1993 வரை 265 மெ.டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4. பசுந்தாள் உரவிதைகள் விநியோகம்.

மண்ணின் வளத்தை அதிகரிக்க, பசுந்தாள் உரமிடுதல் தற்போது பரிந்துரைக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 200 மெ.டன்கள் பசுந்தாள் உரங்கள் கொள்முதல் செய்து வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பயிர் பாதுகாப்பு

1992-93-ம் ஆண்டு 44.00 இலட்சம் ஹெக்டேரில் உணவு பயிர்களில் பூச்சி நோய்களை கட்டுப்படுத்தவும் 24.60 இலட்சம் ஹெக்டேரில் உணவு அல்லாத இதர பயிர்களில் பூச்சி நோய்களை கட்டுப்படுத்தவும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, நடப்பு ஆண்டில் பிப்ரவரி 93 வரை 41.31 இலட்சம் ஹெக்டேரில் உணவுப் பயிர்களிலும் 23.93 இலட்சம் ஹெக்டேரில் உணவு இல்லாத இதர பயிர்களிலும் பயிர் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 1993-94-ம் ஆண்டு 47 இலட்சம் ஹெக்டேரில் உணவுப் பயிர்களில் பூச்சி நோய்களை கட்டுப்படுத்தவும், 25.20 இலட்சம் ஹெக்டேரில் உணவு அல்லாத இதர பயிர்களில் பூச்சி நோய்களை

கட்டுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பூச்சி நோய் நிலைமை, பூச்சி கண்காணிப்பு பணிகள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் 7324 இடங்களில் பூச்சி நோய் கண்காணிப்பு புள்ளி விவரங்கள் சேகரிக்கப் பட்டு, அப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் பூச்சி நோய் தாக்குத லின் முன்னறிவிப்பு செய்திகள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படுகி றது.

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் தொழில் நுட்பங்கள் பெரும் அளவில் கடைபிடிக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த பூச்சி நோய் பராமரிப்பு முறைகளான உழவியல் முறை, பொறியியல் முறை, இயற்பியல் முறை மற்றும் உயிரியல் முறைகளின் மூலம் பூச்சி நோய்கள் கட்டுப்படுத்தப்படுகிறது. பூச்சி நோய்களின் தாக்குதல் பொருளாதார சேத அளவிற்கு அதிகமாக இருந்தால் மட்டுமே பூச்சி மருந்துகள் தெளிக்கும் முறை பரிந்துரைக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த பூச்சி நோய் பராமரிப்பின் அடிப்படையாக, பூச்சி நோய்களை இயற்கையாக எதிர்க்கவல்ல இயற்கை எதிரி பூச்சிகளை விவசாயிகள் அடையாளம் காணவும் அதனை பாதுகாக்கவும் பரிந் துரை செய்யப்படுகிறது. விளக்குப் பொறி, ஈர்ப்பு பொறி பூச்சி நோய்கள் விரும்பும் பயிர்களை பொறி பயிர்களாக வளர்த்தல், தூய்மையான சாகுபடி, நீர் மற்றும் உர நிர்வாகம் மற்றும் பயிர் சுழற்சி முதலியவற்றை கடைபிடிக்க விவசாயிகளுக்கு பரிந்துரை செய்யப்படு வதோடு இவற்றை கடைபிடிப்பதற்கு தேவையான முறைகள் பயிற்சிக ளின் மூலமாகவும், விவசாய பணியாளர்கள் கிராமத்திற்கு வரும் போது நேரிடையாகவும் விவசாயிகளுக்கு தெரிவிக்கிறார்கள். உயிரி யல் முறை கடைபிடிக்க உதவும் வகையில் கரும்பு பயிரில் இடைக்க ணுப் புழுவை கட்டுப்படுத்த 'ட்ரைக்கோகிரமா' என்னும் ஒட்டுண்ணி கள் ஒவ்வொரு ஆண்டும் 10,500 ஹெக்டேரில் வெளியிட 21 ஒட்டுண்ணி உற்பத்தி மையங்களில் ஒட்டுண்ணி உற்பத்தி செய்யப்படு கிறது. 1992-93-ம் ஆண்டு பிப்ரவரி 93 வரை 8364 எக்டேரில் ஒட்டுண்ணிகள் விடப்பட்டன. ஆண்டுக்கு 10,250 ஹெக்டேரில் தென்னையில் உள்ள கருந்தலைப்புழுவை கட்டுப்படுத்த தேவையான ஒட்டுண்ணிகள் (பெட்தலிட்ஸ், பிராகோனிட்ஸ், ஈலோபிட்ஸ்) 19

ஒட்டுண்ணி பெருக்கு மையங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. பிப்ரவரி 93 வரை இந்த ஒட்டுண்ணிகள் 4077 ஹெக்டேரில் விடப்பட்டது. பருத்தியில் காய்ப்புழுவை கட்டுப்படுத்த மூன்று மையங்களில் 'நியூகிலியர் பாலி ஹெட்டிரோலிஸ்' வைரஸ் உற்பத்தி செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் 1200 ஹெக்டேரில் விடப்படுகிறது. மேலும், தென்னையில் உள்ள காண்டா மிருக வண்டை கட்டுப்படுத்த ''கிரீன் மஸ்கர்டைன்'' பூஞ்சானம் நான்கு உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. 1993-94-ம் ஆண்டு இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மத்திய சார்பு திட்டங்கள்

ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டம்

புதிய தொழில் நுட்பங்களை செயல்படுத்தி, அரிசி உற்பத்தியை பெருக்குவது ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தில் விவசாயிகளை ஊக்குவித்து பரிந்துரைக்கப்பட்ட புதிய தொழில் நுட்பங்களை கடைபிடிக்கச் செய்ய சில முக்கிய இடுபொருள்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

1992-93-ம் ஆண்டு இத்திட்டத்தை செயல்படுத்த ஆகும் செலவை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. 1991-92-ம் ஆண்டு 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்த ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டம், 1992-93-ம் ஆண்டு 20 நெல் சாகுபடி செய்யும் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் திட்ட இனம் வாரியான குறியீடு மற்றும் பிப்ரவரி வரை செய்த சாதனை விபரம் வருமாறு:

அட்டவணை 2.8

வ. எண்	திட்ட இனம்	அலகு	பொருள் இலக்கு	பொருள் பிப்ரவரி 1993 வரை யிலான சாதனை	நிதி ரூபாய் இலட்சத்தில்) இலக்கு	நிதி ரூபாய் இலட்சத்தில்) பிப்ரவரி 1993 வரை யிலான சாதனை
1.	விதை விநியோகம் (10 வருடங்களுக்குள் வெளியிடப் பட்ட உயர் விளைச்சல் ரகங்களுக்கு ஒரு குவிண டாலுக்கு மானியமாக ரூ.200/- வீதமும் 10 வருடங்களுக்கு மேல் 15 வருடங்களுக்குள் வெளியிடப் பட்ட உயர் விளைச்சல் ரக விதைகள் ஒரு குவிண்டாலுக்கு ரூ.100/- வீதம் மானியம்)	மெ.டன்	16900	14772	260.251	226.6
2.	சிங்க் சல்பேட் விநியோகம் (25 சத மானியத்தில்)	"	1956	604	58.677	37.55
3.	ஜிப்சம் விநியோகம் (50 சத மானியத்தில்)	"	4657	4394	10.479	10.48
4.	பயிர பாதுகாப்ப மருந்துகள் விநியோகம் (25 சத மானியத்தில்)	ஹெ.	54582	37686	54.582	26.426
5.	களைக் கொல்லி விநியோகம் (25 சத மானியத்தில்)	"	48267	46376	48.267	29.74
6.	பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (கைத் தெளிப் பான் மற்றும் தூவுவான் 50 சத மானியத்தில் ஒரு கருவி ரூ.600/-க்கு மிகா மல்)	"	17645	11796	105.861	70.120

7.	வேளாண் கருவிகள் விநியோகம் எண்கள் (மானியம் ரூ.700 முதல் ரூ.1500-க்கு மிகாமல்)	19997	21445	89988	62.168
8.	விசை உழுவை விநியோகம் எண்கள்	2721	1637	326.520	240.000
9.	சில்லரை செலவினம் மற்றும் எரிபொருள் செலவினம்				
10.	விளம்பரம்			4.895	3.400
	மொத்தம்			959.520	708.769

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நெல் சிறுதளைப் பைகள் விநியோக திட்டம்

புதியதாக வெளியிடப்பட்ட நெல் இரகங்கள் விவசாயிகளிடையே பரவச் செய்யவும், வெளியிடப்படவுள்ள இரகங்களின் ஏற்பு தன்மையை தெரிந்து கொள்ளவும் மற்றும் புதிய இரகங்கள் விதைகள் விவசாயிகளிடம் போதிய அளவு இருப்பில் இருக்கச் செய்யவும், நெல் சிறுதளைப் பைகள் விநியோக திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான முழு செலவையும் மத்திய அரசு ஏற்கிறது.

அ. இத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட உள்ள இரகங்களின் இரண்டு கிலோ சிறுதளைப் பைகள் செங்கை எம்.ஜி.ஆர். தென் ஆற்காடு, சேலம், பெரியார், திருச்சி மற்றும் மதுரை ஆகிய ஆறு மாவட்டங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

ஆ. சமீபத்தில் வெளியிடப்பட்ட இரகங்கள் கொண்டு நான்கு கிலோ நெல் சிறுதளைப் பைகள் வட ஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், இராமநாதபுரம், பசும்பொன் மற்றும் கன்யாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. நான்கு கிலோ அளவான புதிய இரக சிறுதளைப் பையின் மதிப்பு சுமார் ரூ.32/-ம் இரண்டு கிலோ அளவில் வெளியிடப்பட உள்ள இரகங்களின் சிறுதளைப் பையின் மதிப்பு சுமார் ரூ.20/-ம் ஆகும். நெல் சிறுதளைப் பைகள் 75 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் 1992-93-ம் ஆண்டு செய்த சாதனை விபரம் வருமாறு:

அட்டவணை 2.9

வ. எண்	திட்ட இனம்	பொருள் (தளைகள் எண்ணிக்கையில்)		நிதி (ரூபாய் இலட்சத்தில்)	
		இலக்கு	பிப்ரவரி 93 வரை யிலான சாதனை	இலக்கு	பிப்ரவரி 93 வரை யிலான சாதனை
1.	சமீபத்தில் வெளியிடப் பட்ட இரகங்களின் சிறுத ளைப் பைகள் (ஒரு சிறுத ளைப் பைக்கு 4 கிலோ விதை)	13140	13425	4.205	4.257
2.	வெளியிடப்பட உள்ள சிறுதளைப் பைகள் (ஒரு சிறுதளைப் பைக்கு 2 கிலோ விதை)	550	265	0.110	0.053
	மொத்தம்	13690	13690	4.315	4.310

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

சிறப்பு உணவு உற்பத்தி திட்டம் - சிறு தானிய பயிர்கள்

புதிய தொழில் நுணுக்கங்கள் மற்றும் சாகுபடி முறைகள் கடைபிடிக்க விவசாயிகளை ஊக்குவிக்க சில இடுபொருள்களை மானிய விலையில் வழங்கி, வாய்ப்புள்ள மாவட்டங்களில் சோளம் மற்றும் கேழ்வரகு பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் சோளம் மற்றும் கேழ்வரகு பயிர்களுக்கான சிறப்பு உணவு உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆ. சோளம்

1991-92-ம் ஆண்டு ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்த சோளப் பயிருக்கான சிறப்பு உணவு உற்பத்தி திட்டம் 1992-93-ம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டு தென் ஆற்காடு, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல் அண்ணா, இராமநாதபுரம், காமராஜர், திருநெல்வேலி மற்றும் வ.உ. சிதம்பரனார் ஆகிய 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 100 சத மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992-93-ம் ஆண்டு இதுவரை இத்திட்டத்தின் கீழ் புரிந்த சாதனை விபரம் வருமாறு:

அட்டவணை 2.10

வ.எண்	திட்ட இனம்	அலகு	பொருள்		நிதி	
			இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை	இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை
1.	உயர் விளைச்சல் ரக விதைகள் ஒரு குவிண்டாலுக்கு ரூ.400 வீதம் விநியோகம் (10 வருடங்களுக்குள் வெளியிட்டவை)	மெ. டன்	98.00	90.84	3.911	2.557
2.	பயிர் பாதுகாப்பு கருவிகள் 50 சத மானியத்தில் விநியோகம்	எண்கள்	2278	1504	13.662	9.305
3.	வேளாண் கருவிகள் 50 சத மானியத் தில் விநியோகம்	,,	3093	6016	46.399	13.182
4.	10 எக்டேர் பரப்புடைய 3 செயல் விளக்கத் தளைகள் அமைத்தல் ஒரு எக்டேருக்கு மானியமாக ரூ.1000/- வீதம் (திருச்சி மாவட்டம் மட்டும்)	எக்.	30	30	0.300	0.300

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5.	விவசாயிகள் பயிற்சி ஒரு முகாமில் 100 விவசாயிகள் விதம் 3 பயிற்சி முகாம்கள் நடத்துதல். ஒரு விவசாயிக்கு ரூ.50/- விதம் (திருச்சி மாவட்டம் மட்டும்)	எண்கள்	300	300	0.150	0.150
6.	ஒரு எக்டேருக்கு ரூ.100 க்கு மிகாமல் 25 சத மானியத்தில் பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம்	எக்.	15578	5506	15.578	4.026
7.	ஒரு எக்டேருக்கு ரூ.150/-க்கு மிகாமல் 50 சத மனியத்தில் களைக் கொல்லி விநியோகம்	"	6285	503	9.425	0.438
8.	சில்லரை செலவினம் மற்றும் எரிபொருள் செலவினம்				0.250	0.100
	மொத்தம்				89.675	30.058

ஆ. கேழ்வரகு

1991-92-ம் ஆண்டு ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்த கேழ்வரகு பயிர்களுக்கான சிறப்பு உணவு உற்பத்தி திட்டம், இவ்வாண்டு விரிவுபடுத்தப்பட்டு செங்கை எம்.ஜி.ஆர். தென் ஆற்காடு, வட ஆற்காடு, அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், திருச்சி, பெரியார், புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல் அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன், காமராஜர், திருநெல்வேலி, வ.உ. சிதம்பரனார் ஆகிய 17 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் 100 சத செலவையும் மத்திய அரசே ஏற்கிறது. 1992-93-ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் புரிந்த சாதனை விபரம் வருமாறு:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 2.11

வ.எண்	திட்ட இனம்	அலகு	பொருள் இலக்கு	பொருள் பிப்ரவரி 93 வரையிலான சாதனை	நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு	நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 93 வரையிலான சாதனை
1.	விதைகள் விநியோகம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.400 விதம்	மெ. டன்	131.00	162.675	5.201	4.278
2.	பயிர் பாதுகாப்பு கருவிகள் 25 சத மானியத்தில் விநியோகம் (ஒரு கருவிக்கு மானியம் ரூ.600/-க்கு மிகாமல்)	எண்கள்	1300	1085	7.747	6.487
3.	எருது இழுக்கும் வேளாண் கருவிகள் 50 சத மானியத்தில் விநியோகம் (ஒரு கருவிக்கு மானியம் ரூ.500/- க்கு மிகாமல்)	"	1860	3464	9.295	6.194
4.	10 எக்டேர் பரப்பில் 2 செயல் விளக்கத் தளைகள் ஒரு எக்டேருக்கு ரூ.1000/- விதம் (தர்மபுரி மாவட்டம் மட்டும்)	எக்.	20	20	0.200	0.200
5.	விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் (ஒரு விவசாயிக்கு ரூ.50/- விதம் 2 பயிற்சி முகாம், ஒரு முகாமிற்கு 100 விவசாயிகள் விதம் (தர்மபுரி மாவட்டம் மட்டும்)	எண்கள்	200	200	0.100	0.100
6.	ஒரு எக்டேருக்கு ரூ.100-க்கு மிகாமல் 25 சத மானியத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம்	எக்.	7505	2809	7.503.	2.549
7.	ஒரு எக்டேருக்கு ரூ.150/-க்கு மிகாமல் 50 சத மானியத்தில் களைக் கொல்லி விநியோகம்	எக்.	4440	855	6.654	1.087
8.	சில்லரை செலவினம் மற்றும் எரிபொருள் செலவினம்				0.250	0.100
	மொத்தம்				36.950	20.995

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

சிறு தானிய சிறுதளைப் பைகள் விநியோகத் திட்டம்

புதிதாக வெளியிடப்பட்ட ரகங்கள் விவசாயிகளிடையே பரவ செய்யவும் வெளியிடப்பட்டுள்ள ரகங்களின் ஏற்பு தன்மையை தேர்வு செய்யவும் நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சிறுதானிய சிறுதளைப் பைகள் 75 சத மானியத்தில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு சிறுதளைப் பையின் அளவு மற்றும் அதன் மதிப்பு விவரம் வருமாறு:

அட்டவணை 2.12

வ.எண்.	பயிர்	தளையின் அளவு	ஒரு தளையின் மதிப்பு (ரூபாயில்)
1.	சோளம்	1 கிலோ	12.00
2.	மக்காச்சோளம்	2 கிலோ	20.00
3.	கேழ்வரகு	அரை கிலோ	5.00

1992-93-ம் ஆண்டு இத்திட்டத்தின் பொருள் மற்றும் நிதி சாதனை விபரம் வருமாறு:

அட்டவணை - 2.13

வ. எண்.	திட்ட இனம்	1992-93 இலக்கு	பிப்ரவரி 1993 வரையிலான சாதனை
1.	பொருள் - விநியோகம் செய்யப் பட்ட சிறுதளைப் பைகளின் எண்ணிக்கை (எண்களில்)	5936	5416
2.	நிதி (ரூபாய் இலட்சத்தில்)	0.576	0.518

இத்திட்டத்தின் மொத்த செலவையும் மத்திய அரசு முழுமையாக ஏற்கிறது. இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தேசிய பயறு மேம்பாட்டுத் திட்டம்

புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றுவதன் மூலம் பயறு வகைகளின் உற்பத்தியை அதிகப்படுத்துவதே இந்த மத்திய சார்பு திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் செலவை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற அளவில் ஏற்கிறது.

இத்திட்டம் நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்களை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள், பயறு வகைகளை சார்ந்த செயல்பாடு திட்டங்களைக் கொண்டு பயறு உற்பத்தித் திறனை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

1992-93-ம் ஆண்டு திட்ட இனம் வாரியாக குறியீடு மற்றும் சாதனை விபரம் வருமாறு:

அட்டவணை 2.14

வ. எண்	இனம்	அலகு	பௌதிகம்		நிதி (ரூபாய் இலட்சத்தில்)	
			இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை	இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை
1.	சிறுதளை ஒன்றுக்கு ரூ.40/- வீதம் 10 எக்டேர் செயல் விளக்கத் தளைகள்	எண்கள்	19425	19425	7.77	7.77
2.	ஒரு தளைக்கு ரூ.5125 வீதம்	"	444	397	22.76	20.35

3.	பயிற்சி ஒன்றுக்கு ரூ.11000 விதம்	..	2	2	0.22	0.22
4.	விசித்திராயம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.200/- விதம்	குவிண்டால்	5555	4145	11.11	8.29
5.	பயிர் பாதுகாப்பு கருவிகள் ஒன்று ரூ.200 விதம்	எண்கள்	1114	814	5.57	4.32
6.	ஒரு குவிண்டாலுக்கு ரூ.300/- விதம் சான்றிதழ் விதை மானியம்	குவிண் டால்	5885	4931	17.65	14.79
7.	பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஒரு எக்டருக்கு ரூ.100 விதம்	எக்.	2280	2552	2.28	2.15
8.	நுண்ணுயிர் கலவை பாக்கெட் ஒன்று ரூ.1.50 விதம்	ல.எண்கள்	1.69	1.46	2.54	2.19
9.	ஆதார விதைகள் மானியம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.400 விதம்	குவிண்டால்	2111	619	3.44	2.44
10.	வேளாண்மைக் கருவிகள் கருவி ஒன்றுக்கு ரூ.500 விதம்	எண்கள்	450	2873	2.25	1.71
11.	தெளிப்பு நீர்ப்பாசன கருவி ஒன்றுக்கு ரூ.5000 விதம்	..	317	245	31.70	24.50
12.	அலுவலர் சம்பளம்				6.67	1.95
	மொத்தம்				118.96	91.71

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டு மத்திய அரசின் அங்கீகாரம் பெற்று செயல்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் பயறுகளுக்கான பயிர் பாதுகாப்பு பணிகள்:

இந்த மத்திய சார்புத் திட்டம் துவரைப் பயிரைத் தாக்கும் காய்ப்புழு, வெட்டுப் புழு மற்றும் கரையான்களிலிருந்து பாதுகாத்து உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 சத மானியத்தில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.75/-க்கு மிகாமல் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் முழு செலவையும் மத்திய அரசு ஏற்கிறது.

1992-93-ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் செய்த சாதனை விபரம் வருமாறு:

அட்டவணை - 2.15

வ. எண்	திட்ட இனம்	அளவு	பொருள்		நிதி (ரூபாய் இலட்சத்தில்)	
			இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை	இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை
1.	50 சத மானியத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம்	ஹெக்.	10000	[illegible]	3.00	3.00

இத்திட்டம் *1993-94*-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

சிறப்பு உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் கோடை பச்சை பயறு / உளுந்து மற்றும் காராமணி சாகுபடி பரப்பை அதிகரிக்கும் திட்டம்:

கோடை பச்சை பயறு, உளுந்து மற்றும் காராமணி சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி, உற்பத்தியை உயர்த்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தில், உளுந்து, பச்சை பயறு மற்றும் காராமணி விதைகள் ஒவ்வொன்றும் 10 கிலோ கொண்ட 20,000 சிறுதளைப் பைகள், ஒரு சிறுதளைப் பைக்கும்

மானியமாக ரூ.50/- வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த மத்திய சார்புத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப் படுகிறது.

1992-93-ம் ஆண்டு பிப்ரவரி வரை இத்திட்டத்தின் கீழ் செய்த சாதனை விபரம் வருமாறு:

அட்டவணை - 2.16

வ. எண்	திட்ட இனம்	அலகு		பொருள்	நிதி (ரூபாய் இலட்சத்தில்)
		இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை	இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை
1.	சிறுதளைப் பைகள் விநி எண்கள் யோகம்	20000	16802	10.00	8.36

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தீவிர பருத்தி மேம்பாடு திட்டம்:

பருத்தியின் தேவை மிகவும் அதிகமாக உள்ளது. தற்போது உற்பத்தியாவதைவிட பருத்தியை பயன்படுத்துவதற்கும் உற்பத்திக்கும் உள்ள இடைவெளி 18.00 இலட்சம் பொதிகளாக உள்ளது. தமிழ்நாட்டில் தேவைக்கேற்ப அளவிற்கு பருத்தி உற்பத்தியை அதிகரிக்க அரசு பெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. பருத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்க வாய்ப்பு இல்லாததால், உற்பத்தி திறனை அதிகரித்து அதன்மூலம் உற்பத்தியை உயர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறது. இதனை கருத்தில் கொண்டு ஒரு மத்திய சார்பு திட்டம் 75:25 என்ற வீதத்தில் மத்திய மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டம் 1992-93-ம் ஆண்டு ரூ.60.775 லட்சம் ஒதுக்கீட்டுடன் மதுரை, இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன், வ.ஊ.சிதம்பரனார் மற்றும் நெல்லை கட்டபொம்மன் ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் 1992-93-ம் ஆண்டு திட்ட இன வாரியாக செய்யப் பட்ட சாதனை விபரம் வருமாறு:

அட்டவணை - 2.17

வ. எண்	திட்ட இனம்		அளவு		பொருள்	நிதி (ரூபாய் இலட்சத்தில்)
			இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை	இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை
1.	கருவிதைகள் உற்பத்தி குவிண்டாலுக்கு ரூ.2500/- விதம்	குவிண்டால்	3	2.7	0.075	0.068
2.	சான்றிதழ் விதைகள் விநியோகம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.400/- விதம்	குவிண்டால்	2300	1830	9.20	7.320
3.	அ) இன சேர்ப்பு பொறி செயல் விளக்கம் ஒரு ஹெக்டேருக்கு ரூ.500/- விதம்	ஹெக்	30	30	0.15	0.150
	ஆ) ஒரு ஹெக்டேருக்கு ரூ.750/- விதம் என்.பி. வைரஸ் செயல் விளக்கம்	ஹெக்	400	400	3.00	3.000
4.	பயிர் பாதுகாப்பு கருவிகள், விநியோகம் ஒரு கருவிக்கு ரூ.600 விதம்	எண்கள்	2000	1561	12.00	12.000
5.	தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் ஒரு கருவிக்கு ரூ.10,000/- விதம்	எண்கள்	200	200	20.00	20.000
6.	பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம் ஒரு ஹெக்டேருக்கு ரூ.400/- விதம்	எண்கள்	3750	3750	15.00	15.000
7.	விவசாயிகளுக்கு பயிற்சி ஒரு விவசாயிக்கு ரூ.50/- விதம்	எண்கள்	1200	1200	0.60	0.600
8.	சில்லரை செலவினம்				0.75	0.390
	மொத்தம்				60.775	58.528

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தீவிர சாகுபடி மூலமும், புதிய ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களை அதிக பரப்பில் சாகுபடி செய்வதன் மூலம் உற்பத்தி திறனை பெருக்கி கூடுதல் உற்பத்தியை பெற முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறது. மேலும் தற்போது பருத்தி சாகுபடி செய்யப்படும் இயல்பான பரப்பளவான 2.30 லட்சம் ஹெக்டேரை அதிகப்படுத்தி 2.50 லட்சம் ஹெக்டேர் அளவிற்கு உயர்த்திட சேலம், தர்மபுரி, பெரியார், திருச்சி, மதுரை, திண்டுக்கல் அண்ணா, பசும்பொன், காமராஜர், நெல்லை கட்டபொம்மன் மற்றும் வ.ஊ. சிதம்பரனார் ஆகிய 10 மாவட்டங்களில் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன வசதிகள் ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காக பருத்தி மேம்பாட்டிற்கு சிறப்பு திட்டம் ரூ.11.92 கோடி செலவில் மேற்கொள்ள மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் அமைத்தல், புதிய கிணறுகள் தோண்டுதல், பரிந்துரைப்படி இடுபொருள்கள் இடுதல், புதிய வீரிய ஒட்டு ரக விதைகள் விநியோகம், உரிய காலத்தில் பயிர் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் மானாவாரி நிலத்திற்கு ஏற்ற விவசாய கருவிகள் உபயோகித்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம்

புதிய தொழில் நுட்பங்களைக் கடைபிடித்து, பருத்தி உற்பத்தி திறனை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப் படுகிறது.

இத்திட்டத்தின் பருத்தி மேம்பாட்டிற்காக கீழ்க்கண்ட உத்திகள் கடைபிடிக்கப் படுகிறது.

1. பருத்தி சாகுபடியில் உயர் ரகங்களைக் கொண்டு சாகுபடி செய்யும் பரப்பை அதிகரித்தல்.

2. தேவைக்கேற்ப பரிந்துரைப்படி உரமிடுதல்.

3. மானாவாரி பருத்தி சாகுபடிக்கும் தேவையான மொத்த தேவையில் 10 சதவீதத்துக்கும், இறவை பருத்தி சாகுபடிக்கும்

தேவையான விதை அளவில் 15 சதவீதத்திற்கும் தேவையான சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குதல்.

4. சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் 100 சதவீதம் பயிர் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.

1992-93-ம் ஆண்டின் பொருள் இலக்கு சாதனை விவரம் வருமாறு:

அட்டவணை 2.18

வ. எண்	பொருள்	அலகு	குறியீடு	சாதனை (பிப்ரவரி '93 வரை)
1.	உயர் ரகங்களைக் கொண்டு சாகுபடி மேற்கொள்ளப் பட்ட பரப்பு	லட்சம் ஹெக்	2.50	2.50
2.	பரிந்துரைப்படி உரமிடப்பட்ட பரப்பு	லட்சம் ஹெக்	2.50	2.29
3.	சான்றிதழ் பெற்ற விதை உற்பத்தி மற்றும் விநியோகம்	குவிண்டால்	3750	3240
4.	சீர்மிகு சாகுபடி முறைகள் கடைபிடிக்கப்பட்ட பரப்பு	லட்சம் ஹெக்	2.50	2.50
5.	பயிர் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்ட பரப்பு	லட்சம் எக்டர்	2.50	1.46

எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம்:

விவசாயிகளுக்கு தேவையான உயர்தரமான இடுபொருள்களை மானிய விலையில் வழங்கி விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் எண்ணெய் வித்து பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்த மத்திய சார்பு திட்டம், சென்னை, நீலகிரி மற்றும் கன்யாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் ப்ழங்குடியினர் விவசாயிகளுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பிப்ரவரி 93 வரை பொருள் மற்றும் நிதி இலக்கின் கீழ் திட்ட இனம் வாரியாக செய்த சாதனை விவரம் வருமாறு:

அட்டவணை - 2.19

வ. எண்	திட்ட இனம்	அளவு	பொருள்		நிதி (ரூபாய் இலட்சத்தில்)	
			இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை	இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை
1.	ஆதார விதை உற்பத்தி - விதை கிராமத் திட்டம்	குவிண்டால்	10000	3463	40.00	13.249
2.	சான்றிதழ் மற்றும் உண்மை நிலை விதைகள் கொள்முதல்	குவிண்டால்	86996	87201	112.00	53.986
3.	சான்றிதழ் / வீரிய மற்றும் உண்மை நிலை விதைகள் விநியோகம்	"	90000	55956	90.00	55.225
4.	சிறுதளை விநியோகம்	எண்கள்	11288	27129	15.00	39.965
5.	பெருவிளக்கத் திடல்கள்	ஹெக்	15000	13988	150.00	159.434
6.	பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம்	லட்ச ஹெக்	1.075	0.872	107.50	76.337
7.	வேர்ப்புழு கட்டுப்படுத்துதல்	ஹெக்	2000	1701	10.00	4.725
8.	தெளிப்பு நீர்ப்பாசன கருவி விநியோகம்	எண்கள்	1250	949	125.00	94.093
9.	நுண்ணுயிர் கலவை பாக்கெட் (நிலக்கடலை மற்றும் சோயா பீன்ஸ் பயிர்களுக்கு	லட்சம் எண்கள்	0.50	0.41	7.50	5.231
10.	பயிர் பாதுகப்பு கருவிகள் விநியோகம்	எண்கள்	12000	8335	60.00	36.646

11.	வேளாண்மைக் கருவிகள் எண்கள் விநியோகம்		8572	2567	60.00	41.652
12.	ஜிப்சம் விநியோகம்	ல. டொக்	0.40	0.80	80.00	62.663
13.	அலுவலர்கள் சம்பளம் மற்றும் சில்லரை செலவினம்			28.00	15.000	
	மொத்தம்				885.000	658.211

நிலக்கடலையில் விதைப் பெருக்கத்தின் விகிதமும் குறைவாக இருப்பதனால் விதை இனத்தில் குறைவு ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஒப்புதல் பெற்று இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படும்.

எண்ணெய் பனை சாகுபடி:

சமையல் எண்ணெயில் தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு தேவையான பாமலின் எண்ணெயை நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் அரசு தமிழ்நாட்டில் எண்ணை பனை சாகுபடி மேற்கொள்ள தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. அரசு விதைப் பண்ணைகளில் 250 ஹெக்டேரிலும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், காயிதே மில்லத், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை நெல்லை கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 7 மாவட்டங்களில் விவசாயிகளின் நிலங்களில் 2000 ஹெக்டேரிலும் ரூ.24.89 கோடி செலவில் எண்ணை பனை சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 2250 ஹெக்டேரில் எண்ணை பனை சாகுபடி மேற்கொள்ளப் படுவதுடன் எண்ணை பனை நாற்றங்கால் அமைக்கவும், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சாக்கோட்டை அரசு விதைப் பண்ணையிலும், திருச்சி மாவட்டத்திலுள்ள இனங்கூர் பண்ணையிலும் இரண்டு எண்ணை பனை நாற்றங்கால்கள் அமைக்க மத்திய அரசு ரூ.107.17 லட்சம் நிதி அளித்துள்ளது. இந்நாற்றங்கால்களில் 2000 ஹெக்டேர் எண்ணை

பனை சாகுபடி மேற்கொள்ள 3.4 லட்சம் எண்ணை பனை நாற்றுகள் உற்பத்தி செய்யப்படும். இந்த மத்திய சார்பு திட்டத்தின் கீழ் 3.4 லட்சம் விரிய முளை விட்ட எண்ணை பனை விதைகள் கோஸ்டாரிக்கா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, முன் நாற்றங்கால் நடவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் செலவை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற அளவில் ஏற்கின்றது. மேலும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டையில் ஒரு எண்ணை பனை நாற்றங் கால் அமைத்து 250 ஹெக்டேருக்கு தேவையான எண்ணை பனை நாற்றுகள் உற்பத்தி செய்ய அரசு 1992-93 பகுதி -2 திட்டத்தின் கீழ் ரூ.10 லட்சம் அனுமதித்து உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 25,000 முளை கட்டிய எண்ணை பனை விதைகள் பாலோடில் உள்ள மத்திய மலைப் பயிர் ஆய்வு மையத்திலிருந்து பெற்று பட்டுக்கோட்டையில் முன் நாற்றங்கால் நடவு மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 1993-94-ம் ஆண்டு எண்ணை பனை நாற்றுகள் நடவு செய்து சாகுபடி மேற்கொள்ளப்படும். கோஸ்ட்டா ரிக்கா நாட்டில் எண்ணை பனை சாகுபடியில் உரிய பயிற்சி மேற் கொள்ள ஒரு உதவி வேளாண்மை இயக்குனர் (விற்பனை) அனுப்பப் பட்டுள்ளார். எண்ணை பனை சாகுபடி பற்றிய ஒரு கருத்தரங்கு விவசாயிகளும் அடிப்படை வேளாண் அலுவலர்களும் பயன் அடை யும் வகையில் மார்சு 93ல் நடத்தப்பட்டது. மேலும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்காகவும் முன் நடவடிக்கைகள் அடுத்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

மானாவாரி பகுதிகளில் தேசிய நீர்பிடிப்பு பகுதி மேம்பாடு திட்டம் (நவப்ரா)

மத்திய நிதி உதவியுடன் இயங்கும் தேசிய நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் தென் ஆற்காடு வட ஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், பெரியார், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, தர்மபுரி, திருச்சி, திண்டுக்கல் அண்ணா, மதுரை, பசும்பொன், காமராஜர், நெல்லை கட்டபொம்மன் ஆகிய 14 மாவட் டங்களில் உள்ள 84 வட்டாரங்களில் 84 நீர்பிடிப்பு பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசின் முழு நிதி உதவியு

டன் இத்திட்டம் செயல்படுகிறது. 75 சதம் உதவித் தொகையாகவும் 25 சதத்தினை நீண்டகால கடனாகவும் அளித்துள்ளது. 5 ஆண்டுகளில் 89,025 ஹெக்டேர் நிலபரப்பில் இத்திட்டத்தினை செயல்படுத்த மத்திய அரசு ரூ.35.61 கோடி நிதி அளித்துள்ளது.

மண்ணின் ஈரம் மற்றும் பெருமதிப்பு உள்ள மண்ணை பாதுகாப்ப தற்கு ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டு குறிகோள்களுக்கு ஏற்றவாறு பண்ணை முறைகளை இதுவரை பின்பற்றாத பகுதிகளில் கையாளுவதன் மூலம் பசுமை புரட்சியின் நன்மைகளை அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கால்நடை பராமரிப்பு, வேளாண் காடுகள், தோட்டக்கலை பயிர்கள், மற்றும் மீன் வளர்ப்பு, பட்டு பூச்சி வளர்த்தல், மற்றும் முதன்மையாக விளங்கும் வேளாண் பொருள்கள் பதப்படுத்துதல் ஆகிய வேளாண்மையைச் சார்ந்த இதர பணிகள் அனைத்தும் ஒருங்கிணைந்த நீர் பிடிப்பு பகுதியில் மேற் கொள்ளப்படும். திட்டமிடுதல் மற்றும் செயல்முறை வடிவமைப்பு செய்வதில் இருந்து திட்டம் நிறைவேற்றுதல் வரையிலும், பின் செய் ஆய்விலும், உழவர்களை ஈடுபடுத்துவதை முதன்மையாகக் கொண்டு இத்திட்டம் செயல்படும். மேலும் பல்வேறு அளவுகளில் அமைக்கப் பட்ட நீர்பிடிப்பு பகுதி குழுக்களின் மூலம் திட்டமிடுதலை கீழ்மட்டத் திலிருந்து அணுகுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

அனைத்து நீர்பிடிப்பு பகுதிகளுக்கான திட்ட அறிக்கைகளுக்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1992-93-ம் ஆண்டு 14 மாவட்டங்க ளில் 84 நீர் பிடிப்பு பகுதிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு ரூ.1129.553 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ.263.75 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பங்கு ஏற்கும் இதர துறைகளில் முயற்சிகளை ஒருங்கிணைத்து ஆற்றலுடன் செயலாக்கப்படும்.

அட்டவணை 2.20

வ. எண்	திட்ட இனம்	பொருள்	நிதி (ரூ. இலட்சத்தில்)
1.	அடிப்படை நடவடிக்கைகள்	-	2.25
2.	பண்ணை நாற்றங்கால் அமைத்தல் (இ.எண்கள்)	3.92	4.90
3.	பயிற்சி (எண்கள்)	671	10.79
4.	பயிர் விளைச்சல் போட்டி (எண்கள்)	84	0.20
5.	விளம்பரம் மற்றும் பிரசாரம் (எண்)	84	28.83
6.	ஆராய்ச்சி உதவி (எண்)	208	5.16
7.	பாதுகாப்பு பணிகள் (எண்கள்)	10006	20.72
8.	பயிர் நிருபணம் (எண்கள்)	43.84	19.42
9.	வேளாண் காடுகள் மற்றும் மாணாவாரி தோட்டக் கலை (இ.எண்கள்)	4.01	14.72
10.	இயற்கை பண்ணை முறை (அளவு)	14219	12.67
11.	வீட்டுத் தோட்டம் (எண்கள்)	10819	6.27
12.	உள்ளூர் உற்பத்தி முறை (எண்கள்)	6854	63.93
13.	சாகுபடிக்கு பயன்படாத நிலம் (இ.எண்கள்)	1.90	6.00
14.	கழிவு நீர் கால்வாய் சரி செய்தல் (எண்கள்)	168	0.30
15.	கால்நடை நிர்வாகம்	3998	7.24
16.	வேளாண் பொறியியல் செயல்பாடுகள் (அ) தற்காலிக தடுப்பு அணை	363	
	(ஆ) நிரந்தர தடுப்பு அணை	313	60,296
	(இ) ஓடுநீர் சேகரிப்பு	40	
	மொத்தம்		263,746

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்:

உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.309.29 கோடி ஒதுக்கீட்டுடன் ஏழு ஆண்டு செயல்படும் திட்டமாக பல்முனை செயல்பிரிவுகளுடன் 1991-92-ம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 1) வேளாண்மை திட்டமிடுதல், 2. வேளாண் விரிவாக்கம், 3. விதை உற்பத்தி, 4. ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு மேம்பாடு, 5. கால்நடை மேம்பாடு, 6. வன மேம்பாடு, 7. ஊரக குடிநீர் வழங்குதல் மற்றும், 8. ஊரக சாலை அமைப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசு சாராத நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் இத்திட்ட செயல்பாட்டில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் 1. கொள்கை வகுத்தல் மற்றும் திட்டமிடும் நிறுவனங்களை மேம்படுத்துதல், 2. வேளாண் விரிவாக்க பணியின் தரத்தை பல்முனைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், 3. அரசு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், 4. சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு, 5. கிராமபுற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகிய இலக்கினை அடையும் நோக்கம் கொண்டது. இத்திட்டம் முடிவு அடையும்போது ஆண்டொன்றுக்கு 1 மில்லியன் மெ. டன் பால் உற்பத்தி, 45000 மெ.டன் உணவு உற்பத்தி, 14,0000 மெ.டன் எரிபொருள் மர உற்பத்தி மற்றும் 61,000 கன அடி மரம் உற்பத்தி பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்ட விபரம் சுருக்கமாக பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.21

திட்ட இனங்கள் (ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	திட்ட இனம்	செயல்படுத்தும் நிறுவனம்	திட்ட பரப்பு	ஏழு ஆண்டுகளுக்கு மொத்த ஒதுக்கீடு
1.	வேளாண்மையில் திட்ட மிடுதல்	மாநில திட்டக் குழு திறனாய்வு மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் வேளாண்மை இயக்குநர் வரன்முறை மற்றும் ஒருங்கிணைப்பு குழு	மாநிலம் முழுவதும்	535.06
2.	வேளாண் விரிவாக்கம்	வேளாண்மை இயக்குநர்	மாநிலம் முழுவதும்	5602.27
3.	விதை உற்பத்தி	தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் வேளாண்மை இயக்குநர் விதை சான்றிதழ் இயக்குநர்	மாநிலம் முழுவதும்	955.85
4.	நீர்பிடிப்பு பகுதி மேம்பாடு	வேளாண்மை இயக்குநர்	மாநிலம் முழுவதும்	4732.19
5.	கால்நடை மேம்பாடு	கால்நடை இயக்குநர்	மாநிலம் முழுவதும்	4662.73

53-104-49

6.	வன மேம்பாடு	தனி தலைமை வன பாதுகாப்பு அலுவலர்	1. மதுரை 2. திண்டுக்கல் அண்ணா 3. திருச்சி 4. தர்மபுரி 5. சம்புவராயர் மற்றும் 6. தென்னாற்காடு மாவட்டங்களில்	4219.52
7.	ஊரக சாலைகள்	தலைமை பொறியாளர் (இ.சி.ஆர்)	1. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். 2. தென்னாற்காடு 3. வட ஆற்காடு அம்பேத்கார் 4. திருச்சி 5. தஞ்சாவூர் மற்றும் 6. நாகை மாவட்டங்களில்	5453.51
8.	ஊரக குடிநீர் விநியோகம்	ஊரக வளர்ச்சி இயக்குநர்	1. சேலம் 2. தர்மபுரி 3. திருவண்ணாமலை சம்புவராயர் 4. தென்னாற்காடு 5. திருச்சி மற்றும் 6. புதுக்கோட்டை மாவட்டங்களில்	4768.33
			மொத்தம்	30929.46

நிறுவனங்கள் மற்றும் அவற்றுக்கான உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அடையப்படவேண்டிய இலக்குகள் பின்வருமாறு:

1. கொள்கை திட்டமிடல் பிரிவை மாநில திட்டக்குழுவில் அமைத்தல்.

2. வேளாண் துறையில் கொள்கை திட்டமிடல் மற்றும் மேலாண்மை வசதிகள் மாற்றியமைத்தல், 3. கம்ப்யூட்டர் அடங்கிய மேலாண்மை தகவல் அமைப்பை ஏற்படுத்துதல், 4. கொள்கைகளை மாற்றியமைக்க தேவைப்படும் அடிப்படை விபரங்களை கண்டறிய பல ஆராய்வுகளை மேற்கொள்ளுதல், 5. விரிவாக்கம் பணியை பல்முனைப்படுத்துதல் மற்றும் அதன் தரத்தை அனுசரணை ஆராய்ச்சி, செயல் விளக்கம், பயிற்சி, மேற்பயிற்சி போன்றவை மூலம் உயர்த்துதல், 6. குடுமியான்மலையில் உள்ள மாநில பயிற்சி நிலையத்தை மேலாண்மை நிலையமாக மேம்படுத்துதல், 7. வேளாண் மைத் துறையிலிருந்து இடுபொருட்கள் விற்பனையை படிப்படியாக நீக்குதல், 8. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் கருவிதை மற்றும் ஆதார விதை உற்பத்தியை மேம்படுத்துதல், 9. வேளாண்மைத் துறை மூலம் சான்று விதை உற்பத்தி செய்தல், 10. விதைத் தரத்தை விதைச் சான்று இயக்குநர் மூலம் உறுதி செய்தல், 11. பாலாறு மற்றும் வெள்ளாறு நீர்பிடிப்பு பகுதிகளில் 54,000 எக்டேரில் நீர்பிடிப்பு பணி மேற்கொள்ளுதல், 12. 12 மாவட்டங்களில் 36,000 எக்டேர் பரப்பில் நீர்பிடிப்பு பகுதி மேலாண்மை தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், 13. குளிர் சாதனம் மூலம் உறைந்த விந்தைக் கொண்டு அயல் இன சேர்க்கை திட்டத்தை விரிவுபடுத்துதல், 14. கால்நடை மருத்துவத் துறை பணியாளர்களுக்கு கரு மாற்றம் செய்தல், நோய் கண்டறிதல், தீவன விதை உற்பத்தி, போன்றவற்றில் பயிற்சி அளிக்க வல்லுநர்களைக் கொண்டு திட்டம் தயாரித்தல், 15. தீவன உற்பத்தியை அதிகரிக்க தக்க உத்திகளை உருவாக்குதல், 16. இயற்கை வளத்தை மீட்கும் பகுதி மற்றும் உற்பத்தி பகுதி ஆகிய இரண்டு பகுதிகளில் வன வளர்ப்பை மேற்கொள்ளுதல், 17. 3,60,000 எக்டரில் 10 நீர்பிடிப்பு பகுதிகளில் உள்ள வன மரங்களுக்கு இடையே புல் வெளி அமைத்தல் 18. கிராமங்களையும் விற்பனை மையங்களையும் இணைக்கும் 800 கி.மீ. நீளம் கொண்ட ஊரக சாலையை மேம்படுத்துதல், 19. ஆறு மாவட்டங்களில் 12,000 கைபம்புகள் மூலம் ஊரக குடிநீர் வழங்குதல்.

இத்திட்டத்தின் கீழ்கண்ட இனங்களில் இலக்குகள் இதுவரை

அடையப்பட்டது.

1. மாநில திட்ட குழுவில் ஒரு கொள்கை மற்றும் திட்டமிடுதல் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

2. மாவட்ட ஆட்சியாளருக்கு வேளாண்மைக்கு தனி உதவியாளரை பணியமர்த்தியதன் மூலம் வேளாண்மை துறையில் கொள்கை திட்டமிடுதல் மற்றும் வரன்முறை பணிகள் மாற்றியமைக்கப்பட்டது.

3. தமிழ்நாட்டில் பல்முனை வேளாண் விரிவாக்க முறை அறிமுகப்படுத்தப் பட்டது.

4. குடுமியான்மலையில் உள்ள மாநில பயிற்சி நிலையம் மாநில வேளாண் மேலாண்மை மற்றும் பயிற்சி நிலையமாக மேம்படுத்தப்பட்டது.

5. தரமான விதைகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய அரசு விதை பண்ணைகளில் உள்ளிருப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.

6. மாநிலம் முழுவதும் செயற்கைமுறை கருத்தரிப்புக்கு உறைந்த விந்து வழங்கும் பொருட்டு கால்நடை துறை உள்ளிருப்பு வசதிகள் மேம்படுத்தப் படுகிறது.

7. மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் வன துறையினரால் மலை தோட்டப்பயிர் சாகுபடி மேற்கொள்ளப் படுகிறது.

8. பெரம்பலூர் சந்தை பகுதியில் கிராம சாலை அமைக்கும் திட்ட இனத்தின் கீழ் 36 கிலோ மீட்டருக்கு சாலை அமைக்கும் பணி நடைபெறுகிறது.

9. ஊரக குடிநீர் விநியோகத் திட்டத்தின் கீழ் 1991-92-ம் ஆண்டு 500 துளை கிணறுகள் அமைக்கப்பட்டது. 1992-93-ம் ஆண்டு 3500 துளை கிணறுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 2.22

பிப்ரவரி 1993 வரை செலவினங்களின் முன்னேற்றம்

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	திட்ட இனம்	ஏழு ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு	1993 பிப்ரவரி வரை சாதனை
1.	வேளாண்மையின் திட்டமிடுதல்	535.06	56.27
2.	வேளாண்மை விரிவாக்கம்	5602.27	571.85
3.	விதை உற்பத்தி	955.85	121.90
4.	நீர்பிடிப்பு பகுதி மேம்பாடு	4732.19	113.14
5.	கால்நடை மேம்பாடு	4662.73	333.84
6.	காடுகள் மேம்பாடு	4219.52	423.70
7.	ஊரக சாலைகள்	5453.51	116.64
8.	ஊரக குடிநீர் விநியோகம்	4768.33	173.76
	மொத்தம்	30929.46	1911.10

தமிழ்நாடு வேளாண்மையில் பண்ணை மகளிர் (டான்வா)

'டேனிஷ் அரசு' உதவியுடன் 1986 முதல் ஏழு ஆண்டு திட்டமாக 'தமிழ்நாடு வேளாண்மையில் பண்ணை மகளிர் திட்டம்' ரூ.4.13 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பண்ணை மகளிர், உணவு உற்பத்தியில் பெரும் பங்கு ஆற்றவும், புதிய தொழில் நுட்பங்கள் அவர்கள் கடைபிடித்து வாழ்க்கையில் உற்பத்தி பொருளாதார மேம்பாட்டை அடையவும் சிறு மற்றும் குறு பண்ணை மகளிருக்கு பயிற்சி வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய ஆறு மாவட்டங்களில் உள்ள உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் செயல்படுத்தப் படுகிறது. 1992-93-ம் ஆண்டு, 72 கிராம

அளவிலான பயிற்சிகள் ஒவ்வொன்றும் ஐந்து நாட்களுக்கு ஒவ்வொரு பயிற்சிகளும் 30 பண்ணை மகளிருக்கு பயிற்சி வழங்க திட்டமிடப் பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை 408 கிராம அளவிலான பயிற்சிகள் நடத்தப்பட்டு 12,982 பண்ணை மகளிருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த 'டான்வா' முதல் கட்ட திட்டம் ஏப்ரல் 93-ல் முடிவடையவுள்ளது.

1992-93-ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் செய்த சாதனை விபரம் வருமாறு:

பொருள்	1992-93-ம் ஆண்டு இலக்கு	பிப்ரவரி '93 வரையிலான சாதனை
1. கிராம அளவிலான பயிற்சிகள் (எண்ணிக்கையில்)	72	66
2. செலவு (ரூ.லட்சத்தில்)	27.36	54.29

தமிழ்நாட்டில் வேளாண்மையில் பண்ணை மகளிர் முதற் கட்ட திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டதை கருத்தில் கொண்டு இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டமாக தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்தி செயல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. இரண்டாம் கட்ட திட்டம் 1993-94-ம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளாக ரூ.26 கோடி ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப் படவுள்ளது. டானிட நிறுவனத்தின் மதிப்பீட்டுக் குழு 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தற்போது செயல்படுத்தப்படும் திட்டத்தை ஆய்வு செய்து, இரண்டாம் கட்ட திட்டத்தை முடிவு செய்தது. இந்த இரண்டாவது கட்ட திட்டத்தில் 70,000 பண்ணை மகளிரின் செயல் திறனை வேளாண்மையில் மேம்படுத்தப்படும்.

வேளாண்மைக் காடுகள்

சமுதாயக் காடுகள் பகுதி - 2 திட்டத்தின் ஒரு அங்கமாக 'சிடா' உதவியுடன் மானாவாரி நிலங்களில் வேளாண்மைக் காடுகள் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்ட காலம் 1988-89 முதல் 1992-93 வரையாகும். இத்திட்டத்தின் மொத்த திட்ட ஒதுக்கீடு ரூ.402.88 இலட்சம்.

காடுகளின் வளர்ப்பு மூலம் கிராமப் புறங்களுக்கு தேவையான எரிபொருள் தேவையான அளவுக்கு தொடர்ந்து கிடைக்கவும் மேலும் சிறுவனப் பொருள்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு போதுமான அளவு கிடைக்க செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டுகளில் 350 இலட்சம் பழவகை, எரிபொருள் வகை, நார் வகை, தீவன வகை மற்றும் மரவகை செடிகள் உற்பத்தி செய்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய இயல்புகள் வருமாறு:

1. குறைந்த அளவு மழையும், அதிக தரிசு நிலங்களும் உள்ள மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் தரப்படும்.

2. சிறு மற்றும் குறு விவசாயிகள் பலன் பெறுவர்.

3. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நபர் ஒன்றுக்கு 500 கன்றுகள் விதம் இலவசமாக வழங்க தேவைப்படும் மரக்கன்றுகள் பல்வேறு பகுதியில் உள்ள விவசாயிகளின் நிலங்களில் நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

4. உயிர் வாழும் செடிகளின் எண்ணிக்கை வளர்ச்சிக்கு ஏற்ப படிப்படியாக கண்டறியப்பட்டு ஒரு செடிக்கு ரூ.250 விதம் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

5. பண்ணை ஆராய்ச்சி மற்றும் பெருவிளக்கப் பண்ணை சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்பட்டு, மாநிலத்திலுள்ள பலதரப்பட்ட மண்ணிற்கு ஏற்ற ரகங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

இத்திட்டத்தில் 1992-93-ம் ஆண்டு பிப்ரவரி 93 முடிய செய்த சாதனை விவரம் வருமாறு:

அட்டவணை 2.23

வ.எண்	பொருள்	1992-93	
		இலக்கு	பிப்ரவரி 93 வரையிலான சாதனை
1.	நிதி (ரூபாய் இலட்சத்தில்)	173.00	101.68
2.	பொருள் (லட்சம் செடிகள்)		
	1. மரக் கன்றுகள் விநியோகம்	87.845	87.61
	2. ஒட்டு மாங்கன்று விநியோகம்	0.917	0.82
	3. பதியன்கள் விநியோகம்	1.238	1.04
	மொத்தம்	90.000	89.47

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாநில திட்டங்கள்

தரிசு நில சாகுபடித் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள சாகுபடிக்கு ஏற்ற பயன்படுத்தாத நிலங்கள் / தரிசு நிலங்களை சாகுபடியின் கீழ் கொண்டுவர மாநில அரசின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரிசு நிலங்களில் பின்வருமாறு சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

1. நிலைத்திருக்கும் மர வகைகளான தைல மரம், புளி, மா, கருவேல், மான் செவ்வேல், சுபாபுல், வாகை மற்றும் சவுக்கு மரங்கள் நடுதல்.

2. மரவகை செடிகளுக்கு இடைவெளியில் ஆரம்ப காலத்தில் சோளம்,

மக்காச்சோளம், கேழ்வரகு, பருத்தி, மிளகாய், பயறு வகைகள் முதலிய ஆண்டு பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்தல்.

இத்திட்டத்தில் மர வகைகள் மற்றும் ஆண்டு பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.1500 மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயி தன் பங்காக எக்டருக்கு ரூ.1000/-த்தினை சொந்த இருப்பிலிருந்தோ (அல்லது) நிதி நிறுவனம் மூலமாகவோ செலவிட வேண்டும்.

1991-92-ம் ஆண்டு ரூ.75 இலட்சம் ஒதுக்கீட்டுடன் 5000 ஹெக்டேர் பரப்பில் நெல்லை கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன், காமராசர், மதுரை, திண்டுக்கல் அண்ணா மற்றும் தர்மபுரி ஆகிய எட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

1992-93-ம் ஆண்டு இந்த எட்டு மாவட்டங்களில் மேலும் 5000 ஹெக்டேர் தரிசு நிலங்கள் சாகுபடியின் கீழ் கொண்டுவர ரூ.75 லட்சம் ஒதுக்கீட்டுடன் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

மேலும் 1992-93-ம் ஆண்டு இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், திருச்சி, புதுக்கோட்டை, பெரியார் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு ரூ.75 லட்சம் ஒதுக்கீட்டுடன், 5000 ஹெக்டேர் பாப்பில் தரிசு நில சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1992-93-ம் ஆண்டு மொத்தத்தில் இத்திட்டத்தின் கீழ் 17 மாவட்டங்களில் ரூ.150 லட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் 10.000 ஹெக்டேரில் தரிசு நில சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1992-93-ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் புரிந்த சாதனை விவரம் வருமாறு:

அட்டவணை - 2.24

வ.எண்	பொருள்	1992-93 குறியீடு	சாதனை (பிப்ரவரி 93 வரையிலானது)
1.	சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு (ஹெ)	10,000	9807
2.	செலவினம் (ரூ. லட்சத்தில்)	150.000	140.08

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டில் அதிக அளவாக 15000 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்படும்.

காவிரிப் பாசன விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை:

நெல் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்து அதன் உற்பத்தித் திறனை அதிகரிக்க, உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்கள், திருச்சி மாவட்டத்தில் முசிறி, குளித்தலை, லால்குடி, உடையார்பாளையம், அரியலூர், திருச்சி வட்டங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவுடையார் கோயில், ஆலங்குடி மற்றும் அறந்தாங்கி வட்டங்கள், தென்னாற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னார்கோயில் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஏக போக நெல் கொள் முதலுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல்லை வழங்கும் விவசாயிகளுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.35/- வீதம் உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த செலவையும் மாநில அரசு முழுமையாக ஏற்கிறது. 1992-93-ம் ஆண்டு ரூ.36.76 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, முழுமையாகச் செலவிடப்பட்டது.

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

சிறுபாசனத் திட்டம் - குழாய் கிணறுகள் மற்றும் கிணறுகள் திட்டம்:

சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் சிறு பாசன வசதிகளை ஏற்படுத்த உதவி வழங்க செயல்படுத்தப்பட்டு வந்த பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாக 1992-93-ம் ஆண்டு குழாய் கிணறு மற்றும் கிணறு அமைக்கும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டம் காமராஜர் மாவட்டத்தில் நான்கு வட்டாரங்களிலும், திண்டுக்கல் அண்ணா மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்து வட்டாரங்களிலும் ஆக மொத்தம் 14 வட்டாரங்களில் செயல்படுத்தப் படுகிறது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ.3.5 லட்சம் ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ.49 லட்சம் ஆகும். இத்திட்டத்தில் குழாய் கிணறு மற்றும் கிணறு அமைத்தல், கிணறுகளை ஆழப்படுத்துதல் (நீர் இருப்பு அளவைக்கு ஆன செலவையும் சேர்த்து) துளையிடும் இயந்திரத்திற்கான வாடகை, மின்சாரம் மற்றும் டீசல் மூலம் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வாங்குதல், குழாய்கள் அமைத்தல் முதலியவற்றிற்காக மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு 25 சதம் மானியமும், குறு விவசாயிகளுக்கு 33.33 சதம் மானியமும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு 50 சத மானியமும் தேசிய ரக வளர்ச்சி வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி மானியம் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம்:

மானாவாரி சாகுபடித் தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் மானாவாரி பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, மானாவாரி விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் அமைக்கப்படும் ஒவ்வொரு 100 ஹெக்டேர் பெரு விளக்கத் தளையும் அருகிலுள்ள விவசாயிகளுக்கு மானாவாரி தொழில் நுட்பங்களை விளக்கும் செயல் விளக்கமாக அமைகிறது. 1992-93-ம் ஆண்டில் 400 இடங்களில் ஒரு இடத்தில் 100 ஹெக்டேர் வீதம் பெரு விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, மொத்தம் 40,000 ஹெக்டேரில் ரூ.168 லட்சம் ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை - 2.25

வரிசை எண்.	தொழில் நுட்பம்	ஒரு ஹெக் டேருக்கு செலவு ரூ.	மானிய சத வீதம்	ஒரு ஹெக் டேருக்கு மானியம் ரூ.
1.	கோடை உழவு	400	50	200
2.	ஊட்டமேற்றிய தொழு உரம்	300	20	60
3.	இருபோக சாகுபடி	100	50	50
4.	ஒருங்கிணைந்த பயிர் பாது காப்புத் தொழில் நுட்பம்	100	50	50
5.	மேலுரம் இடுதல் மற்றும் நுண்ணூட்டக் கலவையிடுதல்	80	50	40
	மொத்தம்			400

இத்திட்டம் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப் படுகிறது. 1992-93-ம் ஆண்டு பிப்ரவரி 93 வரை செய்த சாதனை விவரம் வருமாறு:

வ. எண்	திட்ட இனம்	1992-93 இலக்கு	சாதனை பிப்ரவரி 93 வரை	இலக்கு	சாதனை பிப்ரவரி 93 வரை
1.	கோடை உழவு	40000	39600	80.00	78.292
2.	ஊட்டமேற்றிய தொழு உரமிடுதல்	40000	36013	24.00	21.224
3.	இருபோக சாகுபடி	40000	18368	20.00	9.513
4.	ஒருங்கிணைந்த பயிர்ப் பாது காப்பு தொழில் நுட்பம்	40000	37600	20.00	18.619
5.	தழைச்சத்து மேலுரமிடல்	40000	39452	16.00	15.725
6.	விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்	40000	40000	8.00	7.950
	மொத்தம்			168.00	151.323

ஒருங்கிணைந்த மாநில எண்ணெய் வித்து மேம்பாடுத் திட்டம்:

இத்திட்டம் ரூ.30 லட்சம் ஒதுக்கீட்டுடன் 1992-93-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப் படுகிறது. மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் தரமான விதைகள் உபயோகப்படுத்துவதை ஊக்குவிக்க 4590 ஹெக்டேருக்குத் தேவையான நிலக்கடலை விதைகள் ஒரு ஹெக்டேருக்கு ரூ.500/- விதம் மான்யமாக வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் 4700 ஹெக்டேரில் சிகப்புக் கம்பளிப் புழுவை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடித்துக் கட்டுப்படுத்த மான்யம் வழங்கப்படுகிறது. இதுவரை 5599 ஹெக்டேரில் நிலக்கடலை விதைகள் மானிய விலையில் வழங்கப்பட்டதோடு 1550 ஹெக்டேரில் சிகப்புக் கம்பளிப் புழு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.29.62 லட்சம் செலவிடப் பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தென்னை மேம்பாடு திட்டம்:

விவசாயிகளுக்குத் தேவையான தென்னங்கன்றுகளை விநியோகம் செய்ய தென்னை மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 17 தென்னை நாற்றங்கால்களில் நெட்டை ரக தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யவும், 11 தென்னை நாற்றங்கால்களில் நெட்டை மற்றும் குட்டை ரக கன்றுகள் உற்பத்தி செய்யவும் நான்கு தாய் மரத் தோட்டங்களில் நெட்டை ரக நெற்றுகள் உற்பத்தி செய்யவும், திட்டம் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளுக்குத் தேவையான தென்னங்கன்றுகள் வழங்கப்படுகிறது. தென்னையில் தோன்றும் 'கருந்தலை புழுவை' கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் 19 ஒட்டுண்ணி உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்த 'கிரீன் மஸ்கர்டைன் பூஞ்சணம்' இரண்டு மையங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது.

1992-93-ம் ஆண்டு தென்னை நெற்று கொள்முதல் மற்றும் தென்னங்கன்று விநியோகத்தின் கீழ் புரிந்த சாதனை விவரம் வருமாறு:

அட்டவணை - 2.26

(லட்சம் எண்களில்)

வரிசை எண்.	பொருள்	இலக்கு	சாதனை (பிப்ரவரி 93 வரை)
1.	விதை நெற்று கொள்முதல்		
	1. நெட்டை	*23.35*	*11.25*
	2. நெட்டை குட்டை	*10.05*	*4.16*
	3. குட்டை நெட்டை	*0.30*	*0.05*
	மொத்தம்	*33.70*	*15.46*
2.	விநியோகம்		
	1. நெட்டை	*14.00*	*3.42*
	2. நெட்டை குட்டை	*7.00*	*3.62*
	3. குட்டை நெட்டை	*0.18*	*0.08*
	மொத்தம்	*21.18*	*7.12*

1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வாடல் நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களைக் கணக்கெடுப்பதற்கான அளவை மேற்கொள்ளுதல்:

1992-93-ம் ஆண்டு தஞ்சாவூர் வாடல் நோய் மற்றும் கேரள வாடல் நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை அளவை மூலம் கணக்கு எடுக்க இத்திட்டம் அனுமதிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் தென்னாற்காடு, வடாற்காடு அம்பேத்கார் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் பயிற்சியளிக்கப்பட்ட *380* ஆய்வாளர்களைக் கொண்டு தஞ்சாவூர் மற்றும் கேரள வாடல் நோய்களால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்ப

டும். இக் கணக்கெடுக்கும் பணி மத்திய மலைப் பயிர் ஆராய்ச்சி நிலையம் / தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மை துறை அலுவலர்களின் கண்காணிப்பில் மேற் கொள்ளப்படும். இத்திட்டம் ரூ.3.10 லட்சம் மொத்த ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் 50 சத செலவினை மாநில அரசும், மீதமுள்ள 50 சத செலவினை கொச்சியிலுள்ள தென்னை மேம்பாட்டு வாரியமும் ஏற்கிறது. இந்தக் கணக்கெடுப்புப் பணி முடிந்தவுடன் தஞ்சாவூர் மற்றும் கேரள வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

தென்னங்கன்றுகள் விற்பனை மற்றும் பாதுகாப்பு மையங்கள் கட்டும் திட்டம்:

தரமான தென்னங்கன்றுகளை வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்படும் தென்னங்கன்றுகள் காய்ந்துப் போவதைத் தடுத்து, கன்றுகளை பாதுகாக்க, விற்பனை மற்றும் பாதுகாப்பு மையங்கள் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது. 1992-93-ம் ஆண்டு ரூ.18.45 லட்சம் ஒதுக்கீட்டுடன் 45 பாதுகாப்பு மையங்கள் கட்டப் பட்டு வருகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் கட்டுமான செலவுக்காக ரூ.36,000 வீதம் மொத்தம் ரூ.16.20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மணல் பாத்திகள் அமைக்கவும், பானை மூலம் நீர் ஊற்றவும் ரூ.2.25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1992-93-ம் ஆண்டிற்கு இத்திட் டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்களுக்கு 'புரட்சித் தலைவியின்' தென்னங்கன்று விநியோகத் திட்டம்.

பள்ளி மாணவர்களிடையே மரம் வளர்க்கும் ஆர்வத்தை ஊக்கு விக்க 1992-93-ம் ஆண்டு ஆறாம் வகுப்பு படிக்கும் 96800 பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக தென்னங்கன்றுகள் ரூ.15 லட்சம் ஒதுக்கீட்டுடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டு மேலும் விரிவுபடுத்தப்பட்டு ஆறாம் வகுப்பில் படிக்கும் 50 சத மாணவர்களுக்கு 2.5 லட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்படும். இத்திட்டம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தப்படும்.

சோயா மொச்சை சாகுபடித் திட்டம்

சோயா மொச்சையில் அதிக புரதச் சத்து இருப்பதைக் கருத்தில் கொண்டு குறிப்பிடத்தக்க பரப்பில் சோயா மொச்சை சாகுபடி மேற் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. சோயா மொச்சை சாகுபடியை ஊக்குவிக்க ஒரு மாநில அரசுத் திட்டம், செங்கை எம்.ஜி.ஆர்., சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மற்றும் மதுரை ஆகிய ஒன்பது மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது. 1992-93-ம் ஆண்டு ரூ.0.87 லட்சம் ஒதுக்கீட்டில் 300 செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயல் விளக்கத் தளையும் 0.4 ஹெக்டேர் பரப்பு உடையது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

கரும்பு

1992-93-ம் ஆண்டு, மாநில அரசு கரும்பிற்கு பரிந்துரை செய்த விலை

மத்திய அரசு, 1991-92-ம் ஆண்டிற்குரிய கரும்பிற்கான சட்ட பூர்வ குறைந்தளவு விலையை அறிவித்தபோது, 1992-93-ம் ஆண் டிற்கு 8.5% சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கான குறைந்த அளவு விலை டன் ஒன்றுக்கு ரூ.270/- என்று நிர்ணயம் செய்தது. தமிழக அரசு, கரும்பு சாகுபடியாளர்கள் மற்றும் ஆலை உரிமையாளர்

களோடு கலந்து பேசிய பின்னர் 1992-93-ம் அரைவைப் பருவத்திற்குரிய பரிந்துரைக்கப்பட்ட விலை 8.5% சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு, டன் ஒன்றுக்கு ரூ.330/- என அறிவித்தது. கரும்புக்கு வசூலிக்கப்படும் கொள்முதல் வரியை 14 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக அரசு குறைத்ததால் டன் ஒன்றுக்கு கிடைக்கும் சுமார் ரூ.15/-ம் இதில் அடங்கும். மேலும் மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த கரும்பின் குறைந்த அளவு விலையை பின்னர் உயர்த்தினாலும் மத்திய அரசு அறிவித்த குறைந்த அளவு விலைக்கும் மாநில அரசு பரிந்துரை செய்த விலைக்குமிடையேயான வேறுபாடு தொடர்ந்து ரூ.60/- என்ற அளவில் பராமரிக்கப்படும் எனவும் தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. அண்மையில் மத்திய அரசு 8.5 சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்புக்கு சட்டப்படிக்கான குறைந்தளவு விலையை டன் ஒன்றுக்கு ரூ.270/-லிருந்து ரூ.310/-ஆக உயர்த்தியுள்ளது. அதன் காரணமாக மாநில அரசு பரிந்துரை செய்த விலை 8.5% சதவீத கட்டுமானம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.370/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் கரும்பு வயலிலிருந்து ஆலைக்குக் கரும்பை எடுத்துச் செல்லும்போது 30 கி.மீ. தொலைவு வரை கரும்பு விவசாயிகள் வண்டி வாடகை செலுத்தி வந்ததை மாற்றி அரசு, நடப்பு 1992-93-ம் அரைவைப் பருவத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிற்கு மட்டும் விவசாயிகள் வண்டி வாடகை செலுத்தினால் போதுமெனவும், 20 கிலோ மீட்டருக்கு மேலுள்ள தொலைவிற்கு ஆலையே வண்டி வாடகையை ஏற்க வேண்டும் எனவும் ஆணையிட்டுள்ளது. இவ்வாறாக கரும்பு வயலிலிருந்து ஆலைக்கு கரும்பை எடுத்துச் செல்வதற்கு, குறைந்தளவு 20 கி.மீ. தொலைவிற்கான போக்குவரத்து கட்டணத்தை கரும்பு விவசாயிகள் ஏற்பர்; 20 கி.மீட்டருக்கு மேலுள்ள தொலைவிற்கான கட்டணத்தை ஆலை ஏற்கும்.

கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்

கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம், கரும்பு பயிரிடும் பகுதிக்கும், அந்தந்த சர்க்கரை ஆலைப் பகுதிக்குமிடையே இணைப்புச் சாலைகள் (மற்ற மாவட்ட சாலைகள்) அமைப்பதற்காக ஏற்படுத்தப் பட்டது. கரும்பு வயல்களிலிருந்து, கரும்பை சர்க்கரை ஆலைகளுக்கு எளிதான முறையில் எடுத்துச் செல்ல, நல்ல சாலை வசதி இன்றியமையாதது. வாங்கப்பட்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.5/- என்ற வீதத்தில் சர்க்கரை ஆலைகள் பிழிந்த கரும்புக்கு தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு

சர்க்கரை கட்டுப்பாட்டு சட்டத்தின் வழிவகைகளின் கீழ் மேல்வரி விதிப்பதன் மூலம் மேற்படி திட்டத்திற்கான நிதி திரட்டப்படுகிறது.

2. புதிய சாலைகள் அமைக்கும் பணி சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகள், சர்க்கரை ஆணையர் ஆகியோரின் ஆலோசனைப்படி குறித்த கால முறைப்படி தெரிந்தெடுக்கப்பட்டு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட கரும்பு மேல்வரி விவரம் வருமாறு:

அட்டவணை 2.27

ஆண்டு	(ரூபாய் இலட்சத்தில்)
1988-89	277.58
1989-90	349.90
1990-91	1055.85
1991-92	702.86
1992-93 (28.2.93 வரை)	746.44

3. கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் புதிய சாலைப் பணிகள் பராமரிப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை மற்றும் சாலைகள் அமைக்கப்பட்ட தொலைவு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை - 2.28

ஆண்டு	புதிய சாலைகள் அமைக்கும் பணி (ரூ. லட்சத்தில்)	சாலை பராமரிப்புப் பணி (ரூ. இலட்சத்தில்)	மொத்தம் (ரூ. இலட்சத்தில்)	மேற் கொள்ளப் பட்ட புதிய சாலைப் பணியின் தொலைவு (கி.மீ.)
1988-1989	*150.03*	*50.13*	*200.16*	*51.175*
1989-90	*150.03*	*50.00*	*200.03*	*37.985*
1990-91	*130.06*	*150.13*	*300.19*	*32.495*
1992-93 (28.2.93 வரை)	*154.32*	*161.58*	*315.90*	*12.000*

1992-93-ம் ஆண்டில் ரூ.920.06 இலட்சம் செலவில் 135.66 கி.மீ. தொலைவிற்கு சாலைகள் அமைக்க அரசு நிருவாக அனுமதியளித்துள்ளது. நடப்பு ஆண்டில் மொத்தம் ரூ.225/- இலட்சம் செலவில் 12.0 கி.மீ. தொலைவிற்கு புதிய சாலைகள் அமைக்கவும் பழைய சாலைகளைப் பராமரிக்கவுமான பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

1993-94-ம் ஆண்டில் புதிய சாலைப் பணிகளுக்காக ரூ.300/- இலட்சமும், பழைய சாலைகளைப் பராமரிக்க ரூ.160/- இலட்சமும் செலவிட கருதப்பட்டுள்ளது.

கரும்பு மேம்பாடுத் திட்டம்

புதிய சாகுபடித் தொழில் நுட்பங்களைக் கண்டபிடித்து கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் கரும்பு மேம்பாடுத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. 1992-93-ம் ஆண்டு இத்திட்டக் குறியீடு மற்றும் சாதனை விவரம் வருமாறு:

வ. எண	பொருள்	அலகு	குறியீடு	சாதனை (பிப்ரவரி 93 வரை)
1.	பரிந்துரைப்படி உரமிடுதல்	லட்சம் எக்டேர்	2.00	2.00
2.	செயல் விளக்கத் தளை அமைத்தல்	எண்	575	439
3.	ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்தல் & வெளியிடுதல்	எக்டர்	10500	8364

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

உழவர் பயிற்சி நிலையம்:

இம்மாநிலத்தில் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் கோவை, மதுரை, திண்டுக்கல் மற்றும் உதகை மாவட்டங்கள் நீங்கலாக உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இயங்கி வருகின்றன. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் முன்பிருந்த மாவட்டங்களின் உழவர் பயிற்சி நிலையங்களைக் கொண்டு பயிற்சித் தேவைகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையமும் ஆண்டுதோறும் உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கு 22 பயிற்சிகளும், 110 சுழற் பயிற்சியுடன் கூடிய செயல் விளக்கங்களும் நடத்துகின்றன. இவை தவிர, வேளாண் குடிமக்கள் திருந்திய சாகுபடித் தொழில் நுட்பங்களை அறியச் செய்ய, மாதாந்திரச் செய்தி மடல்கள், விளம்பரப் பலகைகள் மூலம் தொழில் நுட்பச் செய்திகள் தெரிவித்தல், வானொலி மூலம் உழவர் சுற்றுலா, உழவர் தின விழா போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்கின்றன. விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்க ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையத்திலும் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ஒலி ஒளி பதிவு செய்யும் கருவி, ஸ்லைடு காட்டும் கருவி முதலியன வழங்கப்பட்டுள்ளது. மேலும் பயிர் உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் வெள்ளம் / வறட்சி போன்ற இயற்கை பாதிப்பில் இருந்து பாதுகாப்புப் பெறத்தக்க தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். 1993-94-ம் ஆண்டில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்கம் பற்றிய பயிற்சி வழங்க முக்கியத்துவம் அளிக்கப்படும். இத்திட்டம் 1993-94-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1992-93-ம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஆண்டிற்கான இலக்கு, பிப்ரவரி 93 முடிய சாதனை மற்றும் 1993-94-ம் ஆண்டிற்கான திட்ட இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

அட்டவணை - 2.29

வ. எண்	பொருள்	பயிற்சிகள் எண்ணிக்கை		
		1992-93 இலக்கு	பிப்ரவரி 93 முடிய சாதனை	1993-94 இலக்கு
1.	உழவர் மற்றும் பண்ணை மகளிருக்கான கிராமப் புற பயிற்சி	264	250	264
2.	உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கான கிராமப்புற பயிற்சி	120	141	120
3.	சுழற் பயிற்சியுடன் கூடிய இரண்டாம் நிலைச் செயல் விளக்கம்	1320	1129	1320

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993-94-ம் ஆண்டு உழவர் பயிற்சி நிலையங்கள் மேம்படுத்தப்படும். வேளாண்மை பண்ணை மகளிர் மேம்பாட்டில் இரண்டாம் கட்ட திட்டத்தில் பண்ணை மகளிர்க்கான பயிற்சி, அனைத்து உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் அளிக்கப்படும். தற்போதுள்ள துணை வேளாண்மை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) என்ற பெயர் மாவட்ட திட்ட அலுவலர் (டான்வா) என்று மாற்றப்படும்.

வேளாண் பள்ளிகள்:

இம்மாநிலத்தில் 12 வேளாண் பள்ளிகள் இயங்கி வந்தன ஆண்டுதோறும் ஒவ்வொரு பள்ளியிலும் எட்டாவது தேறி பள்ளிப் படிப்பை நிறுத்திய பண்ணை அனுபவம் கொண்ட 18 முதல் 3

வயதினைச் சார்ந்த இளைஞர்களுக்கு திருந்திய சாகுபடி முறைகளில் ஓராண்டு காலம் பயிற்சி அளித்து அவர்களை வேளாண்மையில் ஈடுபடுத்துதல் இப்பள்ளிகளின் நோக்கமாகும். அதற்கென மாதந்தோறும் நபருக்கு ரூ.100 உதவித் தொகை வழங்கப்பட்டு பயிற்சி முடிந்தவுடன் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டது.

ஒவ்வொரு பள்ளியும் ஆண்டொன்றில் 25 மாணவர்களைப் பயிற்றுவிக்க வசதி கொண்டவை. 1992-93-ம் ஆண்டில் சான்றிதழ் பயிற்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன் இப்பள்ளிகளின் செயல்பாடு சீர்திருத்தப்பட்டு மாற்றியமைக்கப் பட்டன. மொத்தமுள்ள 12 பள்ளிகளில் 10 பள்ளிகளை மூட அரசு ஆணையிட்டது. வட ஆற்காடு மாவட்டம் நவ்லாக் மற்றும் புதுக்கோட்டையில் குடுமியான்மலையில் உள்ள இரண்டு பள்ளிகள் மேம்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டு பட்டயப்படிப்பு அளிக்க ஆணையிடப்பட்டது. இப்பள்ளிகள் வருடந்தோறும் தலா 40 மாணவர்களைப் பயிற்றுவிக்கும்.

மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் - குடுமியான்மலை

வேளாண் விரிவாக்க பணியாளர்களான வேளாண்மை அலுவலர் (தொழில் நுட்பம்), வேளாண்மை அலுவலர், வேளாண்மை துணை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர் ஆகியோருக்கு பயிற்சி அளிக்க மாநில வேளாண் பயிற்சி நிலையம், குடுமியான்மலையில் இயங்கி வருகின்றது. வேளாண்மை அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சியும், வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு புத்தூட்டப் பயிற்சியும் அளிப்பது மட்டுமின்றி, வேளாண் விரிவாக்கத் திட்டத்தில் முக்கிய பணிப் பிரிவுகளில் சிறப்பு பயிற்சியும் வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் தற்போதுள்ள பயிற்சித் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதோடு, வேளாண்மை துறை இடைநிலை மற்றும் முதுநிலை அலுவலர்களுக்கு விரிவாக்க மேலாண்மை பயிற்சி அளிக்க உலக வங்கி நிறுவன நிதியுதவியுடன் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையமாக மேம்படுத்தப் பட்டுள்ளது.

1992-93-ம் ஆண்டில் பயிற்சி திட்ட இலக்குகள் பிப்ரவரி 93 முடிய சாதனை மற்றும் 1993-94-ம் ஆண்டிற்கான இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

அட்டவணை - 2.30

வ. எண்	பயிற்சி விபரம்	பயிற்சியாளர்கள் எண்ணிக்கை		
		1992-93 இலக்கு	பிப்ரவரி 93 முடிய சாதனை	1993-94 இலக்கு
1.	வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு புத்தூட்டுப் பயிற்சி	55	47	50
2.	வேளாண்மை அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சி	50	-	50
3.	சிறப்பு பயிற்சிகள்			
	அ. வேளாண்மை அலுவலர்	1400	864	1400
	ஆ. வேளாண்மை உதவி அலுவலர்கள்	2000	1392	2000
4.	முதுநிலை மற்றும் இடைநிலை அலுவலர்களுக்கு மேலாண்மை ப்யிற்சி	-	-	200

மண் பரிசோதனை நிலையங்கள்

விவசாயிகளின் நிலங்களில் மண் ஆய்வு செய்து, தேவைக்கேற்ப உரமிட பரிந்துரை வழங்க 14 மண் பரிசோதனை நிலையங்களும், 15 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் செயல்பட்டு வருகிறது. இதுவரை மண் மாதிரிகள் கிராமங்களில் ஆங்காங்கே எடுக்கப்பட்டு உரமிட பரிந்துரை வழங்கப்பட்டு வந்தது. தற்போது கிராமம் முழுவதும் உள்ள மண்ணை ஆய்வு செய்து கிராம அளவிலான உரப்பரிந்துரைகள் விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. இதன்மூலம் கிராமத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தேவையான உரப் பரிந்துரைகள் வழங்கப்படுவதால் விவசாயிகள் மண்ணின்

தன்மைக்கு ஏற்ப தேவையான அளவு உரங்களை இடுதல் சாத்தியமாகும். 1993-94-ம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேல் குறிப்பிட்ட கிராமம் முழுவதற்குமான மண்ணாய்வு தருமபுரி மற்றும் திருச்சி மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மண் பரிசோதனை நிலையங்கள் ஒரு ஆண்டுக்கு 7.08 லட்சம் மண் மாதிரிகளையும், நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் 2.70 லட்சம் மண் மாதிரிகளையும் ஆய்வு செய்யும் திறன் உடையவை.

1992-93-ம் ஆண்டு மண் ஆய்வு செய்த விபரம் மற்றும் 1993-94-ம் ஆண்டு திட்ட விவரம் வருமாறு:

அட்டவணை - 2.31

வ. எண்	விபரம்	ஆய்வு செய்த மாதிரிகளின் எண்ணிக்கை (லட்சம் எண்கள்)		
		1992-93		1993-94
		இலக்கு	பிப்ரவரி 93 முடிய சாதனை	திட்டம்
1.	மண் பரிசோதனை நிலையம்	7.08	6.38	7.08
2.	நடமாடும் மண் பரிசோதனை நிலையம்	2.70	2.30	2.70
	மொத்தம்	9.78	8.68	9.78

தற்போதுள்ள 5 மண் பரிசோதனை நிலையத்தின் அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் கருவி அமைக்கும் திட்டம்:

மண்ணிலுள்ள நுண்ணூட்டச் சத்துக்களின் அளவை பரிசோதிக்க தற்போது நாகர்கோவில், மதுரை, சேலம், ஈரோடு மற்றும் மேலாலத்தூர் ஆகிய ஐந்து இடங்களில் செயல்பட்டுவரும் மண் பரிசோதனை நிலையங்களில் ''அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர்'' கருவி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.0.45 கோடி ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்பட உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் ஒரு பகுதி ஆகும்.

பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள்

ஒரு ஆண்டிற்கு 16,200 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யக்கூடிய திறன் உடைய ஒன்பது பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. 1992-93-ம் ஆண்டு 15125 பூச்சி மருந்து மாதிரிகள் பிப்ரவரி 93 முடிய ஆய்வு செய்யப்பட்டு அதில் 126 மாதிரிகள் தரக்குறைவானவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்மீது தேவையான நடவடிக்கைகள் பூச்சி மருந்து சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 1992-93-ம் ஆண்டும் தொடர்ந்து இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

அட்டவணை - 2.32

மாதிரிகள் எண்ணிக்கை (எண்களில்)

வ. எண்	திட்டம்	1992-93 குறியீடு	1992-93 பிப்ரவரி 93 முடிய சாதனை	1993-94 திட்டம்
1.	பூச்சி மருந்து ஆய்வு கூடம்	16200	15125	16200

உரப் பரிசோதனை நிலையங்கள்:

ஆறு உரப் பரிசோதனை நிலையங்கள் ஆண்டுக்கு 11,000 உர மாதிரிகளை ஆய்வு செய்யும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. பிப்ரவரி 93 வரை 10431 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு அதில் 373 மாதிரிகள் தரமற்றவை என கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உரக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

53-104-52

அட்டவணை 2.33

வ.எண்	திட்டம்	மாதிரிகள் எண்ணிக்கை (எண்களில்) 1992-93		1993-94 திட்டம்
1.	உர பரிசோதனை நிலையங்கள்	11000	10431	11,000

நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம்:

குடுமியான்மலையில் உள்ள நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம் ஆண்டுக்கு 1000 மெ.டன்கள் நுண்ணூட்டக் கலவை உற்பத்தி செய்யும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. 1992-93-ம் ஆண்டு பிப்ரவரி 93 வரை 589 மெ.டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு:

கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலியில் செயல்பட்டு வரும் மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு நிலையான பயிர் சாகுபடி முறைகள், உர உபயோகத் திறன் பராமரிப்பு, தகுந்த சாகுபடி முறைகளை கடைப்பிடித்து உற்பத்தியை அதிகப்படுத்துதல் முதலிய நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் மூலம் 1992-93-ம் ஆண்டு 14.40 லட்சம் எக்டேரில் மின் அளவை பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு பிப்ரவரி 1993 வரை 9.21 லட்சம் எக்டேரில் பணிகள் முடிக்கப்பட்டது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

உவர் மற்றும் களர் நில சீர்திருத்த திட்டம்:

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 800 எக்டேரில் களர் உவர் நிலங்கள் சீரமைக்க திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தில் பிப்ரவரி 93 வரை 756 எக்டேரில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பயிர் விளைச்சல் போட்டி

விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தி திறனை அதிகப்படுத்தவும் பயிர் விளைச்சல் போட்டிகளில் விவசாயிகள் உற்சாகத்துடன் கலந்து கொள்ள வகை செய்யவும் பயிர் விளைச்சல் போட்டி திட்டம் செயல்படுத்தப் படுகிறது. 1992-93-ம் ஆண்டு நெல் பயிருக்கான மாநில அளவு முதல் பரிசு ரூ.50,000-த்தில் இருந்து ரூ.1,00,000-ஆகவும் இரண்டாம் பரிசு ரூ.25,000-த்தில் இருந்து ரூ.50,000 ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கான பரிசுத் தொகை மற்றும் திட்டத்தில் கலந்து கொள்ள வசூலிக்கப்படும் பதிவு கட்டணம் ஆகிய விவரங்கள் வருமாறு:

அ. பரிசுத் தொகை

அட்டவணை - 2.34

(ரூபாயில்)

வ. எண்	பயிர்	மாநில அளவு		மாவட்ட அளவு	
		முதல் பரிசு	இரண்டாம் பரிசு	முதல் பரிசு	இரண்டாம் பரிசு
1.	நெல்	1,00,000	50,000	10,000	5,000
2.	நிலக்கடலை (இறவை)	10,000	5,000	4,000	2,000
3.	இதர பயிர்கள் சோளம், கம்பு, பச்சை பயறு, உளுந்து காராமணி	5,000	3,000	2,000	1,000

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பதிவு கட்டணம்

அட்டவணை - 2.35

(ரூபாயில்)

வ. எண்	பயிர்	மாநில அளவிலான போட்டி	மாவட்ட அளவிலான போட்டி
1.	நெல்	100	50
2.	நிலக்கடலை (இறவை)	25	10
3.	இதர பயிர்கள்	15	10

1992-93-ம் ஆண்டு இத்திட்டம் ரூ.12 லட்சம் ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப் படுகிறது.

இத்திட்டம் 1993-94-ம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப் படும்.

நகர்ப்புற கலவை உரத் திட்டம்

இம்மாநிலத்தில் தற்போது 3 மாநகராட்சிகள், 101 நகராட்சிகள் மற்றும் 7 நகராட்சி நகரியகக் குழுக்கள் உள்ளன. நடப்பு ஆண்டில் (1992-93) 108 நகராட்சிகளில் மொத்தம் 2,50,200 மெ.டன் கலவை உரம் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நகராட்சிகளில் தயாரிக்கப்படும் கலவை உரம், வேளாண்மை பெருங்குடி மக்கள் தங்கள் பண்ணையில் பயன்படுத்த விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் நகராட்சிகளில் தயாரிக்கப்பட்ட கலவை உரம் பற்றிய விவரம் வருமாறு:

அட்டவணை - 2.36

தொடர் எண்	ஆண்டு	தயாரிப்பு (மெ.டன்)
1.	1987-88	2,24,777
2.	1988-89	2,56,550
3.	1989-90	2,58,950
4.	1990-91	2,83,900
5.	1991-92	2,57,700

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நடப்பாண்டில் 43 நகராட்சிகள், கலவை உரம் போட்டிக்குத் தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளன. சிறந்த தரமான கலவை உரம் தயாரித்து, விற்பனை செய்தமைக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு பரிசுத் தொகையும் சுழல் கேடயங்களும் வழங்கப்படும். 1993-94-ம் ஆண்டிலும் நகராட்சிகளின் கலவை உரப் போட்டி நடத்தப்பட்டு, அவை தயாரிக்கும் கலவை உரத்தில் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

2. இயந்திர கலவை உரத் தொழிற்சாலை திருச்சிராப்பள்ளி

1993-94-ம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி நகராட்சியில், இயந்திர கலவை உரம் தொழிற்சாலை ஒன்றினை மொத்தம் ரூ.170 இலட்சம் செலவில் நிறுவுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, நகராட்சிகளில் சேரும் திட கழிவுப் பொருட்களை சுகாதார முறைப்படி அப்புறப்படுத்துவதோடு, வேளாண்மை பெருங்குடி மக்களுக்கு தரமான கலவை உரத்தினைத் தயாரித்து வழங்குவதும் ஆகும். இத் தொழிற்சாலை, தினமும் 150 மெ.டன் கழிவுகளைப் பெற்று, கலவை உரமாக மாற்றும் திறன் கொண்டதாகும்.

3. கழிவு நீர்ப் பண்ணைகள்:

தற்போது 22 உள்ளாட்சி மன்றங்கள் கழிவு நீரைப் பயன்படுத்தி கழிவு நீர்ப் பண்ணைகளை பராமரித்து வருகின்றன. இப்பண்ணைகளில், சீமைப்புல், தென்னை, சிறு தானியங்கள், கரும்பு, காய்கறிகள், மற்றும் இதர பயிர்கள் இலாபகரமாக பயிர் செய்யப்பட்டு வருகிறது. பயிர் விளைச்சல்களை அதிகரிக்கவும், கழிவு நீர்ப் பண்ணை வளத்தை மேம்படுத்தும் வகையில் இப்பண்ணைகளை அதிக இலாபகரமாகவும், சிறப்பாகவும் பராமரிக்க உள்ளாட்சி மன்றங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

அத்தியாயம் 3

தோட்டக்கலை

நோக்கங்கள்:

தோட்டக்கலை இயக்ககம், பல்வேறு தோட்டப் பயிர்களின் (காய்கறிகள், பழங்கள், மலர்கள், வாசனைப் பொருள்கள், தோட்டப் பயிர்கள்) உற்பத்தியினை பெருக்கும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறது. இக்குறிக்கோளினை நிறைவேற்றிட தரமுள்ள நாற்றுகள், விதைகள் மற்றும் இதர இடு பொருட்களை விவசாயிகளுக்குக் கொடுப்பதன் மூலம் தோட்டக்கலை பயிர் பரப்பினை அதிகரிப்பது, குறிப்பிட்ட பரப்பின் உற்பத்தியினை பெருக்குவது ஆகிய திட்டங் களை செயலாற்றி வருகின்றது. இத்துறை 53 அரசு தோட்டக்கலை பண்ணைகளை நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகள் மொத்தம் 203 இலட்சம், பழங்கள், மலர்ச் செடிகள் மற்றும் மலைவகைப் பயிர்களை (தேயிலைப் போன்ற) உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோ கித்து வருகின்றன.

முந்தைய ஆண்டுகளில் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி அளவுகள் மற்றும் 1993-94-ம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப் பட்ட உற்பத்தி இலக்குகள் குறித்த விவரங்கள் வருமாறு:

அட்டவணை - 3.1

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவும் மற்றும் உற்பத்தியும்

TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	விபரம்	1991-92		1992-93		1993-94	
		பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் மெ.டன்)	பரப்பு (இலட்சம் எக்டர் மதிப்பீடு)	பிப்ரவரி 93 முடிய சாதனை உற்பத்தி (இலட்சம் மெ.டன்)	பரப்பு (இலட்சம் எக்டர் மதிப்பீடு)	உத்தேச உற்பத்தி இலக்கு (இலட்சம் மெ. டன்)
1.	2.	3.	4.	5.	6.	7.	8.

1.	பழங்கள்	1.57	31.54	1.72	32.00	2.00	34.80
2.	காய்கறிகள்	1.65	37.46	1.72	35.90	2.00	35.90
3.	மலர்கள்	0.12	0.48	0.13	0.49	0.15	0.48
4.	வாசனை திரவியம் மற்றும் சுவை தாளிய பயிர்கள்	1.61	2.76	1.67	3.06	2.00	3.31
5.	மலைப் பயிர்கள்	1.85	2.03	1.92	2.06	2.25	2.14
	மொத்தம்	6.80	74.27	7.16	73.51	8.40	76.63

தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சியை பொறுத்தவரையில் தோட்டக்கலை இயக்ககம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அவை பற்றி அடுத்துவரும் பத்திகளில் விவரிக்கப்படுகிறது.

அ) மைய அரசு பெறும் திட்டங்களும் மற்றும் தேசிய தோட்டக்கலை வாரிய உதவி பெறும் திட்டங்களும்

1. மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம்.

2. மலைப்பகுதிமேம்பாட்டுத் திட்டம்

3. சொட்டு நீர்ப்பாசனத் திட்டம்.

4. முந்திரி மேம்பாட்டுத் திட்டம்.

5. நறுமணப் பயிர்கள் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்.

6. ஊரகப் பகுதிகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் அமைக்கும் திட்டம்.

7. நலிவுற்ற பழத் தோட்டங்களை சீர்படுத்தும் திட்டம்.

8. காய்கறி விதை வழங்கும் திட்டம்.

9. கோகோ மேம்பாட்டுத் திட்டம்.

10. தோட்டக்கலைப் பயிர்களுக்கு பாலித்தீன் பசுமை குடில்கள் நிறுவும் திட்டம்.

11. தோட்டக்கலை விவசாயிகளுக்கு கல்விச் சுற்றுலா மற்றும் பயிற்சி அளிக்கும் திட்டம்.

12. ஆதிவாசிகள் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டம்.

ஆ) மாநில அரசுத் திட்டப் பணிகள்:

1. தோட்டக்கலை ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்.

2. பயிற்சி வழி தொடர்பு விரிவாக்கத் திட்டம்.

3. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.

4. நீலகிரி தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம்.

5. மாணவர் தோட்டக்கலை பயிற்சி திட்டம்.

6. உதகமண்டலம், அரசினர் வண்ணப் பூங்கா எழிலார திட்டம்.

மத்திய அரசுத் துறை மற்றும் மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள்

1. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம், மேற்கு மலைத் தொடர் மாவட்டங்களான கோவை, பெரியார், திண்டுக்கல் அண்ணா, மதுரை, காமராஜர், நெல்லை கட்டபொம்மன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மண் அரிப்பைத் தடுக்கவும் மண்வளப் பாதுகாப்பு, மலைச் சரிவு இயற்கைச் சூழல் நிலையினை மேம்படுத்திடவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பகுதி விவசாயிகளுக்கு தேவைப்படும் நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களின் தரமான நடவு செடிகள் ஐம்பது சதமானிய விலையில் வழங்கப்படுகிறது. 1992-93-ல் இத்திட்டம் மூலம் 3500 எக்டர் பரப்பில் நிரந்தர தோட்டக்கலை பயிர்கள் பயிரிடுவதும் திண்டுக்கல் மாவட்டத்தில் தோட்டக்கலை பண்ணை நிறுவவும் மூன்று அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் மேல்நிலை தொட்டிகள், பூவணியில் (காமராசர் மாவட்டம்) பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் பேச்சிப்பாறை (கன்னியாகுமரி மாவட்டம்) அரசு தோட்டக்கலைப் பண்ணையில் பனித்துளைக் கூடம் கட்டுதல், ஆகிய பணிகளுக்காக ரூ.86.20 இலட்சம் செலவிடப்படும். 1993-94-ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.78.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம், நீலகிரி மாவட்டத்தில் மண் அரிப்பினால் ஏற்படும்

சேதத்தினை தடுக்கும் பொருட்டு, தேயிலை, பழங்கள், மற்றும் இதர வாசனைப் பொருள்கள் ஆண்டு சாகுபடியினின்றும் நிரந்த தோட்டக்கலைப் பயிர்களாக பொருளாதார வகையில் சாகுபடிக்கு மாற்றுவதன் மூலமும், மலைப் பகுதி சூழலினை பராமரிக்கவும் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தேயிலை, பழங்கள் மற்றும் பொருளாதார வகையிலான செடிகள், சிறு விவசாயிகள் மற்றும் ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் ஆகியோருக்கு 75 சத மான்ய விலையிலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு முழு மானிய விலையிலும் வழங்கப்படுகின்றது. தவிரவும், சிறு விவசாயிகள் குறுநில விவசாயிகள், தாழ்த்தப்பட்ட, பழங்குடி விவசாயிகள் ஆகியோருக்கு உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் 50 சத மானிய விலையில் வழங்கப்படுகின்றது. 1992-93-ம் ஆண்டில் 500 எக்டேர் பரப்பில் தேயிலை மற்றும் இதரப் பழப் பயிர்கள் சாகுபடி செய்ய ரூ.203 இலட்சம் செலவிடப்படும். 1993-94-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 500 எக்டர் பரப்பில் முறையே தேயிலை மற்றும் இதரப் பழப் பயிர் சாகுபடி செய்ய ரூ.200 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3. தோட்டக்கலைப் பயிர்களுக்குச் சொட்டு நீர் பாசனத் திட்டம்.

மத்திய அரசு, தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கு 1992-93-ம் ஆண்டில் சொட்டு நீர் பாசனம் அளிக்க ரூ.200 இலட்சம் நிதி அனுமதித்துள்ளது. வேளாண்மை பொறியியல் துறை இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தினால் பயனடையும் விவசாயிகளை தோட்டக்கலைத் துறை தேர்வு செய்து வேளாண்மை பொறியியல் துறைக்கு பரிந்துரைக்கிறது.

4. முந்திரி அபிவிருத்தித் திட்டம்.

தமிழ்நாட்டில் முந்திரி உற்பத்தியினை பெருக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உயர் விளைச்சல் அளிக்கக் கூடிய முந்திரி ஒட்டுச் செடிகள் மற்றும் பதியன்கள் ஆகியவை 75 சத மானிய விலையிலும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் 100 சத மான்ய விலையிலும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சாகுபடி நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 3860 எக்டர் எண்ணிக்கையில் ஜனவரி 93 வரையில் 1261.60 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1993-94-ம் ஆண்டில் இத்திட்

டத்தின் கீழ் மொத்தம் ரூ.26.74 இலட்சம் செலவில் 400 எக்டேர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் முந்திரி அபிவிருத்தி திட்டத்திற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஓர் செயல்முறை ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டம் மேற்கொள்ள கருதியுள்ளது. இதற்கு மத்திய அரசு நிதி உதவி கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நடப்பிலுள்ள சில முந்திரி அபிவிருத்தி திட்டப் பணிகள், அண்ணாமலை பல்கலை கழகத் தொழில் நுட்ப அபிவிருத்தியுடன் தென்னாற்காடு மாவட்டத்தில் உயர் விளைச்சல் அளிக்கவல்ல முந்திரி தோப்புகள் அமைக்கும் முகமாக உயர் இரக முந்திரி செடிகள் உற்பத்தி செய்யப்படும்.

5. நறுமணப் பயிர்கள் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் நறுமணப் பயிர்களின் உற்பத்தியினை அதிகரிக்கும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம்

(அ) 2.00 இலட்சம் மிளகு வேர்விட்ட பதியன்கள் உற்பத்தி செய்தல்.

(ஆ) 11,200 மிளகுப் பயிர் இடுபொருள் பெட்டிகள் விநியோகித்தல்.

(இ) மிளகு பயிரிடுவோருக்கு தேவைப்படும் 100 தெளிப்பான்கள் வழங்குதல்.

(ஈ) 50,000 மரவகை வாசனை திரவியப் பயிர்களின் நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.

(உ) 4165 கொத்தமல்லி சிறுதளைகள் வழங்குதல்.

(ஊ) மஞ்சள் பயிரில் 100 செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல்.

(எ) மிளகாய்ப் பயிரில் 100 செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல்.

(ஏ) மிளகாய் பயிரில் 4333 பயிர் பாதுகாப்பு செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல்.

(ஐ) மிளகாய் சாகுபடி செய்பவர்களுக்கு 50 தெளிப்பான்கள் வழங்குதல்.

(ஒ) 150 வாசனை திர்விய மர சாகுபடியாளர்களுக்கு நீர்ப்பாசன வசதி அளித்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

1993-94-ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.25.00 இலட்சம் செலவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

6. ஊரகப் பகுதிகளில் ஊட்டச் சத்து தோட்டங்கள் நிறுவும் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் தேசிய தோட்டக்கலை வாரியம் ஊரகப் பகுதிகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் நிறுவுவதற்காக 100 சதவீத நிதியுதவி அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதி விவசாயிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.50 மதிப்புள்ள 10 பழச்செடிகள் வீதம் இலவசமாக வழங்கப்படுகிறது. 1992-93-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 8.00 இலட்சம் பழச் செடிகள் விநியோகிக்க ரூ.40.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7. நலிவடைந்த பழத் தோட்டங்களைப் புதுப்பித்தல்:

இத்திட்டத்தின் நோக்கம் நலிவடைந்த பழைய மா, கொய்யா, சப்போட்டா, வாழை மற்றும் வாகை தோப்புகளை புதுப்பிப்பதாகும். இத்திட்டத்தின் கீழ் பழச் செடிகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, முதிர்ந்த மற்றும் காய்ந்துபோன மரங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. தவிரவும் தேவைப்படும் உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் ஐம்பது சத மானிய விலையில் வழங்கப்படுகிறது. 1992-93-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 300 எக்டர் பரப்பில் மா, 200 எக்டர் பரப்பில் கொய்யா, 100 எக்டர் பரப்பில் எலுமிச்சை, 300 எக்டர் பரப்பில் சப்போட்டா, 100 எக்டர் பரப்பில் வாழை போன்ற பழப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும். 1993-94-ம் ஆண்டில் ரூ.13.65 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

8. காய்கறி விதைகள் வழங்கல் திட்டம்:

காய்கறிகளின் உற்பத்தியினை அதிகரிக்கவும், புதிய உயர் ரக வீரிய ஒட்டு காய்கறிகளை அறிமுகம் செய்யவும் வீரிய ஒட்டு

தக்காளி, மற்றும் முட்டை கோசு பயிர்களின் சிறு பெட்டிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 1993 ஜனவரி வரையில், 2400 சிறு பை செடிகள் வழங்கப்பட்டுள்ளன. 1993-94-ல் இத்திட்டம் ரூ.10.00 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

9. கோ கோ அபிவிருத்தித் திட்டம்:

தமிழ்நாட்டில், கோகோ பயிர் உற்பத்தியினை பெருக்கவும் அலகு உற்பத்தியினை அதிகரிக்கவும் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள், கோகோ தோட்டங்களில் அறிவியல் உரமிடுமுறைகளையும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பின்பற்றும் வகையில் ஊக்கமளிக்கப்படுகின்றனர். 1992-93-ம் ஆண்டில் புதிதாக கோகோ பயிரில் 200 விளக்கத் திடல்கள் அமைத்தல், ஏற்கனவே, அமைக்கப்பட்ட 400 செயல் விளக்கத் திடல்கள் பராமரித்தல் மற்றும் 10 கோகோ தோட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளித்தல் ஆகியவற்றிற்காக கோகோ பயிரிடும் விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும். மேலும் கோகோ விற்பனை வாய்ப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். கோகோ மேம்பாட்டுக்காக 1992-93-ம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் குறித்து ரூ.6.97 இலட்சம் செலவிடப்படும். 1993-94-ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.4.30 இலட்சம் செலவில் தொடர்ந்து செயலாக்கப்படும்.

10. தோட்டக்கலைப் பயிர்களுக்கு பாலிதீன் பசுமை குடில்கள் அமைக்கும் திட்டம்:

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியில் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தினை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாட்டில் பாலித்தின் பசுமை குடில்கள் கட்டும் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப் படுகிறது. பாலித்தின் பசுமை குடில்கள் அமைத்து தோட்டக்கலை பயிர் சாகுபடி மேற்கொள்ளும் சிறு நில மற்றும் குறுநில விவசாயிகளுக்கு கட்டுப்படுத்தப்பட்ட முறைமையில் வெப்பம், ஈரப்பதம் மற்றும் காற்றழுத்தம் போன்றவை பராமரிப்பதால் மகசூல் அதிகரிக்க ஏதுவாகிறது. இத்திட்டத்தின் மூலம் சிறுநில மற்றும் குறுநில விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய உதவியில் ஒரு யூனிட் பாலித்தீன் பசுமை குடில்கள் அமைக்க ரூ.50,000-க்கு மிகாமல் மானியம் வழங்குகிறது. நகரப் பகுதிகளில் மாடித் தோட்டங்களில் இடவசதியினை ஏற்படுத்திக் கொள்பவர்கள் மத்திய அரசு மானிய உதவியினைப் பெறலாம். இதுவரையில் அனுமதித்த 9 யூனிட்களுக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் மேலும் 10

யூனிட்களுக்கு மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. 1993-94-ம் ஆண்டில் மொத்தம் ரூ.9.00 இலட்சம் செலவில் 20 யூனிட் பாலித்தீன் பசுமை குடில்கள் அமைக்கப்படும்.

11. தோட்டக்கலை விவசாயிகளுக்கு கல்விச் சுற்றுலா மற்றும் பயிற்சி அளித்தல்:

தேசிய தோட்டக்கலை வாரியம், தோட்டக்கலை சாகுபடியாளர்கள் ஏனைய மாநிலங்களுக்கு சென்று பார்த்துவர 100 சதவித நிதி உதவி அளிக்கிறது. 1992-93-ம் ஆண்டில், 250 தோட்டக்கலை சாகுபடியாளர்கள் வெவ்வேறு மாநிலங்களுக்கு அழைத்துச் செல்ல மொத்தம் இதற்காக ரூ.1.40 இலட்சம் செலவிடப்படும். மகாராஷ்டிரம், பஞ்சாப் போன்று முன்னேறிய மாநிலங்களுக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்படுவர். இத்திட்டம் 1993-94-ம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ.1.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. பழங்குடியினர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம் (தோட்டக்கலைத் திட்டங்கள்)

இத்திட்டம், சேலம் மாவட்டம் கொல்லிமலை, சேர்வராயன் மலை, அறுநூத்து மலை மற்றும் பச்சைமலைப் பகுதிகளிலும், தர்மபுரி மாவட்டம் சித்தேரி மலைப் பகுதிகளிலும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைப் பகுதிகளிலும், திருச்சி மாவட்டம் பச்சைமலைப் பகுதிகளிலும் மற்றும் தென்னாற்காடு மாவட்டம் கல்வராயன் மலைப் பகுதிகளிலும் வாழும் பழங்குடியினரின் பொருளாதார வகையில் மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடி விவசாயிகள் பழத் தோட்டங்கள் அமைக்க ஊக்குவிக்குமுகமாக தனி நபர் ஒருவருக்கு ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் பழச்செடிகளின் நடவுப் பொருட்கள் முழு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 1992-93-ம் ஆண்டில் இத்திட்டம் மொத்தம் ரூ.67.64 இலட்சம் செலவில் 1040 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்படும்.

அட்டவணை (3.2)

பழங்குடியினர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தில் ஏற்பட்டுள்ள திட்டச் சாதனை

தொடர் எண்	விவரங்கள்	திட்ட இலக்கு 1992-93-ம் ஆண்டு இலக்கு	1993 பிப்ரவரி சாதனை	திட்ட இலக்கு (1993-94)
1.	பழங்குடிப் பகுதி தனியார் பழத் தோட்டம் மேம்பாடு (எக்.)	2600	2600	2600
2.	இரண்டாண்டு பழத் தோட்டம் குறித்து தொடர் நடவடிக்கை. (ஏக்.)	2600	2600	2600
3.	தோட்டக்கலைப் பயிற்சி (விவசாயிகளின் எண்ணிக்கை)	1300	1300	1300
4.	தோட்டக் கலைக் கல்விச் சுற்றுலா (விவசாயிகளின் எண்ணிக்கை)	650	650	650
5.	தெளிப்பான்கள் வழங்குதல் (எண்ணிக்கை)	130	130	130

அட்டவணை - 3.3

மத்திய அரசுத் துறை மற்றும் மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் - நிதி சாதனை விவரம்

(ரூபாய் இலட்சத்தில்)

தொடர் எண்	திட்டம்	அனுமதிக்கப் பட்ட செலவு 1992-93	பிப்ரவரி 93 வரையிலான சாதனை (1992 - 93)
1.	மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தோட்டக் கலைத் திட்டங்கள்	86.20	47.40
2.	மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் தோட்டக் கலைத் திட்டம் (திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் துறைத் திட்டம்)	208.00	192.26
3.	தோட்டக்கலைப் பயிர்களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அளிக்கும் திட்டம்	200.00	200.00
4.	முந்திரி அபிவிருத்தி ஒருங்கிணைந்த திட்டம்	26.35	19.63
5.	நறுமணப் பயிர் மேம்பாட்டு ஒருங்கி ணைந்த திட்டம்	43.71	20.54
6.	ஊரகப் பகுதியில் ஊட்டச்சத்து தோட்டங்கள் அமைக்கும் திட்டம்	40.00	27.12
7.	வெப்ப பிராந்திய வறட்சி நலப் பகுதி பழ அபிவிருத்தி திட்டத்தில் நலிவுற்ற பழத் தோட்டங்களை உயிர்ப்பிக்கும் திட்டம் மற்றும் நிலப் போர்வை அமைக்கும் திட்டம்	13.88	5.35
8.	பழங்கள் காய்கறிச் செடிகளை வைக வில் வழங்கும் திட்டம்	13.53	13.53
9.	கோகோ அபிவிருத்தித் திட்டம்	6.97	3.57
10.	தோட்டக்கலைப் பயிர்களுக்கு பாலித்தின் பசுமை குடில்கள் நிறு வும் திட்டம்	18.00	10.00
11.	தோட்டக்கலை விவசாயிகளுக்கு கல் விச் சுற்றுலா மற்றும் பயிற்சி அளித்தல்	1.40	1.40
12.	ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம் பாட்டுத் திட்டம் (தோட்டக் கலைத் திட்டம்)	81.36	79.93
	மொத்தம்	738.10	620.73

மாநிலத் திட்டப் பணிகள்

1. தோட்டக்கலை மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம்

இத்திட்டத்தின் கீழ், நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், நறுமணம் மற்றும் மலைப் பயிர்களான காபி, முந்திரி ஆகிய பயிர்களின் சாகுபடியினை ஊக்குவிக்கும் வகையில் சிறு குறு விவசாயிகளுக்குத் தேவைப்படும் நிரந்தரத் தோட்டக்கலைப் பயிர்களின் நாற்றுகள் ஐம்பது சத மானிய விலையில் வழங்கப்படுகிறது. தவிரவும், உயர் ரகக் காய்கறிகளில் சான்றளிக்கப்பட்ட விதைகளும் கூட இத்திட்டத்தில் விநியோகிக்கப் படுகிறது. ஒவ்வொரு அம்சத்தின் கீழும் 9625 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்வது என்றிருக்கையில் நிரந்தர தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் காய்கறிப் பயிர்கள் ஆகியவற்றின் கீழ் 1993 ஜனவரி வரையில் 4998 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டில் மேலும் 10,000 எக்டர் பரப்பில் முறையே நிரந்தர தோட்டக்கலை பயிர்களும் காய்கறிப் பயிர்களும் பயிரிடப்படும். இத்திட்டத்திற்காக 1992-93 ஆம் ஆண்டில் ரூ.151.73 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. பயிற்சி வழித் தொடர்பு விரிவாக்கத் திட்டம்:

இத்திட்டம், நீலகிரி மாவட்டத்திலும் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் வட்டத்திலும் செயல்படுத்தப்படுகிறது. மலைச்சரிவுப் பகுதிகளில் தோட்டக்கலைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் களப்பணியாளர்கள், பழங்கள் மற்றும் காய்கறிப் பயிர்களின் உற்பத்தியினை சீரான முறையில் பெருக்குவதற்காக அண்மைக்கால நவீன தொழில் நுட்ப சக்திகள் தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். இத்திட்டம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கவும் மானிய விலையில் உரங்கள் வழங்கவும் வகை செய்கிறது. இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப் படுகிறது. இதற்காக 81.92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 60,000 பண்ணைக் குடும்பங்கள் பயனடையும். இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டிலும் 70,000 பண்ணைக் குடும்பங்கள் பயனடையும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கு 88.92 இலட்சம் ரூபாய்

நிதி ஒதுக்கப்படும்.

1992-93-ம் ஆண்டு எய்தப்பட்ட திட்ட இலக்கு மற்றும் சாதனை பற்றிய விவரம் வருமாறு:

அட்டவணை - 3.4

பயிற்சி வழித் தொடர்பு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் எய்தப்பட்ட திட்டச் சாதனை விபரம்:

தொடர் எண்	திட்டம்	இலக்கு (1992-93)	சாதனை 1993 பிப்ரவரி வரை
1.	மாதாந்திர பயிற்சி	60	60
2.	மாதாந்திர கருத்தரங்கு	24	24
3.	செயல் விளக்கம்	2040	1950
4.	விளம்பரச் சாதனைகள்	90	80

3. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்:

1992-93-ம் ஆண்டில், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் 204 இலட்சம் பழச் செடிகள், கன்றுகள், மற்றும் வேர்விட்ட துண்டுகள் (போத்துகள்) உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1993 ஜனவரி முடிய இதுவரை 65.44 இலட்சம் செடிகள் (கன்றுகள்) உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1992-93-ஆம் ஆண்டில் ரூ.104.30 இலட்சம் ரூபாய் செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 1993-94-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு ரூ.107.61 இலட்சம் செலவிட இலக்கிடப் பட்டுள்ளது.

4. நீலகிரி தோட்டக்கலை மேம்பாடுத் திட்டம்:

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழத் தோட்டங்களின் மேம்பாட்டிற்காக புல்டோசர்கள், டிராக்டர்கள் மற்றும் இதர இயந்திரங்கள் இத்திட்டத்தின் கீழ் வாடகைக்கு விடப்படுகிறது. சாதனங்களை 3,900

மணி நேரம் வாடகைக்குவிட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்க 5.56 இலட்சம் ரூபாய் செலவில் 2,276 மணி நேரம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. 1993-94-ம் ஆண்டில், இத்திட்டத் தின் கீழ் 4000 மணி நேரத்திற்கு மேலும், பண்ணை இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படும். இத்திட்டத்திற்காக 6.24 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. தோட்டக்கலை பயிற்சி மையம், தரமணி:

தரமணி தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில், தோட்டக்கலை படிப்பில் ஈராண்டு பட்டயப் படிப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண் ணிக்கை 20-லிருந்து 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட் டத்திற்காக ரூ.0.42 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. உதகமண்டலம் அரசினர் வண்ணப் பூங்காவினை எழிலார் திட்டம்:

இந்திய ஜெர்மானிய நீலகிரி மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் அரசினர் வண்ணப் பூங்காவில் மொத்தம் ரூ.71.50 இலட்சம் செலவில் பல்வேறு மேம்பாட்டு திட்டப் பணிகள் மேற் கொள்ளப்படும்; அவையாவன: ரூ.15.00 இலட்சம் செலவில், கண் ணாடி மாளிகை அமைத்தல், ரூ.15 இலட்சம் செலவில் கலைவடிவில் நுழை வாயில் அமைத்தல்; ரூ.10 இலட்சம் செலவில் தாவர கூடம் அமைத்தல்; ரூ.5 இலட்சம் செலவில் அழகிய நடைபாதையினை அமைத்தல்; ரூ.7.00 இலட்சம் செலவில் தற்போதுள்ள கண்ணாடி மாளிகையினை செப்பணிடுதல்; ரூ.7.50 இலட்சம் செலவில் செய்தி, கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடங்கள் கட்டுதல். ரூ.12.00 இலட் சம் செலவில், சாலைகளை மேம்படுத்துதல் சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல், வடிகால் வசதிகள் அமைத்தல் மற்றும் (பாலிகிரீன்) பசுமை குடில்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இதே நிதியிலிருந்து, உதகமண்டலம் ஏரிக்கு அருகிலுள்ள, சாகுப டிக்கு பயன்படும் நீர்பிடிப்புப் பகுதியில் மண்ணரிப்பின் மூலம் வண்டல் மண் படிவதைத் தடுக்க உதகை ஏரியில் நீர்பிடிப்புப் பகுதியைத் தூய்மைப்படுத்த ரூ.30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை - 3.5

மாநிலத் திட்டங்கள்: நிதி நிலைச் சாதனை

(ரூ. இலட்சத்தில்)

தொடர் எண்	திட்டத்தின் பெயர்	1992 - 93 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு	1993 பிப்ரவரி வரையில் எய்தப்பட்ட சாதனை (1992 - 93)
1	2	3	4
1.	தோட்டக்கலை மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம்	130.42	96.32
2.	தோட்டக்கலை சாகுடியாளர் களுக்கு பயிற்சி வழி தொடர்பு திட்டம்	81.92	69.77
3.	அரசினர் தோட்டக் கலைப் பண்ணைகள்	104.30	74.55
4.	நீலகிரி தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம்	5.90	5.90
5.	தேட்டக்கலைப் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு தோட்டக் கலைப் பயிற்சி அளித்தல்	0.36	0.16
	மொத்தம்	322.90	246.70

புதிய திட்டங்கள்

1. பழங்கள் காய்கறிகள் மேம்பாட்டுத் திட்டம்:

சென்னை நகர மக்களின் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு பழங்கள் காய்கறிகள் கொள்முதல் மற்றும் விற்பனைத் திட்டம் தேசிய பால்வள அபிவிருத்தி நிறுவனம் மூலம் செயலாக்க உத்தேசிக்கப் பட்டிருந்தது. சமீபத்தில் தேசிய பால்வள அபிவிருத்தி நிறுவனம், உலக வங்கி இத்திட்டதிற்கான நிதி உதவி அளிக்க தயக்கம் காட்டுவதாக தெரிவித்தது. எனவே, தமிழக அரசே இத்திட்டத்தினை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகத்தின் நிதி உதவியுடன் நடத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து வருகிறது.

2. தோட்டக்கலைப் பயிர் விளைச்சல் போட்டி:

தோட்டக்கலைப் பயிரின் உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் பெருக்குவதை ஊக்குவிக்கும் நோக்குடன், நெற்பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படுவது போல் பழங்கள் காய்கறிகள் விளைச்சல் போட்டியை 1993-94-ஆம் ஆண்டில் முதன் முறையாக நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தகைய போட்டிகள் தோட்டக்கலையில் உள்ள நவீன தொழில்நுட்ப உத்திகளை பின்பற்றுவதற்குரிய ஆர்வத்தை உழவர்களுக்கு ஊட்டும் இத்தகைய போட்டிகளை நடத்துவதற்கான முறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. தோட்டக்கலை பயிர் விளைச்சல் போட்டித் திட்டம் 1993-94 ஆம் ஆண்டில் செயல் முறைக்குக் கொண்டு வரப்படும்.

3. காய்கறி மேம்பாட்டுத் தீவிரத் திட்டம்:

காய்கறி மேம்பாட்டுத் தீவிரத் திட்டம் 1993-94-ஆம் ஆண்டில் கொண்டுவர உத்தேசிக்கப் பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள 90 வட்டங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். சான்றளிக்கப்பட்ட விதைகள், இரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு இரசாயனப் பொருட்கள் ஆகியவை மலிவு விலையில் வழங்கப்படும்.

4. அரசினர் தோட்டக்கலைப் பண்ணைகள் அடிப்படை வசதி வகை செயல் திட்டம்:

தெரிந்தெடுக்கப்பட்ட அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் பாசன வசதிகளைப் பெருக்கும் நோக்கத்துடன், 1993-94-ஆம் ஆண்டில் ரூ.9.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. திறந்த கிணறு துளைக் கிணறு தோண்டுதல், சிமிட்டித் தொட்டி கட்டுதல், மோட்டார் நீரேற்று அறை கட்டுதல், சொட்டு நீர்ப்பாசன முறைக்கு வகை செய்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். அரசினர் தோட்டக்கலைப் பண்ணைகள் நான்கு இதனால் பயனடையும்.

5. கொடைக்கானலில் தகவல் மற்றும் பயிற்சி நிலையம் கட்டும் திட்டம்:

தோட்டக்கலை சாகுபடியாளர்களுக்கு தோட்டக்கலை சாகுபடியில் புதிய தொழில் நுட்ப உத்திகளையும் கண்டுபிடிப்புகளையும்

பயிற்றுவிக்கும் நோக்குடன் கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் ஒரு தகவல் மற்றும் பயிற்சி நிலையம் கட்டும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்தகைய தகவல் மையம் அமைப்பதால், இப்பகுதிக்கு வருகை புரியும் மிக முக்கிய நபர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இப்பகுதி விவசாயிகளை சந்தித்து தோட்டக்கலை மற்றும் அது தொடர்பான கருத்துக்களை அவர்கள் பரிமாறிக் கொள்வதற்கு ஏதுவாக அமையும். இத்திட்டத்திற்கு 1993-94-ஆம் ஆண்டு ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தகவல் பயிற்சி மையம் அமைப்பதற்கான மொத்த செலவு ரூ.8.00 இலட்சமாகும்.

இதர திட்டங்கள்

1. தேசிய தோட்டப்பள்ளி வாரியம் மூலம் தானியப் பாதுகாப்பு விற்பனை வசதிகள் திட்டம்:

தோட்டப் பயிர் பாதுகாப்பு விற்பனைக்கான அடிப்படை வசதிகளை பெருக்கும் வகையில் தமிழ்நாடு அரசு தேசிய தோட்டப் பயிர் வாரியம் மற்றும் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பதிவு செய்த கூட்டுறவு விவசாயிகள் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. 1992-93-ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள 7 கூட்டுறவு அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்க ரூ.14.25 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இத்திட்டத்தில் பயன்பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் வருமாறு:

1. திராட்சை உற்பத்தியாளர் சங்கம்,
 ஓடைப்பட்டி, மதுரை.

2. பெரிய நாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம்,
 காய்கறி உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர் சங்கம்,
 பெரியநாயக்கன் பாளையம்,
 கோயம்புத்தூர் மாவட்டம்.

3. கோயம்புத்தூர் மாவட்ட திராட்சை உற்பத்தியாளர் சங்கம்,
 கோயம்புத்தூர்.

4. விருதாசலம் தோட்டக்கலை பயிர் உற்பத்தியாளர் சங்கம்,
 தென் ஆற்காடு மாவட்டம்.

5. பேய்குளம் நில உரிமையாளர் மற்றும் விவசாயிகள் மேம் பாட்டு சங்கம், இருவப்ப புரம், சாயர்புரம், வ.உ. சிதம்பர னார் மாவட்டம்.

6. திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், சென்னை.

7. நத்தம் ஊராட்சி கிராம மேம்பாட்டுக் குழு, திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

2. பழங்கள் மற்றும் காய்கறிகள் சங்கத்திற்கு நிதியுதவி அளிக்கும் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் சங்கங்களுக்கு வாகனங்கள் வாங்குதல், பிளாஸ்டிக் பாத்திரங்கள் தரம் பிரிக்கும் இயந்திரங்கள் வாங்குதல் போன்ற அடிப்படை வசதிகள் அளிக்க ஒரு சங்கத்திற்கு ரூ.7.5 இலட்சம் வீதம் 10 பழங்கள் மற்றும் காய்கறிகள் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும். இவ்வகை வசதிகள் மூலம் இச்சங்கங்கள் அதிக வருவாய் ஈட்டுவதற்காக தோட்டக்கலை விளை பொருட்களை அருகிலுள்ள அங்காடிகளுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக இருக்கும்.

3. வேளாண்மை நிதிக் கழகம் மூலம் தோட்டப் பயிர் குறித்து ஆய்வு செய்தல்:

தேசிய தோட்டக்கலை வாரியம், இம்மாநிலத்திற்கு பழங்கள், காய்கறிகள், சுவையூட்டும் பொருட்கள், மலர்கள் ஆகியன கொண்ட தோட்டக் கலைப் பயிர்கள் குறித்த தொழில் நுட்பப் பொருளாதார சாத்தியக் கூறு ஆய்வினை மேற்கொள்ள நிதியுதவி அளிக்கிறது. தமிழ்நாட்டில் தோட்டக்கலை பயிர்களின் நிலையினை கண்காணிக்க இந்த ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது. வேளாண்மை நிதி கழகம், விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ளது. இறுதி அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

4. தமிழ்நாட்டின் வெங்காய சாகுபடியினை மேம்படுத்தும் திட்டம்:

தமிழ்நாட்டில், ஏற்றுமதிக்கு உதவும் வகையில் வெங்காய சாகுப டியினை பிரபலபடுத்துமுகமாக தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்புடன் இணைந்த வேளாண்மை வளர்ச்சி இணை நிறுவனம் தமிழ்நாடு அரசுக்கு உதவ ஆர்வம் காட்டியுள்ளது. இந்நிறுவனம் தோட்டக்கலைத் துறையின் உடனுழைப்புடன் இதற்கான செயல்

திட்டத்தைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள், நீண்ட நாள் கெடாமலிருக்கக் கூடிய, வெங்காய வகைகளை அறிமுகப்படுத்துதலும், தேவையான மானியம் அளித்து விவசாயிகளிடையே அப்பயிர் முறையை ஊக்குவித்தலும் ஆகும்.

5. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் மூலம் தோட்டக் கலை மேம்பாட்டிற்கு நிதியுதவி அளிக்கும் திட்டம்:

தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தோட்டக் கலை விரிவாக்கத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு, பழங்கள் மற்றும் இதரத் தோட்டப் பயிர்களின் உற்பத்தியில் சிறப்பான சாதனை எட்டவும் அதன் விளைவாக உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பயன்களைப் பாதுகாக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6. தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பின் கீழ் தோட்டப்பயிர் விற்பனை விரிவாக்கத் திட்டம்:

தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு தமிழ் நாட்டிலிருந்து தோட்டப் பயிர்களின் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றது. தோட்டப் பயிர்களான திராட்சை, வாழை, மா மற்றும் வெங்காய பயிர்களின் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பின் உதவியுடன் ஆய்வு செய்யப்பட்டு தேவையான திட்டங்கள் தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பின் ஆதரவின் கீழ் அளிக்கப்படும்.

7. காளான் மேம்பாட்டுத் திட்டம்:

1993-94-ஆம் ஆண்டில், மத்திய அரசு உதவியுடன் மாபெரும் காளான் மேம்பாட்டுத் திட்டத்தை அரசு செயற்படுத்தும். எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ.*69.00* இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் விதைக் காளான் உற்பத்தி நிலையங்களுக்கும், கிருமிநாசினி செய்யப்பட்ட தொழு உர உற்பத்தி நிலையங்களுக்கும் 2200 விவசாயிகளுக்கு பயிற்சியளிப்பதற்கும் *1993-94*-ஆம் ஆண்டில் கனிசமான தொகை ஒதுக்கப்படும்.

அத்தியாயம் 4

வேளாண்மைப் பொறியியல்

உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்றவாறு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி நில, நீர்வளங்களை செவ்விய முறையில் நிருவகிக்க வேண்டியது அவசியமாகும். நிலம் முற்றிலும் மாற்றியமைக்க முடியாத இயற்கை ஆதாரமாக இருப்பதால், வேளாண்மைப் பயனுக்கும் வேறு பயன்களுக்கும் மிகவும் தேவையாக உள்ளது. காற்று, நீர் அரிப்புக் காரணமாகவும், முறையற்ற வகையில் நிலத்தைப் பயன்படுத்துவதனாலும் நிலத்தின் தரம் குறைந்து விடுகிறது. உற்பத்தி இலக்கை நிலைநிறுத்த வேண்டுமானால் மண் வளங்களைத் தொடர்ந்து கண்காணித்து, வேளாண்மை செய்ய வேண்டியது அவசியமாகும். வேளாண்மை உற்பத்தியின் நீர் முக்கிய இடு பொருளாகும். மழை ஒன்றே தண்ணீர் கிடைப்பதற்கு ஆதாரமாக விளங்குவதால் இந்த மழை நீரை இயன்றவரையில் பாதுகாப்பது இன்றியமையாததாகும்.

இம்மாநிலத்தில் உள்ள மண்வளத்தையும் நீர் ஆதாரங்களையும் பாதுகாத்தல், நிருவகித்தல், மேம்படுத்துதல் ஆகிய பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டு வருகிறது. இத்துறை கீழ்க்கண்ட பணிகளில் உழவர்களுக்குத் துணை புரிகிறது; அவையாவன:

1. மண் வளத்தையும் மண்ணின் ஈரப்பதத்தையும் பாதுகாத்தல், 2. மழை நீர் சேகரிப்பிற்கான பணிகளை மேற்கொள்ளுதல், 3. தற்போதுள்ள பாசன வளங்களை நிலைப்படுத்துதல் மற்றும் நீர்ப்பாசன நுண் முறைகள் மூலம் பேரளவு நீர்ப் பயன்பாட்டிற்கு வழிவகுத்தல், 4. ஆறு, ஏரி பாசனப் பகுதிகளில் நீர் நிருவாகம், 5. நில மேம்பாட்டு வேளாண் கருவிகளை வழங்குதல், 6. வேளாண்மைப் பணிகளை மேற்கொள்ளுதல், 7. நீர்ப்பகிர்வு முறை மூலம் வளம் குன்றிய நிலங்களை மேம்படுத்த வேளாண் உற்பத்தியை தொடர்ந்து பெருக்குதல்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், மண் நீர்வளப் பாதுகாப்பு,

சிறுபாசனம், நுண் பாசனம் பாசனப்பகுதி மேம்பாடு நில மேம்பாடுத் திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துவதன் மூலம் வேளாண்மைப் பொறியியல் துறை வேலை வாய்ப்பினை உருவாக்குகிறது.

1. நிலவள நிருவாகம்

மண் - நீர்வளப் பாதுகாப்பு

மலைப் பகுதிகளில் மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல், நிலப்பயன்பாட்டை முறைப்படுத்துதல், மலைப் பகுதிகளில் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாத்தல், சீரமைத்தல் ஆகியவற்றிற்காக வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் திட்டங்களை செயல்படுத்துகிறது.

குந்தா, கீழ்பவானி ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ் வருகின்ற நீர்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு, ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம் (ஆ.ப.தி.)

மத்திய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டம் நீர்த் தேக்கங்களில் வண்டல் படிவதைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சரிவு நிலப்பாத்திகள் நில வளைவிற்கேற்ப கற்சுவர், வண்டல் தடுப்பு ஏரிகள், வண்டல் தடுப்பணைகள் அமைத்தல் ஆற்றுப் பராமரிப்பு பணி, மரம் நடுதல் முதலியன போன்ற மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வதுடன் நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் உயர் முன்னுரிமை நீர்வரத்துப் பகுதிகளைச் சுத்திகரிப்பதன் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உழவர்களுக்கு பணிச் செலவில் 50 சதவீதம் மானியமாகவும், மீதம் கடனாகவும் வழங்கப்படுகிறது. கடன் தொகை இரண்டாண்டுகள் கழித்து, 10 ஆண்டுகள் சம தவணைகளில் திரும்பப் பெறப்படுகிறது. 1991-92, 1992-93-ஆம் ஆண்டுகளுக்குரிய இலக்கு மற்றும் சாதனை பற்றிய விவரமும் 1993-94-ஆம் ஆண்டிற்கான செயற் திட்டம் குறித்த விவரமும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

அட்டவணை 4.1

திட்ட இலக்கு பகுதி எக்டேரில்
நிதி இலக்கு ரூ.இலட்சத்தில்

	1991-92		1992-93		1993-94	
	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	7041	350.00	11816	389.22	7000	400.00
சாதனை	7596	358.37	9517★	300.908★	-	-

★ 1993 பிப்ரவரி வரை

1.2 மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மண் - நீர் வளப்பாதுகாப்பு

மத்திய அரசு நிதியுதவி பெறும் இத்திட்டம் கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன், மதுரை, திண்டுக்கல் அண்ணா, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் ஆகிய மாவட்டங்களில் இயற்கை சூழலை பாதுகாத்தல், சீரமைத்தல் ஆகியவற்றிற்காக செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ், காடு வளர்த்தல், நிலவளைவிற்கேற்ப கற்சுவர் அமைத்தல், வண்டல் தடுப்பணைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உழவர்களுக்குப் பணிச் செலவில் 50 சதவீதம் மானியமாகவும் மீதம் கடனாகவும் வழங்கப்படுகிறது. கடன் தொகை இரண்டாண்டுகள் கழித்து 10 ஆண்டுச் சம தவணைகளில் திரும்பப் பெறப்படுகிறது. 1991-92, 1992-93 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனை பற்றிய விவரமும், 1993-94-ஆம் ஆண்டிற்கான திட்டம் பற்றிய விவரமும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

அட்டவணை 4.2

திட்ட இலக்கு பரப்பு எக்டேரில்
நிதி இலக்கு ரூ.இலட்சத்தில்

	1991-92		1992-93		1993-94	
	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	1495	227.00	1300	216.25	1050	272.99
சாதனை	1753	231.50	1246★	252.19★	-	-

★ 1993 பிப்ரவரி வரை

3. நிலப் பயன்பாட்டு நிலை அறிக்கை தயாரித்தல்

தொலைநோக்குத் தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி மேற்கு மலைத் தொடர் நீர் பிரிமுகட்டுப் பகுதிகளில் நிலப் பயன் பாட்டு நிலை அறிக்கைகள் தயாரிக்கப் படுகின்றன. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுக்காக பெரிய அளவிலான நீர்ப்பிடிப்புப் பகுதி வரைப்படங்கள், மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்துத் திட்டமிட களப் பணியாளர்களுக்குப் பயன்படுவதற்காகத் தயாரிக் கப்படுகின்றன. இந்த ஆண்டு பரம்பிக் குளம் ஆழியாறு, வைப்பாறு, நீப்பிடிப்பு பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலைப் பகுதிகளுக்கும் தகுதி நிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஊட்டி ஏரி நீர்ப்பிடிப்பு பகுதி உட்பட மாநில நில பயன்பாட்டு வாரியத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட திட்டங்களுக்கும் தனி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

1.4 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம், நீலகிரி மாவட்ட மலைப் பகுதிகளில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மண் வளப் பாதுகாப்பை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதிக ளைப் பாதுகாக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. ஊட்டி ஏரியை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒருபகுதியாக வண்டல் படிவதை தடுக்க வும், வண்டல் படிவுகளை அகற்றவும், நீர்ப்பிடிப் பகுதிகளில், ரூ.265

இலட்சம் செலவில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். நிலச்சரிவு ஏற்படாமல் தடுக்கும் பணி இலவசமாக மேற்கொள்ளப்படுகிறது. மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் கொண்டு நிறைவேற்றப்படுகின்றன. இக்கடன் தொகை, இரண்டாண்டுகள் கழித்து 10 ஆண்டு சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

அட்டவணை 4.3

திட்ட இலக்கு பரப்பு எக்டேரில்
நிதி இலக்கு ரூ.இலட்சத்தில்

	1991-92		1992-93		1993-94	
	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	*1458*	*160.11*	*933*	*222.00*	540	257.00
சாதனை	*1648*	*164.39*	*940.30*	*164.67★*	-	-

★ *1993 பிப்ரவரி வரை*

1.5 பேரணை மதகுப் பகுதியில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு பணிகள்

மண்வளப் பாதுகாப்பு பணிகளுடன், நீர்பிடிப்புப் பகுதி முழுவதிலும் நீர் பராமரிப்புப் பணிகளான கற்சுவர் அமைத்தல், தாவரத் தடுப்புகள், நீர் வழிகளை ஒழுங்குபடுத்துதல், தடுப்பு அணைகள், வண்டல் தடுப்பு ஏரிகள், காடு வளர்த்தல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 1992-93-ம் ஆண்டில் ரூ.62 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவியைப் பெற்று பெரியார் - வைகை நீர்ப்பாசன திட்டத்தை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாகத் திகழ்கிறது. இப்பணியில் பயனீட்டாளர்களுக்கு 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் கடனாகவும் வழங்கப்பட்டு கடன் தொகை இரண்டாண்டுகள் கழித்து 10 ஆண்டு சம தவணைககளில் திரும்பப் பெறப்படுகிறது.

1.6 பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு

இத்திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் ஓர் அங்கமாக, பழங்குடியினர் வாழும் பகுதிகளாகிய தென் ஆற்காடு, வட ஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், திருச்சி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டச் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்கிறது. இத்திட்டம் குறித்த நிதி இலக்கு சாதனைகள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை 4.4

திட்ட இலக்கு பரப்பு எக்டேரில்
நிதி இலக்கு ரூ.இலட்சத்தில்

	1991-92		1992-93		1993-94	
	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	370	31.90	356	33.97	308	32.00
சாதனை	454	33.39	341★	31.14★	-	-

★ 1993 பிப்ரவரி வரை

1.7 மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு

மண் அரிப்பாலும் பல்வேறு காரணங்களாலும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள நிலங்களைப் பாதுகாக்க மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மாநில அரசு திட்டத்தில் செயல்படுத்தப் படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் தேவையான பணிகள் அரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு புன்செய் நிலங்களில் மண்ணின் ஈரத் தன்மை அதிகரிக்கப்படுகிறது. பணிச் செலவில் சமவெளிப் பகுதியாயின் 25% மானியமும் மலைப் பகுதியாயின் 40% மானியமும் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது. மீதம் கடனாகக் கருதப்பட்டு, 2 ஆண்டுகள் கழித்து 10 ஆண்டு சம தவணைகளில் திரும்பப் பெறப்படுகிறது. இந்து ஆதி திராவிட உழவர்களுக்கு 50% மானியம் வழங்கப்படுகிறது. திட்ட மற்றும் நிதி சாதனைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

அட்டவணை 4.5

திட்ட இலக்கு எக்டேரில்
நிதி இலக்கு ரூபாய் இலட்சத்தில்

	1991-92		1992-93		1993-94	
	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	75000	700.00	75000	741.11	75000	816.50
சாதனை	76462	695.54	75988★	711.86★	-	-

★ *1993 பிப்ரவரி வரை*

1.8 காற்றரிப்பைக் கட்டுப்படுத்துதல்

காற்றரிப்பினால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் மாவட்டங்களில் காற்றரிப்பைக் கட்டுப்படுத்தும் மாநில அரசின் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காற்றரிப்பின் கடுமையிலிருந்து இப்பகுதியைப் பாதுகாப்பதற்கு, அரசு செலவில் காற்று வீசும் திசைக்குக் குறுக்கே 5 வரிசைகளில் மரங்கள் நட்டு பாதுகாப்பு தாவர அரண்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டில் 1000 எக்டேர் நிலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. 1993-94-ஆம் ஆண்டில் மேலும் 1000 எக்டேர் நிலங்களைப் பாதுகாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. தாவர அரண்கள் அமைக்கும் செலவையும் அவற்றை 5 ஆண்டுகள் பராமரிக்கும் செலவு முழுவதையும் அரசே ஏற்கிறது.

அட்டவணை 4.6

திட்ட இலக்குப் பகுதி எக்டேரில்
நிதி இலக்கு ரூபாய் இலட்சங்களில்

	1991-92		1992-93		1993-94	
	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு	திட்ட இலக்கு	நிதி இலக்கு
இலக்கு	*1000*	*56.00*	*1000*	*57.89*	*1000*	*67.00*
சாதனை	*1007*	*57.37*	*1005★*	*55.00★*	-	-

★ *1993 பிப்ரவரி வரை*

1.9 நில மேம்பாடு

மாநில அரசின் நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல் துறை, நிலத்தைச் சமமாக்கவும், பண்படுத்தவும், இயந்திரங்களைக் கொண்டு உழுவதற்கும், உழவர்களுக்கு புல்டோசர்களையும் டிராக்டர்களையும் வாடகை முறையில் வழங்கியுதவுகிறது. தற்பொழுது *115* புல்டோசர்களும் *170* டிராக்டர்களும் வேளாண்மைப் பொறியியல் துறையிடம் உள்ளன. இந்து ஆதி திராவிட விவசாயிகளுக்கு வழக்கமான வாடகைக் கட்டணத்தில் *50* சதவீத வாடகைக் கட்டணத்தில் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. *1991-92, 1992-93*-ஆம் ஆண்டின் இலக்கு மற்றும் சாதனை *1993-94*-ம் ஆண்டின் இலக்குகள் பின்வருமாறு:

அட்டவணை 4.7

விவரம் மற்றும் அலகு	1991-92 ஆண்டு இலக்கு	சாதனை	1992-93 ஆண்டு இலக்கு	சாதனை	1993-94 ஆண்டு இலக்கு
அ) நிலத்தை சமன் செய்தல்					
மணிகள்	154000	172062	154000	183264★	154000
எக்டேர்	6160	6882	6160	7331★	6160
ஆ) இயந்திர உழுவை					
மணிகள்	93800	115021	93800	93766★	93800
எக்டேர்	26800	32863	26800	26790★	26800

★ பிப்ரவரி 1993 முடிய.

வேளாண்மைப் பொறியியல் துறையின் புல்டோசர்கள், 1992-93-ஆம் ஆண்டில் குறுவைப் பாசனத்திற்கு நீரைக் கொணர தஞ்சை மாவட்டத்திலுள்ள பாசனக் கால்வாய்களில் தூர் எடுத்து சீரமைக்கும் பணியினை செவ்வனே நிறைவேற்றின. காவிரி, வெண்ணார், கல்லணைக் கால்வாய்ப் பகுதிகளிலும் உள்ள ஆற்று வழிகளும், கால்வாய்களிலும், தூர் எடுக்கப்பட்டது. ஆற்று வழியில் 24.9 கி.மீ. தொலைவும், கால்வாயில் 5027.41 கி.மீ. தூரமும் 60 புல்டோசர்களைக் கொண்டு தூர் எடுக்கப்பட்டது. இப்பணியினை வேளாண்மைப் பொறியியல் துறை சரியான நேரத்தில் செயல்படுத்தியதால் 1992-93-ஆம் ஆண்டில் குறுவையில் வியக்கத்தக்க அறுவடை கிடைத்தது. மிகவும் திறன் வாய்ந்த மேலாண்மையினால் புல்டோசர் மற்றும் டிராக்டர் வாடகை திட்டம் தனது வருமானத்தினால் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

2. நீர்வள நிருவாகம்:

2.1 நிலத்தடி நீர்வள மேம்பாடு:

இம்மாநிலத்தில் உள்ள 86476 குழாய்க் கிணறுகளும், 1657905 திறந்தவெளிக் கிணறுகளும், 11.68 லட்சம் எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதியை அளிக்கின்றன. மாநிலத்தில் மேல்மட்ட நீர் உபயோகம் 90 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளதால் நிலத்தடி நீர்வள

உபயோகம் முக்கியத்துவம் பெறுகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை, உழவர்களுக்கு பின்வருமாறு உதவுகிறது. (அ) புதிய கிணறுகள் அமைக்கும் இடத்தை புவி பௌதீக ஆய்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கவும், (ஆ) குழாய் கிணறுகள் மற்றும் வடிமுனை குழாய் கிணறுகள் அமைத்து தரவும் (இ) வறண்டுபோன கிணறுகளை ஆழப்படுத்தி நீர்வளம் மீட்கவும் உதவுகிறது. இதற்கென வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் கருவிகளை பராமரித்து வாடகைக்கு வழங்கி வருகிறது.

(அ) பெர்குஷன் துளைக் கருவிகள் (45), (ஆ) ரோட்டரி துளைக் கருவிகள் (60), (இ) ஹேமர் துளைக் கருவிகள் (6), (ஈ) வாகன் / இன்வெல் துளைக் கருவிகள் (42), (உ) பாறை வெடிக் கருவிகள் (89), (ஊ) நீர் துளைக் கருவிகள் (45), (எ) காற்றமுத்தக் கருவிகள் (19), (ஏ) கைத்துளைக் கருவிகள் (386), (ஐ) மின்சார லாகிங் கருவிகள் (3), (ஒ) ரெஸிஸ்டிவிடி மீட்டர்கள் (25). இந்து ஆதி திராவிட உழவர்களுக்கு 50% குறைவான வாடகையில் இக்கருவிகள் வழங்கப்படுகின்றன. மேலும் அவர்களுக்கு நிலத்தடி நீர்வள ஆய்வுச் செலவு, கருவிகளை எடுத்துச் செல்லும் செலவு, வேலையாட்களின் கூலி, கச்சாப் பொருட்கள், டீசல், பைப்புகள் வெடிமருந்துகள் மற்றும் கிணறு மேம்பாட்டுக் கட்டணம் போன்றவைகளுக்காக 50% மானியமாக வழங்கப்படுகிறது.

2.2 சிறு குறு விவசாயிகளுக்கான குழாய்க் கிணறு திட்டம்:

சிறு குறு விவசாயிகளுக்கு குழாய்க் கிணறுகள் வடிமுனைக் குழாய்க் கிணறுகள், கிணற்றுக்குள் துளையிடுதல், கிணற்றை ஆழப்படுத்துதல் பணிகளுக்கு அரசு 150 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளில் ஒரு விவசாயிக்கு ரூ.5000/- வீதம் நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டம், புதுக்கோட்டை, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். சிறப்பு ஒதுக்கீடாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 2000 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவும் வகையில் 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாசன வளங்களை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துவதோடு மட்டுமின்றி நீர் நிருவாக உத்திகளை நடைமுறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தவும், நிலத்தடி நீர் மேம்பாடு நடவடிக்கைகள் மேற்

கொள்ளப்படும். சமுதாயக் கிணறுகளை அமைத்தல், விவசாயிகளுக்கான அமைப்புகளை (சங்கங்கள்) ஏற்படுத்துதல், நிலத்தடி நீர் மற்றும் நிலத்தின் மேற்பரப்பில் கிடைக்கும் நீர் ஆகியவற்றை பயன்படுத்துதல், நுண்ணிய நீர்ப்பாசன முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றிற்கு *1993-94*-ஆம் ஆண்டில் உரிய கவனம் செலுத்தப்படும்.

அட்டவணை 4.8

விவரம் மற்றும் அலகு	1991-92 ஆண்டு இலக்கு	சாதனை	1992-93 ஆண்டு இலக்கு	சாதனை	1993-94 ஆண்டு இலக்கு
குழாய் கிணறுகள் (எண்கள்)	5500	5823	5500	4927★	5500
வடிமுனைக் குழாய்க் கிணறுகள் (எண்கள்)	3300	3501	3300	2799★	3300
கிணறுகளின் வளம் மீட்டல் (எண்கள்)	6000	6011	6000	5381★	5500

★ பிப்ரவரி *1993* முடிய

2.3. பாசனத்திற்காக ஊற்றுநீர் வளத்தைப் பெருக்க நீரைச் சேமித்தல்

நிலத்தடி நீரை அதிக அளவு பயன்படுத்துவதால் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்க, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கசிவு நீர்க்குட்டைகளைப் பெருமளவில் அமைக்கும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்தக் குட்டைகள் நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்குவதிலும், வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும், பலவிதத்திலும் உபயோகமுள்ள சமுதாயச் சொத்தாகவும் பயன் அளித்து வருகிறது. *1992* மார்ச் வரை *6321* கசிவு நீர்க்குட்டைகள் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்பு தன்னிறைவுத் திட்டம் மூலம் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம் *1992-93* ஆம் ஆண்டில் *1177* கசிவு நீர்க்குட்டைகள்

அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை வேளாண்மைப் பொறியியல் துறை 7498 கசிவு நீர்க்குட்டைகள் அமைத்து கிணற்றுப் பாசனத்திற்கு ஆதாரமாக அமைந்து நிலத்தடி நீர் பெருக்கப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் ரூ.1141 இலட்சம் செலவில் 736 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

2.4 ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சிறுபாசன ஏரிகளைச் சீரமைத்தல்

தமிழ்நாட்டின் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் 20,413 சிறுபாசன ஏரிகள் உள்ளன. இதில் 16,477 ஏரிகள் 20 எக்டேர் பாசன பரப்புக்கு குறைவாகவும், 3,936 ஏரிகள் 20 முதல் 40 எக்டேர் வரையும் பாசனம் தரும். பெரும்பான்மையான ஏரிகள் உருக்குலைந்தும், கொள்ளளவு குறைந்தும் பயனில்லாததாகவும் உள்ளன. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இப்பாசன ஏரிகளின் சீரமைப்புப் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஏரிப்பாசன முறைக்குப் புத்துயிர் அளிப்பதற்காக நீர்வரத்துக் கால்வாய்களை சீர்படுத்துதல், தூர் வாருதல், ஏரிக்கரையைப் பலப்படுத்துதல், மதகுகளைச் சீர்படுத்துதல், கலிங்குகளைச் சீராக்குதல், பண்ணை மேம்பாட்டுப் பணிகளைச் செய்தல், பாசனச் சங்கங்களை ஏற்படுத்தல் ஆகியவை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 1991-93-ஆம் ஆண்டில் ரூ.197.63 லட்சம் செலவில் 131 ஏரிகளில் இப்பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் ரூ.495 இலட்சம் செலவில் 285 பாசன ஏரிகளைச் சீரமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

2.5 நீர்ப்பாசன நுண்ணிய முறைகள்:

உரிய அளவுக்கும் சிக்கனமாகவும் நீரைப் பயன்படுத்தும் பொருட்டு சொட்டு தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நீர்ப்பாசன முறைகளைப் பிரபலப்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன நுண் முறைகளை அமைத்துக் கொள்ளும் உழவர்களுக்கென அரசு ரூ.187.50 லட்சம் உதவித் தொகை வழங்கியுள்ளது. உழவர்களைக் கவரும் வகையில் பின்வரும் உதவித் தொகைக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

அட்டவணை 4.9

நிலபரப்பு	உதவித் தொகை வீதம்	உதவித் தொகை (ரூ/எக்டேர்)
1. ஒரு எக்டேர் வரையில்	50%	ரூ.12,5000 / எக்டேர்
2. ஒரு எக்டேருக்கு மேல் 2 எக்டேர் வரை	40%	ரூ.10,000 / எக்டேர்
3. 2 எக்டேருக்கு மேல் 3 எக்டேர் வரை	30%	ரூ.7,500 / எக்டேர்

நீர் ஆதாரம் குறைவாக உள்ள பகுதிகளில் வாழும் உழவர்களிடையே இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. தரமான பொருட்களை உபயோகப்படுத்தவும், தங்கு தடையில்லாமல் நீர்ப்பாசன அமைப்புகள் இயங்கவும், உழவர்களுக்குப் பயிற்சி தரவும், விரிவான முறைப்படியான நடைமுறைகளை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.100.00 இலட்சம் செலவில் சொட்டு நீர்ப்பாசன முறையில் தோட்டக் கலை பயிர்களை வளர்ப்பதற்கான மத்திய துறைத் திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது. இத்தொகை முழுவதும், தோட்டக்கலைப் பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க முன்வரும் உழவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் 50 சதவிகித உதவித் தொகையாகும். இதற்கென மேலும் ரூ.100 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1991-92, 1992-93 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் பயன் விவரங்களும், 1993-94 ஆம் ஆண்டுக்கான இலக்கும் வருமாறு:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 4.10

(1)	1991-92 கணக்குகள் (2)	1992-93 மதிப்பீடு (3)	1993-94 (4)
1. மாநிலத் திட்டம்			
பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை	301	1100	
செயல்படுத்தப்பட்ட பரப்பளவு (எக்டரில்)	403.83	1300.00	
உதவித் தொகை (ரூபாய் இலட்சங்களில்)	40.01	187.50	
2. மத்திய அரசு உதவி பெறும் தோட்டக்கலை வளர்ச்சி திட்டம்:			
பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை	457	800	3000
செயல்படுத்தப்பட்ட பரப்பளவு (எக்டேரில்)	1026.99	1200	5500
உதவித் தொகை (ரூபாய் இலட்சங்களில்)	101.57	200.00	500

2.6. பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

காவிரி, பெரியார் - வைகை, கீழ்பவானி, சாத்தனூர் பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டப் பாசனப் பகுதிகளில் மத்திய அரசின் உதவி பெறும் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்‘கு பாசனப்பகுதி அளவில் ஒருங்கிணைப்பைப் பெற பலதுறை ஆய்வுக்குழு ஒன்று மாநில அளவில் உருவாக்கப்பட்டுள்ளது.

1. வயல்வழிப் பாசன முறையை நீக்கவும், 2. உரிய அளவுக்கு பாசன வசதியை ஏற்படுத்தவும், 3. பாசனத்திற்கு சுழற் நீர்ப்பாசன முறைமூலம் உபரியாகவும் குறைவாகவும் நீர் கிடைக்கும் காலங்களில் கிடைக்கின்ற நீரைச் சமமாக வழங்குவது உறுதி செய்யவும் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. பண்ணை மேம்பாட்டுப் பணிகளில் விவசாயிகளுக்கு 50 சதவீதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. எஞ்சிய தொகை இரண்டாண்டு தவணைக் காலத்துடன் ஐந்து சம ஆண்டுத் தவணைக் காலங்களில் வசூலிக்கத் தக்க தொகையாகக் கருதப்படும். 1992-93-ஆம் ஆண்டுகளுக்கான இலக்கு மற்றும் சாதனையும், 1993-94-ஆம் ஆண்டு இலக்கு வருமாறு.

அட்டவணை 4.11

திட்டப்பரப்பு எக்டேரில்
நிதி ரூபாய் இலட்சங்களில்

திட்டத்தின் பெயர்	1991-92 ஆண்டு முடிய சேர்ந்து வந்த சாதனை	1992-93 ஆண்டு இலக்கு	பிப்ரவரி 93 முடிய சாதனை	1993-94 ஆம் ஆண்டு இலக்கு
(1)	(2)	(3)	(4)	(5)
1. பண்ணை மேம்பாடு				
1. காவிரி பாசனப் பகுதி				
திட்டம்	250869	25200	24195	25000
நிதி	3398.19	610.26	619.41	769.12
2. கீழ்பவானி பாசனப் பகுதி				
திட்டம்	46119	5500	5272	6000
நிதி	1418.82	268.78	240.98	250.00

TRUTH ALONE TRIUMPHS

3. சாத்தனூர் பாசனப் பகுதி				
திட்டம்	17709	1800	1625	1900
நிதி	447.13	45.36	38.08	40.88
4. பரம்பிக்குளம் ஆளி யாறு பாசனப்பகுதி				
திட்டம்	55886	11000	10546	12000
நிதி	1854.47	445.56	432.05	459.00
5. பெரியார் வைகை பாச னப் பகுதி				
திட்டம்	60565	4000	3297	3000
நிதி	1642.41	134.30	129.52	146.50
2. சுழற்சி முறைப் பாசனம்				
1. காவிரி பாசனப் பகுதி				
திட்டம்	14305	3170	3476	6500
2. கீழ்பவானி பாசனப் பகுதி				
திட்டம்	14620	3500	3505	4000
3. பெரியார் வைகை பாச னப்பகுதி				
திட்டம்	22186	9000	9261	15000
நிதி (1+2+3)	233.70	105.60	88.35	151.50

விவசாயிகள் பங்கேற்பு:

கீழ்பவானி பாசனப் பகுதிகளில் விவசாயிகளை பங்கேற்கச் செய்து, சோதனை அடிப்படையில் பாசனத்திற்குச் சுழற்சி முறையில் நீர் வழங்கும் ஏற்பாடானது முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. வேளாண் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பாசனத்திற்கான நீரைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் பொறுப்பு ஏற்கவும், இந்த திட்ட ஏற்பாட்டை நன்முறையில் பொறுப்பேற்று நிர்வகிக்கவும், விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தியுள்ளனர். பண்ணை மேம்பாட்டுப் பணிகள் விவசாயிகளின் முழு ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் வெற்றி நிரூபிக்கப்பட்டு விட்டபடியால் மற்ற பாசனப் பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. பாசனப் பகுதிகளில் ஏற்படுத்தப்

பட்டுள்ள விவசாயிகளின் சங்கத்தின் எண்ணிக்கை பின்வருமாறு:

அட்டவணை 4.12

பாசனப் பகுதியின் பெயர்	விவசாயிகளின் குழுக்கள் (எண்கள்)	விவசாயிகளின் சங்கங்கள் (எண்கள்)	பயனடைந்த விவசாயிகள் (எண்ணிக்கை)	பயனடைந்த பரப்பளவு (எக்டேர்)
காவிரி	19	454	34263	39203
கீழ்பவானி	10	973	27250	27365
சாத்தனூர்	9	109	4754	3424
பரம்பிக்குளம் ஆளியாறு	4	28	686	3382
பெரியார் வைகை	10	390	37245	25871
மொத்தம்	52	1954	104198	99245

பாசனப்பகுதிகளில் நீர் நிர்வாகத்தை மேம்படுத்த பெண் விவசாயிகளுக்கென சங்கங்களும் உருவாக்கப் பட்டுள்ளன. இவ்வாறு பெரியார் வைகை பாசனப் பகுதிகளில் இரண்டு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சங்கங்கள் மேலும் உருவாக்கப்படும். பாசனப்பகுதிகளில் பராமரிப்புப் பணியை மேற்கொள்வதற்காக முதல் இரண்டு ஆண்டுகளில் ஒரு எக்டேருக்கு ரூ.100/- என்ற வீதத்திலும் மூன்றாமாண்டில் ஒரு எக்டேருக்கு ரூ.75/- என்ற வீதத்திலும் விவசாயிகள் சங்கத்திற்கு நிருவாக உதவித் தொகை அளிக்கப்படுகிறது. விவசாயிகளும் தாங்களாகவே ஒரு தொகையை கொடுப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். 1992-93-ஆம் ஆண்டில் காவிரி, பெரியார் வைகை, கீழ்பவானி, சாத்தனூர் பாசனப்பகுதி விவசாயிகள் சங்கத்திற்கு நிருவாக உதவித் தொகையாக ரூ.28.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

3. பிற நாடுகளின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:

3.1 விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்: பகுதி 1.

வ.உ. சிதம்பரனார் மாவட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் 17500 ஹெக்டேர் தரிசு நிலப்பரப்பை ரூ.625 இலட்சம் செலவில் மேம்படுத்துவதற்கான திட்டம் செயற்படுத்தப்

பட்டு வருகிறது. 1991 ஆம் ஆண்டில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் டானிடா நிதி உதவியுடன் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பின்வருமாறு: 1. திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் மாவட்டங்களில் மிகவும் பாதிப்புக்குள்ளான நிலங்களில் மேலும் மண் அரிப்பு நிகழாமல் தடுப்பதற்கு முன்னுரிமை அளித்தல், 2. தற்போது வகைப்படுத்தப்பட்ட பயிரிடப்படத்தக்க தரிசு நிலம் போதிய வளமில்லாத நிலங்களில் நிரந்தரமாக, சிக்கனமான எளிய பல்வேறு முறைகளை உருவாக்கவும், 3. தற்பொழுது தனது நிலங்களை பயிர் செய்ய முடியாத விவசாயிகளுக்கு நீண்டகால வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தரவும், குறு விவசாயிகளின் மற்றும் நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்புகள் உருவாக்கித் தரவும், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் அடங்கியுள்ள திட்டப் பகுதிகள் பின்வருமாறு: 1. நீர் வடிப்பகுதி மேம்பாடு (5000 எக்டேர்), 2. காற்றரிப்புத் தடுத்தல் (3000 எக்டேர்) 3. தரிசு நில மேம்பாடு (3000 எக்டேர்) 4. தேரி நில மேம்பாடு (6500 எக்டேர்) இத்திட்டத்தில் முக்கிய பகுதிகளாவன: தாவரத் தடுப்புகள் அமைத்தல், தாவரத் தடுப்புகளுக்கு இடையே உள்ள நிலங்களை வளப்படுத்துதல் மண் மற்றும் நீர்வளப் பராமரிப்பு, கண்காணிப்பு சோதனை பணிகள், ஆராய்ச்சி சோதனைப் பணிகள் விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் பயிற்சி சுற்றுலா ஆகும். திட்டக்காலம் (நிலை I) திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்பு ஆறு மாத காலம் உட்பட மூன்றரை ஆண்டுகளாகும். 1991 அக்டோபர் முதல் தேதி ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 1994 மார்ச் 31 ஆம் தேதியில் முடிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழு 1992 பிப்ரவரி 6 ஆம் தேதி முதல் 1992 பிப்ரவரி 10-ம் தேதி வரை திட்டப் பகுதியை பார்வையிட்டு திட்டத்தின் செயல் மற்றும் தரத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தது. இக்குழு 1. 1991-92-ஆம் ஆண்டுக்கான திட்ட இலக்கு முழுமையாக முடிக்கப்பட்டு விட்டதையும், 2. செயற்படுத்தப்பட்ட திட்டப் பணிகளின் தரம் மிகவும் அதிகமாகவும், குறிப்பிடத்தக்கதாக இருப்பதாகவும், 3. உயிர் வாழும் பயிர்களின் விகிதாச்சாரம் (60-85%) அதிகமாக இருப்பதாகவும், 4. தகுந்த நேரத்தில் மாற்றுப் பயிர்களை வைத்ததாகவும், 5. பயிர் பாதுகாப்பு மற்றும் குழாய்க் கிணறு வேலைகள் மிகவும் அதிக தரத்தில் உள்ளதாகவும் அறிந்தது. 1991-92, 1992-93 ஆகிய ஆண்டுகளில் திட்ட இலக்கும் சாதனையும், 1993-94-ஆம் ஆண்டுக்

கான இலக்கும் வருமாறு:

அட்டவணை 4.13

விவரம் மற்றும் அலகு	1991-92 ஆண்டு இலக்கு	1991-92 சாதனை	1992-93 ஆண்டு இலக்கு	1992-93 சாதனை	1993-94 ஆண்டு இலக்கு
1. நீர்வடிப்பகுதி மேம்பாடு (ஹெக்டேர்)	1650	1650	1650	1650	1700
2. காற்றரிப்பு தடுத்தல் (ஹெக்டேரில்)	1000	1000	1000	1023	1000
3. தேரி நில மேம்பாடு (ஹெக்டேரில்)	2075	2075	2150	2150	2275
4. தரிசு நில மேம்பாடு (ஹெக்டேரில்)	1000	1000	1000	1000	1000
நிதி (1+2+3+4) ரூபாய் இலட்சங்களில்	135.00	138.89	202.00	135.96	250.96

3.2 திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நீர்வரத்து நிலை 2.

நிலை 1 முடிவடைவதற்கு 10 முதல் 12 மாதங்களுக்கு முன்னரே நிலை 2-ன் அறிக்கை சம்மந்தப்பட்ட வேலைகளை செய்வதற்கு நிலை 1 செயற்படுத்தப்படும் இரண்டாவது ஆண்டில் (1992-93) நிலை 2-க்கான அளவை மற்றும் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நிலை 1-க்கான அறிவிப்பு அறிக்கையிலும் மற்றும் திட்டப்பணிகளிலும் கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது. நிலை 2 (கூடுமானவரை நிலை3) மிகவும் ஒருங்கிணைப்புடன் நீண்ட காலத்திற்கு அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது. நவம்பர் 1991 ஆம் ஆண்டில் நடந்த இந்தியா - டானிஸ் இருதரப்பு உதவி விவாதங்களின் போது டானிடா (Danida) ஏப்ரல் 1994 முதல் நாள் துவங்கும் இரண்டாவது நிலைக்கு ஆதரவுடன் உள்ளது. இக்கூட்டத்தில் நிலை இரண்டுக்கான செயற்குறிப்பு மத்திய அரசின் மூலமாக டானிடாவுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. இத்திட்ட அறிக்கையை தயார் செய்வதற்கு ஆலோசகர் நியமிக்கப்பட்டார். ஆலோசகர் அறிக்கையை அளித்துள்ளார். இது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. 1994 மார்ச்சில் நிலை 1 முடிவடைந்தவுடன் 1994 ஏப்ரல் முதற்கொண்டு நிலை 2-ஐ எடுத்துக் கொள்ளக் கருதப்படுகிறது. இத்திட்டத்தின் கால

அளவு ஏழாண்டுகாலமாகும். இத்திட்ட செயல்பாட்டுக் காலத்தில் 55,000 ஹெக்டேர் தரம் குறைந்த நிலங்கள் பயனடையும்.

3.3. காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் டானிடா உதவியுடன் விரிவான நீர்வரத்து பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

நெல்லை கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் மாவட்டங்களில் உள்ள விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் போன்று கூட்டு ராமநாதபுரம் மாவட்டங்களில் விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் குறித்து செயற்குறிப்பை வேளாண்மைப் பொறியியல் துறை தயாரித்துள்ளது. இத்திட்ட அறிக்கை தமிழ்நாடு அரசினால் பரிந்துரைக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1992 ஜூன் மாதம் டானிடா குழு திட்டப் பகுதியை மதிப்பிடுவதற்காக பார்வையிட்டது. டானிடா தூதுக் குழு தனது மதிப்பீட்டு வரைவு அறிக்கையை அளித்துள்ளது. *1993-94*-ம் ஆண்டில் துவங்கப்பட உள்ள இத்திட்டத்தினால் இம்மூன்று மாவட்டங்களில் உள்ள *12,000* எக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

4. மத்திய வேளாண் எந்திரப் பயிற்சி மற்றும் மதிப்பீட்டு மையம்.

வேளாண் உபகரணங்களிலும், இயந்திரங்களிலும் விவசாயிகளுக்கும், இயக்குபவர்களுக்கும், கம்மியர்களுக்கும் பயிற்சி தரவும், சோதனை மற்றும் மதிப்பீடு செய்யவும் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு மாநில அரசு மத்திய அரசை கேட்டுள்ளது. *1993-94*-ம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் ரூ.400 இலட்சம் செலவில் மையம் ஒன்றை அமைக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

அத்தியாயம் 5

விதைச் சான்றளிப்பு

1966-ஆம் ஆண்டு மத்திய விதைச் சட்டத்தின் கீழ் விதைச் சான்றளிப்பு நிறுவனம் ஆற்ற வேண்டிய பணிகளை, விதைச் சான்றளிப்புத் துறை (வி.சா.து.) நிறைவேற்றி வருகிறது. விதைச் சான்றளிப்புத் துறையின் முக்கிய அலுவல்களாவன.

1. விதைச் சான்றளிப்பு.

2. விதைச் சான்றளிப்புப் பயிற்சி.

3. விதை பரிசோதனை.

4. பல்வேறு நிறுவனங்களின் மூலமாக விற்பனை செய்யப்படும் விதைகளை ஆய்வு செய்தல்.

1. விதைச் சான்றளிப்பு

இனத்தூய்மை, புறத்தூய்மை (விதைகளின் தூய்மை) முளைப்புத் திறன் (முளைக்கும் தரம்) மற்றும் விதைத்திறன் ஆகியன உள்ள தரமான விதைகளுக்குச் சான்றளிப்பதே விதைச் சான்றளிப்புத் துறையின் முதன்மையான பணியாகும். நல்ல தரமான விதைகளை உழவர்களுக்கு வழங்குகிறதா என்பதை இத்துறை கண்காணிக்க வேண்டியுள்ளது. விதைச் சான்றளிப்புத் துறை, நெல் பயிரில் 20 வகைகளுக்கும், கம்புப் பயிரில் 10 வகைகளுக்கும், சோளப் பயிரில் 7 வகைகளுக்கும், கேழ்வரகு பயிரில் 5 வகைகளுக்கும், மக்காச்சோளம் பயிரில் 5 வகைகளுக்கும், உளுந்து பயிரில் 10 வகைகளுக்கும், பச்சைப் பயிரில்

7 வகைகளுக்கும், தட்டைப் பயிரில் (மொச்சை இனப்பயிர்) 5 வகைகளுக்கும், கொள்ளுப் பயிரில் 2 வகைகளுக்கும், துவரைப் பயிரில் 5 வகைகளுக்கும், பருத்தி பயிரில் 10 வகைகளுக்கும், நிலக்கடலைப் பயிரில் 10 வகைகளுக்கும், எள் பயிரில் 3 வகைகளுக்கும், ஆமணக்கு பயிரில் 3 வகைகளுக்கும், சூரியகாந்தி பயிரில் 5 வகைகளுக்கும், பல்வேறு காய்கறி பயிர்களில் 15 வகைகளுக்கும் தற்போது சான்றளித்து வருகிறது. விதைச் சான்றளிப்பதற்காக, உற்பத்தியாளர் குறித்த விவரங்களையும், எந்தெந்தப் பகுதிகளில் இந்த விதைகள் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும் இத்துறை பதிவு செய்து வருகிறது. விதைச் சான்றளிப்புத் துறையின் சாதனை குறித்த விவரங்கள் வருமாறு:

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 5.1

விதைச் சான்றளிப்புத் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பகுதிகள்

தொடர் எண்	விவரங்கள்	சாதனைகள் 1991-92	1992 - 93 (பிப்ரவரி முடிய)	1992-93 இலக்கு 1993-94
1.	விதைச் சான்றளிப்புத் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பகுதிகள் (எக்டேரில்)	36339	26012	36500
2.	சான்றளிக்கப் பட்ட விதை அளவு (மெ. டன்களில்)	21983	21200	22000

அட்டவணை - 5.2

சான்றளிக்கப்பட்ட விதை

தொடர் எண்.	பயிர்கள்	1987-88 ஆ	1987-88 சா	1987-88 மொ	1988-89 ஆ	1988-89 சா	1988-89 மொ
1.	நெல்	716	12847	13563	629	12274	12903
2.	இரக சிறு தானியம்	60	582	642	125	746	871
3.	வீரிய சிறு தானியம்	24	292	316	16	221	237
4.	இரக பருத்தி	456	728	1184	901	1038	1939
5.	வீரிய பருத்தி	-	19	19	-	24	24
6.	பயறு வகைகள்	252	839	1091	317	1184	1501
7.	எண்ணெய் வித்துக்கள்	215	146	361	361	623	984
8.	காய்கறி வகைகள்	11	22	33	23	20	43
9.	ஏனையவை	-	-	-	-	-	-
	மொத்தம்	1734	15475	17209	2372	16130	18502

குறிப்பு: ஆ. ஆதார நிலை விதைகள்
சா. சான்றுநிலை விதைகள்
மொ. மொத்தம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அளவு (மெ.டன்னில்)

1989-90			1990-91			1991-92			1992-93 1993 பிப்ரவரி வரை		
ஆ	சா	மொ	ஆ	சா	மொ	ஆ	சா	மொ	ஆ	சா	மொ
710	12870	13580	1099	13328	14427	723	14721	15441	648	13417	14065
97	631	728	83	575	658	106	655	761	33	668	701
32	176	208	5	207	212	1	93	94	13	40	53
497	1198	1695	585	3081	3666	826	2341	3167	1254	3040	4294
-	275	275	-	99	99	-	49	49	-	21	21
195	1402	1597	173	1444	1617	197	1331	1528	167	1003	1170
156	87	243	516	128	644	540	375	923	334	544	878
13	10	23	9	8	17	11	6	17	15	3	18
-	-	-	-	-	-	-	-	-	-	-	-
1700	16649	18349	2470	18870	21340	241[illegible]	19571	21983	2464	18736	21200

விதைச் சான்றளிப்புத் திட்டத்தின் கீழ் 1993 பிப்ரவரி வரை மொத்தம் ரூ.245.66 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. பயிற்சித் திட்டம்

விதைச் சான்றளிப்புத் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய துறைகளில் பணிபுரியும் விரிவாக்க பணியாளர்கள், விதைச் சான்று பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. விதை உற்பத்தி விதை விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் விதை உற்பத்தி செய்து வழங்கும் தனியார்கள் உழவர்கள், விதை வணிகர்கள் ஆகியோருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1992-93-ஆம் ஆண்டில் (1993-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை), 13886 பேர்களுக்கும், 4610 அலுவலர்கள், 6748 தனியார் விதை உற்பத்தியாளர்கள், 2528 விதை வணிகர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. 1993-94-ஆம் ஆண்டில் 13300 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

3. விதை ஆய்வு

சான்றளிக்கப்பட்ட நல்லதரமான விதைகளை உழவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, விதை ஆய்வு பிரிவைச் சேர்ந்த விதை ஆய்வு அலுவலர்கள் விதை சட்டத்தை செயற்படுத்தும் வகையில் விதை விற்பனை நிலையங்களில் காலமுறைப்படியான ஆய்வுகளையும் மற்றும் திடீர் ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். 1992-93-ஆம் ஆண்டில் (1993 பிப்ரவரி திங்கள் வரை) 10964 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு, 9696 விதை மாதிரிகள் விதை ஆய்வாளரர்களால் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. எடுக்கப்பட்ட 9696 விதை மாதிரிகளில் 81 விதை மாதிரிகள், தரம் குறைந்தனவாகக் கண்டறியப்பட்டு, விதை சட்டத்தை மீறிய விதை விற்பனையாளர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டன. 53 இனங்களை பொறுத்தமட்டில் அபராதம் விதிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட விதை மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்தபோது, அவை தரம் குறைந்தவையென கண்டறியப்பட்டமையால் 1826 விதை வகைகளின் விற்பனைக்குத் தடை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. 1993-94-ஆம் ஆண்டில், விதை வணிகர்களிடமிருந்து 11300 விதை மாதிரிகளைச் சோதனைக்காக எடுக்கவும் 11300 விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்யவும் திட்டமிடப் பட்டுள்ளது.

அட்டவணை 5.3

நடத்தப்பட்ட விதை ஆய்வுகள் பற்றிய விவரங்கள்

(1988 முதல் 1993 வரை)

தொடர் எண்	விவரங்கள்	1988-89	1989-90	1990-91	1991-92	1992-93 பிப்ரவரி வரை
1.	ஆய்வு செய்யப்பட்ட விற்பனை நிலையங்கள் (எண்ணிக்கை)	7679	8669	9184	10901	10964
2.	ஆய்விற்கு எடுக்கப்பட்ட விதை மாதிரிகள் (எண்ணிக்கை)	7867	8081	8651	9523	9696
3.	விற்பனைத் தடைச் செய்யப்பட்ட விதை மாதிரிகள் (எண்ணிக்கை)	1110	1203	1529	1683	1826
4.	நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் (எண்ணிக்கை)	29	41	90	102	81
5.	தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் (எண்ணிக்கை)	25	28	643	81	53
6.	நிலுவையாக உள்ள வழக்குகள் (எண்ணிக்கை)	4	13	26	21	28

விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்து, விதை மாதிரிகள் எடுத்து, விதைகள் சட்டத்தை செயற்படுத்துவதில் அனைத்திந்திய அளவில், தமிழ்நாடு விதைச் சான்றுத் துறை சிறந்து விளங்குகிறது.

4. விதைப் பரிசோதனை

அறிக்கையிடப்பட்ட ஐந்து விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள், கோயம்புத்தூர், மதுரை, குடுமியான்மலை, தருமபுரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. விதை பரிசோதனை நடைமுறையின்படி விதைகளின் தூய்மை, முளைப்புத்திறன் ஈரப்பதத் தன்மை, பிற உயர்ரக கலப்பு விதைகள், ஏனைய பயிர் விதைகள், களை விதைகள் முதலியனவற்றை அறிய விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகின்றன. 1992-93-ஆம் ஆண்டில் (1993 ஜனவரி வரை), 29697 விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. 1993-94 ஆம் ஆண்டில் 37,000 விதை மாதிரிகளை ஆய்வு செய்வதற்கு ஏதுவாக

விதை ஆய்வுத் திறனை அதிகரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

அட்டவணை 5.4

ஆய்வு செய்யப்பட்ட விதை மாதிரிகள் எண்ணிக்கை

தொடர் எண்	விதை சோதனை ஆய்வுக் கூடம்	1987-88	1988-89	1989-90	1990-91	1991-92	1992-93 1993 பிப்ரவரி வரை
1.	கோயம்புத்தூர்	9105	9305	12304	14866	1351	9863
2.	மதுரை	9375	8386	7407	8700	8821	6813
3.	குடுமியான்மலை	6644	7865	8737	8570	10372	9826
4.	தருமபுரி (1991-92-ம் ஆண்டில் தொடங்கப் பட்டது)	-	-	-	-	1671	5967
5.	தஞ்சாவூர் (1992-93-ம் ஆண்டில் தொடங்கப் பட்டது)	-	-	-	-	-	361
	மொத்தம்	25124	25556	28448	32136	34378	32830

5. புதிய திட்டங்கள்

*1992-93-*ஆம் ஆண்டில் உலக வங்கியுடன் செயல்படும் தமிழ் நாடு வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மற்றும் சென்னையில் இரு புதிய விதை ஆய்வு மையங்களும், திருநெல்வேலியில் ஒரு புதிய விதை பரிசோதனை ஆய்வு கூடமும் நிறுவப்பட்டுள்ளன. *1993-94-*ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், சேலம் மற்றும் நீலகிரி பகுதிகளில் இரு புதிய விதை ஆய்வு மையங்களையும், காஞ்சிபுரத்தில் ஒரு புதிய விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடத்தையும் நிறுவத் திட்டமிடப் பட்டுள்ளது.

அத்தியாயம் 6

வேளாண் விளைபொருள் விற்பனை

வேளாண் விளைபொருள் விற்பனை:

வேளாண் விளைபொருள் விற்பனைத் துறையானது 1977 ஆம் ஆண்டு சென்னையில் வேளாண்மை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் நிறுவப்பட்டது. 1979 முதல் வேளாண் விளை பொருள் விற்பனைத் துறையானது தனித்துறையாக ஆகி, திருச்சிக்கு மாற்றப்பட்டது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாயிகட்கு ஆதாய முள்ள விலை கிடைப்பதற்கு வழிவகை செய்வது இத்துறையின் முக்கிய குறிக்கோளாகும்.

பின்வரும் திட்டங்கள் வேளாண் விளைபொருள் விற்பனை இயக்கு நரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. விவசாயிகளின் நலனுக்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தி, பராமரித்தல்.
2. தேவைப்படும் விவசாயிகளுக்கு அடகுக் கடன் வசதி செய்து கொடுத்தல்.
3. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, வனம் ஆகிய துறைகளின் உற்பத்திப் பொருட்களை, 'அக்மார்க்' முறையில் தரம் பிரித்தல்.
4. வேளாண் விளை பொருள்களை வணிக முறையில் தரம் பிரித்தல்.
5. பருத்தி சான்றளிப்பும் திட்டச் செயல்பாடும்.

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்:

தமிழ்நாட்டில் 14 அங்காடிக் குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் 15 துணை விற்பனைக் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வேளாண் விளை பொருட்களின் விற்பனைக்காக விவசா யிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தி கொடுக்கப்படுகிறது. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு ஆதாய மான போட்டி விலை கிடைக்க இந்த ஒழுங்குமுறை விற்பனைக்

கூடங்களில் ஏலத்தின் மூலம் வழிவகை செய்யப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளிலும் நடப்பாண்டில் 1993 பிப்ரவரி திங்கள் முடியவும் பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரப்பெற்றவை குறித்த விவரம் வருமாறு:

அட்டவணை 6.1

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வந்த
விவசாய விளைபொருட்களின் வரத்து
(அலகு - மெட்ரிக் டன்னில்)

		1990-91	1991-92	1992-93	
தொ. எண்	அங்காடிக் குழுவின் பெயர்	வரப் பெற்றவை	வரப் பெற்றவை	இலக்கு	சாதனை (பிப்ரவரி 93 முடிய) வரப் பெற்றவை
1.	செங்கை - எம்.ஜி.ஆர்	4385	3230	8500	3142
2.	வட ஆற்காடு அம்பேத்கர்	79747	65407	126500	82126
3.	தென்னாற்காடு	163489	155337	220000	193360
4.	சேலம்	6911	5650	9900	4314
5.	தருமபுரி	9877	8523	11000	5830
6.	கோயம்புத்தூர்	92852	76269	99000	62460
7.	பெரியார்	114467	88240	146300	82220
8.	திருச்சி	21051	18851	24200	17146
9.	தஞ்சாவூர்	7449	7787	16500	11380
10.	புதுக்கோட்டை	2004	1940	200	1834
11.	மதுரை	7191	8104	8900	9060
12.	இராமநாதபுரம்	14032	14983	16500	14448
13.	திருநெல்வேலி கட்டபொம்மன்	11817	11725	13200	10312
14.	கன்னியாகுமரி	3338	2257	3300	1317
	மொத்தம்	538610	468303	706250	498449

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இவ்வாண்டு 1993 பிப்ரவரி முடியவும் பல்வேறு அங்காடிக் குழுக்கள் ஈட்டிய வருவாய் குறித்த விவரம் வருமாறு:

அட்டவணை 6.2

அங்காடிக் குழுக்களின் வருவாய் (அலகு: ரூபாய் இலட்சத்தில்)

		1990-91	1991-92	1992-93	
தொ. எண்	அங்காடிக் குழுவின் பெயர்	வருவாய்	வருவாய்	இலக்கு	சாதனை பிப்ரவரி 93 முடிய வருவாய்
1.	செங்கை - எம்.ஜி.ஆர்	29.64	40.49	50.00	39.62
2.	வட ஆற்காடு அம்பேத்கர்	78.48	103.50	120.00	121.80
3.	தென்னாற்காடு	112.47	181.57	225.00	248.64
4.	சேலம்	56.44	107.84	150.00	94.86
5.	தருமபுரி	38.98	70.50	100.00	68.30
6.	கோயம்புத்தூர்	95.43	165.45	200.00	171.66
7.	பெரியார்	58.11	86.55	100.00	103.27
8.	திருச்சி	36.27	73.55	100.00	76.14
9.	தஞ்சாவூர்	42.51	92.02	120.00	105.81
10.	புதுக்கோட்டை	7.85	14.79	20.00	29.02
11.	மதுரை	35.62	56.64	70.00	68.94
12.	இராமநாதபுரம்	43.22	75.90	100.00	84.63
13.	திருநெல்வேலி கட்டபொம்மன்	42.22	75.90	100.00	63.76
14.	கன்னியாகுமரி	25.36	25.82	35.00	39.93
	மொத்தம்	701.55	1161.45	1490.00	1321.38

2. பொருள் அடகுக் கடன்:

சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களுடைய விளை பொருட்களை அறுவடைக் காலங்களில் குறைந்த விலையில் விற்று நட்டமடைவதைத் தடுப்பதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் 97 ஊரகக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் ஒரு ஊரகக் கிடங்கு கட்டப்பட்டு வருகிறது. விவசாயிகள் இந்த ஊரகக் கிடங்குக

ளில் தங்களுடைய விளைப் பொருட்களை இருப்பு வைத்து அதன்மீது அங்காடிக் குழுக்களிடமிருந்து பொருள் அடகுக் கடன் பெற அனும திக்கப்படுகின்றனர். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விளை பொருட்களின் மதிப்பில் 75 சதவீதமும் உயரளவாக ரூ.10,000 வரையும் இதர விவசாயிகட்கு 50 சதவீதமும் பொருள் அடகுக் கடன் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்களுடைய விளை பொருட்களை ஊரகக் கிடங்குகளில் 6 மாதம் வரை இருப்பு வைத்திருந்து தங்கட்குத் திருப்திகரமான விலை கிடைக்கும்பொழுது விற்பனை செய்து கொள் ளலாம். கொடுக்கப்படும் பொருள் அடகுத் தொகைக்கு முதல் மாதம் வட்டி வசூலிக்கப்படுவதில்லை. அடுத்துவரும் மாதங்கட்கு 12 சதவீ தம் என்ற அளவில் தனிவட்டி வசூலிக்கப் படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இவ்வாண்டு 93 சனவரி முடியவும் வழங்கப்பட்டுள்ள பொருள் அடகுக் கடன் குறித்த விவரம் வருமாறு:

அட்டவணை: 6.3

விவசாயிகட்கு வழங்கப்பட்ட பொருள் அடகுக் கடன்: (அலகு: ரூபாய் இலட்சத்தில்)

தொடர் எண்	அங்காடிக் குழுவின் பெயர்	1990-91 இலக்கு	1990-91 சாதனை	1991-92 இலக்கு	1991-92 சாதனை	1992-93 இலக்கு	1992-93 சாதனை 93 பிப்ரவரி முடிய
1.	செங்கை எம்.ஜி.ஆர்.	2.00	0.05	2.00	1.87	10.00	6.40
2.	வட ஆற்காடு அம்பேத்கர்	5.00	1.65	5.00	4.97	10.00	3.20
3.	தென்னாற்காடு	5.00	3.77	5.00	12.28	20.00	39.34
4.	சேலம்	1.50	0.72	1.50	1.41	5.00	3.60
5.	தருமபுரி	2.00	1.79	2.00	4.60	5.00	3.83
6.	கோயம்புத்தூர்	5.00	5.27	5.00	7.30	15.00	20.50
7.	பெரியார்	5.00	9.67	5.00	6.40	10.00	20.50
8.	திருச்சி	2.00	0.78	2.00	1.66	10.00	5.61
9.	தஞ்சாவூர்	4.00	0.76	4.00	6.47	10.00	5.90
10.	புதுக்கோட்டை	0.50	0.17	0.50	1.62	5.00	3.66
11.	மதுரை	4.00	8.05	4.00	20.09	25.00	8.20
12.	இராமநாதபுரம்	4.00	14.36	4.00	24.57	30.00	18.08
13.	திருநெல்வேலி கட்டபொம்மன்	3.00	7.38	3.00	14.85	15.00	11.20
14.	கன்னியாகுமரி	5.00	3.50	5.00	6.94	10.00	5.76
	மொத்தம்	48.00	57.78	48.00	115.03	180.00	142.56

தற்பொழுது 97 ஊரகக் கிடங்குகளில் உள்ள பொருள் அடகுக் கடன் வசதி 1993-94 ஆம் ஆண்டில் மேலும் 39 கிடங்குகளுக்கு விரிவுப்படுத் தப் படவுள்ளது.

3. 'அக்மார்க்' தரம் பிரித்தல்

நுகர்வோர்களுக்கு நல்ல தரமான பொருட்கள் கிடைக்க உதவி செய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தற்பொழுது 34 அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்களில் சமையல் எண்ணெய், நெய், தேன் மற்றும் சுவையூட்டும் பொருட்கள் போன்ற பல்வேறு மத்தியக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருட்கள் அக்மார்க் தரத்தில் தரம் பிரிக்கப்படுகின்றன. அரிசி, பயறு வகைகள், உருளைக் கிழங்கு, மஞ்சள் மற்றும் பாக்கு போன்ற மத்திய கட்டுப்பாட்டிற்குட்ப டாத பொருட்களும் அக்மார்க் ஆய்வு கூடங்களில் தரம் பிரிக்கப்படு கின்றன. மேலும் திருச்சியில் ஒரு முதன்மை ஆய்வுக் கூடம் செயல் பட்டு வருகின்றது. இது இம் மாநிலத்திலுள்ள அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்களில் தரம் பிரிக்கப்பட்ட பொருட்களின் மாதிரிகளை மீண்டும் ஆய்வு செய்து தரம் பிரிப்பின் தரத்தை உறுதி செய்கிறது. அக்மார்க் ஆய்வுக் கூடங்களில் பணியாற்றும் ஆய்வக உதவியாளர்க ளின் பணி மேலும் மேம்பாடு அடையும் வகையில் அவர்களுக்கு முதன்மை ஆய்வுக் கூடத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கடந்த இரண்டாண்டுகளிலும் இவ்வாண்டு 93 பிப்ரவரி முடிய வும் அக்மார்க் தரம் பிரிக்கப்பட்ட பொருட்களின் விவரம் வருமாறு:

அட்டவணை 6.4

அக்மார்க் தரம் பிரிக்கப்பட்ட பொருட்களின் அளவு

தொ. எண்	விவரம்	தரம் பிரிக்கப்பட்ட பொருட்களின் அளவு (குவிண்டால்) 1990-91	1991-92	1992-93 (93 பிப்ரவரி முடிய)
1.	மத்தியக் கட்டுப்பாட்டிற் குட்பட்ட பொருட்கள்	1,83,400	1,95,976	173840
௨.	மத்திய கட்டுப்பாட்டிற் குட்படாத பொருட்கள்	௨,08,436	1,67,530	1,71,௨8௨

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. வணிகமுறை தரம் பிரித்தல்

96 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வணிகமுறை தரம் பிரிப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் கொண்டுவரும் விளை பொருட்கள் தரம் பிரிப்பில் சிறப்பு பயிற்சி பெற்ற பணியாளர்களால் தரம் பிரிக்கப்படுகின்றன. தரம் 1, தரம் 2, தரம் 3, என விளை பொருட்கள் தரம் பிரிக்கப்படுவதால், தரத்திற்கு ஏற்ற நல்ல விலை விவசாயிகள் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. 1993-94-ஆம் ஆண்டில் வணிகமுறை தரம் பிரிப்பு வசதி மேலும் விரிவுபடுத்தப்பட உள்ளது. கடந்த இரண்டாண்டுகளிலும் நடப்பாண்டு 1993 பிப்ரவரி முடியவும் தரம் பிரிக்கப்பட்ட பொருள்களின் அளவு வருமாறு:

அட்டவணை 6.5

வணிகமுறை தரம் பிரிப்பு செய்யப்பட்ட பொருட்கள்

தொ. எண்.	ஆண்டு	தரம் பிரிக்கப்பட்ட அளவு
1.	1990-91	51,63,962 குவிண்டால்
2.	1991-92	51,35,884 குவிண்டால்
3.	1992 - 93 (1993 பிப்ரவரி முடிய)	5118929 குவிண்டால்

5. பருத்தி சான்றளிப்பும் திட்டத்தைச் செயல்படுத்துதலும்.

பருத்தி விதை நீக்கும் மற்றும் அழுத்தும் தொழிற் சாலைகளில் வேறு வகை பருத்திகளைக் கலந்து கலப்படம் செய்யப்படாமல் தடுப்பதே இத்திட்டத்தில் முக்கிய நோக்கமாகும். மாநிலத்தில் கிடைக்கும் பருத்தியின் அளவையும் வெளி மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் பருத்தியின் அளவையும் கணக்கிடுவது இத்திட்டத்தின் மற்றொரு பணியாகும்.

பருத்தி எடுத்துச் செல்வதற்கான சட்டம் மற்றும் விதிகளைச் செயல்படுத்துவதன் மூலம் இந்நோக்கம் எய்தப்படுகிறது. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் பருத்தியை எடுத்துச் செல்வதற்கான உரிமங்கள் வழங்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இவ்

வாண்டு பிப்ரவரி 93 வரையிலும் வழங்கப்பட்டுள்ள உரிமங்கள் பற்றிய விவரம் வருமாறு:

அட்டவணை 6.6

பருத்திச் சான்றளிப்பும் உரிமம் வழங்குதலும்

தொடர் எண்	விவரங்கள்	1990-91	1991-92	1992-93 '93 பிப்ரவரி வரை
1.	பருத்தியை எடுத்துச் செல்வதற்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை	1,32,670	1,12,601	87434
2.	உரிமங்கள் மூலம் கிடைத்த வருமானம் (ரூ. இலட்சத்தில்)	8.32	9.17	8.13

6. வேளாண் விளை பொருள் விற்பனைத் துறையால் செயல்படுத்தப்படும் ஏனைய முக்கிய திட்டங்கள்.

சிறு மற்றும் குறு விவசாயிகள் அவர்களுடைய விளைப் பொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தொடர்ந்து விற்பனைச் செய்வதை ஊக்குவிக்க 500 டயர் மாட்டு வண்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாட்டு வண்டிக்கும் உயரளவு ரூ.7,500/- வரை 50 சதவீதம் உதவித் தொகை அனுமதிக்கப்படுகிறது. 1993-94-ம் ஆண்டில் 3 விற்பனைக் குழுக்களிலும் 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் ரூ.5.5 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறைகள் கட்டப்படும் (ஒன்றின் மதிப்பும் ரூ.50,000/-).

11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.40 இலட்சம் மொத்தச் செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். 12 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.60 இலட்சம் மொத்தச் செலவில் ஓய்வுக் கூடங்கள் கட்டப்படும்.

மாநில வேளாண்மை விளை பொருள் விற்பனை வாரியம்:

மாநில அரசினால் ஏற்படுத்தப் பட்டுள்ள மாநில வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியம் விற்பனைக் குழுக்களின் தலைமை அமைப்பாகச் செயல்படுகிறது. இது அரசு விற்பனைக் குழுக்கள்

வேளாண்மை விளைபொருள் விற்பனை இயக்ககம் ஆகியவற்றிற்கிடையே சிறந்த பயனுள்ள ஓர் அமைப்பாக பணிபுரிகிறது. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் விற்பனை முறைப்படுத்தல் சட்டம் செயலுக்கு வந்த 1.2.91 ஆம் நாள் முதல் மாநில வேளாண்மை விளை பொருள் விற்பனை வாரியம் சட்டப்படி ஓர் அமைப்பாகச் செயல்படுகிறது.

ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விளை பொருட்களின் வரத்தினை அதிகரிக்கவும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் கிடைக்கப்பெறும் வசதிகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுவதை அதிகரிக்கச் செய்யவும் இவ்வாரியம் பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது.

1. விளம்பரமும் பிரச்சாரமும்:

விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விற்பனை செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு மாநில வேளாண்மை விளை பொருள் விற்பனை வாரியம் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அவ்வாரியத்தின் மையங்கள் வாயிலாக, விளம்பரம் செய்து வருகிறது. ஒவ்வொரு மையத்திலும் திரைப்படக் கருவி, ஒலிபெருக்கி வசதி பிரச்சார வாகனங்கள் போன்ற தேவையான அடிப்படை வசதிகள் உள்ளன. இப்பிரச்சார விளம்பர அமைப்பு கிராமங்களுக்குச் சென்று முற்போக்கான விவசாயிகளிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களுடன் தொடர்பை மேம்படுத்துவதுடன் விவசாய கூட்டங்கள் நடத்துவது, கண்காட்சிகள் அமைத்தல், வேளாண்மை விற்பனை பற்றிய திரைப்படங்களைக் காட்டுதல் ஆகியவற்றை நடத்தி வருகிறது. இத்துடன் வேளாண்மை விளை பொருள் விற்பனைக் குறித்த பல்வேறு விளம்பர சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், சிறு வெளியீடுகள், ஒட்டு பிரசுரங்கள், போன்றவற்றைத் தயாரித்து அச்சிட்டு அனைத்து விற்பனைக் குழுக்களுக்கும் வழங்கப்படுகின்றன.

அட்டவணை: 6.7

வாரியத்தால் செய்யப்படும் விற்பனை விளம்பரமும் பிரச்சாரமும்

தொடர் எண்.	விவரங்கள்	1990-91	1991-92	1992-93 (1993 பிப்ரவரி வரை)
1.	பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்ட கிராமங்களின் எண்ணிக்கை	3059	7235	5186
2.	தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்ட கிராமங்களின் எண்ணிக்கை	-	780	766
3.	விவசாயிகள் கூட்டங்களின் எண்ணிக்கை	1015	1034	1035
4.	நடத்தப்பட்ட கண் காட்சிகளின் எண்ணிக்கை	21	23	20
5.	திரையிடப் பட்ட திரைப்படக் காட்சிகளின் எண்ணிக்கை	738	950	700
6.	காண்பிக்கப் பட்ட ஸ்லைடு காட்சிகளின் எண்ணிக்கை	720	884	805

2. அங்காடித் தகவல் நிலவரம்:

தொலைக்காட்சியில் வரும் 'வயலும் வாழ்வும்' நிகழ்ச்சியில் விற்பனைக் குறித்த தகவல் நிலவரம் அளிக்கப்படுகிறது. அகில இந்திய வானொலி மூலமும் பொருட்களின் விலை விவரங்கள் ஒலிபரப்பப் படுகிறது.

3. பயிற்சி

வேளாண்மை உதவி இயக்குநர் தலைமையில் திருச்சியில் செயல் பட்டு வரும் மாநில அளவிலான பயிற்சி நிலையம், வேளாண்மை விளை பொருள் விற்பனை குறித்த பல்வேறு அம்சங்களில் விவசாயிகளுக்கும் அங்காடிக் குழுப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும் தேவையை நிறைவு செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கீழ்க்காணும் மூன்று பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

1. தரம் பிரிப்பாளர் பயிற்சி.

2. அங்காடிக் குழுப் பணியாளர்களுக்கான பயிற்சி.

TRUTH ALONE TRIUMPHS

3. நேரடித் தொடர்பு திட்டம்:

வணிகமுறை தரம் பிரிப்பு, அக்மார்க் தரம் பிரிப்பு ஆகியவை குறித்து தரம் பிரிப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்கள் மாநிலத்தில் உள்ள பல்வேறு இடங்களுக்கு நடைமுறை பயிற்சிக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர். விற்பனைக் குழு பணியாளர்கள் பயிற்சியில் அறுவடைக்குப் பின் மேற்கொள்ளப்படும் தொழில் நுட்பம், சேமிப்பு கணக்கு வரவு செலவு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நேரடித் தொடர்பு திட்டம், விவசாயிகளுக்கென்றே உள்ள ஒரு தனித் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் மாநிலத்தில் உள்ள பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். மேலும் சேமிப்பு, அறுவடைக்குப் பின் மேற்கொள்ளப்படும், தொழில் நுட்பம் ஆகியவற்றில் வகுப்பறைப் பாடமும் நடத்தப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் ஏற்படும் விவசாயிகளுக்கானப் பயணச் செலவு வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் நடத்தப்பட்ட பயிற்சி பற்றிய விவரம் வருமாறு:

அட்டவணை 6.8

நடத்தப்பட்ட பயிற்சித் திட்டம்

தொடர் எண்	பயிற்சி	காலம் (நாட்களில்)	எண்ணிக்கை (தொகுதிகளில்)	பயிற்சி பெற்றவர்கள் 1990 - 91	1991 - 92	1992 - 93 (1993 பிப்ரவரி வரை)
1.	தாம் பிரிப்பாளர் பயிற்சி	90	2	38	40	26
2.	அங்காடிக் குழு பணியாளர் களுக்கான பயிற்சி	35	2	34	25	39
3.	நோடித் தொடர்புத் திட்டம்	5	4	45	52	58
	மொத்தம்	-	-	117.	117	123

4. பொறியியல் பிரிவு

கண்காணிப்புப் பொறியாளர் ஒருவரையும் 6 உதவி செயற் பொறியாளர்களையும் கொண்ட இரு கோட்டங்கள் அடங்கிய பொறியியல் பிரிவு 1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமைக்கப்பட்டது. அங்காடிக் குழுக்களின் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது இந்தப் பொறியியல் பிரிவின் பொறுப்பாகும். இப்பிரிவு, இதுவரை ரூ.398.16 இலட்சம் செலவில் 97 கிடங்குகளைக் கட்டியுள்ளது. கட்டி முடிக்கப்பட்ட ஊரகக் கிடங்குகள் செலவிடப்பட்ட தொகை ஆகியவை குறித்த விவரம் வருமாறு:

அட்டவணை 6.9

வாரியத்தால் கட்டப்பட்ட ஊரகக் கிடங்குகள்

தொடர் எண்.	ஆண்டு	கட்டப்பட்ட கிடங்குகளின் எண்ணிக்கை	ஏற்பட்ட செலவு (ரூபாய்)
1.	1984-85	10	41,57,973.00
2.	1985-86	50	1,91,83,773.00
3.	1986-87	20	73,65,219.00
4.	1987-88	7	25.71.172.00
5.	1988-89	2	10,38,628.00
6.	1989-90	3	17.18,634.00
7.	1990-91	1	6.14,409.00
8.	1991-92	4	27,02,822.00
	மொத்தம்	97	3.93.52.630.00

இத்திட்டம் 1991-92 ஆண்டுடன் முடிவுற்றது. இத்திட்டம் 1993-94-ம் ஆண்டில் புதுப்பிக்கப்படவுள்ளது. இந்த பொறியியல் பிரிவு அலுவலகம் கிடங்குகள் பரிவர்த்தனை கொட்டகைகள், ஏல மேடை, உலர் களம், பருத்தி விதை எடுக்கும் ஆலைகள், நிருவாகக் கட்டிடம், விற்பனை வளாகம், சாலைகள் அமைத்தல், தண்ணீர் வசதி, சுகாதார வசதிகள் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை ரூ.1278 லட்சம் மதிப்புள்ள 539 பணிகளை முடித்துள்ளது. ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் ரூ.111.63 லட்சம் மதிப்பில் தண்ணீர் வசதி,

சுகாதார வசதிகள் செய்து கொடுப்பதற்காக 103 கட்டுமான பணிகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதில் 13 பணிகள் தள்ளி வைக்கப்பட்டு மீதமுள்ள 90 பணிகள் முடிக்கப்பட்டு விற்பனைக் குழுக்கள் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. தற்போது ரூ.128.07 இலட்சம் மதிப்பில் 123 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றின் விவரங்கள் வருமாறு:

அட்டவணை: 6.10

செய்து கொடுக்கப்பட்ட அடிப்படை வசதிகள்

மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)

தொடர் எண்	பணிகளின் பெயர்	1990 - 91		1991-92		1992 - 93		தொடங் கப்பட்டதிலிருந்து முடிக்கப் பட்ட பணிகள்	
		எண்ணிக்கை	மதிப்பு	எண்ணிக்கை	மதிப்பு	எண்ணிக்கை	மதிப்பு	எண்ணிக்கை	மதிப்பு
1.	ஊரடங்கு	2	6.14	4	27.03	1	6.41	97	398.16
2.	கற்றுச்சுவர்	3	7.13	3	2.38	19	33.45	52	94.00
3.	பரிவர்த்தனைக் கொட்டகை			8	1.71			64	102.00
4.	அலுவலகக் கட்டிடம்	2	8.99	3	10.00	4	20.00	26	78.00
5.	மின் பழுது பார்ப்பு பணி	4	1.71	27	6.71	5	0.50		
6.	விவசாயிகள் கூடம்	1	5.00			1	4.50	8	38.10
7.	ஓய்வு அறை							12	24.30
8.	கடைகள்	2	2.92					11	21.92
9.	தரம் பிரிப்பு ஆய்வகம்							1	4.00
10.	அலுவலகம் & விருந்தினர் மாளிகை	1	5.00					9	40.00
11.	அலுவலகம் & கிடங்கு	1	5.00	2	0.30			31	94.00
12.	பரிவர்த்தனைக் கொட்டகை	2	8.80			5	24.00	8	19.40
13.	துப்புரவு ஏற்பாடுகள்					5	3.50	57	27.00
14.	ஏலமேடை	1	5.00	1	0.18			4	13.68
15.	சாலை			2	0.41	17	14.70	40	124.00

16.	உலர்களம			5	1.41	9	9.00	33	95.00
17.	செப்பு பழுதுப் பார்ப்புப் பணி			23	2.60	42	2.01		
18.	குடி நீர் வசதி ஏற்பாடு					14	5.00	54	27.00
19.	பருத்தி விதை எடுக்கும் ஆலை							1	13.75
20.	விருந்தினர் மாளிகை					1	5.00	1	5.00
21.	காவலர் அறை							2	6.00
22.	மிதிவண்டிக் கொட்டகை							3	9.00
23.	கால்நடைக் கொட்டகை							3	6.00
24.	தொகை வழங்கும் முறை							22	38.06
	மொத்தம்	18	53.69	83	52.73	123	128.07	539	1278.37

அங்காடிக் குழுக்களுக்காக 1993 - 94 ஆம் ஆண்டில் ரூ.306.18 இலட்சம் மதிப்புள்ள கட்டுமானப் பணிகளை நிறைவேற்றத் திட்டமிடப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 7

வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் (வ.இ.ப.தி.) இம்மாநிலத்தில் 1974-75-ம் ஆண்டில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயிரின வாழ்க்கைச் சூழலின் ஏற்றத் தாழ்வை சீராக்குவதை நோக்கமாகக் கொண்டு, உரிய அளவுக்கு இயற்கை ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம், வறட்சிப் பாங்கான பகுதிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம், இம்மாநிலத்தில் தருமபுரி, வ.உ. சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர், புதுக்கோட்டை, திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள 43 வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1. மண்வளப் பாதுகாப்பும், ஈரத்தன்மைப் பாதுகாப்பும், 2. காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில மேம்பாடு, 3. நீர்வள ஆதாரங்கள் மேம்பாடு ஆகிய மூன்று முக்கிய அடிப்படை பிரிவுகளுடன், தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற பிற துணைப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்திற்காகும் செலவு, மத்திய, மாநில அரசுகளால் 50:50 என்ற அடிப்படையில் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது. மேலே குறிப்பிட்ட பல துறைகளின் சாதனைகள் வருமாறு:

அட்டவணை - 7.1

வறட்சிப் பாங்கானப் பகுதித் திட்டச் சாதனை (திட்டம்)

(எக்டேரில்)

பிரிவுகள்	1989-90	1990-91	1991-92	1992-93 இலக்கு	1992-93 1993 பிப்ரவரி வரையில் சாதனை
1. மண்வளப் பாதுகாப்பும் ஈரத் தன்மைப் பாதுகாப்பும்	19,267	16,022	14,247	13,892	14,010

2. காடு வளர்ப்பும் மேய்ச்சல் நில மேம்பாடும்	7,908	5,175	4,310	4,340	4,295
3. நீர் வள மேம்பாடு	635	412	346	370	285
4. ஏனையவை	308	683	623	932	829
மொத்தம்	28,118	22292	19526	19534	19419

அட்டவணை 7.2

வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம் (நிதி)

(ரூபாய் இலட்சத்தில்)

பிரிவுகள்	1989 - 90	1990 - 91	1991 - 92	1992 - 93	செலவழிக்கப்பட்ட தொகை பிப்ரவரி 93 முடிய
1. மண்வளப் பாதுகாப்பும் ஈரத் தன்மை பாதுகாப்பும்	145.398	173.500	195.009	199.230	183.493
2. காடு வளர்ப்பும் மேய்ச்சல் நில மேம்பாடும்	156.144	168.390	167.763	165.695	149.669
3. நீர்வள மேம்பாடு	118.788	133.670	114.007	133.500	108.490
4. ஏனையவை	30.055	38.630	74.085	76.610	60.258
5. திட்ட நிர்வாகம்	83.588	87.680	88.035	81.965	88.854
மொத்தம்	533.973	601.870	638.899	657.000	590.764

வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தை 1993-94-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ரூ.328.50 இலட்சம் ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய அரசு உறுதியளித்துள்ளது. இத்தொகையுடன், மாநில அரசின் பங்கையும் சேர்த்தால், ஒதுக்கீடு செய்யப்படும் மொத்தத் தொகை ரூ.657.00 இலட்சமாகும். மாவட்ட வாரியான 1993 - 94-க்கான ஒதுக்கீடு வருமாறு:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
53-104-60

அட்டவணை 7.3

1993 - 94-க்கான வறட்சிப் பாங்கானப் பகுதித் திட்டம்

மாவட்டம்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1. தருமபுரி	183.00
2. வ.உ. சிதம்பரனார்	124.50
3. இராமநாதபுரம்	108.00
4. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்	91.50
5. காமராசர்	75.00
6. புதுக்கோட்டை	60.00
7. திருநெல்வேலி கட்டபொம்மன்	15.00
மொத்தம்	657.00

இவ்வரசின் இடைவிடாத முயற்சியின் காரணமாக, இத்திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கும் தொகை சுமார் 50% அதிகப்படுத்தப் படவுள்ளது. இதனுடன் மாநில அரசின் பங்கினையும் சேர்த்தால் இத்திட்டத்திற்குரிய மொத்த ஒதுக்கீடு ரூபாய் 10 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 8

தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகம்

இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயத்தை நவீனமயமாக்குதல், விவசாயத்திற்கு தேவையான தரமான உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் வழங்குவது விவசாய உற்பத்திப் பொருட்களை செய்முறைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் 1966-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.360/- இலட்சமாகும். இதில் மத்திய அரசு ரூ.165/- இலட்சமும், தமிழ்நாடு அரசு ரூ.195/- இலட்சமும் தங்களின் பங்கு மூலதன்மாக அளித்துள்ளன.

2. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

1. வேளாண்மை வளர்ச்சிக்கும், நவீனமயமாக்குதலுக்கும் உதவும் பொருட்களைத் தயாரித்தல் அல்லது தொழில்களை ஊக்குவித்தல், ஏற்படுத்தல், தானே ஏற்படுத்தி நடத்தல்.

2. வேளாண் உற்பத்திப் பொருட்களை செய்முறைப்படுத்துவதற்கான தொழில்களை ஊக்குவித்தல், நிறுவுதல், தானே ஏற்படுத்தி நடத்தல்.

3. மேற்சொன்ன வகை தொழில்களை விரைந்து மேம்படுத்துவதற்கு ஊக்கமளித்தல்.

மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்காக, இக்கழகம் (அ) சூரியகாந்தி எண்ணெய், பூச்சிக் கொல்லி மருந்துகள், மீன் பிடி வலைகள் தயாரிப்பு, (ஆ) உரங்கள் மற்றும் வேளாண்மைக் கருவிகளின் விற்பனை ஆகிய இரண்டு முக்கியமான பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

(அ) உற்பத்தி நடவடிக்கைகள்:

1. பூச்சிக் கொல்லி மருந்து ஆலை, அம்பத்தூர்.

இக்கழகம் 1976-ம் ஆண்டு அம்பத்தூரில் நிறுவப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப்பு ஆலையில் பூச்சி கொல்லி மருந்துகளை

தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இந்த ஆலையின் மூலதன செலவு ரூ.34/- இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு 25 டன்கள் தூள் மருந்துகளையும், 1000 லிட்டர் திரவ மருந்துகளையும் தயாரிக்கும் திறன் கொண்டது. இந்த ஆலை 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வணிக ரீதியிலான உற்பத்தியை தொடங்கியது. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு ''திரி ரோல்லர் ரேமண்ட் மில்'' ரூபாய் 4 இலட்சம் செலவில் இத்தொழில் கூடத்தில் நிறுவப்பட்டது. கீழே குறிப்பிட்டுள்ள தூள் மற்றும் திரவ பூச்சிக் கொல்லி மருந்துகளை இந்த ஆலை உற்பத்தி செய்கிறது.

தூள் மருந்து

அ) பி.எச்.சி. 10 சதம்.

ஆ) மாலத்தியான் 25 சதம் டபிள்யூ.டி.பி.

திரவ மருந்து:

அ) புட்டாகுளர் 50 சதம் இ.சி.

ஆ) பாஸ்போமிடான் 86 சதம் இ.சி.

இ) என்டோசல்பான் 35 சதம் இ.சி.

ஈ) மாலத்தியான் 50 சதம் இ.சி.

உ) மானோகுரேட்டோபாஸ் 36 சதம் எஸ்.எல்.

ஊ) குயினான்பாஸ் 25 சதம் இ.சி.

1991-92-ம் ஆண்டில் இந்த ஆலையில் வியாபாரத் தொகை ரூபாய் 500.68 இலட்சமாகும். இதற்கு முந்தைய ஆண்டான 1990-91 ஆம் ஆண்டில் இந்த ஆலையினை வியாபாரத் தொகை ரூபாய் 389 இலட்சமாக இருந்தது. நடப்பு ஆண்டில் 1993 ஜனவரி முடிய 1224 டன் தூள் மருந்துகளும் 156347 லிட்டர் திரவ மருந்துகளும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டான 1992-93-ல் 1566 டன் தூள் மருந்துகளும் 1,69,000 லிட்டர் திரவ மருந்துகளும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. 1993-94-ஆம் ஆண்டில் 300 மெ.டன் தூள் மருந்துகளையும் 3,50,000 லிட்டர் திரவ மருந்துகளையும் தயாரித்து விற்பனை

செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இந்த ஆலை தொடங்கப் பட்டதிலிருந்து இதன் உற்பத்தி மற்றும் விற்பனை அளவு வருமாறு:

அட்டவணை 8.1

பூச்சிக் கொல்லி மருந்து ஆலையின் செயல்திறன்

உற்பத்தி அளவு	1976-77	1980-81	1984-85	1990-91	91-92	92-93	93-94
							இலக்கு
திரவம் (லிட்டரில்)	46000	7113	43201	271816	301880	179170	350000
தாள் (மெட்ரிக் டன்கள்)	1962	1291	3947	2494	1826	1243	300
விற்பனை அளவு திரவம் (லிட்டரில்)	36949	7402	34597	261792	289090	179170	350000
தாள் (மெட்ரிக் டன்களில்)	1905	884	3791	2432	1849	1243	300
வியாபாரத் தொகை (இலட்சத்தில்)	25.64	6.96	52.02	389.01	500.68	388.90	596.25

தமிழக அரசு எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், அம்பத்தூரில் செயல்படும் இந்த பூச்சிக் கொல்லி மருந்து ஆலையை நவீனப்படுத்தவும், புதுப்பிக்கவும், திறனளவை அதிகரிக்கவும் ரூ.25/- இலட்சம் ஒதுக்கியுள்ளது. இந்த 25 இலட்சத்தில், ரூ.15/- இலட்சம் 1993-94-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.10/- இலட்சம் வரும் ஆண்டுகளில் செலவிடப்படும்.

(iii) மீன்பிடி வலை தொழிற்சாலை, கிண்டி.

மீன்பிடித்தலை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்குத் தேவைப்படும் இயந்திரங்களினால் பின்னப்பட்ட மீன்பிடி வலைகளின் தேவைகளை நிறைவு செய்ய இந்த திட்டம் தொடங்கப்பட்டது. இந்த மீன்பிடி வலை தொழிற்சாலை, ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நான்கு இயந்திரங்களுடன், 1976-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1978-ம் ஆண்டு மற்றுமொரு இயந்திரம் நிறுவப்பட்டது. இந்த தொழிற்சாலை ஆண்டிற்கு 60 டன்கள் வரை மீன்பிடி வலைகளை தயாரிக்கும் திறன் கொண்டது. இதன் உற்பத்தி திட்டம் மீன்பிடி வலைகளின் தேவைகளை சார்ந்துள்ளது. ''தாய்'' நிறுவனத்தால் தயாரிக்கப்படும் மீன்பிடி வலைகள் மீனவர்களிடையே பிரபலமடைந்துள்ளதுடன் இதன் தரத்தினால் மிகவும் விரும்பப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டான 1992-93-ல், 54 டன்கள் மீன்பிடி வலைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. 1993-94-ம் ஆண்டில் 60 டன் மீன்பிடி வலைகளை தயாரித்து விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இந்த ஆலை தொடங்கப் பட்டதிலிருந்து இதன் செயல்பாடு குறித்த விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

அட்டவணை - 8.2

மீன்பிடி வலை தொழிற் சாலையின் செயல்பாடு

	1976-77	81-82	85-86	90-91	91-92	92-93	93-94
உற்பத்தி அளவு (மெ. டன்களில்)	6.5	25	21	36	56	45	60
விற்பனை அளவு (மெ. டன்களில்)	6.2	27.4	19	38	59	45	60
வியாபாரத் தொகை (இலட்சத்தில்)	6.97	27.02	19.69	38.87	69.44	68.90	89.65

3. சூரியகாந்தி எண்ணெய் ஆலை, போச்சம்பள்ளி.

இக்கழகம் 1978-ம் ஆண்டு பின் தங்கிய மாவட்டமான தருமபுரியில் உள்ள போச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒருங்கிணைந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவியது. இந்த ஆலையின் மூலதனச் செலவு ரூ.109.50 இலட்சமாகும். இந்த ஆலை, நாளொன்றுக்கு 50 டன் சூரியகாந்தி விதையை செய்முறைப் படுத்தவும், 40 டன் சூரிய காந்தி பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கவும், 20 டன் கச்சா சூரியகாந்தி எண்ணெயை சுத்திகரிக்கவும் திறன் கொண்டது. இந்த ஆலையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் ''சனோலா'' என்ற வணிகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் துணை உற்பத்திப் பொருளான சூரியகாந்தி எண்ணெய் பழிந்தெடுக்கப்பட்ட பிண்ணாக்கு கோழி மற்றும் மாடுகளுக்கு தீவனமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ''தாய்'' விற்பனை, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 4000 டன்களாகும். 1991-92-ம் ஆண்டில் இந்தப் பிரிவில் விற்பனை அளவு 4,059 டன்னை எட்டியது. இதன் வியாபாரத் தொகை ரூ.18.25 கோடி ஆகும். நடப்பு ஆண்டில் 1993 ஜனவரி முடிய 2016 டன் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யப் பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இக்கழகம் 1992-93-ம் ஆண்

டில் 5120 டன் சூரியகாந்தி விதையை செய்முறைப்படுத்தியும், 935 டன் கச்சா சூரியகாந்தி எண்ணெயை சுத்திகரித்தும், 2689 டன் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயை தயாரித்து விற்பனை செய்யும். 1993-94-ஆம் ஆண்டில் 8340 டன் சூரியகாந்தி விதையை செய்முறைப்படுத்தியும், 1500 டன் கச்சா சூரியகாந்தி எண்ணெயை சுத்திகரித்தும் 4380 டன் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணையை சனோலா உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ''சூரியகாந்தி'' பயிரிடுவோருக்கு ஊக்கமளிப்பதற்காக ''தாய்'' நிறுவனம் சீரான கொள்முதல் ஏற்பாட்டை உருவாக்கி வருவதோடு, உழவர்களுக்கு நல்ல ஆதரவு விலை கிடைக்கவும் ஏற்பாடு செய்து வருகிறது.

போச்சம்பள்ளியில் உள்ள சூரியகாந்தி எண்ணெய் ஆலையை நவீனமயமாக்குவதற்கு தமிழக அரசு 1992-93 ஆம் ஆண்டில் ரூ.25/- இலட்சம் அனுமதித்து உள்ளது.

அட்டவணை - 8.3

சூரியகாந்தி எண்ணெய் ஆலையின் செயல் திறன்

	1977-78	82-83	87-88	90-91	91-92	92-93	93-94
							இலக்கு
I உற்பத்தி அளவு							
பிழிதல் (டன்களில்)	-	3609	5845	3086	4641	4918	8340
சுத்திகரித்தல் (டன்களில்)	-	1386	2394	5327	2923	2564	4380
கரைசல் முறையில் எண்ணெய் எடுத்தல்	-	1607	4196	-	2465	2951	5000
II விற்பனை அளவு:							
எண்ணெய் (டன்களில்)	853.00	1607	2262	4788	4059	2689	4380
எண்ணெய் உற்பத்தி பொருட்கள் (டன்களில்)	60.39	1695.37	3775	2027	2413	2543	5000
வியாபாரத் தொகை (இலட்சத்தில்)	70.38	267.84	714.20	1812.89	1824.70	1194.96	1996

ஆ. வணிக நடவடிக்கைகள்
(வேளாண் கருவிகள் விற்பனை)

இக்கழகம் பிரசித்திப் பெற்ற டிராக்டர்கள் மற்றும் விசை உழு கருவிகளை விற்பனை செய்யும் உரிமை பெற்றுள்ளது. கேஜ் வீல்ஸ், விவசாயிகளுக்குத் தேவையான தரமான உதிரி பாகங்கள், டயர், டியூப் மற்றும் பாட்டரிகள் போன்ற விவசாய கருவிகளுடன் இந்த பண்ணை இயந்திரங்கள் பல்வேறு நிலையங்களிலிருந்து விற்பனை செய்யப்படு கின்றன. இக்கழகத்திற்கு தமிழ்நாடு முழுவதிலும் 10 வட்டார மையங்களும் 18 விற்பனைக் கூடங்களும் உள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் 1993 ஜனவரி முடிய 61 டிராக்டர்களை யும், 1169 பவர் டில்லர்களையும் உதிரி பாகங்களையும் விற்பனை செய்துள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் 103 டிராக்டர்களையும், 2000 பவர் டில்லர்களையும், விற்பனை செய்யும். இக்கழகம் மேலும் ரூ.353/- இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களையும் விற்பனை செய்யும். 1993-94-ஆம் ஆண்டில் 195 டிராக்டர்களையும், 603 பவர் டில்லர்களையும், ரூ.442/- இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களை யும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. தமிழக அரசு, ஒரு பவர் டில்லருக்கு அதன் விலையில் 25 சதவீதம் அதாவது ரூ.12,000/- உதவித் தொகை பெறும் என்ற அடிப்படையில், ஒருங்கி ணைந்த அரிசி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2000 பவர் டில்லர்களை விவசாயிகளுக்கு வழங்கிடும் பொறுப்பை இக்கழகத்திடம் வேளாண் மைத் துறையின் 27.8.92 ம் நாளிட்ட 556 ஆம் எண்ணுள்ள அரசாணை யின்படி ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்த டில்லர்களை ''தாய்'' நிறுவனம், கிளை மையங்கள் மூலம் வழங்கும். இதுவரை 900 டில்லர்களை இந்தத் திட்டத்தின் கீழ் விற்பனை செய்துள்ளோம். மீதமுள்ள டில்லர்களும் 93 மார்ச் திங்களுக்குள் வழங்கப்பட்டுவிடும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் ரூ.25.50 இலட் சம் மொத்தம் உதவித் தொகை பெறும் அடிப்படையில் 85 சிறிய டிராக்டர்களை, சிறு குறு விவசாயிகளுக்கு வழங்கும் பணியை, வேளாண்மைத் (வே.பொ.2) துறையின் 49 ஆம் அரசாணையின்படி தமிழ்நாடு அரசு இக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. இந்தச் சிறிய டிராக்டர்கள் 30% உதவித் தொகையுடன் உயரளவு ரூ.30,000/- என்பதற்குட்பட்டு வழங்கப்படும். தொடங்கப்பட்டதிலிருந்து இவ்வ ணிக நடவடிக்கையில் எய்திய சாதனைகள் வருமாறு:

அட்டவணை 8.4

டிராக்டர்கள் பவர் டில்லர்கள் விற்பனையின் சாதனை விவரங்கள்

	1969-70	74-75	80-81	86-87	90-91	91-92	92-93	93-94
								இலக்கு
டிராக்டர்களும் பவர் டில்லர்களும் (எண்ணிக்கையில்)	630	72	109	335	597	548	1950	788
மதிப்பு (ரூ. இலட்சத்தில்)	103.80	23.06	43.89	145.29	389.18	361.56	1145.98	664.17

ii) உர விற்பனை:

பெரும்பாலான தலை சிறந்த உரத் தயாரிப்பாளர்களின் உரங்களை ''தாய்'' நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. 'தாய்' நிறுவனம் மானிய விலையில் சிறு மற்றும் குறு சொற்ப விவசாயிகளுக்கு உர விற்பனையை மேற்கொள்ள ரூ.190 கோடி ரூபாய் உதவித் தொகையாக ஒதுக்கீடு செய்து தமிழக அரசு 2.6.92 தேதியிட்ட அரசு ஆணை எண். 337-ல் உத்திரவு பிறப்பித்தது. உதவித் தொகை பெறும் திட்டத்தின் கீழ் இக்கழகம் படித்த வேலையில்லாமலிருக்கும் 780 நபர்களை விநியோகஸ்தர்களாக நியமனம் செய்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை விரிவாக்கப் பணியாளர்களால் வழங்கப்பட்ட அனுமதி சீட்டின் அடிப்படையில் உர விநியோகம் செய்து வருகிறது. இக்கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களும் இத்திட்டத்தில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். டிப்போ மற்றும் கிளை டிப்போக்களில் உர விற்பனையை தரகு (கமிஷன்) அடிப்படையில் வணிகர்கள் செய்து வருகிறார்கள். இக்கழகம், ஜனவரி 93 முடிய ரூ.2882.99 இலட்சம் பெறுமான 65.874 டன் இரசாயன உரங்களை வழங்கியுள்ளது. இதில் 6.53 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு 62000 டன் இரசாயன உரங்கள் உதவித் தொகை பெறும் திட்டத்தின் கீழ் வழங்கியதும் அடங்கும். இதைத் தவிர 2.5 இலட்சம் எண்ணிக்கையுள்ள புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு 19.183 டன் உரங்களை 'தாய்' நிறுவனம் வழங்கியுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் 76000 டன் உரங்கள் வழங்கப்படுமென

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

எதிர்பார்க்கப்படுகிறது. *1993-94*-ல் இக்கழகம் *84,000* டன் உரங்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

உர விற்பனையில் இக்கழகம் அடைந்துள்ள செயல்பாட்டு முடிவுகள் வருமாறு:

அட்டவணை - 8.5

உர விற்பனை

	1979-80	84-85	90-91	91-92	92-93	93-94 மதிப்பீடு
விற்பனை அளவு (மெ. டன்களில்)	8039	54939	57677	28339	118331	84000
விற்பனை தொகை (இலட்சத்தில்)	110.63	1176.04	1139.14	682.20	5252.25	3756.22

3. இக்கழகம் தொடங்கப் பட்டதிலிருந்து அடைந்துள்ள மொத்த விற்பனையின் மதிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.6

தாய் நிறுவனத்தில் மொத்த விற்பனை

தொடர் எண்	ஆண்டு	விற்பனை அளவு (ரூபாய் இலட்சத்தில்)
1.	1966-67	0.47
2.	1967-68	2.29
3.	1968-69	9.10
4.	1969-70	75.08
5.	1970-71	148.96
6.	1971-72	194.00
7.	1972-73	201.75

8.	1973-74	117.62
9.	1974-75	134.81
10.	1975-76	158.00
11.	1976-77	181.32
12.	1977-78	289.68
13.	1978-79	455.03
14.	1979-80	518.87
15.	1980-81	706.43
16.	1981-82	1,157.65
17.	1982-83	1,348.61
18.	1983-84	1,375.12
19.	1984-85	1,977.76
20.	1985-86	2,448.21
21.	1986-87	2,595.60
22.	1987-88	1,767.79
23.	1988-89	1,671.47
24.	1989-90	2,430.44
25.	1990-91	4,319.84
26.	1991-92	3,870.81
27.	1992-93	8,330.99

1992-93-ஆம் ஆண்டின் விற்பனை அளவு 1991-92 ஆம் ஆண்டினைக் காட்டிலும் சுமார் 62 சதவிதம் அதிகமாக அதாவது ரூ.6,278 இலட்சத்தை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1993-94-ஆம் ஆண்டின் விற்பனை அளவு ரூ.7,449 இலட்சத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகம் கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து அடைந்து வந்த நட்டத்திற்கு பதில் 1992-93-ஆம் ஆண்டில் முதல் தடவையாக ஓரளவு இலாபத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'தாய்' நிறுவனம் தன்னுடைய நிருவாக, நிதி செயல் பாட்டைச் சீரமைப்பதன் மூலம் ஆதாய இலக்கினை அடைவதற்கு, மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தியாயம் 9

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் (என்கோபெட்)

1972 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு வேளாண்மை பொறியல் பணிக் கூட்டுறவு இணையம் (என்கோபெட்) பின்வரும் நோக்கங்களை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

அ) வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவுச் சங்கங்களை மாவட்ட வட்டார அளவில் நிறுவி அதன்மூலம் விவசாயிகளுக்கு பணிபுரிதல்.

ஆ) விவசாய இயந்திரங்களையும் வேளாண் கருவிகளையும் விவசாயி களுக்கு வாடகைக்கு விடுதல்,

இ) விவசாய இயந்திரங்களையும் வேளாண்மை கருவிகளையும் பழுது பார்த்து விவசாயிகளுக்கு அளித்தல்

ஈ) வேளாண் இடு பொருட்களாகிய விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், பயிர் பாதுகாப்பு கருவிகள் ஆகியவற்றை வழங்குதல்.

தற்பொழுது *187* வட்டார அளவிலான வேளாண்மை பொறியியல் பணிக்கூட்டுறவு மையங்களும் 12 மாவட்ட அளவிலான விவசாய பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் இந்த இணையத்தின் மேற்பார்வை யில் செயல்பட்டு வருகின்றன

1. விலை நிர்ணயம் செய்தல்:

வேளாண்மை இயக்ககத்தின் மூலம் மானிய விலையில் விவசாயிக ளுக்கு வழங்கப்படும் எல்லாவிதமான தெளிப்பான்களுக்கும் இவ்வி ணையம் விலை நிர்ணயம் செய்கிறது. அதேபோல் ஆயில் என்ஜின், மின் மோட்டார் பம்பு செட் ஆகியவற்றை கூட்டுறவு வங்கியின் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு இவ்விணையம் விலை நிர்ணயம் செய்கிறது.

2. வணிக நடவடிக்கைகள்:

இவ்விணையம் *1993* பிப்ரவரி வரை ரூ.*415.00* இலட்சத்திற்கு

பயிர் பாதுகாப்பு கரு ள், இடு பொருட்கள், ஏனைய கருவிகள் ஆகியவற்றை வழங்கி ளளது. 1990-91-லிருந்து 1992-93 வரை சாதனையும் 1993-94-ப ஆண்டிற்கான இலக்கு விவரமும் வருமாறு:

ட்டவணை - 9.1

ஆண்டு	ர் பாதுகாப்பு கருவிகள் (ரூ. இலட்சத்தில்)	விவசாய இடு பொருட்கள் (ரூ. இலட்சத்தில்)
1990-91	322.00	200.77
1991-92	371.87	96.70
1992-93 மார்ச்சு 93 வரை	415.00	4717.54
1993-94	380.00	600.00

3. வாடகைக்கு விடுதலும் ஏனைய பணிகளும்:

அ) இணையத்துடன் இணைந்த மையங்களில் 155 டிராக்டர்கள், 124 டிரெய்லர்கள், 119 ஆயில் இன்ஜின்கள், 376 விசைத் தெளிப்பான்கள், 485 கைத் தெளிப்பான்கள், 10 பாறை உடைக்கும் காற்றழுத்தக் கருவிகள், 1 கிணற்றுக்குள் ஆழ் குழாய் தோண்டும் கருவி, 81 விசை உழு கருவிகள் ஆகியவை உள்ளன. டிராக்டர்கள் உழு கருவிகள் வாடகை மூலம் இணையத்தை சார்ந்த மையங்கள் 1992-93 ஆம் ஆண்டில் பிப்ரவரி 93 வரை ரூ.130.55 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளன.

ஆ) மைய டிராக்டர்கள் இணைந்த டேங்கர் மூலம் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இ) சாலைகள் போடுவதற்காக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு வாடகைக்கு விடும் பொருட்டு இவ்விணையத்திடம் 6 சாலை உருளைகள் உள்ளன. இதன்மூலம் 1992-93 ஆம் ஆண்டில் பிப்ரவரி 93 வரை இவ்விணையத்திற்கு ரூ.4.16 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

4. இணையத்தைச் சார்ந்த மையங்களின் வணிக நடவடிக்கைகள்:

இணையத்தைச் சார்ந்த சங்கங்கள் வேளாண் இடு பொருள்களா

கிய விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், விவசாய கருவிகள், கைக் கருவிகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு பணி புரிகிறன. 1992-93-ஆம் ஆண்டில் (பிப்ரவரி 93 வரை) இணையத்தைச் சார்ந்த மையங்கள் ரூ.4717.54 இலட்சம் மதிப்புள்ள இடு பொருட்களை வழங்கியுள்ளன. 1990-91-லிருந்து 1992-93 வரை சாதனை வருமாறு.

அட்டவணை 9.2

வ. எண்.	ஆண்டு	சார்பு மையங்களின் எண்ணிக்கை	சாதனை					
			வாடகைக்கு விடுதல்		விற்பனை		பணி	
			திட்டம்	நிதி	திட்டம்	நிதி	திட்டம்	நிதி
1.	1990-91	194	237282	125.13	27774	522.03	-	796.58
2.	1991-92	195	218028	90.60	38476	468.57	-	909.07
3.	1992-93 (பிப்ரவரி 93 வரை)	199	316210	131.42	27576	4717.54	-	1150.02
4.	1993-94 ஆம் ஆண்டிற்கான இலக்கு	201	200950	114.70	30000	680.00	-	1000.00

5. விவசாய வேளாண் பணி மையங்கள்

மத்திய துறை திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

1. புதிய விவசாய வேளாண் பணி மையங்களை நிறுவி 50 சதவீத உதவித் தொகையில் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்.

2. மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகள், கைக்கருவிகள் ஆகியவற்றில் செயல்முறை விளக்கங்கள் நடத்துதல்.

3. மேம்படுத்தப்பட்ட விவசாய உபகரணங்களையும், விவசாய கைக்கருவிகளையும் பிரபலப்படுத்துவதற்காக 50 சதவீத மான்ய விலையில் விவசாயிகளுக்கு இவற்றை வழங்குதல்.

இத்திட்டத்தின் கீழ் 1989-90 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.37.448 இலட்சம் செலவில் 18 புதிய வேளாண் பணி விவசாயிகள் மையங்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

ளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டில் ரூ.21 இலட்சம் மொத்த செலவில் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 7 புதிய வேளாண் பணி விவசாய மையங்களை மாவட்ட அளவில் ஏற்படுத்துவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் புதிதாக ஆறு மாவட்ட சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

6. துளைக் கிணறுகள் தோண்டுதல்:

இவ்விணையம் 1987-88 ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் ரூ.449 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்களின் கீழ் 3990 துளைக் கிணறுகளை இதுவரை தோண்டியுள்ளது. சேலம், கோயம்புத்தூர், பெரியார், திண்டுக்கல் அண்ணா, தஞ்சாவூர், திருச்சி, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம், தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம், டானிடா ஆகிய திட்டங்களின் கீழ் இவ்விணையம் மொத்தம் ரூ.304.80 இலட்சம் செலவில் 2072 துளைக் கிணறுகளைத் தோண்டியுள்ளது.

7. ஏனைய பணிகள்:

'டிக்' நிறுவனத்திலிருந்து கடன் பெற்றவர்களுக்கு இவ்விணையம் 1990-91-ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.2.76 இலட்சம் செலவில் மோட்டார் பொருத்தப்பட்ட 39 சைக்கிள் ரிக்ஷாக்களைத் தயாரித்து வழங்கியது. தென்னக இரயில்வேக்காக இரயில்வே இருப்புப் பாதை அமைப்பதற்கான பொருள்களை எடுத்துச் செல்லும் பணியை இந்த இணையம் மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் இந்த இணையம் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.0.77 இலட்சம் ஈட்டியுள்ளது. இந்த இணையத்திடம் கிணற்றுக்குள் ஆழ் குழாய் தோண்டும்' கருவி ஒன்று உள்ளது. இக்கருவி 1988-ஆம் ஆண்டிலிருந்து 14920 மீட்டருக்கும் அதிகமாக துளையிட்டு ரூ.25.93 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

8. பம்பு செட்டுகளை சரி செய்தல்:

இந்த இணையம் ரூ.16.20 இலட்சம் செலவில் இதுவரை 10,000 பழைய புட்வால்வுகளுக்குப் பதிலாக உராய்வற்ற புதிய புட் வால்வுகளை மாற்றியுள்ளது.

9. இரும்புக் கதவுகளும், வலுவூட்டப்பட்ட சிமிட்டிக் கற்கலவை சட்டங்களும்:

இணையத்திற்கும், அதன் மையத்திற்கும் 1992-93-ஆம் ஆண்டில் (1993 பிப்ரவரி வரை) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொகுதி வீடுகள் கட்டுவதற்காக செங்கை எம்.ஜி.ஆர்., சேலம், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, பசும்பொன் முத்துராம லிங்கம், திண்டுக்கல் அண்ணா ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களிடமிருந்து 15,000 இரும்பு கதவுகளுக்கும் 2092 வலுவூட் டப்பட்ட சிமிட்டி கான்கிரீட் சட்டங்களுக்கும் தேவைக் குறிப்புகள் வரப் பெற்றுள்ளன. பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளின் மொத்த மதிப்பு ரூ.78.63 இலட்சமாகும்.

10. இரும்பு மேற் கூரைகள் செய்து வழங்கி நிறுவுதல்:

1992-93-ஆம் ஆண்டில், செங்கை எம்.ஜி.ஆர், மதுரை, பெரியார் ஆகிய மாவட்டங்களில் இரும்பு மேற்கூரை செய்து வழங்கி நிறுவும் பணியையும், ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டி தகடு போடும் பணியையும் கைத்தறி இயக்ககம் ஒப்படைத்துள்ளது. பணியின் மொத்த மதிப்பு ரூ.20.001 இலட்சமாகும். பணிகள் நடைபெற்று வருகின்றன.

11. இரசாயன உரங்களை வழங்குதல்:

அ) மானிய விலையில் உரங்களை வழங்குவதற்காக இந்த இணையம் அரசிடமிருந்து ரூ.13.992 கோடி முன்பண உதவித் தொகை பெற்றுள்ளது. இரசாயன உரங்கள் மையங்கள் மூலமாக சிறு உழவர்க ளுக்கும் குறு உழவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. சிறு உழவர்க ளுக்கும், குறு உழவர்களுக்கும் இணையம் ரூ.55.00 கோடி மதிப் புள்ள இரசாயன உரங்களை வழங்கியுள்ளது.

ஆ) மேலும் சலுகை விலையில் 'டி ஏ பி', 'எம் ஐ பி', 'காம்ளெக்ஸ்' போன்ற உரங்களை வழங்குவதற்காக அரசு இணையத் திற்கு ரூ.360 இலட்சம் ஒதுக்கியுள்ளது. அரசிடமிருந்து பெறப்பட்ட முதல் தவணைத் தொகை ரூ.61.21 இலட்சம் முழுவதும் உழவர்க ளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசிடமிருந்து இரண்டாவது தவணை யாக ரூ.139 லட்சங்கள் பெறப்பட்டு முழுவதும் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

12. ஏனைய திட்டங்கள்:

1. தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மாவட்டங்களிலுமுள்ள உழவர்களுக்கு தானிய சேமிப்பு குதிர்கள் / தார்பாலின் ஒன்று ரூ.1000/- என்ற பெயரளவுக்கு உட்பட்டு 50% உதவித் தொகையில் 20,000 தானிய சேமிப்பு குதிர்கள் / தார்பாலின்கள் வழங்க அரசு ரூ.12.00 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. வேளாண்மைத் துறை விரிவாக்கப் பணியாளர்கள் தெரிந்தெடுக்கும் சிறு, குறு உழவர்களுக்கு தானிய சேமிப்பு குதிர்களை / தார்பாலின்களை இணையம் வழங்குகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகும் மொத்தச் செலவு ரூ.4.00 கோடியாகும்.

2. தெரிந்தெடுக்கப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களில் தென்னங்கன்று பாதுகாப்பு விற்பனை மையங்கள் 45 கட்டுவதற்காக அரசு 1992-93 ஆம் ஆண்டில் ரூ.18.45 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டம் செயற்படுத்துவதற்காக இணையத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

3. 50 சதவீத உதவித் தொகையுடன் சிறு, குறு உழவர்களுக்குக் காற்றடைத்த டயர் உள்ள வண்டிகள் வழங்குவதற்கான திட்டத்தை வேளாண்மைத் துறை வகுத்துள்ளது. வேளாண்மைத் (வே.பொ.2) துறையின் 22.2.1993 ஆம் நாளிட்ட 122 ஆம் எண் அரசாணையின்படி இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ.3.00 கோடியாகும். என்கோபெட் இத்திட்டத்தைச் செயற்படுத்துகிறது. முதல் தொகுதியில் 18 வண்டிகள் 24.2.93 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளின்போது வழங்கப்பட்டன. வண்டிகளை வாங்கியவர்கள் அதன் பயன்பாட்டைப் பெரிதும் பாராட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. என்கோபெட்டின் சேர்ந்து வந்த ஆதாயம் ரூ.58.05 இலட்சமாகும். 1992-93 ம் ஆண்டில் நிகர ஆதாயம் ரூ.65.51 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது.

4. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் 50% உதவித் தொகையுடன் சிறு, குறு உழவர்களுக்கு கைவிசைத் தெளிப்பான்களை என்கோ பெட் வழங்குவதற்காக அரசாணை எண் 111, வேளாண்மை (வே.பொ.2) துறை, நாள் 19.2.1993 மூலம் அரசு ரூ.3.40 கோடி வழங்கியுள்ளது.

அத்தியாயம் 10

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம்

பால் பண்ணை வளர்ச்சி தேசிய வாரியத்தின் தாவர எண்ணெய் உற்பத்தித் திட்டத்தினைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் அமைப்பாக தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் 1.1.1981 அன்று பதிவு செய்யப்பட்டது. உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்தல் ஆகிய பணிகளைச் செவ்விய முறையில் ஒருங்கிணைப்பதன் மூலம், எண்ணெய் வித்து உற்பத்தியாளர்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் பணிகளை மேற்கொள்வதற்காக, டான்காஃப் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இதுதவிர இவ்விணையம் சமையல் தாவர எண்ணெய் வகைகளையும் அதன் துணைப் பொருட்களையும் விற்பனை செய்கிறது.

டான்காஃப் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500 இலட்சமாகும். முதற்கண் செங்கை எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, திருவண்ணாமலை சம்புவராயர், வட ஆர்க்காடு அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட பதிவு பெற்ற எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் டான்காஃப் நிறுவன உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுகின்றன. இந்நாள் வரையில் இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.159.76 இலட்சமாகும். இதில் பால்பண்ணை வளர்ச்சி தேசிய வாரியம் ரூ.98.88 இலட்சத்தை வழங்கியுள்ளது. எஞ்சியஇலட்சத்தை எஞ்சிய தொகையான ரூ.60.88 இலட்சம் டான்காஃப் நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்ட எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களினால் சரிகட்டல் மூலமும், ஏனைய வகையிலும் வழங்கப்பட்டுள்ளது.

2. தாவர எண்ணெய் உற்பத்தித் திட்டம், கிராம அளவில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், மாநில அளவில் டான்காஃப் நிறுவனத்தைத் தலைமை அமைப்பாகக் கொண்டும், இரு அடுக்கு முறையின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. திட்ட நிலை ஒன்றில் பால் பண்ணை வளர்ச்சி தேசிய வாரியம் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு ஒதுக்கீடு செய்த மூலதனம் ரூ.15.61 கோடி ஆகும். இதில் ரூ.8.41 கோடி கடனாகவும் ரூ.7.19

கோடி மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இத்துடன் தேசிய பால் வாரியம், டான்காஃப் நிறுவனத்திற்கு எண்ணெய் வித்துக்கள் வாங்க வட்டியுடன் கூடிய குறுகிய காலக் கடன் உதவியும் அளித்திருக்கிறது. டான்காஃப் நிறுவனம் அதன் வளர்ச்சிப் பணிகளுக்கென்று இதுவரை ரூ.10.21 கோடி பயன்படுத்தியுள்ளது. இத்திட்டம் தற்பொழுது 20 வட்டங்களில் வேர்க்கடலை பயிரிடும் விவசாயிகளுக்காக மட்டும் திருவண்ணாமலை சம்புவராயர், வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டங்களில் 9 வட்டங்களிலும், தென்னர்க்காடு மாவட்டத்தில் 8 வட்டங்களிலும், செங்கை எம்.ஜி. ஆர். மாவட்டத்தில் 3 வட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. டான்காஃப் நிறுவனம் இதுவரை 1492 கிராமங்களில் 335 கூட்டுறவு சங்கங்களை அமைத்து 85,630 சாகுபடியாளர்களை உறுப்பினர்களாக்கியுள்ளது. மேலும் 31.12.1992 அன்றுள்ளவாறு 1.37 இலட்சம் எக்டேர் பரப்பளவுடைய எண்ணெய் வித்து பயிரிடும் பகுதியை டான்காஃப் நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

3. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் டான்காஃப் நிறுவனத் திட்டப் பகுதியில் எண்ணெய் வித்து உற்பத்தி வளர்ச்சியினை மதிப்பீடு செய்தது. அதன்படி டான்காஃப் நிறுவனத் திட்டப்பகுதியில் உற்பத்தி அதிகரித்துள்ளதை பதிவு செய்துள்ளது.

கீழ்க்கண்ட அட்டவணை மேற்குறித்த மதிப்பீட்டின் விவரங்களைத் தெளிவுபடுத்தியுள்ளது.

அட்டவணை 10.1

டான்காஃப் நிறுவன சேவைக்கு முன்னும் பின்னும் டான்காஃப் நிறுவனத் திட்டப் பகுதிகளில் ஏற்பட்ட விளைச்சல் (கிலோ / எக்டேருக்கு)

தொடர் எண்	மாவட்டங்கள்	பதிவு செய்யும் முன்பு (1985 - 86)	பதிவு செய்யப்பட்ட பின்பு (1988 - 89)	உற்பத்தி அதிகரிப்பு	உற்பத்தி அதிகரிப்பு (சத வீதத்தில்)
1.	தென்னார்க்காடு	2,095	2,345	250	11.90
2.	வட ஆர்க்காடு - அம்பேத்கார்	1,828	2,045	217	11.90
3.	செங்கை - எம்.ஜி.ஆர்	2,205	2,460	255	11.60
	கூடுதல் சாசரி	2,043	2,283	240	11.80

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைழகம் ஆய்வில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

''அனைத்துத் திட்டப்பகுதி மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகள் டான்காஃபில் நிறுவன உறுப்பினரான பின்னர் பெற்ற விளைச்சல் எக்டேருக்கு 2283 கிலோ ஆகும். அவர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்வதற்கு முன் இந்த விளைச்சல் எக்டேருக்கு 2,043 கிலோவாக இருந்தது. இவ்வாறு விளைச்சல் எக்டேருக்கு 240 கிலோ அதிகரித்திருந்தது. இது டான்காஃப்பில் அவர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு முன் அதே நிலப்பரப்பில் அடைந்த விளைச்சலைவிட 11.8 சதவீதம் அதிகமாகும்.

அட்டவணை - 10.2

டன்காப் நிறுவன திட்டப் பகுதியில் எண்ணெய் வித்து உற்பத்தியாளர்களுக்கு கிடைத்த சராசரி ஆதாயம் (ரூபாய் / எக்டேருக்கு)

தொடர் எண்	மாவட்டம்	பதிவு செய்யும் முன்பு	பதிவு செய்யப்பட்ட பின்பு	கிடைத்த அதிக ஆதாயம்	கிடைத்த அதிக ஆதாயம் (சதவீதத்தில்)
1.	தென்னார்க்காடு	10,693	12,850	2,157	20.2
2.	வட ஆர்க்காடு - அம்பேத்கார்	9,068	10,453	1385	15.3
3.	செங்கை - எம்.ஜி.ஆர்	12,680	14,293	1,613	12.7
	கூடுதல் சராசரி	10,814	12,532	1,718	15.9

இந்த அம்சம் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தனது ஆய்வில் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளது:

''விவசாயிகள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டபின், பெற்ற நிகர ஆதாயம் எக்டேர் ஒன்றுக்கு ரூ.12,533 ஆகும். இவ்வாறு எக்டேர் ஒன்றுக்கு ரூ.1,718 கூடுதல் நிகர ஆதாயம் (15.90 சதவீதம்) பெறக்காரணம், விவசாயிகள் டான்காஃப் நிறுவனத்தில் தங்களை உறுப்பினர்களாக இணைத்து கொண்டதேயாகும். இது வரவேற்கத் தக்க ஒன்றாகும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இந்நிறுவனத்திடமிருந்து (டான்காஃப்) சிறந்த விற்பனை வசதியைப் பயன்படுத்திக் கொண்டதுடன், அவர்கள் சிறந்த இடு பொருள்களையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி இந்நிகர ஆதாயத்தைப் பெற

முடிந்தது.

டான்காஃப் நிறுவனம் மேம்படுத்திய தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் எண்ணெய் வித்து உற்பத்தியாளர் உறுப்பினராயுள்ளவர்களுக்குப் பயிரிடும் செலவு சிறிது குறைந்துள்ளது; அதேசமயம் அவர்கள் வருமானம் கணிசமாக அதிகரித்துள்ளது என்பதையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அறிக்கை காட்டுகிறது.

4. எண்ணெய் வித்து உற்பத்தியாளர்களின் பயனுக்காக 1992-93 ஆம் ஆண்டு எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டப் பணியைச் செயல்படுத்த டான்காஃப் நிறுவனத்திற்கு அரசு ரூ.79.05 இலட்சம் வழங்கியுள்ளது. எண்ணெய் வித்து மேம்பாட்டிற்கான தொழில் நுட்பக் குழுவின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

5. கூட்டுறவுச் சங்கங்கள் பின்பற்றும் புதிய தரச் சோதனை நடைமுறைகளைப் பயன்படுத்தி சாகுபடியாளர்கள் தங்களுடைய விளை பொருட்களை விற்பனை செய்வதற்கு ஊக்குவிக்கப் படுகின்றனர். மேலோடுகள் நீக்குதல், ஈரப்பதம், பருப்பு உடைந்து போதல் ஆகியவை மூலப் பொருட்களின் தரத்தை நிர்ணயிக்கும் அளவுகோலாக இருக்கின்றன. 1.4.92-லிருந்து 31.12.92 வரையில் டன்காஃப் நிறுவனம் 1,360 டன் ஓடுடன் கூடிய வேர்க்கடலை, 856 டன் வேர்க்கடலை வித்துக்கள் ஆகியவற்றை உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்திருந்தது. ஒவ்வொரு பருவத்திலும், சங்கத்திடமிருந்து செய்யப்பட்ட கொள்முதலின் மொத்த மதிப்பின் பேரில் ஒவ்வொரு சங்கத்திற்கும் 1.5 சதவிதம் பணிக் கட்டணம் வழங்கப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்களிடமிருந்து நேரடியாக வேர்க்கடலைப் பருப்புகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டு திட்டப்பகுதியிலுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் குழுக்களிடமிருந்து 2987 டன் கொள்முதல் செய்யப்பட்டது.

6. டான்காப் நிறுவனம், தேர்ந்த விதைகளை உற்பத்தி செய்யவும், எண்ணெய் வித்து சாகுபடியாளர்களின் பயிற்சித் தேவையினை நிறைவு செய்வதற்கும், நெய்வேலியில் ரூபாய் 130 இலட்சம் செலவில் 102 எக்டேர் நிலப்பரப்பில் வேளாண் பொருளாதார பயிற்சி மையத்தினை நிறுவியுள்ளது. இந்த மையம் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழுவால் (ICAR) மூல விதைகளை உற்பத்தி செய்ய அங்கீக

ரிக்கப்பட்டுள்ளது. இதுவரை வேளாண் பொருளியல் மையம் 21 டன்கள் மூல வித்துக்களையும், 31 டன்கள் ஆதார வித்துக்களையும் 1.4.1992-லிருந்து 31.12.1992 முடிய உற்பத்தி செய்துள்ளது. இந்த நெய்வேலி மையத்தின் தொடரினச் செலவை ஏற்பதற்காக தேசிய பால்வள வாரியம் ஒவ்வொரு ஆண்டும் ரூ.20/- இலட்சம் அளித்து வருகிறது.

7. டான்காஃப் நிறுவனம் நாளொன்றுக்கு 165 டன்கள் வேர்க்கடலைப் பருப்புகளை பிழிந்து எண்ணெய் எடுக்கும் பொருட்டு, விருத்தாசலத்திலும் திருவண்ணாமலையிலும் உள்ள இரு ஆலைகளை 1985-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திடமிருந்து (Tanfed) எடுத்துக் கொண்டது. இதனை டான்காஃப் நிறுவனம் 637.34 இலட்ச ரூபாய் செலவில் புதுப்பித்து நவீனப்படுத்தியுள்ளது. இது இன்றுள்ளபடி டான்காஃப் நிறுவனம் 1. நாள் ஒன்றுக்கு 230 டன்கள் ஓடுடன் கூடிய வேர்க்கடலையைப் பிழிந்து எண்ணெய் எடுக்கும் நிறுவு திறனையும் (நாள் ஒன்றுக்கு 165 டன்கள் பருப்புக்குச் சமம்), 2. திருவண்ணாமலையில் நாள் ஒன்றுக்கு 10 டன்கள் எண்ணெய் சுத்திகரிப்பு திறன் வசதியினையும், 3. நாள் ஒன்றுக்கு 80 டன்கள் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் திறனையும் கொண்ட (ஒவ்வொன்றும் 40 டன்கள் திறன்) சாதனங்களை நிறுவியுள்ளது.

1.4.92 முதல் 31.12.92 முடிய இந்த இரண்டு ஆலைகளில் 4,310 டன்கள் வேர்க்கடலைப் பருப்புகள் அரைக்கப்பட்டு 1,640 டன்கள் பிழிந்தெடுக்கப்பட்ட எண்ணெயினையும், 77 டன்கள் சுத்திரிக்கப்பட்ட எண்ணெயினையும், 2602 டன்கள் பிண்ணாக்கினையும், 22 டன்கள் கரைசல் முறையில் எடுக்கப்பட்ட எண்ணெயினையும், 314 டன்கள் எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கினையும் உற்பத்தி செய்துள்ளன.

டான்காஃப் நிறுவனம் சென்னையிலுள்ள கிண்டியில் நாள் ஒன்றுக்கு 45 டன்கள் எண்ணெயினை நுகர்வோருக்கு பல்வேறு அளவுகளில் 15 கிலோ டின்கள், 5 கிலோ கேன், 1 கிலோ, அரை கிலோ பாலிதீன் பாட்டில்கள் மற்றும் பைகளில் அடைத்து விற்பனைக்கு அளிக்கக்கூடிய எண்ணெய் சிப்பம் செய்யும் நிலையத்தை அமைத்துள்ளது. இதன்மூலம் டான்காஃப் நிறுவனம் நுகர்வோருக்கு, 'பியூர்நட்' (பிழிந்தெடுக்கப்பட்ட எண்ணெயினையும்) 'வின்னர்' (சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயினையும்) ஆகிய வணிகப் பெயர்களில் எண்ணெயை

விற்பனைக்கு அளித்துள்ளது. டான்காஃப் நிறுவனம், 1.492-லிருந்து 31.12.92 முடிய 2,571 டன்கள் 'பியூர் நட்' எண்ணெய், 83 டன்கள் 'வின்னர்' எண்ணெய், 2.383 டன்கள் பிண்ணாக்கு, 30 டன்கள் கரைசல் பிரித்த எண்ணெய், 483 டன்கள் எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கு ஆகியவைகளை விற்பனை செய்துள்ளது.

டான்காஃப் நிறுவனம் எண்ணெய் சிப்பம் செய்யும் நிலையத்தின் திறனைப் பயன்படுத்தவும் அதன் வருவாயைப் பெருக்கும் வகையிலும் 1988-ம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து தமிழ்நாட்டில் பொது விநியோக முறையின் கீழ் இந்திய அரசினால் இறக்குமதி செய்யப்பட்டு அளிக்கப்பட்ட பாமாலின் எண்ணெயினைப் பாலிதின் பைகளில் அடைத்து நுகர்வோருக்கு வழங்கும் பணியை எடுத்துச் செய்து வருகிறது. அத்துடன் திருவண்ணாமலையில் நாளொன்றுக்கு 30 டன்கள் எண்ணெய் சிப்பம் செய்யும் நிலையத்தை அமைத்துள்ளது. மேலும் மதுரையில் உள்ள கப்பலூரில் நாள் ஒன்றுக்கு 30 டன்கள் திறன்கொண்ட எண்ணெய் சிப்பம் செய்யும் நிலையத்தை அமைத்து வழக்கமான அடிப்படையில் பணிபுரிய வழிவகைகளைச் செய்து வருகிறது.

8. டன்காஃப் நிறுவனம், 1992-ம் ஆண்டில் கிண்டியில் உள்ள எண்ணெய் சிப்பம் செய்யும் நிலையத்தில் 5000 டன்கள் கொள்ளளவு கொண்ட எண்ணெய் சேமிப்புக் கொள்கலன் ஒன்றை இணையத்தின் எண்ணெயினை சேமிக்கும் வகையிலும் மற்றும் பிற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடும் வகையிலும் நிறுவியுள்ளது. இந்தக் கொள்கலன் அமைப்பு சுமார் 53.20 இலட்சம் ரூபாய் செலவில் பால் பண்ணை வளர்ச்சி தேசிய வாரியத்தின் உதவியுடன் அமைக்கப் பட்டுள்ளது. அத்துடன் தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் 'லோக்தாரா' எண்ணெயினை பாக் செய்வதற்கு கிண்டியிலுள்ள எண்ணெய் சிப்பம் செய்யும் பிரிவிலுள்ள வசதிகளைப் பயன்படுத்த டான்காஃப் நிறுவனம் கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. 60 இலட்ச ரூபாய் செலவில் இவ்வசதிகளை அமைக்கக் கருதப் பட்டுள்ளது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரைத் தலைமையாகக் கொண்டு ஒரு உயர்நிலைக் குழு எண்ணெய் வித்துத் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணியை செயற்படுத்துவதற்கு ஆனந்திலுள்ள தேசிய பால்வள வாரியத்துடன் பேச்சு வார்த்தை நடத்தச் சென்றது. இந்த இரண்டாம் கட்டப் பணியில் 29.14 கோடி ரூபாய் முதலீட்டு

மதிப்பீட்டு செலவில் இத்திட்டப்பணியை விரிவுபடுத்துவதற்கு வழி வகை செய்யும் தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்துக்கு அரசு இசைவளித்துள்ளது.

கூட்டுறவில் மூன்றடுக்கு அமைப்பை அறிமுகப்படுத்தும் வகையில் இணையத்திற்கும் சங்கங்களுக்குமிடையில் வட்டாரக் கூட்டுறவு ஒன்றியங்கள் 1993-94-ம் ஆண்டிலிருந்து தொடங்கி செயல்பட உள்ளது. தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் இரண்டாம் நிலைத் திட்டம் மேலும் ஆறு எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் மாவட்டங்களான தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், பெரியார், திருச்சி மற்றும் தஞ்சாவூர் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

முதல் இரண்டு வட்டாரக் கூட்டுறவு ஒன்றியங்கள் திருவண்ணா மலை விருத்தாசலம் ஆகிய பகுதிகளில் கூடிய விரைவில் தொடங்கப்படும். 1992-93-ம் ஆண்டில் டான்காஃப் நிருவாக பணி அமைப்புகளில் சில குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதனைக் களைந்து சீரமைப்பு செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு நிதி நிருவாக நிறுவனச் செயல்பாடுகளைச் செம்மைப்படுத்தி நட்டத்திலிருந்து விடுபடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதற்காக அரசும், தேசிய பால் வள வாரியமும் டான்காஃப் நிறுவனமும், எடுக்கும் உறுதியான நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு அளித்துப் பணி முறைபாடுகளைச் சரிப்படுத்தி எண்ணெய்வித்து உற்பத்தியாளர்கள் சமையல் எண்ணெய் நுகர்வோரின் நலனைப் பேணும் நிறுவனமாகச் செயல்படவுள்ளது.

டான்காஃப் நிறுவனம் உற்பத்திப் பெருக்கின் காரணமாக சாகுபடியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள எதிர்பாராத பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் வேர்க்கடலை கொள் முதலுக்கு ஆதரவு விலையளிக்கும் ஒரு திட்டத்தினை டான்காஃப் இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி இவற்றின் உதவியுடன் 1993 சம்பா பருவத்தில் தொடங்கியுள்ளது.

டான்காஃப் நிறுவனம் 1993-94-ம் ஆண்டு உற்பத்தியை அதிகரிக்கும் குறிக்கோளாகக் கொண்டு தனது வளர்ச்சிப் பணிகளை, உற்பத்தித் திறன் அதிகரிக்கவும், மற்றும் எண்ணெய்வித்து சாகுபடி பரப்பினை விரிவுபடுத்தவும் உரிய முயற்சிகளை மேற்கொண்டு செயல்படுத்தவுள்ளது.

அட்டவணை 10.3

1993-94-ம் ஆண்டுத் திட்டப் பணிகள்

தொடர் எண்	விபரம்	1993-94-ம் ஆண்டு இலக்கு (மெ. டன்களில்)
I	கொள்முதல்	
	விதைக் கடலை	1,000
	விற்பனைக்குரிய வேர்க்கடலை	25,000
II	செயல்முறை	
	1. எண்ணெய் பிழிதல்:	
	வேர்க்கடலைப் பருப்பிலிருந்து எண்ணெய் எடுத்தல்	17,500
	எண்ணெய் உற்பத்தி	6,563
	பிண்ணாக்கு உற்பத்தி	10,675
	௨. சுத்திகரிப்பு	
	பிழியப்பட்ட எண்ணெய் இடுபொருள்	500
	சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்தி	480
	3. கரைசல் முறையில் எண்ணெய் எடுத்தல்:	
	பிண்ணாக்கு இடுபொருள் செயல்முறை	10,675
	கரைசல் முறையில் பிரிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்தி	640
	எண்ணெய் நீக்கப்பட்ட பிண்ணாக்கு உற்பத்தி	9,820
III	விற்பனை	
	1. நுகர்வோர் விற்பனை	
	பிழியப்பட்ட எண்ணெய்	1,500
	சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்	480
	௨. ஒட்டுமொத்த விற்பனை:	
	பிழையப்பட்ட எண்ணெய்	4,563
	கரைசல் பிரிக்கப்பட்ட கடலை எண்ணெய்	640
	எண்ணெய் நீக்கப்பட்ட பிண்ணாக்கு	9820

53-104-63

அத்தியாயம் 11

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (த.வே.ப.க.)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (த.வே.ப.க.) இந்தியாவின் முதன்மையான வேளாண் பல்கலைக் கழகங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்தப் பல்கலைக் கழகம், வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் வேளாண்மை விரிவாக்கம் ஆகியவற்றின் மூலம் வேளாண் மக்களின் உயர்வுக்காக பணியாற்றுகின்றது. தமிழ் நாட்டின் நெல், சிறு தானியம், பயறு வகைகள், எண்ணை வித்துக்கள், பருத்தி, கரும்பு, தோட்டக்கலைப் பயிர்கள், மற்றும் இதரப் பயிர்கள் ஆகியவற்றின் உயர் விளைச்சலுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட பயிர் வகைகளும், தொழில்நுட்ப உத்திகளுமே காரணங்களாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1992-93-ஆம் ஆண்டில், கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றில் அடைந்த சாதனைகளும் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளவிருக்கும் பெரு முயற்சிகளும் சுருக்கமாக கீழே தரப் பட்டுள்ளன.

I. வேளாண் கல்வி:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 1991-92 மற்றும் 1992-93- ஆகிய ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

அட்டவணை 11.1

வ.எண்.	படிப்பு	1991-92	1992-93
1.	பி.எஸ்.சி. (வேளாண்மை)	291	383
2.	பி.எஸ்.சி. (தோட்டக்கலை)	54	66
3.	பி.எஸ்.சி. (வன இயல்)	16	18
4.	பி.எஸ்.சி. (மனையியல்)	18	19
5.	பி.இ. (வேளாண் பொறியியல்)	92	69
	மொத்தம்	471	555
6.	எம்.எஸ்.சி. மற்றும் பி.எச்டி., பட்ட மேற்படிப்பு	670	410
	பெரு மொத்தம்	1141	965

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தார் 12 துறைகளில் 230 இளநிலை ஆராய்ச்சி ஊக்கத் தொகை வழங்குவதற்காக 1992 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடத்திய அகில இந்திய போட்டியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவ / மாணவியர் 64 இடங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். இப்பல்கலைக் கழக மாணவ / மாணவியர் பூச்சி இயல்துறை, வேளாண்மை விரிவாக்கம் மற்றும் விதை தொழில் நுட்பவியல் துறைகளில் உயர் இடம் பெற்றுள்ளனர். முதல் 5 இடங்களை இப்பல்கலைக் கழக மாணவர்கள் பூச்சி இயல் துறையில் பெற்றுள்ளனர். இதற்கு முக்கிய காரணம், இப்பல்கலைக் கழகம் தரமான கல்வியைப் புகட்டுவதேயாகும்.

II. வேளாண்மை ஆராய்ச்சி

1. பயிர் மேம்பாடு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் பணிபுரியும் விஞ்ஞானிகளின் சீரிய தளராத முயற்சியின் பயனாக, புதிய பயிர் வகைகள் உருவாக்கப் பட்டன. வேளாண் பெரு மக்களின் பயனுக்காக இப்பல்கலைக் கழகம் இவ்வாண்டு ஜனவரி மாதம் புதிய பயிர் வகைகளை ''பொங்கல் பரிசாக'' அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய வகைகளின் நன்மைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

★ நெல்

ஜெ ஜெ 92 (எடிடி 41):

மித உயரமும் குறுகிய கால வயதும், நடுத்தர இனிமையான வாசனையையும் கொண்ட பாசுமதி வகையை ஒத்த நெல் இரகம். தமிழகமெங்கும் பயிரிட ஏற்றது. இது ஏற்றுமதிக்கு உகந்த ஒரு வகையாகும்.

டி பி எஸ் 3:

நடுத்தர வயது மற்றும் குலை நோயை எதிர்க்கும் தன்மையுடைய குறுகிய, பருமனான, வெள்ளை நிறமுடைய நெல் வகை. கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர் தேங்கும் பகுதிகளில் பயிரிட ஏற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

★ வீரிய ஒட்டுக் கம்பு

எக்ஸ் 6:

இந்த வகை நடுத்தர உயரமும், 95-100 நாட்கள் வயதும் மற்றும் அடிச்சாம்பல் நோய் எதிர்ப்புத்திறனும் கொண்டது.

★ உளுந்து

ஏ பி கே1:

குறுகிய கால வயதுடைய இந்த வகை தென் மாவட்டங்களில் கரிசல் நிலங்களில் பருத்தியில் ஊடுபயிராக பயிரிட உகந்தது.

★ தட்டைப் பயறு

கோ 6:

உயர் விளைச்சல், குறைந்த வயது மற்றும் அசுவனி மூலம் பரவும் தேமல் நோய்க்கு எதிர்ப்புச் சக்தியும் உடைய இந்த வகை தமிழகமெங்கும் மானாவாரியாக பயிரிட ஏற்றது.

★ கரும்பு

கோ கு 93076:

அதிக மகசூல் மற்றும் அதிக தரமுடைய நடு மற்றும் பின் பட்டத்திற்கு தமிழகமெங்கும் பயிரிட உகந்தது.

★ கோ 8208

தமிழகமெங்கும் பயிரிட உகந்த தரமான இந்த வகை முதல் மற்றும் மறு தாம்புப் பயிர்களின் அதிக மகசூல் தரவல்லது.

★ பருத்தி

கே 11:

இது 30-ம் நம்பர் நூற்க உகந்த தரமான இழை கொண்ட குட்டை இழைப் பருத்தி வகை. உளுந்தை ஊடுபயிராக பயிரிடலாம். புன்செய் பயிரிடும்போது மானாவாரியாக சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் பயிரிட ஏற்ற வகையாகும்.

★ மிளகாய்

பி கே எம் 1:

அதிக விளைச்சல் தரும் இந்த குண்டு மிளகாய் வகை மானாவாரி

யாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பயிரிட உகந்தது.

★ மரவள்ளி
கோ 3:

உயர் விளைச்சல், 8 மாத வயது, அதிக மாவுச் சத்து கொண்ட இந்த வகை புன்செய் மற்றும் பாசன நீர்வளம் மிக்க காலங்களில் பயிரிட ஏற்றது.

★ பந்தல் அவரை
கோ 1:

உயர் விளைச்சல், கரும்பச்சை நிறத்துடன் பிறைபோல் வளைந்தும், சதைபற்று மிகுந்தும் குறைந்தளவே நார்பொருளும் கொண்ட சந்தைக்கு ஏற்புடைய இரகம்.

★ தர்பூசணி
பி கே எம் 1:

விரைவில் பூக்கும் மற்றும் அதிக பெண் பூக்கள் கொண்ட இந்த இரகம், அதிக விளைச்சல் மற்றும் இளம் சிவப்பு சதை உடையதாகும்.

★ ஏற்காடு டிம்லா அத்தி

வறட்சி தாங்கும் உயர் விளைச்சல் இரகம். சி வைட்டமின் மிகுந்து இளம் சிவப்பு பழங்களைக் கொண்டது.

★ கிளாடியோலஸ்
கே கே எல் 1:

நீண்ட காம்பு கொண்ட உயர் விளைச்சல் வகை. பூக்கள் அழகிய சிவப்பு வண்ணத்துடன் மையத்தில் வெள்ளை நிறம் கொண்டிருக்கும். பூச்சாடிகளில் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும். தமிழகத்தில் 1200 முதல் 3200 மீட்டர் உயரமுள்ள மலைப் பகுதிகளில் பயிரிட ஏற்ற வகை.

2. வேளாண்மைக் கருவிகள்

வேளாண் பொறியியல் கல்லூரியில் உருவாக்கப்பட்டு 1993 ஆம் ஆண்டு ஜனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட நான்கு புதிய வேளாண்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கருவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. புளியங்கொட்டையிலிருந்து பசை தயாரித்தல்.

2. உயிரியல் வாயு பலூன்.

3. பவர் டில்லருடன் இணைந்த மண்ணைத் துளையிடும் கருவி.

4. தானிய சேமிப்பு பூச்சிப் பொறி.

5. கோயம்புத்தூரில் தென்னை நாரிலிருந்து அட்டை தயாரிப்பதற்கான நடைமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அட்டை தயாரிப்பின் சராசரி மதிப்பீட்டு செலவு சதுர அடி ஒன்றுக்கு ரூ.3.50/- ஆகும். இது வணிக முறையிலான பிளைவுட் அட்டைகளின் தயாரிப்புச் செலவைவிடக் குறைவானதாகும்.

III வேளாண்மை விரிவாக்கம்.

1. சீற்றல்களால் ஏற்பட்ட சேதாரத்தைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள்

சீரிய முறையில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் பெருமளவில் வேளாண் உற்பத்தியை பெருக்குமுகமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் வேளாண்மைத் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்த நல்ல வகை பயிர் தேர்வு, விதை உற்பத்தி, பயிர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு நீரை சிக்கனமாக பயன்படுத்துதல் மற்றும் பண்ணைக் கருவிகள் போன்ற பல துறைகளில் நல்ல பல உத்திகளுக்கு செயலாக்கம் தந்து உயர் விளைச்சலை எட்ட ஊக்கத்துடன் செயல்பட்டனர். இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட புயல், தொடர் மழை மற்றும் வெள்ளத்தால் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார், மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பயிரிட்டிருந்த பயிர்களுக்கு பெருத்த அளவில் சேதம் ஏற்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் வேளாண் துறை அலுவலர்களுடன் வெள்ளம் பாதித்த பகுதிகளைப்பார்வையிட்டு பாதிக்கப்பட்ட பயிர்களைக் காப்பதற்கான வழிமுறைகளையும் உத்திகளையும் நேரடியாகவும், செய்தி தாள்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமும் ஒவ்வொருவருக்கும் தெரியப்படுத்தி விரிவான அளவில் பயிற்சி அளித்தும்

பாதிப்பைக் குறைக்க தீவிரமாக பெரு முயற்சிகள் மேற்கொண்டனர். இதனால் வேளாண் மக்களுக்கு இயற்கையால் ஏற்பட்ட பாதிப்பு பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டது.

2 மூல விதை உற்பத்தியும் வழங்கலும்

1992-93 ஆம் ஆண்டு (*1992* டிசம்பர் வரை) நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், பருத்தி, காய்கறிகள், நிலக்கடலை, எள் மற்றும் ஆமணக்கு பயிர்களில் 930 குவிண்டால் மூல விதை உற்பத்தி செய்து தமிழக அரசின் வேளாண்மைத் துறைக்கு விதைப் பெருக்கம் செய்ய அளிக்கப்பட்டது. இதுதவிர தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக் கழகம், நுண்ணுயிர் உரங்கள் (26,309 பைகள்), பழக் கன்றுகள் (74211) மற்றும் உயிரியல் முறை பூச்சி, பூஞ்சானக் கொல்லிகள் (வேர் அழுகல் உயிரியல் பூஞ்சானக் கொல்லி, கரும்பு தண்டு துளைப்பான் ஒட்டுண்ணி, பயறு பச்சைப் புழு நச்சுரி, வெட்டுப் புழு நச்சுரி மற்றும் கரும்பு தண்டுத் துளைப்பான் நச்சுரி) போன்றவற்றை விவசாயிகளுக்கு நேரிடையாகவும், வேளாண்மைத் துறை மூலமாகவும் வழங்கியது.

2. வேளாண் பெருமக்களுக்கு பயிர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு புதிய முறைகள் குறித்த செயல் விளக்கம்:

★ அருப்புக்கோட்டையில் அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியம் கலவையை நிலத்தில் இடுதல் மற்றும் விதை நேர்த்தி செய்தல் ஆகியவற்றுடன் 40 கிலோ தழைச் சத்து மற்றும் 20 கிலோ மணிச்சத்து அடியுரமாக சேர்ந்து இட்ட நிலத்தில் சோள தானிய விளைச்சல் எக்டேருக்கு 725 கிலோவாக இருந்தது. இதுவே மானாவாரியில் கரிசல் மண்ணில் விளைச்சல் எக்டேருக்கு 215 கிலோ மட்டுமே ஆகும்.

★ வேலூரில் தோல் பதனிடும் தொழிற் சாலைகளின் கழிவு நீரால் பாதிக்கப்பட்ட நிலங்களை சீர்ப்படுத்த மக்கிய நார்க்கழிவை எக்டருக்கு 10 டன் இட்டதால் மக்காச்சோளம் மற்றும் கேழ்வரகு விளைச்சல் அதிகரித்துள்ளது. இதைத் தவிர கரும்பாலைக் கழிவு, பண்ணைக் கழிவு மற்றும் ஜிப்சம் போன்ற திருத்திகளும் உபயோகப்படுத்தப் பட்டன. இதனால் கழிவு நீரால் பாதிக்கப்பட்ட நிலங்களில் மக்காச்சோளத்தில் 19.4 சதமும் கேழ்வரகில் 11.6 சதமும் கூடுதல் விளைச்சல் கிடைத்தது.

★ வேப்பங்குளத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியின்படி தென்னையில் ஒல்லிக்காய்கள் ஏற்படுவதைத் தவிர்க்க ஒரு மரத்திற்கு 2 கிலோ அதிக பொட்டாஷ் சத்தும், 200 கிராம் போராக்ஸ் சத்தும் மூன்றரை ஆண்டு காலம் இட வேண்டும். முன்பிருந்த நிலையுடன் ஒப்பிடுகையில் இம்முறையைக் கையாளுவதனால் விளைச்சல் 4.5 மடங்கு அதிகரிக்கலாம்.

வெளிநாடுகளுடன் கூட்டு முயற்சி:

எள் ஆராய்ச்சி மற்றும் எண்ணெய் வித்துக்கள் தொழில்நுட்ப செயல் விளக்கம் ஆகிய இரண்டு திட்டங்கள் கனடா நாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப் பட்டுள்ளன. குறைந்த வளமுள்ள நிலங்களில் பயிரிட உகந்த நெல் வகைகளை தெரிவு செய்வதற்கான திட்டத்திற்கு பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அகில உலக நெல் ஆராய்ச்சி நிலையம் நிதி உதவி அளித்துள்ளது. வாஷிங்டனிலுள்ள அகில உலக உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் தொழில் நுட்ப செயல் விளக்கம், கிராமப்புற அடிப்படை வசதி, பாசன முதலீடு, சிறுபாசனத் திட்டங்கள் மற்றும் வேளாண்மை வளர்ச்சி போன்றவற்றில் ஆய்வுகள் தொடங்கப் பட்டுள்ளன. உள் நாட்டு நுண்ணுயிர் கிருமிகள் உபயோகித்தல், வீடு மற்றும் நகர கழிவை உபயோகிக்க வழி காணுதல், தரமான விதைகளை உற்பத்தி செய்தல், ஆகியவற்றில் ஆய்வு மேற்கொள்ள அமெரிக்க மேம்பாட்டு நிறுவனம் நிதியுதவி அளித்துள்ளது. அமெரிக்காவில் உள்ள இராக்கி பெல்லர் அறக்கட்டளையின் நிதி உதவியுடன், அதிக நெல் உற்பத்தி செய்வதில் உள்ள இடர்களை அறிதல், நெல் உறை அழுகல் நோய்க்கான எதிர்ப்புச் சக்தி மற்றும் நீண்டகால இரசாயன உர உபயோகத்தால் நிலையான மகசூல் பெறுவதில் உள்ள குறைபாடுகளை அறிதல் போன்ற துறைகளில் ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டன. அமெரிக்காவில் உள்ள போர்டு அறக்கட்டளையின் நிதியுதவியுடன் குறைவான நீரைக் கொண்டு பாசன மேலாண்மை பற்றிய தகவல் தொடர்பு ஏற்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பிரிட்டன் நாட்டிலுள்ள கிளாஸ்கோ பல்கலைக் கழகம் வனவியல் ஆராய்ச்சிக்காக நிதி உதவி அளித்துள்ளது. குறிப்பிட்ட வகை மண் மாதிரிகள் சேமிக்கும் திட்டத்திற்காக நெதர்லாந்து நாடு நிதியுதவி நல்கியுள்ளது.

மண்டல பகுதிகளுக்குகந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவம் பெருகிவருவதன் பேரில் தமிழகத்திலுள்ள 7 வேளாண் தட்ப வெப்ப மண்டல பகுதிகளில் பல்வேறு இடங்களில் பல துணை நிலையங்கள்

நிறுவப்பட்டன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு வட்டார துணை ஆராய்ச்சி நிலையங்களில் ஆய்வின் தரத்தை உயர்த்துவதற்காக, உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் உதவி பெறப்பட்டது. இம்மாநிலத்திலுள்ள வேளாண் தட்பவெப்ப மண்டலப் பகுதிகளை மேம்படுத்துதல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு உகந்த ஆராய்ச்சியை சீரிய முறையில் மேற்கொள்ளவும் தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு உதவியது.

தேசிய வேளாண்மை ஆராய்ச்சி முதல் திட்ட நிலை- 1 1981-ல் மொத்தம் ரூ.481.93 இலட்சம் மானியத்தில் செயல்படுத்தப்பட்டது. தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் மானியத்தின் மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் ஆராய்ச்சி இயக்குநர் அலுவலகம், பையூர், விருத்தாசலம், அருப்புக் கோட்டை, தடியன் குடிசை ஆகிய இடங்களிலுள்ள வட்டார ஆராய்ச்சி நிலையங்கள், ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆகியவற்றை வலுப்படுத்தியது. அத்துடன், திருப்பதிசாரத்தில் வட்டார ஆராய்ச்சி நிலையம் தொடங்கவும்; பயறு வகை ஆய்வு மேற்கொள்ளவும் முடிந்தது. தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் நிலை 1 மேற்கொள்ளப்பட்ட சிறந்த பணியைத் தொடர்ந்து இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் உலக வங்கியின் உதவியுடன் நிலை II திட்டத்தை 1988 ஆம் ஆண்டு செயல்படுத்தியது. நிலை II திட்டத்தின் கீழ் தமிழகத்தின் ஏழு மண்டலங்களிலும் ஆராய்ச்சிப் பணியை மேலும் வலுப்படுத்தி, அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ.486.86 இலட்சம் வழங்கப்பட்டது.

நிலை I, நிலை II-ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்கள் முடிவுற்றதின் பேரில், அத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்ந்து தமிழக அரசின் நிதி உதவியுடன் செயலாக்கப்பட்டு வருகின்றன.

வருங்காலத் திட்டங்கள்:

1993-94-ஆம் ஆண்டு ரூ.35 இலட்சம் மூலதனச் செலவில் செயல்படுத்துவதற்காக 16 புதிய திட்டப் பணிகளுக்குத் தமிழ்நாடு

அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தரிசு நில மேம்பாடு, புன்செய் நிலத் தோட்டக் கலை, வேளாண் கழிவுகளின் உபயோகம், பிரச்சினைக்குரிய நிலங்களில் மேம்பாடு, மருந்து மூலிகைச் செடிகளின் மேம்பாடும் நிருவாகமும், வேளாண் பொருள் செய்முறைப்படுத்தும் நறுமணச் செடி மேம்பாடு, மாசுக் கட்டுப்பாடு நிருவாகம் மானாவாரிப் பகுதிகளில் உயரளவு விளைச்சலைப் பெறுதல் மேலும் தண்ணீர் சேதத்தைக் குறைக்க உதவும் வாய்க்கால்கள் அமைத்தல், ஆகியவற்றில் *1993-94*-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளப் படும்.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப் படவிருக்கும் மனித வள மேம்பாட்டுத் திட்டம்:

தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண்மையில் மனித வள மேம்பாட்டுக்குரிய துணைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு உலக வங்கி நிதி உதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ.300 கோடியாகும். வேளாண்மை பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து வகைப் பணியாளர்களின் மேம்பாட்டிற்கும் ஊக்கமளிக்கும் வகையில் இம்மாநிலத்தின் வேளாண்மை வளர்ச்சிக்கு புதிய உத்வேகம் அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் வேளாண்மைக் கல்வி ஆராய்ச்சியின் புதிய திருப்பத்தை ஏற்படுத்தி பயிற்சி பெற்ற இளைஞர்கள் வேலை தேடுவோராக இராமல் வேலை வாய்ப்பினை அளிப்பவர்களாக இருப்பர். கிராமப் புற இளைஞர்கள், புதிய திறமையையும் தொழில் நுட்பங்களையும் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்படுவர். மேலும் பயிற்சி சார்ந்த இந்த புதிய கல்விமுறை, புதிய திறமைகளையும் தொழில் நுட்பங்களையும் விவசாயிகள் பெற்றுக் கொள்ள உதவும். நிலையான வேளாண்மை மேம்பாட்டிற்கு சுற்றுப்புற சூழலைப் பாதிக்காத, நன்மை பயக்கும் தொழில் நுட்பங்களை நுண்ணுயிர் உரங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லிகள் இயற்கை உரம் போன்றவற்றை பயன்படுத்த தற்போது திட்டமிடப் பட்டுள்ளது. அதிக மதிப்பும் ஏற்றுமதிக்கு வாய்ப்பும் உள்ள பயிர்களின் உற்பத்தியில் மிகுந்த கவனம் செலுத்தப்படும். தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி அரங்கில் செயல்படுத்தப்பட விருக்கும் இத்திட்டம் முக்கியமாக திறமையையும் அறிவையும் பரப்ப உதவும். இந்தத் திட்டத்தில் இரண்டாம், மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்களும் சம்பந்தப்படுத்தப்படும்.

வேளாண்மைக்கு நிதி நிறுவனங்களிலிருந்து நிதியுதவிகள் கிடைப்பது சிரமமாக உள்ளது. எனவே, வேளாண்மைப் பணியில் அதிகரித்துள்ள மூலதன முதலீட்டிற்கு நிதி நிறுவனங்கள் மூலம் உதவுவதற்கு தேசிய வேளாண்மை கிராமப் புற மேம்பாட்டு வங்கியிலி

ருந்து தனிப்பட்ட முறையில் கடன் பெறக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டமும் மனிதவள மேம்பாட்டுத் திட்டமும், தமிழக வேளாண்மையை வாழ்க்கைத் தொழில் என்பதிலிருந்து வணிக ரீதியில் தனித்தியங்கவல்ல தொழிலாக மாற்றி கிராமங்களிலிருந்து மக்கள் மாநகரங்களுக்கும் நகரங்களுக்கும் இடம் பெயர்ந்து செல்வதைத் தடுக்கக் கூடியவையாகவும் அமையும்.

நிதி:

திட்ட நிதியுதவியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 1992-93-ல் கொடுக்கப்பட்ட 11.40 கோடி ரூபாய், 1993-94-ல் 11.97 கோடி ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவி 1992-93-ல் 3.52 கோடி ரூபாயாக இருந்தது. இது 1993-94-ல் ரூ.3.60 கோடியாக உயரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் அன்றாட பண்ணைத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள்:

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் சங்கம், தமிழக அரசின் முன் வைத்த கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு, 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பின்வரும் ஆணைகளை பிறப்பித்தது.

1. அன்றாட பண்ணைத் தொழிலாளர்கள் 150 பேருக்கு வழங்கிய மாதாந்திர ஊதியம் ரூ.793-லிருந்து ரூ.900 ஆக 1.2.91லிருந்து மாற்றி உயர்த்தப்படும். மேலும், 1.4.92-லிருந்து ரூ.20 அகவிலைப்படியுடன் இத்தொகை ரூ.920/- ஆக உயரும். பிப்ரவரி 1991-ல் மாதாந்திர ஊதியமாக ரூ.793/-க்குப் பணிக்கு அமர்த்தப்பட்ட 150 அன்றாட பண்ணைத் தொழிலாளர்கள் 1.2.91லிருந்து நிலுவைத் தொகை பெறத் தகுதியுடையவர்களாவர். இந்தப் பண்ணைத் தொழிலாளர்கள் மற்ற தொகுப்பூதியம் பெறுகின்ற அலுவலர்களைப் போன்று, இனிவரும் ஆண்டுகளில் அகவிலைப்படி உயர்விற்கு தகுதி பெறுவார்கள்.

2. அடுத்த இரண்டாவது தொகுதியில் அன்றாட ஊதியம் பெறுகின்ற 150 பண்ணைத் தொழிலாளர்கள் 1.7.1992-லிருந்து தொகுப்பூதியமாக ரூ.920/- பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது தொகுதியில் மேலும் 150 அன்றாடம் ஊதியம் பெறும் பண்ணைத் தொழிலாளர்கள் 1992-93- ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் மாதம் ரூ.920/- தொகுப்பூதியம் பெற ஏற்பாடுகள் செய்யப்படும்.

கொள்கை விளக்கம் 1993-94.

கோரிக்கை எண் 22

கால்நடை பராமரிப்புத்துறை

பாகம்-1

பொது விவரம்.

முன்னுரை :

தமிழ் நாட்டின் பொருளாதாரம் விவசாயத்தைச் சார்ந்துள்ளது. பெரும்பான்மையான மக்கள் சிறு, குறு விவசாயத் தொழிலாளர்களாக உள்ளனர். இந்த ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் கால்நடை வளர்ப்பு முக்கிய அங்கம் வகிக்கின்றது. ஒரு உப தொழிலாக இதுவரை இருந்து வந்த கால்நடை வளர்ப்பு தற்பொழுது பல ஏழை மக்களுக்கு வருவாயைக் கொடுக்கும் முக்கிய தொழிலாக மாறியுள்ளது. மேம்படுத்தப்பட்ட கால்நடைகள் மற்றும் கோழிகளின் காரணமாக கால்நடை வளர்ப்பு அவர்களுக்குப் பொருளாதார ரீதியில் லாபகரமானதாகவும் வருமானம் உள்ளதாகவும் அமைந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட இனவிருத்தி கொள்கைகள்மூலம் தோற்றுவிக்கப்படும் உயரின கால்நடைகளினாலும், தீவன வசதி பெருக்கத்தினாலும் நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை மூலம் கால்நடைகளின் உடல் நலம் காக்கப்படுவதினாலும், இந்நிலை தோற்றுவிக்கப்பட்டுளளது. இவற்றின் மூலம் கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க கால்நடை பராமரிப்புத்துறை அயராது பாடுபடுகிறது, கால்நடை பராமரிப்புத் துறையின் அயராத மற்றும் தீவிர திட்டத்தின் செயல்பாடுகளினால் புரத சத்து மிக்க பால், முட்டை, மற்றும் இறைச்சி ஆகியவைகளின் உற்பத்தி குறிப்பிடத் தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

பாகம்-2

துறையின் முக்கிய பணிகள்.

1. ஆவின அபிவிருத்தி:

தமிழ் நாட்டில் உள்ள மொத்த பசுக்கள், எருமைகளின் எண்ணிக்கை 1989-ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி, முறையே 9.35 மில்லியன், 3.13 மில்லியன்

ஆகும். தமிழ் நாட்டில் இனவிருத்திக்குத் தகுதியான பசுக்கள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை முறையே 3.15 மில்லியன், 1.62 மில்லியன் ஆகும். 1989-ம் ஆண்டு புள்ளிக் கணக்கிலிருந்து பின்னர் ஏற்படக்கூடிய கூடுதலையும் கருத்தில் கொண்டால், 1992—இல் தோராயமான மதிப்பீடு கீழ்வருமாறு:-

	மொத்த எண்ணிக்கை. (மில்லியன்)	இனவிருத்திக்கு ஏற்றவை. (மில்லியன்)
பசுக்கள்	8.95	3.01
எருமைகள்	3.09	1.58

2. ஆவின / எருமைகள் இனவிருத்தி கொள்கை :

மாநில அரசின் இனவிருத்தி கொள்கை பின்வருமாறு :-

1. உள் நாட்டின பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி மாடுகளை அவை அதிகமாக காணப்படும் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட முறையில் இனவிருத்தி செய்தல்.

2. நாட்டின பசுக்களை அதிக அளவில் பால் கொடுக்கக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் பிரிசியன் பொலிக் காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

3. கிராமப்புறங்களில் உள்ள எருமைகளை, முர்ரா பொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

4. தமிழ் நாட்டில் தற்பொழுதுள்ள கலப்பின பசுக்களை, கலப்பினக் காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

தவிர, பொதுக்கொள்கையாக, இனவிருத்திக்காக கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லாச் சமவெளிப் பகுதிகளுக்கு ஜெர்சி இனப் பொலிக் காளைகளும் எல்லா மலைப்பகுதிகளுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் பிரிசியன் காளைகளும் பயன்படுத்தப்படுகின்றன. சமீப காலங்களில் நகர்பகுதிகளில் பசுக்களுக்கு நல்ல ஊட்டமான தீவனம் கொடுத்து வளர்க்கும் காரணத்தால் தற்போது சமவெளி நகர்புறங்களிலும் பிரிசியன் விந்து வழங்கப்படுகிறது.

3. கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் :

பசுக்கள் மற்றும் எருமைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக கால்நடை பராமரிப்புத்துறை தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்களையும் கேந்திர கிராமத் திட்டங்களையும் சில

குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் கடந்த காலங்களில் செயல் படுத்தி வந்தது. 1991-92ஆம் ஆண்டு முதல், உலக வங்கி நிதி உதவியுடன் 20 மாவட்டத் தலைமை இடங்களில் உள்ள பிரிவுகள் மூலம், கால்நடை மற்றும் தீவன வளர்ப்புத் திட்டம் தமிழகமெங்கும் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

4. பசுக்கள்/எருமைகளின் இனப் பெருக்கம் :

தமிழ் நாட்டில் கால்நடை பராமரிப்புத்துறை 2,770 நிலையங்கள் மூலமாக பசுக்கள்/எருமைகள் இனவிருத்திப் பணியை விஞ்ஞான முறையில் மேற்கொள்கிறது. இவற்றில் 2,420 நிலையங்களில் உறைவிந்து உபயோகிக்கப்பட்டது. மீதமுள்ள 350 நிலையங்களில் பதப்படுத்தப்பட்ட திரவ விந்து உபயோகிக்கப்பட்டது. தற்போது உறைவிந்து முறை கருவூட்டல் பணி மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

5. பொலிக்காளை நிலையங்கள் :

கால்நடைப் பராமரிப்புத் துறை விந்து உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் என 19 இடங்களில் பொலிக்காளை நிலையங்களை நிறுவி உள்ளது. இந்நிலையங்களில் ஜெர்சி, பிரிசியன், காங்கேயம் மற்றும் முர்ரா பொலிக்காளைகள் விந்து உற்பத்திக்காகப் பராமரிக்கப்படுகின்றன. செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களில் உறைவிந்து முறை துவங்கப் பட்டதால் இப்பொலிக்காளை நிலையங்கள் படிப்படியாக மூடப்படும்.

6. உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் :

கால்நடை பராமரிப்புத்துறை 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவையாவன,—

(1) ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).

(2) அபிசேகப்பட்டி (திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்).

(3) ஓசூர் (தர்மபுரி மாவட்டம்).

(4) ஊட்டி (நீலகிரி மாவட்டம்).

உறைவிந்து உற்பத்திக்காகத் தரமிக்க உயரின, அயலின ஜெர்சி, பிரிசியன், கலப்பின சிந்தி, காங்கேயம் மற்றும் முர்ரா பொலி காளைகள் இந்நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் உறைவிந்து செயற்கை முறை கருவூட்டல் நடைபெறும் நிலையங்களுக்கு

வழங்கப்படுகிறது. 13.71 லட்சம் கீற்று (dose) உறைவிந்தும் 1.65 லட்சம் லிட்டர் திரவ நைட்ரஜனும், உறைவிந்து நிலையங்கள் மூலம் 1992-93-ம் ஆண்டில் 28—2—1993 வரை உற்பத்தி செய்யப்பட்டு வெவ்வேறு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

7. கால்நடைப் பண்ணைகள் :

மாநிலத்தில் தற்போது 8 கால்நடைப் பண்ணைகள் உள்ளன. அங்கு ஆவினம், எருமைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், மற்றும் பன்றிகளின் இனவிருத்திப் பணிகள் விஞ்ஞான முறையில் நடந்து வருகின்றன. ஈச்சங்கோட்டை பண்ணையில் ஒரு கரு மாற்றல் பிரிவும் இயங்கி வருகிறது. இவ்விடத்தில் பெறப்படும் அனுபவத்தைக் கொண்டு பிற இடங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

கீழே குறிப்பிட்டுள்ள 8 இடங்களில் கால்நடைப் பண்ணைகள் செயல்படுகின்றன:—

(1) ஓசூர் (தர்மபுரி மாவட்டம்).

(2) புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்).

(3) ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).

(4) ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்).

(5) கொருக்கை (தஞ்சாவூர் மாவட்டம்).

(6) அபிசேகப்பட்டி (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்).

(7) செட்டிநாடு (பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்).

(8) உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்).

ஒரத்தநாடு மற்றும் அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடை பண்ணைகளில் எருமை வளர்ப்பும் மற்ற பண்ணைகளில் பசு வளர்ப்பும், கொருக்கை பண்ணையில் உம்பளாச்சேரி வகைப் பசுவும் உதகமண்டலத்தில் பிரிசியன் பசுவகையும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஜெர்சி இனப்பசுக்களின் வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சிந்தி இன வம்சாவழி ஆய்வு ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் முர்ரா எருமை வம்சாவழி ஆய்வு ஒரத்தநாடு பண்ணையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சிறந்த பொலிக்காளைகள் தெரிவு செய்யப்பட்டு உள் நாட்டினக் கால்நடைகளின் கருவணுக்கள் (GERM PLASM) பாதுகாக்கப்படும்.

8. உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப் படுகிறது. 1991-92-ம் ஆண்டு முதல் ரூ. 46.62 கோடி செலவில், 7 ஆண்டுகளுக்கு இத்திட்டம் செயல்பட உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் :—

(1) தமிழகத்திற்கு ஏற்ற கால்நடை உற்பத்தி முறைகளை தோற்றுவித்தல்,

(2) சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்றவாறு பால் உற்பத்தியைக் கூட்டுதல்.

(3) கிராமப்புற கால்நடை வளர்ப்போரின் வருமானத்தைப் பெருக்குதல்.

(4) பால் உற்பத்தி தொழிலை அரசு தகுந்த முறையில் மேற்பார்வையிடவும் உதவி அளிக்கவும் ஏற்பாடு செய்தல்.

இக்குறிக்கோள்கள் கீழ்க்கண்ட செயல்முறைகளின் மூலம் நிறை வேற்றப்பட உள்ளன.

(1) உறைவிந்து உற்பத்தியைப் பெருக்க ஈச்சங்கோட்டை மற்றும் ஓசூர் பண்ணைகளை வலுப்படுத்துதல்,

(2) பொலிக்காளை உற்பத்தியைப் பெருக்க ஈச்சங் கோட்டை ஓசூர் மற்றும் ஒரத்தநாடு பண்ணைகளின் அடிப்படை வசதிகளை வலுப்படுத்துதல்,

(3) கோவை, வேலூர், மதுரை, திருச்சி, தஞ்சை, நெல்லை, தர்மபுரி, கடலூர், சிவகங்கை மற்றும் சைதாப் பேட்டை ஆகிய இடங்களில் உறைவிந்து வங்கிகளை நிறுவி, உறைவிந்துவைத் தருவிக்கவும், சேமிக்கவும், விநியோகிக்கவும் தகுந்த வழிமுறைகளை ஏற்படுத்துதல்.

(4) செயற்கைமுறைக் கருவூட்டல் நிலையங்கள் அனைத்திலும் உறைவிந்து கருவூட்டல் முறையை விரிவு படுத்துதல்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(5) ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட தீவன வளர்ப்புக் குழுவை நிறுவி இலவசமாக தீவன இடுபொருட்களை வழங்கி தீவன வளர்ப்புத்திட்டத்தைச் செயல்படுத்துதல்.

(6) ஒலி, ஒளி சாதனங்களின் மூலம் துறையின் விரிவாக்கப் பிரிவை வலுப்படுத்துதல்.

(7) நோய் ஆய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி இயல்பான வளர்ச்சியின் காரணமாக 2000 ஆம் ஆண்டில் 4.80 மில்லியன் டன்னாக உயரும். தவிர இந்த திட்டத்தின் செயல் பாட்டினால் பால் உற்பத்தி 2001 ஆம் ஆண்டில் சுமார் 25% கூடுதலாகி 4.80 மில்லியன் டன்னிலிருந்து 5.80 மில்லியன் டன்னாக உயரும்.

I. 1991-92 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் :—

1. உறை விந்துவையும், திரவ நைட்ரஜனையும் அனைத்துக் கருவூட்டல் நிலையங்களுக்கும் வழங்குவதைக் கண்காணிக்கத் தலைமையகத்தில் ஒரு தனிப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

2. மதுரை, கோவை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உறை விந்து வங்கிகள் நிறுவப்பட்டு பிற மையங்களுக்கு உறை விந்து வழங்கப்படுகின்றன. மேற்படி வங்கிகள் உபகரணங்கள் மற்றும் வாகன வசதிகளை உள்ளடக்கியது ஆகும்.

3. உறைவிந்து மூலம் கருவூட்டல் பணி மாநிலத்தில் 234 நிலையங்களுக்கு இவ்வாண்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4. வடாற்காடு -அம்பேத்கார், செங்கை-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, புதுக்கோட்டை, திருச்சி, நெல்லை, மதுரை, கோவை, பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் மாவட்ட தீவன அபிவிருத்தி பணிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் இரண்டு வேளாண்மை உதவி இயக்குநர்களும், ஒரு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநரும் பணி புரிந்து கால்நடை வளர்ப்போருக்குத் தீவன வசதிக்கான தகுந்த பணிகளை மேற்கொள்வார்கள். மேற்படி குழுவிற்கு தேவையான உபகரணங்கள் வாகன வசதிகள் ஆகியவை செய்து தரப்பட்டுள்ளன.

5. பல்வேறு கால்நடை பராமரிப்புத் துறை பணிகள் கால்நடை வளர்ப்போர்க்கு தெரிவிக்கும் வகையில் துறையின் விரிவாக்கப் பிரிவு ஒலி, ஒளி சாதனங்களுடன் வலுப்படுத்தப் பட்டுள்ளது.

6. கால்நடைகளை தாக்கும் பல்வேறு நோய்களைப் பற்றிய காரணங்களை அறிய கணக்கெடுப்பு ஆய்வு மேற்

கொள்ளும்வகையில் வேலூர், மதுரை, கோவை மற்றும் நெல்லை ஆகிய இடங்களில் தனி நோய் ஆய்வுப் பிரிவுகள் நிறுவப் பட்டு உள்ளன.

II. *1992-93* ஆம் ஆண்டு திட்டப் பணிகள் :

இவ்வாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டுள்ளது.

(1) திருச்சி, தஞ்சை, நெல்லை மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் உறை விந்து மற்றும் திரவ நைட்ரஜன் விநி யோகத்திற்காக உறை விந்து வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

(2) திரவ விந்துவின் மூலம் கருவூட்டல் பணியினைத் தற்போது மேற்கொண்டு வரும் *350* நிலையங்களில் உறை விந்து கருவூட்டல் பணி இவ்வாண்டில் செயல்படுத்தப்பட்டு, இதன் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து கருவூட்டல் நிலை யங்களிலும் உறை விந்து கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு நாட்டின பசுக்கள் மற்றும் எருமைகளின் பால் உற்பத்தியைக் கூட்ட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

(3) பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம், காம ராஜர், திண்டுக்கல்-அண்ணா, சேலம், தஞ்சை, வ.உ. சிதம் பரனார், திருவண்ணாமலை-சம்புவராயர், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தீவன வளர்ப்புப் பணிக் குழுக்கள் நிறுவப்படும்.

(4) கால்நடை பராமரிப்பு பற்றிய பல்வேறு செய்தி களை விவசாயிகளுக்கு தெரிவிக்கும் வகையில் பிரபல கலை ஞர்களைக் கொண்டு 4 வண்ணப் படங்கள் *(16 எம்.எம்.)* எடுக்கப்பட்டுள்ளன. இவை வீடியோ முறைக்கும் மாற்றப்பட உள்ளன.

(5) கோவை, மதுரை, வேலூர் மற்றும் நெல்லை ஆகிய இடங்களில் 4 நோய் ஆய்வு கூடங்கள் அப்பகுதியிலுள்ள துறை அலுவலர்களுக்கு நோய் கண்டறிதல், நோய் ஒழிப்பு ஆகிய முறைகள் குறித்து உதவிகள் செய்ய நிறுவப்பட் டுள்ளன.

III. *1993-94* ஆம் ஆண்டிற்கான திட்டம் :—

(1) கடலூர், சிவகங்கை மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் உறை விந்து வங்கிகளை நிறுவுதல்.

(2) உறை விந்து கருவூட்டல் பணி எல்லா நிலையங்களி லும் சீரமைக்கப்பட்டு அவற்றின் செயல் திறனைக் கூட்டும் வழிவகைகள் செய்தல்.

(3) ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு மற்றும் ஓசூர் ஆகிய பண்ணைகளில் கால்நடைக் கொட்டில்களைச் செப்பனிடுதல் மற்றும் தீவன உற்பத்தி வசதிகளை வலுப்படுத்துதல்.

(4) ஜெர்சி, முர்ரா மற்றும் கலப்பின பசுக்கள் மற்றும் காளைகளைத் தருவித்து இனவிருத்திப் பணிக்கு உபயோகித்தல்.

(5) இலவசமாகத் தீவன இடு பொருட்களைத் தொடர்ந்து வழங்கி தீவன உற்பத்தியை அதிகரித்தல்.

(6) புதிய வகைப் புற்களையும், பயறு வகையைச் சார்ந்த தீவனப் பயிர்களையும் அறிமுகப்படுத்துதல்.

(7) விரிவாக்கப் பிரிவை மேலும் வலுப்படுத்தி கால்நடை பராமரிப்புப் பற்றிய சினிமாப் படங்கள் எடுத்தல்'

(8) நோய் ஆய்வுக்கூடங்களிலும், புலனாய்வுக் கூடங்களிலும் பணியைத் தீவிரப்படுத்துதல்.

9. டேனிடா உதவியுடன் கால்நடை வளர்ச்சித் திட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கீரனூர் உட்கோட்டத்தில் அன்னவாசல், குன்னாண்டார் கோவில் மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் ரூ. 4.4 கோடி செலவில் 5 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படுகிறது.

கீரனூர் உட்கோட்டத்தில் உள்ள 128 பஞ்சாயத்துகள், 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் ஒரு இளம் தம்பதியருக்குக் கால்நடை பராமரிப்பு மற்றும் தீவன உற்பத்தி பற்றி 8 வாரங்களுக்கு பயிற்சி அளித்து, பயிற்சிக்குப் பின் இவர்கள் அப்பகுதியில் உள்ள 60 விவசாயிகளுக்கு 2 நாள் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்வார்கள். இவ்வகையில் மொத்தம் 7680 விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து தற்பொழுது உள்ள அடிப்படை வசதிகளை தகுந்த முறையில் உபயோகித்து வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய வழிகோலப்படும்.

28—2—1993 வரை 44 தம்பதியருக்கும் 780 விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராம மக்களிடையே விழிப்புணர்வை வளர்க்கும் வண்ணம் கிராமங்களில் 287 இரவுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தவிர 27,180 தீவன கன்றுகளும், 1,13,000 கோ-1 ரக தீவன புல் நறுக்குகளும் வழங்கப்பட்டுள்ளன. திட்டத்திற்குத் தேவையான கட்டிடங்கள் ரூ. 155.00 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன.

பாகம் 3

1. செம்மறி ஆட்டு வளர்ப்பு:

செம்மறி ஆட்டு வளர்ப்பு இம்மாநிலத்தில் ஏழை வ்வசாயிகளிடம் மிகவும் பிரபலம் அடைந்துள்ளது. இது அதிக விவசாயக் குடும்பங்களுக்கு நிலையான வருமானத்தை அளிக்கிறது. கிராமப்புற பொருளாதாரத்தில் ஆட்டு வளர்ப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு ஏழை வ்வசாயிகள் ஆடுகளை வாங்கி வளர்க்க கால்நடை பராமரிப்புத் துறை பல்வேறு செம்மறி ஆட்டுவளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

2. ஆட்டுப் பண்ணைகள்:

கால்நடைப் பராமரிப்புத் துறை சின்ன சேலம் (தென்னாற்காடு மாவட்டம்) சாத்தூர் (காமராஜர் மாவட்டம்) ஆகிய இடங்களில் 2 ஆட்டுப் பண்ணைகளையும், ஓசூர், புதுக்கோட்டை திருநெல்வேலி மற்றும் செட்டிநாடு ஆகிய இடங்களில் உள்ள 4 மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் 4 ஆட்டு வளர்ப்புப் பிரிவுகளையும் பராமரித்து வருகிறது. இங்கு உள்நாட்டினங்களான மேச்சேரி, இராமநாதபுரம், வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் ஆகிய செம்மறி ஆடுகள் வளர்க்கப்பட்டு தேர்ந்த இனப் பெருக்கம் செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்டு கிடாக்களும், பெட்டைகளும் தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் உள்ள விவசாயிகளுக்கு நாட்டின் ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படுகின்றன.

3. செம்மறி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள்:

ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்குத் தக்கசமயத்தில் இடுபொருட்கள் கிடைப்பதற்கும் விற்பனை உதவிக்கும் தமிழ் நாட்டின் பல்வேறுபாகங்களில் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை 1,710 சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 1,451 சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. இச்சங்க உறுப்பினர்கள் கால்நடை பராமரிப்புத் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு ஆடு வளர்ப்புத் திட்டங்களின் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

4. ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்:—

செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். வட ஆற்காடு-அம்பேத்கார் திருவண்ணாமலை-சம்புவராயர், தென்னாற்காடு, தர்மபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் ரூ. 13.67 கோடி செலவில் ஆடு வளர்ப்புத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்

முக்கிய நோக்கம் திட்டப் பகுதியில் உள்ள செம்மறி ஆடுகளின் இறைச்சி உற்பத்தித் திறனை கீழ்வரும் வகையில் அதிகப்படுத்துவதேயாகும்.

(1) உள்ளூர் செம்மறி ஆட்டு இனங்களைத் தெரிவு செய்து இனப்பெருக்கம் செய்தல்.

(2) செம்மறி ஆடுகளுக்கு வேண்டிய மேய்ச்சல் வசதியை ஏற்படுத்துதல்.

(3) ஆடுகளுக்கு உடல்நலம் பேணும் பணிகளைத் தீவிரப்படுத்துதல்.

ஒரு செம்மறி ஆட்டு நோய் ஆராய்ச்சிக் கூடம் இத்திட்டத்தின்கீழ் சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிடாபெருக்க நிலையங்கள், இராணிப்பேட்டை, சின்ன சேலம் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன. உடல் நலம் பேணும் திட்டம் மற்றும் மேய்ச்சல் வசதிகள் உள்ளடக்கிய முறையில் நாட்டின உயர் கிடாக்களைக் கொண்டு நாட்டின ஆடுகளை இனப் பெருக்கம் செய்வதினால் கிடைக்கும் அதிக இறைச்சிதரும் ஆடுகளை விற்பதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும்.

5. வெள்ளாட்டுப் பெருக்கம்:

தமிழ் நாட்டில் வெள்ளாட்டு வளர்ப்பு விவசாயிகளிடையே பிரபலம் அடைந்து வருகிறது. சில விவசாயிகள் வெள்ளாடுகளை கொட்டில் முறையில் தீவிரமாக வளர்த்து வருகின்றனர். இறைச்சி மற்றும் பால் உற்பத்தித் திறன் உள் நாட்டு வெள்ளாடுகளில் குறைவாக இருப்பதால் கால்நடைப் பராமரிப்புத் துறை ஜமுனபாரி வெள்ளாட்டு இனங்களை சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையிலும் செட்டிநாடு மற்றும் கொருக்கை கால்நடைப் பண்ணையிலும் இனப் பெருக்கத்திற்காக வளர்த்து வருகிறது. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் இனப் பெருக்கம் செய்யப்படுகின்றன. உள்நாட்டின வெள்ளாடுகளின் தரம் உயர்த்தப்பட்டு அவை தமிழக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

6. கோழி இனப் பெருக்கம்:

கால்நடை பராமரிப்புத் துறை 26 கோழி விரிவாக்க நிலையங்களையும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்களையும் வெள்ளை லெக்கார்ன் கோழிகளின் உற்பத்திக்காகவும் வளர்ப்பிற்காகவும் பராமரித்து வருகிறது. விவசாயிகளுக்கு விநியோகிக்க குஞ்சு வளர்ப்பு நிலையங்களாகவும் செயல்முறை விளக்க நிலையங்களாகவும் இக்கோழி விரிவாக்க நிலையங்கள் பயன்படுத்தப்பட்டு

வருகின்றன. ஈரோட்டில் கோழிநோயைக் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாய்வுக்கூடம் இப்பகுதியில் கோழி நோய்களைக் கண்டறிந்து கோழி நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்க வேண்டிய முன் அறிவிப்பு நடவடிக்கைப்பற்றி விவசாயிகளுக்கு விவரித்து உதவி வருகிறது. 1992-1993ம் ஆண்டில் 28-2-1993 வரை 154 கிராமங்களுக்கும் 645 கோழிப்பண்ணைகளுக்கும் அதிகாரிகள் சென்றுநோயைக் கண்டறியும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

7. பன்றிப் பெருக்கம் :—

பன்றி வளர்ப்பு கிராமங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள ஏழைக் குடும்பங்களுக்கு உபரி வருமானத்தை அளிக்கிறது. நாட்டுப் பன்றிகளின் இறைச்சி உற்பத்தித்திறன் குறைவாக உள்ளதால் கால்நடைப் பராமரிப்புத்துறை, சென்னை சைதாப்பேட்டையிலும் ஒசூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும் லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர் இனப்பன்றிகளை இனப்பெருக்கம் செய்து வருகிறது. உள்நாட்டின பன்றிகளின் தரத்தை உயர்த்த விவசாயிகளுக்கு இப்பிரிவுகளிலிருந்து பன்றிகள் வழங்கப்படுகின்றன. சிறப்பு கால்நடை இனவிருத்தித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளுக்கு இப்பண்ணைகளிலிருந்து பன்றிகள் வழங்கப்படுவதின் மூலம் உள்ளூர் இனப் பன்றிகளின் தரம் உயர்த்தப்படுகிறது.

8. பசுந்தீவன உற்பத்தி :—

பசுந்தீவன உற்பத்தி கால்நடை அபிவிருத்திப் பணியின் ஒரு முக்கிய அம்சமாகும். அதனால் கால்நடைப் பராமரிப்புத்துறை. பசுந்தீவன உற்பத்திக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் தற்போது அமைக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு மற்றும் தீவன வளர்ப்புப் பிரிவுகளின் பொறுப்பின் கீழ் தீவன வளர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. இத்துறையின் விரிவாக்க அலுவலர்கள் விவசாயிகளை பசுந்தீவன உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட அனைத்து உதவிகளையும் செய்கிறார்கள். பசுந்தீவன நறுக்குகள், பசுந்தீவன மரக்கன்றுகள் பசுந்தீவன விதைகள் மற்றும் இடு பொருட்களை விவசாயிகளுக்கு அளிக்க ஆவன செய்து வருகின்றார்கள்.

பசுந்தீவன விதை உற்பத்தி நிலையங்கள் இம்மாநிலத்தில் 7 இடங்களில் தோற்றுவிக்கப்பட்டு பசுந்தீவன நறுக்குகள், பசுந்தீவன மரக்கன்றுகள், பசுந்தீவன விதைகள் ஆகியவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன, உலக வங்கி திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாக தீவன உற்பத்தி விளங்குகிறது. இதன் மூலம் தீவன இடு பொருட்களான, நறுக்குகள், மரக் கன்றுகள் மற்றும் விதைகள்

வடிவத்தில் இலவச அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு தீவன அபிவிருத்திக்கு வழி வகுக்கப் பட்டுள்ளது. மேலும் விவசாயிகளுக்குத் தீவன அபிவிருத்தி பற்றி தெரிந்துகொள்ள உரிய கையேடுகளும் வழங் கப்பட்டு வருகிறது.

1992—93-ப் வருடத்தில் 28-2-1993 வரை 162.33 இலட்ச தீவன நறுக்குகளும், 17,82 லட்சம் தீவன மரக் கன்றுகளும் 32.72 மெட்ரிக் டன் எடையுள்ள பசுந் தீவன விதைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

9. சிறப்புத் திட்டங்கள் :—

1. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :—

கால்நடை அபிவிருத்தி பணிகளையும் உடல் நலம் பேணும் பணிகளையும் தீவிரப்படுத்த இத்திட்டம் நீல கிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992—93ம் ஆண்டில் உதகை மாவட்டத்திலுள்ள கால் நடைப் பண்ணை மற்றும் கால்நடை மருத்துவ நிலை யங்களின் உள்ளமைப்பை வலுப்படுத்த ரூ. 7.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் பசுந் தீவன உற்பத்தியுடன் கால்நடை அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள, மேற்குத் தொ டர்ச்சி மலைப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992—93ம் ஆண்டில் கீழ்கண்ட பணிகளுக்காக ரூ.28.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

	ரூபாய் இலட்சம்.
1. பசுந்தீவன நறுக்குகள் மற்றும் பசுந்தீவன மரக்கன்றுகள் வழங்குவதற்கு.	1.00
2. அபிசேகப்பட்டி மாவட்ட கால் நடைப்பண்ணை க்காக முர்ரா இன பொலி காளைகளை வாங்குவதற்கு.	10.00
3. திருநெல்வேலி மாவட்டத்தில் 9 தீவனப் பயிர் உற்பத்தி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு	2.75
4. அபிசேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் பொலிகாளைக் கட்டுவதற்கு இடம் அமைத்தல்.	15.00
ஆக மொத்தம்	28.75

8. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டம் கால்நடை பராமரிப்புத்துறையினால் சேலம், தர்மபுரி, வடஆற்காடு—அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னாற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்படுகிறது.

மலைப்பகுதியில் வாழும் இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினருக்கு மட்டும் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டில் 100 கறவை மாட்டு அலகுகளும் 119 ஆட்டு அலகுகளும் 219 மலைவாழ் பழங்குடியினர் நலனுக்காக வழங்கப்பட்டுள்ளன. இதுதவிர 9 கால்நடை மருந்தகப் பிரிவுகள், 9 நடமாடும் மருத்துவப் பிரிவுகள், 9 உறைவிந்து நிலையங்கள் மற்றும் 3 கிளை நிலையங்களின் மூலம் இப்பகுதியில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதியும், பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணியும் செய்யப்படுகின்றன.

9. சிறப்பு மத்திய உதவித் திட்டம்:

ஆதிதிராவிட விவசாயிகள் பயன் பெறும் நோக்கத்துடன் மத்திய அரசின் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயன் பெறும் ஏழை எளிய மக்களுக்கு 20 பெட்டை செம்மறி ஆடுகளும், 1 கிடாவும் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டிற்கு 1900 ஆட்டு அலகுகளை ரூ. 79.11 இலட்சம் செலவினத்தில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. புள்ளிவிவர மதிப்பீடு:

கால்நடை அபிவிருத்தி திட்டத்தில் முக்கிய அங்கமான கால்நடை அளவீடுகள் மூலம் பால், முட்டை, இறைச்சி உற்பத்தியை மதிப்பீடு செய்து அதன் மூலம் பசு, எருமை இனங்களின் அபிவிருத்தி முறைகளை மதிப்பீடு செய்யவும் இதனால் இக் கால்நடை பராமரிப்புத் துறையின் வளர்ச்சி திட்டங்களின் பலனை அனுமானிக்கவும் முடிகிறது.

மாநில மாதிரி அளவீட்டு திட்டத்தின் மூலம் எல்லா மாவட்டங்களிலும் பால் முட்டை இறைச்சி ...

உற்பத்தியை காலாகாலம் மதிப்பீடு செய்யும் திட்டத்தை கால்நடை பராமரிப்புத்துறை செயல்படுத்தி வருகின்றது. அதே போல் மாவட்ட அளவிலான மாதிரி அளவீட்டு திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களான, தென்னாற்காடு, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய 4 மாவட்டங்களில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் அளவை பெரிய மாதிரி அளவில் மத்திய அரசின் உதவியுடன் செய்து வருகிறது. பால், முட்டை ஆகியவற்றின் உற்பத்தி செலவு மதிப்பீட்டினையும் இத்திட்டம் கணக்கிடுகிறது.

1992—93-ம் ஆண்டில் இரண்டு காலகட்டங்களில் எடுக்கப்பட்ட அளவீடுகளின் முடிவுகள் பின்வருமாறு :----

	கோடை பருவ காலம்.	மழை பருவ காலம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1. பால் உற்பத்தி மதிப்பீடு ([illegible] டன்கள் ஆயிரம் டன்கள்) ..	1129.998	1176.112	2306.110
2. முட்டை உற்பத்தி மதிப்பீடு (மில்லியன் எண்கள்) ..	924.026	952.635	1876.661
3. இறைச்சி உற்பத்தி மதிப்பீடு (மில்லியன் கிலோ) ..	14.509	14.407	28.916

கால்நடை கணக்கெடுப்பில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கணக்கெடுப்பு திட்டம் ஒன்று இத்துறையினால் செயல்படுத்தப்படுகிறது.

பாகம் 4.

கால்நடை மருத்துவநலப் பணிகள்.

(அ) கால்நடை மருத்துவ நிலையங்கள் :

தமிழ் நாட்டில் உள்ள கால்நடைகளையும், கோழி இனங்களையும் நோயிலிருந்து பாதுகாப்பதற்கான பணியை கால்நடை பராமரிப்புத் துறை 880 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 2226 கிளை நிலையங்கள் மூலமாகச் செய்து வருகிறது. சிகிச்சை மற்றும் தடுப்பூசி போடுவதன் மூலம் கால்நடைகளின் உடல்நலத்தைக் காப்பதுடன் கால்நடைகளின் இனவிருத்தி

சம்பந்தப்பட்ட பணிகள் : இந்நிலையங்களில் கவனிக்கப்படுகின்றன. பயனற்ற காளைகளுக்கு விரை நீக்கம் செய்தல் முக்கிய பணியாக மேற்கொள்ளப்படுகிறது. கால்நடை மருத்துவ மனை மற்றும் பிரதம மருத்துவ மனைகளில் நோயுற்ற கால்நடைகளுக்கு உள்ளிருப்பு வசதிகளும், அறுவை சிகிச்சை செய்வதற்கான வசதிகளும் உள்ளன. தல்லாகுளத்தில் உள்ள பிரதம மருத்துவ மனை எக்ஸ்ரேகதிர் படம் எடுக்கும் வசதியையும் கொண்டு உள்ளது. தற்போது மாநிலத்தில் மொத்தம் 880 கால்நடை மருத்துவ நிலையங்கள் கீழ் கொடுக்கப்பட்டவாறு இயங்கி வருகின்றன :

பெரு மருத்துவமனை	..	32
கால்நடை மருத்துவ மனைகள்	..	57
கால்நடை மருந்தகங்கள்	..	791

கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு முதல் உதவியும் எருமை/பசு இனங்களுக்கு செயற்கை முறை கருவூட்டலும் அளிக்கும் பொருட்டு 2226 கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1992–93-ம் ஆண்டில் 28–2–1993 வரை மொத்தம் 134.53 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சையும் 5,62 இலட்சம் கால்நடைகளுக்கு விரை நீக்கமும் 184.66 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசியும் 25.69 இலட்சம் கருவூட்டலும் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் :

கால்நடை நோய் புலனாய்வு செய்து நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மாநிலத்தில் 11 இடங்களில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இவ்வருடத்தில் தூத்துக்குடியில் ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு மீண்டும் செயல்பட வகை செய்யப்பட்டது. தற்சமயம் மொத்தம் 12 பிரிவுகள் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள் தொற்று நோய்பரவும் வாய்ப்பை புலனறிந்து களப்பணியாளர்களுக்கு முன்னதாவே அறிவித்து முன்னெச்சரிக்கை தடுப்புப் பணிகளை மேற் கொள்ளச் செய்கின்றன.

(இ) நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள்:

நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் 50 இடங்களில் நம் மாநிலத்தில் பணியாற்றி நெடுந்தூரத்தில் உள்ள பட்டி, தொட்டிகளில் உள்ள கோழிகளுக்கும், கால்நடைகளுக்கும் சிகிச்சை அளிக்கின்றன. இப் பிரிவுகள் பசு/எருமையினத்திலும் செயற்கை முறைக் கருவூட்டல் பணியையும் செய்து வருகின்றன.

(ஈ) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.—

கால்நடைப் பராமரிப்புத்துறை இம் மாநிலத்தில் வெக்கை நோய்த் தடுப்பிற்காக 26 மாவட்ட வெக்கை நோய்க் குழுக்கள் 10 கண்காணிப்புப் பிரிவுகள் மற்றும் 10 சோதனை சாவடிகள் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன:

(1) வெக்கை நோய் மாவட்ட குழுக்கள் :

இக் குழுக்கள் மாவட்டங்களில் உள்ள பசு/எருமை இனங்கள் மற்றும் ஆடுகளுக்கு முறையாக வெக்கை நோய்த் தடுப்பூசி போட்டு வருகின்றன. இம்முறையினால் இவைகளின் நோய்த் தடுப்பு சக்தி அதிகரிக்கப்படுகிறது. இப்பணி தக்க முறையில் செயல்பட, எல்லாப் பகுதிகளிலும் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை தடுப்பூசி போட ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.

(2) வெக்கை நோய் கண்காணிப்புக் குழுக்கள் :

மாநில எல்லைக்குள் 15 கி.மீ. உட்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்குக் கால முறைப்படி தடுப்பூசி போடுவதன் மூலம் மாநில எல்லைப் பகுதிகளில் நோயற்ற நிலையை உருவாக்கவும் வெளியில் இருந்து வரும் கால்நடைகள் மூலம் நோய் தோன்றாமல் இருக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(3) வெக்கை நோய் சோதனைச் சாவடிகள் :

மாநில எல்லையில் முக்கியமான சாலைகளில் உள்ள 10 சோதனைச் சாவடிகள் மாநில எல்லைக்குள் வருகின்ற கால்நடைகளை வெக்கை நோயிலிருந்து தடுக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளன. 1992–93-ம் ஆண்டில் 28-2–93 வரை வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் 63.37 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டன.

(4) ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் கூடிய வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.—

நமது நாட்டிலிருந்து வெக்கை நோயை அறவே ஒழிக்கும் நோக்கத்தோடு ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் கூடிய நாடு தழுவிய ஒரு திட்டத்தை மைய அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வெக்கை நோயை அடுத்த ஆறு ஆண்டுகளில் முழுமையாக ஒழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் இத்திட்டத்தை செயல்படுத்தத் தடுப்பூசிப்பணி, கூடுதலான தடுப்பூசி மருந்து உற்பத்தி, தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளில் எதிர்ப்புச் சக்தியை அளவிடல், நோய் அறிவிப்பு மற்றும் மக்கள் விரிவாக்கப்பணி ஆகியவற்றிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் வலுப்படுத்தப்பட உள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை.

தடுப்பு மருந்து உற்பத்தி :—

தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகள் உடல் நலனைக் காப்பாற்றி அவைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படாமல் இருக்க அவ்வப்போது தடுப்பூசி போடுவது கால்நடைபராமரிப்புத் துறையின் முக்கிய பணியாகும். இதற்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகள் இராணிப் பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன. தற்போது இந்நிலையத்தில் 7 நுண்கிருமி தடுப்பூசி மருந்துகளும் 11 நச்சுக் கிருமி தடுப்பூசி மருந்துகளும் 11 வகையான நோய் கண்டறியும் மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

இராணிப்பேட்டையில் தயாராகும் முக்கியமான தடுப்பு ஊசி மருந்துகள்.

(1) நுண்கிருமி தடுப்பு மருந்து :—

சப்பை நோய், தொண்டை அடைப்பான் (அலம்பிரிசிபிடேட்) தொண்டை அடைப்பான் (அலம் அட்சுவணட்) பொவைன் லிம்பன்ஞைடிஸ், துள்ளுமாறி நோய், அடைப்பான் நோய், புருசெல்லா கருச்சிதைவு தடுப்பு மருந்து போன்றவையாகும்.

(2) நச்சுக் கிருமி தடுப்பு மருந்து :—

ராணிகெட் நோய்த் தடுப்பு மருந்து, கே மற்றும் எப், திசு வளர்ப்பு வெக்கை நோய் தடுப்பு மருந்து, வாத்துக் கழிச்சல் நோய் தடுப்பு மருந்து, வெறிநாய் தடுப்பு மருந்து, கெனைன் டிஸ்டம்பர், மேரக்ஸ், ராணிகெட் லசோட்டா தடுப்பு மருந்து, ஆட்டம்மை தடுப்பு மருந்து ஆகியன.

இவ்வருடத்தில் 28—2—93 வரை 45.56 இலட்சம் நுண்கிருமி தடுப்பு மருந்துகளும், 393.71 இலட்சம் நச்சுக் கிருமி தடுப்பு மருந்துகளும் இந்நிலையத்தில் தயாரிக்கப் பட்டுள்ளன.

(3) நோய் கண்டறிதல் :—

இராணிப்பேட்டை நிலையத்தில் கால்நடை நோய்களை கண்டறியும் பிரிவில் உள்ள அலுவலர்கள் மூலம் கால்நடைகள் மற்றும் கோழியினத்திற்கு உண்டாகும் தொற்று நோய்களைக் கண்டறிந்து தடுப்பு முறைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(4) நோயற்ற மண்டலம் ஏற்படுத்துதல் :—

நோயற்ற மண்டலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிக முக்கியமான தொற்று நோய்களான வெக்கை நோய் மற்றும் கோமாரி காளை நோய் கால்நடைகளுக்கு வராமல் பாதுகாப்பதே இந்நோயற்ற மண்டலம் ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கமாகும்.

முறையான மொத்த நோய்த் தடுப்பூசி இம்மண்டலத்திலும், அருகாமையில் உள்ள நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் 40 கி.மீ. எல்லைக்குள்ளும் போடப்படுவதால் இந்நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. மேலும் நெல்லை — கட்டபொம்மன் மாவட்ட எல்லையில் சோதனைச் சாவடி ஏற்படுத்தப்பட்டு இம்மண்டலத்திற்குள் நுழையும் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. இம்மண்டலம் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை எந்த ஒரு நோய்க் கிளர்ச்சியும் ஏற்படவில்லை.

5. கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு :

மத்திய அரசின் நிதி உதவியால் இத்திட்டம் இயங்கிவருகிறது. மாநிலத்தில் நோய்களால் தாக்கப்படும் கால்நடைகளின் விபரங்களைச் சேகரித்து, எங்கெங்கு என்னென்ன நோய்களில் தீவிரம் இருந்தது என்று அறிந்து, ஆராய்ந்து, அதன் அடிப்படையில் முன்கூட்டியே அந்த நோய்கள் வரும்முன் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு. நோய்ப்புலனாய்வுப் பிரிவு இத்திட்டத்தின் கீழ் இயங்கி வருகிறது. பல்வேறு பருவகாலங்களில் கால்நடைகளிடையே பரவும் தொற்று நோய்களை பற்றிய விபரங்கள் அடங்கிய நோய் பற்றிய அட்டவணை தயாரிக்கப்படுகிறது. இதன் மூலம் எந்தெந்த காலங்களில் எந்தெந்த நோய்கள் பரவக்கூடும் என முன்கூட்டியே அறிய முடியும்.

6. வெறிநாய் நோய்க்கடி தடுப்பு நிலையம் :

வெறிநாய் நோய் மக்கள் சுகாதார முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நோயை, நாய்களிலிருந்து மனிதருக்கு பரவுவதைத் தடுப்பதற்காக இத்திட்டம் கோயம்புத்தூரில் முதன்முதலாகத் தொடங்கப்பட்டது. பின்பு இத்திட்டம் மதுரை, சென்னை திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் எல்லா வளர்ப்பு நாய்களுக்கும் முறையாகத் தடுப்பூசி போடப்படுகிறது. இதைத் தவிர தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு மனிதாபிமான முறையில் உள்ளாட்சி நிறுவனங்கள் உதவியோடு அழிக்கப்படுகின்றன.

7. கோமாரி நோய் தடுப்பு முறை :

இத்திட்டத்தின் கீழ் ஏழை விவசாயிகளின் கால்நடைகளுக்கு 50 விழுக்காடு மான்ய விலையில் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. மீதி 50 விழுக்காடு விலையை

மாநிலம் மற்றும் மத்திய அரசுகள் பங்கிட்டுக்கொள்கின்றன. 1992-93 ஆம் ஆண்டில் 28-2-1993 வரை 93,280 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

இது தவிர, தேசிய பால்வள நிறுவனம் மூலமாக மற்றொரு திட்டத்தின்கீழ் பசு/எருமைகளுக்கு இம்மாநிலத்தில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இந்நோய்க்கான தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

8. மக்கள் தொடர்பு முகாம் :

கால்நடை பராமரிப்புத்துறை மாநிலத்தில் உள்ள பட்டிதொட்டிகளில் உள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும் விரிவாக்கப்பணிக்காகவும் மக்கள் தொடர்பு முகாம்களை நடத்திவருகின்றது. இம்முகாம்களில் கால்நடைகளுக்கும் பறவைகளுக்கும் பல்வேறு தொற்று நோய்களுக்கான தடுப்பூசிகளும், கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டலும், குடற்புழு நீக்கமும் செய்யப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, பசு, எருமைகளுக்கான மலட்டு தன்மைக்கான சிகிச்சை, விரிவாக்கக் கல்வி, தீவனப் புல்வளர்ப்பு ஆகியவைதொடர்பான பணிகள்செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்கள் மூலம் கால்நடைபராமரிப்பு, கால்நடை இனப் பெருக்கம், நோய் தடுப்பு, புல் உற்பத்தி ஆகியவைகளில் கையாளப்படும் புதிய உத்திகள் ஏழை விவசாயிகளுக்குப் புகட்டப்படுகின்றன. இம்மாநிலத்தில் 1992-93 ஆம் ஆண்டில் 28-2-1993 வரை 15,790 மக்கள் தொடர்பு முகாம்கள் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டுள்ளன.

9. செம்மறி ஆடுகளுக்கான தீவிர உடல்நலம் பேணும் பணிகள்:

ஆடுகளின் இறைச்சி உற்பத்தி திறன் அவற்றின் உடல் ஆரோக்கியத்தைப் பொறுத்தது. ஆடுகளின் வயிற்றில் குடற்புழுக்கள் இருந்தால் ஆடுகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். அதனால் ஆடுகளின் உடல் எடை குறைந்து அவைகளின் இறைச்சி உற்பத்தியும் குறைந்துவிடும். இதனால் ஆட்டு வளர்ப்பில் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வருவாயும் குறைந்திட வாய்ப்புள்ளது. செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு கால்நடை பராமரிப்புத் துறை உடல் நலம் பேணும் பணித்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் செம்மறி ஆடுகளின் குடற்புழு நீக்கத்திற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டு ரூ. 50 இலட்சம் செலவில் செயல்படுத்தப் பட்டுள்ளது.

<u>1993-94 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள் :</u>

1993-94 ஆம் ஆண்டில் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள கால்நடைப் பெரு மருத்துவ மனையை ஒரு 'பாலிகிளினிக்' காக ரூபாய் 7.7[illegible]

...கும் இடைவிடாது கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்று கால்நடை மருத்துவ மனைகள் ரூபாய் 11.19 இலட்சம் செலவில் பெருமருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்படவுள்ளன.

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் ரூபாய் 12.47 இலட்சம் செலவில் ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுக்கூடம் தோற்றுவிக்கப் பட உள்ளது.

சேலம் மாவட்டம் ஆண்டலூர் கேட்டில் ரூபாய் 13.35 இலட்சம் செலவில் ஒரு கோழி நோய் ஆய்வுக்கூடம் துவக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்.

ஆசியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்காக ஏற்படுத்தப்பட்ட தனித்தன்மைவாய்ந்த முதல் பல்கலைக் கழகம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமாகும். இது 20–9–1989 ஆம் நாளன்று உருவாக்கப்பட்டது.

(அ) கால்நடை மருத்துவம், விலங்கறிவியல் மற்றும் மீன் வளத்திலுள்ள பல்வேறு கிளைகளில் சிறந்த கல்வியை அளித்திடுவதும் ;

(ஆ) கால்நடை மருத்துவம், விலங்கறிவியல் மற்றும் மீன் வளத்தில் ஆராய்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதும், கற்றறிதலும் ;

(இ) அரசு மற்றும் பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அறிவியல் நுட்பங்களைக் கிராமப்புற மக்களுக்கு வழங்குவதும் இப்பல்கலைக் கழகத்தின் தலையாய நோக்கங்களாகும்.

இப்பல்கலைக் கழகம் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கறிவியல், மீன்வளம் மற்றும் அடிப்படை அறிவியல் ஆகிய மூன்று கலையியற் குழுக்களைக் (Faculties) கொண்டுள்ளது.

கல்வி :

இந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூன்று கல்லூரிகளிலும், 1642 மாணவ மாணவியர்கள் படித்து வருகின்றனர் இந்தக் கல்லூரிகளில் அதிக அளவில் மாணவிகள் படித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இப்பொழுது, 287 மாணவிகள் ... இளங்கலைப் படிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், ஐந்து ஆராய்ச்சிப் பண்ணைகளில் ஆய்வுக் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து வெளிவரும் ஆராய்ச்சி முடிவுகள் களப்பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்கள்மூலம் மிகவும் வறுமை நிலையிலுள்ள உழவர் பெருமக்களுக்கும் பயன்படும் வகையில் அவர்களுக்கு விளக்கப்பட்டு வருகின்றன. ஐந்து கால்நடை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், ஏழு கோழி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், மூன்று உழவர் பயிற்சி மையங்கள், இரண்டு வாத்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், கால்நடைகளில் ஏற்படும் கருச்சிதைவைக் கட்டுப்படுத்த இரண்டு மையங்கள், செம்மறியாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ஒன்று ஆகிய இருபது பல்கலைக் கழக மையங்கள் தமிழ் நாடெங்கும் பின்தங்கிய மாவட்டங்களில் அமைந்து ஏழை உழவர் பெருமக்களுக்குத் தொண்டு செய்து வருகின்றன.

ஆராய்ச்சி :

மாநில அரசுத் திட்டத்தின்கீழ் செயல்படும் 110 திட்டங்களுடன், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சக வழியாக, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், உலக வங்கி போன்ற பல்வேறு நிறுவனங்கள் மூலமாக நிதியுதவி பெற்று 55 ஆய்வுத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகம் பெருங்கடல் மேம்பாட்டுத்துறை, தேசிய தரிசு நில மேம்பாட்டுக் கழகம், தேசிய நோய்த்தடுப்பு நிறுவனம், தமிழக அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கான குழு, ஆசிய மீன்வளச் சங்கம், தேசியப் பட்டுவளக் கழகம், கோத்ரெஜ் சோப்பு தயாரிப்பு நிறுவனம் போன்றவற்றின் நிதி உதவியுடன் பல்வேறு திட்டங்கள் பல்கலைக் கழகத்திட்டத்தின்கீழ் ரூபாய் 300 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விலங்கினப்பெருக்கம், விலங்கினக் காப்பு, விலங்கினப் பொருட்கள் ஆகியவை பற்றிய 33 ஆய்வுத் திட்டங்கள் நடப்பிலுள்ளன.

சாதனைகளும், ஆய்வு முடிவுகளும் :

1. நடைமுறையில் பயன்படுத்தக் கூடிய வகையில், கரு மாற்ற நுட்பவியல் உருவாக்கப்பட்டடுள்ளது. இதன்மூலம், ஒரு வீரிய கலப்பினப் பசுவிலிருந்து ஆண்டொன்றுக்கு 10-லிருந்து 15 கன்றுகளைப் பெற முடியும். மேலும் உற்பத்தித் திறன் குறைந்த 20 நாட்டுப் பசு உற்பத்தித்திறன் குறைந்த கன்றுகளை ஈனுவதற்குப் பதில், உற்பத்தித் திறன் மிகுந்த கன்றுகளை ஈனும்படி செய்ய இயலும்.

2. நடைமுறைக்குகந்த அளவில்செம்மறியாட்டுக் கிடாவின் விந்துவை உறையவைத்து வீரிய இனச் செம்மறியாடுகளை உருவாக்கும் ஆராய்ச்சி வெற்றியடைந்துள்ளது. இதேபோன்ற ஆராய்ச்சி தற்பொழுது வெள்ளாட்டு விந்துவிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாட்டு இறைச்சித்துண்டங்களின் மேல், செலவு குறைந்த, சூழலும் தெளிப்பு முறை நுட்பத்தைக் கையாளுவதன்மூலம், அவற்றிலுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்க இயலும் நுட்பமும் கண்டறியப்பட்டுள்ளது.

4. குறைந்த செலவில் வைக்கோலின் ஊட்டச்சத்தை அதிகப்படுத்தும் நுட்பமும் உருவாக்கப்பட்டுள்ளது.

5. அசைபோடும் சிறு பிராணிகளில் வெக்கை நோய் போன்று தோன்றும், நச்சுயிரி நோயான பி.பி. ஆர். எனப்படும் நோயினைக் கண்டறியும் முறை, இந்தியாவிலேயே முதன் முதலாக அறியப்பட்டு, அதில் தொடர்ந்து ஆராய்ச்சிப் பணி நடைபெற்று வருறது.

6. போனோகிராப் மூலம் அசையன் வயிற்றை பரிசோதிக்கும் முறையும், அசையன் வயிற்றிலுள்ள (முதல் இரைப்பைப் பகுதி) நீரை உறிஞ்சும் பம்ப் கருவியும் கண்டறியப் பட்டுள்ளன.

7. ஐஸ்கிரீம், பால்பானம் மற்றும் பால்படு பொருள்களைக் கெடாமல் பாதுகாக்கும் குறைந்த செலவிலான நுட்பம் ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது.

8. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கெண்டை மீன் குஞ்சுகளைக் குளத்தில், ஒரு எக்டேர் நீர்ப்பரப்பிற்கு 5000 மீன் குஞ்சுகள் என்ற அளவில் விட்டு, கூடுதல் உணவிட்டு வளர்த்து, ஆண்டிற்கு 1 எக்டேர் நீர்ப்பரப்பில் 8.5 டன் மீன் உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டது.

9. தொடர்ந்து ஓடும் நீரில் ஆண் மற்றும் பெண் சிங்கிறால்கள் வளர்க்கப்பட்டன. தூண்டு முறை இனப்பெருக்கத்தின் மூலம் ஒரு பெண் மீனிலிருந்து 3.5 இலட்சம் இளம் நுண் மீன் குஞ்சுகள் பெறப்பட்டன. இந்த நுண்மீன் குஞ்சுகள், வெற்றிகரமாக விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்க்கப்பட்டு, முதன் முறையாகக் கடல் நீரில் வளர்ப்பதற்காக விடப்பட்டுள்ளன.

10. எம். எஸ். சுவாமிநாதன் நிறுவனமும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் ஒருங்கிணைந்து, காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு மரபியல் வங்கியை நிறுவ ஒப்புக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. கால்நடை மற்றும் பயிர் வளர்ப்பு ஒருங்கிணைந்த உற்பத்தித் திட்டத்துடன் கூடிய கலப்புப் பண்ணை முறைத் திட்டம் ஏற்படுத்திச் செயல்பட, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விரிவாக்கம்—

1. ஓசூர், புதுக்கோட்டை, காட்டுப்பாக்கம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள உழவர் பயிற்சி மையங்கள் வழியாக, ஆடவர் மற்றும் மகளிர் உட்பட 6534 கிராமப்புற உழவர்களுக்கு உதவித் தொகையுடன், கால்நடை வளர்ப்பில் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னை கால்நடைமருத்துவக் கல்லூரியில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கும் பணியிலுள்ளவர்களுக்கும் வணிக அளவில் கோழி உற்பத்தியில் பயிற்சி அளிக்கும் திட்டம் நன்கு நடைபெற்று வருகிறது.

2. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் நிதியுதவியான ரூபாய் 38·21 இலட்சத்தில், வேளாண் மாதிரிக் காடு வளர்ப்புத் திட்டம், தரிசு நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம் விலங்கு மற்றும் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. உழவர்களுக்கும், அலுவலர்களுக்கும், வேளாண்காடு வளர்ப்பில், முறையாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

3. அசையூண் இரைப்பைக் கோளாறுகள் (ரூமன்) தொடர்பான நவீன தொழில் நுட்பத்தை, மருத்துவச் சிகிச்சையில் மேற்கொள்ள ஒரு புதிய பாடத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது இதன்மூலம் அசையூண் இரைப்பைப் பகுதி (முதல் இரைப்பைப் பகுதி) சம்பந்தமான கோளாறுகளைக் கண்டறியவும் அவற்றை நீக்கும் முறைகளையும் நம் மாநிலத்திலும் மற்றும் இதர மாநிலங்களிலும் கால்நடை மருத்துவர்களுக்குத் தெரியப்படுத்திடவும் இவ்வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

4. ஐ. ஆர். டி. பி.— ட்ரைசெம் திட்டத்தின் கீழ், மீனவர் மற்றும் நாட்டுப்புற மகளிர்க்கு கூடப்புற மீன்வளர்ப்பு, மீன்பிடிப்பு, மீன்பதனம், அலங்கார மீன் வளர்ப்பு, இறால் வளர்ப்பு நுட்பம் ஆகியவற்றில் ரூபாய் 28 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

5. ஆய்வுக்கூட ஆராய்ச்சி முடிவுகள், உழவர்களுக்குச் செயல்முறை, தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தித்தாள்கள் சிறந்த முறையில் தீவிரமாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. வானொலி மற்றும் தொலைக்காட்சியில் உழவர்களை மாணவர்களாகக்கொண்டு பண்ணைப் பள்ளிகள் நடத்தப்பட்டன.

6. உழவர்கள் பயன்பெறும் பொருட்டு, கால்நடைக் கதிர், செய்தி மடல் போன்றவற்றில், பயன்படும் கால்நடை மருத்துவ அறிவியல் செய்திகள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

எதிர்காலத் திட்டங்கள்—

பல்கலைக் கழகத்தில், மேற்கொள்ளப்பட உள்ள சில திட்டங்கள் பின்வருமாறு :

1. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக, நிதியுதவியுடன், உயிர் தொழில் நுட்பவியலில் எம்.வி. எஸ்சி மற்றும் பி.எச்.டி. பட்டப்படிப்பு தொடங்குதல்.

2. கால்நடைப் பராமரிப்புப் பொருளாதாரம் மற்றும் விரிவாக்கக் கல்வியில் பி.எச்.டி. பட்டப்படிப்பு தொடங்குதல்.

3. மீன்வள அறிவியலில் ஐந்து சிறப்பு துறைகளில் எம்.எப். எஸ்சி வகுப்பு தொடங்குதல்.

4. கால்நடைப் பராமரிப்பில் எம்.பி.ஏ. வகுப்பு தொடங்குதல்.

5. ஈச்சங்கோட்டையில் வெள்ளாட்டு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல்.

6. சில குறிப்பிட்ட கோழி நோய்களை விரைவில் கண்டறியவும், அவற்றிக்குத் தடுப்பு மருந்தளிப்பதையும் ஏற்ற வகையில் மேம்படுத்துதல்.

7. அல்ட்ரா மையச்சுழற்சி மற்றும் எதிர் நிலை சவ்வூடுபரவல் மூலம் அடர்படுபடு பொருள்களில் நுண்ணுயிர்க்கட்டுப்பாடு செய்தல்.

8. கறவை மாடுகளில், வளர்சிதை சோதனை மூலம் அவற்றின் நல நிலையையும் உற்பத்தி நிலையையும் மதிப்பீடு செய்தல்.

9. தெரு நாய்களில் ஏற்படும் வெறிநாய் நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய தடுப்பு மருந்தைத் தயாரிப்பது பற்றிய திட்டம்.

10. பன்றிகளிலிருந்து மனிதர்களுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் இதயவிடு தடுக்கிதழ் (வால்வு) உருவாக்குதல்.

11. அசைபோடும் சிறு பிராணிகளில் அசையூண் இரைப்பையில் (ரூமன்) உள்ள நுண்ணுயிர்களைத் திறமையாகக் கையாளுதல்.

12. சிறப்பாக மருந்தளிக்கும் முறையை உருவாக்க கால்நடை மருந்துகளின் தரத்தை மேம்படுத்துதல்.

13. மருத்துவச் சிகிச்சையில், இனவாரியான சிறப்பம்சத்தை மேம்படுத்துதல்.

14. இறால்களின் நச்சுயிரி நோய்களில் ஓர் ஆய்வு.

15. கடல் உயிர்களிலிருந்து, பிராஸ்டா சுரப்பிகள், ஸ்டிரியாட்ஸ் போன்ற உயிர் வினைப் பொருள்களைப் பிரித்தெடுக்க முயற்சி செய்தல்.

16. கடற்பாலூட்டிகளான கடற்பன்றிகள், சிறிய திமிங்கலம் போன்றவற்றின் உயிரியல் மற்றும் பாதுகாப்பில் ஆய்வு செய்தல்.

17. கிராமப்புற இளைஞர்கள் ஆடவர் மற்றும் மகளிர் பயன் பெறுவதற்காகத் தொலை தூரக் கல்வியை ஆரம்பிக்கும் திட்டம்.

18. அதிக அளவில் உழவர் பயிற்சி மையங்கள் (கிருஷிவித்யான் கேத்திரங்களை) நிறுவுதல்.

19. தகவல் தொடர்பு மையங்களை மேலும் வலிமை யாக்குதல்.

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்.

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) 12—7—1973-ல் தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பை அபிவிருத்தி செய்ய ரூ. 100 லட்சங்கள் (ரூபாய் நூறு இலட்சம்) அனுமதிக் கப்பட்ட மூலதனத்துடன் அரசு நிறுவனமாக துவக்கப்பட்டது. இந்த மூலதனத்தை 1991 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ரூ. இரண்டு கோடியாக உயர்த்த அரசு அனுமதித்துள்ளது. இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 1,09,80,000 ஆக உள்ளது.

2. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன :

(அ) கோழியினப் பொருட்கள், கோழித் தீவனம், சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல், முறைப்படுத்து தல், சேமித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

(ஆ) மேற்குறிப்பிட்ட நோக்கத்தை எய்துவதற்கு கோழி வளர்ப்போருக்கு இடுபொருட்கள் வழங்குதல், அது தொடர் பான உதவிகள் அனைத்தையும் செய்து கொடுத்தல்.

(இ) கோழியினப் பொருட்கள், தீவனம் தயாரிக்கும் சாத னங்கள் ஆகியவற்றின் உற்பத்தி, விற்பனை முறைப்படுத்துதல், போக்குவரத்து, பகிர்ந்தளித்தல், விற்பனை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றிற்கு உதவி செய்தல்.

3. இந்நிறுவனம் கோழித் தீவனம் தயாரிப்பு மற்றும் கோழித் தீவனம் கலப்பினக் கோழிக் குஞ்சுகள், இறைச்சிக் கோழிக் குஞ்சுகள் ஆகியவற்றினை வழங்குதல், மேலும் முட்டைகள் கோழிக்குஞ்சுகள், ஒரு நாள் கோழிக்குஞ்சுகள், ஜப்பானிய காடைகள், அந்த காடைகளின் இறைச்சிகள் மற்றும் முட்டைகள் ஆகியவற்றை விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

4. டாப்கோவின் தலைமை அலுவலகம் சென்னையிலும் மற்ற சார்பு விற்பனை நிலையங்கள் சென்னை, செங்கல்பட்டு, வேலூர் சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தருமபுரி. ஆகிய இடங்களிலும் தீவனக் கலவை நிலையங்கள் நந்தனம், திருப்பூர், கப்பலூர் ஆகிய இடங்களிலும் குஞ்சு

பொரிப்பகங்கள் அரசூர், கப்பலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன.

காடை பொரிப்பகங்கள் செங்கல்பட்டு மற்றும் தெக்கு பாளையம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

5. அரசூர் (கோவை மாவட்டம்) கப்பலூர் (மதுரை மாவட்டம்) மற்றும் கொட்டப்பட்டு (திருச்சி மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள குஞ்சு பொரிப்பகங்கள் வணிகரீதியில் கலப்பினக் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றன. வணிக ரீதியான கலப்பினக் கோழிக் குஞ்சுகளால் கோழிப்பண்ணைகள் அதிகமாக உருவாகி வருகின்றன. தற்போது டாப்கோ முட்டைக் கோழிக் குஞ்சுகளின் தேவை அதிகமாக உள்ளது. காமராஜர் மாவட்டம் இராஜபாளையத்தில் ரூ. 30.95 இலட்சம் அளவில் குஞ்சு பொரிப்பகம் நிறுவ அரசு மேற்கு தொடர்ச்சி மலை மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்துள்ளது. (50 சதவிகிதம் கடன் 50 சத விகிதம் பங்கு) இக்குஞ்சு பொரிப்பகம் இராஜ பாளையத்தில் உள்ள அனுப்பன்குளம் என்னுமிடத்தில் அமைந் துள்ளது. 1993–94 ஆம் ஆண்டில் இப்பொரிப்பகம் இயங்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அரசு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு குஞ்சு பொரிப்பகம் நிறுவ ரூ. 32.45 இலட்சம் மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்துள்ளது. (50 சத விகிதம் கடன் 50 சதவிகிதம் பங்கு).

6. தீவனக் கலவை நிலையங்கள் நந்தனத்தில் (சென்னை) திருப்பூர் (கோவை மாவட்டம்) மற்றும் கப்பலூர் (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ளன. தற்போது சென்னையை அடுத்துள்ள காட்டுப்பாக்கத்தில் தினமும் 8 மணி நேரத்தில் 50 மெட்ரிக் டன் கோழி தீவனத்தை தயாரிக்க கூடிய நவீன தீவன கலவைநிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு தொகையான ரூ. 21 இலட்சத்தை மத்திய அரசும் டாப்கோ நிறுவனமும் சரிசமமாக பங்கிட்டு கொள்ளும். கட்டு மான பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்ட கோழித் தீவனங்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு.		உற்பத்தி.	லாபம்/நட்டம்.	
			(+) (—)	
		(மெட்ரிக்டன்).	(ரூபாய் இலட்சங்கள்)	
1990–91	..	*3,071*	*(—)*	*4.89*
1991–92	..	*4,293*	*(+)*	*4.35*
1992–93 (பிப்ரவரி 1993 வரை)	..	*3,249*	*(+)*	*10.69*

7. டாப்கோ நிறுவனம் தாது உப்பு கலவை நிலையம் ஒன்றினை சேலம் மாவட்டத்திலுள்ள உள்ள சேஷன்சாவடியில் ரூ. 1.78 இலட்ச செலவில் நிறுவியுள்ளது. இந்நிலையம் கோழித்தீவனத்திற்கு தேவையான தரமான தாது உப்பை கடந்த பிப்ரவரி 1991 முதல் உற்பத்தி செய்து வருகின்றது. இத்தாது உப்பு டாப்கோ நிறுவன தீவனத்தில் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றது.

8. டாப்கோ, தனது விற்பனை மையங்களை சென்னை, கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, வேலூர், நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. தேசிய திட்டத்தின் கீழ் ஊனமுற்றவர்களுக்கும், வேலையற்ற நபர்களுக்கும் சுயவேலை வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு சில்லறை விற்பனைக்காக விற்பனை முகவர்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் 96 நபர்கள் இதுவரை பயன் பெற்றுள்ளனர். டாப்கோ தனது விற்பனை மையங்களில் உற்பத்தி செய்யும் முட்டைகள் மற்றும் கோழியினப் பொருட்கள், காடை ஆகியவைகளை விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயமான விலையில் கிடைப்பதற்கு உதவி செய்கிறது.

9. 32,18,400 முட்டைகள் பஹரீன், டோகா மற்றும் துபாய்/குவைத் ஆகிய அயல்நாடுகளுக்கு முகவர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுதான் அயல் நாடுகளுக்கு முட்டை முதல் முறையாக ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது.

10. காடை வளர்ப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க எட்டாவது ஐந்தாண்டு திட்டம்—1992–93-ம் ஆண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் ரூ. 3.00 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டம் ஆண்டுக்கு ரூ. 60,000 அளவில் 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இத்திட்டம் செங்கல்பட்டு மற்றும் தெக்குப்பாளையத்தில் அமைந்துள்ள காடைக்குஞ்சு பொரிப்பகங்களில் விவசாயிகளுக்கு ஜூலை 1992 முதல் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. பயிற்சி கால ஊதியமாக ரூ. 1,000 ஒவ்வொரு விவசாயிகளுக்கும் கொடுக்கப்படும். பயிற்சி கால அளவு இரண்டு மாதம்.

CHIEF REPORTER
FORT ST. GEORGE.
21 MAR 2000
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT
Chennai-600 009

தமிழ்நாடு இறைச்சி நிறுவனம்.

தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் வேளாண்மைத் துறையின் 1979-ஆம் ஆண்டு மார்ச்சு 2-ம் நாளிட்ட அரசு ஆணை எண். 423-இன்படி துவக்கப்பட்டு, 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 1979-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ம் நாளன்று பதிவு செய்யப்பட்டது.

அரசு தனது ஆணை எண். 376 கால்நடை மற்றும் மீன்துறை நாள் 19-11-1991-ல் இதுவரை கொடுவேளியில் ஏற்படுத்திய கட்டிடங்கள், நிலம் மற்றும் அதிலுள்ள கட்டுமான பொருள்களை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கென மானியமாகக் கொடுக்க உத்திரவிட்டு கொடுவேளியிலுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள பொருட்கள் அனைத்தும் தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்திடம் ஏப்ரல் 1992-ல் ஒப்படைக்கப்பட்டது.

சில பொது நன்மைகளைக் கருதி இந்நிறுவனத்தைத் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்ினுடன் இணைக்க அரசு ஆணை எண். 554 கால்நடை மற்றும் மீன் (கா. ப. 5) துறை, நாள் 22-11-1989-ன்படி ஆணையிடப்பட்டது இணைப்பு பற்றிய தகவல்கள் இது சம்மந்தமான விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு கம்பெனிகள் சட்ட விவகாரத்துறை, தொழில் அமைச்சகம் புதுடெல்லியிடமிருந்து இணைப்பு பற்றிய ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

அரசு தனது ஆணை எண். 410, கால்நடை மற்றும் மீன் (கா. ப. 5) துறை நாள் 16-12-1992-ல் தற்போது பெரம்பூரில் இயங்கி வரும் இறைச்சிக் கூடங்களைத் திரும்பவும் சென்னை மாநகராட்சிக்கு 16-12-1992 முதல் திருப்பிக் கொடுக்க உத்திரவிட்டுள்ளது. இறைச்சிக் கூடத்தை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க சென்னை மாநகராட்சியிடம் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் 1990—91-ம் ஆண்டு முதல்அயற் பணியிலுள்ள ஊழியர்களை அவரவர் துறைக்கு திரும்ப அனுப்பியும், கோழியின வளர்ச்சிக் கழக அலுவலர்களை, இறைச்சிக் கழகப் பணியினை மேற்கொள்ளுமாறு செய்தும் அதிகப்படியான செலவினங்களை குறைத்து சிக்கன நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS